தமிழ் நாடக மேதை

# சங்கரதாஸ் சுவாமிகள்

## நூற்றாண்டு விழா மலர்

2194



*For*

# QUALITY &

## *QUICK SERVICE*

*in*

# COLOR FILM PROCESSING

*contact*

# GEMINI STUDIOS LABORATORY

★ *UP TO DATE & FULLY AIR-CONDITIONED*

★ *EXPERT TECHNICAL SUPERVISION*



*For further details:*

LABORATORY SUPDT., GEMINI STUDIOS, POST BOX 709, MADRAS - 6

தவத்திரு
# சங்கரதாஸ் சுவாமிகள்
நூற்றாண்டு விழா

# சிறப்பு மலர்

# 1967

சென்னை ஏவி. எம். இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் செப்டம்பர் 9, 10 தேதிகளில் நடைபெற்ற விழாவின்போது சிலம்புச்செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களால் வெளியிடப் பெற்றது.

சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்
சென்னை - 14.

# நூற்றுண்டு விழாக் குழுவினர்

தலைவர் : தமிழவேள் பி. டி. இராஜன்

உறுப்பினர்கள் :

அறிஞர் அண்ணுத்துரை, முதலமைச்சர், தமிழ்நாடு.
இரா. நெடுஞ்செழியன், கல்வி அமைச்சர், தமிழ்நாடு.
இராஜா எம். ஏ. முத்தைய செட்டியார்.
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்
பி. கக்கன், முன்னுள் அமைச்சர்
நா. மகாலிங்கம், பொள்ளாச்சி.
ஏ. வி. மெய்யப்ப செட்டியார், ஏ. வி. எம். ஸ்டுடியோ, சென்னை
ம. பொ. சிவஞானம், எம். எல். ஏ.
கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி.
தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், துணை வேந்தர், மதுரை பல்கலைக் கழகம்
கலைஞர் எம். ஜி. இராமச்சந்திரன், எம். எல். ஏ.
இரா. சம்பந்தம், மேயர், சென்னை
பி. மருதைப்பிள்ளை, ஷெரீப், சென்னை
வி. எம்பெருமானுர் செட்டி, சென்னை
டாக்டர் வே. இராகவன், சென்னை
ராய. சொ. காரைக்குடி
கி. வா. ஜகந்நாதன், ஆசிரியர், கலைமகள்
அ. சிதம்பரநாதஞ் செட்டியார், முதல்வர், தியாகராய கல்லூரி, மதுரை.
அ. சீனிவாசராகவன், முதல்வர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி
சௌந்தரம்கைலாசம் அம்மையார், சென்னை.
இராஜேசுவரி நடராஜன், பி. ஏ.
சா. கணேசன், காரைக்குடி.
சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார், காரைக்குடி.
நா. ஆ. மாரிமுத்து, தங்கபஸ்பம், காரைக்குடி.
டாக்டர் வி. ராமமூர்த்தி, சென்னை.
சி. எஸ். கமலபதி, ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.
அழ. வள்ளியப்பா, சென்னை.
புருஷோத்தம ரெட்டியார், புதுவை.
சேதுராம செட்டியார், எம். பி. புதுவை.
ஜெயராம நாயுடு, புதுவை
வி. தங்கராஜ முதலியார், கடலூர்.
பா. இராதாகிருஷ்ணன், கடலூர்.
எஸ். என். குப்புசாமி முதலியார், ஆர்ட்ஸ் அகாடெமி, வேலூர்.
எஸ். பழனிச்சாமி, ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி, திருப்பூர்.
கி. பழனியப்பன், தமிழ்ச் சங்கம், மதுரை.
பேபி கிருஷ்ணசாமி முதலியார், சென்னை.
இராஜா ஷண்முகதாஸ், மதுரை.
ஆர். துரைராஜ், ஜமீன்தார், பாப்பா நாடு, தஞ்சை
வி. ஆர். சுந்தர சர்மா, மதுரை.
கவி. ஆறுமுகனுர், திண்டுக்கல்.
டாக்டர் கே. பத்மனுபன், நாகர்கோவில்.
எம். சங்கரலிங்கம், எம். எல். சி., நாகர்கோவில்.
பி. எஸ். மணி, ஆசிரியர், கன்னியாகுமரி, ராமவர்மபுரம், நாகர்கோவில்.
ரா. மு. நாகலிங்கம், ஆசிரியர், 'செய்தி' இலங்கை.
கலையரசு கே. சொர்ணலிங்கம், யாழ்ப்பாணம்.
பி. கோவிந்தசாமி பிள்ளை, சிங்கப்பூர்.
அமுசு. பெரியசாமி, மலாசியா.
மதுரை நடிகர் சங்கம், மதுரை.
நாடகக் கலைஞர் சங்கம், புதுக்கோட்டை.
நாடகத் தொழிலாளர் கழகம், சேலம்
மதுரை தேவி பாலவினுேதசங்கீத சபா, சென்னை.
ஸ்ரீ தேவி நாடக சபா, ஸ்ரீரங்கம்
பம்பாய் தமிழ்ச் சங்கம், பம்பாய்.
பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூர்
ஓவியர். கொண்டையராஜு

பொறுப்பாளர் : சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தார்



# தமிழ்த்தாய் வாழ்த்து

★

நீராருங் கடல்உடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரதகண்டம் இதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழ் அணங்கே !

பல்லுயிரும் பலஉலகும் படைத்து அளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன் உதரத்துதித்து எழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாஉன்
சீரிளமைத்திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை.

# தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்



தலைவர்

கலைஞர் தி. க. ஷண்முகம்

துணைத்தலைவர்கள்

டாக்டர். மு. வரதராசனார்
கலைஞர் கே. சாரங்கபாணி
பேராசிரியர் நாரண-துரைக்கண்ணன்
கலைஞர் எஸ். வி. சகஸ்ரநாமம்



பொருளாளர்

கலைஞர் தி. க. பகவதி



செயலாளர்

கலைஞர் டி. என். சிவதாணு

உறுப்பினர்கள்

ஏ. எஸ். காங்கேயன், எம்.எல்.ஏ., (புதுவை)
கலைஞர் தி. க. முத்துசாமி
கலைஞர் ஏ. பி. நாகராஜன்
நாவலாசிரியர் அகிலன்
நாடகாசிரியர் ரா. வேங்கடாசலம்
கலைஞர் பி. டி. சம்பந்தம்
தலைவர், தமிழ் நாடு நாடக நடிகர் சங்கம், மதுரை

வி. சுப்பையா எம்.எல்.ஏ., (புதுவை)
கவிஞர் எஸ். டி. சுந்தரம், எம்.எல்.ஸி.
கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி
கலைஞர் ஆர். எஸ். மனோகர்
திருவாட்டி எஸ். டி. சுப்புலட்சுமி
தலைவர், தென்னிந்திய நடிகர் சங்கம், மதுரை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ்த்தாய் வாழ்த்து | 3 |
| 2. | பொருளடக்கம் | 5 |
| 3. | காணிக்கை | 7 |
| 4. | வாழ்த்து மலர்கள் | அ |
| 5. | தமிழ் நாடக உலகின் தந்தை - தமிழவேள் பி. டி. ராஜன் .... | 9 |
| 6. | நாடகம் - திருமுருக கிருபானந்தவாரியார் .... | 10 |
| 7. | பாலே நடனம் - தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் .... | 13 |
| 8. | நாடகப் பேராசிரியர் - டாக்டர் மு. வரதராசனுர் .... | 14 |
| 9. | படிக்கும் நாடகமும் பார்க்கும் நாடகமும் - ம. பொ. சிவஞானம் .... | 17 |
| 10. | நாடக உலகில் இமயமலை - கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் .... | 21 |
| 11. | உடுமலை முத்துசாமிக் கவிராயர் - நடிகன் .... | 25 |
| 12. | சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர்- எம். ஜி. ஆர். .... | 29 |
| 13. | விடுதலைப் போரில் நடிகர்களின் பங்கு - பி. கக்கன் .... | 33 |
| 14. | நாடகம் தாய்க்கலை - எஸ். டி. சுப்புலட்சுமி .... | 35 |
| 15. | நாடக உலகில் ஓர் நல்லிசைப் புலவர் - நாரண - துரைக்கண்ணன் .... | 37 |
| 16. | சங்கரதாசர் நாமம் வாழ்க! - கு. சா. கிருஷ்ணமூர்த்தி .... | 41 |
| 17. | நாம் செலுத்த வேண்டிய நன்றிக்கடன் - ஜி. பூவராகன் .... | 44 |
| 18. | சுவாமிகளும் கலைஞர்களின் கடமையும் - டி. என். சிவதாணு .... | 47 |
| 19. | நாடகத்தமிழ் - டாக்டர் மா. இராசமாணிக்கம் .... | 50 |
| 20. | சங்கரதாசரின் தனிப்பெருஞ்சிறப்பு - ப. ஜீவானந்தம் .... | 53 |
| 21. | குமாஸ்தாவின் மகள் - C. N. A. .... | 58 |
| 22. | நாடும் நாடகமும் - இராஜேசுவரி நடராசன் .... | 63 |
| 23. | தமிழ் நாடகத் தந்தை - மாமதுர கவி முருகேச பாகவதர் .... | 65 |
| 24. | புலவரைப் போற்றிய புலவர் - டி. கே. முத்துசாமி .... | 66 |
| 25. | நாடகப் பண்பு - கி. வா. ஜகந்நாதன் .... | 67 |
| 26. | சுவாமிகளின் கவிதைத் திறன் - அ. ச. ஞானசம்பந்தன் .... | 73 |
| 27. | பல்கலைக் கழகத்தில் சுவாமிகள் .... | 77 |
| 28. | தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் சுவாமிகள் .... | 78 |
| 29. | நாடக முன்னேற்றம் - ஆர். வேங்கடராமன் .... | 82 |
| 30. | சுவாமி அவர்களின் அருள்மழை .... | 86 |
| 31. | எந்நாளும் இருப்பவர் சாமி - கொத்தமங்கலம் சுப்பு .... | 87 |
| 32. | இலங்கையில் சுவாமிகள் - சொர்ணலிங்கம் .... | 89 |
| 33. | ஆயிரத்தில் ஒருவர் - ஞானம் .... | 92 |
| 34. | இதயத்தில் என்றும் வாழி - கவி ஆறுமுகனுர் .... | 96 |

35. காலனை வென்ற கலைத்தந்தை - ரா. மு. நாகலிங்கம் .... 97
36. அண்ணல் வழியில் - தமிழழகன் .... 100
37. நடிப்பின் இலக்கணம் - மகான் .... 102
38. காலவேகம் - வி. ஏ. மகாதேவன் .... 103
39. மனங்கவர் மனோன்மணீயம் - பி. ஜனார்த்தனம் .... 105
40. சுவாமிகளின் கோவலன் - தி. க. ச. .... 109
41. ஏது நாடகம்? - தமிழன்பன் .... 111
42. மனோன்மணீயத்தின் மாண்பு - வ. பெருமாள் .... 114
43. சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம் - எஸ். வி. சகஸ்ரநாமம் .... 119
44. அழகுக் கலை வளர்த்த ஆன்றோர்கள் - மைவண்ணன் .... 122
45. எங்கள் சங்கரதாஸர் - சம்பந்த ஆச்சாரி .... 126
46. சந்தப்பா பாடித் தந்த சங்கரதாஸர் - திருமயிலைக் கவிராயர் .... 129
47. கண் திறக்கும் கலை - மு. க. தங்கவேலன் .... 131
48. தவத்தால் வந்த தனிப்பெரும் புலவர் - இளங்கம்பன் 134
49. ஏகை சிவஷண்முகனாரின் இசைத்தமிழ்த் திறன் கு. சா. கி. .... 137
50. பேரறிஞர்களின் பொன் மொழிகள் .... 140
51. தமிழக நாடகக்கலையின் ஆணிவேர் - எஸ்.வி.எஸ். .... 142
52. கலைமகளின் தலைமகன் - வித்வான் வேலவன் ....
53. இளங்கோவடிகள் காப்பியப்பண்பு - பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் .... 145
54. வாழ்கின்றார் சங்கரதாஸ் - புத்தனேரி சுப்பிரமணியம் .... 149
55. நாடகத்தில் புரட்சி - தமிழன் .... 151
56. சங்கரர் இசைத்தமிழ் - நா. பாண்டுரங்கம் .... 153
57. தென்னாட்டில் நாடகக்கலை - கோவைக்கிழார் .... 156
58. தமிழ் நாடக மறுமலர்ச்சி-சிலசிந்தனைகள்-பி.ஸ்ரீ. .... 159
59. நாடகம்-ஜீவன் ததும்பும் ஓர் இணைப்பு - லோவன்னா .... 161
60. தாய்ச்செல்வம் - வி. இராஜாராம் .... 166
61. சங்கரதாசசாமிகள் இலக்கியப் புலமை - வித்வான் காமாட்சிநாதன் .... 171
62. கல்லூரியில் படித்தேன் - திருச்சி பாரதன் .... 175
63. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் .... 181
64 ஆலமர நாடகங்கள் - எஸ். டி. சுந்தரம் .... 193
65. இறவாப் புகழ் பெற்றவர் - சரவணபவானந்தர் ... 199
66. நாடகக் கோமாளி - சங்கரதாஸ் சுவாமிகள் ... 201
67. குருபக்தி - ஷண்முகதாஸ் ... 203
68. சங்கரதாச சாமியின் கீர்த்தனம் - புலவர் அப்துல்கபூர் ... 204
69. சுவாமிகள் நாடகத்தில் நான் - சாப்ஜான் ... 205
70. கோமாளி - சுவாமிகள் ... 207
71. எனது நாடக அனுபவங்கள் - சுத்தானந்த பாரதி ... 209
72. நாடகக் குருநாதன் - எஸ். வி. எஸ். ... 213
73. ராம நாடகம் - கு. அழகிரிசாமி .... 219
74. மாண்புடைய நாடகத்தை மறப்பதுண்டோ? சௌந்தராகைலாசம் .... 225
75. திருவாசகத்தில் நாடகம் } - துரை .... 225
76. திருக்குறளில் நாடக அரங்கு }
77. பேரறிஞர் பொன்மொழிகள் .... 227
78. தமிழ் காட்டும் தமிழர் - ந. சஞ்சீவி .... 229
79. சுவாமிகளும் கவிராயரும் - அவ்வை தி. க. ஷண்முகம் ... 233
80. நாடகப் புரவலர்கள் - ... 235
81. சங்கரதாஸ் சுவாமிகள் வரலாறு அவ்வை தி. க. ஷண்முகம் .... 238

# காணிக்கை

தமிழ் நாடகக் கலை என்று சொன்னவுடனே நமக்கு முதலில் நினைவுக்கு வருபவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார். நாடகக் கலை வளர்ச்சிக்காகப் பல வகைகளில் பாடுபட்டவர்கள் கடந்த ஒரு நூற்றுண்டு காலத்தில் பலர் உண்டு; ஆனுலும், சுவாமிகள் புரிந்துள்ள தொண்டைச் சீர்தூக்கிப் பார்த்தால், எல்லாவற்றையும்விட மகத்தானதாகத் தோன்றுகிறது. நடுநிலையில் நின்று எதையும் ஆராயும் நெஞ்சமுடையோர் நம்முடைய இக்கூற்றை நிச்சயம் ஒப்புக்கொள்ளுவார்கள். உலகில் வழங்கி வரும் பழம் பெரும் மொழிகளில் தலைசிறந்து விளங்குபவை தமிழும் சமஸ்கிருதமும் என்பது மொழியியல் வல்லுநரும் ஒப்புக்கொண்ட உண்மை. ஆனுல், சமஸ்கிருதத்தில் உள்ள நாடகங்கள் உலக நாடக இலக்கியத்தில் உயர்ந்த இடம் பெற்றுப் போற்றப்பட்டு வருகின்றன. இதுபோன்று நம் தமிழ் மொழியிலும் சிறந்த நாடகங்கள் இருந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறுர்களாயினும், இன்று வழக்கிலில்லை. இது ஒரு பெருங்குறை யாகவே இருந்து வருகிறது.

இக்குறையைப் போக்கப் பல பேரறிஞர்கள் முயன்று வருகின்றனர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தென்பாண்டி நாட்டில் தோன்றிய சுவாமிகள் சிறந்த நாடகங்கள் பலவற்றை எழுதி அரங்கேற்றியும் தாமே நடித்துக் காட்டியும், பிறர்க்குப் பயிற்சியளித்து நடிக்க வைத்தும் தமிழ் நாடக அரங்கில் ஒரு புத்தொளியை யுண்டாக்கி வைத்து இந் நன்முயற்சியில் வெற்றி கண்டு விட்டார். தமிழில் நல்ல நாடகமில்லை; நடிகர்களில்லை என்ற குறையை, சுவாமிகள் தம் அரும் பெருஞ் சாதனையால் பெருமளவு போக்கிவிட்டார். இன்று தமிழகத்தின் தென்பகுதியில் நடிக்கப்பட்டு வரும் பெரும்பாலான நாடகங்கள் சுவாமிகள் இயற்றித் தந்த நாடகங்களே. இன்று பிரபலமாயுள்ள பெரிய நடிகர்கள் பலர் சுவாமிகளின் மாணவர்கள்; மாணவர்களின் மாணவர்கள் என்றுல் மிகையாகாது. ஆகவே, தமிழ் நாடக உலகில் கடந்த அறுபதாண்டு காலத்தை சங்கரதாஸ் சுவாமிகள் சகாப்தம் என்று தாராளமாகச் சொல்லலாம்.

இவ்விதம் தமிழ் நாடகக் கலைக்குப் புதுவாழ்வு அளித்த சங்கரதாஸ் சுவாமிகளுக்கு நம் நன்றியுணர்ச்சியைத் தெரிவிக்கும் முறையில் சங்கரதாஸ் சுவாமிகள் நினைவுமன்றம் அவர்களுடைய நூற்றுண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடிச் சிறப்பு மலரொன்றும் வெளியிட முற்பட்டது.

இம்மலர் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும்; வரலாறு உட்பட தமிழ் நாடகம் பற்றிய எல்லாச் செய்திகளையும் கொண்டதாக—அதாவது தமிழ் நாடகக் கலைக் களஞ்சியமாகத் திகழ வேண்டும் என்று நாங்கள் கருதி அதற்கான முயற்சியில் ஈடுபட்டோம். இப்பெரு முயற்சியின் விளைவாகத்தான் இச்சிறப்பு மலர் உங்களிடையே உலா வருகிறது.

சுவாமிகளின் நூற்றுண்டு விழா மிகச் சிறப்பாக நடப்பதற்கு விழாக் குழுவின் தலைவராயிருந்து பேருதவி புரிந்த தமிழவேள் பி. டி. ராசன் அவர்களுக்கு முதலில் நன்றிசெலுத்துகிறேம்.

இம்மலரில் தமிழகத்திலுள்ள பேரறிஞர்களும் கவிஞர்களும் சுவாமிகளின் பெரும் புலமையையும் அவர்களுடைய நாடகப் பணியையும் பல கோணங்களில் பார்த்து அருமையான கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியிருக்கிறார்கள்.

சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் உடன்வாழ்ந்த நாடகாசிரியர்கள், கவிராயர்கள், நடிக நடிகையர், இசைவாணர்கள், நாடகக் கம்பெனிகளின் உரிமையாளர்கள் முதலியவர்களைப் பற்றியெல்லாம் இயன்ற வரை சேகரித்துத் தந்திருக்கிறேம். சுவாமிகளுக்குப் பின்னும் நடந்து வரும் நாடகக் கம்பெனிகள், நாடகாசிரியர்கள் குறித்தும் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. பழம் பெரும் நடிகர்களின் உருவப்படங்கள், அவர்கள் போட்டுள்ள வேடங்களுடன் பெயர்ப்பட்டியல், பழைய நாடக ஆசிரியர்கள், இன்றைய நாடகாசிரியர்களின் உருவப் படங்களுடன் கூடிய பெயர்ப்பட்டியல், அவர்கள் எழுதியுள்ள நாடகங்களின் பட்டியல் ஆகியவை இம்மலரிலுள்ள சிறப்பான அம்சங்களாகும். இன்னும் ஏராளமான நாடகங்கள் தமிழகத்தில் நடைபெற்றிருக்கலாம். அவற்றைப் பற்றிய தகவல்களை எங்களுக்குக் கிடைத்த குறுகிய காலத்தில் சேகரிக்க முடியவில்லை. இம்மலரைக் கண்ணுறும் அன்பர்கள் விடுபட்டுப்போன நாடகங்களையும் அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பெயர்களையும், அறிவித்தால் மற்றொரு சமயம் பயன்படுத்திக் கொள்வோம். பழம் பெரும் நடிக - நடிகையரின் வரிசையில் இன்னும் இடம் பெற வேண்டியவர்களின் படங்களையும் அனுப்பி உதவலாம்.

இச்சிறப்பு மலர் நன்கு உருவாவதற்குப் பலர் பலவகைகளில் உதவியிருக்கின்றனர். எங்கள் வேண்டுகோளுக்கிணங்க, கட்டுரை, கவிதைகளை உதவியுள்ள அறிஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் நாங்கள் மிக்க நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேம். பழம்பெரும் நடிகர்களின் உருவப்படங்களைச் சேகரிப்பதிலும், பழைய நாடகக் கம்பெனிகளின் விவரங்களை ஒன்று திரட்டுவதிலும் செயலாளர் டி. என். சிவதாணு பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். இவருக்கு இவ்வகையில் பேருதவியாக இருந்தவர் மதுரை ராஜா ஷண்முகதாஸ். எம். எம். துரை வாத்தியார், ஐ. கிருஷ்ணமாச்சாரி முதலியோராவர். இம்மலரில் விளம்பரங்கள் ஏராளமாக வருவதற்கு அரும்பாடுபட்டவர் பொருளாளர் டி. கே. பகவதி. அவருடைய பேருழைப்பு இல்லையானல், இம்மலரை இவ்வளவு சிறப்பாகப் பெரும்பொருள் செலவு செய்து கொண்டு வந்திருக்க முடியாது. இவர் போய்க் கேட்டதும் வணிகப் பெருமக்கள் பலர் அன்புடன் விளம்பரங்களையும் அவற்றிற்குரிய தொகையையும் தந்து உதவியிருக்கின்றனர். இப் பெருமக்கள் அனைவருக்கும் நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேம்.

இவ்விதம் பல அன்பர்களின் பேராதரவால் உருவாகியிருக்கும் இம்மலரை, தமிழ் நாடகத் தலைமையாசிரியரா யிருந்து இன்னும் வழிகாட்டி வரும் சுவாமிகளின் திருவடித் தாமரைகளுக்கு அன்புக் காணிக்கையாக்கி, உங்கள் அனைவருடைய கரங்களிலும் தவழ விடுகிறேம்.

இங்ஙனம்,

மலர்க் குழுவினர்.



நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல்.
இமைப்பொழுதும் சோராதிருத்தல் — உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நம்குடியை வாழ்விப்பான் :
சிந்தையே ! இம்மூன்றும் செய்

— *மகாகவி பாரதியார்*

கல்கி, கீழ்ப்பாக்கம், சென்னை - 10

செலவில் சிக்கனம் !　　　செயலில் சுறுசுறுப்பு !

# பாட்டாளி வயிற்றில் பால் வார்க்கும்
# படியரிசித் திட்டம் !

'விலைவாசியைக் குறைப்போம் ! மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துவோம் !'

என்று தமிழக அரசு வீறுடனும் விவேகத்துடனும்

விரைந்து செயலாற்றி வருகிறது

புத்தரசு பதவியேற்ற குறுகிய காலத்தில்

- ★ பஸ்கட்டணம் குறைந்திருக்கிறது.
- ★ பைந்தமிழ் மணக்கிறது.
- ★ புன்செய் நிலத்திற்கு அடிப்படை வரி நீங்கியுள்ளது.
- ★ கல்வி உயர, கலப்பு மணம் பெருக, தொழில் வளர வழி பிறந்துள்ளது.

நம்பிக்கையோடு உழைப்போம் !　　　வெற்றியைக் குவிப்போம் !

(தமிழகச் செய்தித்துறை வெளியிட்டது)

தமிழ் நாடக மேதை




தவத்திரு

**சங்கரதாஸ் சுவாமிகள்**

தோற்றம் : 1867 :: மறைவு : 1922

## வாழ்த்து மலர்கள்

PRESIDENT
OF INDIA

RASHTRAPATI BHAVAN
NEW DELHI-4
August 18, 1967.

I am glad to know that the Centenary of Shri Sankaradas Swamigal the great exponent of stage art will be celebrated shortly. I send my best wishes for the success of the celebrations.

**ZAKIR HUSAIN**

★

VICE-PRESIDENT
OF INDIA
NEW DELHI

Camp : Madurai,
August 24, 1967

Dear Shri Shanmugam,

Thank you for your letter of the 10th.

I send my best wishes for the success of the Centenary Celebrations of Thavathiru Sankaradas Swamigal.

Yours sincerely,

**V. V. GIRI**

Deputy Information Adviser
to the Prime Minister

PRIME MINISTER'S SECRETARIAT
NEW DELHI-11
August 14, 1967

*Dear Sir,*

*The Prime Minister thanks you for your letter and is glad to know that you propose celebrating the centenary of Shri Sankaradas Swamigal, the Tamil scholar and playwright. She wishes success to the endeavours of your committee.*

*Yours sincerely,*
H. Y. SHARADA PRASAD

★

சி. என். அண்ணாதுரை
முதலமைச்சர்

கோட்டை,
சென்னை-9,
27—8—1967

தமிழ் நாடகக் கலை இன்று நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறது. தமிழகத்தில் தலைசிறந்த கலைஞர்கள் தோன்றி வருகிறார்கள். இந்த வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் முக்கியமானவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்.

நாடகாசிரியராகவும், நடிகராகவும், கலையோடு ஒன்றி வாழ்ந்து, அவர், கலை வளர்ச்சிக்காகவே தம் வாழ்நாளை அர்ப்பணித்தார். அவருடைய நூற்றாண்டு விழா கலைஞர்களுக்குப் புத்துணர்ச்சியையும் கலைத்துறையில் அரும்பெரும் சாதனைகளுக்கான ஊக்கத்தையும் ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். புதுவையிலும் சென்னையிலும் நடைபெறும் நூற்றாண்டு விழாவும், சிறப்பு மலர் முயற்சிகளும் இனிது நிறைவேற என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அண்ணாதுரை.

மு. கருணாநிதி
பொதுப்பணி அமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9
9—8—1967

அன்புடையீர்,

தமிழ் நாடக மறுமலர்ச்சிக்கு உதவிய மேதைகளில் தலையாயவர் சங்கரதாஸ் சுவாமிகள். தேனினும் இனிய தெள்ளுதமிழ் வசனங்களாலும், தீஞ்சுவைப் பாடல்களாலும் தமிழர் நெஞ்சங்களைக் கொள்ளைகொண்டவர். அவரால் நாடகத் தமிழ் வளர்ந்தது; செழித்தது. அவரால் பயிற்றுவிக்கப்பட்ட பலர் நாடறிந்த கலைஞர்களாயினர். அவரது நினைவைப் பசுமையாகப் போற்றுவது, தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் செழுமையிலும் சிந்தை செலுத்துவோரின் சீரிய கடமையாகும்.

முத்தமிழ்க் கலையரசரின் நூற்றாண்டு விழாவினைப் பாங்குறக் கொண்டாட, தமிழவேள் அவர்களின் தலைமையில் தகைசால் குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும். குழுவின் விழுமிய முயற்சிகளுக்குத் தமிழ்ப் பெருமக்களின் ஒரு மனதான ஆதரவு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. விழா சீரும் சிறப்போடும் நடந்தேறவும், சங்கரதாஸ் சுவாமிகளின் அருமை பெருமைகளுக்கு ஓர் உரைகல் என்று சொல்லத்தக்க வகையில் மலர் எழிலோடு வெளிவரவும் எனது நல் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
மு. கருணாநிதி.

★

GOVERNOR
PONDICHERRY

RAJ NIVAS
PONDICHERRY
August 22, 1967

I am glad to learn that the Birth Centenary of Thavathiru Sankaradas Swamigal, the great exponent of dramatic art in Tamil Nad and of Tamil literature itself, will be celebrated next month and that the Celebrations will begin on 7th September in Pondicherry at the site where the Swamigal was laid to rest on his death in 1922.

The Centenary Celebrations will, I am sure, project in proper light the rich contributions made by the Swamigal to Tamil literature in general and in the field of histrionics in particular, and thus foster the climate for further strides being made in these fields.

My hearty good wishes for the success of the Swamigal's Birth Centenary Celebrations!

S. L. SILAM



"GIRIJA"
30, Edward Elliots Road,
Mylapore, Madras-4.
August 13, 1967

*Dear Sri T. K. Shanmugam,*

*I am delighted to know that you are commemorating the Centenary of Sankaradas Swamigal in September this year. I hope the Tamil public will realise what they owe to him.*

*Yours sincerely,*
S. RADHAKRISHNAN

★



போன்: *441373*
8, திருமலை பிள்ளை ரோட்,
தி. நகர், சென்னை-17
*25—8—67*

அன்புள்ள நண்பருக்கு,

சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழாவினை செப்டம்பர் மாதம் மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்து வருவது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

தமிழ் நாடகக் கலைக்கே புத்துயிரூட்டிய சுவாமிகளின் அருந்தொண்டை விளக்கிச் சிறப்பு மலர் வெளியிட முடிவு செய்திருப்பது பாராட்டுதலுக்குரியது. சுவாமிகளின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறேன்.

தங்களன்புள்ள,
கு. காமராஜ்.

M. O. H. FAROOK MARICAR, B.A.
Chief Minister

PONDICHERRY-1
25—8—1967

அன்புடையீர்,

தமிழ் நாடக மேதை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றுண்டு விழாவை 1967 செப்டம்பர் 7-இல் புதுவையிலும், 9, 10 தேதிகளில் சென்னையிலும் மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்திருப்பதையும், அந்நாட்களில் கருத்தரங்கம், கவியரங்கம், நூல் வெளியீடு, சுவாமிகளின் நாடகக்கலை நிகழ்ச்சிகள் முதலான சிறப்புகள் இடம் பெறுவதையும் அறிந்து மிகவும் மகிழ்கிறேன்,

தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகளால் தமிழ் நாடக உலகு வளர்ந்தது, அவரால் பெருமை பெற்றது என்று சொல்லலாம். அவர் நாடகத் துறைக்கு ஆற்றிய பணிகள் நம்மால் என்றென்றும் மறத்தற்குரியன அல்ல.

அந்நினைவைப் போற்றும் வகையில் அவர்தம் நூற்றுண்டு விழாவிற்கு ஏற்பாடு செய்த விழாக் குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்.

அந்த முயற்சி வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

தங்கள் அன்புள்ள,
எம். ஓ. ஹெச். பாரூக்

★

C. SUBRAMANIAM, B.A., B.L.

'RIVERVIEW'
GUINDY, MADRAS-25
24—8—67

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றுண்டுவிழா புதுவையிலும் சென்னையிலும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளதைக் கேட்டு மகிழ்ச்சியுற்றேன். இவ்விழாவின் மூலம் தமிழ் நாடக இலக்கியமும் நாடக மேடையும் நல்ல முறையில் வளர்ச்சி ஏற்பட புதிய வழிகள் பிறக்கும் என எதிர்பார்க்கிறேன். விழா இனிது நடந்தேற எனது நல்வாழ்த்துக்கள்.

சி. சுப்பிரமணியம்

M. BHAKTAVATSALAM

"MALLIKA"
15, Warren Road
Mylapore, Madras-4
25—8—67

அன்புள்ள திரு ஷண்முகம் அவர்களுக்கு,

தங்கள் 22-தேதி கடிதம் கிடைத்தது. நன்றி. சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழா ஏற்பாடுகள் பற்றி மிகுந்த மகிழ்ச்சி. நாம் பெருமைப்படும் நாடகக்கலை மேலும் சிறந்தோங்கும் வகையில் இந்த விழாவை மதுரையிலும் சென்னை யிலும் நடத்துவீர்கள். விழா இனிது நடைபெறவும் சிறப்பு மலர் கவர்ச்சி தரக்கூடிய அளவில் வெளிவரவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
எம். பக்தவத்சலம்

☆

கொ. ஸ்ரீ வேங்கடராமன்

27—8—67

நண்பர் டி. கே. ஷண்முகம் அவர்களுக்கு,

மலரில் என்னையும் எழுதும்படி கேட்டுக்கொண்டது உங்களுக்கு என்னிட மிருக்கும் அன்புதான் காரணம். என் யோக்கியதை அல்ல.

தவத்திரு சங்கரதாஸ் ஸ்வாமிகளின் பெருமையை நான் நேரே அறியா விட்டாலும் தங்கள் போலவர்கள் மூலமாக கொஞ்சம் அறிய முடிகிறது. அவரது புலமையையும், நடிப்புத்திறமையும் பற்றி நீங்கள் எல்லோரும் புகழ்வதிலிருந்து அவர் எவ்வளவு பெரியவராக இருந்திருக்க வேண்டுமென்று புலப்படுகிறது. இந்த விழா மிகவும் நன்றாக நடந்து, அதன் பயனாக நாடகக் கலை நன்றாக வளரவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள,
கொ. ஸ்ரீ வேங்கடராமன்.
*(நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை)*

BANDA KANAKALINGESWARA RAO, B.A., B.L.

All India Radio,
Vijayawada
29—8—67

My dear Sri Shanmugam,

I am extremely happy to learn that you are celebrating the Centenary of Thavathiru Shankar Das Swamigal and many influential people of Tamil Nad are associated with it. I know full well that the Tamilnad has a great heritage of Theatre since a Century of more. I have seen some of the plays of great actors and actresses like K.B. Sundarambal, Kishnappa, Sambhanda Mudaliyar and a host of others. The tradition with a modern outlook is well settled and popular now. Your efforts are commendable. Great persons like pujya Sankar Doss are like prophets in the Drama World of Tamil Nad. I may not be able to attend the function in person. I convey my choicest good wishes for the success of the Celebrations.

Thanking you,

Yours sincerely,
B. KANAKALINGESWARA RAO

★

**K. PADMANABHAN,** B.SC., M.B., B.S.

NAGERCOIL - 3
4—8—1967

கலைஞர் அவ்வை டி. கே. ஷண்முகம் அவர்கட்கு,

தமிழகத்தின் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றுண்டு விழா நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்ச்சி கொண்டேன். கலையையும் உயர் கலைஞர்களையும் மதிக்கிற மக்கள்தாம் பண்பு நிறைந்த சமுதாயமாக அமைய முடியும் என நினைக்கிறேன். தமிழ் நாட்டின் நாடகக் கலையின் அஸ்திவாரமாக விளங்கும் சங்கரதாஸ் சுவாமிகளை மக்கள் மறவாமல் போற்றிப் புகழ நூற்றுண்டு விழா நடத்தவும், சிறப்பு மலர் வெளியிடவும் முன்வந்த இன்றைய தமிழ் நாடகத் துறை உயர் கலைஞராகிய அவ்வை சண்முகம் அவர்கட்கும் அவரோடு ஒத்துழைக்கும் ஏனைய கலைஞர்கட்கும் என் மனநிறை வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
கே. பத்மநாபன்.

**Padmasri**
**Sthanam Narasimha Rau**

ALL INDIA RADIO
HYDERABAD-4
30-8-67

*Dear Shri T. K. Shanmugam,*

*I Thank you for your letter dated 22—8—1967. I am sending my blessings for being included in the Souvenir as required by you. Please accept.*

*" May the pious soul of Sankaradas Swamigal immerse in the hearts of those who try for the prosperity of the Tamil Dramatic Stage."*

*Yours sincerely,*
**NATA STHANAM.**

★

சென்னை-14
3—9—67



நாடகப் பேரறிஞர், அருட்கவிஞர், நல்லாசிரியர் என்ற பெருமைகளுக்கெல்லாம் உரியவர்களான தவத்திரு சங்கரதாஸ் ஸ்வாமிகள், என்றென்றும் நாடகக் கலைஞர்களின் வழிபாட்டிற்குரியவர்கள் என்பதை மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் உள்ளவரை ஸ்வாமிகளது திருநாமமும் உயர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அவர்களது நூற்றுண்டு விழா இறைவனருளால் சிறப்புற விரும்புகின்றேன்.

அன்பன்
சிவாஜி கணேசன்.



நூற்றாண்டு விழாக் குழுவின் தலைவர்

**தமிழவேள் - பி. டி. இராசன்**



சிறந்த நாடகாசிரியரும் அரசியல் பேரறிஞருமான
தமிழக முதலமைச்சர்
**மேதகு அண்ணாதுரை**

## விழாவைத் தொடங்கி வைப்பவர்



சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள்
மாண்புமிகு மா. அனந்த நாராயணன் அவர்கள்



மாண்புமிகு அமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி
(சிறப்புச் சொற்பொழிவாளர்)



கருத்தரங்கைத் தொடங்கி வைப்பவர்
சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர்

**உயர்திரு பி. ஜி. கருத்திருமன்**

நாடகப் பேராசிரியர்களும் பிரபல நடிகர்களும்



அமர்ந்திருப்பவர்கள் :

1. கே. வி. சந்தான கிருஷ்ண நாயுடு 2. முத்துச்சாமி கவிராயர் 3. சங்கரதாஸ் சுவாமிகள்

நின்றிருப்பவர்கள் :

1. கே. எஸ். அனந்தநாராயணன் 2. கே. எஸ். செல்லப்பா



கதிர்காம யாத்திரையின்போது சுவாமிகளின் திருக்கோலம்

# தமிழ் நாடகக் கலைக்கு உயர்வு அளித்த நாடகப் பேராசிரியர்கள்



பத்மபூஷணம். பம்மல் சம்பந்த முதலியார்



வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி




சதாவதானம் கிருஷ்ணசாமி பாவலர்



ம. கந்தசாமி முதலியார்

# தமிழ் நாடக உலகின் தந்தை

**தமிழ்வேள். பி.டி.இராசன்**

செயற்கரிய காரியங்களைச் செய்து மனித உலகத்தைச் செழுமைப்படுத்திய பெரியார்கள் நம் தமிழகத்தில் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களில் வெகு சிலரே புகழும் பொருளும் விரும்பாமல் சேவையே தமது கடமையாகக் கொண்டவர்கள். அத்தகைய பெருந்தகையாளர்களில் தமிழ் நாடக உலகின் தந்தையாக விளங்கும் தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகளைப்பற்றி நம்மில் பலர் சரிவர அறிந்திருக்கவில்லை யென்பது வருந்தத்தக்கதாகும்.

தமிழ் நாடக உலகத்தில் நிலவிய பல்வேறு நாடகங்களும் அவை அவற்றை எழுதிய, பயிற்றுவித்த ஆசிரியர்கள், அவற்றில் பங்குகொண்ட நடிகர் நடிகையர் ஆகியோரின் மனப்பாங்கு, ஆற்றல் ஆகியவைகளுக்கேற்ப பலவிதமாக நடித்து வரப்பெற்றன. இந்த முறைகேட்டை உணர்ந்த சுவாமிகள் நமது புராண, இதிகாச, இலக்கிய நாடகங்களை முறைப்படுத்தி அவை முழுவதிலும் பக்திச் சுவையும், பண்புச் செறிவும், தமிழ் மணமும் பளிச்சிடும் வண்ணம் சிறந்த பாடல்களையும், வசனங்களையும் உருவாக்கி தமிழன்னைக்குச் சூட்டி புலவனாகவும், நடிகனாகவும், ஆசானாகவும், பற்றற்ற ஞானியாகவும் வாழ்ந்து தமது பெயரை விளம்பரப்படுத்திக் கொள்ளாமலே எண்ணற்ற பேரின்பப் பாடல்களைத் தமிழுலகுக்கு வாரி வழங்கியவர் தவத்திரு சுவாமிகள் ஆவார்.

சுவாமிகள் இன்று நம்மிடையே இல்லை. எனினும் அவருடைய நாடகங்களும். அவர் விட்டுச் சென்றுள்ள அவருடைய நன் மாணாக்கர் சிலரும் அவருடைய பெரும் புலமைக்குச் சான்றுகளாக விளங்கக் காண்கிறோம்.

மதுரையில் இசைப் பெரும் புலவராகத் திகழ்ந்து அண்மையில் காலஞ்சென்ற மாரியப்ப சுவாமிகள், நாடக மன்னர்கள் டி. கே. எஸ். சகோதரர்கள், நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் ஆகியவர்கள் தவத்திரு சுவாமிகளின் சீடர்களில் சிலர் ஆவார்கள் என்று கூறும்போது, சுவாமிகளின் பெருமை நமக்கு ஒருவாறு விளங்குகிறது.

இசை நிகழ்ச்சிகள் அல்லது கச்சேரி மேடைகளில் பெரும்பாலும் சமஸ்கிருதம், தெலுங்கு முதலிய அன்னிய மொழிகள் இடம் பெற்று வந்த காலம் அது. பெரும் படிப்பாளிகளாக விளங்கிய தமிழர்கள் ஒருவருக்கொருவர் உரையாடிக்கொள்வதுகூட மதிப்புக்குறைவாகக் கருதப்பட்ட காலம் அது. அந்தக் காலத்தில் தமது அரிய தமிழ் மணம் கமழும் பக்திப் பாடல்களை தமிழ் நாடக மேடைகளில் தமிழிசை முழங்கச் செய்த பெருமை நமது சுவாமிகளையே சேரும். எங்கு நோக்கினும் சுவாமிகளின் நாடகங்களும் பாடல்களும் முழங்கத் தொடங்கின. முந்திய கால நாடக நடிகர்களும் நடிகைகளும் சுவாமிகள் காட்டிய வழியில் பாடல்களிலும் நடிப்பிலும் பின்பற்றி நடந்து வந்தவைகளைப் பேசிப் பெருமைபடும் வயதான ரசிகர்களில் சிலரை இன்றும் காணலாம்.

தமிழ் நாட்டு ரஸிகர் பெருமக்களின் விருப்புக்கு இணங்க நாடகக் கலைஞர்கள் நெளிந்து கொடுத்துப் போகும் போக்கு சமீபகாலமாகத் தலைதூக்கியுள்ளது. ஆதலால், தவத்திரு சுவாமிகளின் அரிய பாடல்களைச் சுவைக்கவோ சிறந்த வசனங்களைக் கேட்கவோ இயலாமல் போய்விட்டது. கலைஞர்கள் சமுதாயத்தின் முன்னோடிகளாகத் திகழ வேண்டுமென விரும்புகிறேன். வளர்ந்து வரும் சமுதாயத்துக்கு வேண்டிய புதிய கருத்துக்களுடன் நமது மக்கட் பண்பையும் தமிழ் அறத்தையும் வளர்க்கும் புராண இதிகாசக் கருத்துக்களையும் தமிழ் நீதிகளையும் கலைஞர்கள் மக்கள் மன்றங்களில் பரப்பும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

தமிழ் நாடகப் பேரறிஞனாகவும், நடிப்புக்கலையின் பேராசானாகவும் விளங்கித் தமிழ்த் தொண்டு புரிந்த ஞானச் செம்மல் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளுக்கு விழாக்கள் எடுக்கவும், சுவாமிகளின் நினைவால் மலர்கள் வெளியிடவும், சின்னம் எழுப்பவும் சுவாமிகள் பால் பெருமதிப்புக் கொண்டுள்ள தமிழன்பர்கள், கலைஞர்கள் முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும். அவர்கட்கு தமிழ் மக்களின் பூரண ஆதரவும் கிடைக்கும் என்று நம்புகிறேன். அவர்கள் முயற்சி வளர்க! வெல்க! என வாழ்த்துகிறேன். ☆



# நாடகம்

அருள்மொழி அரசு திருமுருககிருபானந்தவாரியார்



நாடக முழுவதும் நாடகத்தால் நலம் பெறுகின்றது. இறைவன் சத்து சித்து ஆனந்தம் என்ற பண்புகளையுடையவன். சத்து — உண்மை; சித்து — அறிவு; ஆனந்தம் — இன்பம்.

இந்தப் பண்புகள் மூன்றும் தமிழில் அடங்குகின்றன.

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழில்,

இயல் — சத்து
இசை — சித்து
நாடகம் — இன்பம்

சத்துமட்டும் தனித்து நின்றது இயல் : சத்தும் சித்தும் சேர்ந்தவை இசை: சத்து சித்து ஆனந்தம் என்ற மூன்றும் இயைந்தவை நாடகம் எனவுணர்க.

இயற்றமிழ் அறிஞர் உலகத்தை மட்டுங் கவரக் கூடியது. இசை—அறிஞர்களுடன் நடுத்தரப்பட்டவர்களையுங் கவரக் கூடியது. நாடகம், அறிஞர், அறிஞரல்லாதார், பாலர், முதியோர், ஆடவர், மகளிர் முதலிய அனைவரையும் ஈர்த்து மகிழ்ச்சி தரக்கூடியது.

இந்த நாடகத்துக்கு ஆசிரியர் நடராஜப் பெருமான் என வுணர்க.

"பரம நாடகாசாரி"

என்று அருணகிரியார் கூறுகின்றார்.

அற நெறிகளை மக்களுக்கு உபதேசிப்பதில் மூன்று விதம் உண்டு.

### (1) பிரபுத் சம்மிதம்

இது எஜமான் தன் பணியாளனுக்குக் கட்டளையிடுவது போல் அதிகார முறையில் அறத்தைக் கூறுவது.

"இப்படிச் செய்;" "அப்படிச் செய்யாதே"; "இப்படி நட;" "இப்படி நடவாதே;" என்று கட்டளையிடுவது.

"தர்மம் சர"
"சத்யம் வத"

என்று வேதங் கட்டளையிடுகின்றது. எனவே, வேதாகமங்கள் நமக்கு எஜமானைப் போல் கட்டளையிடுகின்றது. ஆதலால் **பிரபுத் சம்மிதம்.**

### (2) சுஹ்ருத் சம்மிதம்.

நண்பனுக்கு மற்றொரு நண்பன் அன்பாகக் கூறுவது போல் கூறுவது இரண்டாவது சுஹ்ருத் சம்மிதம்.

"அறஞ் செய விரும்பு"
"வித்தை விரும்பு"

என்று பக்குவமாக—இனிமையாகக் கூறுவது இவன் இதைச் செய்து கெட்டான்; ஆதலால் நீ இதைச் செய்யாதே; இவன் இதனைச் செய்து வாழ்ந்தான். நீ இதனைச் செய் என்று உதாரணங்கள் மூலம் விளக்குவது. இப்படிக் கூறுவது புராணம் முதலியவை. ஆகவே புராணம் முதலியவை **சுஹ்ருத் சம்மிதம்** என வுணர்க.

### (3) காந்தா சம்மிதம்

இன்பமுள்ள இளம் மனைவி தன் காதலனிடம் கொஞ்சிக் கூறுவது போல் மிக மிக இனிமையாக அற நெறிகளை உபதேசிப்பது **காந்தா சம்மிதம்.**

நாடகம் காந்தா சம்மிதமாகும். நாடகத்தின் மூலம் மிக எளிதாக மக்களிடம் அறநெறிகளைப் பரப்பி விடலாம். அதை நேருக்கு நேராக கண்ணால் கண்டு களிக்கச் செய்து அதன் மூலம்

உயர்ந்த பண்புகளை மக்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்து விடலாம்.

எனவே மேலே கூறிய பிரபுத்த சம்மிதம், சுஹ்ருத்த சம்மிதம் என்ற இரண்டினும் காந்தா சம்மிதம் சிறந்தது.

பழங்காலத்தில் கிராமங்களில் ஆண்டுக்கு ஒருமுறை அரிச்சந்திர நாடகம், சாவித்திரி நாடகம் முதலிய நாடகங்களைத் தக்காரைக் கொண்டு நடிப்பித்து மக்களிடம் அற நெறிகளைப் பரப்பினார்கள்.

ஆறு மாதம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியதை கற்றார் மூலம் ஒரு நாள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்; ஆறு மாதம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதை ஒரு நாள் நாடக மூலம் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

நாடகம் கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே சுவை மிகுந்த விருந்தாக அமைந்து தெவிட்டாமல் தித்திக்குந் தெள்ளமுதமாகும்.

நாடகத்துக்கு எங்கும் எக்காலத்தும் பெருங் கூட்டம் சேருவது இயல்பு. அதனாலேயே "கூத்தாட்டவைக் குழாம்" என்று திருவள்ளுவ தேவர் கூறுகின்றார்.

இந்தக் கூத்து பலவகைப் பிரிவுகளாக விளங்குவது. பாவைக் கூத்து, துடிக்கூத்து, குரவைக் கூத்து, பரதக்கூத்து, சரித்திரக்கூத்து என்று இன்னோரன்ன பல.

....."மர பாவை துன்றிடுங்
கயிறுவித மென மருவியாடி" என்று

அருணையடிகள் திருவேரகத் திருப்புகழில் பாவைக் கூத்தைப் பற்றி பகர்கின்றார்.

உலகமெல்லாம் போற்றும் உத்தம வித்தகப் பெரிய மகான் காந்தியடிகள் தமது 28வது வயதில் போர்பந்தரில் அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்தார். அந்த விநாடியே தான் அரிச்சந்திரனைப் போல் வாழ வேண்டும் என்று சத்தியத்தை நித்தியமெனக் கடைப்பிடித்து வாழ்ந்தார். இறுதி வரை உறுதியுடன் உண்மை நெறியில் நின்றார். ஆங்கில ஆட்சியை வென்றார். மத நெறிகளைக் கொன்றார். அவருடைய பூத உடம்பு மறைந்ததும் அவருடைய புகழுடம்பு எங்கும் நிறைந்திருக்கின்றது.

அப்பெருமான் காட்டிய சத்திய நெறியைப் பலர் இன்றுங் கடைப்பிடித்து வாழ்கின்றார்கள், ஆதலால் நாடகத்தால் உய்வு பெற்றவர் காந்தியடிகள். எனவே நாடகம் மக்களை நல்வழிப் படுத்தும் தனியாற்றல் படைத்தது.

நாடகத்தின் மோகன சக்தி மக்களை தன்வசமாக்கி இன்பமூட்டுவது.

இமாசலத்தில் ஒரு சமயம் நான் யாத்திரை செய்த போது, குப்த காசிக்கு அருகில் குண்டு கட்டி என்ற இடத்தில் ஓரிரவு இமயம் வாழ் மக்கள் அவர்களுக்குத் தெரிந்த பாணியில் நாடகம் ஆடி மகிழ்வதைக் கண்டேன். சகல கவலைகளையும் மறக்கச் செய்து மகிழச்சியைத் தருவது நாடகம்.

"அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே—அவர்
ஆட்டங்கண்டு நாட்டங் கொண்டேன் பாங்கி
மாரே"

என்று பாடுகின்றார் இராமலிங்க அடிகளார்.

நாடகத்துக்கு உயிர் நாடிகளாக விளங்குபவை பாவம். ராகம், தாளம் என்பவை.

நமது உடம்பில் சிறந்த நாடிகள் சூரிய நாடி சந்திர நாடி அக்கினிநாடி என்பன. இவற்றை இடை பிங்கலை சுழுமுனை என்பர். இதுபோல் பாவ ராக தாளத்தின் சம்மேளனம் நாடகம்.

ப—பாவம்

ர—ராகம்

த—தாளம்

இவையுடையது பரத நாடகம் என்பர்.

அசைவினால் ஒரு பொருள் பெருமையடைகின்றது. அணு அசைகின்றது. கதிர் அசைகின்றது; மதி அசைகின்றது; உலகம் அசைகின்றது. நாமும் அசைகின்றோம். நாம் அசைகின்ற தன்மையை யிழந்த போது நான்கு பேர் சேர்ந்து நம்மை அசைத்து விடுகின்றார்கள்.

ஆலயங்களில் உற்சவ மூர்த்தியை அலங்கரித்துத் தோளில் வைத்து அசைப்பார்கள். அந்த அசைவுக்கு வையாளி நடையென்று பேர்.

நாடகத்தில் கண் அசையும், கையசையும், உடம்பு அசையும், உணர்வும் அசையும். அந்த அசைவுகளினால் மக்களின் உள்ளங்கள் அசைகின்றன.

ஆடி யசைவதினுல் மயிலுக்குப் பெருமை யதிகம். நமது இந்தியாவின் பறவை மயில், முருகன் அந்த ஒரு மயிலின்மீது ஏறி ஆயிரம் ஆயிரம் மயில்களைக் கடந்து வந்து அடியார்களுக்கு அருள்புரிகின்ருன்.

"ஆனமந்தர ரூபநிலை கொண்டு அது
ஆடும் மயில் என்பது அறியேனே''

என்று அருளிச் செய்தார் அருணைமா முனிவர்.

உயர்ந்த சாத்திரங்களைத் தக்க பாத்திரங்கள் மூலம் நடிக்கச்செய்து நலம் புகட்டுகின்ற இந்த நாடக நூல்கள் பல நம் நாட்டில் தோன்றின. வடமொழியில் காளிதாசர் சாகுந்தலம் முதலிய நூல்களை உலகுக்கு வழங்கினர். தமிழில் அருணசலக் கவிராயர் தந்த ராமநாடகம், அதுபோல் பாரதநாடகம், கந்தபுராண நாடகம், அரிச்சந்திர நாடகம் என்று பல நூல்கள் தோன்றின.

அண்மைக்காலத்தில் தோன்றிய உண்மை நாடக நூல் ஆசிரியர் சங்கரதாஸ் சுவாமிகள். இன்று தமிழகத்தில் நாடகக்கலை கங்கா நதி போல் வற்ருது ஊற்றெடுத்து வெள்ளப் பெருக்காக ஓடுவதற்கு மூல காரணம் மதிப்புக்குரிய சங்கரதாஸ் சுவாமிகள்.

நுண்ணறிவும் இசைப் புலமையும் பூண்ட சுவாமிகள் தம் காலத்தில் பலப்பல நாடக நூல்களை அதிவிரைவில் ஆசுகவித் திறமையுடன் எழுதி வழங்கினர். தாமே நடித்தும் இளைஞர்களை நடிப்பித்தும், நாடகவுலகத்திற்கு மார்க்கதரிசியாக விளங்கினர்கள். அவர்களுடைய புகழ் இன்றும் குன்ருது இமயத்தின் சிகரம் போல் காட்சி தருகின்றது.

எனது அன்புக்கு உரிய மாரியப்ப சுவாமிகள் ஔவை சண்முகம் முதலிய சிறந்த அறிஞர்கள் சங்கரதாஸ் சுவாமிகளின் அரிய பெரிய பண்புகளை பற்றிப் பலமுறை கூறக்கேட்டு மகிழ்ந்ததுண்டு.

அவர் காட்டிய நன்னெறியிலே நாடகத் தமிழன்பர்கள் செல்க. வறுமையை வெல்க.

வாழிய நாடகத் தமிழ்

வாழிய சங்கரதாஸ் சுவாமிகளின் கீர்த்தி.

ஓங்குக நாடக வுலகம்.

---

## சிலப்பதிகாரம் கூறும் அரங்கு

இக்காலத்தில் சிற்சில ஊர்களில் நாடகசாலைகள் இருக்கக் காண்கிருேம். ஆனல், அவை ஊரின் ஒதுக்குப்புறத்தில் உள்ளன. சிலப்பதிகார காலத்தில் அவ்வாறின்றி ஊரின் நடுவே தேரோடும் வீதியில் ஆடல் அரங்குகள் அமைந்திருந்தன என்று அறிகிருேம்.

'ஊரகத்தாகி உளைமான் பூண்ட
தேரகத்தோடும் தெருவுமுக நோக்கிக்
கோடல் வேண்டும் ஆடரங்கதுவே'

என வரும் அரங்கேற்றுகாதை வரிகள் நாடக அரங்கங்கள் பெற்றிருந்த செல்வாக்கையே அறிவுறுத்துகின்றன.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம்

"நற்சரிதை நற்கவிதை நல்நடிப்பு
நாட்டினிலே நாடகத்தில் அமைக்க வேண்டும்''

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

# பாலே நடனம்



துணைவேந்தர்
மதுரை பல்கலைக்கழகம்.
பேராசிரியர்.
தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்



நான் ரஷியா சென்றிருந்த போது "பனி ஏரி" என்ற பாலே நடனத்தைக் கண்டேன். பழைய மாயாவிக் கதையின் அடிப்படையில் இந்த நடனம் உருவாகியுள்ளது. மலையாளத்தில் நடைபெறும் கதைகளி போல இங்கேயும் நடனமும் அபிநயமும் உண்டு. பேச்சு இல்லை. இசையானது கதைக்கும் அபிநயத்துக்கும் ஏற்றவாறு அமைந்து சிறந்த இடத்தைப் பெறுகிறது. இசையைப் பின்னணியாக நின்று பாடுகின்றவர்கள் இங்கே இல்லை. இது இருபதாவது நூற்றாண்டின் மிகச் சிறந்த வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றது. இதனை நான் ரஷியாவில் இருந்தபோது தான முதலில் பார்த்தேன். இதனைக் காண வரும் கூட்டத்திற்கு எல்லையில்லை. கலையில் எவ்வளவுக்கு ஈடுபட்டிருகிறார்கள் அந்த நாட்டு மக்கள் என்பது எனக்கு நன்றாக விளங்கியது. மேற்கே நடனமாடுவதை எல்லோரும் அறிவார்கள். ஆனால், அதனைச் சிறந்த கலையாக்கி வளர்த்துள்ள பெருமை இந்த நூற்றாண்டிற்கே உண்டு. திரைப்பட உலகில் இதற்கு மக்களிடமுள்ள ஈடுபாடு மிக மிகப் பெரியது; மிக மிக ஆழமானது. சர்க்கஸ் செய்வது போல உடலை வேண்டியபடி வளைத்து நடனமாடுவது ஒரு வியப்பு. ஆனால் அவற்றையெல்லாம் கதைக்கு உறுப்பாக்கி, கதைக்கேற்ற அபிநயமாக அமைத்து, இவற்றின் வழியே பேச்சில்லாமலேயே கதையின் முழுப் போக்கினையும் காண்போர் அறிந்து கொள்ளும்படிச் செய்வது மிகப் பெரிய வியப்பேயாகும். இந்த நடனத்திற்கு ஏற்ற வகையில் இசையும் அதனோடு கலந்து கதையை விளக்குகிறது. சுவையை மிகுதிப்படுத்துகிறது. காணபவா எல்லோரும் உலகை மறந்து கதை உலகிலும் இசை உலகிலும் அழகுலகிலும் புகுநது கலையாகவே ஆகிவிடுகிறார்கள்.

நம்முடைய நாட்டிலோ பரத நாட்டியம் வளர்ந்தது. கதைகளி வளர்ந்தது. இசையும் வளர்ந்தது. இயலும் வளர்ந்தது. முத்தமிழ் என்றெல்லாம் பேசுகிறோம். ஆனால் இன்றைய உலகில் 'பாலே' போன்ற ஒரு புதிய கலைப்படைப்பு இங்கு எழுந்துள்ளது என்று சொல்வதற்கில்லை.

சென்ற நூற்றாண்டில் தெருக்கூத்து முத்தமிழையும் ஒரே வடிவில் பொதுமக்களும் சுவைக்கும்படி நம்மைக் காணுமாறு செய்தது. பாகவத மேளாவும் கற்றோரிடையே இந்தத் தொண்டைச் செய்தது. அதிலிருந்து புதிய நாடகம் தமிழ் நாட்டில் உருவாகியபோது இலக்கியமும் இசையும் வளர்வதற்குத் திரு சங்கரதாஸ் சுவாமிகள் வாணாளெல்லாம் முயன்றார். அவருடைய சீடர்களே இன்று நாடகங்களை வளர்த்து வருகின்றார்கள். நாடகம் வளர்ப்பதோடு நடன நாடகம் வளர்த்தல் வேண்டும். அதற்கான முயற்சிகளைத் திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றாண்டுவிழாவில் தமிழகம் தொடங்கும் என நாம் எதிர்பார்க்கலாம். கலாக்ஷேத்ரம் முதலியவை இந்தத் தொண்டில் ஈடுபட்டிருந்தாலும் மேனாட்டில் 'பாலே' பெற்ற வெற்றியை நாம் கண்டதாகக் கூறமுடியாது. பழமையின் இரும்புப்பிடி நம்மைத் தலை தூக்க விடவில்லை போலும்.



# நாடகப் பேராசிரியர்

டாக்டர் மு. வரதராசனார்.

இது நாடகத் துறையில் பெரும் பணி புரிந்த சங்கரதாஸ் சுவாமிகளின் நூறுவது பிறந்த நாளைக் கொண்டாடும் பெருவிழா. இந்த விழாவில், அதே துறையில் பல ஆண்டுகள் தொண்டாற்றிய பெரியார் பம்மல் சம்பந்த முதலியாரின் சீரிய வாழ்வினைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்வது பொருத்தமாகும். சென்னை மாநிலக் கல்லூரியிலும், சட்டக் கல்லூரியிலும் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் படித்து பி. ஏ., பி. எல், என்ற பட்டம் பெற்று, சென்னையில் வழக்கறிஞராகவும், பிறகு நீதிபதியாகவும் விளங்கியவர் சம்பந்தமுதலியார். இந்தச் சென்னை நகரிலே சட்டக் கல்லூரியிலே ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கானவர் பி. எல். பட்டம் பெற்று வருகிறார்கள்; வழக்கறிஞராகத் தொழில் புரிகிறார்கள்; பலர் நீதிபதிகளாகவும் உயர்கிறார்கள். ஆனால், பள்ளி மாணவர்களுக்கோ பொது மக்களுக்கோ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சில நீதிபதிகளின் பெயர்களைச் சொல்லுங்கள் என்றால், விரல் விட்டு ஐந்து பேரை உடனே சொல்லத் தெரியாமல் திகைப்பார்கள். காரணம் என்ன? நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்களின் பேரையும் நீதிபதிகளின் பேரையும் மறந்துவிட்டோம். ஒரு சிலர் பெயர்களே நினைவில் உள்ளன. இந்தச் சில பெயர்களிலே மறக்க முடியாமல் எல்லோருடைய நெஞ்சினும் நிலைத்திருக்கும் பெயர் பம்மல் சம்பந்த முதலியாரின் பெயர். அதற்குக் காரணம்: அவர் பெற்ற பி. ஏ. பி. எல். பட்டம் அல்ல; அவர் ஏற்ற வழக்கறிஞர் தொழிலும் அல்ல; நீதிபதி பதவியும் அல்ல. இந்தத் தமிழ் நாடகத் துறைதான் அவர் பெயரை நிலைபெறச் செய்துவிட்டது. இந்த நூற்றாண்டில் மட்டும் அல்லாமல், இன்னும் பலப் பல நூற்றாண்டுகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் நாடகத் தமிழ்ப் பணி புரிந்த கலைஞராக அவர் பெயர் சிறந்து விளங்குவது உறுதி. வழக்கறிஞர் தொழிலும், நீதிபதி பதவியும் தரமுடியாத ஒரு தனிப் பெருமையைத் தமிழ் நாடகத் துறை அவருக்குத் தந்துள்ளது என்பதை நாம் மறத்தல் கூடாது.

## எழுத்தும் அனுபவமும்

அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன் நாடகம் பார்ப்பது நல்ல குடும்பத்தார்க்கு அழகு அல்ல என்ற பிற்போக்கான நிலை இருந்தது. நாடகத் துறையில் ஈடுபட்டவர்களுக்குச் சமுதாயத்தில் மதிப்பு இல்லாதிருந்த காலம் அது. அந்தக் காலத்தில், பி. ஏ. பி. எல்., பட்டம் பெற்ற வழக்கறிஞர் ஒருவர்—நல்ல குடும்பத்தில் பிறந்த ஒருவர்—நாடகத் துறையில் ஆர்வம் கொண்டு, தாமே நாடகங்கள் எழுதி, தாமே நடித்துத் தொண்டாற்றினார் என்றால், அது வியக்கத்தக்க முன்னேற்றமான செயலாகும். சுகுண விலாச சபையைத் தோற்றுவித்து, அதன் வாயிலாகப் பல நாடகங்களை அரங்கேற்றியவர்களுள் பம்மல் முதலியார் சிறப்புப் பெற்றவர். அன்று அவருடைய பிணைப்புக்கு இயைந்து மேடை ஏறி நடித்தவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள் தேச பக்தர் சத்தியமூர்த்தி, சர். ஆர், கே. சண்முகம் செட்டியார், சர். சி. பி. ராமசாமி ஐயர் ஆகியோர். தெருக் கூத்தளவில் நாட்டுப்புறங்களில் இருந்ததுதான் தமிழ் நாடகம் என்ற நிலையை மாற்றி, மற்ற நாடுகளில் உள்ளது போல், நாகரிகமான நாடக மேடைகளும் தமிழகத்தில் உண்டு என்ற பெருமையைத் தேடித் தந்தவர் பம்மல் அறிஞர்.

## தொண்டும் தூய்மையும்

நாடகம் இயற்றும் ஆசிரியரே நடிகராக விளங்குவது அரிதாக உள்ளது. நடிப்புத் துறையில் வல்லவர் நாடகம் இயற்றித் தருதலும் அரிதாக உள்ளது. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப் புலவர், உலகம் போற்றும் நாடக ஆசிரியராக விளங்கிய காரணம் என்ன? அவர் நாடகம் இயற்றும் கலைஞராகவும் நடிக்கும் கலைஞராகவும் ஒருங்கே விளங்கி இரு வகையிலும் சிறந்த அனுபவம் பெற்றிருந்ததே காரணம் எனலாம். இளமை முதல் நாடக அரங்கிலே நடித்துப் பழகியவர்களுக்கே நாடகக் கலையின் திட்ப நுட்பங்கள் தெரியும். நடிப்புத் துறையில் பழகாத என்னைப் போன்றவர்கள் நாடகம் எழுதலாம்: ஆனால் நாடக மேடையின் நுட்பங்களை எல்லாம் கற்பனை செய்து கொண்டு செம்மையாகப் படைத்தல் இயலாது. அதனால்தான் நடிப்பின் நுட்பங்கள் அறியாமல் எழுதப்பட்ட நாடகங்கள் நடிப்பதற்கு என்று தேர்ந்தெடுக்கப்படும் போது, பல மாறுதல்கள் அல்லது திருத்தங்கள் தேவையாகின்றன. சம்பந்த முதலியார் இரு வகையிலும் சிறந்த அனுபவம் பெற்றவராகையால், அவருடைய நாடகங்களில் இந்தக் குறை இல்லை. அவரே ஒத்திகைகள் நடத்தினார், நடித்தார், அரங்கேற்றினார், நூலை அச்சிட்டார், வெளியிட்டார். ஆகவே, ஒத்திகைக்கு பூசை போடும் நாள் முதல் நாடகத்தை அரங்கேற்றும் நாள் வரையில், காட்சி காட்சியாக நாடகத்தைக் கற்பனை செய்யத் தொடங்கிய நாள் முதல் பக்கம் பக்கமாகப் புரூப் பார்த்து நாடக நூலை அச்சிட்டு வெளியிட்ட நாள் வரையில், அவருடைய முழு உழைப்பும் இருந்தது. அதுவே அவருடைய வெற்றிக்குக் காரணம் ஆயிற்று. அவருடைய முதுமையில் கண் பார்வை குறைந்த பிறகும், 'இன்னும் என் சிந்தனையிலே ஒரு நாடகம் உருவாகிக் கொண்டிருக்கிறது' என்று சொல்வார், பிறர்க்குச் சொல்லி எழுதச் செய்வார்.

நாடகங்களைப் படைத்துத் தந்த கலைஞராக மட்டும் அல்லாமல், நாடகங்களை ஆராய்ந்துரைக்கும் ஆராய்ச்சியாளராகவும் அவர் விளங்கினர். நாடக மேடை நினைவுகளை அவர் எழுதி நூலாக்கித் தந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் நாடகத்தின் வரலாற்றைப் பற்றி மூன்று சொற்பொழிவுகள் செய்துள்ளார்.

இவ்வாறெல்லாம் நாடகத்துறையில் பெரும் பணியாற்றிய சம்பந்த முதலியார் தனி வாழ்க்கையிலே மிகத் தூய்மையான மனிதர், உயர்ந்த மனிதர், மிக ஒழுங்காக வாழ்வு நடத்திய அறிஞர். அன்றைய திருக்குறளின் அறநெறி முதல் இன்றைய மேற்கு நாட்டாரின் காலந் தவருமை என்னும் ஒழுங்கு முறை வரையில் எல்லாச் செம்மைகளையும் அவருடைய வாழ்க்கையிலே காணலாம்.

நகைச் சுவை தமிழிலக்கியத்திலும் தமிழர் வாழ்விலும் குறைவு என்று கூறப்படுகிறது. வாழ்க்கையை ஒரு கோணத்தில் நிறுத்திப் பற்றின்றிப் பார்க்க வல்லவர்களுக்கே நகைச்சுவை கைகூடும். அதுவே தரமான நகைச் சுவையாக அமையும் என்பர். சம்பந்த முதலியார் இந்த நகைச்சுவை இல்லாத குறையைத் தீர்க்கும் வகையில் 'சபாபதி' என்ற நாடகம் இயற்றிப் புகழ் பெற்ருர். பிறர் மனத்தைப் புண்படுத்தாமல், ஆனல் நகைக்கப்படுவோரும் சேர்ந்து மகிழும் வகையில் அமைவதே உயர்ந்த நகைச்சுவையாகும். அத்தகைய நகைச்சுவையை அவருடைய நாடகத்தில் பெறலாம்.

## கலையார்வச் சான்றுகள்

நாடகக் கலையில் அவருக்கிருந்த ஆர்வம் இணையற்றது, சிறுத்தொண்டர் நாடகம் நடிக்கப்பட்ட போது, சம்பந்த முதலியாரே சிறுத் தொண்டராக நடித்தார், சிறுத் தொண்டர்க்கு ஒரு குழந்தை வேண்டும். அந்தக் குழந்தையை அறுக்கப் போவதாகவும், அதன்மேல் கத்தி படுவதாகவும் நாடகத்தில் காட்ட வேண்டும் அல்லவா! துறவியர்க்குக் குழந்தைக் கறியமுது சமைத்துப் போட முன் வருவதாக நாடகத்தில் காட்ட வேண்டுமே! அப்படிப்பட்ட சோதனைக்கு ஆளாக்குமாறு ஒரு குழந்தையை நாடக மேடைக்கு அனுப்ப எந்தப் பெற்ருேர் முன் வருவார்கள்? கற்பனைக்கும் பொல்லாத காட்சி ஆகையால், எந்தப் பெற்ருேர்க்குக் குழந்தையை அனுப்ப மனம் வரும்? பம்மல் சம்பந்த முதலியார்க்கு ஒரு குழந்தை நாடகத்திற்காகக் கிடைத்தது. அது யார் குழந்தை? அவருக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் குழந்தை இல்லாமல், பிறகு ஒரே மகனைப் பிறந்த தம் சொந்தச் சிறுவனே அந்த நாடகத்திற்குப் பயன்பட்டான். சீராளனை நாடகத்திற்கு உதவினன். நாடகத்தைப் பார்த்தவர்களும் கேட்டவர்களுமான உறவினர்களும் நண்பர்களும், 'இப்படியும் செய்யலாமா? என்ன கொடுமை' என்று பழித்தார்கள். ஆனல் சம்பந்த முதலியாரின் கலையார்வம் அந்தச் சலசலப்பை ஒரு சிறிதும் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து மற்ற நாடகங்களிலும் அவ்வாறே செய்தார். அதே போல, அரிச்சந்திர நாடகத்திலும் செய்தார். அரிச்சந்திர நாடகத்தில் சுடுகாட்டுக் காட்சியில் பிணமாய்க் கிடக்க ஒரு மகன் வேண்டுமே! லோகிதாசனை நடிப்பதற்கு ஒரு சிறுவனை யார் கொடுப்பார்கள்? பம்மல் சம்பந்த முதலியாரே தம் அருமை மகனை—தவமிருந்து பெற்ற ஒரு மகனை—லோகிதாசனுக்கி, தாமே அரிச்சந்திரனுக நடித்தார். இவையெல்லாம் நாடகக் கலையில் அவருக்கு இருந்த பேரார்வத்தை காட்டும் சான்றுகளாகும்,

## இரண்டு ஆசைகள்

அவருடைய நிறைந்த முதுமைக் காலத்தில் ஒரு நாள் என்னுடன் பேசிக்கொண்டிருந்த போது 'எனக்கு இந்தத் துறையில் இரண்டு ஆசைகள் உண்டு. ஒன்று ஏறக்குறைய நிறைவேறி வருகிறது. இன்ஞென்று நிறைவேறுவதை நான் பார்க்க முடியாது. நீங்களாவது பாருங்கள்' என்ருர். 'நாடகத் துறையில் நடிகர்களுக்குச் சமுதாயத்தில் மதிப்பு வளர்ந்து வருகிறது. அரசாங்கம் பட்டம் பரிசு தருகிருர்கள். இசைத் துறையில் தருவது போல், இலக்கியத் துறையில்—இயற்றமிழில்—தருவது போல் நாடகத் துறையிலும் தருகிருர்கள். இவை போதுமா? போதா. இலக்கியத்தில் பி. ஏ., எம். ஏ. பட்டம் தருகிருர்கள். இசையில் படிப்பும் பட்டமும் இருக்கின்றன. நாடகத் துறையிலும் அப்படிப்பட்ட படிப்பும் பட்டமும் பல்கலைக் கழகங்களில் அமைய வேண்டும். படிப்படியாக ஏற்பட்டு வருவதாகக் கேள்விப்படுகிறேன். அது மகிழ்ச்சி தருகிறது. ஆனல், இன்ஞென்றில் முன்னேற்றம் அவ்வளவாக இல்லை, அதாவது இப்போது ஆண்கள்—குடும்பத்தில் வாழ்கிற ஆண்கள்—நாடகங்களில் நடிக்க முடிகிறது. அதனல் அவர்களின் மதிப்புக்கு ஒரு குறைவும் ஏற்படுவதில்லை. ஆனல் அப்படிக் குடும்பப் பெண்கள் நடிக்கிருர்களா? நடித்தால் அவர்களின் மதிப்புக்கு ஒரு குறைவும் ஏற்படாது என்று கூற முடியுமா? அது நாடகக் கலைக்கே ஒரு குறை என்று எனக்குத் தோன்றுகிறது. குடும்பப் பெண்கள் நடித்தால் அவர்களின் மதிப்பு ஒரு சிறிதும் குறையாதபடி, நாடகக் கலைக்கு நல்ல உயர்வு ஏற்படவேண்டும். இது எனக்கு உள்ள மற்ருேர் ஆசை. அந்த ஆசை உங்கள் காலத்திலாவது நிறைவேறட்டும். நீங்களாவது பார்த்து மகிழுங்கள்' என்ருர்.

இவ்வாறெல்லாம் நாடகக் கலையின் உயர்வையே தம் குறிக்கோளாகக் கொண்டு தொண்டு ஆற்றிய பெரியார் சம்பந்த முதலியார், அந்தக் கலைக்காக அவர் எவ்வளவோ தியாகம் செய்துள்ளார். தூய உயர்ந்த வாழ்க்கை நடத்திக் கலைத்தொண்டு ஆற்றிய அத்தகைய சான்ருேரின் புகழ் வெல்க! வாழ்க!

———



சேவை செய்த மகான்களின்
சிறந்த காவியம்.....
சென்னை
சாந்தி
(டிலக்ஸ் ஏர்கண்டிஷன்ட்)
கிரௌன்
புவனேசுவரி
மற்றும் தென்னாடெங்கும்
பத்மஸ்ரீ
சிவாஜி
கணேசன்
அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
திருவருட்செல்வர்
ஈஸ்ட்மென் கலர்
பாடல்கள் · கவிஞர் கண்ணதாசன் • இசை · K.V. மகாதேவன் • ஒளிப்பதிவு · பிரசாத் • கலை · கங்கா
ரிகார்டிங் · ரீரிகார்டிங் · T.S. ரங்கசாமி • ஸ்டுடியோ · சாரதா (லெஸ்ஸிஸ் ஆப் மெஜஸ்டிக் ஸ்டுடியோஸ்)
ப்ராஸஸிங் · பிரிண்டிங் · ஜெமினி ஸ்டுடியோஸ் கலர் லாபரட்டரி
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.P. நாகராஜன்
BAKTHA

# படிக்கும் நாடகமும் பார்க்கும் நாடகமும்

*சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம். எம்.எல்.ஏ.,*



தமிழை இயல்—இசை—நாடகம் என மூன்று கூறுக்கி அதற்கு 'முத்தமிழ்' எனப் பெயரிட்டனர் முன்னோர். இது தமிழ் மொழிக்கே உரிய—பிற மொழி எதற்குமில்லாத—தனிச்சிறப்பு என்றும் சொல்லப்படுகின்றது. ஆனால், தமிழ் இலக்கணத்தைப் பொறுத்த வரையில் இது சரிதான். இலக்கியங்களை ஆராய்ந்தால் 'நாடக நூல்' என்று சொல்லத்தக்க எதுவும் பத்துப் பாட்டிலோ, எட்டுத் தொகையிலோ, பதினெண்கீழ் கணக்கிலோ, ஐம்பெருங் காப்பியத்திலோ, இடம் பெறவில்லை. ஐம்பெருங் காப்பியங்களில் சிலப்பதிகாரம் ஒன்று மட்டும் 'நாடகக் காப்பியம்' என்று சொல்லப் படுகின்றது. அதுகூட அப்படியே நடிப்பதற்கேற்ற முறையில் காட்சி காட்சியாக அமைந்திருக்கவில்லை. சற்றேறக்குறைய இளங்கோ காலத்தவராகக் கருதப் படும் மகாகவி காளிதாசர் வட மொழியில் இயற்றியுள்ள சாகுந்தலம் நடிப்பதற்கேற்ற முறையில் அமைந்துள்ள நாடக இலக்கியமாகும். இது போன்ற பல நாடக நூல்கள்—அதாவது காட்சிகளை முறையாகப் பிரித்து பாத்திரங்கள் நேருக்கு நேர் உரையாடும் பாணியிலே அமைந்த நாடக இலக்கியங்கள் வட மொழியில் பல உள்ளன. அந்த வகையில் அமைந்த பண்டை நாடக நூல் எதுவும் தமிழிலில்லை. இருந்து அழிந்து போயிருக்கலாம். ஆம், அப்படியும் சொல்லப்படுகின்றது.

சிலப்பதிகாரக் காப்பியம் நாடகமாகத் திருத்தியமைத்துக் கொள்ளத்தக்க காப்பியம் என்பதில் ஐயமில்லை. காளிதாசனின் சாகுந்தலம் திருத்தப் படாமலே நடிப்பதற்கான நாடக நூல். சிலப்பதிகாரத்தை அப்படிச் சொல்வதற்கில்லை. ஆகவே சிலப்பதிகாரத்தையும் நீக்கிவிட்டால், நாடக நூல் என்று சொல்லத்தக்க பழைய இலக்கிய நூல் தமிழில் இல்லை. ஆம், முத்தமிழின் ஒரு கூருகவுள்ள நாடகம், வெறும் ஏட்டுச்சுரைக்காயாகவே இருந்து வந்துள்ளது.

தமிழில் நாடக நூலில்லாத பெரும் குறையைப் போக்கிய பெருமை பத்தொன்பது—இருபதாம் நூற்றுண்டுக்களுக்கே உரிமையாகும். சங்க காலத்திலும், இடைக் காலத்திலும் வாழ்ந்த தமிழர்கள், நடனக் கலையில் கொண்டிருந்த எல்லையற்ற மோகத்தால், அதையும் ஒரு அங்கமாகக் கொண்டு முழுமை பெற்ற நாடகக் கலையை வளர்க்கத் தவறினர் போலும்.

## மனோன்மணியமும் கண்ணகி கதையும்

இருபதாம் நூற்றுண்டில் கேரள நாட்டின் தலைநகரான திருவனந்த புரத்தில் வாழ்ந்த தமிழ் மணியான பேராசிரியர் சுந்தரனர் நடிப்பதற்கேற்ற பாணியில் 'மனோன்மணியம்' என்னும் நாடக இலக்கியத்தை வழங்கினர். ஏறக்குறைய அதே தலைமுறையில் நம் தமிழகத்திலே வாழ்ந்த தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நடிகராகவும் நடிகர்களைப் பயிற்றுவிக்கும் பேராசிரியராகவும் நாடக நூல் எழுத்தாளராகவும் இருந்து வளர்ச்சியற்றுக் கிடந்த நாடகத் தமிழுக்கு வாழ்வு தரப் பாடுபட்டார். அவர் நாடகக் கலையின் முழு வடிவம் எனலாம்.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளுக்கு முன்பே சிலப்பதிகாரக் காப்பியம் நாடக வடிவம் பெற்று தமிழகத்து நடிகமணிகளால் நடிக்கப் பெற்று வந்தது. 'கண்ணகி கதை' என்னும் பெயரால் அம்மானைப் பாடல் வடிவிலிருந்த ஒரு நூலை நாடகக் கலைஞர்கள் பயன்படுத்தினர் என்று அறிகிறேன்: அந்த அம்மானை இலக்கியம் புகழேந்திப் புலவரின் பெயரால் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. இதில் கருத்துவேற்றுமைக்கு இடமுண்டு. ஆயினும் இளங்கோ தந்த சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவியையும் தலைவனையும் பாமர மக்களுக்கு அறிமுகப் படுத்திய பெருமை அந்த அம்மானை இலக்கியத்துக்கு உண்டு. புகழேந்தியின் பெயரால் வந்த அந்த அம்மானை இலக்கியத்தை மூலதனமாகக் கொண்டு, 'கோவலன்' நாடகமொன்றை இயற்றித் தந்து தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு சிலப்பதிகாரச் செல்வத்தைப் பயன்படுத்தினர் தவத்திரு சுவாமிகள். அந்த நாடகம் பல வகையில் இளங்கோவின் சிலப்பதிகாரத்திலிருந்து வேறுபட்டும் மாறுபட்டும் அமைக்கப்பட்டதாகும். என் போன்றவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாத சில அம்சங்களும் அந்த நாடகத்திலுண்டு. ஆனல் போற்றத்தக்க அம்சங்களும் இல்லாமல் இல்லை.

## சிலப்பதிகாரத்தில் குறைபாடு

இளங்கோ தந்த காப்பியத்தில், பாண்டியன் நெடுஞ்செழியன் அரசவையைக் கலைத்து அரண்மனையின் அந்தப்புரத்திற்கு விரைந்து கொண்டிருக்கும் தருணத்தில் அவனை அணுகுகின்றுன் பொற்கொல்லன். ஆம், மன்னனுடன் தான் தனித்திருந்த தருணத்தில் தான் கோவலனைக் கள்வனுக்கி, அவன்மீது புகார் கூறுகின்றுன். மன்னனும் குற்றவாளியை அரசவைக்குக் கொண்டு வருமாறு கூறுவதற்கு மாருக, அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருமாறு ஆணையிட்டு இரு கொலைஞரையும் பொற் கொல்லனுடன் அனுப்பு

கிறான். இதிலுள்ள குறை காப்பியத்தைப் படிக்கும்போது அவ்வளவாக நம் மனதில் படுவதில்லை. ஆனால் நாடக மேடையில் காட்சிப்படுத்திக் காட்டும் போது காண்போருக்குக் குறை புலப்படத்தான் செய்யும். இந்தக் குறையை அகற்ற, குற்றம் சுமத்தப் பெற்ற கோவலனை கோவேந்தன் அவையிலே கொண்டு நிறுத்துகிறார் தவத்திரு சுவாமிகள். அவையிலும் நன் மந்திரி, துன் மந்திரி என இரு வேறு மந்திரிகளைக் காட்டி கோவலனுடைய வழக்கு விசாரணையை நடத்தி வைக்கின்றார்.

இளங்கோவின் காப்பியத்திலும் கொலைக்களத்தில் கோவலன் வெட்டப்படும் காட்சி (செய்தி) உண்டு. பொற்கொல்லன் அரசனால் அனுப்பப்பட்ட இரு கொலைஞர்களுக்கு கோவலனைக் காட்டி 'இதோ, இவன் தான் கள்வன் ; வெட்டுங்கள்' என்கிறான். கொலைஞர்களிலே ஒருவன் கோவலன் அங்க லட்சணங்களை ஆராய்ந்து, உத்தமனுக்குரிய இலக்கணங்கள் இருக்கக் கண்டு, 'இவன் கொலைப்படும் மகனலன்' என்று கூறி, கோவலனை வெட்ட மறுத்து விடுகிறான். அந்த நேரத்தில் கோவலன் கள்வனே என்பதை மெய்ப்பிக்கக் கொலைஞர்களுக்கு நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்துகிறான் பொற்கொல்லன். பிறகே கோவலன் வெட்டப்படுகிறான். இவ்வளவு நேரமாகியும் கோவலன் ஒரு வார்த்தைகூட கூறவில்லை. அவனுடைய மனோ நிலை எத்தகையதென்பதை நாம் தெரிந்துகொள்ள இளங்கோ வாய்ப்புத் தரவில்லை. காரணம் அப்படியே நடிப்பதற்கேற்ப, காட்சி ரீதியில் சிலப்பதிகாரம் அமைக்கப்படவில்லையென்பதுதான்.

## சுவாமிகள் தந்த நாடகம்

காட்சி ரீதியில் அப்படியே நடிப்பதற்கேற்ப கோவலன் நாடகத்தைத் தந்த தவத்திரு சுவாமிகள் கொலைக்களத்திலே கோவலனைப் பேச வைக்கிறார். அவர் காலத்தில் நாடக மேடையிருந்த நிலைக் கேற்ப தன் வரலாற்றை அகவற் பாவிலே பாடி அழவும் வைக்கின்றார். இதனால் நாடக நூலுக்குரிய பெருமையை, தேவைகளைத் தம் நூலில் நிறைவு செய்துள்ளார் சுவாமிகள்.

இப்படி கோவலன் வழக்கு விசாரணையும், கொலைக்களத்தில் கோவலன் தரும் மரண வாக்குமூலமும் நாடகத்தில் இருந்தில்லையானால், கோவலன் நாமம் இருபதாம் நூற்றாண்டு மக்களை கவர்ந்திருக்க முடியாது. இளங்கோவின் பெருங்காப்பியத்திற்கு வழிநூல் செய்யும் திறமை இருபதாம் நூற்றாண்டு நாடகப் பேராசிரியரான தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளுக்கு இருந்தது. சுவாமிகள் தந்த கோவலன் நாடகத்தில் பாத்திரங்களின் பண்புகளிலே பழுதுண்டு. சிலப்பதிகாரக் காப்பியத்தைப் படித்தோர் அந்தப் பழுதுகளைக் காட்டி சுவாமிகளைப் பழிக்கவும் செய்யலாம். இங்கு ஒன்றை மறந்துவிடக் கூடாது. சிலப்பதிகாரக் காப்பியம், கல்வியறிவும் ஓரளவேனும் பண்பட்ட வாழ்க்கையுமுடைய புலவர்கள் மட்டுமே படித்து ரசிக்கத் தக்கதாகும். கோவலன் நாடகமோ சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களும் கண்டு ரசிக்கத் தக்கதாகும். படித்து ரசிப்போர் நிலை வேறு, பார்த்து ரசிப்போர் நிலை வேறு. முன்னவர் சிலராகவும், பின்னவர் பலராகவும் இருத்தல் இயற்கையே. இந்த இரு தரப்பாரும் ஒரு சேரப் பாராட்டும் வகையில் நாடகத்தை அமைக்கும் நிலை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்லை. அதனாற்றானே 'நெஞ்சு பொறுக்கு திலையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்' என்று பாடிப் பாடி அழுது செத்தார் பாரதியார்.

## நாடக நூல்கள் விலை போவதில்லை

தமிழில் நாடக இலக்கியங்கள் தோன்றாததற்கும் மக்களிடமிருந்த இந்த மனப் போக்குத்தான் காரணமாக இருக்கவேண்டும். அதாவது நம் தமிழ் நாட்டு மக்கள் நாடகத்தைப் பார்த்து மகிழ்வதிலே உலகிலுள்ள வேறு எந்த நாட்டினரையும்விட முன்னணியில் நிற்கிறார்கள். ஆனால், நாடக இலக்கியத்தைப் படித்து மகிழ்வதிலே தமிழர்கள் மிக மிகப் பின் தங்கிக் கிடக்கிறார்கள். டி. கே. எஸ். சகோதரர்கள் நடத்திய உயர்தரமான நாடகங்களின் இலக்கிய நூல்கள் கூட மக்கள் மத்தியிலே விலை போவதில்லை. ஷேக்ஸ்பியரின் நாடக நூல்களுக்கு ஆங்கிலம் அறிந்த மக்கள் மத்தியிலே நல்ல கிராக்கியிருப்பதாக அறிகிறேன். அந்த நிலை தமிழ் நாடக நூலுக்கு எந்தக் காலத்திலுமே இருந்ததாகத் தெரியவில்லை. இனியேனும் இருக்குமாவென்பது ஐயப்பாடே. இது தமிழ் நாட்டு ரசிகர்களின் தனிப்போக்கு, இதனாற்றான் முத்தமிழில் மூன்றாம் தமிழாகவுள்ள நாடகத் தமிழ் சங்க காலம் தொட்டு இந்தக் காலம் வரை நடித்து வளர்க்கும் தமிழாக இருக்கிறதேயன்றி, படித்து வளர்க்கும் தமிழாக இல்லை.

நாடகக் கலைக்கும் திரைப்படக் கலைக்கும் தொழில் முறையிலன்றி, கலையளவில் அதிக வேற்றுமை இல்லையென்பதே என் கருத்து. ஆனால், படிக்கும் நாடகத்துக்கும் பார்க்கும் நாடகத்துக்கும் பலனில் எவ்வளவு வேற்றுமையுண்டோ அவ்வளவு வேற்றுமை நாடகக் கலைக்கும் திரைப்படக் கலைக்கும் இடையே உண்டு.

## நாடகங்களில் காமச்சுவை

குறிப்பாக, காம உணர்ச்சியை எடுத்துக்கொள்வோம். பழைய சங்க இலக்கியங்களிலே ஓரளவு 'தரக் குறைவானவை' என்று சொல்லத்தக்க காமப் பேச்சுக்களும் உண்டு. இடைக்கால சிற்றிலக்கியங்களிலோ காமச்சுவையை கடவுள்மேல் வைத்துப் பாடியுள்ளனர் கவிஞர் பெருமக்கள். ஆனால், கவிதைகளைப் படித்து பொருள் உணரும் புலமை அறிவு பெற்றவர்கள் மட்டுமே காமச்சுவை இலக்கியங்களைப் படித்தனர். அவர்கள் வாழ்க்கையிலே ஓரளவு அனுபவம் பெற்ற வயதினராகவும் காம உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் கடவுள் பக்தி இலக்கியங்களையும் படித்தவர்களாகவும் இருக்க முடிகின்றமையால், காமச்சுவை இலக்கியங்களால் அதிகம் கெட்டுப்போக மாட்டார்கள். நாடக இலக்கியங்களைப் படிப்போருக்கும் இது பொருந்தும். ஆனால், நாடகங்களைக் காண வருகிற சாதாரண பொது மக்கள் நிலை வேறு. தாய் மொழியில் கூட எழுதப் படிக்கத் தெரியாத மக்களெல்லாம் நாடகத்தைப் பார்க்கிறார்கள். ஒழுக்க நூல்களைப் பயிலாதவர்கள், உலக அனுபவங்களைப் பெறாத இளம் வயதினர் காமச்சுவை யூட்டும் காட்சிகளைக் கண்டு உரையாடல்களைக் கேட்டால் உள்ளக் கவர்ச்சி பெற்று ஒழுக்கத்திலிருந்து பிறழும் விபத்துக்கு இரையாவார்கள். ஆனால் நாடகங்கள் பெரும்பாலும் முதல்தர இரண்டாம்தர நகரங்களில் மட்டுமே நடைபெறும் நிலையிருப்பதால், ஒழுக்கக் கேடுகளை வளர்க்கும் உரையாடல்களாலோ, காட்சி

களாலோ கெட்டுப்போகும் மக்களின் எண்ணிக்கை ஒரு எல்லைக்கு உட்பட்டதாகத் தானிருக்க முடியும். திரைப்படத்தின் நிலை வேறு.

நாகரிகம் புகாத பட்டி தொட்டிகளிலுள்ள மக்களெல்லாம் திரைப்படம் பார்க்கிறார்கள். சுருங்கச் சொன்னால் காட்சிகளைக் கண்டு பொருளறியாத நிலையிலே வாய் திறந்து சிரித்து மகிழும் பச்சிளம் குழவி உட்பட வாழ்நாளின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வயோதிகர் வரை திரைப்படம் பார்க்கிறார்கள். இந்த நிலையில் திரைப்படக் காட்சி ஒழுக்கக் கேடுகளை வளர்க்கும் நிலையிலிருந்துவிட்டால், ஒரேயொரு திரைப்படம் போதும், நாட்டிலுள்ள அவ்வளவு பேரையும் கெடுக்க!

## படவுலகில் நிலைமை வேறு

நாடக மேடையில், காண்போர் அவ்வளவு பேரின் கண்களுக் கெதிரே நடிகர்கள் நடிக்கிறார்கள். அதனால், தரக்குறைவான சொற்களில் உரையாடவோ, ஆபாசமான உடையுடன் அல்லது அபிநயத்துடன் காட்சியளிக்கவோ நடிக—நடிகையர் சிறிதேனும் வெட்கப்பட சந்தர்ப்ப மிருக்கிறது. அவர்கள் தவறினாலும், காட்சியைக் காணுகின்ற மக்கள் 'சூ' கொட்டித் தங்களுடைய வெட்கத்தை—வெறுப்பை வெளிப்படுத்தி, நடிகர்களையும் வெட்கப்பட வைக்கிறார்கள். ஆனால் திரைப்பட அரங்கில் இந்த நிலை இல்லை.

ஸ்டுடியோவுக்குள்ளே தொழிலின் வெற்றிக்காக எதையும் செய்யலா மென்பதைச் சித்தாந்தமாக்கிக் கொண்டுவிட்ட சிலர் மட்டுமே தங்களைச் சூழ்ந்திருக்கும் நிலையில், நடிக—நடிகையர் நடிக்கும் காட்சி படமாக்கப்படுகிறது. அதனால் மோசமான உரையாடல்களை, உடைகளை, பாவங்களைத் தவிர்ப்பதற்கு இயற்கையாகவே தங்களிடமுள்ள வெட்க உணர்ச்சி நடிக—நடிகையருக்கு உதவி புரிவதில்லை காலையில் துயிலெழுந்து தண்ணீரில் குளிப்பவன் முதல் முழுக்குப் போடும்போது சிறிது தயங்குகிறான் அதற்கப்புறம் எத்தனை முழுக்கும் போடத் தயாராகி விடுகிறான். அதுபோல முதலில் ஒன்றிரண்டு படங்களில் நடிக்கும் நடிக—நடிகையரிடம் வெட்க உணர்ச்சியைக் காண முடிகிறது நடிக்கும் படத்தின் எண்ணிக்கை ஏற ஏற—புகழ் ஏணியின் படியில் ஏற ஏற, நடிக—நடிகையரிடமுள்ள நாண உணர்ச்சி குறைந்து குறைந்து, நாளடைவில் மறைந்தே போய் விடுகிறது போலும் இதனால் தரக்குறைவான நாடகங்களின் மூலம் விளையக்கூடிய தீமைகளைவிட தரக்குறைவான திரைப்படங்கள் மூலம் விளையக்கூடிய தீமை சமுதாயத்தையே அழித்து விடக்கூடியதாக இருக்கின்றது. இந்த அபாயத்திலிருந்து மீளுவதற்கு ஒரு வழி உண்டென்றால், அது நடிக—நடிகையர்களுக்கு உண்மையான தேசப்பற்றும், தெய்வப்பற்றும் இருக்க வேண்டும் என்பதுதான். ஆம், உண்மையான என்ற சொல்லை இங்கு நான் பயன்படுத்தி யிருப்பதைக் கவனிக்க வேண்டும். தேச பக்தியும், தெய்வ பக்தியும் இருந்தால், கேவலம் பொருளும் புகழும் திரட்டுவதற்காக நாட்டு மக்களை நாசப் பாதைக்கு இட்டுச் செல்லும் எண்ணம் எவருக்கும் ஏற்படாது.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளிடம் தெய்வப் பற்றும், தேசப்பற்றும் உண்மையாகவே இருந்தன. உலக இன்பங்களைத் துறந்த பின்னரே தமிழுக்குத் தலைக்காப்பியம் தந்தார் இளங்கோவடிகள். அதுபோல, இல்வாழ்க்கையைத் துறந்தவராகி, நாடகத் தமிழின் வாழ்வுக்கென்றே தொண்டு புரிந்தார் சுவாமிகள். தெய்வப் பற்றும், தேசப்பற்றும் கொண்ட நாடகப் பேராசிரியர் என்பதற்காகவே இன்றைய தமிழுலகம் சுவாமிகளைப் போற்றுகின்றது.

வளர்க—நாடகக் கலை!

வாழ்க—சங்கரதாஸ் சுவாமிகள் புகழ்!

---

முத்தமிழ் என்று வழங்கப்பெற்ற மொழியில் ஒரு நாடகங்கூடக் காலதேவனது கையிற் சிக்காமல் நிலைபெற முடியவில்லை யென்பது வியப்பையே விளைக்கிறது. ஆனால், இதிலிருந்து ஒரு உண்மையை நாம் அறியமுடிகிறது. மேனாட்டு இலக்கியத்தில் காணப்பெறுவது போலப் படிப்பதற்கென்றே ஏற்பட்ட நாடகங்கள் தமிழ் மொழியில் இல்லை. அனைத்தும் நடிப்பதற்காகவே எழுதப் பெற்றன. நாட்டில் நடிப்பு சுருங்கியவுடன் நாடக நூல்களும் அழிந்து ஒழிந்தன.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம்

# கோயமுத்தூர்
# கூட்டுறவு பால் சப்ளை யூனியன், லிமிடெட்

ஆர். எஸ். புரம். கோயம்புத்தூர்—2

ஸ்தாபிதம் : 15·7·1937. தொலைபேசி எண் : 22389

☆

திரு : M. S. பழனியப்ப முதலியார், B.A., தலைவர்
திரு : C. N. நாகப்ப கவுண்டர் B.A. B.L., உப தலைவர்

பங்குத் துகை ரூ. 97,070
க்ஷேம நிதி ரூ. 142,158
இதர நிதிகள் ரூ. 12,21,337
தினசரி பால் புழங்கும் அளவு 13500 லிட்டர்

☆

சுகாதார முறையில் நவீன இயந்திரங்களைக் கொண்டு பக்குவம் செய்யப்பட்ட சுத்தமான பாலை (Pasteurised Milk) கோவை நகர மக்களுக்கு வழங்கி பொது மக்களின் மேலான ஆதரவு பெற்று வளர்ந்து வரும் ஒரு உன்னத கூட்டுறவு ஸ்தாபனம்.

☆ **சுவையான பால் கோவா,**

☆ **ஐஸ் கிரீம்,**

ஆகியவைகளும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப் படுகின்றன.

பால் வற்றிய கறவைகளை குறைந்த செலவில் மேய்த்து உதவ
பண்ணை வசதிகளும் உள்ளன.

விபரங்களுக்கு தொடர்பு கொள்க

**P. நடராஜன்**

பிஸினஸ் மேனேஜர்.




ஒவ்வொரு மனிதனுக்கும் குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், விருத்தப் பருவம் என மூன்று பருவங்கள் உண்டல்லவா? அதுபோன்றே தமிழுக்கும் மூன்று பருவங்கள் உண்டு. அவை, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழாகும். விருத்தப் பருவத்தில்தான் ஒவ்வொருவரிடமும் பரிபூரண அனுபவமும், அறிவும் அமைகின்றன. அதுபோன்றே நாடகத் தமிழிலே இயலும், இசையும் அமைந்திருக்கின்றன. நாடகக் கலையில் சிறந்தவன் இயலிசையில் தானாகவே திறமை பெற்றுவிடலாம். தமிழை சாதாரண மக்களிடையே வளர்த்ததில் இயலுக்கும் இசைக்கும் இருக்கும் பெருமையைவிட நாடகத்திற்கு அதிகப் பெருமை உண்டு என்பது என் கருத்து.

## மகா மேதை

இத்தகைய நாடகக் கலையில் அன்று ஒரு மகா மேதை நம் நாட்டில் தோன்றினார். அவர்தான் இன்று நமக்கெல்லாம் கலங்கரை விளக்கமாக விளங்கும் சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார். சென்ற பல ஆண்டுகளாக அவருக்கு நாம் நினைவு விழாக் கொண்டாடுகிறோம். புதுவையிலே நினைவு மண்டபம் எழுப்பியிருக்கிறோம். நாம் நன்றியுள்ளவர்கள் என்பதற்கு இவை எடுத்துக்காட்டாகும்.

சுவாமிகளின் பெருமையைப் பற்றி இன்று நினைக்கவே பெருமையாகவும், வியப்பாகவும் இருக்கிறது. அவரைப் போன்றவர்கள் இன்று நம்மிடையே இல்லையே என்று எண்ணும் போது கவலையும் மேலிடுகிறது. ஒரே இரவில் எழுதி முடிக்கும் அவரது நாடகங்களில் ஒரே ஒரு எழுத்தைக்கூட அவர் அடித்துத் திருத்தி எழுதியது கிடையாது. வார்த்து ஊற்றிய அழகான சிலைகளைப் போல அவருடைய படைப்புகள் கம்பீரமாக இருக்கும்.

இன்று பலர் நாடகங்கள் எழுதுகிறார்கள், பார்க்கிறோம். சில நாடகங்கள் ஆறு மாதங்கள் மனத்தில் பதிந்திருக்கின்றன. இன்னும் சில நாடகங்கள் பார்த்த அன்றே மறந்து போகும். மற்றும் சில நாடகங்களோ பார்த்துக் கொண்டிருக்கும்போதே மறந்து கொண்டிருக்கும். இதிலிருந்து பக்குவம் பெற்ற நாடக எழுத்துக்கள் நம்மிடையே மிகவும் அபூர்வமாகிவிட்டன என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். எத்தனை ஆண்டுகள் ஆனபோதிலும், சதி அனுசூயா, கோவலன், பவளக் கொடி முதலிய நாடகங்களை நம்மால் மறக்க முடிகிறதா? நாடகங்களுக்கெல்லாம் தாய்ச் சரக்காக விளங்கும் இம்மாதிரி நாடகங்களெல்லாம் நம் சுவாமிகளின் சிருஷ்டிகள்.' அந்த அற்புதப் படைப்புகளும் ஒரே நாளிரவில் எழுதி முடிக்கப் பெற்றவைகளே.

## பாடல்கள்

வெறும் வசனம் மட்டுமா எழுதினார்? பற்பல மெட்டுகளில் அருமையான பாடல்களையுமல்லவா எழுதினார்!......... இந்தக் காலத்துப் பாடல்களைப் போலவா?

"பிரேம நகரிலே இன்பம் செய்வேன்
உன்னை யடைந்து தான் நானே
உல்லாசமாகத் தானே"

இந்தக் காலத்துப் பாடல் களுக்கு இது ஓர் உதாரணம். இந்தத் தினுசிலா எழுதினார் சுவாமிகள்? இல்லை. ஒருவன் முறையின்றிப் பேசினால் எதுகை மோனை இன்றிப் பேசுகிறான் என்று வசை சொல்வதுண்டு. அந்தக் காலத்தில் பேச்சுக்கே, எதுகை மோனை இலக்கணவரம்புகள் தேவைப்பட்டன. இந்தக் காலத்தில் பாடல்களில்கூட எதுகை மோனைகளைக் காணோம்.

சுவாமிகளின் பாடல்களுக்குச் சில உதாரணங்கள்: – எமதர்மன் வருகிறான்.........

"திக்கெட்டுமென் சட்டத்திற்குட்
பட்டடுத்து நிற்பதற்குக்
கர்த்தனிட்ட கட்டளையெ
னக்கதற்குத் தக்கபடி
துஷ்டர்களைக் கண்டு பிடிப்பேன், பிடித்து வந்து
வெட்டிக் குத்திக்குத்தித் தண்டிப்பேன்."

எமதர்மனுக்கே உரிய பாணியில் இசை நலம் கெடாமல் எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார்; பாருங்கள். பாடலைப் பாடும் போதே எமதர்மனின் குணம் புரிகிறதல்லவா?

### நாரதர்

சின்னப் பையன் 'நாரதர்' வேடம் போட்டு வருகிருன் என்ருல் அவனுக்கென்று ஒரு பாடல் எழுதுவார். அதில் நாரதரின் உள்ளம் தெரியும்.

'' சரிகம பதநியா மெழுசுர நிலையை
சங்கீத சுகமே பெரிய சுகம்''

எவ்வளவு இனிமையாக இருக்கிறது பாடல்!......

'பபூன்' வேடம் போட்டு வரும் சிறுவர்களுக்கு அவர் எழுதிய ஒரு பாடலைப் பாருங்கள்:

''விகடனை ஒரு கோமாளி என்று
விளம்புவார்கள் தெரியாதவர்கள்
வித்துவான்கள் கர்வம் மட்டந்தட்ட வந்த
வீரனுமென்பார் தெரிந்தவர்கள்
சகடம் ஓடந்தனிலேறும் ஓடம்
தானுமோர் நாள் சகடமேறும்
சாத்திர வாதத்தில் எந்த நாளும் வெற்றி
தானடைந்தா ருண்டோ நீர் கூறும்
பத்துப்பேர் குஸ்தியில் முன்னமே பீட்டடி
பட்டவனே பின் பயில்வானும்
பாரிலே வெற்றியும் தோல்வியு முண்டு
பதற்றம் கொள்ளாதவன் வித்வானும்.

உயர்ந்த தத்துவத்தை எவ்வளவு எளிமையாகச் சொல்லிவிட்டார் பாருங்கள்.

### கவிமணி

சில ஆண்டுகளுக்கு முன்பு கவிமணி அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த போது, 'இந்தக் காலத்துப் பாடல்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டேன்.

'வசனத்தையே எழுதி வளைச்சு வச்சிப் பாட்டாக்கி யிருக்காங்க' என்று வருத்தத்துடன் பதில் சொன்னர் அவர்.

ரசிகமணி டி. கே. சி, அவர்களிடம் ஒரு நாள் இந்தக் காலத்து பாடல் ஒன்றைப் பாடிக்காட்டி, 'உங்கள் கருத்தென்ன?'வென்று சிரித்துக்கொண்டே கேட்டேன்.

அவர் சொன்னர்: 'உங்களுக்கு இன்னும் வாலிபம் இருக்கிறது, அதனல் சிரித்துக் கேலி செய்ய முடிகிறது. எனக்கோ வயதாகிவிட்டது. சிரித்து கேலி செய்ய என் உடலில் வலுவில்லையே' என்ருர் ஹாஸ்யமாக.

### இமயமலை

இவற்றையெல்லாம் நினைக்கும்போதுதான் சுவாமிகள் 'நாடக உலகில் ஓர் இமயமலை' என்பதைப் புரிய முடிகிறது. சுவாமிகள் பண்படுத்திய நாடக நிலத்தில் இன்று நாமெல்லாம் கலை பயில்கிரேம். நமது வணக்கமும் நன்றியும் என்றும் அவருக்கு உரியதாகும். அவரைத் தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வழி வகுக்க வேண்டும்.

வளர்க சுவாமிகளின் புகழ்!
வாழ்க நாடகக் கலை.

(1956 இல் கலைவாணர் எழுதிய கட்டுரை)


காஞ்சிபுரம்

## எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் லிமிடெட்

(IND, No: 47)

44-B, திருக்கச்சி நம்பி தெரு . . . . . . . சின்ன காஞ்சிபுரம்.

எங்களால் பனைவெல்லம் சேர்த்து, மாட்டுச் செக்கில் தயாரிக்கப்படும் சுத்தமான எள் எண்ணெய், பிண்ணுக்கு முதலியவைகளை வாங்கி உபயோகிக்க வேண்டுகிரேம்.

K. S. பார்த்தசாரதி,
தலைவர்.

*With the best compliments*

*of*

Grams: GOUNDER CO., Post Box: 1512 Phone: 23377 (3 Lines)

# THE GOUNDER AND COMPANY

**225-226, DR. NANJAPPA ROAD, COIMBATORE - 18.**

*Dealers For*

☆ TATA MERCEDES – BENZ

☆ TRUCK AND BUS CHASSIS

For

**COIMBATORE AND NILAGIRI DISTRICTS**

*Head Office :*

4-A, GOODS - SHED ROAD, POLLACHI. Phone: 627, 327, 328

**TATA MERCEDES BENZ** | **SERVICE CENTRES AT**

COONOOR ROAD, OOTACAMUND - PHONE: 461, 462

COIMBATORE ROAD, POLLACHI PHONE: 782

# SUNKAST

## QUALITY
## AUTO PARTS

***Clutch Housings, Brake Drums and King Pins***



To meet the rising demand for dependable quality auto parts, SUNDHARAMS PRIVATE LTD., produce SUNKAST clutch housings, brake drums and king pins in their up-to-date factory at Madurai.

SUNKAST auto products are of superior quality manufactured under the supervision of expert technicians who have decades of experience in automobile engineering.

**SUNDHARAMS PRIVATE LTD.**
B Super 1 & 2, Industrial Estate, Madurai 7
(A member of the TVS Group Companies)

tvs-s-3956

# உடுமலை முத்துசாமிக்கவிராயர்

-நடிகன்-

உடுமலை முத்துசாமிக் கவிராயர் சங்கரதாஸ் சுவாமிகள் காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய மற்றொரு நாடகாசிரியர். இவர் சுவாமிகளைவிட நான்கு வயது மூத்தவர்.

கவிராயர் உடுமலைப்பேட்டையில் 1863 செப்டம்பர் மாதம் 13-ஆம் தேதி பிறந்தார். தந்தையார் திரு. அங்கப்ப செட்டியார். இருபத்தி நாலு மனை தெலுங்கு தேசாதிபதிகள் என அழைக்கப்படும் வைசிய மரபிலே தோன்றியவர் இவர்.

முத்துசாமியின் தாய்மொழி தெலுங்கு. 14ஆவது வயதிலேயே தமிழிலும், தெலுங்கிலும் கவி பாடும் புலமை இவருக்கு ஏற்பட்டது. முத்துசாமியின் இசைத் திறமையையும் நினைவாற்றலையும், பாடல் புனையும் சக்தியையும் கண்ட பெரியோர்கள் 'முத்துசாமி பிற்காலத்தில் பெரும்புகழோடு விளங்குவான்' என்று கூறினர்கள்.

1891-ஆம் ஆண்டில் 18-ஆவது வயதில் இவர் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினர். அந்நாளைய ஆங்கிலப் படிப்பு மிகவும் கடினமானது என்பதை எல்லோரும் அறிவார்கள். அந்த நாள் மெட்ரிகுலேஷன் என்றுல் அது இந்தக் காலத்துக்கு பி. ஏ. படிப்புக்கு மேற்பட்டது எனக் கொள்ள வேண்டும். எனவே, முத்துசாமி தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசவும் பாடவும் சக்தி பெற்றிருந்தார்.

முத்தமிழ் சக்கரவர்த்தி எனப் பெரும் புகழ்பெற்ற மாம்பழக் கவிச் சிங்க நாவலர் அவர்களிடம் நமது முத்துசாமி இளமையில் மாணவராக இருந்தார். அப்போது இவரது புலமை மேலும் பொலிவு பெற்று விளங்கியது. தமது ஆசானுகிய மாம்பழக் கவிச் சிங்க நாவலரின் மேல் இவர் பல பாடல்கள் பாடியுள்ளார்.



முத்துசாமிக் கவிராயர்

'மெச்சுஞ் சிலேடை தனிற்காள
மேகம் சமுத்ர விலாசமென்பார்
தச்சுஞ் கிடந்து சுவைபருகச்
சந்திர விலாசம் பகர்ந்த சிங்கம்
அச் சுந்தரச் செவ்வேள் சிவன்பால்
அடையா திருந்தக் கனியடையப்
பச்சென் றிலங்கும் பொழிற்பழநிப்
பதியிலுதித்த மாம்பழமே... '

இப்பாடல் அவர் பாடலில் ஒன்றுகும்.

இருபதாம் வயதில் முத்துசாமி உடுமலைக் கன்னிகா பரமேஸ்வரி கோவிலில் மாதம் பத்துரூபாய் சம்பளத்துக்கு மகிமை கணக்கப்பிள்ளையாக வேலை பார்த்து வந்தார். அதன் பின்னர் குன்னத்தூரிலே அம்மை குத்தும் இன்ஸ்பெக்டராக சில காலம் பணி புரிந்தார். 26-ஆம் வயதில் மதுரைத் தமிழ்ச் சங்க பரீட்சைக்குப் போயிருந்தார். அப்போது இவரது புலமையை அறிந்த டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் அவர்கள் "தாங்கள் தேர்வுக்கு வரவேண்டிய புலவரல்லவே" என்று கூறினராம். ஐயர் அவர்களின் மூலம் அப்போது தமிழ்ச் சங்கத்தின் தலைவாகவிருந்த பாண்டித்துரைத் தேவர் அவர்களின் பேராதரவு முத்துசாமிக் கவிராயருக்குக் கிடைத்தது.

27-ஆம் வயதில் புலவரேறு தண்டபாணி சுவாமிகள் என்னும் முருகதாச சுவாமிகளிடம் சந்த இலக்கணம் பயின்றுர் கவிராயர். அப்போதுதான் சங்கரதாஸ் சுவாமிகளுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.

ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளி, தாராபுரம் லோகல் பண்ட் உயர்நிலைப்பள்ளி மற்றும் மன்னுர்குடி உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளிலெல்லாம் இவர் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்திருக்கிறுர்.

பள்ளி விடுமுறை நாட்களில் இவர் வேடிக்கையாக நாடகங்கள் எழுதத் தொடங்கினர். தம் பள்ளி மாணவரைப் பயிற்றுவிப்பதும், அரங்க மேடையில் நடிக்க வைப்பதுமாக இவர் நாடகத்துறையில் ஆர்வம் காட்டினர். அதன் காரணமாகவே கவிராயர் பிற்காலத்தில் நாடகத்துறையில் அதிகமாக ஈடுபட நேர்ந்தது. இவரது நாடகப் புலமையைப் பயன்படுத்திக்கொண்ட முதல் நாடகசபை தஞ்சை ஜகன் மோகன நாடகக் குழு எனச்சொல்லப்படுகிறது. அக்குழுவின் உரிமையாளர் பிரபல பெண் நடிகராக விளங்கிய சுந்தராவ் அவர்கள்.

சுந்தரராவ் அவர்கள் பிரசித்தி பெற்ற நவாப் கோவிந்தசாமி ராவ் அவர்களுக்குக் கதாநாயகியாக நடித்தவர். அவர் கவிராயரிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். 'விபீஷண சரணுகதி,' 'போஜராஜன்,' 'பீஷ்மர் சபதம்,' 'ஞான சவுந்தரி' முதலிய நாடகங்கள் ஜகன்மோகன நாடகக் குழுவுக்காக கவிராயரால் எழுதப்பெற்றன. 'தயாநிதி,' 'கண்ணுயிரம்' ஆகிய இரு சமுதாய நாடகங்களையும் இவர் எழுதியிருக்கிருர். பிரெஞ்சு நாடகப் புலவர் மோலியரின் 'லோபி' நாடகத்தையும் இவர் தமிழில் எழுதியிருக்கிருர். இந்நாடகங்கள் அனைத்தும் அக்கால முறைப்படி பாடல்களாகவே எழுதப் பெற்றன.

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் 'மனேகரா,' 'தாசிப்பெண்,' 'சகுந்தலா' ஆகிய நாடகங்களுக்குக் கவிராயர் பாடல்கள் சிலவற்றை எழுதியிருக்கிருர்.

பரமக்குடி அரங்கசாமி அய்யங்கார் அவர்களுக்காக இவரெழுதிய நாடகம் 'சம்பூர்ண இராமாயணம்'. இந்நாடகம் அச்சில் வந்துள்ளது.

நாடகத்தைத் தவிர மற்றும் பல நூல்களைக் கவிராயர் ஆக்கித் தந்திருக்கிருர். அவற்றில் 'வடிவேலர் சதகம்' என்னும் நூல் மிகச் சிறந்தது. நூறு பாடல்கள் கொண்டது. இதில் பத்துப் பாடல்கள் சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றியவை என்பது குறிப்பிடத்தக்கது. கவிராயர் எழுதிய 'திருவான்மியூர் கீத சேகரம்,' 'ஏனதி மாலிகாபரணம்', 'பாசுரசேகரம்,' 'முத்துச்சாமி சபதம்' 'உசிதகவிதாமஞ்சரி,' 'மனேரத விநோதம்,' 'இன்பவல்லிக் கும்மி' ஆகிய நூல்களும் அச்சில் வந்துள்ளன.

திண்டுக்கல்லையடுத்த கன்னிவாடி ஜமீனில் இவர் பல ஆண்டுகள் சமஸ்தான வித்துவானுக இருந்து வந்தார். பல புலவர்கள் கூடிய பேரவையிலே கவிராயர் அவர்களின் புலமை இன்பத்தை வியந்து 'சரபகவி' என்னும் பட்டம் வழங்கப் பெற்றுள்ளது.

கவிராயருக்கு நூற்றுக்கணக்கான மாணுக்கர்கள் உண்டு. அவர்களிலே தலைசிறந்தவர்கள் கே. வி. சந்தானகிருஷ்ண நாயுடு, சங்கரலிங்கக் கவிராயர், உடுமலை நாராயணக் கவி ஆகியோராவர்.

பிரபல நடிகர்களாகவும், சகோதரர்களாகவும் விளங்கிய கே. எஸ். செல்லப்பா ஐயர், அனந்த நாராயணய்யர் ஆகியோர் நடித்துவந்த ஆரிய கான சபாவில் இவர் சில ஆண்டுகள் நாடகாசிரியராகப் பணியாற்றினர். நாடகங்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் இவர் நூற்றுக்கணக்கான பாடல்கள் பாடிக் கொடுத்திருக்கிருர். ஓரடி, சந்தம், வண்ணம் ஆகிய வகைகளிலே கவிராயர் பாடியுள்ள பாடல்களை இப்போதும் பழம்பெரும் நடிகர்கள் சிலர் பாடிப் பாடி மகிழ்வதை நான் கேட்டிருக்கிறேன்.

கன்னிவாடி ஜமீந்தார் அப்பய்ய நாயக்கர் இவருக்கு மானியங்கள் வழங்கியுள்ளது. இவர் பாடிய பாடல் ஒன்றின் மூலம் நமக்குத் தெரிகிறது.

நானியம்பும் பாடலுக்கு,
ஞாபக மெந்நாளும் நிற்க,
மானியம் பூத்தந்த மகராஜன்,
வானியஞ் சேர்,
ஆத்தானக், கன்னிநகர்,
அப்பைய சாமி யென்னைக்
காத்தான், எனக்காத்தான் காண்

இது அப்பைய நாயக்கரின் மேல் பாடியுள்ள பாடல்.

இத்தகைய சிறந்த நாடகாசிரியர்களில் ஒருவராக விளங்கிய சரபகவி உடுமலை முத்துச்சாமி கவிராயர் குரோதன ஆண்டு, சித்திரை மாதம், 25-ஆம் நாள் சனிக்கிழமை தமது 63-ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். திருவாரூரில் ஓடம் போக்கியாற்றின் தென்கரையில் லிங்க ஸ்தாபன சமாதியில் இவருடைய உடல் சேர்க்கப்பட்டது.

முத்துசாமிக்கவிராயர் அவர்கள் எல்லோரோடும் இனிய முறையில் பழகக்கூடியவர். சாதுர்யமாகப் பேசி எல்லோரையும் சிரிக்கவைக்கும் தன்மை வாய்ந்தவர். இவர் நோயுற்றுப் படுக்கையிலிருந்த போது இவரைப் பார்க்க வந்த மருத்துவர் ஒருவர், 'தேகம் எப்படி இருக்கிறது? கவிராயர் ஐயா!' என்ருராம்.

'தேகம் சந்தேகம்' என்ருர் கவிராயர்.

மற்ருெரு தமிழ் மருத்துவர் கவிராயரின் கால் வீக்கம் தணிய சிகிச்சை செய்ய வந்தார். அந்த மருத்துவரிடம்,

'ஐயா, வைத்தியரே! கால் வலி மிகவும் துன்புறுத்துகிறது' என்றாராம் கவி.

மருத்துவர், 'முன்போல் அதிகம் வலியிருக்காது என நினைக்கிறேன்' என்றாராம். உடனே கவிராயர், 'இல்லை, முன்போல் முழுவலி போய்விட்டது. கால் வலிதான் இருக்கிறது' என்றார் கவி. இந்த வேதனையிலுமா நகைச்சுவை? என்று சொல்லிக் கொண்டே மருத்துவர் விடைபெற்றாராம். இவ்வாறாகப் பல செய்திகளை இவரது மாணாக்கர்களில் ஒருவரான சந்தான கிருஷ்ண நாயுடு அவர்கள் என்னிடம் விரிவாகக் கூறக் கேட்டிருக்கிறேன்.

அனந்த நாராயணய்யர் அவர்கள் கவிராயரின் பாடல்களில் மிகவும் பிரேமை உடையவர். என்னுடைய இளமைப் பருவத்தில் இப்பெரியார்களை எல்லாம் நான் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றபோது கவிராயர் அவர்களைப்பற்றி இன்னும் எத்தனையோ செய்திகள் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சங்கரதாஸ் சுவாமிகள், சம்பந்த முதலியார் ஆகிய தமிழ் நாடகத் துறைக்கு அரும்பணியாற்றிய இருபெரும் நாடகாசிரியர்களைத்தவிரமறைந்துபோன மற்றும் நாடகப் புலவர்கள் பலரை மீண்டும் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்பது சங்கரதாஸ் சுவாமிகள் நினைவுமன்றத்தின் திட்டங்களில் ஒன்று. அந்த வரிசையிலே குறிப்பிடத்தக்க ஒரு நாடகப் புலவர் உடுமலைச் சந்தச் சரபம் முத்துசாமிக் கவிராயர்.

கவிராயர் திருநாமம் வாழ்க!


பயிர்கள்

**P. S. G. R. பிராண்டு**

**சூப்பர் பாஸ்பேட்**
**கலப்பு உரங்களையே**
**விரும்புகின்றன.**

—: தயாரிப்பாளர்கள் :—

**கோயமுத்தூர் பயனீர் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்**

தொழிற்சாலை :

முத்துக்கவுண்டன் புதூர் :: சூலூர் ரோடு

பதிவு அலுவலகம் :

பயனீர் ஹவுஸ், பீளமேடு — கோயமுத்தூர்-4.

● இது ஒரு பயனீர் குரூப் ஸ்தாபனம்

BEAUTIFY YOUR HOMES

*By Using*

## VEMBANAD
## WHITE CEMENT

A quality Product with out
a substitute

THE WHITEST WHITE CEMENT OF
UNEXCELLED WHITENESS &
DURABILITY

*Manufactured by:*

**THE TRAVANCORE CEMENTS LTD.,**
**Nattakom (P.O.) KOTTAYAM-13.**
**(Kerala State)**

With the compliments
of

# KALI
# MARK

Kali Aerated Water Works
178, ROYAPETTAH HIGH ROAD
MADRAS-14

Phone: 84288

# சதாவதானம் தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலரை

மக்கள் திலகம். எம்.ஜி.ராமச்சந்திரன்

காலஞ் சென்ற நாடக ஆசிரியர் சதாவதானம் திரு. தெ. பொ. கிருஷ்ணசாமி பாவலர் அவர்களை நான் நன்கு அறிந்தவன். அவருடைய திறமையை நேரிலே கண்டு அனுபவிக்கும் பேற்றினைப் பெற்றவன். அவர் எழுதித் தந்த நாடகங்களிலே நடித்தவன். அதிலும், நாட்டிலே சுதந்திர உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் அடியை வாங்கிக் கொண்டு – உதையை வாங்கிக் கொண்டு - தியாகம் செய்து கொண்டிருந்த நேரத்தில் அந்த மக்களுக்கு உணர்ச்சியூட்டி நாட்டிற்கு நல்லதைச் சொல்லி, தேசிய எழுச்சியைத் தூண்டிவிட்டு, தடியடியானாலும் சரி– துப்பாக்கி குண்டுகளானாலும் சரி - சிறை செல்வதானாலும் சரி - ஏற்றுக்கொள்ளத் தயார் என்று துணிந்து முன் வந்த ஒரு சிறந்த நாடகப் பேராசிரியர் கிருஷ்ணசாமி பாவலர் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

பாவலர் அவர்கள் தம்முடைய திறமையை தமக்குச் சொத்து சேர்ப்பதற்காகப் பயன் படுத்திக் கொண்டவரல்லர். தம்முடைய உள்ளத்திலே எழுகின்ற சுதந்திர உணர்ச்சி, நாட்டு மக்களிடையே ஏற்படவேண்டுமென்று விரும்பினார். சமூகத்திலே, மாற்றம் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று ஆசைப்பட்டார். அவருடைய நாடகங்களின் பெயர்களைச் சொன்னாலே, அவர் எப்படிப்பட்ட நாடகங்களை அமைத்தார் என்பதை, நாம் உணர முடியும்.

**நாடகம் எழுதுபவருக்கு நடிப்புணர்ச்சி இருக்க வேண்டும்**

நான் முதன் முதலாகக் கலந்து கொண்டு நடித்த அவருடைய நாடகத்தின் பெயர் 'பதிபக்தி'. மதுவினால் குடித்துக் கெட்டுப்போன ஒரு பெரிய பணக்காரனுடைய வாழ்க்கையைச் சித்தரித்து, அதனால் அவனுடைய குடும்பம் பாழாகும் நிலையை எடுத்துக் காட்டி மக்களைத் திருத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒரு நல்ல நாடகம் அது.




அந்த நாடகத்தைத் தயாரிப்பதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சியையும், உழைப்பையும் நான் நேரிலே கண்டு உணர்ந்தவன். நாடகத்தை எழுதுகின்றவர் ஓர் உயர்ந்த நடிகராகவும் விளங்க வேண்டும். அப்படியிருந்தால்தான் நல்ல நாடகத்தை உருவாக்க முடியும். திரு. பாவலர் அவர்கள் சென்னை சுகுண விலாச சபையில், பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களோடு வேடந்தாங்கி நடித்தும் பழகியவர் என்பதை பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதனால் தான் அவர் நல்ல நாடகங்களை உருவாக்க முடிந்தது. மேடையிலே நடிக்கும் வாய்ப்பினை பெறுமல் இருப்பவர்கள் கூட, நல்ல நடிப்புணர்ச்சி உடையவராக இருந்தால் மட்டுந்தான் அவர் நல்ல நாடக ஆசிரியராக விளங்க முடியும் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கதாநாயகன் செல்வத்தை இழந்து, தன்னுடைய உயர்ந்த வாழ்க்கையை இழந்து, தீய நண்பர்களின் கூட்டுறவினால், உடல் நலத்தை இழந்து துன்பப்படுகிறான் என்ற ஒரு காட்சியை அமைக்க வேண்டுமென்றால், அந்த நிலையைத் தம் உள்ளத்திலே கற்பனை செய்து பார்த்து, இப்படித்தான் அந்தப் பாத்திரம் வேதனைப் படுவான் என்பதை மனக்கண்ணால் உணர்ந்து—உருவகப்படுத்தி தம்முடைய எழுத்துத திறமையால்-அறிவுத் திறமையால் - அதற்குரிய வார்த்தைகளை அமைக்கும் சக்தியைப் பெற வேண்டுமென்றால், நிச்சயமாக அந்த ஆசிரியர் ஒரு சிறந்த நடிப்புணர்ச்சி உடையவராக இருந்துதான் தீர வேண்டும். அந்த ஆற்றலை முழுக்க - முழுக்க அடைந்த ஒருவர் நமது மதிப்பிற்குரிய கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்களே.

**பிரசார நாடகமென்பது அவமானப்படுத்துவதல்ல**

அவர் அடுத்த படியாக எழுதித் தந்த நாடகம் 'கதர் பக்தி'. அந்த நாளில் விதேசித் துணிகளை எரிப்பதற்கும் விதேசித் துணிகளை

அணிவதே கேவலம் என்ற நிலைமை நாட்டிலே உண்டாயிருந்தது. அன்னிய நாட்டுத் துணியை உடுத்துகிறவன் 'தேசிய விரோதி' என்று மக்கள் கருதுகின்ற அளவுக்கு நாட்டிலே தேசிய உணர்ச்சியை ஊட்டிய நாடகம் அது! தேசம் மகாத்மா காந்தியடிகளின் வழியிலே சென்று கொண்டிருந்த அந்த நேரத்தில் நல்ல ஜரிகை வேட்டிகளை - பட்டுத் துணிகளை - உடுத்தியவர்கள் அப்படியே மேடைக்கு வந்து, 'எனக்கு ஒரு கதர் வேஷ்டி தாருங்கள். இந்த அந்நிய ஆடையைக் கொளுத்திவிடுகிறேன்' என்று மேடையிலேயே கொளுத்துகிற அளவுக்கு உணர்ச்சியைத் தூண்டிவிட்ட நாடகம் 'கதர் பக்தி'. அந்த நாடகத்தில் அவர் கதரைப்பற்றி மட்டும் சொல்லவில்லை. வாழ்க்கையில் தவறிப்போன பெண்கள், ஒதுக்கப்படவேண்டியவர்கள் என்று கருதப்பட்ட அந்த நேரத்தில், தவறிப்போன ஒரு பெண் தன்னுடைய நிலையை உணர்ந்து, தன் வாழ்க்கையைத் திருத்திக்கொண்டு, தேச சேவகியாகிப் பாடுபடவும் முன்வரக்கூடிய ஒரு பாத்திரமாகவும் அமைய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, ஓர் உயர்ந்த பாத்திரத்தை அந்த நாடகத்திலே அவர் அறிமுகப் படுத்தியிருந்தார். வாழ்க்கையில் தவறிய பெண்ணும், நல்லவளாக, சமூகத்தால் மதிக்கப்படும் அளவுக்குத் தன்னை மாற்றிக் கொள்ள முடியும் என்ற உண்மையை அந்த நாடகத்தின் மூலம் எடுத்துக் காட்டினர்!



பிரசார நாடகமென்ருல் யாரையாவது குறை கூறுவது, யாரையாவது முன்நிறுத்தி அவமானப் படுத்துவது என்ற நோக்கத்தில் பாவலர் பாத்திரங்களைப் படைக்கவில்லை. இன்றைய நிலையை நாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் நமக்கெல்லாம் தலை குனிவாக இருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் தீரவேண்டும்!

## காலமும் கருத்தும்

ஒரு அரசியல் கட்சியின் நல்ல தன்மைகளை எடுத்துக்கூற வேண்டுமென்ருல், இன்னொரு மாற்றுக் கட்சியிலே இருக்கிற ஒரு குறிப்பிட்ட நபரை அங்கே கொண்டுவந்து நிறுத்தி, அவமானப்படுத்தும் நிலைமை இன்று சில இடங்களிலே நடைபெறுவது கண்டு, நாம் வருந்துகிறோம்; தலை குனிகிறோம். இப்படியும் நாடகங்கள் எழுதுகிறார்களே என்று வேதனைப் படுகிறோம்.

இன்று எழுதும் திறமை நன்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. உரைநடை நல்ல வன்மையோடு கையாளப்படுகிறது. இந்த நாளில் பிரசார நாடகங்களை நன்ருக உருவாக்க முடியாமல் நாடக ஆசிரியர்கள் தம்முடைய திறமையை நாம் தலை குனியும் நிலையிலே வெளிப்படுத்துகிருர்கள். இந்த நிலையை எண்ணும் போதுதான், பாவலர் அவர்களுடைய பண்பு மிக்க ஆற்றலை நம்மால் நன்கு உணரமுடிகிறது. நாட்டிலே நல்லுணர்ச்சியைப் பரப்பி, மக்களை வீரர்களாக-தியாகிகளாக மாற்றும் ஒரு கதையை அமைத்துத் தந்து, பண்புள்ள ஒரு பெண்ணையும் உருவாக்கி, அவளை நல்ல தேச சேவகியாக அமைத்துத் தருவதென்பது, அந்த நாளிலே யாரும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத ஒரு செயற்கரும் செயலாகும்.

அன்றிருந்த வேகத்தில் மக்களுக்கு வேறு எதைப் பற்றியும் சிந்திப்பதற்கு நேரமில்லை. சுதந்திரம் வேண்டும்; அன்னிய ஆட்சி ஒழியவேண்டும், மகாத்மாவின் வழியிலே அதைப் பெற்றுத் தீர வேண்டும்-என்ற ஒரே வேகத்தில் நாடு சென்று கொண்டிருந்த நேரம்.

## சமூகத்தைப் பற்றிய சிந்தனை

அந்த நேரத்திலுங்கூட பாவலர் சமூகத்தைப் பற்றிச் சிந்தித்தார்; கலப்பு மணத்தைப் பற்றி எண்ணினர்; ஜாதி வேற்றுகளைக் களைந்து மக்களை ஒற்றுமைப்படுத்தக்கூடிய நல் உணர்ச்சியை அவர்களுக்குத் தரவேண்டுமென்று ஆசைப்பட்டார். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும் பொழுதுதான், அவர் எப்படிப்பட்ட ஒரு நல்ல நாடக ஆசிரியராக இருந்தார் என்பதை இன்று நாம் நினைத்து-நினைத்துப் பெருமைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மூன்ருவது நாடகமாக, பாவலர் எங்கள் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனிக்குத் தந்த நாடகம் 'கவர்னர்ஸ் கப்' என்பது! இந்நாடகம் குதிரைப் பந்தயத்தால் எத்தனைக் துடும்பங்கள் நாட்டில் நாசமுறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்ற ஒரு நாடகம்! கோடீஸ்வரனை ஒரு

பணக்காரன் தன்னுடைய மனைவி மக்களின் நகைகளையெல்லாம் அடகு வைத்து, நண்பர்களால் ஏமாற்றப்பட்டு - சூதாடியாகி - தன்னுடைய வாழ்க்கையைப் பாழ்ப்படுத்திக்கொண்டு, கர்ப்பிணியான தன் மனைவியைப் பாதுகாக்கக் கூட வழியில்லாமல், பிச்சை எடுக்கவேண்டிய நிலையிலே, சின்னஞ் சிறு குழந்தைகளை விட்டு ஓட வேண்டிய நிலையிலே. கொலைகாரனாக மாற வேண்டிய நிலையிலே, எப்படியெல்லாம் சீரழிந்து போகிறான் என்பதை அழகாக அந்த நாடகத்திலே சித்தரித்துக் காட்டினார். இன்று நாம் சமூக மாறுபாடுகளைப்பற்றி பல கருத்துக்களைப் பேசுகிறோம். ஆனால் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக, இத்தகைய சமூக நாடகங்களை அவர் எழுதித் தந்தாரென்றால், அவருடைய பெரும் உணர்ச்சியை நாம் எவ்வாறு மதிப்பிட முடியும்!

## மனிதன் தெய்வமாகலாம்

சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத ஒரு பெரும் செயலை மனிதன் செய்து காட்டும் பொழுது, அவன் அங்கே கடவுளாக மதிக்கப்படுகின்றான். பாவலர் அவர்கள் அத்தகைய பெருஞ் செயலைச் செய்த பேராசிரியராவார். இன்று நம்முன் அவர் இல்லையென்றாலும் நாம் அவரைப் பற்றிப் பேசவேண்டிய அளவில் நினைத்துப் போற்ற வேண்டிய அளவில் - உணர்ந்து பின்பற்றக்கூடிய அளவில் ஒரு மகத்தான சாதனையை அவர் செய்திருக்கிறார். எனவே, நிச்சயமாக அவர் கடவுளாக மதிக்கப்படும் நிலைமைக்கு உயர்ந்திருக்கிறார் என்று நாம் நினைத்துப் பார்ப்பதில் தவறில்லை என்றே கருதுகிறேன்.



நாடகக் கலைஞர்கள்—தொழிலாளர்கள்—நெசவாளர்கள்—விவசாயிகள்—எழுத்தாளர்கள் எல்லோரும் நல் உணர்ச்சியோடு பாடுபடுவார்களானால்—நாட்டின் நலனுக்காக ஒன்று சேர்ந்து உழைப்பார்களானால், நாடும் உயரும்,—நாமும் உயருவோம்.

கோவிலுக்குச் செல்லுகின்றவர்கள் அங்கிருக்கும் சிலைகளை வணங்குகிறார்களென்றால், சிலைகளின் அழகைப் பார்த்தோ, அவைகளின் அங்க அமைப்புகளைப் பார்த்தோ அல்ல. அந்தச் சிலைகளுக்குப் பின்னால் இருக்கின்ற வரலாறுகள் அந்தச் சிலையின் மூலம் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் இவற்றை எண்ணித்தான் நம் பக்கையோடு அவன் வணக்கம் செலுத்துகிறான். அதுபோல, பாவலர் அவர்களுடைய திரு உருவம் வெறும் படத்திலேயிருந்தாலும் நாம் மதிப்புக் கொடுப்பதும் - வணக்கம் செலுத்துவதும் அவருடைய கருத்துக்கும் உழைப்புக்கும் - அறிவுக்கும் ஆற்றலுக்குமே என்பதை உணர வேண்டும்.

## தேசிய வரலாற்றை உருவாக்கியவர்

நான் 'தேசிங்கு ராஜன்' என்ற படத்திலே நடித்தேன். அந்தக் கதைக்கு ஆதாரமாக இருந்தது பாவலர் அவர்கள் எழுதி பள்ளியிலே அன்று பாடமாக வைக்க அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு நாடக நூலாகும். இந்த அடிப்படையைப் புரிந்துகொள்ளாத சிலர் முஸ்லிம்களை இழிவு படுத்திவிட்டதாகவும், தக்க ஆதாரமில்லாமல் தவறு செய்து விட்டதாகவும் புகார் கிளப்பினார்கள். அவ்வாறு இழிவு படுத்தும் ஒரு நூலை, பள்ளியிலே பாடமாக வைக்க முடியுமா? என்பதை நினைத்துப் பார்க்கும்படியாக வேண்டுகிறேன்.

இந்த உண்மைகளை யெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, நாடகக்காரர்கள் வெறும் கூத்தாடிகள் அல்லர்; சமுதாயத்தால் போற்றப்பட வேண்டியவர்கள் என்பதையும் தேசிய வரலாற்றை உருவாக்கிய நாட்டுப்பற்றுடைய பெருங் கலைஞர்கள் என்பதையும், நாம் எண்ணி—எண்ணி மகிழ்ச்சி அடைகிறோம்.

Telegram : VASANTA Telephone : { 25522 / 25523

# THE VASANTA MILLS LIMITED

REGISTREL OFFICE

**SINGANALLUR : : COIMBATORE-5**

Authorised Capitel : Rs. 55,00,000
Paid up Capitel : Rs. 25,50,000

Spindles : 53,124 Looms : 289

MANAGING AGENTS :

## R. K. SHANMUKHAM CHETTY & BROS.,

SPINNING :

RING YARN OF ALL COUNTS RANGING FROM NF : 17 To 84

| | |
|---|---|
| SINGLE | DOUBLE |
| CHEESES | CONES |
| STAPLE FIBRE | GASSED AND MERCERISED |

MANUFACTURING :

**GADA MULLS,**
**DHOTIES, LONG CLOTH.**





# விடுதலைப்போரில் நடிகர்களின் பங்கு

பி. கக்கன்.

தமிழகத்தில் நாடகக் கலையின் மூலமாகத் தான் தேசபக்தி விசேஷமாக வளர்க்கப்பட்டு வந்தது. தேசபிதா மகாத்மா காந்தியடிகளே 'அரிச்சந்திரன்' நாடகம் பார்க்கச் சென்றுதான், அதைப்போல் சத்திய வழியிலே தாமும் நடக்க வேண்டுமென்று சங்கல்பம் செய்துகொண்டு அவ்வாறே இறுதி வரையில் வாழ்ந்தும் காட்டினர்.

நாடகத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு நல்ல கருத்துக்களை-உயர்ந்த தத்துவங்களை - நீதியை-நேர்மையை எடுத்துக் காட்டி, அக்கலைக்காகப் பாடுபட்ட உத்தமர்கள், தேசத்திற்காகச் சிறந்த தொண்டு செய்து வந்திருக்கிறார்கள்.

எங்கள் மதுரை ஜில்லாவில், கிராமங்களிலே நாடகம் நடக்கும் பொழுது கூட்டத்தோடு கூட்டமாகப் பல மைல் தூரம் நடந்து நாடகம் பார்க்கப் போனவர்களில் நானும் ஒருவன். என்னைப் போல் உங்களிலும் பலர் இருப்பீர்களென்று நினைக்கிறேன். நாடகக் கலைக்காக அரும்பாடுபட்ட உத்தமர்களுடன் நான் நெருங்கிப் பழகியும் இருக்கிறேன். அவர்கள் தேசபக்தியோடும், தெய்வ பக்தியோடும் சிறந்த பாடல்களைப் பாடி அந்தக் காலத்தில் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பெரும் பாடுபட்டார்கள். காலஞ் சென்ற சங்கரதாஸ் சுவாமிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர் எழுதிய நாடகங்களிலே நடித்து மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்ற உத்தமர்கள் ஒரு சிலரை நாம் இழந்துவிட்டோம்.- அவர்களில் ஒருவர் காலஞ்சென்ற திரு. விசுவநாத தாஸ் அவர்கள். அவரைப்போன்ற எத்தனையோ அன்பர்கள் நாடகத்தின் மூலம் தேசிய எண்ணங்களை மக்களிடம் பரப்பினார்கள். தேசம் நன்றாக இருந்தால்தான் கலைகள் வளரும்; அதிலும், நாடகக் கலை நன்றாக வளரும். அந்த வளர்ச்சியைத்தான் இன்று நாம் நாடு முழுவதும் பார்க்கிறோம்.

நல்ல முறையிலே கலைக்காகப் பாடுபடும் மக்கள் நன்றாக இருக்கவேண்டும் என்பது தான் என் போன்ற ஊழியனின் எண்ணம் அன்று நம்முடைய நாடகக் கலை வளர்ச்சிக்காக எவ்வாறு அவர்கள் பாடுபட்டு மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்றார்களோ அதைப்போல இன்றும் நாட்டின் முன்னேற்றத்தை நினைத்து அதற்காகக் கலைஞர் பெருமக்களெல்லாம் பாடுபட வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். நாடு நன்றாக இருந்தால்தான் நம் வீடும் நன்றாக இருக்க முடியும். நாட்டை உயர்த்தித்தான் வீட்டையும் உயர்த்தவேண்டும். நடிகப் பெரு மக்கள் இந்த உணர்வோடு பாடுபடவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். நாடக நடிகர்களை அன்றிருந்த வெள்ளைக்கார அரசாங்கம் பலவிதமான கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக்கியது. சிறையிலே அடைத்து சித்திரவதை செய்தது. அந்த நாளில் ஹார்மோனிய சக்ரவர்த்தி என்று சொல்லப்பட்ட திரு. வாசுதேவ நாயர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக, சிறையிலே அடைபட்டார். அவருக்கு அபராதமும் போட்டார்கள். அவர் அபராதம் கட்ட முடியாத நிலையில் இருந்தார். அவருடைய சிறைத் தண்டனை முடிந்த பிறகும், அபராதம் கட்டாவிட்டால் இன்னும் ஆறுமாதம் சிறையிலே வைத்திருப்பார்கள் என்ற நிலை ஏற்பட்டது. அப்போது அவர் மிகவும் சிரமப்பட்டார். இன்னும் ஆறுமாதம் சிறையிலே இருக்கவேண்டுமே என்று வேதனைப்பட்டார். வெளியேயிருந்து நாட்டிற்குப் பாடுபடமுடியாமல் போகிறதே என்ற கவலைதான் அவருக்கு. இந்தச் செய்தியை என்னிடம் சொன்னார். அப்போது என் கையிலே காசு கிடையாது. உற்ற நண்பனை-நாடகத்துக்காக பாடுபட்ட ஒரு உயர்ந்த கலைஞனை-எப்படியாவது விடுவிக்க வேண்டுமென்று என் மனம் துடித்தது. என் மனைவி கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அடகு வைத்து அபராதப் பணத்தைக் கட்டி அவரை வெளியே கொண்டு வந்தோம். இப்படி எத்தனையோ நாடக நடிகர்கள் நன்றாகப் பாடக்கூடியவர்கள் அந்தக் காலத்திலே

நாடக மேடையைத் தேச விடுதலைக்காகப் பயன் படுத்தி இருக்கிறார்கள்.

நாடகத் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்ற உத்தமர்களுக்கு இயன்ற அளவு உதவி புரிய தமிழ்நாட்டு மக்கள் முன்வர வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். என் மதிப்புக்குரிய திரு. டி. கே. ஷண்முகம் அவர்களும், அவருடைய சகோதரர்களும் நாடகத்தின் மூலமாக, தேசபக்தியை வளர்த்தது எனக்கு நன்றாகத் தெரியும். தமிழகத்திலே இன்று நாடகக் கலையை நல்ல முறையில் வளர்த்துவரக்கூடிய நல்ல சகோதரர்கள் அவர்கள். தமிழ் நாட்டின் பழம் பெரும் வரலாற்றை எல்லா மக்களும் அறிந்து கொள்ளுவதற்குரிய வாய்ப்பினை நம் சகோதரர்கள் நாடகத்தின் மூலமாகச் செய்து வருகிறார்கள். அவர்களுக்குத் தமிழ்நாடு மிகவும் கடமைப் பட்டிருக்கிறது.

மதிப்புக்குரிய சங்கரதாஸ் சுவாமிகள் திரு. டி. கே. ஷண்முகத்திற்காக ஒரே நாள் இரவில் அபிமன்யு சுந்தரி என்ற நாடகத்தை எழுதினர். ஆண்டவனுடைய சக்தி இருந்தால்தான் இந்த அற்புதத்தைச் செய்ய முடியும். இவ்வாறு அரும்பாடுபட்டு நாடகக் கலையை வளர்த்த சுவாமிகளை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது. வருடந்தோறும் அவருக்கு விழாக் கொண்டாட வேண்டியது நம்முடைய கடமையாகும். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பெரியவர்களின் வாக்கு. சுவாமிகளின் மாணக்கர்களும், இக்கலையில் ஈடுபட்டுள்ள பெருமககளும் தம்முடைய நன்றிக் கடமையைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுவாமிகளின் நூற்றாண்டு விழா 1967 செப்டம்பரில் வருவதாக அறிந்தேன். இவ்விழாவை சிறப்பாக நடத்துவதற்கு நாடகக் கலைஞர்கள் எல்லோரும் முயல வேண்டும். தமிழக சர்க்கார் அதற்கான எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை உறுதியோடு சொல்லிக் கொள்கிறேன்.

☆

☆ கலைச் செல்வமே மேம்பட்ட செல்வம்

☆ நாடகக் கலையே கவர்ச்சி மிக்க கலை.

தொன்று தொட்டுப் பெருமை பெற்றது தமிழ் நாடகம்

நாடகக் கலையறிஞர்கள் முன்னணியிலிருக்கும் பெரியோர்கள்

☆

உயர்ந்த ரக, கவர்ச்சியுள்ள, எல்லோராலும் — போற்றப்படும்
பஞ்சு மற்றும் இதர நூல் ரகங்களை உற்பத்தி செய்து வருவது,
பஞ்சாலைகளில் முன்னணியில் நிற்பது.

☆

**கோயமுத்தூர் பயனீர் மில்ஸ் லிமிடெட்**

பீளமேடு :: :: :: கோயமுத்தூர் - 4

*மானேஜிங் ஏஜெண்டு :*

**(ஜி. ஆர். கோவிந்த ராஜுலு)**

# நாடகம் தாய்க்கலை

எஸ். டி. சுப்புலட்சுமி.



தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களைப்பற்றி ஒரு கட்டுரை எழுதித்தர வேண்டுமென்று திரு. டி. கே. ஷண்முகம் அண்ணா அவர்கள் எனக்கு அன்புக் கட்டளை யிட்டார்கள். ஒப்புக்கொண்டேன்.

நான் சங்கரதாஸ் சுவாமிகளிடம் நேராகப் பயிற்சி பெறும் பாக்கியம் செய்யவில்லை. எனது தந்தையார் அவர்கள் அந்தப் பாக்கியத்தைப் பெற்றவர். அவர் சுவாமிகளிடம் நேராகப் பாடம் கேட்டவர். சுவாமிகளின் ஆயிரக்கணக்கான மாணாக்கரில் எனது தந்தையாரும் ஒருவர் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை யடைகிறேன். என்னுடைய நாடகப் பாடல்கள் பூராவும் சுவாமிகளின் பாடம்தான். எனது தந்தையாரவர்களே எனக்குப் போதித்தார். சுவாமிகளைப் பற்றி என் தந்தை எனக்கு நிறையச் சொல்லியிருக்கிறார்கள்.

## தாயும் தந்தையும்

முன்காலத்தில் நாடகக் கம்பெனிகளில் மாணாக்கர்களாக இருந்தவர்கள்தான் இப்பொழுது தலைசிறந்த நடிகர்களாக இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் சுவாமிகளின் பாடங்களைப் பயின்று மேடைகளில் நடித்தவர்கள்தான்.

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நடிகர்களுக்கு நாடகம்; கட்டிடத்திற்கு அஸ்திவாரம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நடிகர்களுக்கு நாடகம். நாடகங்களில் நடித்துப் பயிற்சி பெற்றவர்கள் சுலபமாக சினிமாவில் நடிக்க முடியும். ஆனால் சினிமாவில் நடிப்பவர்கள் நாடகத்தில் நடிப்பது அவ்வளவு சுலபமல்ல.

நாடகத்தில் நடிக்க நல்ல உழைப்புத் தேவை. சினிமாவில்நடிக்க வெறும் ஆடம்பரம் மாத்திரம் இருந்து பார்வைக்கு அழகாகவும் இருந்தால் போதும். அழகு என்று நான் சொல்லும் போது நாம் நேராகப் பார்க்கும் போது அழகாயிருக்க வேண்டுமென்பதுகூட அவசிய மில்லை. படமெடுக்கும் காமிராக் கண்களுக்கு அழகாயிருந்தால் போதும். தாய் நாடகம்; தந்தை சினிமா என்று ஒரு வகையில் சொல்லலாம்.

## நம் கடமை

பெற்ற தாய் குழந்தையை நன்றாக பேணி வளர்த்து சத்துள்ள ஆகாரத்தைக் கொடுத்து நோய்நொடி வராமல் திடகாத்திரமாய் எங்கு போனாலும் சமாளிக்கக் கூடிய முறையில் வலிமையோடு பிள்ளையைப் பாதுகாப்பாள். தந்தையோ, மகன் வேலை பார்க்கவேண்டும், நிறைய சம்பளம் வாங்கிப் பணத்தைக் குவிக்க வேண்டுமென்று ஆசைப்படுவார். பிள்ளையின் உடல் நலத்தைப் பற்றி அவருக்குக் கவலையில்லை.

துணிவோடு எங்கும் போய் வெற்றிபெற இடமளிப்பது தாயாகிய நாடகம். படங்களில் நடித்து நிறைய பணம் சம்பாதிக்கக் கூடியது தந்தையாகிய சினிமா. ஆகவே பணத்தைச் சேர்த்துத் தரும் சினிமா தந்தையாக இருந்தாலும், நடிகர்கள் தாயாகிய நாடகத்தை மறந்தால் நீண்ட நாள் வாழ முடியாது.

நாடகத்தின் ஜீவநாடியாக விளங்கிய சுவாமிகளை ஒவ்வொரு நடிகரும் மறவாமல் போற்றுவதும், ஆண்டு தோறும் அவர்களை நினைவு கூர்ந்து வழிபட்டு மரியாதை செலுத்த வேண்டியதும் கடமையாகும். நடிக—நடிகையர் இன்று நாடகத்திலிருந்தாலும் அல்லது சினிமாவில் இருந்தாலும் தாயாகிய நாடகக் கலைக்கு உயிர் நாடியாக இருந்த சுவாமிகளை நினைத்து போற்றத் தவறவே கூடாது.

சுவாமிகள் குழந்தைகளிடம் மிகவும் அன்பு கொண்டவர். அதனால்தான் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதில் அவருக்குத் தனித்திறமையிருந்தது. மேலும் அவர்களிடம் உள்ள உயர்ந்த தெய்வத்தன்மை என்னவென்றால், ஒரு பாட்டு எழுத ஆரம்பித்து பிள்ளையார் சுழி போட்டால் பாட்டு முடிந்த பிறகுதான் பென்சிலைக் காகிதத்திலிருந்து எடுப்பார்களாம். இது ஒரு அபூர்வ சக்தி. மற்றவர்களால் இயலாத காரியம். குழந்தைகளுக்குப் புரியும்படி அறிவுரை சொல்வதில் அவருக்கு ஈடானவர்கள் கிடையாது.

## இரண்டில் ஒன்று

ஒரு சிறுவனுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து அவன் அதைச் சரியாக நெட்டுருப் பண்ணவில்லை யென்றால், இரண்டு மூன்றுதரம் கண்டித்துப் பார்ப்பாராம், அப்பால் காலையில் பலகாரம் சாப்பிடும் போது கூட இருந்து கவனிப்பாராம், வழக்கமாய் மூன்று இட்டலி சாப்பிடும் சிறுவனுக்கு 'இன்னும் போடு' என்று சொல்லிச் சாப்பிடச் சாப்பிட இட்டலியைப் போடச் சொல்லுவாராம். இட்டலி இலையில் விழுந்து கொண்டேயிருக்கும். சிறுவன் பயந்து பயந்து பத்து இட்டலிவரை சாப்பிட்டுவிட்டுக் கடைசியில் 'வேண்டாம் சுவாமி, இனி மேல் முடியாது' என்று சொல்வானாம். பிறகு சுவாமி, 'ஏண்டா; இன்னும் நன்ருகச் சாப்பிடு. ஒன்று, படிப்பில் கெட்டிக்காரனுக இருக்க வேண்டும். இல்லை, சாப்பாட்டிலாவது கெட்டிக்காரனுக இருக்க வேண்டும். இரண்டுக்கும் லாயக்கில்லாதவன் எதற்கு இங்கிருக்க வேண்டும்?' என்று தலையில் நறுக்கென்று குட்டுவாராம். இதுபோல் பல விஷயங்கள் சுவாமிகளைப் பற்றி என் தந்தையார் சொல்லியிருக்கிருர்.

## தனிப்பாடலின் சிறப்பு

சுவாமிகள் சிறந்த தெய்வபக்தி யுள்ளவர். அவர் எழுதியுள்ள பல தனிப்பாடல்கள் கடவுளிடத்தில் நேராகப் பேசுவது போலிருக்கும், நாடகம், இசை நிகழ்ச்சி, கதா காலட்சேபம் எந்தத் துறையில் இருப்பவர்களும் இப்பாடல்களைப் பாடலாம்,

நாடகத் துறைக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட தவத்திரு சங்கர தாஸ் சுவாமிகளை ஒவ்வொரு நடிக—நடிகையரும் உள்ளத்தில் வைத்துப் போற்றி, மறவாமல் அவர்களுடைய நினைவு நாளைக் கொண்டாடி வரவேண்டும். அது நமது கடமையாகும்.

☆


மைலாப்பூர் போன் : 72453 ஸ்தாபிதம் : சௌகார் பேட்டை போன் : 34737
தி'நகர் போன் : 443579 1945 நேதாஜி போஸ் ரோட் போன் : 34121

நம்பிக்கையாகவும், நயமாகவும்

எவர் சில்வர்

பாத்திரங்கள்

☆

N. காசி விஸ்வநாத அய்யர்

எவர் சில்வர் & பித்தளை பாத்திர வியாபாரம்

11 & 12, கீழமாட வீதி, மைலாப்பூர்

☆

கிளைகள் :- 10-A/3, உஸ்மான் ரோட், தி'நகர்
421, தங்கசாலை தெரு, சௌகார் பேட்டை
3/21, சைனு பஜார் ரோட், சென்னை - 1

(மொத்தம் & சில்லரை வியாபாரம்)

# நாடக உலகில் ஓர் நல்லிசைப்புலவர்

நாரண. துரைக்கண்ணன்

1965-ம் ஆண்டில் ஆகஸ்டு மாதத்தில் ஒரு நாள் எழுத்தாள நண்பரொருவரின் மகவுக்குப் பெயர் சூட்டுவிழாவில் கலந்துகொள்ள நானும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவும் நாடக சினிமா கதாசிரியர் முகவை இராசமாணிக்கமும் போயிருந் தோம். அங்கு சந்தித்த ஒரு வழக்கறிஞர் சிவாஜி கணேசன் சிவபெருமானுக நடிக்கும் 'திருவிளை யாடல்' படத்தைக் குறித்துப் பிரமாதமாகப் பாராட்டிப் பேசி, முதல் வாரத்திலேயே தாம் நான்கு முறை பார்த்து விட்டதாகவும் மேலும் பல தடவை கண்டு களிக்க வேண்டுமென்ற தணியாத ஆசை இருப்பதாகவும் கூறி, 'நீங்களும் அவசியம் பார்க்க வேண்டும்' என்று எங்களைக் கேட்டுக்கொண்டார்.

## எவரையும் கவரும் இசை

இதைக் கேட்டதும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனென்ருல் அந்நண்பர் ஒரு முஸ்லீம். 'திருவிளையாடல்' படம் இந்துக் கடவுளான சிவ பெருமான் புரிந்த திருவிளையாடல்கள் சிலவற்றை, புராணக் கதைகளை ஆதாரமாகக்கொண்டு தயாரிக் கப்பட்டது. இதை இந்துக்களல்லாத பிற மதத் தினர்கள் பிரியமாகப் பார்க்க முடியாது. பொழுது போக்குக்காக வேண்டுமானல் ஒரு முறை பார்க்க லாம். சிவாஜி கணேசன், சாவித்திரி முதலிய பிரபல நட்சத்திரங்கள் நடித்திருப்பதைப் பார்ப்பதற்காக வும் சுசீலா, சௌந்திரராஜன், சீர்காழி கோவிந்த ராஜன் முதலியவர்கள் பாடும் இனிய பாடல்களைக் கேட்பதற்காகவும் ஒரு தடவை பார்க்கப்போயிருக் கலாம். ஆனல், முதல் வாரத்திலேயே நான்கு முறைக்குமேல் அவர் பார்த்திருக்கிருர்; இன்னும் பார்க்க ஆசைப்படுகிருர் என்ருல் அதில் ஏதோ ஒரு தனிச்சிறப்பு இருக்க வேண்டும் என்று என் மனம் நினைத்தது. அது என்ன என யோசனை செய்து கொண்டிருக்கையில் அவர், கே. பி. எஸ். அபாரமாகப் பாடியிருக்கிருர். கேட்டு அனுபவிக்க இரண்டு காதுகள் போதாவென்று பரவசத்துடன் சொன்னர். சுந்தராம்பாள் பிரமாதமாகப் பாடக் கூடியவர் என்பது தமிழகம் அறிந்த ஒன்று. ஆனல், அவருடன் இப்படத்தில் அவரைப் போலவே சங்கீதஞானம் மிகப் படைத்த டி. ஆர். மகாலிங்கம், சீர்காழி கோவிந்தராஜன், பாலமுரளி கிருஷ்ண ஆகியவர்களும் மிக இனிமையாகப் பாடியிருக்கிருர் கள்! போதாக்குறைக்குப் பிரபல பின்னணிப் பாட கர் சௌந்திரராஜன், பி. பீ. சீநிவாஸ், பி. சுசீலா வீ. ஜானகி ஆகியவர்களும் அருமையாகப் பாடி யிருக்கிருர்களே! கே. பி. எஸ். பாடலை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லும் காரணமென்ன? என்று என்னைப்போலவே திருவிளையாடல் படத்தைப் பார்த் தவர்கள் எண்ணலாம். இப்படத்தைப் பார்ப்பதற்கு முன் நான் அவ்விதம்தான் எண்ணினேன்.

எனக்கு நாடகம் சினிமாக்களைப் பார்ப்பதற்கு போதிய அவகாசங் கிடையாது. வசதியும் இல்லை. அத்துடன் தமிழ்ப் படங்களைப்பார்ப்பதென்ருல் வேப் பங்காயைக் காண்பது போல வெறுப்பு. பாரதமே வியக்கக்கூடிய சிறந்த நடிக நடிகைகள், டைரக்டர் கள், டெக்னீஷியன்கள், தயாரிப்பாளர்கள் பலர் தமி ழகத்தில் இருந்தும், படத்துக்கு ஜீவனுகவுள்ள கதை கள் விஷயத்தில் தமிழ்ப் படாதிபதிகள் கருத்தை அதிகஞ் செலுத்தாமல் கவனக் குறைவாக நடந்து கொள்வதும் களவாணித்தனஞ் செய்வதும் எனக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. 'இந்திப் படங்களே பல ஹாலிவுட் ஆங்கிலப் படங்களைப் பார்த்து கதை, பாட்டு மெட்டு, சீன் செட்டிங், ஷாட் முதலியவை களை அப்படியே காப்பியடித்து வெளி வருகின் றனவே! அந்தக் காப்பிப் படங்களைப் பார்த்து தமிழ்ப் படாதிபதிகள் காப்பி அடிப்பானேன்? நம்மவர் பலர்க்கு இரவல் வாங்கும் புத்தியே போகாதா! சொந்த மூளையை உபயோகிக்க ஏன் இவர்களுக்குத் திராணியில்லை' என எண்ணி வேதனைப் பட்டுக்கொண்டிருப்பவன் நான். அவ்விதங் காப்பியடித்துப் பாக்ஸ் ஆபீஸ் ஹிட் (Box office hit) என்று பெயர் பண்ணிப் பணம் சம்பாதித்துவரும் இந்திப் படாதிபதிகளைப் பின்பற் றும் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் பலர், கதை வசனம் விஷயத்தில் பண்ணும் கீழ்மைச் செயல்களை நினைத்தால் என் நெஞ்சம் கொதிக்கும். வங்கக் கதை, மராட்டிக்கதை என்று வட இந்தியாவுக்குப் போய் யாசகங் கேட்டு வாங்கிவந்து வித்தை பண்ணுவதும் என்னைப்போல இலக்கியக் கலைஞர் கள், சுயமாகச் சிந்தனைசெய்து தங்கள் கற்பனைத் திறனைக்கொண்டு படைத்து வெளியிடும் சிறு கதை, நாவல், நாடகங்களிலிருந்து முக்கியமான சம்பவங்களையும், காட்சிகளையும் உரையாடல்களையும் திருடி எடுத்துக் கையாண்டு கொண்டு படக் கதை வசனங்களை உருவாக்கிப் படங்கள் தயாரிப்பதும் நாளுக்கு நாள் அதிகமாகிவரும் நிலையில், தமிழ்ப்

படங்களைப் பார்க்க என் போன்றோருக்கு எப்படி ஆசையுண்டாகும்? இலக்கியப் படைப்புக்காக வாழ்க்கையில் தியாக வேள்வி நடத்திவரும் எங்கள் கண் முன்னாலேயே எங்கள் கதாபாத்திரங்களும் சிறந்த கதை அம்சங்களும் உரையாடல்களும் பிறர் பெயரால் பிரதிபலிப்பதைப் பார்ப்பதென்றால் எப்படி மனம் நோகாமல் இருக்கமுடியும்? இப்படி என் கதைகள் பலவற்றைப் பறிகொடுத்து விட்டு இதற்குரிய தீர்ப்பை இறைவன்பால் ஒப்படைத்திருப்பவன்; ஆதலால் நான் பத்திரிகாசிரியன் என்ற முறையில்கூடப் பெரும்பாலும் தமிழ்ப்படங்களைப் பார்க்கப் போவதில்லை.

## 'ஞானப்பழத்'தைப் பாடியவர்

ஆனால், மேற்குறித்த முஸ்லீம் நண்பர் கேட்டுக்கொண்டபடி திருவிளையாடல் படத்தைப் பார்க்க நான் விரும்பியதற்குக் காரணம் பரஞ்சோதி முனிவர் பாடியுள்ள திருவிளையாடல் புராணத்திலிருந்து இதை எப்படி நண்பர் நாகராஜன் படமாகத் தயாரித்திருக்கிறார் என்று அறிந்துகொள்ளவேயாகும். அத்துடன், கணேசன், சாவித்திரியின் சிவ பார்வதி நடிப்பையும், சுந்தராம்பாள், மகாலிங்கத்தின் இனிய கானத்தையும் காணவும், கேட்கவும் என் உள்ளம் அவாவியது. ஆனால் திருவிளையாடல் படத்தைப் பார்க்க அண்மையில்தான் (அக்டோபர் கடைசி வாரத்தில்) எனக்கு அவகாசம் கிடைத்தது. இப்படம் எனக்குப் பலவகையிலும் மன நிறைவைத் தந்தது.

இப்படத்தைப் பார்த்த பின்னர்தான் மேற்குறித்த முஸ்லீம் நண்பர் உள்ளத்தில் பரவசத்தை உண்டு பண்ணியது எது என்ற இரகசியம் தெரிந்தது. இப்படத்தில், கதை, நடிப்பு, படப்பிடிப்பு எல்லாவற்றையும்விட முதலிடம் பெறுவது பாடல்களாகும். இதில் கே. பி. எஸ்., மகாலிங்கம், மட்டுமல்ல; சீர்காழி முதலிய எல்லாருமே நன்றாகப் பாடியிருக்கின்றனர்! ஆனால், சுந்தராம்பாள் பாடிய பாடல்கள் மிகச் சிறப்பாக அமைந்துவிட்டிருக்கின்றன. அவர் மூன்று பாடல்கள் பாடியிருக்கிறார். முதல் பாட்டே முத்தான பாட்டு. அது படம் பார்ப்பவர்களை எடுத்த எடுப்பிலேயே பரவச நிலைக்குக் கொண்டுபோய் விடுகிறது. அப்பாட்டு என்ன என்பதைப் படம் பார்த்தவர் அறிவர். 'ஞானப் பழத்தைப் பிழிந்து' என்ற பாடல் சுந்தராம்பாளுக்கு மிகப் பிடித்தமான பாடல், அவர் நாடகங்களிலும் இசையரங்குகளிலும் நெடுங்காலமாகவே அடிக்கடி பாடி வருவதையும் இசைத் தட்டிலும் இச் சிறந்த பாடலைப் பதிவாக்கி எங்கும் எப்பொழுதும் முழங்கிக் கேட்போரைப் பரவசப்படுத்தி வருவதையும் அறியாதவர் இரார். ஆனால், இப்பாடலை இயற்றியிருப்பவர் யார் என்பது பெரும்பாலாருக்குத் தெரியாது.

ஒரு முறை கேட்போரையும் அகங் குழைந்து உருகச் செய்யும் இந்த அற்புதப் பாடலை இயற்றிப் பழனிமலைத் தண்டாயுதபாணிப் பெருமானுக்குச் சமர்ப்பிக்கும் முறையில் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள வள்ளல் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளாவர். இது கேட்டுப் பலர் பெரு வியப்புக் கொள்ளக்கூடும். ஏனெனில், சுவாமிகள் ஒரு நாடகாசிரியர்; நடிகர் திலகம்; நாடக வுலக மேதை என்பது மட்டுந்தான் பலருக்கு தெரியும். அவர் ஒரு தலைசிறந்த நல்லிசைப் புலவர் என்பதை பேரறிஞர்கள், கலைஞர்கள் சிலரே அறிவர். இவர் சங்க கால இலக்கியங்களையும் காவியங்களையும் புராணங்களையும், இதிகாசங்களையும் பிற்காலப் பிரபந்தங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர் என்பது அவர் நாடக உலகத்துக்கு இயற்றித் தந்துள்ள சதி அநுசூயா, சீமந்தனி, கோவலன், அல்லி அர்ஜுனா, பவளக் கொடி முதலிய நாடகங்களை ஆழ்ந்து படித்துப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப இராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணங்களிலுள்ள சிறந்த கருத்துக்களையும் சமயதத்துவ உண்மைகளையும் இவர் எழுதியுள்ள நாடகங்கள் பலவற்றில் பரக்கப் பார்க்கலாம். சாதாரண நடிகராக வாழ்க்கையைத் தொடங்கிய சுவாமிகள் நடிகர்களுக்கு நடிப்புப் பயிற்சியளிக்கும் உபாத்தியாயராகவும் நடிப்பதற்கு நாடகங்களை ஆக்கித் தரும் சிறந்த நாடகாசிரியராகவும் உயர்ந்திருக்கிறார் என்றால், அவர் அரிதின் கற்றுத் தேர்ந்துள்ள இலக்கியப் புலமைதான் அடிப்படைக் காரணமாகும். அத்துடன், மோன தவ வலிமையும் ஆண்டவன் திருவருளும் இவர்பால் நிரம்பியிருந்திருக்கிறது. இல்லையானால் தண்டபாணிப் பதிகம் போன்ற அருட்பாடல்களை இவரால் பாடியிருக்க முடியாது.

## சாஹித்திய சிரோன்மணி

சுவாமிகள் இயற்றியுள்ள நாடகங்களுக்குச் சங்கீத சாஹித்தியங்கள் அமைவுற இனிமையாக இசைப்பாடல்கள் நிரம்பச் செய்திருக்கிறார். இவ்வகையில் இவரைச் சங்கீத சாஹித்திய சிரோன்மணி என்றுகூடச் சிறப்பித்துச் சொல்லலாம். அத்துடன், தொண்ணூற்று ஆறு வகையான பிரபந்த லட்சணங்களை நன்கு உணர்ந்திருந்தமையால், வெண்பாக்கள், கொச்சகம், கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தங்கள் முதலியவைகளை இயற்றித் தந்திருக்கிறார். இவைகளில் மிக முக்கியமாக குறிப்பிடக்கூடியது பழனி தண்டாயுத பாணிப் பதிகமாகும். சுந்தராம்பாள் பாடிப் பிரசித்தி பெற்றுள்ள 'ஞானப்பழத்தைப் பிழிந்து' என்ற பாடல் மேற்படி பதிகத்திலுள்ள நாலாவது பாடலாகும். இப்பதிகத்தில் பொதிந்திருக்கும் சொல் வளமும் பொருட் செறிவும் கவி நயமும், பதினெட்டு வகை பிரபந்தங்களைச் செய்து புகழ் பெற்றுள்ள குமரகுருபர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகளின் ஆசிரிய விருத்தப் பாடல்களை நினைவுபடுத்துகின்றன. அருணகிரியார், தாயுமானவர், இராமலிங்கர் போன்றோருடைய கவிதைச் சிறப்பையும் சொல்லாட்சியையும் ஒப்பிட்டு நோக்கச் செய்யக்கூடியனவா யிருக்கின்றன.

இயற்கை வருணனை, பக்தி ரசம் அனைத்தும் பாராட்டும்படியாக அமைந்திருக்கின்றன. சுவாமிக ளுடைய மேதமையை அறிந்து மகிழ்ந்து பயன் பெற விரும்புவோர் கட்டாயம் தண்டபாணி பதிகத் தைப் படித்துப் பாடி அனுபவிக்க வேண்டும்.

## தன்னிகரற்று விளங்க வழி

சுவாமிகள் போன்ற நல்ல இலக்கியப் புலமை யும் இசை ஞானமும் உடையோர் நாடக உலகில் இரண்டொருவரே இருந்தனர். இராம நாடகம், கண்டி இராஜா நாடகம் முதலிய நாடகங்களை இயற்றி நாடகக்கலையை வளப்படுத்திய மருங்காபுரி சமஸ்தான வித்துவான் முத்தமிழாகரம் ஏகை சிவசண்முகம் பிள்ளை, உடுமலை சந்தச்சரப முத்து சாமிக் கவிராயர் போன்ற பெரும் புலவர்களைத் தான் சுவாமிகளுடன் ஓரளவு ஒப்பிட்டுச் சொல்ல லாம். இம் மூவரும் சம காலத்தவராவர். இவர் கள் சந்தித்து அளவளாவி மகிழ்ந்திருக்கின்றனர்.

நாடகக் கலை வளர்ச்சியின் ஒரு நூற்றுண்டு வரலாற்றை எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த் தால், இலக்கியத் தரமுடையனவாகவும் நாடகக் கலைக்கு மேன்மை தருவனவாகவும் உள்ள தமிழ் நாடகங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அக்கால நாடகங்களை இயற்றியவர்களுக்கு இலக் கியப் புலமையே ஒரு சிறிதுங் கிடையாது. அதனுல், புராண இதிகாசக் கதைகளையும் ஐம் பெருங்காப்பியக் கதைகளையும் நன்ருகப் புரிந்து கொள்ளாமல், தங்களுக்குத் தோன்றியபடி யெல் லாம் எழுதிக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டனர் என்று அவப்பெயர் இருந்து வந்தது. சிலப்பதிகாரத் தலைவி கண்ணகியைக் கர்ணகியாக் கியும் நல்ல புராண இதிகாசப் பாத்திரங்களான நல்லதங்காள், நளதமயந்தி, வள்ளி, அல்லி, அர்ஜுனன், பவளக்கொடி முதலியவைகளைக் கண்ட படி வேஷம் மாற்றியும் நாடகங்கள் பல தெருக் கூத்துக்கள் போல் நடந்து வந்ததே இக் கூற் றுக்குப் போதிய சான்றுகளாகும். அக்கால நாடகாசிரியர்களுக்கிருந்த அவப்பெயரைத் தம் முடைய பெரும் புலமையாலும் தெய்வ பக்தியா லும் போக்கியவர் சங்கரதாஸ் சுவாமிகள் என்ருல் மிகையாகாது. இவர் நம்முடைய புராண இதிகாச காவியங்களில் பொதிந்துள்ள எல்லாச் சிறப்புகளை யும் இயன்றவரை தாம் இயற்றிய நாடகங்களில் கொண்டு வந்து வழங்கியிருக்கிருர். தமிழ் நாடகங் களை வளப்படுத்தியிருக்கிருர். இவருடைய முப்ப தாண்டு காலப் பேருழைப்பால் தமிழ் நாடகக் கலையுலகம் செழிப்படையலாயிற்று. சீரும் சிறப்பும் பெறலாயிற்று.

இவ்விதம் அற்புதங்கள் பல செய்து நாடக உலகில் நல்லிசைப் புலவராக விளங்கிய சங்கரதாஸ் சுவாமிகள் நினைவை நாம் என்றென்றும் போற்றி வளர்த்து வரவேண்டும். அப்படி நன்றியுணர்வுடன் நடந்துகொண்டால்தான் தமிழ் நாடக உலகம் பிற நாட்டு, பிற மொழி நாடகக் கலைகளுக்கிடையே தழைத்து ஓங்கி வளர்ந்து தன்னிகரற்றுத் திகழ முடியும்.


ஹெர்குலஸ், பிலிப்ஸ்

அண்டு

பி. எஸ். ஏ. சைக்கிள்

சுலபமான மாதாந்தரத் தவணை முறையில்!

★

விவரங்களுக்கு:

ஸி. வி. ஸிடி. வி. வெங்கடாசலம் செட்டியார்

மாதாந்தரத் தவணை முறையில் ஹெர்குலஸ், பிலிப்ஸ், பி.எஸ் ஏ.

சைக்கிள்கள் விற்பனையாளர்.

★

சென்னை விற்பனையாளர்:

சீனிவாசா ஏஜென்ஸி

No. 36, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, மதராஸ்-18.

போன்: 75606

# சென்னை கூட்டுறவு மத்திய வீடு அடமான சங்கம் லிமிடெட், நெ. 406,

**6, ராஜரத்தினம் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை – 10.**

☆

த. பெ. எண் **1017** தந்தி : "ஹவுஸ் பாங்க்" தொலைபேசி எண் **62918**

தலைவர் :
திரு ஜி. வாகீசம் பிள்ளை

உப தலைவர்
திரு எம். எஸ். பழனியப்ப முதலியார்

| | |
|---|---|
| **அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்** | **ரூ. 50,00,000** |
| **செலுத்தப்பட்ட பங்குகள்** | **ரூ. 21,25,400** |

பிரதம கூட்டுறவு வீடு அடமான சங்கங்களின் மூலம் அதன் அங்கத்தினர்களுக்கு வீடுகள், மனைகள் அடமானத்தின் பேரில் 15 வருட நீண்ட காலக் கடன்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வழங்கப்படுகிறது.

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் அதிக பட்ச கடன் தொகை :

1. புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ரூ. 15,000
2. பழைய வீடுகள் அபிவிருத்தி செய்யவும், விஸ்தரிக்கவும் ... ரூ. 10,000
3. அடமானக் கடன்கள் தீர்க்க ... ரூ. 5,000

**காலி மனை வைத்திருப்போருக்கு புதிய வீடுகட்ட ஓர் அரிய சந்தர்ப்பம்**

டி. கோதண்டராமன்,
துணைப் பதிவாளர்—காரியதரிசி.



கலையுலகம் இதயத்தில் வைத்துப் போற்றும்
கலைவாணர்



பாலபாரதி ச. து. சு. யோகி



சுவாமிகளின் மாணவர் இசை மேதை
மதுரை மாரியப்பசாமிகள்



புதுமைக் கலை ஓவிய சிற்பி
கலாசாகரம் இராஜகோபாலன்



சங்கரதாஸரைப் பாராட்டிப் புகழ்ந்த
**தண்டபாணி சுவாமிகள்**



சுவாமிகளின் வளர்ப்புத் தந்தையான
**கஞ்சிரா மான்பூண்டியா பிள்ளை**



பிரம்மாண்டமான சீன் ஜோடனைகளைச் செய்து
காட்டி நாடக ரசிகர்களைப் பிரமிக்க வைத்த
**சி. கன்னையா**



சிவ லீலா, சக்தி லீலா நாடகங்களை
எழுதிப் புகழ் பெற்ற
**சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்**



ஓவியர் தேவராஜய்யர்



ஓவியர் சி. கொண்டையராஜு



ஓவியர் கே. மாதவன்



ஓவியர் வி. மாதவன்



ஓவியர் தர்மராஜ்



ஓவியர் பிரம்மன்



நாடகாசிரியர் மதுரை பாஸ்கரதாஸ்



நாடகக் கலைஞர்களுக்குப் பேராதரவு
அளித்துப் போற்றிய கலைஞர்
கா. சி. விசுவநாத பாண்டியர்

# சங்கரதாசர்
# நாமம் வாழ்க

கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி

உலகினிலே மொழிகள் பல உண்ட வற்றுள்
உயர் மொழிநம் தமிழ்மொழியென் றுலகேசொல்லும்!
கலைகளிலும் பல கலைகள் உண் டென் ருலும்
காட்சி இசைப் பாடல் உரை நடையால் மக்கள்
நிலையினிலே உயர்வடையச் செய்யுஞ் சக்தி
நிச்சயமாய் நாடகநற் கலைக்கே உண்டு!
மலையினிலே ஒளியெனுமம் மலை வளர்த்த
மாண்புறுசங் கரதாசர் நாமம் வாழ்க!

தமிழ் நாட கக்கலையின் தந்தை யென்று
தாரணியோர் புகழ்ந்தேற்றும் தரு திமிக்க
அமு தூறும் நாடகங்கள் பலவும் யாத்து
ஆசிரியப் பொறுப்பேற்றுப் பயிற்றுவித்து
இமையாத நாட்டமுடன் கலைத்துறைக்கே
இறுதிவரை சேவைசெய்து கலைப்பயிர்க்குச்
சமயத்தில் பெய்தமழை போலேவந்த
சங்கரதாஸ் சுவாமிகளின் நாமம்வாழ்க! 1

பாட்டென்ருல் சுவாமிகளின் பாட்டேபாட்டு!
படித்தவரோ பாமரரோ யாராளுலும்
கேட்டவர்கள் உள்ளமதைக் கிள்ளித்தூண்டும்
கிள்ளைமொழிப் பெண்டிர்களும் புரிந்துகொள்வார்!
பாட்டெழுதி இன்றைக்குப் பணத்தைச் சேர்க்கும்
பாவலர்கள் அதைக்கேட்டால் நாணிச்சாவார்!
தேட்டமுறும் சுவாமிகளின் கலையின்செல்வம்
தேசமெங்கும் பரவும்வகை செய்தல்வேண்டும்!

ஆடவரும் பெண்டிர்களும் ஆடிக்கொண்டே
அரங்கத்தில் தோன்றிடுவார்! கருத்தனைத்தும்
பாடல்களாய்ப் பாடிடுவார்! பாடும்போதே
பம்பரம்போல் ஆடிடுவார்! அதனால் அன்று
நாடகத்தைக் 'கூத்து' என்றே நவில்வார்! அஃதில்
நடிப்பவரைக் 'கூத்தாடி' என்பார்! அந்தக்
கேடகற்றிச் சங்கரதாஸ் சுவாமிகண்ட
கீர்த்திமிக்க வடிவமைப்பே நிலைத்தல் கண்டோம்!

நாடகத்திற் கானகதைக் கருவூலத்தை
நல்லபடி தேர்ந்தெடுத்தல்,—தேர்ந்தவற்றைப்
பீடுபெறக் காட்சிகளாய் அமைத்தல்,—காட்சிப்
பின்னலிடை நவரசத்தைப் புகுத்தல்,—ஆடல்
பாடல்வகை இடை இடையே வைத்தல்,—மற்றும்
பாத்திரத்திற் கேற்றஉரை யாடல்,—எல்லாம்
ஆடரங்கமன்றி திரை அரங்கினுக்கும்
அவரளித்த வழிமுறையே! மறுப்போர் யாரே?

கலைத்துறையில் உரைநடையை எழுதுவோர்க்கு
கவிபுனையும் ஆற்றலில்லை,—புனைந்திட்டாலும்
இலக்கணச்சீர் தளைஎதுகை மோனை முற்றும்
இடருமல் அமைவதில்லை,—அமைந்திட்டாலும்
கலக்கமற்ற இசைஞானம் இருப்பதில்லை
காலத்தாய் காட்டுவிக்கும் விதி; யிதற்கு
விலக்காய்ஓர் மாமேதை பிறந்தார்! அந்த
வித்தகரே சங்கரதாஸ் சுவாமியாகும்!

காலத்தால் இறவாத புகழ் படைத்த
கருவூல மெனத்தகுந்த கலையின்செல்வம்!
ஞாலத்துள் பல நூறு நடிகர் இன்றும்
நல்வாழ்வு பெறுவதற்குப் பயனளிக்கும்
சாலச்சீர் நிறைந்ததமிழ் நாடகங்கள்
சங்கரதாஸ் சுவாமிகளின் இலக்கியம்சேர்
நூலைத்தான் பதிப்பித்துப் புதுமையாக்கி
நுகரத்தான் வழிவகைகள் செய்தல்வேண்டும்.

"புரட்சியில்லை—புதுமையில்லை"—என்று எங்கோ
புல்லர் சிலர் புலம்பியதாய்க் கேட்டேன்! அன்று
இரக்கமெனும் ஒருகுணத்தை இதயத்தின்பால்
இறைவன் அன்பால் வைத்ததனல் அவர் பிழைத்தார்
மிரட்சியினல் குக்கல்பல குரைத்தால்,—யானை
மிடுக்குநடை விட்டவற்றைத் தொடர்ந்தா சீறும்?
நிரக்ஷரங்கள் அப்படித்தான் வரம்பு மீறும்!
நிறை குடத்தின் நீர்தளும்பும், வழிந்திடாது!

(சந்தம் வேறு)

ஆயிரத்தி எண்ணூற்றி அறுபத்தி ஏழில்
ஆவணியில் இருபத்தி இரண்டினிலே தோன்றி—
ஆயிரத்தித் தொளாயிரத்தி இருபத்தி ரெண்டு
அந்தம் நவம் பர் பதிமூன் றில்மறைந்த—மேதை
தூயதமிழ்த் திருவுருவாம் தூ. தா. சங் கரதாஸ்
சுவாமிகளின் தமிழ்ப்பற்றைக்—கலைப்பணியை வையம்
நேயமுடன் பாராட்டித் தலைதாழ்த்தி வாழ்த்தும்;
நிச்சயமாய் கலைஉலகம் நெஞ்சில் வைத்துப்போற்றும்.



# நாம் செலுத்த வேண்டிய நன்றிக்கடன்

ஜி. பூவராகன். எம்.எல்.ஏ.



நம் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் நடைபெற்று வந்த தெருக் கூத்துக்களின் வாயிலாக மக்களிடையே நல்லெண்ணங்களும், நல்ல ஒழுக்க முறைகளும் வளர்க்கப்பெற்று வந்திருக்கின்றன. இன்றும் கூட கிராமாந்தரங்களில் அத்தகைய தெருக் கூத்துக்களை நாம் பார்க்கலாம். எவ்வளவு தான் புதினங்கள் தோன்றி மக்களிடையே பரப்பப் பெற்றிருந்தாலும் பண்டைக் காலத்திலே நம்மிடத்தில் அறிமுகமான பழம் பெரும் இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் போன்ற காப்பியக் கதைகள் நிலைத்துநிற்கின்றன. அதே போன்று சங்கரதாஸ் சுவாமிகள் பழம் பெரும் கதைகளை மிகவும் எளிய தமிழிலே நாடகமாக்கித் தாமே நடித்து, சிறுர்களைக் கொண்டு நடிக்கச் செய்து தமிழ் நாடகத்துக்கு ஒரு நல்ல அஸ்திவாரத்தை அமைத்து விட்டுச் சென்றிருக்கிருர். அதனுல்தான் அவர் இறந்து பல ஆண்டுகளாகியும் கூட, அவருடைய புனித நினைவு நம் உள்ளத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

மொழிக்கும் கலைக்கும் தொண்டாற்றிய சங்கரதாஸ் சுவாமிகளைப் போன்ற பெரியவர்களின் நினைவு என்றும் மாருதிருக்க வேண்டும். அதற்கான முயற்சிகளுக்கெல்லாம் தமிழக சர்க்கார் என்றும் துணை நிற்பார்களென்று உறுதியாகக் கூறுவேன்.

தமிழ் நாடகக் கலை வளர்த்த சங்கரதாஸ் சுவாமிகளின் வழியைப் பின்பற்றி நாம் நாடகத்திற்காக என்ன செய்திருக்கிறேம், எந்த வகையிலே பணியாற்றியிருக்கிறேம் என்று ஒவ்வொரு தமிழ் நாடகக் கலைஞனும் சிந்தித்துப் பார்த்து நாடகக் கலையை மக்களுக்கும் சமுதாயத்துக்கும் பயனுடையதாக ஆக்க வேண்டும், அதுதான் நாடகக் கலையை வளர்த்து நமக்கு ஒரு நல்ல அடிப்படையைக் கொடுத்துச் சென்ற சங்கரதாஸ் சுவாமிகளுக்கு நாம் செலுத்த வேண்டிய நன்றிக் கடனுகும்.

---

## ஆசிரிய விருத்தம்

சாமிசங் கரதாச சர்க்குருவை மறவாது சந்தமும் போற்றுவோர்க்கு
தக்கபுக ழோடுலகில் மிக்ககன தனமுண்டு சாத்மீகத் தன்மையுண்டு
பூமியிற் பெரியோரின் நல்லாசி களுமுண்டு பொய்யற்ற வாழ்வுமுண்டு
புண்ணியப் பெபருண்டு கண்ணியக் குணமுண்டு புத்திர பௌத்திரருண்டு
நாமிக்க உரனேடு துதிபாடத் திறன் உண்டு நல்வாணி யருளுமுண்டு
நாடகக் கலைமேலுங் கூடற்கு வழியுண்டு ஞானக்க டாட்சமுண்டு
மாமிகும் சாரீர வளமுண்டு சுவையுண்டு மாண்புயரு மன்புமுண்டு
மதியுண்டு நிதியுண்டு துதியுண்டு குருபக்தி மாருத பேர்க்கென்றுமே.

சுவாமிகளின் முதுமாணவன் தேசியக்கவி
செந்தமிழ்ச் சரபம்
இராஜா ஷண்முகதாஸ்—மதுரை.

With best compliments

from

# Industrial Chemicals Limited

*Manufacturers of*

**"SANKAR BRAND"**

Calcium Cartide Conforming to I. S. Specifications

1040 : : 1960

A-GRADE

*Registered office :*
175/1, Mount Road,
MADRAS-2

*Factory :*
Sankar Nagar, Talaiyuthu (R.S.)
TIRUNELVELI (DIST.)

*Sole Selling Agents :*

## SRI KRISHNA & SONS

3, Ritchie Road,
CALCUTTA-19

26/208, Meena Sadan,
Sion, Matunga,
BOMBAY-22

133, Jor Bagh,
Nursery,
NEW DELHI.

Sire-Mansion,
123, Mount Road
MADRAS-6



# சுவாமிகள் விதைத்த வித்து

ஏ.எஸ். காங்கேயன் எம்.எல்.ஏ.

சங்கரதாஸ் சுவாமிகள் தமிழுக்கும் கலைக்குமாக உயிர் வாழ்ந்தார். தமிழ் நாடகக் கலை நல்ல முறையிலே முன்னேற்றமடைய வேண்டுமென்று அதற்கு வேண்டிய பணியை அவர் அயராது செய்து வந்தார்

## தமிழர் கடமை

தமிழுக்கு ஒவ்வொருவரும் எந்தெந்த வகையிலே தொண்டு செய்கிறார்களோ அவர்கள் எல்லோரையும் போற்றவேண்டியது தமிழர்களாகிய நம்முடைய கடமையாகும்.

நமது தேசம் சுதந்திரமடைந்த பிறகு, எங்களுடைய புதுவை ராஜ்யத்தில் தாய்மொழியாகிய தமிழ் வளர்ச்சிக்காக எல்லா வகையிலும் பாடுபட்டு வருகின்றோம். தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வந்திருக்கிறோம். நீதிமன்ற நடவடிக்கைகளைக்கூடத் தமிழிலேயே நடத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கின்றோம். சென்ற காலத்தில் நாம் அடிமைகளாயிருந்த காரணத்தால் நம் தாய் மொழியில் ஆட்சி செலுத்த முடியாத சூழ்நிலை இருந்தது. அது மாறி இப்பொழுது நம்முடைய தேசத்தை நாமே ஆள்வதால் ஒவ்வொரு மாநிலங்களிலும் அந்தந்த மொழிக்கு உரிய ஸ்தானத்தை அளித்து ஒவ்வொருவரும் அவரவருடைய தாய்மொழியை அரியாசனத்தில் அமர்த்த வேண்டியது கடமையாகும். அந்தப் புனிதமான கடமையைத்தான் நாங்கள் இப்போது செய்திருக்கிறோம். இவ்வாறெல்லாம் நம் தாய் மொழிக்கு உரிய இடத்தையளிக்கும் முயற்சியிலே நமக்கு முன்பு தமிழுக்குத் தொண்டாற்றிய புலவர்களையெல்லாம் பாராட்டிப் போற்றுவதும் ஒரு முக்கியமான கடமையாகும். அவ்வகையிலே முத்தமிழில் ஒன்றாகிய நாடகத் தமிழுக்குத் தொண்டு செய்த பெரியார் சங்கரதாஸ் சுவாமிகள் நம்முடைய பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவராவார்,

## நாடகத்தைப் புனிதமாக்கியவர்

எங்கள் புதுவை ராஜ்யத்துக்கும் சங்கரதாஸ் சுவாமிகளுக்கும் குறிப்பிடத்தக்க வகையில் பிரிக்க முடியாத ஒரு தொடர்பு இருக்கிறது. சுவாமிகள் திருநெல்வேலி மாவட்டத்திலே பிறந்தவராக இருந்தாலும், தமிழ் ராஜ்யம் முழுவதிலும் அவர் நாடகப்பணி புரிந்திருந்தாலும், புதுவையிலே நீண்ட காலம் தங்கியிருந்து தமது அரிய பெரிய நாடகங்களைப் பாலர் குழுக்களைக் கொண்டு நடிக்கச் செய்திருக்கிறார். அது மட்டுமல்ல; அவருடைய அந்திம காலம் புதுவையிலேயே ஏற்பட்டது. புதுவையில்தான் 1922-ல் அவர் சமாதி அடைந்தார்,

எத்தனையோ மகான்கள், பெரியவர்களுக்கெல்லாம் புகலிடமளித்த புதுவை ராஜ்யத்தின் புனித நிலம் நாடகத் தமிழ் வளர்த்த சங்கரதாஸ் சுவாமிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அவர் சமாதி அடைந்த இடத்தில் டி. கே. எஸ், சகோதரர்களின் முயற்சியால் தென்னிந்திய நடிகர் சங்கத்தார் ஒரு அழகான மணி மண்டபத்தைக் கட்டியிருக்கிறார்கள். அங்கே ஆண்டுதோறும் விழா நடத்தி வருகிறார்கள். எனவே, அந்த வகையில் புதுவை ராஜ்யம் மிகவும் பெருமைப் படுகின்றது என்று சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய சின்னஞ்சிறு பருவத்தில் நான் குடிகொண்டிருந்த தெருவுக்கு அடுத்த தெருவில்தான் சுவாமிகள் குடியிருந்தார். அப்போது அவருடைய பெருமைகளைப் பல பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்,

## நாளும் வாழும் நாமம்

உலகிலே பல கோடி மக்கள் தோன்றுகிறார்கள், வாழ்கிறார்கள். மறைகிறார்கள். எல்லோரைப் பற்றியும் நாம் பேசுவதில்லை. எல்லோரைப் பற்றிய எண்ணங்களும் நம் மனத்தில் இருப்பதில்லை. ஆனால், சில மகான்கள்—அவர்கள் ஏழைகளாய் இருந்தாலும் சரி, பணக்காரர்களாயிருந்தாலும் சரி, எப்படி அவதரித்திருந்தாலும் நாட்டுக்கோ, மொழிக்கோ, கலைக்கோ சிறந்த பணி செய்திருந்தால் அவர்கள் நிச்சயமாக நம் உள்ளத்திலே இடம் பெற்று விடுகிறார்கள். அவர்களுடைய நாமம் என்றும் மறைவதில்லை. அவர்கள் என்றென்றும் நம்மிடையே புகழுடம்போடு வாழ்கிறார்கள். அந்த முறையில் சங்கரதாஸ் சுவாமிகளுடைய திருநாமம் நாடகத் தமிழ் உள்ளளவும் அழியாது, மறையாது என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

சுவாமிகள் ஒரு செல்வந்தர் குடும்பத்திலே பிறந்தவரல்லர். மிகவும் எளிய குடும்பத்திலே பிறந்து தம்முடைய சொந்த முயற்சியால் முன்னேறி தமிழ் நாட்டில்

நம் தாய் மொழியாகிய தமிழிலே ஒரு பகுதியாகிய நாடகத் தமிழுக்கு இருந்த இழுக்கைப் போக்கி நாடகத் தமிழை வாழ்விக்க வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளோடு தம்முடைய வாழ் நாள் முழுவதையும் அதற்காகவே செலவிட்டு அமர நிலை அடைந்தார்.

எப்போதுமே அடிமை நாடுகளில் கலைவளர்ச்சி பூரணத்துவம் பெறுவதில்லை. அந்தச் சூழ்நிலையிலே தோன்றிய சங்கரதாஸ் சுவாமிகள் எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையே நாடகம் பார்ப்பது கேவலம் என்று கருதப்பட்டு வந்த மக்களுக்கிடையே நாடகத்தை இளஞ்சிறுவர்களைக் கொண்டு நடித்துக் காட்டச் செய்து, நாடகத்துக்கு ஒரு புனிதத் தன்மையை உண்டாக்கி அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளார்.



## என் வேண்டுகோள்

நம்முடைய தமிழகம் சுதந்திரமாக மூவேந்தர்கள் ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில் கலைகள் பூரணத்துவம் பெற்று வளர்ந்திருந்த செய்தியை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. வானளாவிய கோபுரங்களையும், கற்கோயில்களையும், குகைச்சிற்பங்களையும் அந் நாளிலே அற்புதமாக உருவாக்கி யிருக்கிறன் தமிழன், நாம் அடிமைப்பட்ட பிறகு அந்தக் கலை வளர்ச்சிக்குத் தடை ஏற்பட்டது. அந்த நாள் மாறி இப்பொழுது சுதந்திர தேசத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் மொழியும், கலையும் மறுமலர்ச்சி பெற்று புதுமைப் பொலிவோடு வளர்ந்து வருகின்றன. இந்த வளர்ச்சியின் வேகத்தில் நாம் பழம் பெரும் மகான்களை, நம் கலைக்காக அரும்பணி செய்த பெரியவர்களை மறந்து விடக்கூடாது. அந்தக் காலச் சூழ்நிலையில் அவர்கள் செய்துள்ள காரியங்கள் மகத்தானவை என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

தற்கால நாடகங்களிலே எவ்வளவு புதுமைகள், மாறுதல்கள் ஏற்பட்டாலும் சங்கரதாஸ் சுவாமிகள் வகுத்துத் தந்த அந்த நாடகங்கள் தாம் தமிழ் நாடகத்திற்கு என்றென்றும் அடிப்படைச் செல்வங்களாக விளங்கி வரும் என்பதை நான் உறுதியாகக் கூறுவேன்.

சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் மண்ணிலே விதைத்த வித்துத்தான் இன்று வளர்ந்து, செடியாகி, மரமாகி பூத்துக் காய்த்துக் கனி தருகின்றன என்பதை நாடகத் துறையிலுள்ள ஒவ்வொருவரும் உணர வேண்டுமென்பது என் வேண்டுகோள்.

நாடகம் என்றால் முதலில் கதை ஞாபகத்திற்கு வருகிறது. கதையின்றி நாடகமேது ? ஆங்கிலத்தில் இதற்குத்தான் Plot என்று சொல்வார்கள். இந்த நாடகக் கதையை மூன்று விதமாகப் பிரித்திருக்கின்றனர். **பொய்யுரை, மெய்யுரை, புனைந்துரை.** பொய்யுரை என்றால் ஆசிரியன் தானாகவே புதிதாக ஒரு கதையைப் படைத்து (அது உலகில் முன் ஒருவராலும் எழுதியதாகவோ நிகழ்ந்ததாகவோ இருக்கக்கூடாது) அதை உண்மைபோல் காண்பிப்பது. இதைத்தான் Original Plot என்று ஆங்கிலத்தில் கூறுவர். சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுத்து நாடகப்படுத்துவது மெய்யுரையாகும். புனைந்துரை என்றால் உலகில் நடந்ததையோ நடந்ததாகக் கேட்டதையோ ஆதாரமாக வைத்துக்கொண்டு அதனுடன் சிறிது ஆசிரியன் தன் சொந்தச் சரக்கையும் சேர்த்து எழுதுவது. இதை Mixed Plot என ஆங்கிலேயர் கூறுவர்.

**ஆங்கிலப்பேராசிரியர் சி. ஆர். மயிலேறு**

பிரேமா

பிரசுரம்

# எமது புதிய வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விஷ்ணு புராணம் | (துர்க்காதாஸ் எஸ். கே. சாமி) | ரூ. | 3-50 |
| அறுபத்து மூவர் கதைகள் பெரிய புராணம் முழுவதும் வசன வடிவில் | (துர்க்காதாஸ் எஸ். கே. சாமி) | ரூ. | 3-50 |
| விக்ரமாதித்தன் கதைகள் | (அரு. இராமனுதன்) | ரூ. | 3-50 |
| மதனகாமராஜன் மரியாதை ராமன் கதை | (அரு. இராமனுதன்) | ரூ. | 3-50 |
| சித்தர் பாடல்கள் | | ரூ. | 3-50 |
| கதைக் கடல் (கதா சரித சாகரம்) | | ரூ. | 3-50 |
| மனமோகனக் கதைகள் (மூன்று பாகங்கள்) | ஒவ்வொன்றும் விலை | ரூ | 3-50 |
| வீர வன்னியர் கதை வன்னிய புராணம் வசன வடிவில் | | ரூ. | 2-00 |
| நான்கு பக்கீர்கள் கதை | | ரூ. | 2-00 |

மற்றும் ஆராய்ச்சி நூல்கள், பழம்பெரும் கதைகள், சிந்தனையாளர் வரிசை, பொன்மொழி வரிசை ஆகிய பல்சுவை புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும். பட்டியலுக்கு எழுதுங்கள்.

பிரேமா பிரசுரம் :—: சென்னை-24

# சுவாமிகளும் கலைஞர்களின் கடமையும்



*டி.என். சிவதாணு*

தமிழ் நாடகக் கலை வளர்ந்து விட்டது, நடிகர் சமுதாயம் முன்னேற்றமடைந்து விட்டது என்றெல்லாம் பேசப்படுகின்றது. திரைப்படவுலகிலே பவனி வரும் சிறந்த நடிகர்களெல்லாம் நாடகம் என்னும் விதையிலே முளைத்த கற்பகத் தருக்களென மக்களால் பாராட்டப்படுகின்றனர். படக்கலையை ஈன்றெடுத்த தாய்க்கலையாம் நாடகக் கலையைச் செப்பனிட்டு நல்லதோர் பாதையை அமைத்துக் கொடுத்து, அந்தப் பாதையிலே வீரநடை போட்டு இன்று நாம் வெற்றியடையக் காரணமாயிருந்த பெரியாரைச் சற்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள் என்று கூறும் வகையிலே இக்கட்டுரை எழுத நேர்ந்ததை நினைத்தால்......சற்று வெட்கமாகத்தான் இருக்கிறது.

## தமிழ்ப்புலவர்

நமது முன்னோர்களைப் பாராட்டிப் போற்றுவதன் மூலம் நடிகர் சமுதாயம், தம் பெருமையை நிலைநிறுத்திக்கொள்ளுகிறது என்பதை ஒவ்வொருவரும் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் வெறும் நாடக ஆசிரியராக இருந்தது மட்டுமல்லாமல் பெரும் தமிழ்ப்புலவர்கள் வரிசையிலே முதல் இடம் வகித்து, நாடகக் கலைக்கும், நாடகக்காரர்களுக்கும் பெருமை தேடித்தந்த பெரியாராவார்.

நாடகக்காரர்கள் என்றால் சமுதாயத்திலிருந்தே ஒதுக்கப்பட்டவர்கள் என்று கேவலமாக நினைத்து வந்த காலத்தில், தமிழ்ப் பேரறிஞர்கள், புலவர்கள் வரிசையில் முதலிடம் வகித்த சுவாமிகள், நாடகக் கலையில் புகுந்து பணி செய்ய முற்பட்டதனாலோ என்னவோ 'நாடகக்காரன்' தானே என்று அவரைப் புலவர்கள் பாராட்ட மறந்துவிட்டார்களோ என ஐயுறவேண்டியிருக்கிறது.

நாடகக்கலை என்றால் மகாகவி ஷேக்ஸ்பியர் என்று ஆங்கில மொழி அறிஞர்கள் கூறுகிறார்கள். ஏன்? உலகமே கூறுகின்றது. ஷேக்ஸ்பியரின் நாடகங்களை உலகமே போற்றுகின்றது. அவருடைய கதை அமைப்பு 'குணநலன்கள்' நடை முதலியவைகளை அறிஞர்கள் பாராட்டினார்கள்; பாராட்டுகிறார்கள்.

ஆங்கிலம் உலக மொழியானபடியால் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை உலக மக்கள் படித்துப் பாராட்ட வசதி ஏற்பட்டுவிட்டது. அதேபோல் ஒவ்வொருவருடைய தாய்மொழியையும் படித்து அதன் இலக்கிய நயங்களையும் மற்றவைகளையும் உணருவதற்கு ஒவ்வொருவருக்கும் வசதி ஏற்பட வேண்டும்.

பிற நாட்டு மொழிகளையும் இலக்கிய நயங்களையும் நாகரிகத்தையும் தெரிந்து உலக அறிவு பெற்றுக்கொள்வது முக்கியமாக இருந்த போதிலும், நம் நாட்டு மொழியையும் இலக்கியத்தையும், நாகரிகத்தையும் அலட்சியப்படுத்துவது அறிவுடைமை ஆகாது. நம் தமிழ்நாட்டு நாடகக் கலை வளர்ச்சியடையவில்லை என்று நினைக்கும் தீவிர புரட்சியாளர்கள் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களையும் பாடல்களையும் படித்திருக்கமாட்டார்கள். ஏன்? கேள்விகூடப் பட்டிருக்க மாட்டார்கள் என்றே தோன்றுகிறது. நாடகக்கலை ஒரு சாராருக்குத்தான் உரிமையுள்ளது. கோட்டை மதிலுக்குள் வைத்து காப்பாற்றப்பட வேண்டியது என்று எண்ணாமல். பாமரரும் மதிக்கக்கூடியது என்று உணர்ந்து பாமர மக்களிடையே அம்மானைப் பாடல்களாக உலாவி வந்த கதைகளை எல்லோரும் எளிதில் ரசித்து உணரும்படியாக அவைகளை நாடகங்களாகச் செய்த பெருமை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளையே சாரும்.

## வேற்று மொழி நாடகங்கள்

'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும், என்ற பாரதியாரின் வாக்குப்படி ஆங்கிலம் கற்றவர்கள் மட்டும் அறிந்து கொண்ட மகாகவி ஷேக்ஸ்பியரின் நாடகங்களின் உயர்வை ஆங்கிலம் தெரியாத தமிழர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் ரோமியோ—ஜூலியட் போன்ற நாடகங்களைப் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்நாட்டில் நடிக்கச் செய்த பெருமை நமது சுவாமிகளையே சாரும். பார்ஸிமொழியில் நடிக்கப்பட்ட 'தாவ்பீச்சு' போன்ற நாடகங்களை சுவை குன்றாமல் தமிழ் மக்களுக்குக் கொடுத்தவர் சங்கரதாஸ் சுவாமிகள்.

மக்களும் நாடும் நல்ல வளர்ச்சியடைய சிறந்த வழிகாட்டியாக நாடகக்கலை இருக்க வேண்டும் என்று உணர்ந்து பல ஆண்டுகளுக்கு முன்னேயே பாமர மக்களும் சிந்தித்து உணரும்படியாக நாட

கத்தின் மூலம் சமுதாய வளர்ச்சி, தாய் மொழிப் பற்று, நாட்டுப்பற்று முதலியவைகளை நன்கு போதித்து தமிழ் நாடகக்கலைக்கு நல்ல பாதையை வகுத்துக் கொடுத்தவர் நம் சுவாமிகள் என்றால் மிகையெனக் கருதுபவர்கள் விஷயம் தெரியாதவர்கள். உதாரணமாகத் தன்னைத்தானே புரிந்து கொள்ளாமலும் மற்றவர்களைப்பற்றித் தெரிந்து கொள்ளாமலும் உலகிலே தாங்கள்தான் சிறந்தவர்கள் என்று கர்வம்கொண்டு நடக்கும் மனிதர்கள் நிறைந்த இச் சமுதாயத்தை சம்மட்டி கொண்டு அடிப்பது போல, 'பணம், கல்வி, பலம்' இவைகளின் அகம்பாவ எண்ணத்தை ஒடுக்கி சமுதாயத்தில் உயர்வு தாழ்வு இல்லை என்று எடுத்துக்காட்டியிருக்கிறார் சுவாமிகள். இதைப்போல தமிழ் மக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய பல அரிய பெரிய கருத்துக்களை நாடகங்கள் மூலமாக தெள்ளத்தெளிவாக எடுத்துக்கூறியவர் சுவாமிகள்.

## நாடகம் பொழுது போக்கல்ல

தமிழ் நாட்டில் எத்தனை விதமான ஆபரணங்கள் இருந்தன என்று அறிந்துகொள்ள பண்டைய இலக்கிய இலக்கண நூல்களைப் புரட்டிப் பார்க்க வேண்டிய தேவை இல்லை. 'சீமந்தனி' என்ற நாடகத்தில் ஒரு பாட்டிலே அத்தனை பண்டைய தமிழ் ஆபரணங்களையும் மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் காட்டி இருக்கிறார். இதுபோல் இன்னும் அநேக விஷயங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

நாடகக் கலை வெறும் பொழுது போக்குக் கலை என்று கருதாமல் நாடகக்கலையின் பயனை நாட்டினர் நன்கு தெரிந்துகொண்டால்தான் கலை வளரும் என்ற திடமான நம்பிக்கை கொண்டு பல அரிய பெரிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லி நாடகக் கலையின் மூலம் இலக்கியத்தையும், தமிழ் மொழியையும் வளர்க்க முற்பட்டவர் சுவாமிகள். மக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய செய்திகளையெல்லாம் பாத்திரங்கள் வாயிலாகப் பாடல்களாகவும், வசனமாகவும் சொல்லவைத்து மக்கள் புரிந்து கொள்ளும்படி செய்தவரும் நம் சுவாமிகளே.

சுவாமிகளின் பாத்திரப் படைப்பைப் பற்றியும் வசனங்களைப் பற்றியும் தமிழ்ச்சுவை செறிந்த பாடல்களைப் பற்றியும் எழுதி அவைகளைப் புத்தக வடிவில் வெளியிடுவதற்கு தமிழ்ப் பேரறிஞர்கள் முன் வரவேண்டும்.

இவ்வளவு சீரும் சிறப்பும் வாய்ந்த தமிழ் நாடகப்பெரியார் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் அவர்கள் ஒரு சில நக்கு மாத்திரம் சொந்தமென்று கருதாமல் தமிழ்க் கலைஞர்கள் எல்லோரும் ஒருமித்து அவருக்கு விழாவெடுத்து அவரின் பெருமையை நாட்டினருக்கு எடுத்துச்சொல்வதன் மூலம் போலிப் பெருமையில் வாழும் கலைஞர்கள் கூட்டம் உண்மையான பெருமையை அடைய வேண்டுமென்பதே எனது தாழ்மையான நோக்கமாகும்.




தயாரிப்பவர்கள்: கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், மதராஸ்-14



சுவாமிகள் தோன்றிய தூத்துக்குடி இல்லம்



சுவாமிகளின் உயிரற்ற உருவின்முன்
கலைஞர் டி. கே. பகவதி



சுவாமிகளின் பூதவுடல் மறைந்த
புதுவை மண்டபம்



முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவத்சலனார் அவர்கள் தலைமையில்
1956-இல் சென்னையில் சுவாமிகள் நினைவு விழா




மதுரை நாடக நடிகர் சங்கத்தின்
சுவாமிகள் நினைவுவிழா ஊர்வலம்



மதுரை நடிகர் சங்க நினைவு விழாவில்
டாக்டர் இராசமாணிக்கனார் கலந்து கொண்டார்



பம்மல் சம்பந்தனார் நினைவு விழாவில் பேராசிரியர் பரிதிமாற்கலைஞரின் திருவுருவப் படத்தை திரு ம. பொ. சி. எம்.எல்.ஏ. திறந்துவைத்தார்.



முன்னாள் தமிழக அமைச்சர் திரு வெங்கட்ராமன், திரு என். மகாலிங்கம் முதலியோர் பம்மல் நினைவு விழாவில் பங்கு கொண்டார்கள்.



புதுவையில் சுவாமிகள் விழா: நகைச் சுவை நடிகர்கள் பி. டி. சம்பந்தம், கே. ஏ. தங்கவேலு, டி. எஸ். துரைராஜ், கவிஞர் கு சா. கிருஷ்ணமூர்த்தி முதலியோர்.



சுவாமிகளின் நினைவு விழாவில்
**திரு பி. ஸ்ரீ. ஆசார்யா**
பேசுகிருர்



அன்பர் என். மகாலிங்கமும் முன்னுள் அமைச்சர் வெங்கட்ராமனும் பம்மல் சம்பந்தனுர் விழாவில் சுவையோடு பேசுகிருர்கள்.



முன்னுள் தமிழக அமைச்சர் திரு கக்கன், 'மக்கள் திலகம்' எம். ஜி. ஆர். சங்கீத நாடகச் சங்கத் தலைவர் நீதிபதி திரு வெங்கட்ராமன், திருமதி இராஜேசுவரி நடராஜன் முதலியோர் சென்னை சுவாமிகள் விழாவில் கலந்து கொண்டார்கள்.



சுவாமிகள் பிறந்த நகராகிய தூத்துக்குடியில் நடந்த பெருவிழாவில் பேராசிரியர் திரு. அ. சீனிவாசராகவன் பேசுகிருர்.



'நடிகவேள்' எம். ஆர். இராதா, நகைச்சுவை நடிகர் டி. எஸ். துரைராஜ், கவிஞர் எஸ். டி. சுந்தரம், கலைஞர் ஏ. பி. நாகராஜன் முதலியோர் புதுவை சுவாமிகள் விழாவில் மகிழ்வோடு கலந்து கொண்டார்கள்.



புதுவை கருவடிக்குப்பம் சுவாமிகளின் சமாதி மண்டபத்தின் முன் மக்கள் வெள்ளம்.



புதுவை கருவடிக்குப்பம் சுவாமிகளின் சமாதி மடண்பத்தின் முன் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. **சி. சுப்பிரமணியம்** தலைமையில் நினைவு விழா நடைபெற்றது. புதுவை பொதுவுடைமைக் கட்சித்தலைவர் திரு. **வி. சுப்பையா,** எம்.எல்.ஏ. வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

சென்னை விழாவில் சங்கீத நாடகச் சங்கத் தலைவர் நீதிபதி திரு. **வெங்கடராமன்** பேசுகிறார்.





புதுவை ஒதியஞ்சாலை மைதானத்தில் நடை பெற்ற பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில், **எதார்த்தம் திரு. டி. பி. பொன்னுச்சாமி பிள்ளை** தலைமையில் கவிஞர் **தி. க. பகவதி** பேசுகிறார்.



மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை புதுவையில் நாடகங்கள் நடித்துக் கொண்டிருந்தபோது, **1922,** நவம்பர் **13-ஆம்** நாள் சுவாமிகள் மறைந்தார். டி. கே. எஸ் சகோதரர்கள் உள்ளிட்ட பல நடிக மணிகள் இருக்கிறார்கள்.



புதுவை கருவடிக்குப்பம் சமாதி மண்டபத்தில் குருபூஜை விழா நடைபெறுகிறது



புதுவை ஒதியஞ்சாலை மைதானப் பொதுக் கூட்டத்தில் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் அமரர் ஜீவானந்தம், சுவாமிகளின் பெருஞ் சிறப்பினைப்பற்றி விரிவுரை யாற்றுகிறார்.



தூத்துக்குடி சுவாமிகள் விழாவில்
கலைஞர் ஏ. பி. நாகராஜன்



பம்மல் சம்பந்தனார் விழாவில் முன்னாள் அமைச்சர்
திரு. வெங்கட்ராமன்



சென்னையில் சுவாமிகளின் நினைவு விழாவில்
அவர் இயற்றிய ‘**சுலோசனா சதி**’ நாடகம் நடந்தது. இந்திரஜித்தனாக
‘கம்பர்’ **கண்ணப்பாவும்,** சுலோசனையாக **திண்டுக்கல் மீனாகுமாரியும்**
பாடி நடித்தார்கள்

# Sri Karthikeya Spinning & Weaving Mills Pvt. Ltd.

POST BOX No. 1201

**UPPILIPALAYAM : : COIMBATORE-15**

Grams : "GANGA" COIMBATORE

PHONE : 26947 / 23016

Manufacturers of :

## BEST QUALITY YARNS...

COUNTS AVAILABLE

***120s Combed, 80s Combed, 80s Carded, 60s Combed, 60s Carded, and 40s Cotton Yarn Hanks and Cones.***

**G. RAMASWAMY,**

*(Governing Director.)*

# நாடகத் தமிழ்

*டாக்டர் மா. இராசமாணிக்கனார்*

மனிதன் என்று தோன்றினானோ அன்றே அவனுக்கு கலை உணர்ச்சியும் தோன்றியது. கலை என்பது மனிதனுடைய உள்ளத்திலிருந்து பெருக்கெடுத்து வெளிப்படுகின்ற உணர்ச்சி. அந்தக் கலை அவனுடைய ஆற்றலுக்கேற்ப காவியமாக வெளிப்படும்; ஓவியமாக வெளிப்படும்; சிற்பமாக வெளிப்படும்; கண்ணைக் கவருகின்ற தாஜ்மஹால் போன்ற கட்டடங்கள் வாயிலாக வெளிப்படும். அந்தக் கலை இசை வடிவாகவும் வெளிப்படும். நாடக வாயிலாகவும் வெளிப்படும். எனவே இவையெல்லாம் மனித உள்ளத்திலிருந்து பொங்கி எழுகின்ற உணர்ச்சிப் பெருக்கின் மறு உருவங்கள் என்று அறிஞர்கள் சொல்வார்கள்.

### சங்க காலத்திலே நாடகத் தமிழ்

நாடகக் கலையானது இன்று நேற்றுத் தோன்றியதல்ல. 'நாடகத் தமிழ்' என்பது இயல் இசையாகிய இரண்டினுடைய சேர்க்கையால் உண்டாகும். நாடகத் தமிழ் தனிச் சிறப்பு அடைந்த காலம் சங்க காலம் என்று சொல்லவேண்டும். சங்க காலத்திலே வாழ்ந்த வள்ளல்களெல்லாம் நாடகத் தமிழிலே வல்ல கூத்தர்களை மிகச் சிறப்பாகப் போற்றினார்கள். அவர்கள் அரசர்களிடத்திலும் பிற வள்ளல்களிடத்திலும் சென்று, பரிசுகள் பெற்று மீண்டு வருகின்ற காட்சி, மீண்டு வருகின்றபொழுது மற்றக் கூத்தர்களை ஆற்றுப் படுத்துகின்ற காட்சி இவையெல்லாம் சங்க நூல்களிலே விரிவாகச் சொல்லப்படும்.

தமிழ் நூல்களிலே மிகப் பழமையாகச் சொல்லப்படுகின்ற சொல், 'கூத்து' என்பதாகும். கூத்து என்பது இந்தக் காலத்திலே சொல்லப்படுகின்ற 'நடனம்' என்ற பொருளிலே முதலில் வந்தது. பின்னர் கதை தழுவி வரும் கூத்து 'நாடகம்' என்ற பொருளிலே வந்தது. எனவே, நடனம் — நாடகம் ஆகிய இரண்டையும் குறிக்கின்ற சொல்தான் கூத்து என்பது. அந்தக் கூத்தாகிய கலையிலே வல்லவர்கள், 'கூத்தர்' என்று பெயர் பெற்றார்கள். அந்தக் கலையிலே வல்ல பெண்பால், 'கூத்தி' என்று பெயர் பெற்றாள். அத்தோடு 'ஆர்', விகுதி கொண்டுதான் 'கூத்தியார்' என்று சொல்லத் தொடங்கினார்கள் பிற்கால மக்கள். அவன் அப்படித் தேர்ந்தெடுத்த கூத்திகூட, கூத்தியாகத்தான் தேர்ந்தெடுத்தான். சாதாரணப் பரத்தையாகத் தேர்ந்தெடுக்கவில்லை பழந்தமிழர். கலையிலே வல்ல கோவலன் மாதவியை விரும்பினாற்போல பழந்தமிழ் மக்கள் கலையிலே வல்ல பெண்டிரை விரும்பினார்கள் என்பதைத்தான் அந்தச் சொல் குறிக்கின்றது. தொல்காப்பியத்திலே 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று ஒரு சூத்திரம் உண்டு. பொருத்தமுடைய சொல்லாக இருக்கும்; பொருத்தமில்லாமல் இராது. ஆகவே, இந்தக் கூத்தன்—கூத்தி என்பவை மிக அருமையான சொற்கள்.

### தமிழ் அரசர் காலத்தில் 'கூத்தர்கள்'

தமிழ் நாட்டில் உள்ள ஊர்ப்பெயர்களை நீங்கள் ஒழுங்காகக் கவனித்துப் பார்த்தீர்களானால், பழந்தமிழ் அரசர்கள் இந்தக் கூத்தர்களுக்குக் கொடுத்திருக்கின்ற ஊர்கள் இன்னும் அந்தப் பெயர்களாலேயே வழங்கிவருவதைப் பார்க்கலாம். தஞ்சாவூர் மாவட்டத்திலே 'கூத்தா நல்லூர்' என்று ஓர் ஊர் இருக்கிறது.

நாம் போய் வருவோமே தவிர, அந்தப் பெயர் ஏன் வந்தது என்ற அறிவு நமக்கு எழுவதில்லை; அந்த உணர்ச்சி வருவதில்லை. அது 'கூத்தர்' நல்லூர் கூத்தாநல்லூர் என்று பெயர் ஆயிற்று. இப்படிச் சில கோவில்களின் கல்வெட்டுகளைப் பார்த்தீர்களானால் அந்தந்த ஊர்களினுடைய பழைய பெயர்களை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். இந்தக் கூத்திலேயே திறம்பட நடிக்கின்ற பெண்ணுக்கு 'விறலி' என்று பெயர். விறல் என்றால் திறமை. உள்ளக் குறிப்பு வெளியிலே புலப்படும்படியாக நடிக்கின்ற திறமை; அதற்கு விறல் என்ற சொல். அந்தத் திறமை உடையவள் 'விறலி' என்று சொல்லப்பட்டாள். இந்த விறலியர் இருந்த மலைதான் 'விறலி மலை' என்று சொல்வது. அது இப்போது 'விராலிமலை' என்று சொல்லப்படுகிறது. திருச்சிக்குப் பதினெட்டு கல் தொலைவிலே உள்ள ஒரு முருகன் தலம் அது. இப்படிப் பல ஊர்கள். நாடகத் தொடர்பாக—கூத்துத் தொடர்பாக எத்தனையோ பெயர்களை இன்றும் காணலாம். இடைக் காலத்திலும் பல ஊர்களின் பெயர்கள் அவ்வாறு வழங்கி வந்தன என்பதை, கல்வெட்டுகளினாலே தெரிந்து கொள்ளலாம்.

### வடமொழி நாடகங்கள்

நம்முடைய நாடகத்தின் வரலாற்றை எடுத்துப் பார்ப்போமானால் ஒவ்வொரு நூற்றாண்டு வாரியாகச் சொல்லிக்கொண்டே போகலாம். தொடர்ந்து இந்த நாடகமானது நன்றாக வளர்ந்து வந்திருக்கிறது. சங்க காலத்திலே மிகச் சிறப்பாக வளர்ந்து வந்தது. அதற்கு மாதவியே ஏற்ற சான்று! சிலப்பதிகாரமே ஒரு நாடகக் காப்பியம். மணி

மேகலையிலும் நாடக அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. சங்க காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட பல்லவர்களுடைய ஆட்சியிலே சிறந்த நாடகங்கள் ஏற்பட்டன ஆனால் அவையெல்லாம் வடமொழியிலே அமைந்த நாடகங்கள். 'மத்தவிலாசப்பிரகசனம்' என்ற வடமொழி நாடகம் காஞ்சியிலே நடிக்கப்பட்டது. மகேந்திர வர்ம பல்லவன் எழுதிய நாடகம் அது. அப்படியே எட்டாவது நூற்றாண்டிலே 'பெருங்கதை' என்ற காவியத்தில் நாடகக் குழுக்களைப் பற்றிய செய்திகள் சொல்லப்படுகின்றன, இங்கே நாம் 'குழு' என்று சொல்கிறோமே, இந்த நாடகக்குழு அங்கேயும் உண்டு. 'கோவில் நாடகக் குழுக்கள்' என்ற தொடரே வருகிறது. கோவிலிலே நடிக்கின்ற நாடகக் குழுக்கள் என்பது பொருள்! இது எட்டாவது நூற்றாண்டு.

ஒன்பதாவது நூற்றாண்டிலே வாழ்ந்த மாணிக்க வாசகர், 'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து' என்று பாடுகிறார். இந்த நாடகம் மாணிக்க வாசகர் காலத்திலும் இருந்தது என்பதை இந்தத் தொடர் நன்றாகத் தெரிவிக்கின்றது.

அடுத்து வந்த சோழர்களுடைய ஆட்சியிலே தஞ்சாவூர் பெரிய கோவிலைக் கட்டிய ராஜ ராஜ சோழனின் பெயரால் ''இராஜராஜேச்சுர'' நாடகம் போன்ற நாடகங்கள் தோன்றின. இவையெல்லாம் இப்போது ஏட்டிலே இல்லை. ஆனால் கல்வெட்டுகளிலே இருக்கின்றன. இவை தஞ்சை பெரிய கோவிலிலே நடிக்கப்பட்டன. இவற்றை நடித்த நடிகர்களுக்கும் இந்த நாடக நூலை எழுதிய ஆசிரியர்களுக்கும் மானியம் கொடுக்கப்பட்ட விபரங்களெல்லாம் தஞ்சை பெரிய கோவில் கல்வெட்டுக்களிலே பார்க்கலாம்.

## விஜய நகர ஆட்சியின் நாடகத்தின் வீழ்ச்சி

பதினான்காவது நூற்றாண்டிலே 'மாலிக்கபூர்' படையெடுப்பிற்குப்பின் நேர்ந்த நாட்டுக் குழப்பங்களினாலே பழந்தமிழ் நாடகம் தனது செல்வாக்கை இழந்தது. விஜய நகர ஆட்சியின்போது சிறிது தலையெடுத்தது. அதற்குப்பிறகு 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்ற நிலை தமிழ்நாட்டிலே ஏற்பட்டது. அந்தக் காலம் பாளையக்காரர்களுடைய காலம். அந்தக் காலத்திலே நாடகமானது அடியோடு வீழ்ச்சியடைந்தது.

மனிதனுக்கு அமைதி என்று ஒன்று இருக்குமானால்தான் கலைகள் உண்டாகும். உலகத்திலேயே எந்த நாட்டின் வரலாற்றிலேயும் கலைகள் தோன்றிய இடம் பெரும்பாலும் ஆற்றுப் பாய்ச்சல் உள்ள இடந்தான். மருத நிலத்திலேதான் கலைகள் உண்டாகும். மற்ற இடங்களிலே வாழுகின்ற மக்களுக்கு அன்றாடம் உழைத்துச் சாப்பிடுவதுதான் பெரும் பாடாக இருக்கும். வயல் வளம் உள்ள இடங்களிலே ஆறுமாதம் உழைப்பு, ஆறு மாதம் ஓய்வு! அந்த ஓய்வு நேரத்தை அவன் கலைகளிலே செலவழிப்பான். எங்கெங்கு மருத நிலவளம் இருக்கிறதோ அங்கேதான் நாகரீகமே தோன்றுகிறது. நாகரீகத்தின் தாயகம் வயல் வளம் நிறைந்த இடங்கள்தாம். தமிழ் நாட்டில், தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி இத்தகைய வளமான இடங்களிலே தான் கலைஞர்கள் மிகுதியாகத் தோன்றினார்கள். இந்த மாவட்டங்களிலே உள்ள கோவில் கல்வெட்டுகளிலேதான், கலைகளைப் பற்றிய நுட்பங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

## 20-ம் நூற்றாண்டில் செம்மையுறும் நாடகம்

பதினெட்டு—பத்தொன்பதாம் நூற்றாண்டில் 'இராம நாடகக் கீர்த்தனை' என்று, நாடகம் உயர்ந்த நிலையிலேயிருந்து கீர்த்தனை நிலைகளுக்கு வந்து சாதாரணமாக எல்லோராலும் நடிக்கப்பட்டது. ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டில்தான் இந்த நாடகக்கலை செம்மையுறத் தொடங்கியது. புகழ் பெற்ற நாடக ஆசிரியராகிய சங்கரதாஸ் சுவாமிகள் தொண்டு செய்த காலம் இது. பழம் பெரும் நடிகர்கள் கன்னையா நாயுடு, ஆலந்தூர் ஒரிஜினல் கம்பெனி, ஆரிய கான சபா இவர்களெல்லாம் தோன்றினார்கள். நான் குழந்தையாக இருந்த காலத்தில் இவர்களுடைய நாடகங்களை விருப்பத்தோடு பார்த்திருக்கிறேன். எஸ். ஜி. கிட்டப்பா — சுந்தராம்பாள் இணையாக நடித்த நாடகங்களையும் பார்த்திருக்கிறேன்.

சங்கரதாஸ் சுவாமிகள் நாடக ஆசிரியராகவும் சிறந்த கவிஞராகவும், உயர்ந்த நடிகராகவும் எல்லாத் திறமைகளும் பொருந்திய ஒரு பெரியார். சென்ற ஆண்டுதான் அவரைப்பற்றிய குறிப்புகள் வேண்டுமென்று என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் கலைஞர் டி. கே. ஷண்முகம் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொண்டேன். அவரே ஒரு கட்டுரையை எழுதிக் கொடுத்தார். அத்தோடு அவருடைய நாடக நூல்கள் இரண்டையும் அனுப்பினார். படித்துப் பார்த்தேன். சுவாமிகளின் நாடக நூல்களிலே உள்ள நடை மிக அழகான நடை, 'அபிமன்யு சுந்தரி' நாடகம் படிக்கப் படிக்க இன்பத்தைக் கொடுக்கக் கூடியது. அத்தகைய நடையை புலமையுடையவர்களாலேதான் எழுத முடியும். புலமையில்லாமல் சொல்வதெல்லாம் வறட்டு நடையாக இருக்குமே தவிர, பொருள் ஆழமுடைய நடையாக இருக்க முடியாது.

## சிறந்த நாடகாசிரியர் சங்கரதாஸ் சுவாமிகள்

நாடக ஆசிரியர்களிலே மிக உயர்ந்து விளங்கியவர் சங்கரதாஸ் சுவாமிகள் என்று தயங்காமல் சொல்லலாம். நடை உயர்வு; பொருள் ஆழம்; மிக அழகான தொடர்கள்; அவற்றை இடத்திற்கு ஏற்ப அமைக்கின்ற திறன் இவையெல்லாம் அவரிடத்திலே சிறப்பாக அமைந்திருந்தன. இத்தகைய ஒரு பெரியோரின் நூற்றாண்டு விழா அடுத்த ஆண்டில் வரப்போகிறது என்ற நல்ல செய்தி மிக மகிழ்ச்சிக்குரியது.

நாடகத்தமிழ் எனக்குத் தெரிந்து என் சிறு வயதிலே இருந்த நிலையைவிட, இன்று மிக உயர்ந்த

நிலைக்கு வந்திருக்கிறது. நாடு உரிமை பெற்ற பிறகு நாட்டை ஆளுகின்றவர்களுக்கு இத்தகைய கலைகளின் வளர்ச்சியிலே ஒரு நீங்காத பற்று இருந்து வருகிறது. அதனால் அவர்கள் எப்பொழுதும் கலை வளர்ச்சிக்கு உதவி செய்து வருவார்கள் என்பதில் ஐயமேயில்லை.

எதிர்காலத்திலே இந்த நாடகக் கலையானது மிகச் சிறந்து விளங்கும் என்று நான் திண்ணமாக நம்புகிறேன். அத்தோடு இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது நடைபெறும் நாடகங்கள் மிக உயர்ந்த நாடகங்கள்; வரலாற்றுத் தொடர்பான நாடகங்கள். டி. கே. எஸ். சகோதரர்களின் 'இராஜராஜ சோழன்' நாடகத்தை நான் மூன்று முறை பார்த்திருக்கிறேன். மதுரைத் தமிழ்ச் சங்கம் பொன் விழாவிலே அவர்கள் நடித்த நாடகத்தில் ஓர் உயிர் இருந்தது. நடிப்பிலே துடிப்பு இருந்தது. அது தமிழ் நாட்டின் வரலாறு; அதை நடிக்கின்றவர்கள் உண்மையான தமிழர்கள்; பேசுவதோ நல்ல தமிழ், மேலும் பார்க்கத் தூண்டியது...இப்படியே 'அவ்வையார்', 'நந்திவர்மன்' போன்ற பல நாடகங்கள்.

### சினிமா – நாடகம் இரட்டைப் பிறவிகள்

சினிமாத் துறையிலே நடிக்கின்ற சிறந்த நடிகர்கள்கூட இப்போது நாடகங்களில் வந்து அடிக்கடி கலந்து கொள்ளுகிறார்கள். நாடகம் நன்றாக வலுப்பெறுமானால், சினிமாவும் உயரும். இரண்டும் இரட்டைப் பிறவிகள் மாதிரி. நாடகக்கலை – தமிழ் நாடகக்கலை எதிர்காலத்திலே மிகச் சிறந்து விளங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

——


போன் : 231/248

ஒரே விலை

**கல்யாண பட்டு & நூல் மில் ஜவுளிகள்,**
**சல்லிசாகக் கிடைக்குமிடம் :**

# ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

(ஏர்கண்டிஷண்டு ஷோ ரூம்)

**186, காந்தி ரோடு :: காஞ்சிபுரம்**

☆

சேலம் ஆபீஸ் :
கடை வீதி
சேலம்-1
போன் : 3345

கோயமுத்தூர் ஆபீஸ் :
121, ராஜ வீதி,
கோயமுத்தூர் - 1
போன் : 25859

*With best compliments*

*from*

**STOCK, FINANCIER**
**&**
**SHARE BROKER**

## A. R. ANNAMALAI

"ANNAMALAI VILAS"
**A-16, Colony Road,**
**Thillai Nagar South,**
**TIRUCHIRAPALLI - 3**

சிற்றுண்டி வகைகளுக்கும்,
அறுசுவை உணவிற்கும்,
குடும்பத்தோடு வசதியாக தங்குவதற்கும்

சிறந்த இடம்

**சேலம்**

## ஸ்ரீ கிருஷ்ண விலாஸ்

(போர்டிங் & லாட்ஜிங்)

உளுந்தூர் பேட்டை : : தெ. ஆ. மாவட்டம்.

**தங்கள் தேவையே எங்கள் சேவை என்று**
**தொண்டாற்றி வரும் ஸ்தாபனம்.**
**காற்றோட்டமுள்ள வசதியான அறைகள்.**
**ஓய்வுக்கான பூம்பொழில்**
**கார் நிறுத்த வசதியான இடம்.**

பொதுமக்கள் சௌகரியத்தை முன்னிட்டே நெய்வேலி, திருச்சி, சேலம், மதராஸ் போகும் வழியிலேயே மிகவும் நேர்த்தியாகக் கட்டப்பட்டு சிறந்த சேவை செய்து வருகிறது.

**விஜயம் செய்யுங்கள்.**

22ck. Stainless Steel Utensils

***An attraction to your Kitchen***

***Why?***

Strong-Double Polished
Manufactured with
improved and up-to-date
machinery-Genuine
quality Competitive
Price

PHONE: 2354
## MODERN EVERSILVERS,
"NAGAI MALIGAI"
114, **Big Bazaar** : : **Tiruchirapalli-8.**

குன்றாத சுவை! குறையாத மணம்!!

## லலிதா
## வாசனை பாக்குத்தூள்

☆

*Manufacturers:*

M. M. முத்தையா நாடார் சன்ஸ்,

**மலைவாசல், திருச்சி & தூத்துக்குடி.**

# சங்கரதாசரின் தனிப்பெருஞ்சிறப்பு



ப. ஜீவானந்தம்

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் மிகச் சிறந்த நடிகர், சிறந்த இசைப்பாடல் ஆசிரியர், சிறந்த நாடகாசிரியர். சிறந்த நடிகர்களைப் பயிற்றுவித்த பேராசிரியர். இத்தனை அம்சங்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஒரு மேதை சங்கரதாஸ் சுவாமிகளுக்கு முன்பும் தமிழகத்தில் இருந்ததில்லை, பின்பும் இருக்கவில்லை, இன்றும் இல்லை என்று எனக்குப் படுகிறது.

## அரும் பெரும் சாதனை

நாடக சபை உரிமையாளர்களில் ஒருவரான பழநியா பிள்ளை என்பவர் ஒரு நாள் சுவாமிகளிடம் சென்றார் சென்று, 'சுவாமி! நமது சண்முகம் கதாநாயகனை நடிக்கத்தக்க ஒரு நாடகம் எழுதுங்கள்' என்று வேண்டினார்.

சுவாமி அன்று மாலை கடைத்தெருவுக்குச் சென்றார். பழைய புத்தகக் கடை ஒன்றில் அபிமன்யு சுந்தரி அம்மானைப் பாடல் ஒரு பிரதி வாங்கினார். வீட்டுக்கு வந்தார். இரவு சாப்பாட்டிற்குப் பிறகு எழுதத் தொடங்கினார். ஒரு அரிக்கன் விளக்கை வைத்துக்கொண்டு எழுதினார். மறுநாள் பொழுது விடிந்தது. மற்றவர்கள் போய்ப் பார்த்தார்கள். சுவாமிகள் தூங்கிக் கொண்டிருந்தார்.

போனவர்கள் பார்த்தது என்ன? சுவாமிகள் படுக்கை அருகே 'வீர அபிமன்யு' என்ற நாடகம் மங்களப் பாட்டுடன் முடித்து வைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள், அவற்றிற்கேற்ற உரையாடல்கள், 4 மணி நேரத்திற்கு மேல் நடிக்கத் தகுந்த ஒரு நாடகத்தை சுவாமிகள் இரவோடு இரவாக முடித்து விட்டார். இது பெரிய சாதனையல்லவா? சாதனைதான்.

ஆனால் இப்படி இரவோடிரவாக ஒரு புத்தகத்தை முடித்துக் கொடுக்கும் வல்லமை படைத்தவர்கள் எனது நண்பர் புதுமைப்பித்தனைப்போல் வேறு சிலரையும் எனக்குத் தெரியும். ஆயினும் சுவாமிகள் செய்தது என்ன?

அபிமன்யு சுந்தரி அம்மானைப் பாடலை எடுத்தார். வீர அபிமன்யு நாடகமாகத் தந்தார். நூற்றுக்குமேல் பாடல்கள்- ஓர் இரவுக்குள் - கற்பனையோடு நாடக உரையாடல்கள் எழுதியதோடு. இந்தப் பாடல்கள், அம்மானைப் பாடலிலுள்ள கருத்தோட்டம் வேறு, இந்த நாடகத்தில் காணக்கிடக்கும் கற்பனைகளும் கருத்துக்களும் வேறு.

## நடிப்புத் திறன்

உருவத்திலும் உள்ளடக்கத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. அம்மானைப் பாடலை எடுத்து அபிமன்யு நாடகமாக அருளியது முன்னேற்றமான செயல்தான் என்று சொல்வதற்குத் தயக்கம் வேண்டியதில்லை.

இனி சுவாமிகளுடைய நடிப்புத் திறனைக் கவனிப்போம். இதில்தான் சுவாமிகளுடைய உணர்ச்சி வேகத்தை - பாவனா சக்தியைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

எமன், இரணியன், சனீசுர பகவான், காளபைரவர், கடோத்கஜன் முதலிய வேஷங்களில் நிகரற்ற விதமாக சுவாமிகள் நடித்திருக்கிறார்.

ஒரு முறை சுவாமிகள் சத்தியவான் -சாவித்திரி நாடகத்தில் எமன் வேடம் தாங்கி நடித்தாராம். நடித்தபோது கையிலிருந்த சூலாயுதத்தை அதி ஆவேசத்தோடு ஓங்கித் தரையில் அடித்தாராம். உண்மையாகவே இதன் விளைவாகச் சபையிலிருந்த ஒரு தாய்க்கு 'கருச் சிதைவு' ஏற்பட்டு விட்டதாம். அதிலிருந்து சுவாமிகள் எமன் வேடம் பூண்டு வருகிறார் என்றால், அந்தக் காட்சி ஆரம்பிக்கும் முன்பே 'சுவாமிகள் எமன் வேடத்தில் வரப்போகிறார், கர்ப்பிணிகளிருந்தால் சபையை விட்டு வெளியில் போய் விடுங்கள், இந்தக் காட்சி முடிந்த பிறகு திரும்பி வாருங்கள்' என்று கேட்டுக்கொள்வார்களாம்.

இரணியனாக 'பிரகலாதன்' நாடகத்தில் நடித்தபோது, ஒரு தடவை பிரகலாதனாக நடித்த சிறுவனைத் தமது வலது கையால் தூக்கிக் கீழே எறிந்து கர்சித்தாராம். கூட்டத்திலிருந்த ஒரு அம்மையார் 'ஐயோ, பாவி குழந்தையைக் கொன்று போட்டு விட்டானே' என்று அலறி மூர்ச்சைப் போட்டு விழுந்து விட்டார்களாம். 'நளதமயந்தி' நாடகத்தில் ஒரு முறை 'சனீசுவரன்' வேஷம் போட்டுவிட்டு நாடகம் முடிந்ததும் காலை சுமார் நாலு மணிக்குக் கருக்கிருட்டில் தொலைவிலிருந்த ஒரு கிணற்றுக்குக் குளிக்கப் போனாராம்.

சுவாமிகள் ஆள் எடுப்பாயிருப்பார். உடம்பில் கறுப்பைப் பூசி எண்ணெயும் தடவினால் பளபளப்பாகப் பயங்கரமாயிருக்கும். இந்தக் கோலத்தில் கருக்கிருட்டில் போனால் எவ்வளவு பயங்கரமாயிருக்கும், பாருங்கள்.

அன்று கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு எதிரே வந்த ஒரு பெண், சுவாமிகளை சனீசுவரனாகக் கண்டு பயந்து, மாரடைப்பினால் அந்த இடத்திலேயே உயிர் விட்டாளாம். இந்தச் சம்பவங்



களெல்லாம் சுவாமிகளின் உணர்ச்சிமிக்க நடிப்பின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

சுவாமிகளின் ஆசிரியத் திறமையைப் புகழ்ந்து சொல்லவேண்டிய தேவையே கிடையாது.

## சுவாமிகள் வற்புறுத்தல்

சுவாமிகளின் காலத்திலும் அவருக்குப் பின்பும் தமிழ்நாட்டில் இன்று வரை பேர் வாங்கிய, நடிப்பைத் தொழிலாகக் கொண்ட சிறந்த நடிகர்கள் எல்லோரும் சுவாமிகளின் மாணவர்கள் அல்லது மாணவர்களுக்கு மாணவர்களே ஆவார்கள்.

அவரிடம் பயின்ற வயது வந்த நடிகர்களை சுவாமிகள் சொல்லிக் கொடுத்தபடி பேசவும் நடிக்கவும் செய்யாமல் தங்கள் இஷ்டம்போல் பேசவும் நடிக்கவும் தொடங்கியதைக் கண்டார். மனம் உளைந்தார். ஆனவரைத் திருத்திப் பார்த்தார். திருத்தம் ஏற்படவில்லை, அவர்களை விட்டு நீங்கி பாலர் நாடகச் சபைகளை ஆரம்பித்து நடத்தினார்.

இது எதைக் காட்டுகிறது? நடிப்புப் பயிற்சியில் சுவாமிகளுக்கிருந்த உயர்ந்த எண்ணத்தையும் சிறந்த பிடிவாதத்தையுமே காட்டுகிறது. 'ஒரு நாடகம் சிறப்பாக இருக்கவேண்டுமானால் அந்த நாடகத்தில் பங்கு கொள்ளும் நடிகர்களிடையே ஒழுங்கும் நியதியும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும். இதை சுவாமிகள் கால முழுவதும் வலியுறுத்தி வந்தார்' என்று நண்பர் அவ்வை ஷண்முகம் எடுத்துக் கூறும்பொழுது, அந்த நாளில் முறையான நாடகத்திற்கு சுவாமிகள் ஆற்றிய அரும்பணி நமக்கு நன்கு புரிகிறது. எத்தனையோ தீய பழக்க வழக்கங்களும் படியாமையும் நிறைந்திருந்த நடிகர்கள் மலிந்து நின்ற அந்தக் காலத்தில் சுவாமிகள் பிடிவாதமாக நடிகர்களைக் கட்டுப்படுத்தி, முறையாக நாடகத்தை நடத்த முயன்றார் என்பதை எண்ணிப்பார்த்தால்தான் சுவாமிகளின் பெருமையும், தனிச் சிறப்பும் நமக்கு நன்றாகப் புரியும்.

(அமரர் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் 1958-ல் 'ஜனசக்தி' நாளிதழில் இதே தலைப்பில் தொடர்ந்து எழுதி வந்த நீண்ட கட்டுரையில் ஒரு பகுதி இது.)

Grams : MILLS Phone : 19

# VIRUDHUNAGAR TEXTILE MILLS LTD.,

SULAKARAI. : : VIRUDHUNAGAR.

*Managing Agents :*

## THIAGARAJA CHETTY & SONS PRIVATE LIMITED

MADURAI.

**AUTOMATIC LOOMS : 200**

*Buy*

**" GOPURAM " Brand**

★ GADA

★ MULL

★ VT VOILE

★ BROAD CLOTH

AND

★ POPLIN

(renowned for quality)

*Sales Office :*

## VIRUDHUNAGAR TEXTILE MILLS LIMITED

POST BOX No. 1,

KOVILPATTI.

Grams : VEETEEMILL Phone : 66

8—9—67 வெள்ளிக்கிழமை மாலை 6–30 மணிக்கு
சென்னை மியூஸிக் அகாடெமி ஹாலில்



நாட்டிய
கலா நிகேதன்
அளிக்கும்

குமாரி
ஜெயலலிதா
குழுவினர்
நடிக்கும்

# காவிரி தந்த கலைச்செல்வி

(நாட்டிய நாடகம்)

அரங்கேற்றம்

[இசை — நாட்டியம் — அமைப்பு]

பரத நாட்டிய வித்வான்
**திரு. K. N. தண்டாயுதபாணி பிள்ளை**

பாடல்கள் இயற்றியவர்
**திரு. புத்தனேரி சுப்ரமணியம்**

காட்சி அமைப்பு-உடையலங்காரம்
**திருமதி N. R. சந்தியா**

---

போன் நெ. 440394

விவரங்களுக்கு
மானேஜர்

நாட்டிய கலா நிகேதன்
8/1, சிவஞானம் தெரு, சென்னை-17



# குமஸ்தாவின் மகள்

"C.N.A"

இன்றைய முதலமைச்சரான அறிஞர் அண்ணாதுரை சிறந்த பேச்சாளர்; அரசியல் தலைவர் மட்டுமல்ல; ஆற்றல் மிக்க எழுத்தாளர்; சிறுகதை, நாவல், நாடகம் முதலியவை எழுதும் இலக்கியப் படைப்பாளர், சினிமா கதை வசனகர்த்தர் என்பதும் எல்லோருக்குந் தெரியும். இவர் நல்ல கலை இலக்கிய விமர்சகர் என்பதையும், இந்நாடக விமர்சனக் கட்டுரை நிரூபிக்கிறது. இவர் 25 ஆண்டுகளுக்கு முன் பெரியார் ஈ. வே. ரா. நடத்திவந்த "குடியரசு" வாரப் பத்திரிகையில் துணையாசிரியராயிருந்தபோது ஈரோடு முகாமில் டி. கே. எஸ். சகோதரர்கள் நடத்திய "குமாஸ்தாவின் பெண்" என்ற சமூக சீர்திருத்த நாடகத்தைப் பார்த்துவிட்டு எழுதிய விமர்சனம் இது. நமக்குத் தெரிந்து, தமிழ் நாடகம் ஒன்றைக் குறித்து பத்திரிகையில் முதன் முதலாக வெளிவந்த விமர்சனம் இது தான் என்று கருதுகிறோம்.

—பதிப்பாசிரியர்.

வனிதைகளை மணந்து வாழ்வதென்றாலே வெறுப்புக் கொள்ளும் வேதாந்தி!

கண்டவர்; கனியோ மணியோ எனக் கூறி கட்டி அணைக்க விரும்பும் கட்டழகு படைத்த இரு மங்கைகள். கூனோ—குருடோ—எவனோ ஒருவன் வர மாட்டானா, வயதுக்கு வந்துவிட்ட பெண்ணைக் கட்டிக் கொண்டு, ஜாதியாச்சாரம் கெடாதபடி, பழி வராதபடி தடுத்து ஆட்கொள்ள மாட்டானா என்று சதா கவலைப் படும் தந்தை. சோகத்தில் பங்கு கொள்ளவே ஜனித்த அவனது மனைவி. அவர்களின் இணைபிரியாத் தோழன், வறுமை! உல்லாசமே உயிர் வாழ்க்கையின் இலட்சியம் என எண்ணி வாழும் செல்வச் சீமான்.

அவனது உதவி இருப்பின்போது, வீட்டைப் பற்றி கவலை எதற்கு என்று எண்ணும் இளங்காளை. காளையைச் சுற்றிலும் கண் சிமிட்டி கை அசைத்துக் காலந் தள்ளும் காரிகைகள். அத்தகையோரைக் கொண்டே நடிப்புக்கலையை நடத்தி நல்ல பணம்பெற முடியும் என எண்ணும் சினிமா டைரக்டர்.

இவ்வளவு பேருக்கும் இடையே நின்று அகப் பட்டதைச் சுற்றி வாழும் சில அந்தணர்கள்.

"குமாஸ்தாவின் மகள்" எனும் நாடகத்தில் வரும் பாத்திரங்கள் இவைகளே. குடும்ப பாரம், வறுமையின் கொடுமை, வரதட்சணையின் குரூரம், மண வறையில் பிணம் விழுதல், தந்தை மொழியால் தற்கொலை, இதே நேரத்தில் வீடு ஜப்தி, இவைகளை விட சோகக்காட்சிகள் ஏது? இவ்வளவும் "குமாஸ்தாவின் மகள்" தருகிறாள்—அதாவது அந்த நாடகத்தில் உண்டு.

மூன்றாம் தாரத்திற்காக வேண்டி முகத்தின் கோணல், முதுகின் கூன், நரம்பின் தளர்ச்சி, அவலட்சணம் யாவும் தயாராக வைத்துக்கொண்டிருக்கும் கிழட்டு காமுகன் தன் மனையாட்டி இறந்தாள் என மனமுருகிக்கூறி மற்றொரு மங்கைக்கு மனுப் போடுவது.

அதற்காகத் தரகுப் பணம் 25 ரூபாயை ஐந்தாறு இடத்தில் ஒளித்து வைத்திருந்து, எடுத்து அவிழ்த்து முகத்தை அஷ்ட கோணலாக்கிக்கொண்டு காட்டும் காட்சி பயத்தைக் காட்ட பல்லையும்—கந்தர்வர்களை அழைக்கின்றேன் என்ற பாவத்தைக் காட்ட காற்றில் சிக்கிய செடி கண்டபடி ஆடுவதுபோல ஆடியும்—"நமக்கும் கலைக்கும் என்ன சம்பந்தம்? முதலாளிக்கு கதாநாயகன் தோழன்—கதாநாயகனுக்கு நாம் கண்ணாட்டி—நடிக்கும் உரிமை பெற இது போதாதா?"

என எண்ணும் சினிமா நடிகை. அவளை ஆட்டிவைத்து "தடதட, தடதட தடா" (மிருதங்கம்) அடிக்கச்சொல்லி பலாத்கார சீன் கற்றுக் கொடுத்து, அதையே சாக்காக வைத்துக்கொண்டு நடிகையையே பலாத்காரம் செய்யும் டைரக்டரின் ரசமிக்க நடிப்பு—இவைகளைவிட ஹாஸ்யத்திற்கு வேறு காட்சிகள் தேவையில்லை இவ்வளவும் "குமாஸ்தாவின் மகளில்" காணலாம்.

சோகம்—ஹாஸ்யம்—மயிர்க்கூச்செறிதல் திடுக்கிடும் திடீர் மாறுதல், உலகத்தில் உள்ள பிராமணீயச் சேட்டைகள் இந்த உயிர்க்கதையில் உயரிய முறையில் அமைக்கப்பட்டு, உன்னதமாக நடிக்கப் பட்டிருக்கிறது.

ஈரோடு வாசிகளின் இன்பத்துக்கு டி. கே. எஸ். சகோதரர்களின் மதுரை பாலஷண்முகானந்த சபா கடந்த நாலைந்து நாட்களாக மிகச் சிறந்த முறையில் கண்கவரும் சீன்கள், அருமையான நடிகர்களைக் கொண்டு பல நாடகங்களை நடத்திக் காட்டி வருகின்றனர்.

டி. கே. ஷண்முகம் ஒரு வேதாந்தி, பிரம்மச்சாரி! கதையில். வாழ்க்கையில் அவர் வேதாந்தியோ அல்லவோ நான் அறியேன்.

ஆனால் இன்றளவு வரையில் அவர் பிரம்மச்சாரியாகவே இருந்து வருகிறார். ஆனால் கதையில் கூட கடைசிவரை அவரால் பிரம்மச்சாரி விரதத்தை அனுஷ்டிக்க முடியவில்லை. ஜாம்ஜாமென. மாப்பிள்ளையாகி விடுகிறார். வாழ்க்கையிலும் அவர் அந்த வசீகர காட்சியை வெகு விரைவில் அளிப்பர் என வழக்கப்படி பத்திரிகைக்காரர்களுக்குள்ள இரகசிய நிருபர் நமக்கும் அறிவிக்கிறார்.

கதை பிராமண சமூகத்தில் உள்ள முக்கியமான கொடுமையாகிய வரதட்சணையையும் வாழ்க்கையை வாட்டி வதைக்கும் வல்லமை படைத்த வறுமையையும் விளக்கும் விதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ராமசாமி ஐயர் எனும் ஏழை குமாஸ்தாவுக்கு கிளிகள்போல இருபெண்கள் சீதா—சரஸ்வதி உள்ளனர். ராமசாமி ஐயர் வேடத்தில் தோழர் நடராஜன் கடின சித்தமுடையவர்களைக் கரைய வைத்துவிடுகிறார். வறுமை என்பதை உருவாக்கினால் அந்தக் கருப்புக் கோட்டும், கந்தல் பஞ்ச கச்சமும், முரட்டு மயிரால் மூடப்பட்டிருக்கும் வரட்டுத் தலையும், தாடையின் குழிகளை மறைக்கும் சிறு தாடியும், அந்தப் பசித்த பார்வையும், தளர்ந்த நடையும் உலர்ந்த உதடும், இருமலும் கொண்டதாகத்தான் இருந்து தீரும். வறுமையில் வாடும் ஏழை குடும்ப பாரத்தின் கொடுமையால் வதைகிறார். இரண்டு பெண்! இரண்டு பிள்ளை. முதலாமவன், குடும்பத்திலிருந்தால் குஷாலாக இருக்க முடியாதே என்றெண்ணி மிராசுமணி எனும் சீமானிடம் நேசனாகிக் காலந்தள்ளுகிறான். உலகிலே வெறும் களியாட்டத்தையே விரும்புபவன் பிச்சு! மிராசு மணி அலங்கார ஆடம்பர ஆணழகன்!—

தோழர் பகவதிதான் மணி வேடத்தில் மணி யென ஜொலிக்கிறார். வெண்பட்டு உடையும், வெற்றிலைக் காவி தழுவிக்கொண்டிருக்கும் உதடும், சிருங்கார நடையும், "பெரிய மனிதர்" பார்வையும், பகவதிக்கு, ரொம்ப ஜோராக அமைந்திருக்கிறது. தன் வீட்டுக்கு, மனைவி கமலாவைக் காணவேண்டி சீதா வந்துபோகையில் "உருப்படி ஏது—கண்களைப் பறிக்கிறதே" என்று கருதி சிங்காரியைச் சீமான் எப்படிப் பார்க்கவேண்டுமோ அந்தவிதமான பார்வையும், பெருமூச்சும் "பிறகு பார்ப்போம்—பணத்தை வீசுவோம்" என்று தைரியப்படுத்துவதும் தத்ரூபம். ஆமாம்! எத்தனையோ மிராசு மணிகள் இருந்து கொண்டுதான் வருகிறார்கள்! ஆனால் அவர்களிடம் சிக்காது தப்பித்துக்கொள்ளும் சீதாக்கள்தான் குறைவு!

கதை ஜோடனைக்காரர் கண்ணாடிபோல் இந்த இடத்தில் கதையை அமைத்திருக்கிறார். நடிகர்கள் நடிக்கிறோம் என்பதை மறந்து நடிக்கிறார்கள். அதனாலேயே பகவதி மிராசு மணியாகவே தோற்றுகிறார். நாகராஜன் சீதாவாக தோற்றமளிக்கிறார்; குட்டி துரோபதையைப் பற்றியோ கூற வேண்டியதில்லை. சரசு வேடத்தில் நடிப்பை நடிகர்கள் உணர்ந்து கொள்ளும்படி நடிக்கிறது. ஆம்! நான் நாடகத்தைக் கண்ட அன்று ஒரு நல்ல மாஜி நடிகர்கூட அமர்ந்திருந்தார். அவரைக் கண்டு நானேகூட எண்ணிக் கொண்டேன். எவ்வளவு வழியாக வரவேண்டியவர்கள் சுழிபேதத்தால் (சுழி இங்கு பிரமனின் எழுத்தைக் குறிப்பிடுவதல்ல) சூன்யமாகிக்கொண்டே வருகிறார் பாவம் என்று.

இரண்டு பெண்கள் இருப்பதாகக் கூறினேனே அதிலே ஒன்று உருவில் சிறியது; உயர்வில் முதல்ரகம் துரோபதை. பெயரே எடுத்துக்காட்டும் உங்களுக்கு பெண் பட்டணத்துப் பிறவியல்ல என்று. சுத்தமான முகவெட்டு. பயிற்சிக்கேற்றபடி பக்குவமாக வேலை செய்யும் கண்கள். முகத்தில் இயல்பாகவே ஒரு களை. ஆனால் குள்ளம்! அதனால்தான் போலும் பார்ப்பதற்கு 'விக்ரகம்' போலவே விளங்குகிறது துரோபதை, சரீர அமைப்பு, கிடக்கட்டும்; சாரீர பாவம் மிக ரசமானது. சோகத்தின் சிகரம் அந்தப் பெண்ணின் ஒவ்வொரு வார்த்தையிலும். பார்வையிலும் ததும்புகிறது. உருக்கமான பாடலும், அமைதி, அடக்கம் எங்ஙனம் இருக்க வேண்டுமென்பதையும் தத்ரூபமாக குழந்தை நடித்துக் காட்டுகிறது.

சீதா, சரசு இரண்டும் வறுமையில் வளரும் வாடா மல்லிகள், வாடை காத தூரம் வீசுகிறது. சீதாவின் மணம், மிராசு மணிக்கு மோக வெறியை ஊட்டுகிறது. வேதாந்தி ராமுவுக்கு, சீதாவுக்கு அண்ணனாக இருக்கும் அளவுக்குத்தான் மன எழுச்சி உண்டாகிறது. சீதா அரும்புபோல்; தன் எண்ணத்தை அடக்கிக்கொள்கிறாள். தற்கொலைக்குத் தயாரானதும் தாராளமாக தன் கருத்தை வெளியிடுகிறாள் கடித மூலம். கடிதத்தை ஷண்முகம் படிக்கும் காட்சி, அவர் கண் கலக்கம், கைதுடிப்பு, வியர்வை பொழிவது, பார்க்கப் பார்க்க என்னைப் பரவசப் படுத்திவிட்டது. நான் லேசில் பரவசமாகிறவனுமல்ல!

"ஆ! சீதா—சீதா"—என்ற அந்த அலறல். ஷண்முகம் அன்று நடித்ததில் நாடகக்கலையில் உச்சி என்பேன். நாகராஜன் அதாவது சீதா வேடம் பூண்ட தம்பிக்கு நேர்த்தியான சாரீரம், முகத்தில் ஒரு ஜோதி, வெறும் மேக்கப் ஜோதியல்ல; குளிர்ந்த முகம், கனிந்த நடிப்பு, நல்ல தயார்!

சீதாவின் சிறப்பை முதலில் உணரவில்லை ராமு. சீதா இறந்த பின்னர் உணருகிறான். உணர்ந்து உருகி—உருகி, கசிந்து அழுகிறான். எவ்வளவோ

ராமுக்கள் இங்ஙனமே தமது சீதாக்களை இழந்து விட்டுத்தானே இருப்பார்கள்.

சீதா, வறுமையின் வாட்டத்தை—ஊரார் சீற்றத்தை—தந்தையின் சோகத்தை, தவிப்பை, கண்டு கண்டு, தடாகத்தில் மிதக்கும் தாமரை போன்ற கண்கள் கொண்டு வாழுகிறாள். குடும்பத்துக்குப் பாரமாக இல்லாதிருந்தால் போதும் என கிழவனுக்குக் கழுத்தைத்தருகிறாள். மணவாசலில் அவன் விழுகிறான். விழுந்தவன், எழுந்தானில்லை. கட்டிய தாலி அறுந்தது. சீதா விதவைக்கோலத்தையும் எடுக்கிறாள். அரும்பு, மலராது கருகி விடுகிறது.

ராமசாமி ஐயர் என்ன செய்வார்! மருமகன் கதி என்னவோ என எண்ணும் நேரத்தில் மணி, சீதாவைத் தீண்ட ராமசாமி ஐயரையே கேட்டு விடுகிறான். அந்தக் கட்டத்தில் தோழர் நடராஜனின் ஆத்திரம், அழுகை, ஆவேசம், பகவதியின் பேச்சு, பார்வை—மிக மிக ஜோர்!

தோழர் நடராஜன் ஆரம்ப முதலே மிக அருமையாக நடிக்கிறார். ஆனால் அந்த மரணக் காட்சி, நனைந்த ஆடை, நடுக்கும் உடலும் சற்றுத் தொலைவில் சீதா, தலைப்பக்கம் சரசு; "என்னென்னமோ சொல்றேளே, அப்பா" என்று நமது நெஞ்சை நூறு ஈட்டி கொண்டு குத்துவது போல் கூறும் பேச்சு உயிர் போகிறது.—"கொழந்தே எங்கே? சரசு எங்கே, விசாலம் எங்கே?" என்று கேட்டுக் கண்களை இங்கும் அங்கும் பாயவிட்டுக் கைகளை ஆட்டி கட்டிலில் உயிர் பிரியும் காட்சியை தோழர் நடராஜன் காட்டுவதைக் கண்டு விட்டால் போதும், பிறகு நாம் வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சகித்துக் கொள்ளலாம்.

சீதாவைச் சபிக்கிறார் தகப்பனார். ஏன்! கோபமா? இல்லை, வெறுப்பா? இல்லை. "கண்ணே சீதா, வா அம்மா இப்படி" என்று கடைசியில் அவர் சீதாவைக் கூப்பிடும் காட்சியே நன்கு விளக்கும். அடக்க முடியாத அன்பு—இருந்தும் தன்னால் சீதாவின் "விதியை"த் தடுக்க முடியவில்லையே என்ற மன வேதனையே சீதாமீது வெறுப்பு இருப்பதுபோல் காட்டுகிறது என்பதை.

விதவை சீதா, மணியின் கடிதத்தை—காதற் கடிதத்தைப் படித்து கிழித்தெறிவது—காமாந்தகாரனாகி மணி தன்னை நெருங்கும்போது நடிப்பது—ராமு அவ்வழி வரக் கண்டு பதைப்பது நாகராஜனின் நடிப்புத் திறனை நன்கு விளக்குகிறது.

ராமுவும்—சீதாவும், சீதா விதவையான பிறகு சந்திக்கும்போது நாகராஜன் எவ்வளவு உன்னதமாக நடித்துள்ளார். துக்கம் தொண்டையை வந்து அடைப்பது நன்கு தெரிகிறதே! ராமு—சீதாவின் கோலத்தைக் கண்டு கலங்குவது, ஷண்முகத்தின் பாவத்தில் எவ்வளவு பளிச்செனத் தெரிகிறது. பேஷான கட்டம் அது.

கோயில் குளம் முதலிய இடங்களில் காம வேட்டை நடக்கிறது—என்பதை சு. ம.க்கள் கூறுவதுண்டு. "குமாஸ்தாவின் மகள்" நாடகத்தில் சீதாவை மணி மயக்க வந்த இடமும்—அத்தகைய பிள்ளையார் அமர்ந்துள்ள அரச மரத்தடியில் தான்! பிரசாரம் அல்ல! இயற்கையை மறக்க முடியாது. கதாசிரியர் அந்த இடத்தை அதற்கென அமைத்தார் என எண்ணுகிறேன்.

விதவையான சீதா வேறு வழியின்றி பிழைக்க கைராட்டை சுற்றுகிறாள். ஆனால் பாவம், சீதாவின் வாழ்வு எப்படி, நேராக வராது; அடிக்கடி இடையே அறுந்துபோய் விடுகிறதோ அதைப் போலவே தான் சீதா சர்க்கா மூலம் சுற்றும் நூலும் அடிக்கடி அறுந்து விடுகிறது! சர்க்காவால் வேறென்ன முடியும்? சீதாவின் வாழ்க்கையை சர்க்கா காப்பாற்ற வில்லை! மிராசு மணியின் துடுக்குத்தனம், சீதாவின் உயிரைக் குடித்து விடுகிறது. உயிர் போன பிறகு, சீதா ராமுவை அடிமை கொள்கிறாள். ராமு சரசாவுக்கு "அண்ணனாகி" வரன் தேடிப் பிடிக்கிறார்.

வரனின் தகப்பனார் "அசல் சாஸ்திரிகள்"—சந்தேகமில்லை. பெண்ணின் முகம்—மூக்கு பற்றி அவருக்குக் கவலையில்லை. நகைகள் மீதுதான் நாட்டம்; ரூபத்தைப் பற்றிக் கவலையில்லை. ரூ. 300, அதற்கு மேலும் ஆயிரம், அதன் மீதுதான் அக்கரை.

கல்யாண வேளையில் பேராசை பிடித்த பிராமணன் சீதாவைப் பற்றிப் பழித்ததும் வருகிறதே ராமுவுக்கு என்றுமில்லாத கோபம். எங்கிருந்து? அவன் வேதாந்தம் என்ற வலையில் போட்டுக் கட்டி வைத்திருந்த காதல், வேதாந்தத்தை அறுத்து எறிந்துவிட்டு வெளியே ஓடி வருகிறது. வரதட்சணைப் பேயர்களை அடித்துத் துரத்திவிட்டு சரசாவின் அருமையறிந்த வேறு வரனை இதே முகூர்த்தத்தில் அழைத்து வருகிறேன்—என விரைந்து செல்கிறான். வரன் வருகிறான்! யார்? ராமுதான்!

சீதாவின் தோல்விக்கு சரசா பழி வாங்கி விடுகிறாள். ஆம்! சீதாவுக்கு ராமு செய்யத் தவறியதை சரசாவுக்குச் செய்து சாந்தி—பெறுகிறார் ராமு.

புலி பாய்கிறது மான் மீது! மான் மிரள மிரள விழிக்கிறது.—தப்பி ஓடலாம் என்றாலோ, சுற்றிலும் முள்வேலி போடப்பட்டிருக்கிறது; பயத்தின் மிகுதியால் புள்ளி மானால் துள்ளி ஓட முடியவில்லை. கண்களிலே மிரட்சி கப்பிக் கொள்கிறது. அந்த நேரத்தில் வில்வீரன் அம்பினால் புலியை வீழ்த்தி புள்ளி மானைத் தடவிக்கொடுக்கிறான். மான் நன்றியறிதலுடன் களிப்புடன் அவனை நோக்கி நாவினால் அவன் கரத்தைத் தடவிக் கொடுக்கிறது.

சரசு, மான்; புலி வரதட்சணைக் கொடுமை; முள்வேலி, சமுதாய கட்டுப்பாடு; வில்வீரன் ராமு; அம்பு தாலி.

அந்த வில் வீரனுக்கும் ராமுவுக்கும் என்ன வித்தியாசம்! சந்தேகமிருந்தால் போய்ப் பாருங்கள்

அந்தச் சீனை. ஷண்முகம் வீர ராமுவாக நடிப்பதை! முகத்தில் தோன்றும் வீரக் களையை! மருண்ட மான் போல துரோபதை சரசாவாக நடிப்பதை நேரிலே சென்று பாருங்கள்; பிறகு கூறுங்கள்—என் உவமையில் ஏதாவது சொள்ளை இருந்தால்.

சோக ரசம் மட்டுமேதான் துரோபதையின் 'ஸ்பெஷல்' என்று கருதுவீர்கள். அந்த ஒரு நாடகத்தை மட்டும்; கண்டால். ஒரு வேளை துரோபதைக்கு சோக நடிப்பு இயற்கையாக அமைந்திருக்கிறது போலும் என்று எண்ணுவீர்கள்; அது தவறு.

அவ்விதமான நடிகர்கள் இருக்கிறார்கள், எனக்குத் தெரியும். சில நடிகர்களுக்கு—அனுமார் வேடம் போட வேண்டுமானால் அதிக தொல்லையே இராது!

சரசுவாக வந்து நமது மனதைக் கரைய வைக்கும் அதே துரோபதை இராமாயணத்தில் மாயா சூர்ப்ப நகையாகத் தோன்றி நடித்த நடிப்பும், பேசிய பேச்சும், பாடிய பாட்டும் தளுக்கும் குலுக்கும் சரசமும் சல்லாபமும் பார்க்க வேண்டும். "போ! போ! என நீர் சொல்கிறீர், ஆனால் உமது கண்கள் "இரு, இரு" என்று சொல்கின்றன"—என மாயா சூர்ப்ப நகை கூறி, கண்களைக் கொண்டு பேசவைக்கும் நடிப்பைப் போய்ப் பாருங்கள், அந்த துரோபதையா இவ்வளவு சோக நடிப்பும் நடிக்கிறது என்று ஆச்சரியப்படுவீர்கள்.

அந்தத் தளுக்குக் குலுக்குக்குத் தப்பித்த ராமாயண ராமு குமாஸ்தாவின் மகள் நாடகத்தில் ராமுவாக வரும்போதுதான் பழி தீர்க்கப்படுகிறார்!

நாடகத்தில் பிரத்யேக விமரிசனத்துக்குரியது ஸ்டுடியோ சீன்! தமிழ்ப் படங்கள் ஏன் கெட்டு விடுகின்றன? கலைக்குப் பல காத தூரத்தில் உள்ள முதலாளி; முதலாளியின் தோழன் என்ற முறையினால் கதாநாயகராகும் நடிகர்; நடிகரின் நட்பைப் பெற்ற நடிகை; கதை, காட்சி கானம், நடிகர் தன்மை எதையும் அறியாது கையில் சிகரெட் டப்பாவும், சுறுசுறுப்புக்கு 'பானமும்' அருந்தும் டைரக்டர், இதுதானே தமிழ்ப்படம் கெடுவதற்குள்ள காரணம். தோழர் கே. ஆர். ராமசாமி டைரக்டர் "வார்" வேடத்தில் வந்து, நாடகக் கொட்டகையே அதிர்ந்து விழும் படியான நகைப்பை ஊட்டி விடுகிறார். என்ன வேடிக்கையான ஒத்திகை. தோழிகளின் அழுகை! மிருதங்கக்காரரின் "தடதடா" பேஷ்! பேஷ்! டைரக்டர்கள் இனி தோழர் ராமசாமி மீது மானநஷ்டம் கூடத் தொடுத்து விடுவார்கள்! படத்தின் பண்பு, பாஷையில் பயிற்சி எதுமறியாத டைரக்டர்கள் தயவு செய்து விலகி விடட்டும். தோழர் ராமசாமி அத்தகையோரின் மானத்தை அடியோடு வாங்கி விடுகிறார்! மத்தாப்பு சுந்தரிகள், ஸ்டுடியோக்களுக்குத் தயவுசெய்து வரவேண்டாம்; வந்தால் என்ன நடக்கும்? கேளிக்கை! சீட்டாட்டம், குஷி; நடிப்பு இருக்குமோ இராது! படம் "ரன்" ஆகுமோ! ஆகாது! நாடகத்திலும்—டைரக்டரும் நடிகர்களும் "ரன்" ஆகிறார்கள்! படம் நின்று விடுகிறது. சினிமாத் துறையில் உள்ள ஆபாசத்தை—அலங்கோலத்தை அந்தச் சீன் மிக அழகுபட ஹாஸ்யச் சுவையுடன் எடுத்துக் காட்டுகிறது.

கிழட்டு மாப்பிள்ளையாக வரும் கே. ராமசாமி அசட்டுத்தனத்தை அப்படியே உருவகப்படுத்திக் காட்டி விடுகிறார். பெண் பித்துக் கொண்ட பார்வையை மிக நன்றாகக் காட்டுகிறார். பருவம் அவரது முதுகைச் சற்று வளைத்து விடுகிறது. ஆனால் பதைப்பு வளையவே இல்லை. ஜோதிடர் வேடத்தில் ஜோராக தோழர் என். எஸ். நாராயணன் நடிக்கிறார். ஏன் வளர்க்க வேண்டும்? அந்த நாடகத்தில் யார் மீதுதான் குறை சொல்வது? ஷண்முகத்தின் உருக்கமான பாடலைக் கேட்டேன்; பகவதி "உண்மையை உணர்ந்தேன். தேவைக்கு அதிகமான பொருள் இருந்ததால் இங்ஙனம் ஆடினேன்—என்னை மன்னிக்க வேண்டும்" என ராமுவிடம் அடிபணியவும் இருவரும் ஒருவரையொருவர் அணைத்து நிற்கவும்-அபேத வாதமும் அன்பும் அழகுபட விளங்கும் ஆரியக் காட்சிகளைக் கண்டேன். மிராசு மணிக்கு வாழ்க்கைப்பட்ட கமலா, 'மாதர் மலருக்குச் சமம், ஆண்கள் வண்டு குணம் உடையவர்கள்' என்ற உலக உண்மையை உரைப்பதைக் கேட்டேன். பல நாட்களில் நான் கண்டறியாதன இதில் கண்டேன். நான் கண்டதைச் சுருக்கித்தான் எழுதினேன். முழுவதையும் நீங்கள் காண வேண்டுமே; ஈரோடு வாசிகள் இன்றே செல்லுங்கள். மற்ற ஊரார் அழைப்பு அனுப்புங்கள் கம்பெனிக்கு. "குமாஸ்தாவின் மகள்" சினிமாவாகவும் வரப் போகிறது. கவனமிருக்கட்டும்!!

கலையென்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்;
களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வவேண்டும்.

—நாமக்கல் கவிஞர்.

## இதோ ! புத்தம் புதிய
## ராசி டூ - டோன் (Two-Tone)

புதிய ராசி வண்ணச் சேர்க்கை...மகிழ்வூட்டும் நிறங்கள், கவர்ச்சியான பார்டர் டிசைன்கள், நுண்ணிய புட்டாவொர்க்

இப் புதிய டூ-டோன் புடவை அணிந்து மகிழ்வுடனும், பெருமிதத்துடனும் திகழுங்கள்.

ஜுவல் டோன் ராசியின் மற்றுமொரு புதிய வண்ணச் சேர்க்கை. ஒப்பில்லா ராசி படைப்புகளை நீங்கள் விரும்பிப் பாதுகாப்பீர்கள். அவைகளை இன்றே பாருங்கள்.

**ராதா சில்க் எம்போரியம்**
14, சன்னதித் தெரு,
மைலாபபூர், மதருஸ்-4

**ராதா சில்க்ஸ்**
'தன் பில்டிங்ஸ்',
மவுண்ட்ரோடு, மதருஸ்-2

**ராதா சில்க் எம்போரியம்**
பம்பாய் சுதேசி
கோவாப்ரேடிவ்
ஸ்டோர்ஸ் கம்பெனி
கட்டிடம்,
வெஸ்டர்ன் இந்தியா ஹவுஸ்,
ஸர். பி. எம். ரோடு,
பம்பாய்-1

ராசி



EP-RASI-39

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.



# நாடும் நாடகமும்

இராஜேசுவரி நடராஜன் பி.ஏ.



'நாடகமே உலகம்' என்று யார் சொல்லி வைத்தார்களோ, தெரியவில்லை. யார் சொன்னாலென்ன? எவ்வளவு பெரிய உண்மை அது! இந்த உலக அரங்கத்திலேதான் எத்தனை விதமான நாடகங்கள், எத்தனை விதமான பாத்திரங்கள்! இந்த நாடகத்தை எல்லாம் நடத்திவைக்கும் சூத்திரதாரியான இறைவன் இருக்கிறானே, அவனே தனது அடியார்களை ஆட்கொள்ள என்னென்ன நாடகம் ஆடியிருக்கிறான் என்று எண்ணிப் பார்க்கின்றபோது, இது முதலும் முடிவும் இல்லா நாடகம் என்றுதானே தோன்றுகிறது?

நடிப்பும் கூத்தும் தமிழ் நாட்டின் பழமையான, அருமையான கலைகள். இறைவனையே கூத்தனாக்கி கூத்தப்பிரானாக வழிபட்டிருக்கிறார்கள் தமிழர். அந்தக் கூத்தைக் காண 'மனிதப் பிறவியும் வேண்டும்'—என்றும் பாடியிருக்கிறார்கள். அப்படிக் கலையைத் தெய்வீகமாக்கிப் போற்றிப் புகழ்ந்து, அந்தக் கலை ஆர்வத்திலே, கலை அனுபவத்திலே இறைவனையே கண்டவர்களாயிற்றே நம்மவர்கள்.

நாடகக் கலை ஆய கலைகள் அறுபத்துநான்கிலே ஒன்று என்பது நம் எல்லோருக்கும் தெரியும். தமிழ் மொழி இயல் இசை நாடகம் என்ற முப்பிரிவுகளைக் கொண்டது என்பதும் பள்ளிப் பருவத்திலேயே நாம் அறிந்ததுதான். இயற்றமிழும், இசைத்தமிழும், நாடகத் தமிழும் ஒன்றுக்கொன்று இணைந்த நிலையில் மக்கள் வாழ்வை வளம் செய்திருக்கின்றன என்றே சொல்ல வேண்டும். அதன் விளைவாகவே நல்ல பல இலக்கியங்கள் நாட்டில் பிறந்திருக்கின்றன. இளங்கோவடிகள் ஆக்கித்தந்த நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமோ இயல் இசை நாடகம் மூன்றிலும் சிறந்து முத்தமிழ்க் காப்பியம் என்ற பெருமைக்கு உரியதாக விளங்குவதோடு, பண்டைத் தமிழ்நாட்டில் நாடகக்கலை எப்படி மக்களால் போற்றப்பட்டது என்பதற்கு சான்றும் பகர்கின்றது.

நாடகம் என்பது ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டு, பாட்டு, உரை, நடிப்பு இவற்றின் துணையுடன், நல்ல நீதிகளையும், இலட்சியங்களையும், மக்கள் மனதில் பதிய வைப்பதற்காகப் பல பாத்திரங்களால் நடித்துக் காட்டப்படுவது மக்கள் மனதை நன்னெறிப்படுத்தவும். அறிவாற்றலைப் பெருக்கவும், அவர்களுக்கு கலையின்பத்தை வழங்கவும், நாடகம் ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக விளங்கி வந்திருக்கிறது என்றால் அது மிகையே அல்ல. கூத்தும் இசையும் கொழித்த நாட்டிலே, நடிப்பவர் தொகை அருகி விட்ட காரணத்தாலோ என்னவோ! நாடகக் கலைக்குப் போதிய ஊக்கம் தருபவர் இல்லாமல், இடைக் காலத்தில் நாடகத்தின் வளர்ச்சி குன்றி விட்டது. இந்தப் பெருங்குறையைப் போக்க அறிஞர்களும் கலைஞர்களும் முயன்றிருக்கிறார்கள். பரிதிமாற் கலைஞர் எனப்படும் சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் முதலியோர் முறையே மான விஜயம், மனோன்மணீயம் முதலிய நாடகங்களை ஆக்கி, தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்திருக்கின்றனர்—தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியோர் போன்ற கலைஞர்கள் பற்பல நாடகங்களை உருவாக்கி, அவற்றை மக்களிடையே அரங்கேற்றி, நாடகக்கலை ஒரேயடியாக நசித்து விடாமல், காத்து வளர்த்து வந்திருக்கின்றனர்.

இந்தத் துறையிலே தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகங்கள் அனைத்தும் நடிப்பதற்கென்றே எழுதப்பட்டவை. இதிகாசக் கதைகளை எல்லாம் நாடகங்களாக்கி இசையோடுஅரங்கேற்றிய பெருமை அவருக்கே உரியது. அவருடைய நாடகங்களிலே, இசையும், தர்க்க வாதங்களுமே தனியாட்சி புரியும். சுவாமிகளது சுலோசனா சதி, அபிமன்யு சுந்தரி போன்ற நாடகங்களில் இந்த அம்சம் சிறந்து நிற்பதை நாம் உணரலாம். சுவாமிகளது ஆர்வத்தையும் முயற்சியையும் நன்றியோடு நினைவு கூர்ந்து பாராட்டுகின்ற வகையிலேதான் இப்போது அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்றது.

சங்கரதாஸ் சுவாமிகளது நாடகங்கள் இன்றைய சமுதாயத்துக்கு ஏற்ற வகையில் அமையாமலிருக்கலாம். இன்று நமது கல்வியறிவு, வாழ்க்கை முறை, கலைநோக்கு எல்லாமே மாறுபட்டிருப்பதால், அவரது நாடகங்களுக்கு 'மவுஸ்' இல்லாமல் போகலாம். ஆனால், அந்த நாளிலே, கல்வியறிவில்லாத பாமர மக்கள்கூட உணர்ச்சி பூர்வமாக இதிகாசக் கதைகளைப் புரிந்து கொள்ளவும், பெரும் உண்மைகளையும் நீதிகளையும் மனதிற் கொள்ளவும் சுவாமிகளின் நாடகங்கள் பெரிதும் உதவியிருக்கின்றன

என்ற பேருண்மையை நாம் மறுப்பதற்குமில்லை; மறப்பதற்குமில்லை. நாடகக் கலையின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்து அவர் ஆற்றிய பணி பெரும்பணி என்றே கொள்ளவேண்டும். அவர் வகுத்துத் தந்த பாதையிலேதான் பிற்காலக் கலைஞர்கள் பல நாடகங்களை அரங்கேற்றி இருக்கிறார்கள். அப்படி அரங்கேற்றி வெற்றிக்கொடி நாட்டியவர்களில் டி. கே. சகோதரர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தங்களது ஒப்பற்ற நடிப்பாற்றலாலும், காட்சி ஜோடனைகளாலும் நாடக உத்திகளாலும் நாடகத் துறையிலே ஒரு புதிய விழிப்பையும் கலகலப்பையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களது சரித்திர, சமூக நாடகங்கள் எல்லாம் பொதுமக்களிடையே அமோக ஆதரவைப் பெற்றும் கூட, அவர்களால் அந்தத் துறையிலே நிலையாகத் தொடர்ந்து காலூன்றி நிற்க முடியாமல் போய் விட்டது. இதே நிலைதான் நாட்டில் உள்ள வேறு பல நல்ல நாடகக் கலைஞர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

இன்று நாடகத்தின் இடத்தை சினிமா பிடித்துக்கொண்டு விட்டது. குறைந்த செலவில் நிறைந்த இன்பத்தைப் பெற விரும்புகிற மக்களுக்கு சினிமாதான் சஞ்சீவியாக இருக்கிறது. நிரந்தரமாக நாடகக் குழுக்களை வைத்துக்கொண்டு நடத்துவதில் பல அசௌகரியங்களும் பொருளாதாரச் சிக்கலும் இருப்பதால், இன்று நாடகக் கலை மேன்மேலும் வளர முடியாமல் தவிக்கிறது. அன்பர் ஒருவர் வேடிக்கையாகக் குறிப்பிட்டார். நாடகத்தை 'வீட்டுச் சாப்பாடு' என்றும், சினிமாவை 'ஹோட்டல் சாப்பாடு' என்றும் வீட்டுச் சாப்பாட்டிலே உள்ள சுவையும் ஆரோக்கியமும் ஹோட்டல் சாப்பாட்டிலே எதிர்பார்க்க முடியாது தான் என்றாலும் பலருக்கு ஹோட்டல்சாப்பாடுதானே ருசிக்கிறது! நாடகத்திலே நடித்தவர்களெல்லாம் சினிமா உலகத்துக்குத் தாவி விடவே, நாடகத்தில் நடிப்பவர் தொகையும் குறைந்தே விட்டது. நடிப்பவர் குறையவே, நாடகங்களை எழுதும் பழக்கமுமே குறைந்து விட்டது.

நாடகங்களில் சில படிப்பதற்கென்றே எழுதப் படுபவை, சில நடிப்பதற்கென்றே எழுதப்படுபவை. படிப்பதற்கும், அதே சமயத்தில் நடிப்பதற்கும் ஏற்ற வகையிலே நாடகங்கள் அமைந்துவிட்டால் அது தனிச் சிறப்புடையதுதான். இன்று வானொலி மூலம் பல நாடக நிகழ்ச்சிகள் ஒலி பரப்பப்படுகின்றன— அவ்வப்போது பத்திரிகைகளிலும் ஓரங்க நாடகங்கள் வெளியாகின்றன. இவற்றில் பெரும்பாலானவை படிப்பதற்கே உகந்தவை. நடிப்பதற்கென்று நாடகங்கள் எழுதப்படுகின்றபோது, தனிப்பட்ட வேறு பல உத்திகளைக் கையாள வேண்டும். பொதுவாக இன்று நாடகம் எழுதுவோர் நம்மிடையே அருகி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நாவல்களும், சிறுகதைகளும் எழுதுகின்ற அளவுக்கு நாடகங்களை எழுத எழுத்தாளர் சமுதாயம் துணிந்து முன்வரவில்லை என்பது கசப்பான உண்மையே.

இருந்தபோதிலும், கலை ஆர்வம் காரணமாக பலர் இன்று நாடகங்களை நடத்திக்கொண்டுதானிருக்கிறார்கள். நடிப்பையும், புதிய புதிய உத்திகளையும் பொறுத்தமட்டில் அவை பாராட்டக் கூடியவையாக இருந்தாலும், முன்பு கண்ட நாடகங்களிலுள்ள கலையழகோ இலக்கியத் தரமோ இல்லையென்றே சொல்ல வேண்டும். குறவஞ்சிகளையும், நொண்டி நாடகங்களையும் எளிதில் மறக்க முடியுமா? தற்கால நாடகங்கள், மக்களின் அன்றாடப் பிரச்னைகளை வைத்துக்கொண்டு எழுதப்படும் நையாண்டி நாடகங்களாகவும், மக்களின் பகுத்தறிவுப் பசியைத் தணிக்கின்ற வகையிலே எழுதப்பட்டவைகளாகவுமே அமைந்துள்ளன. இவற்றின் மூலம் நாடகக் கலை மேன்மேலும் செழித்து வளரக்கூடும் என்று நாம் எதிர்பார்ப்பதில் அர்த்தம் இல்லை.

கலை அழகும், இலக்கியத்தரமும் வாய்ந்த நாடகங்களே நாட்டிற்குப் பெருமையையும் சிறப்பையும் தேடித் தரக்கூடியவை என்பதை நாம் மறந்துவிடலாகாது. இலக்கியத் தரம் வாய்ந்த ஷேக்ஸ்பியரது நாடகங்களே, ஆங்கில இலக்கியத்திற்கு நிரந்தரமான புகழையும் பெருமையையும் தேடித் தந்துள்ளன என்பதை நாம் மறுக்க முடியுமா? காளிதாஸனது சாகுந்தலமும் அந்தப் பெருமைக்கு உரியது ஒன்று தானே?

அத்தகைய நாடகங்கள் வளர வேண்டுமானால், மக்களது கவனத்தை மட்டும் கவர்ந்தால் போதாது. அரசும் தன் பங்கைச் செய்ய முன்வர வேண்டும். சிற்பம், சித்திரம், இசை, நாடகம், நாட்டியம் போன்ற கலைகள் எல்லாம் போற்றிக் காக்கப்பட வேண்டிய கலைகள். ஒரு நாட்டின் பண்பை, கலாச்சாரத்தை வளர்க்கக் கூடியன இந்தக் கலைகளே. ஒரு நாட்டின் கலைகளைக்கொண்டே அந்நாட்டின் கலாச்சாரத்தை வெளிநாட்டார் கணிக்க முடியும். அதனால் தான் பண்டைத் தமிழ் நாட்டிலே இந்தக் கலைகளை எல்லாம் அரசனே போற்றிப் பாதுகாத்து, பேணி வளர்த்திருக்கிறான் எனத் தெரிகிறது. அதன் பயனாகவே நாடகம் முதலிய கலைகளும் மிக உயர்ந்தமுறையிலே சிறப்புற்று வளர்ந்திருக்கின்றன என்று அறிகிறோம். சிலப்பதிகார காலத்தில் ஆடலரங்குகள் மக்களது கவனத்தை எல்லாம் கவரக்கூடிய பகுதியாகிய ஊரின் நடுவே அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

'ஊரகத்தாகி உளைமான் பூண்ட
தேரகத் தோடும் தெருவு முகம் நோக்கி
கோடல் வேண்டும் ஆடரங் கதுவே'—

என்று அரங்கேற்று காதை வரிகள், அந்த நாளில் நாடகத்துக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கையே புலப்படுத்துகின்றன. அரங்கங்கள் அமைப்பதோடு மட்டுமின்றி, நாடக நடிகர்களுக்கும் தகுந்த ஊதியத்துக்கு வழி செய்து ஊக்கம் தந்து, ஆதரவு குறைந்துவரும் நாடகக் கலைக்கு புத்துணர்வு ஊட்டவேண்டிய கடமை நாட்டு மக்களுக்கும், நாட்டை ஆளும் அரசுக்கும் உரியது. அரசு முனைந்து ஆதரவு காட்ட முற்பட்டால் நாடகக் கலை சீரும் சிறப்பும் பெற்று இழந்த செல்வாக்கை மீண்டும் பெற வழியிருக்கிறது. அந்தப் பொன்னாள் விரைவிலேயே வரும் என்று எதிர்பார்க்கலாம்.

# தமிழ் நாடகத் தந்தை

மாமதுர கவி
**வி. வே. முருகேச பாகவதர்**



### அறுசீர் விருத்தம்

சிந்தையில். உயிரில், நாவில் தேனென இனிக்கும் பண்டைச்
செந்தமிழ் தன்னைத் தூயத் தென்றலை உலகம் போற்றும்,
அந்தமார் பொதிகை வெற்பை அகத்திய முனியை, நல்ல
கந்தமார் சந்த னத்தைக் கவினுறத் தந்த மூதூர் !

தாமிர பருணி யென்றுத் தனித்தொளிர் பொருநை ஆற்றை,
நாமிகு வரலாற் றேடு நவில்சீதக் காதி தன்னைக்
காமுற முதன்மு ழக்கம் கண்டமா வீர பாண்டிய
ஏமமார் கட்ட பொம்ம இணையிலா மன்னன் றன்னை,

வீரரைப் புலவர் தம்மை மேதகு தியாகச் சின்னம் !
பேருயர் கப்ப லோட்டி சிதம்பரம் பிள்ளை தன்னைப்
பாரினுக் களித்த நெல்லைப் பதியிற்றென் பாண்டிநாட்டின்
போரினில் முதுகு காட்டா புகழ்மறக் குலத்தில், தூத்துக்

குடியெனும் நகரில் வெள்ளைக் கொள்ளையர் தமை விரட்டி,
அடித்த நல் வெள்ளைத் தேவன் அருந்திரு மரபில் வந்தார் !
படிபுகழ் புலமை, ஞானம், பக்தியிற் சிறந்த செம்மல் !
நடிகர்க்கோர் செல்வன் தந்தார், நற் றாமோ தரக்க ணக்கர் !

திருநிறை சங்கரதாஸ் எனும் அருட் பெயரே சூட்டி,
அருமையாய் வளர்த்தார், ஞான அறிவுப்பால் கலைப்பா லூட்டி,
ஒருபதி னாறும் ஆண்டில், உயிர்க் கவி பாட லானார் !
பெருங்குணத் தந்தை கண்டுப் பூரிப்பார், இறையைப் போற்றி !

பீடுயர் பக்தி வீரப் பெருமிதக் கதைகள் தீட்டித்,
தேடரும் சங்க நூலில் திகழ் நயம் பேச்சில் கூட்டி,
நாடக மேடை வீடாய் நடிகரே செல்வ ராக
பாடல்கள் புனையும் தொண்டே பரன்றிருத் தொண்டாய் ஆற்றிச்

சிறந்தனர், நடிப்பில், பேச்சில், புதுப்புதுத் திருத்தம் கண்டார் !
பறந்தவன் மக்கள் மொய்த்தார் ! பரந்தது, கீர்த்தி வெள்ளம் !
நிறைந்தன, கூத்தரங்கு ! நேரிலான் நடிப்பைப் போற்றி,
உறங்குவார் மூச்சுங் கூட உரைக்கும் சங்கரதாஸ் பேரே !

தனக்கென வாழ்ந்தா ரில்லை ! தமிழ்க் கலைக் காக வாழ்ந்தார் !
அனைத்தையும் துறந்தார், வீர அடிகள் நம் இளங்கோ போன்று !
மனத்தையும் அடக்கிக் கொண்டார் ! மணத்தையும் வெறுத்தார் ! ஆனால்,
கனஉயிர் ஒழுக்கம் காத்தார் ; கடை மூச்சிங் குள்ள மட்டும் !

வணங்கும் தாய் தந்தை யானார் ! மாசிலா குருவும் ஆனார் !
கணக்கிலா மாண வர்க்குக் கண்கண்ட தெய்வம் ஆனார் !
பிணக்குகள் தீர்த்தார் ; கந்தப் பெருமானை உருகிப் பாடி,
இணக்கமாய் நடிகர் எல்லாம் ஏகசோ தரர்க ளென்றார் !



# புலவரைப்போற்றிய புலவர்

டி.கே.முத்துசாமி

சுவாமிகள் மிகுந்த உதார குணமுடையவர்; எளியோர்க் கிரங்கும் உள்ளம் படைத்தவர். பொருள் திரட்டும் போக்கு அவரிடம் இறுதிவரை இருந்ததே இல்லை; தன்னிடம் இருப்பதை எல்லோருக்கும் கொடுத்தின்புறும் பண்பு சுவாமிகளிடம் நிறைந்திருந்தது.

அந்தக் காலத்தில் தமிழகத்தின் வட பகுதியிலே நாடகாசிரியராகத் திகழ்ந்தவர் ஏகை—சிவசண்முகம் பிள்ளை அவர்கள். இராமாயணம், கண்டி ராஜா, ஹரிச்சந்திரன் முதலிய நாடகங்கள் இப்பெரியாரால் இயற்றப் பெற்றவை. வேலூர் தி, நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் கம்பெனி முதல் இன்றுவரை சம்பூர்ண இராமாயணத்தை நடிக்கும் எல்லாச் சபையினரும் திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்களின் பாடல்களையே பாடி வருகிறார்கள் என்பது இப்பெரியாருக்குப் பெருமை தருவதாகும்.

சுவாமிகள் ஒரு முறை இவரைச் சென்னையிலே சந்தித்தபோது இவருடைய கண்டி ராஜா நாடகத்திலுள்ள சந்தப்பாடல்களைப் புகழ்ந்து வெகுவாகப் பாராட்டினார். பிள்ளை அவர்கள் அப்பொழுது கையில் பொருளில்லாது மிகவும் வறுமை வாய்ப்பட்டிருந்தார். இதை அருகிலிருந்த அன்பர்களின் வாயிலாக அறிந்த சுவாமிகள், அந்த இடத்தில் அவரிடம் நேரில் பணம் கொடுத்தால், காசு வாங்கக் கூசுவாரென்றெண்ணி, நூறு ரூபாய் நோட்டுக்களை ஓர் உறையில் வைத்துப் பிள்ளையவர்களின் பையில் போட்டு விட்டார். சுவாமிகளிடம் பேசிவிட்டு வண்டியேறிப் புறப்பட்ட திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் சற்றுத் தூரம் சென்றதும் எதற்கோ பையை எடுத்தவர் 'சங்கரதாஸனின் அன்புக் காணிக்கை' என்றெழுதப்பட்ட உறையையும் அதனுள் வைக்கப்பட்டிருந்த நூறு ரூபாய் நோட்டுக்களையும் பார்த்துத் திரும்பி வந்து, 'புலவனைப் புலவனே அறிவான்; ஆனால், புலவனைப் புலவன் போற்றுவதில்லை; தாங்கள் அதற்கு விதி விலக்கு!' என்று கண் கலங்கக் கூறிச் சுவாமிகளைத் தழுவிக் கொண்டார்.

---

**ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக, தமிழ்நாடு நாடகக் கலையில் திளைத்து மயங்கிக் கொண்டிருக்கிறது. ஊர் ஊராய் மந்தை நாடகம், நொண்டி நாடகம் போன்ற நாடகங்கள் பல. கல்யாணம் கல்யாணமாக, பரதநாட்டியம். பரதநாட்டியம் என்றால் நாடகம் தான். கவிஞர்கள் பாடுகின்ற கவிகள் எல்லாம் நாடகம் என்று சொன்னால் மிகையல்ல. கோவைகள், கலம்பகங்கள் எல்லாம் நாடகங்கள். தேவாரப் பாடல்களும் மற்றப் பக்திப் பாடல்களும் அநேகமாய் நாடகங்கள்தான். அவைகளின் வாரிசாக உள்ளது தான் குற்றாலக் குறவஞ்சி. கவிகள் என்ன? பாத்திரங்கள் என்ன? நடனங்கள் என்ன? சங்கீதம் என்ன? எல்லாம் சேர்ந்து நம்முடைய உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுகின்றன.**

—ரசிகமணி **டி. கே. சி.**

# நாடகப்பண்பு

கி. வா. ஜகந்நாதன்.



"முத்தமிழ்-முத்தமிழ்" என்று சொல்லுகின்ற வார்த்தையைப் பலமுறை நாம் கேட்டிருக்கின்றோம். இயல் என்றும், இசை யென்றும், நாடகமென்றும் சொல்கின்ற அந்த மூன்று தமிழ்களைப் பற்றியும் நாம் படித்திருக்கிறோம். நாடகத் தமிழில் மிகப் பெரிய பிரிவு இரண்டு உண்டு. அதை நாம் பெரும்பாலும் மறந்து விடுகின்றோம். நடனம், நாடகம் என்ற இரண்டையும் வேறு பிரித்து பழங்காலத்து ஆசிரியர்கள் ஆராய்ந்தார்கள். நாடகத்தைக் கதையைத் தழுவி வரும் கூத்து எனக் குறிப்பிட்டார்கள். அந்த நாடகங்களெல்லாம் நமக்குக் கிடைக்கவில்லையே; என்ன காரணம்? இயல் நூலாகிய சங்க நூல்களெல்லாம் கிடைத்திருக்க, நாடக இலக்கியங்கள் இல்லாமலிருந்ததனால்தான் கிடைக்கவில்லை யென்று சில ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கின்றார்கள். ஆனால் இந்த நாட்டில் நாடகம் எவ்வளவு சிறந்திருந்தது என்பதை பல குறிப்புக்கள் காட்டுகின்றன.

தொல்காப்பியர் காலத்திலேயே, அதாவது மிகமிகப் பழங்காலத்திலேயே நாடகத்தைப்பற்றிய பல குறிப்புக்கள் இருக்கின்றன. ரசம், பாவம் என்கின்றவற்றையெல்லாம் ஆராய்ந்த பகுதிகள் தொல்காப்பியத்தில் உண்டு.

மெய்ப்பாட்டியல் முதலிய பகுதிகளிலே கவியினுடைய சுவையைப்பற்றி ஆராய்கின்ற ஆழ்ந்த ஆராய்ச்சியைப் பார்க்கிறோம், அதில் காவியச்சுவை வேறு, நாடகச்சுவை வேறு என்று தனித்தனியாகச் சொல்லியிருக்கிறார்கள். சுவை பிரதானமாக, நாடகத்துக்காகவே அமைந்தது என்று அந்தச் சுவையைப் பற்றிச் சொல்லுகின்ற பகுதியிலே முதல் சூத்திரத்திலேயே தொல்காப்பியர் கூறுகின்றார்; 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள்' என்று. 'பண்ணை'யென்று நாடகத்தைச் சொல்லுகிறார். விளையாட்டாக மனத்துக்கு மகிழ்ச்சியை உண்டாக்குவதால்தான் நாடகத்துக்குப் 'பண்ணை' என்று பெயர் வந்தது. அங்கே எட்டு வகையான சுவைகளை நன்கு பொங்கும்படியாக நடித்தார்கள். அதற்கேற்ற பாடல்களையும் கதைகளையும் அமைத்தார்கள் என்று குறிப்புக்கள் அங்கே கிடைக்கின்றன. அக்குறிப்புக்களிலிருந்து இயல் காப்பியங்களோடு நாடகத்துக்கென்றே தனிக் காப்பியங்களும் இருந்தன என்பதும் தெரியவருகின்றன.

மணிமேகலை என்னும் பழைய நூலிலே, 'நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்' என்று ஓர் இடத்தில் வருகிறது. நாடகக் காப்பியங்களையும், அக்காப்பியங்களுக்குரிய இலக்கணங்களையும் ஆராய்ந்து அவற்றைப்பற்றி புலவர்கள் சர்ச்சை பண்ணினார்கள் என்பதை அந்த அடி காட்டுகின்றது.

அதுமாத்திரமல்ல; நாடக வழக்கு என்றே ஒரு வழக்கைச் சொல்லுகிறார் தொல்காப்பியர். புலநெறி வழக்கம் என்று பெரியவர்கள், பெரும் புலவர்கள் தம்முடைய மரபை வழி வழியாகக் காத்து வந்தார்கள். அந்தப் புலவர் மரபுக்கு இரண்டு பகுதிகள் உண்டு. உலகத்திலுள்ள வழக்கமும், நாடக வழக்கம் என்ற ஒன்றும் இணைந்து, அந்த இரண்டினாலும் பனுவல்களைச் செய்தார்கள் என்று புலவர்கள் பேசியிருக்கிறார்கள். தொல்காப்பியமும் சொல்லுகிறது. உலகியல் வழக்கமாவது உலகத்தோடு ஒட்டி உள்ளதையே சொல்லுவது. நாடக வழக்காவது, வாழ்க்கை நிலையை மிகைப்படுத்திக் காட்டுவது என்று இவற்றைப்பற்றி விளக்கமாக எழுதியவர்கள் சொல்லுகிறார்கள். எவைஎவை அழகாக உள்ளனவோ அவற்றையெல்லாம் ஒரு சேரத் தொகுத்து அமைப்பது நாடக வழக்கு என்று சொல்லுவார்கள். இப்பொழுது 'ஐடியலிஸம்' (Idealism) 'ரியலிஸம்' (Realism) என்று சொல்கிறோமே, அதைப்போல. ஒருவனது உலகியல் வழக்கு என்பது 'ரியலிஸத்தையும்' நாடக வழக்கு என்பதை ஐடியலிஸம் என்றும் எண்ணியிருப்பார்களோ என்று தோன்றுகிறது. எப்படியானாலும் நாடக வழக்கு என்ற ஒன்று இன்பத்துக்குக் காரணமாக அழகான

பல உணர்ச்சிகளையெல்லாம் ஒருங்கே தொகுத்துக் காட்டுகின்ற வண்ணமாக இருந்தது என்பதை அந்தக் குறிப்புக்கள் நமக்குக் காட்டுகின்றன. அப்படியானால் அந்த நாடகக் காப்பியங்களெல்லாம் எங்கே போயின?

இயல் போலே, இசை போலே ஒரு தனிப் பிரிவாகவே நாடகங்கள் அமைந்திருக்கும்பொழுது அந்த நாடகக் காப்பியங்களும், அந்தக் காப்பியத் திறகுரிய இலக்கணங்களும் இந்தத் தமிழ்மொழியிலே இல்லாமல் எங்கே மறைந்தன? என்ற கேள்வி பிறக்கும். அதற்கு முன்பு மற்றொரு கேள்வியையும் கேட்டுக் கொள்ளலாம். இயல் நூல்களைப் போலே—சங்க நூல்கள் என்று சொல்கின்ற இலக்கியங்களைப் போலே-இசை நூல்கள் கிடைக்கவில்லையே! ஏன்? தேவாரம் முதலியன பிற்காலத்திலே வந்த இசைப் பாடல்கள். ஆனால் சங்க காலத்திலே உள்ள இசைப்பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இசைப்பாடல்களைப் பற்றிய இலக்கணங்களும் நமக்குக் கிடைக்கவில்லை.

தேவாரங்களுக்குப் பெயர், பண்கள் போட்டிருக்கிறார்கள். அதனாலே உயிர் வைத்திருக்கிறது. ஆனால் பழங்காலத்துப் பண்முறைகளோ, இலக்கண இலக்கியங்களோ கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் கண்டு பிடித்தால் நாடக இலக்கண இலக்கியங்களும் வழங்காமல் இருப்பதற்கு அதே காரணத்தைச் சொல்லிக் கொள்ளலாம். என்ன காரணம்? இலக்கியத்தை வாயாரச் சொல்லிக் காதாரக் கேட்பதோடு கூட ஏட்டிலேயும் எழுதப் படிக்கலாம். இலக்கியம் என்பது உள்ளத்தால் சுவைத்தற்குரியது. உள்ளத்தில் சிறப்பும் தெளிவும் உடையவன் கவிதை பாடுகிறான். அது இலக்கியமாகிறது. இசையென்பது உள்ளத்தால் தோற்றுகின்ற இலக்கியத்தோடு கூட குரலும் வளம் உடையதாக இருக்கவேண்டும்.

மூன்றாவதாகிய நாடகம் உள்ளத்தின் பண்பாகிய இலக்கியச்சுவையையும், உரையின் பண்பாகிய இசைச்சுவையையும், உடம்பின் பண்பாடாகிய — மெய்ப்பாடாகிய நாடகச்சுவையும் கலந்திருக்கவேண்டும். ஆக, நாடகத்தில் இயலையும் இசையையும் கூத்தையும் ஒருசேரக் காணலாம். இந்த மூன்றில், உள்ளத்திலே தோன்றிய இயலினால் வந்த இலக்கியங்களை எழுத முடியும். பாட்டை எழுதினால் அது பாட்டாகி விடாது. அதைப் பாட வேண்டும். அதேபோல் நாடகத்தையும் நடித்துக்காட்டவேண்டும்.

பழங்காலம் முதல் இசைவாணர்களெல்லாம் தங்களுடைய கலையை எழுதாக்கலையாகவே வைத்திருந்தார்கள். ஆசிரியர் வாயிலாக மாணாக்கர் கேட்க, மறுபடியும் மாணாக்கர் ஆசிரியராகி மாணாக்கருக்குச் சொல்ல இப்படி பரம்பரை பரம்பரையாக இசை வந்தது. அந்தப் பரம்பரை அற்றுப் போனவுடன் அந்த இசைப்பாடல்களும் இசை இலக்கணங்களும் இல்லாமற்போயின. அது போலத்தான் நாடகங்களும். வாய்மொழியாக நேர்முகமாக ஆசிரியர்கள் பயிற்ற இவர்களிடத்திலிருந்து பல பெரிய மாணாக்கர்களெல்லாம் கற்றுக்கொண்டு தமிழ் உலகத்தை மகிழ்வித்து வந்தார்கள். அவர்கள் உயிரோடு இருந்து, உயிருள்ள நாடக காப்பியங்களாக, நாடகக் காப்பிய இலக்கணங்களாக அத்தகையோர் திகழ்ந்து வந்தார்கள்.

பண்டைய நாளில் நாடகங்களிலே இரண்டு பிரிவுகள் இருந்ததாகத் தெரிகிறது. வேற்றியல், பொதுவியல் என்ற இரண்டு பிரிவுகள், அரசவையிலே நாகரிகம் மிக்கவர்கள், கலைப்பண்பிலே உயர்ந்தவர்கள் அனுபவிக்கின்ற நாடகங்கள், பொதுமக்கள் பார்த்து அனுபவிக்கின்ற நாடகங்கள் என இரண்டு விதம்.

நாடகங்கள், ஆழ்ந்த ஆராய்ச்சி உடையவர்களுடைய தொடர்பினாலேயும், கலைஞர்களுக்குள்ளே நுட்பமான கலைஞர்களுடைய தொடர்பினாலும் அரசர்களுடைய பாதுகாப்பினாலும் வளர்ந்து வந்தது. அதுதான் இன்றைக்கு நாம் சீரிய நாடகம் என்று சொல்லுகின்ற வகையில் இருந்திருக்க வேண்டும். அரசர்களுக்குப் பின் சிற்றரசர்கள், ஜமீன்தார்கள் காலத்தில் வெறும் காம உணர்வுகள் மிகுந்த நாடகங்கள் எழுந்தன. அதனால் வேற்றியல் என்ற பகுதி அடியோடு அழிந்து விட்டது.

அந்த நாளில் பொது மக்களுடைய இன்பத்துக்காகப் பல நாடகங்கள் எழுந்தன. அப்படி எழுந்தாலும் கூட இந்த நாட்டின் புராணங்களையும் பாரத, ராமாயணங்களையும் கதைக்கருவாக வைத்துதான் அவை எழுந்தன.

இருநூறு அல்லது முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னாலிருந்துபார்த்தால் அத்தகைய அருமையான நாடகங்கள் இருந்து வந்தன. அவை எல்லாம் முழுவதும் இசைதான். அதனை மேல்நாட்டிலே 'ஆட்ரா' என்று குறிப்பிடுவார்கள். அந்த இசை நாடகங்கள் அனைத்தும் புராணக்கதைகளைப் பற்றியனவாகவே இருக்கும். அவைகளுக்கெல்லாம் நச்சுப்பொய்கை விலாசம், துயிலுரிதல் விலாசம் அபிமன்யு விலாசம் என்று விலாசம் என்ற பெயரோடு அந்த நாடகங்களெல்லாம் இருந்தன. அந்த நாடகங்களை இப்போது யாரும் நடிக்க முடியாது. நடித்தாலும் யாரும் விரும்பிப் பார்க்க மாட்டார்கள்.

ஆனால், இன்று மேனாட்டினுடைய தொடர்பினாலே நாடகக் கலை மிக உயர்ந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. உயர்வு எது, தாழ்வு எது என்பதே காலத்தோடு ஒத்தது. மனிதனை உயர்த்துவது என்பதே உண்மையான உயர்வு. அது, இசை நாடகமோ, வெறும் அபிநயமோ, பாட்டோ அல்லது வெறும் வசன நாடகமோ எதுவானாலும் சரி, அது காலத்தால் வேறுபடுமேயொழிய உயர்வு,

# தி சௌத் மதருஸ் எலக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிமிடெட்

"பவர் ஹவுஸ்" திருச்சிராப்பள்ளி – 1.

☆

தமிழகத்தின் தலைசிறந்த மின் வழங்கும் நிலையம்
40 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பெற்றது.

அனுமதிப் பகுதி :

| | | |
|---|---|---|
| திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் சதுர மைல்கள்: | ... | 6200 |
| மொத்த வாடிக்கைக்காரர்கள் : | ... | 94,706 |
| மின்விசைக் கம்பிகள் இழுத்துள்ள மைல்கள் : | ... | 3027 |
| மின்விசை பெறும் நகரங்களும், கிராமங்களும் : | ... | 914 |
| விவசாய மின்விசை நீரேற்றுகள் : | ... | 6138 |
| மின்விசை இயந்திர சாதனங்கள் : | ... | 6190 |

☆

ஆட்சிக்குழு உறுப்பினர்கள் :

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் (தலைவர்)
திரு. வி. ராமையா (துணைத் தலைவர்)

திரு. கே. எஸ். வெங்கு, நிலக்கிழார், மாயூரம்.
திரு. பி. ஷேக் மொய்தீன், கண்டிராக்டர்.
திரு. சி. ராமதநான், வழக்கறிஞர்.
திரு. டாக்டர் என். ஸி. சுப்பிரமணியம்.
திரு. டாக்டர் டி. கே. ரங்கநாதன்.
திரு. சி. மு. அரு. நா. அருணசலம், செட்டியார், காரைக்குடி.
திரு. ஆர். வேணுகோபால் ரெட்டியார், பர்மாஷெல் ஏஜெண்டு.

ஆட்சிக்குழு உறுப்பினர்கள் :

திரு. எச். கே. ராமசாமி.
திரு. எஸ். விசுவநாதம்.

மானேஜிங் ஏஜண்டுகள் :

சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சிராப்பள்ளி – 1.

தாழ்வு என்பது எல்லா காலத்திற்கும் ஒன்றுதான். மனிதனை உயர்த்துவது எதுவோ, அதுதான் கலை. அதுதான் இலக்கியம். மக்களுடைய உள்ளத்தில் எளிதில் உணர்ச்சியை உந்தச் செய்து, அவர்களை வளமிக்க வாழ்வுக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்படி தூண்டிவிட்டு நாம் மனிதனாக மட்டுமல்ல, தெய்வமும் ஆகவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்குவதே இலக்கியம். தேவாரம், திருமுறைகள் போன்ற இசை இலக்கியங்கள் மக்கள் உள்ளங்களை அவ்வாறு ஈர்த்தன.

நடன வகைகளிலே மோன நாடகம் நடித்தார்கள். கதகளி முதலிய நாடகங்களெல்லாம் இந்த நாட்டுப் பண்புதான். அதை இப்பொழுது மலையாளத்திலே வைத்திருக்கிறார்கள். பாடுபவர் ஒருவர். ஆடுபவர் ஒருவர் பேசுவதும் நடிப்பதும் ஒருவனாக இருப்பது இக்காலத்து நாடகம். கதக்களியிலே பாடுகிறவர் ஒருவர். பேசுகிறவர் ஒருவர். திரைப்படங்களில் கூட அப்படித்தானே! வாக்கு ஒலி இரவல் தருகிறார்களல்லவா! அப்படிப் பாடுகிறவர் இலக்கியத்தைப் பாடுவார். ஆடுகிறவர் அபிநயம் பிடிப்பார். பாடுபவர் இல்லாமலே ஆடுபவர்கள் ஒரு வரலாற்றையே ஆடுவார்களாம்.

சிலப்பதிகாரத்திலே கூத்தச் சாக்கையன், சாக்கைக் கூத்து ஆடினான். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுடைய ஆட்டத்தை ஆடினான். பண்ணைப் படைத்த எம்பெருமானுடைய ஆட்டத்தை அந்தப் பாவத்தினாலே காட்டினான். அதனை விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லாமல், கண் படைத்தார் எல்லாரும், அதோடு கருத்துப் படைத்தார் எல்லாரும் கண்டு மகிழ்ந்து உணர்ச்சி பெறும்படியாக ஆடினான் என்று சிலப்பதிகாரம் காட்டுகிறது. அன்று கண்ட அந்த மோன நாடக வகைகளை இன்று நாம் அபிநயம் என்று சொல்கிறோம்.

நாடகத்திலே முக்கியமானது. பாவம்—மெய்ப்பாடு. உள்ளத்து உணர்ச்சிகளை, கண் பார்வையினாலே, கையின் ஆட்டத்தினாலே உடம்பிலே தோற்றுகின்ற பல வகையான அசைவுகளினாலே காட்டலாம். அது நடனத்துக்குத்தான் சொந்தம் என்பது அல்ல; நாடகத்துக்குக் கூடத்தான் சொந்தம். நாடகத்தைப் பத்து வகையாகப் பிரித்திருக்கின்றார்கள். ஒவ்வொன்றிற்கும் தனித் தனிப் பெயர், தனித்தனி இலக்கணங்கள் உண்டு. கூற்றுவகையாக கவி நடுவிலே புகாமல் எல்லாப் பாத்திரங்களுடைய வாக்காகவே வைத்திருப்பது நாடகம். கவி இடையிலே தன் கருத்தைச் சொல்லுவார். அதனைக் கவிக்கூற்று என்று சொல்லுகிறோம்.

கம்பராமாயணத்திலே, 'இப்படி இராமன் பேசினான்' என்று 'கொட்டேஷன்' போடுவார் கம்பர். இந்தக் 'கொட்டேஷன்' இல்லாமலிருந்தால் அது நாடகம் ஆகும். அப்படிக் கூற்று வகையாகச் சொல்லுகின்ற ஒருமுறை தமிழில் மிகப் பழங்காலம் தொட்டு இருந்தது. சங்க நூல்களில் அகப்பொருள் நூல்கள் அனைத்துமே நாடகத்தின் பகுதி என்று குறிப்பிட்டால், ஏதோ சிறப்பாகப் பொய் சொல்வது போல இருக்கும். அந்தப் பாடல்கள் எல்லாம் பாத்திரங்களினுடைய கூற்று. கவியினுடைய கூற்றல்ல. அதாவது, ஒரு காதல் நாடகத்திலே தலைவி கூறுவாள். தலைவன் கூறுவான். தோழி கூறுவாள். இடையில் கவிஞன் வரவே மாட்டான். இந்த முறையிலே அமைந்திருப்பதுதான், அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை முதலிய அகத்துறைப் பாடல்கள் எல்லாம்.

திருவள்ளுவர், காமத்துப் பாலிலே அமைத்துள்ள 250 பாடல்களையும் இந்த வகையாகவே குறிப்பிடலாம். இந்த 250 பாடல்களும் ஒரு நாடகமே. இந்த 250 பாடல்களிலும் பாத்திரங்கள் பேசுமேயொழிய திருவள்ளுவர் இடையே புகமாட்டார். இதை 'முதல் கோவை' நூல் என்றே குறிப்பிட வேண்டும். அதற்குப் பின்பு எழுந்த கோவை நூல்களெல்லாம் நாடக இலக்கணத்தோடு அமையப்பெற்றதென்றே கூறலாம்.

திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூலை, மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார். நடராஜப் பெருமானுடைய நாடகசாலைக்கு முன்னாலே, ஆம் அவர் நடன நாடகமாடுகிறார். அந்தப் பெருமானையே நாயகனாக வைத்து திருச் சிற்றம்பலக் கோவையார் என்ற கோவையைப் பாடினார். அதிலுள்ள 400 பாடல்களும் ஒரு நாடகத்தின் 400 காட்சிகள். இன்று நாம் குறிப்பிடுவதுபோல், பாத்திரங்களுடைய குணங்களை வைத்து, ஒரு கதையமைப்பைச் சிறப்பாக வைத்து, ஒரு இலட்சியத்தை வைத்துப் பாடிய நாடகம் என்று குறிப்பிட முடியாது. ஆனால் நாடகப் பண்பிலே ஒரு பகுதியாக, எல்லாம் பாத்திரங்களின் கூற்றுவகையாக தொடர்ந்த ஒரு கதையோடு அமைந்திருக்கிற நாடகம் அந்தக் கோவை. அதிலுள்ள நாடகப்பண்பு, ஒரே பாட்டில் இருவர் பேசுவார்கள்.

அக்கோவையாரிலே வரும் ஒரு சிறிய உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். காதலனும் காதலியும் தம்மைச் சார்ந்தவர்களுக்குத் தெரியாமல் புறப்பட்டுப் போய் விட்டார்கள். அவர்களைக் கண்டு பிடித்துவர செவிலித்தாய் புறப்படுகிறாள். ஒரே பொட்டல் காடு. எதிரே இருவர் வருகின்றனர். ஒரு புடவையும் ஒரு வேஷ்டியும் தெரிகிறது. நம்முடைய மகளும் மாப்பிள்ளையுமாகத்தான் இருக்க வேண்டுமென செவிலித்தாய் கருதுகின்றாள். அவர்கள் அருகே வருகிறார்கள். உற்றுப் பார்க்கிறாள்; வேறு ஆட்கள் என்பதை உணர்கிறாள் செவிலித்தாய்.

இருந்தாலும் தான் உற்று பார்த்த அநாகரிகத்திற்குக் காரணம் சொல்ல முற்படுகிறாள் செவிலித்

தாய், "ஆம்; இதே அச்சு! இந்த மாதிரியே தான் போனார்கள். அதனால்தான் பார்த்தேன். நீங்கள் இரண்டு பேரை இந்த வழியாகக் கண்டீர்களா? உங்கள் மாதிரியே உடை. உங்களைப் போலவே தோற்றம். இதே உயரம், ஆணும் பெண்ணுமாக இரண்டு பேர் போனார்களா?"

'மீண்டார் என உவந்தேன் கண்டு நும்மை—இம்
மேதகவே பூண்டார் இருவர் முன் போயினரோ?

என்று செவிலித்தாய் கேட்கிறாள்.

எதிரே வந்த ஆடவன் கூறுகின்றான். 'ஆம் கண்டேன்.' யாரைக் கண்டேன்? அவன் நடராஜ பக்தன். மாணிக்க வாசகர் நடராஜ பெருமானை உள்ளே நுழைக்கிறார். "எம்பெருமான் சிற்றம் பலப் பெருமான் வேகமாகச் சுழன்றாடிக் கொண்டிருக்கிறவன் எனக்காகக் கொஞ்சம் நின்று என்னை ஆண்டு கொண்டார். அவருடைய மலை மேலிருக்கின்ற சிங்கத்தைப் போலவே ஓர் ஆடவனைக் கண்டேன்." அப்புறம் பேசவில்லை அவன். இவள் தன் மகளைப் பற்றித்தான் கேட்கவேண்டும். ஆனால் அது உசிதமில்லையென்றுதான், "இரண்டு பேர் போனார்களா?" என்று கேட்டாள். அவனே தலைமகனைப் பற்றிக் கூறுகிறான்.

'தூண்டா விளக்கனையாய்! என்னையோ அன்னை
சொல்லியதே?',

'அம்மா என்ன சொன்னாள்? நீ சொல்?' என்று சொல்லவில்லை அவன். பெண்ணை அடிமையாக்கி ஆடவன் உத்தரவா போடுவது? தூண்டாத விளக்குப் போன்றவளை நான் தூண்ட வேண்டுமா? அம்மா என்ன சொன்னாள்? ஏன் சொல்கின்றான். இவன், 'பிறன்மனை நோக்காத பேராண்மைச் சான்றோன்? மாற்றானுடைய மனைவியைப் பார்க்காதவன். ஏற்றமிக்க இப்பண்பை விளம்பரப் படுத்திக்கொள்ள விரும்பாதவன்.

எனினும் காணவில்லையென்று சொன்னால் செவிலித்தாயின் உள்ளம் நோகும். "கண்டாள் ஒருத்தி, அருகில் இருக்கிறாள். அம்மா என்ன சொன்னாள் பார்த்தாயா?" என்று கூறினான். மற்றப் பெண்ணைக் கண்ணாலே பாராதவன் இப்போது அந்த அம்மாவைக் கண்ணாலே பார்த்தானே? 'என்னையோ அன்னை சொல்லியதே' எனும்படி அம்மாவாகப் பார்த்தான்.

இப்படிப் பாலை நிலத்திலே, ஆடவன் இல்லறத்தின் வழி காட்ட, உதவியாக வழிகாட்ட, பெண் பின்பற்றும் நிலை அந்த வெப்பமான பாலை நிலத்திலும் நிகழ்கின்றது. ஒரே பாட்டு. அதில் செவிலித்தாய் கேட்பது. அப்புறம் அந்த ஆடவன் அவளைப் பார்த்துப் பேசுவது. வாக்கியம் முடிவு பெறுமலே திரும்பிக் காதலியைப் பார்த்து பேசுவது நாடக முறையைப் பாருங்கள்.

'மீண்டார் என உவந்தேன் கண்டு நும்மை—இம்
மேதகவே பூண்டார் இருவர் முன் போயினரோ?

இது செவிலித்தாயின் வார்த்தை. அதே பாட்டில் அடுத்து ஆடவன் கூறுகின்றான்.

'புலியூர் எனைநின்று ஆண்டான் அருமறை
ஆனியன்னனைக் கண்டேன் அயலே—'

வாக்கியம் முற்றுப் பெறவில்லை. மேலும் தொடர்கிறான்.

'தூண்டா விளக்கனையாய் என்னையோ அன்னை
சொல்லியதே!....'

இருவர் கூற்று. மூன்று வகையான பகுதி. இப்படி ஒரு பாட்டில் ஒரு சிறிய நாடகக் காட்சியை அமைத்துக் காட்டுகின்றார் மணிவாசகர். இந்த விதமாக நானூறு பாடல்களையும் உள்ளடக்கியது தான் திருச்சிற்றம்பலக் கோவையார்.

இப்படியாக, பழங்கால முதற்கொண்டு தமிழிலே நாடகக் கூறுபாடுகள் நிரம்ப உள்ளன. இன்றைக்குள்ள நாடகங்கள் உலகத்துக்கே பொதுவான இலக்கணத்தில் வளர்கின்ற நாடகங்கள். உலகத்திலே மிகச் சிறந்த கலையாகப் போற்றப்படுகின்ற நாடகக் கலையில் நன்கு தேர்ந்து அவற்றை நடித்துக் காட்டி மக்களுடைய உள்ளப் பண்பையெல்லாம் உணர்ந்து சிறப்பிக்கச் செய்த கலைஞர்களால் வளம் பெற்று வளர்கின்றன. இந்த நாடகக்கலை மேலும் வளர்ந்து ஆண்டவனுடைய திருவருளினால் இத்தமிழ்த்திருநாடு நாடகக்கலையிலும் சிறந்தது என்ற நற்பெயரைப் பெறவேண்டும் என்பதே என் பேரவா.

"சீரியநற் கொள்கையினை எடுத்துக்காட்ட
சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்"

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

# என். வி. பாஷியம் ரெட்டி அண்டு கம்பெனி

4, பாரதி வீதி. கடலூர்–1

☆

வணிகம் & வினியோகம் :

**கால்டெக்ஸ் (இந்தியா) லிமிடெட்,**

கடலூர்......&......நெய்வேலி

அங்கீகரிக்கப்பட்ட வணிகர் :

**'கிர்லோஸ்கர்' ஆயில் என்ஜின்கள், பம்புகள்**

**'எவரெஸ்ட்' சிமிண்ட் சாதனங்கள்**

**'டால்மியா' சிமிண்ட்**

**'ராலி உல்ப்' எடுத்துச் செல்லக் கூடிய—**

**மின்சாரக் கருவிகள்**

ஸ்டாக்கிஸ்ட்டுகள் :

என். ஆர். எம். பெல்டிங்

(விவசாயம் & தொழில் சம்பந்தமான)

வி. பெல்டுகள், ஆர்க் வெல்டிங் ராடுகள், பால் பேரிங்குகள்

அலுவலகம் :
**4. பாரதி வீதி**
கடலூர்-1
போன் : 77

ஷோ - ரூம் :
**பீம விலாஸ் கட்டிடம்**
கடலூர் - 1
போன் : 77-A.

கிளைகள் :

**பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, நெய்வேலி, புவனகிரி, பாண்டிச்சேரி.**



நடிகப் புலவர் டி. எஸ். வேலு நாயருடன் டி. கே. எஸ். சகோதரர்களும்
டி. என். சிவதாணுவும்



புதுவை சுவாமிகள் நிினைவு விழாவில் முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம்
கேமிராவுடன் நிற்பவர் டி. என். சிவதாணு



பழம்பெரும் பெண் வேட நடிகர்
**பண்டித எஸ். எஸ். ஆனந்தம்**



**பழம்பெரும் நடிகை கோல்டன் பி. சாரதாம்பாள்**

## சிறந்த நாடகத் தயாரிப்பாளர்கள்



நாடகக் கலையரசு
நவாப் டி. எஸ். இராசமாணிக்கம்



யதார்த்தம்
டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை



நடிகமணி
எம். எஸ். முத்துகிருஷ்ணன்

## சுவாமிகளின் முது மாணவர்கள்



டி. எஸ். குற்றாலலிங்கம் பிள்ளை



பாட்டா டி. ஆர். இராமகிருஷ்ணன்



இசக்கி முத்து வாத்தியார்



(வெண்பா)

பண்ணுர் பரதமும் நாடகமும் பம்பாயில்
கண்ணெனவே காக்கும் கலையரங்கம்—பண்புமிகும்
தென்முகா னந்தச் சிறப்புக் கலைவளர்க்கும்
சண்முகா னந்த சபை.

—புத்தனேரி - சுப்பிரமணியம்

# சுவாமிகளின் கவிதைத்திறன்

அ. ச. ஞானசம்பந்தன்



இற்றைக்கு நூறாண்டுகளின் முன்னர்த் தோன்றிய சுவாமிகளின் கவிதைத் திறனை ஆராயு முன்னர், அன்றையத் தமிழ் இலக்கியம் எவ்வாறு இருந்தது என்பதை அறிதல் வேண்டும். பிற சமயத்தை வளர்க்கும் நோக்குடன் இத் தமிழ் நாடு நோக்கிய வேற்று மொழியாளர்கள் தமிழை வளர்க்கும் நோக்குடன் புதிய உரைநடை வகுத்த காலம் அது. இராமலிங்க வள்ளலார் போன்றவர்கள் பக்தி சுவை நனி சொட்டப் பாடிய காலம் அது. கவிதையில் ஒரு புது வகை பிறக்கத் தேவை ஏற்பட்டது. அருணாசலக் கவி போன்றவர்கள் தமிழில் நாடகக் கீர்த்தனைகள் யாத்தனர். இங்ஙனம் கீர்த்தனைகள் தமிழில் தோன்றி இன்றைக்கு இரு நூறு ஆண்டுகளே ஆகின்றன.

மக்களுக்கு இலக்கியத்தின் மூலம் அறிவூட்ட விரும்புபவர்கள் விரும்பி மேற்கொள்ளும் துறை நாடகத் துறையேயாகும். பல பாடல்கள் அல்லது பல பக்க உரைநடை மூலம் புகட்ட முடியாத ஒன்றை ஒரு சிறு நாடகத்தின் மூலம் புகட்டிவிட முடியும் என்பதை இத் தமிழர் என்றோ கண்டு விட்டனர். அதனாலேயே தம் உயிரனைய தமிழ் மொழியையே முத்தமிழ் என்று கூறிட்டு அதில் ஒன்றாக நாடகத் தமிழை வைத்தனர். இந்த நுணுக்கத்தை நன்கறிந்த இப் பெரியார் நாடகத் துறையைத் தம் குறிக்கோளுக்குப் பயன்படுத்திக் கொண்டதில் வியப்பொன்றுமில்லை.

மிகப் பலவாய நாடகங்களையும் கீர்த்தனைகளையும் சுவாமிகள் எழுதியுள்ளார்கள் என்று அறிகிறோம். தமிழ் நாடகத்தின் ஆணி வேராகத் திகழ்ந்தவர்கள் பலரைத் சுவாமிகள் உருவாக்கித் தந்துள்ளார் என்பதையும் அறிகின்றோம். ஒளவை சண்முகம் போன்றோர் தமிழ் நாடக உலகின் முடிமணியாய் விளங்குமாறு செய்த பெரியார் இரண்டு துறைகளில் மேம்பட்டு விளங்கினதை அறிய முடிகிறது. சிறந்த நடிகர்களை ஆக்கிய திறன் முதலாவது; அத்தகைய சிறந்த நடிகர்கள் சிறப்பைப் பெறத்தக்க முறையில் சிறந்த நாடகங்களை ஆக்கிப் படைத்த திறன் இரண்டாவது.

ஓர் இரவில் ஒரு முழு நாடகத்தை எழுதி முடித்த சிறப்பைத் திரு. சண்முகம் அவர்கள் எழுதிய சுவாமிகளின் வரலாற்றிலிருந்து அறிகிறோம். நடிகர்கள் தாம் மேற்கொண்ட பாத்திரத்திற்கேற்ப உரையாடல் அமையவேண்டும். உரை நடையாயினும் பாடலாயினும் இதனை மனத்துட் கொண்டு அமைக்கப்படல் வேண்டும். பாத்திரத்தின் தகுதி, சிறப்பு இடம் என்பவற்றிற்கேற்ப உரையாடல் அமைப்பதில்தான் நாடகாசிரியனின் சிறப்பை அறிய முடிகிறது. உதாரணமாக ஒன்றைக் காணலாம். 'சுலோசனா சதி' என்பது இந்திரசித்தன் பற்றிய நாடகம். முதன்முதலாக இந்திரசித்தன் ஆதிசேடன் மகளாகிய சுலோசனையைக் கண்டு அவளை விரும்பி அவளுடன் உரையாடும் இடத்தில் அடிகளின் கவிதைத் திறம், புலமை நயம் பழைய இலக்கியங்களில் அவரது புலமை ஆகிய அனைத்தையும் காண முடிகிறது.

தன்னை மணக்க விரும்பும் வீரனைக் கண்ட மாத்திரத்தில் அவனுடைய வீரம், வன்மை, கூர்த்த அறிவு, கல்வி நலம் ஆகிய அனைத்தையும் ஒரு நொடியில் அறிந்துவிடுகிறாள் சுலோசனை. அப்படி இருக்கத் தன்னை விரும்பும் அவனைக் கடிய வேண்டுமானால் என்ன கூறிக் கடிவது? 'என் தந்தையார் வந்துவிடுவார், உன்னை வென்று விடுவார்' என்று கூறினால் அது அசம்பாவிதம். எனவே, ஒரு தூய வீரன் எதனைக் கண்டு அஞ்சுவானோ அதனை எடுத்துக்காட்டி அச்சுறுத்துகிறாள். கலித்தொகை என்ற பழந் தமிழ் இலக்கியம் தூயவர்கள், வீரர்கள், பெரியவர்கள் ஆகிய அனைவரும் அஞ்சும் பொருள் ஒன்றை எடுத்துக் கூறுகிறது.

> "கழீஇய காதலராயினும் சான்றோர்
> பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்"

என்று பேசுகிறது. 'எத்துணை ஆசை இருப்பினும், இன்பத்தை விரும்பினும், அந்த இன்பத்தால் பழி வருவதாயின் பெரியோர்கள் விரும்ப மாட்டார்கள்' என்பதே இதன் பொருள். இந்த இலக்கிய நயம் அறிந்த சுவாமிகள் சுலோசனையின் கூற்றாக இதனைப் பெய்கிறார்.

"நல்லோர்கள் எல்லோரும் கொள்ளாத
பொல்லாத
சொல்லோதி மல்லாடி நிற்கிறீர்—தீய
சொல்லோதி மல்லாடி நிற்கிறீர்.
.................................
காதலினால் வரும் தீது பழிதரும்
ஆதலினால் இது கேவலம்."

தன்னைப் பெரியவனாக மதிக்கும் எவனும் தீயவை பேசக் கூடாது என்று குறள் பேசுகிறதன்றோ!

"ஒழுக்கம் உடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"

எனவே, முதலில் 'நீ இங்ஙனம் பேசுவது தீது' என்று எடுத்துக் காட்டுகிறாள் தலைவி. ஆனால், தீமையைப்பற்றி அஞ்சாமல் மேலும் அவன் அவளை நெருங்கியவுடன் சுலோசனை பழி வரும் என்று எடுத்துக் காட்டுகிறாள். இரண்டு அடிகளில் கலித்தொகையும் குறளும் பொதுளக் காண்கிறோம்.

இன்னும் ஓரளவு சென்றவுடன் இந்திரசித்தன் மேலும் சுலோசனையுடன் உரையாடுகிறான். ஆனால், அந்த இடத்தில் சுவாமிகள் அவன் பண்பு முழுவதையும் படம் பிடித்துக் காட்டுகிறார். பெண்களிடம் ஒரு குறை இரந்து நிற்பவன் மறந்தும் செய்யக் கூடாதது ஒன்றுண்டு. அதுவே அவளுடைய பிறந்த இடத்தைக் குறைத்துப் பேசுவதாகும். தன் தாய் தந்தையரைக் குறைத்துப் பேசும் யாரையுமே ஒரு பெண் மன்னிக்க மாட்டாள். அப்படி இருக்கப் புதிதாக ஒருத்தியின் அன்பை வேண்டி நிற்கும் ஒருவன் அவள் தந்தையை இழித்துப் பேசினால் அவனைவிட மமதை அல்லது அகங்காரம் பிடித்த பைத்தியக்காரன் ஒருவன் இருக்க முடியாதன்றோ! என்றாலும் சுலோசனையின் அன்பை யாசிக்கும் இந்திர சித்தன் இதோ பேசுகிறான்.

"ஒரு உலகத்துக்கு இறையோன் உனது தந்தை
மூவுலகுக்கு உரிமை பூண்டு
வரும் இறையோன் எனது தந்தை நின் வாசம்
கீழ் நகரம் வனப்பு மிக்க
பெருமை பெறும் என்வாசம் மேல் நகரம்
எனைக்கூடில் பிழைவராது
திருஉருவம் உடையாளே! என்பின்னே
வருவதற்குத் திடங் கொள்வாயே."

தான் விரும்பும் ஒரு பெண்ணின் முன்னர்த் தன் பெருமையைப் பேசுவதையாவது மன்னிக்கலாம். ஆனால், அவள் பெருமையை, அவள் தந்தை பெருமையை, அவள் நாட்டின் பெருமையைப் பேசுபவன் எத்தகையவன்? "என்னையே நோக்கி நான் இந் நெடும்பகை தேடிக் கொண்டேன்!' என்று கூறும் அகங்கார வடிவினனாகிய இராவணன் மகனாகத் தான் இருக்க முடியும். இந்திரசித்தன் குணாதிசயங்களுள் தலையாக நிற்கும் பண்பு அகங்காரமேயாகும். கம்ப ராமாயணங் கற்ற யாரும் இதனை அறிவர். ஒப்பற்ற நாடகாசிரியராகிய அடிகள் இந்தச் சிறந்த பாடல் மூலம் அந்தப் பாத்திரத்தின் பண்பைச் சாறு பிழிந்து தந்து விடுகிறார்.

இத்துணை அகங்காரமுடையோரும் காமத்தால் கட்டுண்டபொழுது தம் மானத்தைக் காற்றில் பறக்க விட்டு எளியராகி விடுகின்றனர். அகங்காரத்தின் அடிப்படையில் எழும் இது காதலன்று. உண்மைக் காதலில் தலைவியின் நலத்திலேயே கண்ணோட்ட மிருக்கும். அகங்காரத்தில் விளைந்த காமத்தில் தன் வெறி தணிக்கும் ஆசை மட்டுமே எஞ்சுவதால் மானத்தை விட்டேனும் தம் ஆசையைத் தணிக்க முனைகிறான் மனிதன். எனவேதான், காமங் கொண்டவன் மான அவமானம்பற்றிச் சிந்திக்க முற்படுவதில்லை. இக்கருத்தை அடிகளார் சுலோசனையின் விடையில் நன்கு விளக்குகிறார்.

"ஆசை கொண்ட பேர்களுக்கு ரோசமில்லை
என்னும் மொழி அவனிமீது
பேசுகின்ற நிலைமை தன்னை இன்றறிந்தேன்
உம்மிடத்தில் பின்யாது என்றால்
கூசுகின்ற நிலையன்றி யாசகர் போல்
எனைவிரும்பல் குளிக்கச் சேறு
பூசுகின்ற நிலையன்றோ உமது குலமேன்மை
நல்ல புதுமையாமே."

'குலப் பெருமை பேசுகின்ற உன்னிடம் மானம் இல்லை; ஏன் எனில் இவ்வளவு பெருமை பெற்றுள்ள தாகக் கூறும் நீ கேவலம் பெண்ணாகிய என்னிடம் மானத்தைவிட்டு யாசகர்போல் கெஞ்சுகிறாய்' என்று சுலோசனை விடை கூறுகையில் இந்திர சித்தன் அகங்காரத்திற்கு நல்ல அடி தருகின்றார்.

நாடகத்தில் உரையாடல் ஒன்றின் மூலமாகவே பாத்திரங்களின் பண்புகளை விளக்க வேண்டும் என்ற திறனாய்வாளர் இலக்கணத்திற்கு, சுவாமிகள் எத்துணைச் சிறந்த இலக்கியமாகிறார் என்பதற்கு இந்த ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளே போதுமானது.

அவருடைய சொல்லாட்சித் திறத்திற்குச் சிறந்த உதாரணமாய் விளங்குவது,

"மா பாவியோர் கூடி வாழும் மதுரை"

என்ற வாக்கியமாகும். இவ்வாறு திடுக்கிடும் ஓர் அடியைக் கூறி விட்டு, மா என்றால் அலைமகள், பா கலைமகள், வி என்றால் மலைமகள் எனவே இம் மூவருங் கூடி வாழும் மதுரை எனப் பொருள் விரிப்பவரின் புலமை நயத்தை யாரே மறுக்க முடியும்?

ஆசிரியப்பா நடையையும் அடிகள் அழகுறக் கையாண்டுள்ளார். ஒரு தாயும் மகனும் தம்முள் உரையாடும்பொழுது அது எவ்வளவு

சகச பாவத்தில் நடைபெறுகிறது என்பதைக் காட்ட ஆசிரிய நடையை ஓரளவுக்கு விரிந்த மனப்பான்மையில் ஆசிரியர் இதோ கையாள்கிருர். கடோத்கஜனின் தாயும் அபிமன்யுவும் இதோ உரையாடுகின்றனர்.

"வனவாசம் போனவர்கள் சேதிகள் அடிக்கடி
வந்து கொண்டிருக்குதா, வரவில்லையா?
காட்டிலும் கௌரவர் கூட்டிய படையொடு
கலகஞ் செய்தனர் என்று கேள்வியுண்டு
கடவுள் கிருபையினுல் இடரொன்றும் நேரவில்லை
கவலை விடுவாயம்மா மகிழ்ச்சி கொண்டு"

கடிய சொற்களை இங்கே பெய்திருக்க மாட்டார் சிறந்த நாடகாசிரியர். அபிமன்யுவாகிய குழந்தையும் அரக்கப் பெண் ஒருத்தியும் உரையாடும்பொழுது இவ்வாறு எளிய சொற்களைப் பெய்து உரையாடல் அமைக்கும் ஒருவர் நாடக நுணுக்கம் அனைத்தும் அறிந்த ஒப்புயர்வற்ற நாடகாசிரியர் என்று கூறுவதில் தவறொன்றுமில்லை.

திருக்குறளைக் கரைத்துக் குடித்த இப் பெரியார் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் நன்கு தோய்ந்துள்ளார் என்பதை இவர் பாடல்கள் நன்கு வெளிப்படுத்துகின்றன. குறள் மொழிகளை அப்படியே எடுத்தாளுவதிலும் வல்லவர் என்பதைக் கீழ்வரும் பகுதிகள் விளக்கும்.

"பற்றற்ருன் பற்றினைப் பற்றென்று சொன்னதும்
பாவனை உண்மையின் மார்க்கம்"

"சற்றும் சந்தேகமில்லை குறளாகிய
சாத்திரம் ஒன்றுமே போதும்
சர்வகலாசார ஞானம் தரும் அது
தன்னைப் படிப்பாய் எப்போதும்"

அனைத்துலகிற்கும் ஏற்கக்கூடிய ஓர் ஒப்புயர்வற்ற நீதி நூலை வள்ளுவர் வழங்கினுர் என்பதை சர்வகலாசார ஞானம் தரும் என்ற அடியால் எண்பதாண்டுகட்கு முன்னரே ஆங்கிலங் கற்காத இப் பெரியார் கண்டு கூறியது வியப்பினும் வியப்பே.

'தமிழே சிறந்தது' என்ற கீர்த்தனையில் அவருடைய இலக்கணப் புலமையை அறியும் வாய்ப்பு ஏற்படுகிறது.

"திணை பால் காட்டும் விகுதி சிறப்புப் பொதுப் பகுதி
சேர்ந்த விதங்கள் எல்லாம் தென்மொழிக்கே தகுதி"

எனப் பாடிச் செல்கிருர் பெரியார்.

பழங்கால நாடகப் பாடல் என விட்டுவிடாமல் ஆழ்ந்து நோக்கினுல் அவருடைய புலமை வரம்பை அறிந்து மகிழலாம்.

---

## சந்த ஆசிரிய விருத்தம்

தின்னத் திகட்டாத சொன்னய மிகுந்தகனி செந்தமி ழுரைத்தகனி
சிவஞான பேரின் தவஞான முற்றகனி திருவருட் கடாக்ஷக்கனி
என்னகருங் கொண்டாடுந் தென்னகர வாசகனி இசையரசர் வாழ்த்துங்கனி
ஈடுஇணை யற்றகட லாந்திரு மந்தரகனி எழிலார்ந்த தலைமைக்கனி
உன்னதந் திகழுநவ ரசநாவ கக்கனி ஒப்புவமை யற்றகனி
உயர்நடிக மக்களை உய்வித்த ஜீவகனி ஓங்கும்புகழ் சிகரக்கனி
தன்னலம் பேணுத விண்ணுல தேவகனி தாய்த்தமிழ் தலைக்கொடிக்கனி
சாமிசங் கரதாச சர்க்குரு வெனுங்கனி தமிழுலகு போற்றுங்கனியே!

### வாழ்த்துப்பா

அற்புத மாண்பு காணும் அறநெறி முறைகள் வாழி!
கற்பனைத் திறன் காணும் கவர்ந்த காவியச் சொற்கள் வாழி!
நற்புக ழூட்டும் வேத நாதசங் கீதம் வாழி!
சற்குரு சங்கர தாசர் தமிழ் மன்றம் வாழி! வாழி!

சுவாமி சங்கரதாஸ் அவர்களின் முதுமாணவன்,
மதுரை தேசியக்கவி செந்தமிழ் சந்தச்சரபம்
**இராஜா சண்முகதாஸ்.**

# SIRUBBER

## moulded rubber parts for trucks and cars

- SIRUBBER kits for Fiat 1100, Hindustan Ambassador and Landmaster
- SIRUBBER kits for front suspension
- SIRUBBER parts for Fargo and Ashok Leyland Comet trucks and Plymouth car



Sirubber moulded parts are superior in quality and are used as original equipment by leading automobile manufacturers.

Most SIRUBBER parts are made from imported synthetic rubber to the most exacting standards for greater resistance to friction and impact. All SIRUBBER parts are rigorously tested and conform to manufacturers' specifications.



TVS

*For your requirements, contact:*

**SUNDARAM INDUSTRIES PRIVATE LIMITED**

Industrial Estate, Rubber Unit, Madurai-7

si-3961



# பல்கலைக் கழகத்தில் சுவாமிகள்

"ஒரு நாடகம் சிறப்பாக இருக்க வேண்டுமானால் அந்த நாடகத்தில் பங்கு கொள்ளும நடிகர்களிடையே ஒழுங்கும் நியதியும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும்."

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாடக மேடை சீர்குலைந்திருந்த அந்த நாளிலே, இப்படிக் குரல் கொடுத்தார் ஒரு பெரியார். அந்தப் பெரியார் தாம் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்.

அந்த நாளில் 'சுவாமிகள்' என்றாலே போதும். அந்தச் சொல் அவர் ஒருவரைத்தான் குறிக்கும்; அவருடைய நாடக அமைப்புத்திறன்; அந்த அமைப்பிலே காணப்படும் நுணுக்கம்; நாடகப்போக்கிலே நாம் காணும் அழகு; நாடகப் பாத்திரங்களின் வாயிலாகப் பாடல்களிலும் உரையாடல்களிலும் அவர் வெளியிட்ட கருத்துக்கள்; அந்தக் கருத்துக்களால் நாடகம் பார்ப்பவர்கள் அடைந்த பயன் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது சுவாமிகளின் நாடக நல்லிசைப் புலமை நமக்கு நன்றாகத் தெரிகிறது.

## சுவாமிகள் தந்த நாடகச் செல்வம்

சுவாமிகள் சுமார் நாற்பது நாடகங்கள் எழுதியிருக்கிறார். நாடகத்திற்காக அவர் எடுத்துக்கொண்ட கதைகள் பெரும்பாலும் அம்மானைப் பாடல்களாக நம்முடைய தாய்மார்கள் சுவையோடு படித்து வந்த பழங்கதைகள்தாம்.

அபிமன்யு சுந்தரி, பவளக்கொடி, சீமந்தனி, சதியனுசூயா, பிரகலாதன், சிறுத்தொண்டர், வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி, சுலோசன சதி இப்படி எல்லாம் நமக்குத் தெரிந்த நாடகங்கள். இவைகளைத்தவிர வடமொழி நாடகமாகிய மிருச்சகடியையும், ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியத், சிம்பலைன் ஆகிய நாடகங்களையும் மணிமேகலை, பிரபுலிங்க லீலை ஆகிய தமிழ்க் காப்பியக் கதைகளையும் சுவாமிகள் நாடகமாக்கியிருக்கிறார்.

சுவாமிகள் எழுதிய அத்தனை நாடகங்களும் அரங்கில் ஆயிரக்கணக்கில் நடிக்கப்பெற்றவையென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## பாடல் வகைகள்

சுவாமிகளின் நாடகங்களில் வெண்பா, கலித்துறை, விருத்தம், சந்தம், சிந்து, வண்ணம், ஒரடி கும்மி, கலிவெண்பா, தாழிசை, கீர்த்தனை இப்படிப் பலவகைப்பட்ட பாடல்களும் சிறுபகுதி உரையாடல்களும் நிறைந்திருக்கும். அப்போது உரைநடை அதிகமாக வராத காலமாதலால், பெரும்பகுதி பாடல்களாகவே யிருக்கும்.

சுவாமிகள் நல்ல இசை ஞானமுள்ளவர். சந்தம், வண்ணம் இவற்றைப் பாடுவதில் திறமை பெற்றவர். தாளவிந்நியாசங்களை நன்கு அறிந்தவர். எனவே, தாமாகவே இசைப்பண்களை அமைத்துக்கொள்ளவும் மற்றவர் சொல்லும் மெட்டுக்களை அறிந்து கொள்ளவும் அவரால் முடிந்தது.

நவரசம் : அதாவது காதல், வீரம், சிரிப்பு, கோபம், வியப்பு, இழிப்பு, சோகம், பயம், சாந்தம் இப்படி ஒன்பது சுவைகள் சொல்லப்படுகின்றன அல்லவா? இந்த நடிப்புச் சுவை குன்றாமல் அந்தந்த கட்டத்திற்கு ஏற்றவாறு பாடல்களை அமைக்கும் அதிசயத் திறமை சுவாமிகளிடம் இருந்தது. பாட்டின் மெட்டும் அதில் அமையும் சொற்களும் பாத்திரத்தின் உணர்ச்சி பாவத்தை வெளிப்படுத்துவனவாகவேயிருக்கும்.

கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, நாலடியார், திருக்குறள், பழமொழிகள் இவையெல்லாம் சுவாமிகளின் பாடல்களிலும் வசனங்களிலும் பரந்து கிடப்பதைக் காணலாம். சங்க நூல்கள் அத்தனையும் அவருக்கு மனப்பாடம்.

சுவாமிகளின் எந்த நாடகத்தை யெடுத்துக் கொண்டாலும் அதிலே தரும நெறி வலியுறுத்தப் பெற்றிருக்கும். சுவாமிகள் உணர்ச்சிக்கடல். மிகச் சிறந்த நடிகராக இருந்து சபையோரை உணர்ச்சி வசப்படுத்தியவர். எனவே, அவருடைய நாடகப் பாடல்களில் உணர்ச்சி முதன்மை பெற்றிருக்கும்.

ஒரே நாள் இரவில் நான்கு மணி நேரம் நடைபெறக்கூடிய ஒரு நாடகம் முழுவதையும் அடித்தல் திருத்தல் இல்லாமல் பாடல்கள் வசனங்களோடு எழுதி முடித்த மகத்தான தெய்வீக ஆற்றல் பெற்றவர் சங்கரதாஸ் சுவாமிகள்.

சுவாமிகள் இயற்றியருளிய நாடகங்கள்தாம் தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு அடிப்படைச் செல்வங்கள் என்று சொல்லலாம். இந்த நாடகங்களே சென்ற முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழ் நாடக மேடைக் கலையை அழிந்துபோகாமல் காப்பாற்றி வந்துள்ளன.

[1959இல் கலைஞர் தி. க. ஷண்முகம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் ஒரு பகுதி.]



# தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் சுவாமிகள்

[1867-1922] தமிழ் நாடகாசிரியர். தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆவணி 22ம் தேதி மறவர் குடியிற் பிறந்தார். இவர் தந்தையார் தாமோதரக் கணக்குப்பிள்ளை இராமாயணப் புலவரெனச் சிறப்புப் பெற்றவர். அவரிடமும், பழனி தண்டபாணி சுவாமிகளிடமும் தமிழ்க் கல்வி பயின்றார். தூத்துக்குடியில் உப்புப் பண்டக சாலையில் சிறிது காலம் கணக்கராக இருந்தார். தம் 24ம் வயதில் நாடகத் துறையிற் சேர்ந்தார். இரணியன், இராவணன், எமதருமன் போன்ற வேடங்களைப் புனைந்து நடித்தார். சிறிது காலம் நாடகங்களிற் சூத்திரதாராகவும் இருந்தார். ஒரு முறை வாழ்க்கையில் வெறுப்புற்றுத் துறவு மேற்கொண்டு யாத்திரை செய்துவந்ததால் சுவாமிகள் என அழைக்கப்பட்டார்.

புதுக்கோட்டை மகா வித்துவான் கஞ்சிரா மான்பூண்டியா பிள்ளையின் விருப்பப்படி மீண்டும் நாடகத் துறையில் ஈடுபட்டார்.

இசைப் பாக்களான வண்ணம், சந்தம் ஆகியவற்றைப் பாடுவதில் இவர் திறமையுடையவர். சமரச சன்மார்க்க நாடக சபை, தத்துவ மீனலோசனி வித்துவ பால சபா ஆகியவற்றை இவர் நடத்தினர். மதுரை பால மீன ரஞ்சனி சபையிலே நடிப்பாசிரியராக இருந்தார்.

இவரிடம் பயின்றவர்கள் பலர் சிறந்த நடிகர்களாகவுள்ளனர். ஓரிரவிலேயே ஒரு நாடகத்தைத் தம் சொந்தக் கற்பனையாலெழுதி முடிக்கும் ஆற்றல் மிக்கவரென இவருடைய மாணவர்கள் கூறுவர். இவர் ''கோவலன்'', ''வள்ளி திருமணம்'', ''பவளக்கொடி'' முதலிய நாடகங்களை எழுதியுள்ளார். 13-11-1922ல் புதுச்சேரியில் காலமானர்.

—கலைக்களஞ்சியம் தொகுதி: 4; பக். 363


*Compliments of*

# VUMMIDIARS

DIAMONDS, GOLD JEWELLERY, SILVERWARE

Main Show Rooms :

**23-25, N. S. C. Bose Road,**
**MADRAS-1.**

Branch Show Rooms :

**L. I. C. Buildings,**
**Mount Road,**
**MADRAS-2.**




IS:1489

*Sankar Brand Portland Pozzolana Cement has now been awarded the ISI certification Mark— yet another recognition of its quality.*

*Both Sankar Brand Portland Cement and Portland Pozzolana Cement are in great demand from building contractors and engineers for a variety of jobs which call for safety, strength and stability.*

*Portland Pozzolana Cement can be used for all purposes for which Portland Cement is used. It is particularly suitable for mass concrete and marine structures.*

***India Cements Limited have answered the call for more cement production In the last two decades output has gone up steadily from a hundred thousand to a million tonnes a year.***

**THE INDIA CEMENTS LIMITED**
Regd. Office: "Dhun Building", Madras-2.
Factories: Sankarnagar and Sankari.

PDS IC 839A

# Look of Elegance in the Drawing room



Co-optex

**HANDLOOM FABRICS**

**DRESS & FURNISHINGS**

*Available at all our selling units*

**The Tamil Nadu (Madras State)**
**Handloom Weavers' Co-operative Society Limited.**
**34/1-A, Pantheon Road, Egmore, Madras-8.**

## சென்னை இராஜ்ய

# கூட்டுறவு பாங்கு லிமிடெட்

### 271, அங்கப்ப நாயக்கன் தெரு

**சென்னை-1**

தபால் பெட்டி எண் : 226

தொலை பேசி எண் : 22766, 22767, 24589

☆

எங்கள் பாங்கில் நீங்கள் போடும்
டிபாசிட்டுகள் நாட்டின் பொருளாதார
முன்னேற்றத்திற்கும், அடிப்படையான
விவசாயத்திற்கும் விவசாயத்
தொழில்களுக்கும் உதவி செய்யும்

---

**Season Deposits:** ரூ. 1000-ம் அதற்கு மேலும்—

| | | | வருடத்திற்கு |
|---|---|---|---|
| 15 நாட்கள் முதல் | 45 நாட்கள் வரை | .......... | 1½% |
| 46 ,, | 90 ,, | .......... | 3% |

**Fixed Deposits:** ரூ. 100-ம் அதற்கு மேலும்—

| | | | | |
|---|---|---|---|---|
| 91 நாட்களும் | அதற்கு மேலும் | 6 மாதங்களுக்குள்ளாக | .... | 5% |
| 6 மாதங்களும் | ,, | 12 ,, | .... | 5½% |
| 12 ,, | ,, | 2 வருடங்களுக்குள்ளாக | ... | 6¼% |
| 2 வருடங்களும் | ,, | 3 ,, | ... | 6½% |
| 3 ,, | ,, | 5 ,, | ... | 6¾% |
| 5 ,, | ,, | 7 ,, | ... | 7¼% |
| 7 வருடங்களும் அதற்கு மேலும் | | | .............. | 7½% |

**Deposits:** தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ............ | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5/-ம் அதன் மடங்குகளும் ..... | 62 | 128 | 198·50 | 273 | 355 | 442 | 535 |

---

ஆர். கனகசபை எம்.எல்.ஏ.,
தலைவர்.

டி. வர்த்தமானன்,
காரியதரிசி.

# நாடக முன்னேற்றம்

ஆர். வெங்கட்ராமன்
மத்திய அரசின் திட்டக்குழு உறுப்பினர்



நம்முடைய நாட்டில் இன்று கலைத்துறையில் நல்ல வளர்ச்சிகளெல்லாம் ஏற்பட்டு வருவதை நாம் பார்க்கின்றோம். இந்த வளர்ச்சி ஓரளவு இன்னும் நவீனமான முறையில்—நவீன உலக அரங்கிலே நடக்கின்ற வகையில் இங்கும் ஏற்பட வேண்டும் என்ற எண்ணங்களைக் கொண்டவன் நான்.

நம்முடைய வளர்ச்சி இன்று உலகத்தில் ஏற்படுகின்ற வளர்ச்சிக்கு ஒத்ததாக—அதைத் தழுவியதாக இருந்தால்தான் பிற நாட்டில் இருப்பவர்கள் நம்மைப் பார்த்து பாராட்டுவார்கள்; போற்றுவார்கள்.

"திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல வேண்டும்"

என்று பாரதி கூறியதுபோல, கலை வளர்ச்சியின் மூலம் பிற நாட்டாருடைய போற்றுதலையும் நாம் பெற வேண்டும்.

நான் சென்று வந்த பிற நாடுகளில் இவ்வாறு மற்ற நாட்டினரின் போற்றுதலைப் பெறுவதற்காக பெரு முயற்சிகள் செய்கின்றார்கள். இத்தாலி தேசத்தில் மிகச் சிறந்த 'மிலான்' நகரத்தில் 'லாக்காலா' என்ற ஒரு பெரிய அரங்கு இருக்கிறது. அந்த அரங்கிலே ஆண்டு தோறும் 'ஆபரா'க்கள் நடக்கின்றன. அதாவது நாடகம் இசையுடன் அமைந்ததாக இருக்கும்.—

இந்த இசை நாடகங்கள் ஒவ்வொரு நாட்டிலும் எந்த முறையிலே நடைபெறுகிறது என்பதைப் பார்த்து, ஆராய்ந்து அதன் மூலம் தங்களை வளர்த்துக்கொண்டு இத்தாலி தேசத்தினுடைய மிகப் புராதனமான 'ஆபரா' அவற்றை எல்லாம் விட நன்றாக அமைய வேண்டும் என்பதற்காக மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் வருஷத்துக்கு ஒருமுறை இத்தாலி தேசத்திலுள்ள 'லாக்காலா' அரங்கில் இந்த இசை நாடகங்கள் நடைபெறும் போது, உலகத்தின் பல பகுதிகளிலும் உள்ள ரசிகர்கள் அனைவரும் சென்று பார்க்கும்படியான ஒரு நிலையை உண்டாக்கி இருக்கிறார்கள்.

நான் அங்கு சென்ற பொழுது பல நாட்டு மக்களைப் பார்த்தேன். அவர்களை விசாரித்த போது, ஒவ்வொருவரும் தங்கள் யாத்திரையின் போதே இந்த ஊரில் வந்து இரண்டு நாள் தங்கி, 'ஆபரா'வைப் பார்ப்பதற்குத் திட்டமிட்டே வந்திருப்பதாக அறிந்தேன்.

அதே போல ரஷ்ய நாட்டிற்குச் சென்ற போது அங்கே நல்ல 'பாலே' நடனம் நடப்பதைப் பார்த்தேன்.

மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய 'ரோமியோ ஜூலியத்'' என்ற நாடகத்தை அவர்கள் 'பாலே' நடனமாக அமைத்திருக்கிறார்கள் ரஷ்ய நாட்டிலே எத்தனையோ நாடகங்கள் இருக்கின்றன. எழுத்தாளர்களுக்குப் பஞ்சமே இல்லை. என்றாலும் அவர்கள் தங்கள் 'பாலே' நடனத்திற்கு ஷேக்ஸ்பியரின் 'ரோமியோ ஜூலியத்' நாடகத்தை எடுத்துக்கொண்டது அவர்களுடைய பரந்த மனப் போக்கைக் காட்டுகிறது. அதைப் போல் நல்ல அம்சங்கள்—எந்த நாட்டைச் சேர்ந்தவையாயிருந்தாலும் அவற்றை நம்முடைய கலையாக இணைத்துக்கொண்டு முன்னேறவேண்டும் என்பதே என் கருத்து.

சினிமாவினால் நாடகம் அழிந்துவிடும் என்று சொன்னவர்களெல்லாம் இன்றைக்குப் பொய்த்து விட்டார்கள், உலகத்தில் எந்த நாட்டில் சென்று பார்த்தாலும், சினிமாக்கள் எவ்வளவு இருந்தாலும் சரி, வீட்டிலே 'டெலிவிஷன்' இருந்தாலும் சரி, நாடகத்திலே கிடைக்கக்கூடிய ஒரு மன மகிழ்ச்சி—சந்தோஷம் எந்த சினிமாவிலும் கிடைக்காது என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நான் ஏதோ சினிமாவைக் குறை சொல்கிறேன் என்று நினைக்கவேண்டாம். உயிருடன், துடிப்புடன் நம் முன்னால் நின்று நடிக்கின்ற ஒரு கட்டத்தையும், திரையிலே நிழல் போல் நின்று கொண்டு ஆடுவதையும் நீங்கள் ஒரு நிமிஷம் மனதினால் சித்தரித்துப் பார்த்தீர்களானால் அதில் இருக்கின்ற பாகுபாடு நன்றாகத் தெரியும். அதனால் தான் இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளிலே நாடகத்தைச் சிறப்பாக எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவர்கள் பெரு முயற்சி எடுத்திருக்கின்றார்கள்.

சென்னையில் பல வாரங்கள் நடைபெற்ற "மை பேர் லேடி" என்ற படத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது பெர்னாட்ஷா எழுதிய "பிக்மாலியன்" என்ற கதையைத் தழுவிய படம். எனக்குத் தெரிந்து அமெரிக்

காவில் நியூயார்க் நகரத்தில் சரியாக முப்பது மாதம் இந்த நாடகம் இடை விடாமல் தினந்தோறும் நடந்தது. அந்த முப்பதாவது மாதத்தில் கூட அந்த நாடகத்திற்கு டிக்கட் கிடைக்கவில்லை, அந்த அளவுக்கு ரசிகர்களின் மனதை நாடகம் கவர்ந்தது. எப்படிக் கவர்ந்தது ? இங்கிலாந்து தேசத்தில் எழுதிய நாடகம் அது. இங்கிலாந்தில் இருக்கக் கூடிய சமூகத்தைத் தழுவி எழுதப் பட்டது. ஆங்கில பாஷையை கண்டபடி பேசுகிறார்கள் என்று குற்றச்சாட்டுச் சொல்லி நடிக் கின்ற ஒரு நாடகம்.

அமெரிக்காவிலே பெருவாரியாக மக்கள் பார்க்கும் வகையில்—அது படமாக ஓட ஆரம்பித்த பிறகும் கூட நாடகமாக மாதக் கணக்கில் பார்த்து மகிழ்ந்தார்கள் என்றால் அவர்களுடைய ரசனையை நாம் பாராட்டியே தீர வேண்டும்.

நம்முடைய நாட்டிலும் நவீன யந்திர சாதனங் களைப் பயன் படுத்தி நாடகக் கலையை இன்னும் சிறப் படையச் செய்ய வேண்டும் மேல் நாடுகளில் இருப் பதைப் போல சுழலுகின்ற மேடைகளை இங்கே நாம் அமைக்க வேண்டும். அப்போது தான் நாடகம் வேக மாக 'டெம்போ' என்று சொல்லுவார்களே, அந்த உணர்ச்சிவேகம் குறையாமல் இருக்கும்.

மேல் நாடுகளில் பல நாடகங்களைப் பார்த்தேன் நாடகக் கதைகள் நம்மைவிட சிறப்பாக இருக்கின்றன என்று சொல்வதற்கில்லை. என்னுடைய கருத்தில், இரண்டு வருஷம், மூன்று வருஷம் என்று நாடகங்கள் அங்கு நடப்பதற்கு முக்கிய காரணம், நவீன யந்திர சாதன வசதிகளைக் கொண்ட அவர்களுடைய நாடக அரங்கு என்றுதான் நினைக்கிறேன். நாடகத்திற்கு விறு விறுப்புக் கொடுப்பதும், திடீர் திடீர் என்று புதிய புதிய காட்சிகளெல்லாம் நம் கண்முன் தோன்றி மறைவதும்—அந்த நவீன நாடக அரங்கிற்குரிய பெருமை என்றே கருதுகிறேன்.

நாடகத் துறையில் நாம் முன்னேற்ற மடைவதற்கு—அதைப் போன்ற நாடக மேடைகளை இங்கேயும் அமைப்பதற்கு நாம் பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

நல்ல நாடகங்களின் மூலம் உயர்ந்த லட்சியங்களை மக்களிடம் பரப்ப வேண்டும் கலைகளின் மூலம் தான் உண்மையான மனமாறுதலைக் கொண்டு வர முடியும்—என்று உறுதியாக நம்பக் கூடியவன் நான், எனவே. நாடகக் கலை நல்ல நாடக அரங்குகளை அமைப்பதன் மூலம் மேன்மேலும் வளர்ச்சி பெற்று, தேசத்திற்கும்—சமுதாயத்திற்கும் நன்மையைச் செய்ய வேண்டு மென்று வாழ்த்துகிறேன்.

நாடகக்கலை மக்கட் சமுதாய முன்னேற்றத்திற்கு மிகவும் வேண்டப்படும் ஒன்று. எனவே, நாடகாசிரியன் ஒரு குறிக்கோள் இல்லாதவனாக இருப்பின் அவன் நாடகம் பயனற்றதாகும்.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம்



இந்த அதிர்ஷ்ட நோட்டு செல்லுமிடம்

# I.O.B.

அங்கே இது பெருகிப் பெருகி என் வளமான எதிர்காலத்திற்கு உதவும்.

சில கரன்சி நோட்டுகள் அதிர்ஷ்டம் மிக்கவை போலும். அவை உடனே செலவாகிவிடுவதில்லை. அவை கவனமாகச் சேகரிக்கப் பட்டு, பாதுகாப்புக்கு I.O.B.யை அடைகின்றன. நீங்களும் I.O.B. யில் வைக்க அதிர்ஷ்ட நோட்டு சேகரிக்கத் தொடங்குங்களேன். எப்படியா? உங்களுக்கு அவசரமாகத் தேவையில்லாத எந்தப் பொருளையும் வாங்குவதைத் தள்ளிப் போட்டால் போதுமே. உங்கள் அதிர்ஷ்ட நோட்டுகள் வளம் பெருக்கும். இன்றும் சரி எதிர்காலத்திலும் தான். சேவிங்ஸ் மற்றும் ரெகரிங் டெபாசிட் கணக்குகளுக்கு I.O.B. அதிக வட்டி விகிதம் அளிக்கிறது.

I.O.B.—பணிசெய் அளவு திறனுண்டு உம்முடன் பழகும் அளவு பணிவுண்டு

## இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

தலைமை காரியாலயம்:
151, மவுண்ட் ரோடு, மதராஸ்-2
M. Ct. முத்தையா, சேர்மன்.
G. லக்ஷ்மிநாராயணன், ஜெனரல் மானேஜர்

iob-3634

# சங்கப்புலவர் — சங்கரதாசர்!

கவிஞர் கு. மா. பாலசுப்பிரமணியம்

இயலிசை நாடகம் என்றுமுத் தமிழாய்
நயமுறக் கூறினர் நன்னூற் புலவோர்!
இயற்றமிழ் பேச்சாம்; இசைத்தமிழ் பண்ணும்;
பயில்தரு நடிப்பின் பாவமே நாடகம்!
உயரிய பாவமோ ஒன்பது சுவையாய்
இயலுதல் முடிவென ஏற்றனர் முன்னோர்!
இயலிசை 'நாடகம்' என்னும்முத் தமிழைப்
பயனுறச் சேர்ப்பதே பண்டைநாள் கூத்தாம்!
…… அவ்விதம்,
முத்தமி ழமுதம் மொய்த்திடு நாடகம்
எத்தனை அத்தனை எழுதிய தன்றியும்,
சிற்றில் பருவச் சிறுவரைச் சேர்த்துக்
கற்றுத் தந்தும், கலைவளர் மன்றில்
முற்றிய ஔவை, கண்ணகி யாக்கி
உற்றிடுந் திறனால் ஒளிபெறச் செய்து
வெற்றி கொள் சங்கர தாசராம் வீரர்
பெற்றதாய் மொழிக்கே பெரும்பணி செய்தார்!
…… ஆதலின்,
சங்கப்புலவரின் சமமென நின்றே
சங்கர தாசரும் சாதனை கண்டார்!
அங்கமும் கூடும் அழிந்து பட்டாலும்
பொங்கிடு தமிழாய்ப் புகழுடல் கொண்டார்!
நம்குலத் தோன்றல்; நாடகத் தந்தை;
இங்குநூ றுண்டினை எய்தினர்; இந்நாள்
எங்கும் கலைஞர் ஏற்றமாய்ச் — —
சங்கம் முழக்கும் சரித்திரப் பொன்னாள்!

ஈழத் திருநாட்டிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பெருங்குடி மக்களின் சொந்த ஏடு

# "செய்தி"

(வாரம் இரு முறை)

☆


"செய்தி"

தபால் பெட்டி - 5

கண்டி (இலங்கை)

தொலை பேசி எண் : 7281 & 7625

# சுவாமி அவர்களின் அருள் மழை

நகைச்சுவை நடிகர் பி. டி. சம்பந்தம்



அடே ஆதிமூலம்! எங்கடா அவன் சுடலை முத்து ?

(சுவாமி அவர்களின் கேள்வி)

அவன் கொள்ளைக்கு போறேண்ணு சொல்லிட்டு இப்பத்தான் போனான், சாமி.

(இது ஆதிமூலத்தின் பதில்)

**சுவாமி :** ரொம்ப நல்லவனச்சேடா அவன்? கொள்ளைக்குப் போகமாட்டானே.

(வாயார கடகடவென்று சிரித்தே விட்டான் ஆதிமூலம். சுவாமியும் சிரித்து விட்டார். மேலும் சிரித்துக் கொண்டே கேட்கிறார்) "ஏண்டா சிரிக்கிறே ?"

**ஆதி :** ஒரொரு நாளைக்கு மூணு வேளை கூட போறான்.

**சுவாமி :** எங்கே போறான் ?

**ஆதி :** கொள்ளைக்கு.

**சுவாமி :** (சிரித்துக் கொண்டே) அவன் போறது கொள்ளைக்கி இல்லேடா. கொல்லைக் குன்னு சொல்லு.

இதைக் கேட்டதும் ஆதிமூலம் நகைப்பும் நாணமும் கொண்ட முகத்துடன் தலைகுனிந்த வண்ணம், "ஆமாம் சாமி, கொல்லைக்கி போயிருக்கிறான்."

இவ்வண்ணம் நிகழ்ந்த பிறகு மூன்று மாதங்களுக்குள் சுவாமி அவர்களின் மழை வண்ணத் தருளினாலே ஆதிமூலத்தை தமிழ் உச்சரிப்பிலே எமப்பயலாக்கி விட்டார். அதாவது சத்தியவான் சாவித்திரி நாடகத்திலே எமன் பாத்திரமேற்று 'நாடுமிரு நாலு திசையாளுகிற பாலர்களில் நானொருவனாக எனையே...' என்ற லகர ளகரங்கள் நிறைந்ததும், கரடு முரடான பதங்கள் அமைந்ததுமான பாட்டுக்களையும் வசனங்களையுப் தவறில்லாமல் உச்சரிக்கும் திறமுடையோனாக ஆக்கிவிட்டார் சுவாமி அவர்கள் என்றால் அது முழு உண்மையாகும். இது மட்டுமா ?

ஆழ் கடலினின்றெடுத்த முத்துக்களும், பவளங்களும் ராஜாக்களுக்கு அணிகலனாவது போல,—பள்ளிக் கல்வியறிவில்லாத ஆதிமூலம், சுவாமி அவர்களின் பாடல்களையும் வசனங்களையும் பாடம் செய்த காரணத்தால் நாளடைவில் கவி புனையும் பாவலனாகி விட்டார்.

அக்காலத்துப் பெரிய நடிகர்களும் பாவலன் ஆதிமூலம் ஆக்கிய பாடல்களை மேடைமீது பாடிப் புகழ் பெற்றார்கள் என்பதுவும் உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

# எந்நாளும் இருப்பவர் சாமி

☆ ☆ ☆ கொத்தமங்கலம் சுப்பு

தெம்மாங்கு

சாமி பாட்டுப் பாட்டு— அது
தமிழன் போகும் ரோட்டு
தரையிலிருந்து கேட்டு—நான்
'சபாஷ்' என்ற பாட்டு

பூமியிலே பூ மணக்கும்
பொதிய மலைத் தென்னலடி
சாமிகளின் பாட்டு எல்லாம்
சன்னச் சம்பாச் செந்நெலடி

உள்ளே கருணை துளிர்க்கும்—நம்ப
உடம்புக்கு வலுக் கொடுக்கும்
சங்கரதாஸர் பாடல்—இனிய
சக்கரை பாலும் கூடல்

ஆகாசம் பளபளக்க
ஆணிமுத்து டாலடிக்கும்
பாயாசம் போலி னிக்கும்
பாடின வாய் தேன் மணக்கும்

தூத்திக் கொழிச்ச முத்து—அது
தூத்துக் குடியின் சொத்து
சாத்துக் குடியின் சத்து—கேட்ட
சனங்கள் தமிழ்ப் பித்து

உப்பு மண்டி யோரத்திலே
ஒத்தை மண்டிக் காரரடி
உள்ளத்தில் பாத்தி கட்டி
உப் பெடுக்கும் தீரரடி

உணர்ச்சி கொடுக்கும் பாட்டு—இந்த
உலகத்துக்கது ரோட்டு
உள்ளந் தன்னைக் காக்க—போட்ட
உருக்குக் கம்பி கேட்டு

கப்பல் விட்ட சிதம்பரனார்
கடற் கரையில் வீசும் ஒளி
கடலில் தவிப்பவர்க்கு
கைகாட்டி அழைக்கும் ஒளி

பேரில்லா மரமிருக்கும்
பெரிய தொரு நகரத்திலே
வேரில் பழுத்த பலா
வீசுதடி தமிழ் வாசம்

சங்கு குளிக்கிற—தென்
சமுத்திரக் கரை யோரம்
சங்கத் தமிழ் முழங்கும்
சங்கம் ஒதுங்கியது

சீவக சிந்தாமணியும்
செலம்பும், திருக்குறளும்
பாலூடு போட்டு நெஞ்சப்
பாட்டெல்லாம் பட்டுகளாம்

பாமரனும் பண்டிதனும்
பச்சைப் புள்ளைக் காரிகளும்
பூ மரத்தைச் சுத்துகின்ற
பொன்னு வண்டாய் ஆனமடி

சோபா, ச்சேரு, பெஞ்சு,—தரை
சுவைக்கும் வெள்ளரிப் பிஞ்சு
பூ பாலருக்கும் கோபாலருக்கும்
புரிகிற தமிழ் கொஞ்சும்

நாடகப் பாட்டாலே
நல்லதையே ஆக்குமென்று
ஏடெடுத்த கவிராயன்
எல்லார்க்கும் சொன்னவரு

பணத்தாலே எடை போட்டால்
பாட்டுக்கு ஈனமென்று
குணத்தாலே எடை போட்ட
கொற்றவனார் பாடலடி

போட்டுத் துப்பும் போயிலை போல்
பாட்டெழுதிப் போடாமல்
பொன்னை பாட்டெழுதி
எந்நாளும் இருப்பவரு

காசுக்குப் பாட்டெழுதி
கற்பனையை அடகு வைக்கும்
மாசுக்கு அஞ்சித் தமிழ்
மானத்தைக் காத்த வரு

கூத்தாடிக் கூட்ட மென்று
குத்தங்குறை சொன்னவர் வாய்
ஆத்தாடி புலவரென்று
அஞ்சிப் பேச வைத்தவரு

நாடகத்தில் சேர்ந்த வரை
நாவலர்கள் ஆக்கி வைத்து
பாடல் உரையாடல்
பண்டிதராய்ச் செய்த வரு

சங்கர தாஸர் பாட்டு—அது
சங்கத் தமிழின் ரோட்டு
பொங்கி வந்த பாட்டு—பசும்
பொன்னடிச்ச நோட்டு.



விடிந்தால் லதாவுக்குப் பிறந்த நாள். பல சிநேகிதிகளுக்கு அழைப்பு அனுப்பியாகிவிட்டது. ஆனால் பத்மாவுக்கு இப்போது ஒரு பெரிய பிரச்னை!
மழை நாள். கிடைக்கும் விறகு ஒரே ஈரம். விலையும் ஏறியபடி இருக்கிறது!
கவலையோடு இருந்த பத்மாவைக் காண வருகிறாள் எதிர்வீட்டு கீதா.
கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்க வேண்டாமே, பத்மா! உனக்கு இப்போது என்ன கவலை?
ஒரே கவலைதான் கீதா! சமையல் அடுப்புக்குக் கிடைப்பது பச்சை விறகு தான். அதுவும் ஒரேயடியாக விலையேறியிருக்கிறதே. எப்படி சமாளிக்கப் போகிறேனோ!
பூ! இதற்கா கவலைப் படுகிறாய்! கையிலே, வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறாயே. 'லீக்கோ' இருக்கக் கவலை ஏன்?
நானும் 'லீக்கோவைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் வாங்கிப் பார்த்ததில்லை.
'லீக்கோ' குறைந்த விலையுள்ளது அதிசிக்கனமானது, புகையற்ற எரிபொருள். எல்லா ரக கரி அடுப்புக்கும் உகந்தது. சமையலும் சீக்கிரமாக முடிந்துவிடும். ஏன் நாளை விருந்தை 'லீக்கோ'வை வைத்து நடத்திப் பாரேன்.
கீதா, இந்தா இன்னொரு டம்ளர் பாயசம். உன் யோசனைக்கு ரொம்ப நன்றி. எனக்கும் திருப்தி. எல்லோருக்கும் சந்தோஷம். இனி எப்போதும் 'லீக்கோ'வை வாங்நத் தீர்மானித்து விட்டேன்.
LECO
லீக்கோ
நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி-1
FDSNLC 735 TMA

## நினைவை விட்டு நீங்காத பழம் பெரும் நடிக நடிகையர்




1. பால குருநாதப் பிள்ளை
2. ராஜா ஷண்முக தாஸ்
3. டி. கே. சங்கரன்
   (*சந்திரகாந்தா நாடகத்தில்*)
4. எம். ஜி. நடராஜப் பிள்ளை
5. நாகரத்தினம்பாள்
6. பாலாமணி அம்மாள்,
   T. D. ருக்குமணியம்மாள்
7. D. R. முத்துலட்சுமி
8. தாணுவாம்பாள் (*அரச வேடத்தில்*)
9. ரங்கபாஷ்யம் நாயுடு, ராஜாமணி அம்மாள்
10. எஸ். பி. கமலாம்பாள்

## நினைவை விட்டு நீங்காத பழம் பெரும் நடிக நடிகையர்



1. சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை
2. டி. எஸ். கண்ணுசாமி பிள்ளை
   (டி. கே எஸ். சகோதரர்களின் தந்தையார்)
3. கிட்டுப் பிள்ளை (அரச வேடம்)
4. ஆஞ்சநேய கோவிந்தசாமி நாயுடு
   (நாடகக் குழு)
   (வண்ணக் களஞ்சியம் புதுவை.)
5. வி. ஆர். ரத்தினசாமி நாயுடு
6. ஐ. கிருஷ்ணமாச்சாரி
7. அல்லி பரமேசுவர அய்யர்
8. ஜி. எஸ். முனுசாமி நாயுடு
   (அரிச்சந்திராவில்)
9. தஞ்சை ஜெகந்நாத ராவ்
10. ஆஞ்சநேய கோவிந்தசாமி நாயுடு

## நினைவை விட்டு நீங்காத பழம் பெரும் நடிக நடிகையர்




1. அரிச்சந்திரனுக மூக்க வேளார்
2. சுப்பையா ஆச்சாரி, சிதம்பர ஆச்சாரி
   புதுவை சாமிநாத ஆச்சாரி
   (பெண் வேடம்),
   வடிவேலு ஆச்சாரி (பெண் வேடம்).
3. பி. எஸ், வேலு நாயர்,
   கே. எஸ். அனந்தநாராயணன் *(மனோகரனில்)*
4. பி. யு. சின்னப்பா
5. ஹார்மோனியம் கே. எஸ். தேவுடு அய்யர்
6. ராஜா எம். ஆர். கோவிந்தசாமி பிள்ளை
7. டி. கே. முத்துசாமி
   *('கதரின் வெற்றி'யில்)*
8. அங்கமுத்து அம்மாள்.

## நினைவை விட்டு நீங்காத பழம் பெரும் நடிக நடிகையர்




1. சங்கரலிங்க நாடார் *(நாடக ஆசிரியர்)*
2. புஷ்ப லீலாவதி *(நந்தனர் வேடம்)*
3. பி. பி. ரெங்காச்சாரி
4. எஸ். ஆர். கமலம்
5. எம். கே. தியாகராஜ பாகவதர்
6. எஸ். ஆர். ஜானகி
7. சி. எஸ். இரத்தினபாய்
8. எஸ். டி. சுப்புலட்சுமி
9. எஸ். எஸ். சாப்ஜான் *(பெண் வேடத்தில்)*
10. டி. பி. ராஜலட்சுமி

9776-

## நினைவை விட்டு நீங்காத் பழம் பெரும் நடிக நடிகையர்



1. பைரவ சுந்தரம் பிள்ளை *(அரிச்சந்திராவில்)*
2. வி, பி. ஜானகி அம்மாள் *(இராமாயணத்தில்)*
   ஆஞ்சநேய சாரங்கபாணி நாயுடு
3. கே. எஸ், அனந்தநாராயண அய்யர் *(ஞானசௌந்தரியில்)*
4. எஸ். ஜி. கிட்டப்பா *(பெண் வேடத்தில்)*
5. வி. ஏ. செல்லப்பா
6. சக்திவேல் ஆச்சாரி
7. எம், எஸ். தாமோதர ராவ்
8. அனந்தலட்சுமி
9. ஆர்மோனியம் வாசுதேவ நாயர்

## நினைவை விட்டு நீங்காத பழம் பெரும் நடிக நடிகையர்



1. எஸ். எஸ். விசுவநாத தாஸ்
2. பார்ஸி லேடி எம். ஜி. தேவராஜு (பெண் வேடம்)
3. தென்காசி - சண்முகசுந்தரப் புலவர்
4. எல். நாராயண ராவ்
5. டி. எம். கமலவேணி
6. எஸ். வி. சுப்பையா பாகவதர்
7. வேலுப் பிள்ளை
8. மனமோகன அரங்கசாமி நாயுடு (அரச வேடம்)
9. கள்ளவேடம் நடராஜ ஆச்சாரி

## நினைவை விட்டு நீங்காத பழம் பெரும் நடிக நடிகையர்



1. சீனிவாசப் பிள்ளை
2. மனமோகன அரங்கசாமி நாயுடு நாடகக் குழு
3. முருகேச நாயக்கர் *(ஆலந்தூர் கம்பெனி நடிகர்)*
4. பி. ஜி. குப்புசாமி நாயுடு
5. சி. எஸ். சாமண்ணு ஐயர்
6. எம். எம். சிதம்பரநாதன் *(பாவலர் மாணவர்)*
7. ஜி. சி. நம்மாழ்வார் ரெட்டி
8. ஆத்மலிங்கம் பிள்ளை

## நினைவை விட்டு நீங்காத பழம் பெரும் நடிக நடிகையர்




1. *திரௌபதை வஸ்திராபரணம்*
   *திரௌபதை*—
   மனமோகன அரங்கசாமி நாயுடு
   *துர்ச்சாதனன்*—
   இராவண கோவிந்தசாமி நாயுடு
   *துரியோதனன்*—
   பி. எஸ். இராமச்சந்திரம் பிள்ளை
   *சகுனி*—ஆத்மலிங்கம் பிள்ளை
   *விகர்ணன்*—நடராஜக் கவி
2. நடராஜக் கவி (பெண் வேடம்)
3. *காளி*—என். இரத்தினம்
4. மனமோகன அரங்கசாமி நாயுடு (பெண் வேடம்)
5. கெ. டி. நடராஜ பிள்ளை
6. கெ. அரங்கநாயகி
7. டி. எம். காதர் பாட்சா
8. கே. பி. சுந்தராம்பாள்



# இலங்கையில் சுவாமிகள்

கலையரசு சொர்ணலிங்கம்.



தமிழ் நாடக உலகம் என்றும் மறக்க முடியாதவர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள்; மற்றவர் எனது குருநாதர் ஸ்ரீ பம்மல் சம்பந்தமுதலியார் அவர்கள். இவர்களின்றி நமது நாடக உலகம் இப்போதிருக்கும் மதிப்பைப் பெற்றிருக்கமாட்டாது. நாடகம் ஆடும் நாம் ''கூத்தாடிகள்'' என்ற பெயருடனேயே இருந்திருப்போம். சுவாமி அவர்கள் தொழில் நடிகருக்கென அனேக நாடகங்களே இயற்றி அவை மூலமாக மேடையில் பெரும்புகழுடன் விளங்கிய கணக்கற்ற நடிகர்களை உருவாக்கியிருக்கிறார். எனது குருநாதர் முதலியார் அவர்கள் பல நாடகங்களை எழுதி அவைகளில் தாமும் நடித்து ஏராளமான 'அமேச்சூர்' நடிகர்களை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறார். இவர்கள் இருவரின் சேவைகளினால்தான் நமது நாட்டில் நாடகக் கலை பிரபல்யம் அடைந்திருக்கிறது.

ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகளைப்பற்றி ''தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்'' என்னும் புத்தகத்தில் ஸ்ரீ. T. K. ஷண்முகம் அவர்கள் நிறைவாக எழுதியிருக்கிறார். மேலும் நான் எழுத வேண்டிய அவசியமில்லையெனக் கருதுகிறேன். ஆனால் ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். அவர் கலைஞர் மாத்திரமல்ல; ஒழுக்கமும் பண்பும் நிறைந்த ஓர் பெரியார். ஒருவரிடத்தில் எவ்வளவுதான் கலைத் திறமையிருந்த போதிலும் அவரிடத்தில் ஒழுக்கமும் பண்பும் இல்லாதிருந்தால், அவரின் கலைக்கு விலையுமில்லை. அது வெகு காலம் நிலைத்திருக்கவும் மாட்டாது. இதுவே எனது அபிப்பிராயம்.

1900-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் புத்துவாட்டியார் தோட்டத்தில் ஓர் மண்டபத்தைஅமைத்து பல சிறந்த இந்திய நடிகர்களை யழைத்துவந்து வண்ணை இந்து விநோத சபா என்னும் பெயரில் மூன்று மாதம் தொடர்ந்து நாடகங்களை நடாத்தினார்கள். இந்த சபாவிற்கு ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள் ஆசிரியராகவும் சூத்திரதாரராகவும் கடமையாற்ற வந்திருந்தார்கள், அப்பொழுது அவருடன் நேராகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இதனால் சுவாமிகளுடன் நேராகப் பழகியவருள் இப்போதிருக்கும் அதிக முதியவன் நான் என்றே நினைக்கிறேன்.

அந்தக் காலத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் சாயந்தரம் 6 மணி தொடக்கம் 9 மணி வரையில் ''நக்கல்'' என்றழைக்கப்படும் சிறிய நாடகங்களை நடாத்துவார்கள். அநேகமாக ஹாசிய நாடகங்களாகவே யிருக்கும். நான் சிறுவன்; வெகுநேரம் விழித்திருக்க மாட்டேனாகையால், இந்த ''நக்கல்'' நாடகங்களுக்குத்தான் என் தந்தை என்னைச் அழைத்துச் செல்லுவார். ஒவ்வொரு நாடகமும் ஆரம்பமாவதற்கு முன் சுவாமியவர்கள் சூத்திரதாரராக வந்து அன்று நடக்கும் நாடகத்தின் சாரத்தைப் பற்றியும் மற்றும் கருத்துக்களையும் விளக்கிக் கூறுவர். ''நக்கல்'' என்ற பதத்திற்கு அர்த்தம் கூறி விளக்கியது இன்றும் என் ஞாபகத்திலிருக்கிறது. அவரது தூய தமிழ்ப்பேச்சு என் தந்தையின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. இதனால் சுவாமியவர்களுக்கும் எங்கள் குடும்பத்தவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது. அவர் என் தந்தையைக் காண இடையிடையே வருவார். சைக்கிளில் தான் வருவார். அது சிறுவனாகிய எனக்கு ஓர் வேடிக்கையாயிருக்கும். வேட்டியை கால்சட்டையைப்போல் ஓர் விதமாய் கட்டிக்கொண்டு வருவார். அவர் போனபின் நானும் ஓர் வேட்டியை எடுத்து அவரைப் போலக் கட்டிக்கொள்ள முயல்வது ஞாபகத்திலிருக்கிறது. அவருக்கு என் மீது பிரீதியதிகம். அவருக்கு வேண்டியதற்கெல்லாம் ''அதை எடு, இதை எடு'' என்று கேட்பார். எனக்கும் அவருக்கு ஏதும் தொண்டு செய்வது ஓர் பெருமை. அந்த நாடகக் குழுவில் சுவாமியின் கீழ் நடித்தவர்கள் ஜி. எஸ். முனுசாமி நாயுடு, நடேச பத்தர், சாமிநாத முதலியார், ஜெகநாத ஆழ்வார், கிஞ்சின் ரங்கசாமி நாயுடு (நடனம்), அப்பண்ணாராவ் (பபூன்) இன்னும் சிலர். நாடகங்கள் எல்லாம் பூர்த்தியானதும் அந்த நாள் வழக்கப்படி பட்டாபிஷேகம் செய்தார்கள். பட்டாபிஷேகம் நடந்தேறிய அடுத்த நாள் அந்த நடிகர் யாவரையும் நமது இல்லத்திற்கு அழைத்து மதிய விருந்து கொடுத்து உபசரித்தோம். சுவாமிகள் உட்கார்ந்தவுடன் ''அடே தம்பி, இப்படி வாடா! என் பக்கத்திலிருந்து சாப்பிடு'' என்று சொல்லி என்னைப் பக்கத்திலுட்கார வைத்தார். இது எனக்குப் பெருமையாயிருந்தது. அன்று சாயந்தரம் நடிகர்களை பற்பல வேடங்கள் பூணச்செய்து அவர்களை என் தந்தை போட்டோ பிடித்தார். சுவாமியவர்கள் துச்சாதனன் துரோபதையின் துயில் உரியும் காட்சியில்

போட்டோ எடுக்கப்பட்டார். எனது அழிந்துபோன நாடகப் படங்கள் மற்றும் பொருட்களுடன் இந்தப் படமும் போய்விட்டது. அன்று இரவு இப்போது நான் வசிக்கும் வீட்டில் அதாவது என் மனைவியின் இல்லத்தில் அவர்களுக்கு இரவு போஜன விருந்து கொடுத்து உபசரித்தார்கள். என் மனைவியின் தாய் மாமன் டாக்டர் என். பொன்னுச்சாமியும் சுவாமியவர்களும் மிக நெருங்கிய நண்பர்கள். அன்றிரவு முனிசாமி நாயுடுவும் சாமிநாத முதலியாரும் பாடினர்கள். ரங்கசாமி நாயுடு பல நடனங்களை ஆடிக் காட்டினார். ஜெகநாத ஆழ்வாரும் அப்பண்ணுராவும் இன்னும் சிலரும் ஹாசியத் துணுக்குக்களை நடித்து அங்குள்ளவர்களை மகிழச் செய்தார்கள். சுவாமிகள் சும்மாவிருக்கவில்லை. இடையிடையே எழுந்து அந்த நடிகர் மத்தியில் நின்று எட்டுப் பத்து வார்த்தைகளை மாத்திரம் பேசி எல்லோரையும் குலுங்கக் குலுங்கச் சிரித்து வைத்துக் கொண்டிருந்தார்.

அடுத்த ஆண்டிலும் அதே கோஷ்டி மறுபடியும் வந்து தொடர்ந்து நாடகங்களை நடாத்தினர்கள். முனிசாமி நாயுடுவுக்குப் பதிலாக ஸ்ரீனிவாச ஆழ்வாரையும், மதார் சாயபுவையும் முக்கிய இராஜ பாகங்களுக்காகவும் அப்பண்ணு ராவுக்குப் பதிலாக கோபால ராவையும் ஹாசிய பாகத்திற்குமென அழைத்து வந்திருந்தார்கள். இந்த வருடத்தில் சுவாமியவர்கள் இரண்டு புதிய நாடகங்களை இயற்றித் தயாரித்து நடாத்திக் காட்டினர். ஒன்று வெகு காலமாக நாட்டுக் கூத்தாக நடித்து வரப்பட்ட பூதந் தம்பி சரித்திரத்திற்கு புதிதாகப் பாடல்களை இயற்றி நாடக முறையில் நடாத்திக் காட்டினர். மற்றது "மணிமாலிகை" "மணிமேகலை" யல்ல. இந்த நாடகம் அவரது சொந்தக் கற்பனையென்றே நினைக்கிறேன். இந்த நாடகம் உள்ளூர் நாடகக்காரருள் பெரும் செல்வாக்குடன் அநேக வருடங்களாக நடிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்தியாவில் நடிக்கப்பட்டதாக நான் கேள்விப் பட்டதில்லை. இதே வருட இறுதியில் தான் அதாவது 1901ல் நானும் நாடக மேடையில் பிரவேசித்தேன்.


கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு
உயர்ந்த ரக பட்டு சரிகையினுல் தயாரிக்கப்பட்ட
காஞ்சிபுரம் பட்டு சரிகை சேலைகள், பாவாடைகள்,
சோளிகள் நியாய விலைக்குக் கிடைக்குமிடம்.........

காஞ்சிபுரம்

காமாட்சி அம்மன் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம்

168-A, காந்தி ரோடு,
காஞ்சிபுரம்.

காரியதரிசி:
G. கிருஷ்ணமூர்த்தி, B.COM.,
கூட்டுறவு சப்-ரிஜிஸ்திரார்.

தலைவர்:
K. S. பார்த்தசாரதி

போன்: 202

தந்தி: "காமாட்சி சில்க்"

58 ஆண்டுகளாகப் புகழ் பெற்றது.




தலைவலி, ஜலதோஷம், ஃப்ளு, கை கால் வலி
முதலியவைகளுக்குச் சிறந்த மருந்து

## ஆர். எஸ். பதி மருந்து
(REGD.)

## மேரிராம் பற்பொடி
டின்களில் மட்டுமே விற்பனையாகிறது

—※—

தயாரிப்பவர்கள் :

**ஆர். எஸ். பதி அன் கோ**

ஸ்தாபிதம் : (1909)

த. பெ. எண். 99

**215, மேலமாசி வீதி, மதுரை—1.**

# ஆயிரத்தில் ஒருவர்

## ஞானம்

பேராசிரியர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரும் நாடகப் பேராசிரியர் சங்கரதாஸ் சுவாமிகளும் சம காலத்தவராவர். அமரர் சாஸ்திரியார் ஒருவகையில் துரதிருஷ்டசாலி! தமிழராகப் பிறந்து, தமிழை நேசித்ததால் மட்டும் துரதிருஷ்டசாலி அல்ல; ஆயுளிலும்கூட! ஆம். அற்ப ஆயுளிலே மறைந்துபோன மாமேதையாவார்.

சாஸ்திரியாரும் சுவாமிகளும் வாழ்ந்த காலத்தில், மற்றொரு நாடகப் பேராசிரியரான பத்மபூஷணம் பம்மல் சம்பந்த முதலியாரும் வாழ்ந்தார். இம்மூன்று பேரும் ஒரே துறையில் ஆர்வம் காட்டி அதிக அளவில் தொண்டாற்றி யிருக்கிறார்கள். சொந்தத் தொழிலில் வேறுபாடும் மாறுபடும் இருந்திருப்பினும் இம்மூவரும் நாடகக் கலையின் வளர்ச்சிக்காக தங்கள் ஆயுள்முழுவதும் பாடுபட்டார்கள்.

சாஸ்திரியார், அவரது பெயராலேயே 'பிராமணர்' என்பது விளங்கும். மிகவும் வைதீகப் பிராமணருங்கூட. சமஸ்கிருத மொழியிலே ஊறித் திளைத்த வைதீக அந்தணரின் மகனாகப் பிறந்தவர். தந்தையின் கருத்துவழி வடமொழி பயின்று, அதிலே பெரும்புலமை பெற்றார். காலத்தின் கோலமாக, அந்நாளில் உயர்தர வகுப்பினரைப் பெரிதும் கவர்ந்திருந்த ஆங்கில மொழியையும் பயின்று, பி. ஏ. பட்டம் பெற்றார். பட்டம் பெற அவர் எடுத்துக்கொண்டு படித்த பொருள், தத்துவம். ஆம்; அறிஞர் சாஸ்திரியார், தத்துவக் கலையிலே பி. ஏ. பட்டம் பெற்றார். அவர் தலைமுறையில் வாழ்ந்தவர்களுக்கு ஆங்கில மொழியை, ஆங்கிலேயரிடமே பயிலும் 'பாக்கியம்' (?) இருந்தது. டாக்டர் மில்லர் என்பவர், அந்நாளில் ஒரு கல்லூரி நடத்தி வந்தார் சென்னையிலே! அதற்கு 'மில்லர் கல்லூரி' என்றே பெயர். அதுவே தற்போது தாம்பரத்தில் பெயர் மாறி நிலைத்து நிற்கும் கிறித்தவக் கல்லூரி ஆகும்.

அந்நாளில் ஆங்கில மொழி பயில்வோர் தமிழைப் புறக்கணிப்பது உண்டு. - குறிப்பாக, அந்தணரிலே பலர் முதன்மொழியாக ஆங்கிலத்தையும் இரண்டாம் மொழியாக சமஸ்கிருதத்தையும் எடுத்து படித்துப் பயிற்சி பெறுவர். தமிழ் படிக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால், தமிழை வாழவைப்பதற்கென்றே தமிழகத்தில் அவதரித்த சாஸ்திரியார், இரண்டாவது மொழியாகத் தமிழைப் பயின்றார். பி. ஏ. வகுப்பில் அப்போதிருந்த பெரிய சென்னை மாநிலத்திலேயே முதன்மையாகத் தேர்வு பெற்றார். தத்துவத்தில் மட்டுமல்லாமல், தமிழ்மொழியிலும் முதன்மையாகத் தேறினார். 23 வயது முடியு முன்பே, தமிழ் - சமஸ்கிருதம் - ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்து மும்மொழிப் புலவரானார். தாம் கல்வி பயின்ற மில்லர் கல்லூரியிலேயே பேராசிரியர் பதவி பெற்றார். சாஸ்திரியாரின் அறிவிலும் ஒழுக்கத்திலும் நம்பிக்கையுடைய மில்லர் துரைமகனார், ''நீங்கள் தத்துவப் பேராசிரியராக என் கல்லூரியிலேயே பதவி ஏற்க வேண்டும்'' என்று கேட்டபோது, அதற்கு இணங்க மறுத்து, '' தமிழ்ப் பேராசிரியர் வேலை தந்தால், ஏற்கிறேன்'' என்று கூறினார். அவருடைய தாய் மொழிப்பற்றை என்சொல்லி புகழ்வது! அவரைப்போன்று பல்கலைக் கழகப் பட்டதாரிகளிலே ஆயிரத்தில் ஒருவர் இருந்தாலும் தமிழ் மொழி வாழ்வு பெற்றுவிடுமே! கேவலம் உத்தியோகத்திற்காகத் தாய்மொழியைப் புறக்கணிக்கும் 'டமிலர்'கள் சாஸ்திரியாரின் சரித்திரத்தைப் பயில வேண்டும்.

சாஸ்திரியார் காலத்தில் தமிழ்ப் பேராசிரிய பதவி வகிப்பவர், மாணவர்களாலேயே மதிக்கப்பட மாட்டார்கள். ஐரோப்பாவில் நடக்கும் மொழியியல் மாநாட்டுக்கு அனுப்பப்பட மாட்டார்கள். டெல்லியில் நடக்கும் ஆராய்ச்சிக் கருத்தரங்குக்கு அவர்கள் செல்ல முடியாது. தாய்மொழிப் புலமைக்காக அந்நாளில் ஜனாதிபதி பரிசு கிடைக்காது. சுருங்கச் சொன்னால், 'தமிழாசிரியர்' என்றால், தாழ்த்தப்பட்ட ஜாதியினர் போல! அந்த அளவுக்குத் தமிழாசிரியர்கள் அவமதிக்கப்பட்ட காலத்தில் ஆங்கிலமொழியின் மூலம் தத்துவக் கலை பயின்று பி. ஏ. பட்டம் பெற்ற சாஸ்திரி ஒருவர், தாமே விரும்பித் தமிழாசிரியர் வேலையை ஏற்றது, மிக மிகத் துணிகரமான செயலாகும்.

சாஸ்திரியார் சொத்துடைய குடும்பத்தில் பிறந்த சுகஜீவனக்காரரல்ல. வறுமையோடு தோழமை கொண்டவர்! இருந்தும், கூடுதலான வருவாய் கிடைக்கும் தத்துவப் பேராசிரியர் வேலையை ஏற்க மறுத்து, குறைந்த வருவாயைத் தரும் தமிழாசிரியர் வேலையை ஏற்றார். அவரது தியாக உணர்வையும் மதித்து, தாய்மொழிப் பற்றையும் மதித்து தத்துவப் பேராசிரியர்க்குரிய வருவாயையே அவருக்கு வழங்கினார் மில்லர் துரைமகனார்.

சூரியநாராயண சாஸ்திரியார் வைதீகக் குடியில் பிறந்தவராயினும், வீரப் பண்பினை விரும்பியவர். அதனால், சிலம்ப வித்தையிலும் பயிற்சி பெற்றார். ஆயினும், கல்வி பயிலுவதிலேயே கால்நூற்றாண்டைச் செலவழித்த காரணத்தாலோ என்னவோ அவர் இளமையிலேயே உடல் நலத்தை இழந்தார். பாடல்களை மனனம் செய்வதிலே அவர்

பகீரதனைப் போன்ற முயற்சியுடையவர். இரவில், பாடம் பயிலுங்கால், தூக்கத்தைத் தவிர்ப்பதற்காக, திறந்த வெளியிலே கொட்டும் பனியிலே இருந்து கொண்டு படிப்பாராம்.

சிலம்ப வித்தை பயிலுங்கால், தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்று பாராமல் அந்தத் துறையில் ஈடு பட்டிருந்த அனைவரிடமும் சமநிலையில் பழகுவாராம்.

கல்லூரி வகுப்பிலே, மாணவர்களுக்கு பாடம் கற்றுத் தருவதிலே, அவர் தனித்திறமை பெற்றவ ராம். அவரது வகுப்பில் மாணவர்கள் அத்துணைப் பேரும் தவருமல் வருவார்களாம்.

தத்துவம் பயின்று பி. ஏ. பட்டம் பெற்ற நம் தமிழ் பேராசிரியர், பழைய செய்யுள்களை மாணவர் களுக்குக் கூறுங்கால் புதிய புதிய பொருள்களை வழங்குவாராம். பழமையிலே புதுமை கலந்து அவர் வெளியிடும் கருத்துக்களால் டாக்டர் மில்லர், 'சாஸ் திரியார் சிறந்த பகுத்தறிவுவாதி' என்று கூறினராம். பழமையிலே பற்றுடைய தமிழ் பண்டிதர்களிலே சிலர், சாஸ்திரியாரின் முற்போக்கான கருத்துக்களைச் சகித்துக் கொள்ளாமல் முணு முணுப்பதுண்டாம்.

சாஸ்திரியார் காலத்திலும் குரு பக்தியற்ற குறும் பர் சிலர் மாணவர் மத்தியிலே இருந்தனர்.

மொழியாசிரியர்கள் - எழுத்து, சீர், தளை, தொடை என்றெல்லாம் செய்யுளை அங்கம் அங்க மாகப் பிரித்து பாடம் செய்வார்கள். சாஸ்திரியார் தம் வகுப்பிலே ஒருநாள், ஒரு செய்யுளைப் பிரித்துக் காட்டி இலக்கணம் போதித்துக் கொண்டிருந்த போது, 'அடி' - 'தொடை' என்று சொல்லி முடித்த தும், ஒரு குறும்புக்கார மாணவன். ஆசிரியர் புகன்ற சொற்களுக்குச் சிலேடையாகப் பொருள் கொண்டு - அதாவது, 'அடி - 'தொடை' என்ப வற்றை உடலின் உறுப்புகளாகக்கொண்டு, ''அடியை யும், அதற்குமேலே தொடையையும் சொல்லிய ஆசி ரியர் மேலே சொல்ல இருப்பது எதுவோ?'' என்று கேட்டானும். குறும்புக்கார மாணவனுக்குத் தாமும் குறும்பாகவே பதில் சொல்ல விரும்பி, ''தம்பி! மேலே சொல்ல இருப்பதை இன் றொரு நாளைக்கு 'விளக்கு மாற்றல்' விளக்குதும்'' என்று விடை பகன்றாராம். 'விளக்குமாறு' என்பதன் பொருள் யாவரும் அறிந்ததே. அதற்கு 'விளக்கும் ஆற்றல்' என்றும் கொள்ளலாம்.

குறும்புக்கார மாணவனின் கொட்டம் அடங்கிய தாம்.

சாஸ்திரியார் தமிழ் மொழியின் தனித்தியங்கும் தன்மையில் நம்பிக்கை உடையவர். பிற மொழிச் சொற்கள் கலவாமல் பேசுவார். அதையே மதமாக வும் கொண்டிருந்தார். அதனல், அவரது தனித் தமிழ்ப் பற்றுதலை, பைத்தியமாகக் கருதிய சிலர், ''தாங்கள் தங்கள் மனைவி மக்களிடமும் தனித்தமி ழில்தான் பேசுவீர்களோ?'' என்று கேட்டார்களாம். அதற்கு சாஸ்திரியார், ''அப்படிப் பேச எனக்கென்ன பைத்தியமா?'' என்று பதில் பகர்ந்தாராம். சமஸ் கிருதத்திலும் ஆங்கிலத்திலும் திறமான புலமை பெற்ற காரணத்தால், அவருடைய தமிழ்ப் புல மையை அந்நாளைய தமிழாசிரியர்கள் சிலர் ஐயுற்றுர் களாம். அவர்களுக்குப் புத்தி புகட்டவே, படித்தவர் களோடு இருந்த நேரங்களில், தனித் தமிழில் பேசு வதை வழக்கமாகக்கொண்டிருந்தாராம். ''கல்வியற்ற எளிய மக்களோடு பழகுங்கால் பழகு தமிழிலேயே பேசவேண்டும். படித்தவன் கீழே இறங்கி வந்தால் தானே, கீழே இருக்கும் படிக்காதவனை மேலே கொண்டு செல்ல முடியும்'' என்று அடிக்கடி கூறுவா ராம் சாஸ்திரியார்!

'சூரியநாராயண சாஸ்திரி' என்ற தம் பெயரைத் தூய தமிழிலே 'பரிதிமாற் கலைஞர்' என்று மாற்றி, அதனை வழக்கத்திலும் கொண்டு வந்தார். பிற் காலத்தில் வடமொழிப் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொள்ளும் வழக்கம் தோன்றி யதே, அதற்கு முன்னேடியாக விளங்கியவர் நம் பரிதிமாற் கலைஞரே!

சாஸ்திரியார், ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங் களைப் பயின்று, தமிழ் நாடகக் கலையையும் வளர்க்க ஆர்வம் கொண்டார். தமிழ் நாடக நூல்கள் சில வற்றை அவர் எழுதியுள்ளார். 'நாடக இயல்' என்ப தாக ஒரு நூலை வெளியிட்டு, இந்த இருபதாம் நூற் ருண்டுக்கேற்ற நாடக இலக்கண நூல் எதுவும் தமி ழில் இல்லாத குறையைப் போக்கினர்.

— சாஸ்திரியார், நாடக நூலாசிரியராக மட்டுமல்லா மல், சிறந்த நடிகராகவும் விளங்கினர். இளமையும் அழகும் பெற்றிருந்த அவர், பெரும்பாலும் பெண் வேடங்களையே தாங்கினர். தாம் இயற்றிய நாடகங் களில் வரும் கதாநாயகி வேடத்தைத் தாமே ஏற்று நடித்தார்.

சாஸ்திரியார் வடமொழிப் பண்டிதர் ஆதலால்" அம்மொழியிடத்து அவருக்குத் துவேஷமில்லை. ஆயி னும், தமிழிலே தேவைக்கதிமாக வடமொழிச் சொற் களைக் திணித்து, தமிழின் தனித்தன்மையை அழிக் கும் போக்கில் அவர் காலத்தில் தோன்றிய 'மணிப் பிரவாள' நடையை அவர் கடுமையாக எதிர்த்தார். 'தமிழ் மொழியின் வரலாறு' என்ற பெயரில் அவர் இயற்றி அருளிய அருமையான நூலிலே தமிழ்மொழி யின் தனித்தன்மையைக் காக்க வேண்டியதன் அவசி யத்தை வலியுறுத்தியிருக்கிறர்.

சாஸ்திரியார் சிறந்த கவிஞருமாவார். அவர் இயற்றிய தமிழ்க் கவிதை நூலொன்றை அவர் காலத்தில் வாழ்ந்த பி. யு. போப் துரைமகனர், அந்த நூலின் அருமை பெருமைகளை ஐரோப்பியருக் கும் அறிவிக்க எண்ணி, அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

தனித் தமிழில் பற்றுடையவராயினும், தம் முடைய நாடகங்களைப் பாமரர்களும் பார்த்து மகிழ வேண்டுமென்ற எண்ணத்தால், தாம் இயற்றிய நாடக

நூற்களுக்கு வடமொழிப் பெயர்களை வைத்தார். 'ரூபாவதி', 'கலாவதி' என்று அமைத்துள்ளார். பாத்திரங்களில் சிலருடைய பெயர்களும் வடமொழியாக இருக்கும்.

'மான விஜயம்' என்ற நூலை செய்யுள் நடையில் இயற்றியுள்ளார்.

நாடகப் பேராசிரியர் சாஸ்திரியார் ஷேக்ஸ்பியர் - ஷெல்லி - மில்டன் ஆகிய ஆங்கிலக் கவிஞர்கள் யாத்த இலக்கியங்களிலே தரமான பயிற்சி பெற்றிருந்தார். ஆயினும், அந்த இலக்கியங்களிலுள்ள சிறந்த இடங்களைக் கவியரசர் கம்பருடைய கவிதைகள் சிலவற்றோடு ஒப்பிட்டுக் காட்டி, கம்பருக்கே உயர்வு கூறுவாராம்.

பரிதிமாற் கலைஞர், 32 ஆண்டுகளே இந்த மண்ணுலகில் வாழ்ந்தார். அந்தச் சொற்ப காலத்தில் தமிழ் நாடகக் கலைக்குப் புது மெருகு கொடுத்து தமிழ் மொழிக்கே புதுவாழ்வு தேடிவிட்டார். யாக்கையின் நிலையாமையை அறிந்தவர் ஆதலால், இரவு பகலாகக் கண்விழித்து போதிய உணவு கொள்ளவும் தவறி, உறக்கத்தையும் குறைத்து, படிக்கவேண்டியவற்றை யெல்லாம் படித்தார். எழுத வேண்டியதை யெல்லாம் எழுதி முடித்தார்.

அப்படி ஓய்வின்றி உழைத்ததனால், எலும்புருக்கி நோய் கண்டு, அந்த நோயின் கொடுமையை ஆற்றமாட்டாமல் வருந்தி, இளமையிலேயே உயிர் நீத்தார். அவரது வாழ்வு முடிந்தது. ஆனால், தமிழுக்கு அவர் துவக்கி வைத்த புதுவாழ்வு நீடிக்கிறது. அதற்கு முடிவே இல்லை.

வாழ்க, பரிதிமாற் கலைஞர் புகழ் !

> நற்சரிதை நற்கவிதை நல்நடிப்பு
> நாட்டினிலே நாடகத்தில் அமைதல் வேண்டும்
>
> பாரதிதாசன்


*With the best compliments*

*from*

## P. S. G. INDUSTRIAL INSTITUTE,

**COIMBATORE-4 : : SOUTH INDIA.**

MANUFACTURERS OF

**PSG** ELECTRIC MOTORS, PUMPS, DIESEL ENGINES, ELECTRICAL SIRENS, BALING PRESSES, LATHES, HYDRAULIC & ELECTRICAL— ENGINEERING LABORATORY— EQUIPMENTS Etc.,

நாடக உலகுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

தமிழ் நாடக மேதை

**சங்கரதாஸ் சுவாமிகளின்**

திருநாமம் வாழ்க!

ஸ்ரீ பாலாஜி எஸ்டேட்ஸ்

(பில்டிங் கண்ட்ராக்டர்ஸ், எஸ்டேட் ஏஜன்சீஸ்)

113, ஹபிபுல்லா ரோடு

தியாகராயநகர்

சென்னை-17

போன் : 443429

# இதயத்தில் என்றும் வாழி



கவி ஆறுமுகனார்

பொங்கு தமிழ் ஆழ்கடல்போல் கலை நிறைந்தோய்!
நாடகத்தில் புதுமை காணும்
தங்குதடை யில்லாத கதை வசனம்
சுவை சேர்ந்த தமிழ்ப் பாடல்கள்
கங்குல் ஒன்றிலே யமைத்துத் தந்துள நின்
கலைப்பெருமை கழறப்போமோ!
சங்கரதாசப் பெரியோய்! தமிழ் நாட
கத் தந்தை தான் நீயன்றோ!

பூதவுடல் மறைந்தாலும் புனிதமிகும்
கலை வடிவில் பொலிகின்றாயே
மேதினியில் ஆயிரத்தி லேயொருவன்
புலவனென்றே விளம்பும் அவ்வை
மூதுரைக்கோர் இலக்காகக் கற்றுணர்ந்த
தகைமிக்கோய்! முருகன் பக்தி
சாதனை சேர் சங்கரதாஸ் வரகவி! நின்
அடிக்கமலம் தலை மேற்கொள்வாம்.

விண்ணவர்க்கோர் இன்னமுதாய் வேந்தர்க்கோர்
தமிழ் மறையாய் விளங்கி என்றும்
நண்ணலர்க் கோர் கோடரியாய் நாடகத்திற்
கிலக்கணமாய் நாட்டில் இன்பப்
பண்ணிசைக்குப் கலையறிவாய்ச் சுவாமியெனத்
துதிபாடிப் பாரோர் போற்றும்
வண்ணமழை பொழி தண்டபாணி மகிழ்
மாணவனே! மதி வல்லோனே!

எண்ணற்ற நடிகர் கட்கோர் ஆசிரிய
ராயிருந்து இனிமை சேர்ந்த
கண்ணொத்த நாடக நற்கலை வளர்த்தாய்
கவிஞர் பலர் கருதிப் போற்றும்
விண் முட்டும் புகழ் வாய்ந்த நினது அருட்
புலமையினை வியவார் யாரே!
எண்ணத்தில் கலைஞர்களின் இதயத்தில்
இடம் பெற்றாய், என்றும் வாழி!

—☆—

பண்டைக் காலத்தில் நாடகக் கலை மாட்டு வண்டி வேகத்தில் இருந்து வந்தது. இப்போது அது விமான வேகத்தில் இருந்து வருகிறது. மாட்டு வண்டி வேகத்திலிருந்து திடீரென்று விமான வேகம் வந்துவிடவில்லை. படிப்படியாகத்தான் வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.



**BISON BANIANS**

# BISON

## SHOW ROOM

145, LLOYDS ROAD, MADRAS-6

Phone : 82880

## BISON KNITTING COMPANY,

**8, Subramania Chettiar Street, TIRUPUR.**

Tel : BISON

Phone { Office : 594
Res. : 539



போன் : 201

## காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட்

**எண். ஜி. 1653**

**79, காந்தி ரோட், காஞ்சிபுரம்**

**சரித்திரப் புகழ் பெற்ற காஞ்சியின் கைவண்ணப் பட்டுச் சேலைகள், சோளி, பாவாடை ரகங்களை மலிவான விலையில், சிறந்த தரத்துடன், பெருமளவில் உற்பத்தி செய்து, விற்பனை செய்யும் ஓர் முன்னணி கூட்டுறவு ஸ்தாபனம்**

---

தனிப்பட்ட ஆர்டர்களை திறம்பட தயாரித்து குறித்த காலத்தில் வழங்குவது எங்களின் சிறப்புச் சேவை.

---

விபரங்களுக்கு காரியதரிசிக்கு எழுதவும்

A. N. பாஸ்கரன், B.A.,
*காரியதரிசி.*

C. P. கன்னியப்ப முதலியார், M.C.
*தலைவர்*

ஸ்தாபிதம் : 1957
போன் : 284

தபால் பை : 18
தந்தி : ''குமரி பாங்கு''

# கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்

## நாகர் கோவில்

கிளைகள் :

மார்த்தாண்டம், தக்கலை.

தலைவர் :
திரு. எல். ராமச்சந்திர நாடார்

உப-தலைவர் :
திரு. ஜி. டானியல், பி.ஏ., பி.எல்.

அதிகாரம் பெற்ற மூலதனம் : 30 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனம் : 23 லட்சம்
நடை முதல் மூலதனம் : 2 கோடிக்கு மேல்

கீழே கண்ட வட்டி விகிதங்களில் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன,

கரண்ட் டிபாசிட் ½%
சேவிங்க்ஸ் டிபாசிட் 4%

சீசன் டிபாசிட்டுகள் ரூ. 10,000 - ம் அதற்கு மேலும்.
15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை...1½%
46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை...3%

நிரந்தர டிபாசிட்டுகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 3 மாதங்களுக்கு | | | | 5% |
| 6 மாதங்களுக்கு | | | | 5½% |
| 12 மாதங்களும் அதற்குமேல் 24 மாதங்களுக்குக் குறையாமல் | | | | 6¼% |
| 24 | ,, | 36 | ,, | 6½% |
| 36 | ,, | 60 | ,, | 6¾% |
| 60 | ,, | 84 | ,, | 7¼% |
| 84 ம் அதற்கு மேலும் | | | | 7½% |

மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டு போடும் நிரந்தர டிபாசிட்டுகளுக்கு தமிழ்நாடு சர்க்காரின் உத்தரவாதம் கொடுக்கப்படுகிறது.

**கே. எஸ். நமசிவாயம், பி.ஏ.,**
துணைப்பதிவாளர்—காரியதரிசி.

## தமிழக அரசு போக்குவரத்து இலாகா ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடனுதவி சங்கம் (வரையறையுள்ளது) X-367

போக்குவரத்து இல்லம்
மவுண்ட் ரோடு — சென்னை-2.

துவக்கம் : 14-5-1957

(30-6-1966-ல் உள்ளவாறு)

| | | | |
|---|---|---|---|
| அங்கத்தினர்களின் எண்ணிக்கை | | 3010 | |
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ரூ. | 3,50,000 | 00 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ரூ. | 3,14,020 | 00 |
| காப்பு நிதி | ரூ. | 2,024 | 33 |
| சிக்கன சேமிப்பு நிதி | ரூ. | 5,66,122 | 00 |
| நடைமுறை மூலதனம் | ரூ. | 15,20,996 | 33 |

தமிழக அரசு போக்கு வரத்து ஊழியர்களுக்கு கடன் வசதியை அளிக்கும் முக்கிய ஸ்தாபனமாக இந்தச் சங்கம் விளங்குகிறது. இச் சங்கம் 10 ஆண்டு காலமாக அங்கத்தினர்களுக்குச் சேவை புரிந்து வருகிறது.

**வே. மேகநாதன்**
கூட்டுறவு உப பதிவாளர்—தனி அலுவலர்.



Tel : ANGU Phone : 37 Post Box No. 75

## Sri Angu Vilas Weaving Factory

(Estd. **1941**)



*Specialists in :* High class Handloom cloth Towels & Napkin Manufactures.

**51, Sengundhapuram, KARUR. (S. Rly.)**



Prop :- S. Erulappa Mudaliar & Sons

Regd No. 206675

எங்களது கைத்தறிகளில் தயாராகும்,

★ டவல்கள் ★ நப்கின்ஸ் ★ கர்சிப் வகைகள்

உறுதிக்கும் உழைப்புக்கும் சிறந்தவை. உத்திரவாதமுள்ள கெட்டிச் சாயம்.
தரத்தில் சிறந்தவை. தனிச் சிறப்பு வாய்ந்தவை.

மீண்டும் மீண்டும் வாங்கி உபயோகித்து மகிழ்ச்சியடையுங்கள்
வாடிக்கை அன்பர்களின் திருப்தியே எங்களது பெரு மகிழ்ச்சி

உரிமையாளர்கள்

**செ. இருளப்ப முதலியார் & சன்ஸ், கரூர்.**

# தென்னாற்காடு கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்..

## கடலூர் - 1.

கிளைகள் :

செஞ்சி, உளுந்தூர்பேட்டை, திண்டிவனம், சிதம்பரம்,

பெண்ணாடம், கள்ளக்குறிச்சி, நெல்லிக்குப்பம், விழுப்புரம்.

தலைவர் : திரு. ஆர். கனகசபை, எம். எல். ஏ. அவர்கள்

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் பெற்ற மூலதனம் | ரூ. | 1,00,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 75,16,450 |
| அலுவல் நிதி | ரூ. | 4,00,18,900 |

நிரந்தர டெபாசிட்டுகளின் வட்டி விகிதங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மாதங்களுக்கும் | அதற்கு மேலும் | ,, | 5½% |
| 6 | மாதங்களுக்கும் | அதற்கு மேலும் | ,, | 6% |
| 12 | மாதங்களுக்கும் | அதற்கு மேலும் | ,, | 6¼% |
| 2 | வருடமும் | அதற்கு மேலும் | ,, | 6½% |
| 3 | வருடமும் | அதற்கு மேலும் | ,, | 6¾% |
| 5 | வருடமும் | அதற்கு மேலும் | ,, | 7¼% |
| 7 | வருடமும் | அதற்கு மேலும் | ,, | 7½% |
| | சேமிப்பு கணக்குகளுக்கு | | ,, | 4% |

தவணை வைப்புகளில் மூன்றாண்டுகளுக்கு மேல் செலுத்தப்படும் தொகைகளுக்கு அசலுக்கும், வட்டிக்கும் தமிழ்நாடு அரசினர் உத்திரவாதம் அளித்துள்ளனர்.

நீண்டகால தவணை வைப்புகளுக்கு வட்டி மாத தவணைகளிலும் மூன்று மாத தவணைகளிலும் வழங்கப்படும்.

ஏனைய விவரங்கட்கு செயலாளரிடம் தொடர்பு கொள்ளவும்.

கே. ஏ. நடராஜன், பி.ஏ.,
செயலாளர்.

# காலனை வென்ற கலைத்தந்தை

*ரா.மு. நாகலிங்கம் (கண்டி - இலங்கை)*



ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவம் இது :

கண்டி மாநகரிலிருந்து 100 மைல் தூரத்திலுள்ள பதுளை நகரை நோக்கி, கடுகதி பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். எனது சிந்தனையின் ஓட்டம் பஸ்ஸிலும் வேகமாக விருந்தது. பிரயாண அலுப்பு ஏற்படவே, பஸ்ஸில் என்னுடன் கூடவே பிரயாணம் செய்த கறுப்பு நிறப்பை மீது கவனம் திரும்பியது. பிரயாணச் சந்தர்ப்பங்களின் போது நூல்களை வாசித்துச் சிந்திக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்ட எனக்கு, பதுளை யாத்திரையின்போது எனது கையில் எதிர்பாராத விதமாக அகப்பட்டு, கறுப்பு நிறப் பைக்குள் நுழைந்தது ... ஒரு சிவப்பு நிறப் புத்தகம்.

வெளியே எடுத்தேன், விரித்தேன், படித்தேன், பதுளை நகரை அடைவதற்குள் மும்முறை அந்த நூலை வலம் வந்து விட்டேன். அப்பொழுதும் சலிப்பு ஏற்படவில்லை. தணியாத தாகமாகவிருந்தது. உடலுக்கும் உள்ளத்துக்கும் புதிய தெம்பை அளித்து, ஓர் ஆத்ம திருப்தியை ஏற்படுத்தியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அந்த நூல்தான் — எனது பெருமதிப்பிற்கும் அன்பிற்குமுரிய சகோதரர் தி. க. ஷண்முகம் அவர்களால் எழுதப்பட்ட "தமிழ்நாடகத் தலைமையாசிரியர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் வாழ்க்கை வரலாறு.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் பற்றி நான் ஓரளவு அறிந்திருந்த போதிலும் சுவாமிகள் பற்றி எனக்கு முதன் முதலாக விளக்கமாக எடுத்துரைத்தது தி. க. ஷண்முகத்தின் நூல்தான். இருந்தபோதிலும், இந்தியக் கிராமங்களில் எனது இளம் வயதில் கண்டு களித்து வியப்படைந்த நாடகங்கள் எல்லாம் சுவாமி சங்கரதாஸ் அவர்களால் எழுதப்பட்ட நாடகங்கள் தாம் என்பதை அந்த நூல் மூலம் அறிந்த பொழுது எனது உடல் புல்லரித்தது; உள்ளம் பூரித்தது. நான் கொடுத்து வைத்தவன் என்பதை அப்பொழுது உணர்ந்தேன்.

சுவாமிகளைப் பொறுத்தவரை தமிழுலகில் அவர் வாழ்ந்து கொண்டிருப்பதையே நான் உணர்கின்றேன். இன்று சினிமா உலகம் உச்சக் கட்டத்தில் தலைவிரி கோலமாக ஆடும் நிலையில் கூட, சுவாமிகளின் தனித்துவம் மறையவில்லை என்றால் அதற்கு அவர்களின் உயிர் நாடகங்களே — அவர் வகுத்துச் சென்ற இலக்கிய வழியே காரணம் எனலாம். அவருடைய நாடகத் திறமையையும் நல்லிசைப் புலமையையும் வியந்து பாராட்டாதவர்கள் இல்லை. சுவாமிகளின் பாடல்களிலே உயர்ந்த கருத்துக்கள் காணப்படுகின்றன. அதே நேரத்தில் கல்லாதாருக்கும் பொருள் விளங்கக்கூடிய முறையில் எளிமையும் குடிகொண்டிருக்கும்.

சங்கரதாஸ் சுவாமிகளின் காலத்து நாடகத் துறையையும் தற்கால நாடகத் துறையையும் ஒன்றோடொன்று ஒப்பிடுதல் பொருத்தமற்றதென்றாலும், கொழுந்துவிட்டெரியும் இன்றைய நாகரிக உலகில் தமிழ் நாடகக் கலை சாகாமல் வாழ்வதற்குக் காரணம் சங்கரதாஸ் சுவாமிகள் தான் என்றால் சாலப் பொருந்தும். சினிமாவின் துரித முன்னேற்றம், தமிழ் நாடகத் துறையின் வளர்ச்சியைப் பாதித்த போதிலும் முற்றாகத் தடைப்படுத்தவில்லை என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். சினிமாவில் நவீன யுக்திகள் கையாளப் பட்டும், அக்கால நாடகங்களான கோவலன், வள்ளி திருமணம், பவளக் கொடி, அல்லி அர்ஜுனா, சதி யனுசூயா, மணி மேகலை, லவ குசா, சாவித்திரி, சதி சுலோசனா, பிரகலாதன் போன்றவற்றை வெற்றி கொள்ளவில்லை என்பதையும் இந்த நாடகங்கள் எல்லாம் சங்கரதாஸ் சுவாமிகளினால் தான் இயற்றப் பெற்றவை என்பதையும் அறியும் பொழுது நமக்கே பெருமையளிப்பதாக விருக்கிறது. நல்ல முறையில் இந்த நாடகங்கள் இப்பொழுதும் மேடையேற்றப்பட்டால் நிறைய ஆதரவு இருக்கும் என்பதையும் மறுக்க முடியாது.

* * *

நாடகக் கலை உலகுக்குள் நுழைந்தோமானால், அங்கு தூணிலும் துரும்பிலும் சுவாமிகள் கலைத்தெய்வமாக வாழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். நாடகத் தமிழை வளர்த்த தந்தை அவர். தமிழ் நாடகத் தலைமையாசிரியர், நாடகாசிரியர்கள் பல

ருக்குப் பேராசிரியர், நடிகர் பலருக்கு குருநாதர், நன்மணமிக்கத்தமிழ்ச்சுவையூட்டும் பாடல்களை வழங்கிய கவிஞர், நாடக ஒழுங்கு முறையை வகுத்த மேதை என்றெல்லாம் அவரைப் புகழ் பாடலாம். கடந்த அறுபது ஆண்டுகளுக்கிடையே அவரது பாடல்களையோ, வசனங்களையோ உபயோகிக்காத தமிழ் நடிக, நடிகையர்கள் தமிழ் நாடக உலகில் இல்லை என்றே கூறலாம்! பதினொருவது வயதில் வெண்பா, கலித்துறை, இசைப் பாடல்கள் எழுத ஆரம்பித்து, எட்டு வருடங்கள் கழித்து நாடகத் துறையில் புகுந்து நடிகராகி, நாடக ஆசிரியராகத் தரமுயர்ந்து, நல்ல பல நாடகங்களை எழுதி, நடித்து, பலருக்குப் பயிற்சி அளித்து, சொந்தத்திலேயே "சமரச சன்மார்க்க நாடக சபை" யொன்றை நிறுவிப் பின்னர் சிறுவர் நாடகக் குழு வொன்றையும் அமைத்து உடலையும் உயிரையும் கலைத்துறைக்கே — நாடக இலக்கிய வளர்ச்சிக்கே வித்திட்ட தமிழ் முனிவன். தமிழ்நாடக மேடையின் ஓர் ஒளி விளக்காகத் திகழ்ந்த எஸ். ஜி. கிட்டப்பாவும் இசைப்புலவராக மிளிர்ந்த மதுரை திரு. மாரியப்ப சுவாமிகளும் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகக் குழுவில் இருந்தார்கள் என்று எண்ணும் போது சுவாமிகளின் புலமையை என்னவென்று எடுத்துரைப்பது?

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் உயிரூட்டி வளர்த்த தமிழ் நாடகக் கலை சாகா வரம் பெற்றது. அவரது காலத்துக்குப் பின்னர் தமிழ் நாடகத் துறையில் மாற்றம் ஏற்பட்ட போதிலும் சுவாமிகளின் நாமம் ஒலிக்கும் போதெல்லாம் அவர் கட்டி வளர்த்த நாடக இலக்கியத்தின் எதிரொலி கேட்கவே செய்கிறது. திறமை வாய்ந்த இப்பெரும் புலவர் இன்னும் சாகவில்லை. அவரது பாடல்கள் அழியவில்லை. அவரின் திருப்பெயர், தமிழ் உலகம் உள்ளவரை ஒளி வீசிக் கொண்டே இருக்கும். காலனை வென்ற இக்கலைத் தந்தையின் நாமம், தமிழ் நாடகக் கலைக்கு உயிர் அளித்துக் கொண்டே இருக்கும்!

நாடகமும் சினிமாவும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான். நடிப்பு இருவருக்கும் பொதுச் சொத்து. நாடகமும் சினிமாவும் ஒன்றுக்கொன்று பெருந்துணை. சினிமா நாடகக் கலை வளர்ச்சிக்குப் புதிய புதிய யோசனைகளையும் தந்திரங்களையும் நுணுக்கங்களையும் தந்து உதவுகிறது. அதேபோல, நாடகம் சினிமாத்துறைக்குப் புதிய புதிய உயர்ந்த நடிகர்களை உற்பத்தி செய்து கொடுத்து வருகிறது.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்,


# A GROWING BANK

Founded in August 1907, the Indian Bank today can claim the maturity and knowledge which help it to discharge its functions faithfully and fully.

With 191 branches in India, the Indian Bank offers comprehensive Banking facilities expected of a fine old Institution that maintains five overseas branches in addition to correspondents in many countries.

Keeping in view the need and Priorities for augmenting Industrial and agricultural Production, the Indian Bank has been extending substantial Financial assistance in this sphere more particularly to the medium and Small Scale Industries Plantations and Agricultural farms.

Customer loyalty is an element in its successful operations over a long period knowledge of people and places plays a part in the advance of the bank that knows and grows in its Diamond Jubilee year.

**THE INDIAN BANK LTD., MADRAS**

1907—1967
DIAMOND JUBILEE YEAR

தமிழகத்துக்கு

நம்பகமானதொரு சரக்குப் போக்குவரத்து நிறுவனம்

அஞ்சனை மைந்தன்! எங்கள் அனுமனை இமைப் போதேனும்
துஞ்சிடா வாயு பெற்ற தூய்மையைத் தொழுவோம் நாளும்
வஞ்சனை எதுவுமில்லை! வாழ்வினில் செழுமை தேக்கிச்
செஞ்சொலால் அன்பால் எங்கள் சேவையைச் சிறக்க வைப்போம்!

# ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்

உரிமையாளர்கள்:

## ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் (பி) லிமிடெட்

டாக்டர் நஞ்சப்பா ரோடு

கோயமுத்தூர்–18

தந்தி: "சஞ்சீவி"

போன்: 23366 (3 லைன்)



# அண்ணல் வழியில்

தமிழழகன்

முத்தமி ழும்கற்ற வித்துவன் ; - கலை
முழுமையும் ஆராய்ந்த தத்துவன் !
சித்தம் துறவெனச் சென்றவன் ; - தெய்வ
சிந்தனையே முன்னாய் நின்றவன் !
கத்துங் கடற்புகழ் கண்டவன் ; - நம்தம்
கருத்தெலாம் கோவிலாய்க் கொண்டவன் !
மெத்த அவன்புகழ் போற்றுவோம் ; - அதன்
மீதே கிளர்ந்து தொண் டாற்றுவோம் ! 1

கூத்துக் கலைக்கே பிறந்தவன் ; - இசைக்
கோபுர மாகிச் சிறந்தவன் !
வாழ்த்த வரலாறு வாய்ந்தவன் ; - தமிழ்
வாழ்வோடு வாழ்வுமாய்ப் போந்தவன் !
காத்துக் கலைக்குமே காவலன் - எனக்
காலமுங் கண்ட மெய்ப் பாவலன் !
ஏத்த அவன் பெயர் போற்றுவோம் ; - அவன்
எண்ணமே விம்மித்தொண் டாற்றுவோம் ! 2

பாண்டித் துறைமுக முத்(து)அவன் ; - பழம்
பண்பா டனைத்திற்கும் சொத்(து) அவன் !
மூண்ட புதுமைக்கும் முன்னவன் ; : கடல்
மோதும்தூத் துக்குடித் தென்னவன் !
ஆண்டுநா றாயிரம் ஆள்பவன் ; - புகழ்
யாக்கையால் வானினும் வாழ்பவன் !
நீண்ட அவன் திறம் போற்றுவோம் ; - அந்த
நினைவொன்றே மூழ்கித்தொண் டாற்றுவோம்! 3

எண்ணில் இளைஞரைத் தந்தவன் ; - இயல்
இசையோடு நாடகச் சிந்(து) அவன் !
நண்ணியே நம்புகழ் காத்தவன் ; - இன்றை
நாள் இளங் கோவென மூத்தவன் !
மண்ணில் தமிழ் தந்த மாதவன் ; - கலை
மாணிக்கப் பொற் கோவில் ஆதவன் !
அண்ணல்சங் கர்தாசைப் போற்றுவோம் ; - அவன்
அடிமீதே நாமும்தொண் டாற்றுவோம் ! 4

அக்கலையும் இக்கலையும் ஆய்ந்தறிவார் நாடகத்தை
எக்கலையும் கூடும் இயல்பென் பார் முக்கலையாம்
செந்தமிழில் நாடகங்கள் சீர்பெற் றுயர்ந்திடவே
வந்தமகா நாடுநிதம் வாழி.

—கவிஞர் ச. து. சு. யோகி.

*With the best compliments*

*of*

OLYMPIC PICTURES

9, NORTH BOAG ROAD

**MADRAS-17**

Phone : 23430 Grams : "EXQUISITE'

## SWAMY & COMPANY

**Civil & Sanitary Engineering Contractors**

***318, Thambu Chetty Street***

***MADRAS-1***

*Specialists in :*

- ★ **Drainage, Sanitary & Water Supply Works**

*Dealers in :*

- ★ **Marble Table Tops,**
- ★ **Mosaic Chips,**
- ★ **White Cement,**
- ★ **Colours, Etc.,**

ENQUIRIES SOLICITED

Estd : 1920 Phone : 86635

**With best compliments**

**from**

V

THE GENERAL STORES

PIECE GOODS MERCHANTS

585, PYCROFTS ROAD

TRIPLICANE

MADRAS-5

*With the best compliments*

*of*

VENUS PICTURES

***9, North Boag Road***

***MADRAS-17***

# நடிப்பின் இலக்கணம்

— மகான் —

நாடகத் தந்தை சங்கரதாஸ் சுவாமிகளுக்கு விழா எடுப்பது மறைந்துபோன கலைஞர் ஒருவரை நாம் இன்று கௌரவிப்பது மட்டுமல்ல; தற்போது முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் இளம் எழுத்தாளர்களுக்கும் நாடகக் கலைஞர்களுக்கும் அன்னாரைப் புதிதாக அறிமுகப்படுத்தவும் உதவுகிறது.

## வழிகாட்டி

சங்கரதாஸ் சுவாமிகளைப்பற்றி மிகவும் சுருக்கமாகச் சொல்லப்போனால் நாடக உலகிலும் திரைப்பட உலகிலும் முன்னுக்கு வந்த மற்றவர்களுக்கு இன்று முன்மாதிரியாகத் திகழும் நாடகக் கலைஞர்களுக்கு இவர் ஒரு தந்தையெனக் கூறலாம்.

சங்கரதாஸ் சுவாமிகள் உயிருள்ள நாடகங்களைப் படைப்பதில் ஒரு மன்னர். பேசினாலோ அல்லது மேடைகளில் ஏறி முழங்கினாலோ, மற்றவர்கள் சுவாமியைப் பின் தொடர்ந்துவிடுவார்கள். அவ்வளவுக்கு அவரிடம் ஒருவித உணர்ச்சி குடி கொண்டிருந்தது! நடிப்பு என்றால்...? நடிப்பின் இலக்கணம் என்றுகூட அவரைச் சொல்லி விடலாம்!

சங்கரதாஸ் சுவாமிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு நெருங்கிப் பழகியவர்கள் இலங்கையில் பலர் இருந்தாலும் இப்பொழுது விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே இங்கு இருக்கிறார்கள். சங்கரதாஸ் சுவாமிகளைப் பற்றிச் சில விபரங்களை அறிவதற்காக நான் இங்குள்ள 'பழுத்த' கலைஞர் ஒருவரிடம் சென்றேன். அவர் கூறிய அந்தக் கதைகள், அந்தச் சம்பவங்கள் சுவாமியை அப்படியே என் கண்முன் கொணர்ந்து நிறுத்தி விட்டன.

## சுவாமிகளின் யாழ் விஜயம்

சங்கரதாஸ் சுவாமிகளுடன் தான் நேரடியாகத் தொடர்பு கொண்டு நெருங்கிப் பழகியதாக அந்தக் கலைஞர் எனக்குச் சொன்னபொழுது என் உடம்பே ஒரு முறை சிலிர்த்து விட்டது. தமிழ் நாடக உலகம் மறக்க முடியாத ஒரு கலைஞரைப் பற்றி நான் பூரணமாக அறிந்திருக்காததை எண்ணி அப்பொழுதுதான் நான் வெட்கப்பட்டேன், வேதனையும் அடைந்தேன். இருந்தாலும் ஒரு மனத்திருப்தி பின்னர் ஏற்பட்டுவிட்டது.

சங்கரதாஸ் சுவாமிகள் 1900—1901ம் ஆண்டுகளில் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் வண்ணார்ப்பண்ணையில் தற்பொழுது ஒரு படமாளிகை இருக்கும் வளவில் தங்கியிருந்து சில நாடகங்களை மேடையேற்றி இலங்கையை வெற்றி கொண்டு சென்றிருக்கிறார் என்பதை பலர் இன்றும் மறக்காமலிருக்கிறார்கள். இலங்கைக்கு இரண்டு மூன்று தடவைகள் விஜயம் செய்து யாழ்ப்பாணத்தில் பெயர்போன பூதத்தம்பி நாட்டுக்கூத்தை முதற்தடவையாக நாடகமாக மேடையேற்றி அழியாச் செல்வமொன்றையும் சுவாமிகள் எமக்கு வழங்கிச் சென்றிருக்கின்றார்! இது அவரின் சேவைக்கு ஒரு சான்று.

## நினைவிலிருக்கும் நடிப்பு

நடிப்புத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டு நாடகங்கள் எழுதித் தமிழ் நாடக உலகுக்கு புத்துயிர் அளித்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். இன்று இலங்கையில் மட்டுமின்றி இந்தியாவிலும் கூட மேடை நாடகங்களின் தந்தையாக விளங்கும் பல கலைஞர்களுக்கு சங்கரதாஸ் சுவாமிகள் ஒரு தந்தையாக விளங்கியிருக்கின்றார். குறிப்பாக ஈழத்துக்கு அன்னார் ஆற்றியுள்ள அளப்பரிய சேவை பாராட்டத்தக்கது.

நாடகங்கள் எழுதி நாடகங்களில் நடித்து நாடகத் துறைக்காகவே தமது வாழ்நாளை அவர் செலவழித்திருக்கிறார். நாடகங்களில் சுவாமிகள் துச்சாதனனாக நடித்துத் துயிலுரியும் கட்டம் பார்ப்பவர்களை மெய் சிலிர்க்க வைக்கும் என்பதைக் கலைஞர்கள் பலர் இன்றும் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள். சங்கரதாஸ் சுவாமிகள் கலைஞர்களுக்கு வழி காட்டியவர். அவரை அன்றைய தினம்போல் நாம் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

# காலவேகம்

வி. ஏ. மகாதேவன்.
தலைவர் தமிழ்நாடு நாடக நடிகர் சங்கம்
மதுரை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலார்
தோன்றலிற் தோன்றுமை நன்று" —குறள்

பசு மரத்தாணி போல் மனதில் பதிந்துவிட்ட இந்தக் குறள் வரிகளை இன்றுவரை நெஞ்சினின்றும் எடுத்தெறிய என்னால் முடியவில்லை. நான் மட்டுமல்ல. கலை உலகில் காலடி எடுத்து வைத்தவர் அத்தனை பேரும் விரும்புவதும் இதுதான். ஆனாலும் புகழ் என்பது இந்தக் கலைக்கு மட்டுந்தான் சொந்தமா? வேறு தொழில்களில் இல்லையா? ஏன் இல்லாமல்? ஆனாலும் புகழை விரும்பும் மனித உள்ளம் எத்தன்மையதோ, அதைப் பொறுத்ததே அவனது வேட்கையும் செயலும். சுருக்கமாகக் கூறுமிடத்து உயிர்ப் பிராணிகளில் உயர்ந்தவன் மனிதன். அவன் தனக்கென எல்லாவற்றிலுமே ஒரு வழியை, ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். மனிதருள் பலவகை. மனித குலத்தை ஆட்டிப் படைப்பது அவர்களது உள்ளத்திலே எழுகின்ற உணர்ச்சிகளே. இந்த உணர்ச்சிகள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாகப் பரிணமிக்கிறது. இப்படிப் பலதரப்பட்ட உணர்ச்சிகளுக்கு அடிமையாகிவிட்ட மனிதர்களுள் மிக மிக மென்மையான உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டவர்களே கலைஞர்களாகிறார்கள். ஒவ்வொரு விநாடியும் அவனது உள்ளத்தில் தோன்றுகின்ற உணர்ச்சிக் குவியல்களையெல்லாம் ஒன்று திரட்டி, தன்னுள் அடக்கி, அதற்கொரு உருவம் கொடுத்து அதையே மக்கள் மத்தியில் அவன் நடமாட விடும்போதுதான் இந்த மெல்லிய ரக உணர்ச்சிகள் அவனை எவ்வளவுதூரம் ஆட்கொண்டிருக்கின்றன என்பது புலனாகும். அவன் தன்னையும் அடிமைப்படுத்திக்கொண்டு "யான் பெற்ற இன்பம் இவ்வையகமெலாம் பெற வேண்டும்" என்ற சமதர்ம வாக்குச்கொப்ப எஞ்சியுள்ள மனிதவர்க்கம் பூராவையுமே தன் வயப்படுத்தி அவர்களை அடிமையாக்கி ஆட்சி கொள்கிறான். சட்டமும், சம்பிரதாயமும், வாளும், வேலும் செய்ய முடியாத காரியத்தைக் கலைஞன் மிக எளிதாக முடித்து விடுகிறான். இப்படி வாழ்கின்ற கலைஞர்கள் இன்று பலவிதமாகப் பிரிந்து கிடக்கின்றார்கள். குறிப்பாக, இயல், இசை, நாடகம் என்ற மூன்றுமே கலைத்தாய்க்குச் சொந்தமானது. ஆயினும் இம்மூன்றினுள் நாடகமே முதலிரண்டைவிடச் சிறந்தது என்று துணிந்து கூறலாம். முத்தமிழிலே ஒன்றையொன்று மிஞ்சியதாகக் கூறுவது எப்படிப் பொருந்தும் எனக் கேட்கலாம். இயலும் இசையும் எப்போதும் மற்றொன்றுடன் தொடர்பில்லாமல் நிற்கின்றன. உடலில் ஒட்டிக் கொண்டிருந்தாலும் கண்ணும், காதும் எப்படித் தனித்தன்மையுடன் இயங்குகின்றனவோ அப்படியேதான் இயலும் இசையும். நாடகமோவெனின் இவ்விரண்டையுமே தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. இயலும், இசையும் நாடகத்திலே கரைந்து விடுகிறது. அது தனித்து நிற்பதோடு இயல், இசை, இரண்டையும் தன்னுள் அடக்கி ஆட்சி கொள்கிறது, பெரிய சாம்ராஜ்ய சக்ரவர்த்தி போல். இந்தத் தன்னிச்சையான பேரரசின் மாமன்னனே நாடகக் கலைஞன்.

இத்தனை சிறப்பியல்புகளையும் பெற்ற நாடகக் கலை இன்று கொஞ்சங் கொஞ்சமாக மக்களிடையே மறைந்து வருகிறது. இதற்குப் பல காரணங்கள். முக்கியமாகத் தென்படுவது கால வேகமே. இன்றைய உலகம் சினிமா மயமாகி விட்டது. விஞ்ஞானம் மனிதனை தன்வயப்படுத்துகிறது. அத்துடன் பல பெரிய நகரங்களில் நாடகத்திற்கென தனியான கொட்டகைகள் இல்லாமை. அப்படியே இருக்கும் ஒன்றிரண்டு நகரங்களிலும்கூட கொடுக்க முடியாத அளவிற்கு கட்டணம். இவற்றையெல்லாம்விட மக்கள் இன்று சினிமா நட்சத்திரங்களையே காண விரும்புவதால் நாடகத்தை மட்டும் தொழிலாகக்கொண்டவர்களுக்கு நல்ல வரவேற்பு இல்லை. தென் மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நாடகக் கலைஞர்களுக்கு கொஞ்சம் கௌரவமிருந்து வருகிறது. இதற்குக் காரணம் கிராம மக்கள் கொண்டுள்ள தெய்வ நம்பிக்கையே. கோயில்களும், விழாவும் இல்லையென்றால் இந்த நாடகங்களும் இல்லை. ஆனால், காலத்தின் சுழற்சி மிக வேகமானது. இவ்வளவு வேகமாக முன்னேறும் விஞ்ஞான காலத்திலும் நாடகக் கலைஞர்கள்

ஏதோ ஒரு அரை வயிறு சோறுடன் காலந் தள்ளிக் கொண்டுதான் வருகிறார்கள்.

இப்படிக் கலையிலே முதன்மை பெற்ற நாடகத்தைத் தொழிலாகக் கொண்டு வறுமையிலே உழலுகின்ற இந்தக் கலைஞர்களுக்கு எப்போது நல்ல காலம் வரும்? அவர் வயிறார உண்டு, மனமார உடுத்து எப்போது வாழ்வார்கள்? பொறுத்திருந்து பார்க்க வேண்டும், நாடகக் கலைஞர்கள் சார்பிலே ஒரு யோசனை. இன்றைய அரசு தற்போதிருக்கும் சினிமா கொட்டகைகள் அத்தனையுமே மாதத்திற்கொரு நாள் சினிமாக் காட்சிகளை நிறுத்திவிட்டு நாடகங்களை நடத்த வேண்டுமென்று, ஒரு உத்திரவைப் பிறப்பித்தால் இந்தக் கலைஞர்களுக்கு வாழ வழி வகுத்தது போலாகும். கலையும் வளரும். இது காரிய சாத்தியமற்றது என்று தள்ளிவிடக்கூடாது. என் ஆலோசனை பரிசீலனைக்குரியது. எங்கள் குருநாதர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவையொட்டி எனது வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க வேண்டுமென்று அரசாங்கத்தையும், மக்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

### நாடகக் கலை

உலகியல் வாழ்வை யெல்லாம்
உணர்ச்சியோ டுருவ மாக்கிப்
பலசுவை யினிது கூட்டிப்
பாட்டுடன் கதையும் சொல்லும்
இலகுநாட் டியமுங் காட்டி
எழில்பெற நிகழும் வேதம்
நலமுயர் புகழின் ஓங்கும்
நாடகக் கலைய தாமே!

—சுத்தானந்த பாரதியார்.

——

நாடகக் கலை என்பது நமது தமிழ் நாட்டிலே பழைமையானது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பும் இருந்தது. சிலப்பதிகாரத்திலேயே நாடகக் கலை இருக்கிறது. இக் காவியத்திலே அரங்கேற்று காதையிலே நாடகமேடை அமைப்புக்கூடச் சரியாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்தனை கோல் நீளத்தில் இத்தனை கோல் அகலத்தில் இவ்வளவு உயரமுள்ளதாக நாடக மேடை இருக்கவேண்டுமென்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

ஸர். ஆர். கே. ஷண்முகம்.

குன்றாத எழிலுக்கும்
குறையாத நறுமணத்திற்கும்

ரெமி

அழகு
சாதனங்கள்

# மனங்கவர் மனோன்மணீயம்

பி. ஜனார்த்தனம் பிள்ளை எம்.ஏ.



தமிழிலக்கியச் சோலையில் தண்மணம் பரப்பி நிற்கும் தருக்களில் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தனிச்சிறப்புடையது. முத்தமிழும் ஒத்துவரும் முதற் காப்பியமும் இதுவே. நற்றமிழ் வல்ல நாவலரின் நாவிலும் நெஞ்சிலும் நடமிடும் கன்னித் தமிழின் கால்களுக்குச் செஞ்சிலம்பணிவித்தவன் சேரன் தம்பி இளங்கோ. செந்தமிழன்னைக்குச் சிறுவிரலணியாக மிஞ்சியைத் தந்தேன் என்றார் செஞ்சொற் புலவராம் சுந்தரனார். ஆங்கிலப் புலவன் 'லிட்டன் பிரபு' எழுதிய 'இரகசியவழி' என்ற கதையை அடிப்படையாகக் கொண்டு அழகு தமிழில் அவர் ஆக்கிய அருமை நாடகமாம் மனோன்மணீயத்தையே அவ்வாறு குறிப்பிட்டார். சிலம்பும் சிறுவிரலணியும் செய்தணிவித்தவர் சேரநாட்டினரே என்பது சிந்தித்தற்குரியது. எனின், முத்தமிழின் முதன்மையான இயலுக்குச் சங்கமிருந்த மதுரையையுடைய பாண்டி மண்டலமும், இசைக்குக் காவிரி பாயும் சோழ மண்டலமும், நாடகத்திற்குச் சேர நாடும் சிறப்புடன் விளங்கிய தெனினும் ஒக்குமன்றோ!

சிந்திக்குந்தோறும் சிந்தையிற் செம்மை சேர்ப்பது இயல். இதற்கிடம் மனம். கேட்கக் கேட்கத் தெவிட்டாத தெள்ளமுதம் இசை. இதற்கிடம் ஒலியை வெளியிடும் வாய். காண்பார் கருத்தைக் கவருந் தன்மையது நாடகம். இதற்கிடம் உடல். எனவே முத்தமிழும் மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களையும் இடமாகக் கொண்டன எனலாம். நினைப்பின் வழியே வாக்கும் செயலும் நிகழ்கின்றது. அவ்வாறே இயலை ஒட்டியே இசையும் நாடகமும் இயங்க முடியும்.

வடமொழியில் காவிய இலக்கணம் கூறுமிடத்து சுருத காவியம் (கேட்கும் இலக்கியம்) த்ருஸ்ய காவியம் (காணும் இலக்கியம்) என இரு கூறுக்கிக் கூறுவர். இதில் இயலும் இசையும் கேட்கும் இலக்கியத்திலும் நாடகம் காணும் இலக்கியத்திலும் அடங்கும். தமிழிலோ கேள்விக்கும் காட்சிக்கும் அடிப்படையான எண்ணும் இலக்கியத்திற்கும் இடமளித்துள்ளமை காணலாம். இயல் தனித்து நிற்பது. இசை இயலோடு இணைந்து வருவது, நாடகமோ இயலும் இசையும் இணைந்து நிற்பது, எனவே நாடகத்தின் தனிச் சிறப்பு விளங்குமன்றோ?

வள்ளுவன் தந்த வான் குறளுக்குச் சங்கப் பலகையில் இடம் தந்தது மதுரை. எனவே, மனமிருக்குமிடமாகிய மதுரையே இன்முகமாயின், வலக் கண் கம்பனைத் தந்த காவிரி நாட்டையும் இடக்கண் சிலம்பு யாத்த சேர நாட்டையும் (மேற்குத் திசை நோக்கி நின்றால்) குறிக்கும் முப்பெரும் புலவர்களைப் பாடிய புதுமைக்கவி பாரதி "கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல்" என்று வடக்கிலிருந்து தெற்காக வரிசைப் படுத்திக் கூறினாரோ என்று எண்ண இடமிருக்கிறதல்லவா?

தமிழிலக்கிய மறுமலர்ச்சியைக் குறித்துச் சொல்லுமிடத்து பாரதியாரையே முதல்வராகக் குறிப்பிடுவர். பாவகைகளில் கும்மி, கண்ணி. சிந்து முதலிய புதுமையைப் புகுத்தியவர் இராமலிங்க சுவாமிகள். ஆனால் அவர் பாடிய பொருளோ பழமையான பக்தி ஞான இலக்கியங்களைப் பின்பற்றியதே. பாரதியாரோ நாடோடி மெட்டுக்களில் புத்தம் புதிய கருத்துக்களை வழங்கியுள்ளார். சுந்தரனாரது புதுமை வேறொரு வகையானது. இவரே தமது புதுப் பணியைக் குறிப்பிடும் போது "நாற்கவிப் புதுப்பணி" என்று கூறுகின்றார். எனவே கருத்துப் புதிதாயினும் கவிதை பழையதே. இராமலிங்கர் பழைய கருத்துக்களைப் புதிய பாடல்களில் பாடினார். சுந்தரனார் புதிய கருத்துக்களைப் பழையபாடல்களில் பாடினார். பாரதியின் கருத்தும் புதிது. கவிதையும் புதிது. எனவே தான், அவரைப் புதுமைக் கவி என்கிறோம். பாரதியார் பள்ளிச் சிறுவராயிருக்கும் போதே (1891-ல்) மனோன்மணீயம் வெளியிடப்பட்டது. எனவே, மனோன்மணீயத்தைப் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகச் சொல்லுவது பொருந்தும்.

பழமைக்கும் புதுமைக்கும் மட்டுமன்று. மேல் நாட்டுக் கீழ்நாட்டுப் பண்புகளை இணைக்கும் கண்ணி என்றும் கூறலாம். வட மொழிக் காவியமாகிய வான் மீகத்தினின்றும் கதையைக் கொண்ட கம்ப நாடர் கன்னித் தமிழில் தந்த சுதந்திரக் காவியம் இராமாயணம். சுந்தரனாரும் ஆங்கிலக் கதையைத் தமிழ்ப் பண்பிற் கேற்ப அமைத்தமை வியத்தற்குரியதே. காவியம் தந்த கம்பனைப் போல் நாடகம் தந்தவர் சுந்தரனார்.

சிலம்பின் கதையைச் சொன்னவர் மதுரைச் சாத்தனார். அதனை முத்தமிழ் நாட்டிற்கும் பொருந்துமாறு காப்பிய மாக்கியவர் இளங்கோ. ஈண்டு கதை தந்தவர் லிட்டன் பிரபு. அதனை முத்தமிழ் நாட்டுக்கும் பொருந்துமாறு மாற்றியமைத்தவர் சுந்தரனார். பொன்னைக் கொண்டு புதுப்பணி செய்து அணி செய்

வீத்த பெருமை இவ்விரு புலவர்களைச் சாரும். சிலம்பு நெஞ்சை அள்ளு மெனில் மனோன்மணீயம் மனங் கவரும் என்றால் மிகை யாகாது. இளங்கோவின் காவியத்தில் நாயக நாயகியர் வணிகர் குலத்தவர். சுந்தரரும் நாடகத்துள் நாடகமாகவரும் சிவகாமி சரிதத்துள்,

"மண்ணுலகில் காவிரிப் பூ
மாநகரில் செல்வ
வணிகர் குலத் திலகமென
வாழ்வளொரு மங்கை"

எனத் தொடங்கி வணிகர் குலப் பாத்திரத்திற்குத் தெய்வத் தன்மை அளித்துள்ளமை காணலாம்.

சிலம்பில் வரும் பாண்டியன் பொற்கொல்லன் சொற் கேட்டுத் தவறிழைத்தான், மனோன்மணீயத்துள் வரும் ஜீவக வழுதியோ குடிலனெனும் அமைச்சனின் கைப்பாவை யாகிறான். "மன்னவன் நமது நிழலில் மறைந்தனன்" என்று குடிலனே கூறுகின்றான். பண்டைக் குலமென்று முன்னைப் பழம் பெருமை கூறுவதைத் தவிர, வேறு விசேஷமான பெருமை ஒன்றும் இருப்பதாகத் தெரிய வில்லை. அதனாற்றான் பழம் பதியாகிய மதுரையிலிருந்து அம்மன்னனை சேர நாட்டின் எல்லையிலுள்ள நெல்லையில் ஒரு கற்பனைக் கோட்டைக்குள் குடியமைத்தார் போலும்.

இவ்விரு காப்பியங்களுள் சிலம்பு நாயகியின் காலணியின் பெயரைக் கொண்டது. மனோன்மணீயம் நாயகியின் பெயரையே கொண்டது. மேற்கூறியவற்றால் மனோன்மணீயம் சிலம்பின் அடியொற்றிச் சென்றிருத்தல் காணலாம். ஆங்கிலக் கருத்தினை உருக்கித் தமிழ் கருவில் உருவாக்கிய அற்புதச் சிற்பமே மனோன்மணீயம் எனலாம்.

தமிழிலக்கியங்களில் பெரும்பாலும் சிறப்பித்துக் கூறப்படும் காதலும் வீரமும் மனோன்மணீயத்திலும் சிறந்து விளக்குகின்றன. வடமொழியாளர் எண்வகை மணங்களை எடுத்தியம்புவரேனும் தமிழர் யாழோர் கூட்டத்திற்கு ஒரு சார் ஒப்புடைய இயற்கைப் புணர்ச்சியையே சிறப்பாகக் கொள்வர்.

முதலாவதாகத் தெய்வீகக் காதலின் சிறப்பு சிவகாமி சரிதத்துள் விளங்குகின்றது. அருளரும்பிய அதிபரைத் தேடியலைந்த சிவகாமி முடிவில் முனி வேடங் கொண்ட சிதம்பரனின் முன்னால் எரி வீழத் துணிந்த போது அவனும் மூதுருவம் நீங்கி,

"சிவகாமி யானுனது
சிதம்பரனே என்னச்
செப்புனமுனம் இருவருமற்
றேருருவம் ஆனார்
எவர்தாம் முன்னணைந்தனர்
என்றிது காறுமறியோம்
இருவரும் ஒன்றாயினர்
என்றே அறையும் சுருதி"

எனக் கூறி, தெய்வக் காதலின் தன்மையைச் சுட்டுகின்றார்.

இரண்டாவதாக, மனோன்மணியின் தோழி வாணிக்கும், சுந்தர முனிவரது சீடர்களுள் ஒருவனாகிய நடராசனுக்கும் ஏற்பட்ட காதல். இதனை மானுடக் காதல் என்று கூறலாம். ஏனெனில் இது தான் "இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல் இருவர் சிந்தையும் இயல்பாயுருகி ஒன்றுந் தன்மையாகும்"— இயற்கைக் காதல் இதனை ஜீவக வழுதி பிஞ்சிற் பழுத்த செயலென்று கூறி எளனம் செய்தான். வாணியின் தந்தை சகடர் என்ற பிரபு. பொருளாசை கொண்ட பேயன் குடிலன் மகன் பலதேவனுக்கு வாணியைக் கொடுக்க விரும்பினால் நடராஜனைச் சுத்தமே பித்தன் என்று நினைப்பவன். எனினும் எல்லாத் தடைகளையும் வென்று இறுதியில் வாணியின் காதலே வென்றது.

மூன்றாவதாக, கதாநாயகியாகிய மனோன்மணிக்கும் சேரவேந்தன் புருடோத்தமனுக்கும் இடையே ஏற்பட்ட கனாக் காதல். இது பாணாசுரன் மகள் வாசவதத்தை அனிருத்தனைக் கனவில் கண்டு காதலித்ததனோடு ஒக்கும். புருடோத்தமனும் மனோன்மணியும் ஒரே வேளையில் கனாக் காண்கின்றனர். உள்ளத்தெழுந்த உணர்ச்சிகளை ஊமை கண்ட கனவு போல் உரைக்க முடியாமல் திண்டாடுகின்றனர். புருடோத்தமன் ஆண்மகன். போரிடையேனும் கனவுக் கன்னியை மறக்க முயல்கின்றான். மனோன்மணியோ பெண். விள்ளவும் முடியாமல் தள்ளவும் முடியாமல் தவிக்கின்றாள். தந்தைக்குக் கீழ்ப்படியும் மகளாக, மரபு நிலையில் எதிர்க்கத் துணிவின்றி மனம் விரும்பாத பலதேவனுக்கே மாலையிடத் துணிகின்றாள். அங்குத் தான் விதி கனாக் காதலனைக் கண் முன் கொண்டு நிறுத்துகிறது. குடிலனைச் சிறை செய்து சுருங்கை வழிச் சென்ற சேரன் கனவிற் கண்ட காரிகை காலியானைக் கோலத்தில் நிற்பதைக் கண்டான். இருவர் கண்களும் சந்தித்தன. தந்தையின் ஆணை, மரபு, மானம் எல்லாம் தகர்ந்து விட்டன. மனங் கொண்ட மணாளனின் கழுத்தில் மாலையிட்டாள் மனோன்மணி.

மேற்கூறிய மூன்றுவகைக் காதலிலும் சிவகாமி சிதம்பரனது தெய்வீகக் காதல் சோழ நாட்டிலும். வாணி நடராஜனது மானுடக் காதல் பாண்டி நாட்டிலும், மனோன்மணி புருடோத்தமனது மானுடமும் தெய்வீகமும் கலந்த காதல் சேரநாட்டினுமாக (நிகழ்ச்சி பாண்டி நாட்டிலேனும் வாழ்வு சேர நாட்டில்) நடந்தது காண்க.

அடுத்தபடியாக, வீரச் சுவையும் இந்நாடகத்துள் சிறப்புற அமைந்துள்ளமை காணலாம். ஆதியின்னதென்று ஓதுதற்கரிய வழுதியின் தொழுகுலத்தில் தோன்றியவன் ஜீவகன். குடிலனது கைப்பாவையாக இருப்பினும், போர் வந்தபோது புலியெனச் சீறி எழுகிறான். படைஞரிடம் அவன் கூறும் வீரவுரை இனப்பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஆகியவை அடங்கிய ஒரு சொற்பொழிவாகவே அமைந்து விடுகிறது.

"தாமிரபர்ணியின் நீரை
ஒருதுளியேனும் நீர்
உண்டுவீராயின்" நாடு

பிறர் கைப்படப் பொறுப்பிரோ? என்கிறான். மொழியின் பெயராலும் சுதந்தர வெறியை உண்டுபண்ண விரும்புகிறான்.

"விந்தம் அடக்கினேன்
தந்த நல் தமிழ் மொழி
தற் சுதந்திரம் அனும்
அற்பர் வாய்ப்படுமோ?"

மேலும் நாட்டபிமானத்தைக் காட்டும் சிறப்பினைப் பாருங்கள்.

"உரிமைமேல் ஆண்மை
பாராட்டார் சாந்தம்
பெருமையில் பிணத்தல்
பிறந்ததோர் சீதம்

அந்தணர் வளர்க்கும்
செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானம் உள்
மூட்டிய சினத்தீ
அன்ருே வானேர்க்கு
என்றுமே உவப்பு.''

என்றெல்லாம் நாட்டுப் பற்றினை ஒரு மதமாக்கிப் பேசுகிருன். இத்தகைய வீரம் பரம்பரைக் குணமே தவிர தன் பகுத்தறிவால் சப்பாதித்ததன்று. வீரம் பேசுமிடத்து நகைச்சுவையும் அமைத்துக் காட்டுகிருன்.

''நிடுபோர் குறித்து இவண்
நின்ருேர் தம்முள்
யாரே யாயினும்
சீராம் தங்கள்
உயிருடம்பு ஆதிகட்கு
உறும் அயர்வு உன்னி
சஞ்சலம் எய்துவோர்
உண்டெனில் சாற்றுமின்
வஞ்சகமில்லை என்
வார்த்தை ஈது உண்மை
மானமோடு அவரைஇம்
மாநகரதனுள்
சேம மாயிருந்திடுவம் திண்ணம்
உத்தம மாதர்கள் உண்டு மற்ருங்கே
எத்தனையோ பேர்
இவர்க்கு அவர் துணையாம்''

போரைக் கண்டு அஞ்சுகின்ற ஆடவர்க்கு அஞ்சுகம் போன்று கொஞ்சும் மொழி பேசும் மங்கையர் துணை நிற்பராம். என்னே ஏளனம்! போர் வெறிகொண்ட வீரர் இல்லை, இல்லை என்று கூறிப் பொங்கி யெழுகின்றனர்.

சுந்தரனுர் மனேன்மணீயத்தில் கூறிய வீரவுரைகளையும் ''சத்ரபதி சிவாஜி'' என்ற தலைப்பில் பாரதி பாடிய வீரவுரைகளையும் ஒப்பு நோக்குவார்க்கு இருவர்தம் கருத்தின் ஒருமைப்பாடு விளங்கும்.

புருடோத்தமனது வீரத்தைக் குறிப்பிடும்போது ஆசிரியர் ''சேரன் வீரமும் திருடான்'' ''வஞ்சியான் வஞ்சியான்'' என்ற தொடர்களால் காட்டுகின்ருர்.

இந்நாடகத்துள் வரும் சுந்தர முனிவருக்கு ஆத்மீயச் சீடர்கள் இருவர். கருணைகரரும் நிஷ்டாபரரும். இவ்விருவரது உரையாடலில் தத்துவ விளக்கங்கள் இடம் பெறுகின்றன. இல்லறச் சீடர்கள் இருவர் நடராஜனும் நாராயணனும். முன்னவன் ஓர் இயற்கைப் பண்டிதன். பின்னவன் உலகம் தெரிந்த உத்தமன். இவ்விருவர் மூலமாகவும் அனேக உண்மைகளை அறிவிக்கிருர் ஆசிரியர்.

அரசியல் துறையின் அனைத்து நுணுக்கங்களையும் அறிந்தவன் குடிலன். அவனது அதிதீவிர சுயநலம் அவனையே அழித்து விட்டது. அவனது பேராசை பேயாசையாக மாறி விட்டது. அதற்கேற்றபடியே அவனது கொள்கைகளும் உருப் பெறுகின்றன. பொது மக்களைக் குறித்து,

''அலகிலா மானிடர்
யாவரும் அவரவர்
நலமே யாண்டும் நாடுவர்''—என்றும்
''தன்னயங் கருதி
அன்றித் தமைப்போல
பின்னெருவனை எணிப்
பேணுவர் உளரோ?''—என்றும் கூறுகிருன்.

குடிலம் என்ற சொல்லுக்கு வளைவு, வஞ்சகம் முதலிய பொருள்கள் உண்டு. இவ்விரு குணங்களும் இவனிடம் இயைந்திருக்கின்றன. தன்னைப்போலவே உலகத்தையும் கருதுகிருன்.

''யாத்திரை போன நூற்றுவர் சோறடு
பாத்திரம் தன்னில் பங்கு பங்காக
ஒருவரை ஒருவர் ஒளித்துப் பருமணல்
இட்டகதையாய் இருக்குமோ அவ்வளவு
எட்டுமோ உலகின் கட்டைச் சிறுமதி''

என்று எடுத்துக் காட்டுடன் இயம்புகின்ருன். நாடகம் முழுமையும் குடிலனுடைய சிந்தையும் செயலும் கூத்தாடுகின்றன. ஆயினும், அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்ற அறவுரைப்படி இறுதியில் தோல்வியுற்ருன் குடிலன்.

தந்தைக் கேற்ற தனயனே பலதேவன். மகனைக் கொண்டே தன் கருத்தை முற்றுவிக்க முயல்கிருன் குடிலன். ஓரளவு வெற்றியும் பெற்ருன். திருமணத்திற்காகத் தூது சென்ற பல தேவன் மோதுபோருக்கு வழி வகுத்து விட்டான். அவனது தூதின் முக்கிய செய்தி நாஞ்சில் நாட்டினைப் பற்றியது.

''வஞ்சி நாடதற்குத் தென்கீழ் வாய்ந்த
நன்செய் நாடென்றெரு நாடுளதன்றே
எங்கட்கு அந்நாடு உரித்தாம்; அங்கு
பரவு பாடையும் விரவும் ஆசாரமும்
நோக்கில் வேறெரு சாக்கியம் வேண்டா''

என்ருன். இவ்வடிகளே திருவாங்கூர்த் தமிழ்ப்பகுதி தாய்த் தமிழகத்துடன் இணைவதற்கான போராட்டத்திற்கு ஊக்கமளித்த தெனினும் ஒக்குமன்ருே?

விஞ்ஞானம், தத்துவம், அரசியல், உலகியல், உளவியல், நாடு, மொழி, இனப்பற்றுக்கள் ஆகிய அறிவுத்துறைகள் நிறைந்த மனேன்மணீயம் மனங் கவரும் தன்மையது என்பதற்கையமில்லை.

பேராசிரியராக விளங்கிய சுந்தரம் பிள்ளை தமது 42 வயதிற்குள் செய்திருக்கும் பெரும்பணி போற்றற்குரியது. கொடுமையாளக் குடியிருப்புடையவராயினும் அவரது தமிழ்க்காதல் துதிக்கப்படுவதே. ஆசிரியர் பெருமான் கூறியவாறு எத்திசையும் புகழ் மணக்கும் தமிழணங்கின் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்தி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

பாண்டிச் சேரியில்

உங்கள் டாக்டர் எழுதித் தரும்

(பொசியம் மிக்சர் உட்பட)

எல்லா மருந்துகளும் இரவு பகல்

எந்த நேரத்திலும்

☆

கிடைக்குமிடம் :

அசோக் மெடிக்கல்ஸ்

(பார்மசி)

53, நேரு வீதி, பாண்டிச்சேரி-1

(இரவும் பகலும் விற்பனை உண்டு)

C. N. Ethiraj & Co

Whole Sale & Retail - Piece Goods Merchants

17, GODOWN STREET, MADRAS-1

எண்ணிறந்த டிசைன்களில் கண்ணைக் கவரும் நவீன பார்டர்களில்

சேலைகள்,
சோளிகள்,
சரிகை வேஷ்டிகள்,
துப்பட்டாக்களும்,

இத்துடன்

மில் வேஷ்டிகள், ஷர்டிங்குகள்,
லான், வாயல், மில் சேலைகள்,
இங்கிலீஷ் சர்டிங்குகள்,
டெர்லின் & குவாலியர்
ரயான் ஷர்டிங்குகள்,
கோட்டிங்குகளும்
தேர்ந் தெடுக்கச் சிறந்த இடம்

மொத்த வியாபார விலையில் சில்லரையாக கிடைக்கும்

☆

C. N. எத்திராஜ் & கம்பெனி

17, கிடங்குத் தெரு

மதராஸ் - 1

போன்: 31538



# சுவாமிகளின் கோவலன்



தி.க.ச.

ஏறத்தாழ ஐம்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன் சுவாமிகளால் எழுதப் பெற்ற 'கோவலன்' நாடகம் மிகப் பிரசித்தி பெற்றது. தமிழ் நாடக மேடை நடிகர்கள் அனைவரும் இந் நாடகத்தை நடித்திருக்கிறார்கள். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் பெருமையைத் தெரியாத எவனோ ஒருவன், 'கோவலன்' என்ற பெயரால் ஒரு கூத்தைக் கிறுக்கி வைத்து விட்டான் என்பது புலவர்களின் எண்ணம். எனவே, புகழ் பெற்ற அந்தக் கோவலன் நாடகத்தை இன்று புலவர்கள் சிலர் கண்டிக்கின்றனர், குறை கூறுகின்றனர். கோவலன் கதை நாடக மேடைக்கு வந்த வரலாறும் சுவாமிகளின் பெரும் புலமைத் திறனும் இவர்களுக்குத் தெரியாது. புற நானூறு, அக நானூறு, திருமுருகாற்றுப் படை, கலித் தொகை, குறுந்தொகை, நாலடியார் திருக்குறள், முதலிய தமிழ் மொழியிலே உள்ள அடிப்படை நூல்கள் அத்தனையும் சுவாமிகளுக்கு மனப்பாடம். சங்க இலக்கியங்களிலே கிடைக்கும் சீரிய பேருண்மைகளெல்லாம் சுவாமிகளின் பாடல்களிலும், உரையாடல்களிலும் எளிமையோடு வெளி வந்து உலாவுவதைக் காணலாம்.

மணிமேகலையைச் சிறிதும் மாற்றம் செய்யாமல் காப்பியப்படியே நாடகமாக்கித் தந்துள்ள சுவாமிகள், சிலப்பதிகாரக் கோவலனுக்கு வேறு வடிவம் கொடுத்திருப்பாரா என்பதைச் சிந்தித்து பார்க்க வேண்டும். நாடக மேடைக் கோவலனை அந்த நாளில் பண்டிதர்களும் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள். அவர்களில் எவரும் சிலப்பதிகாரத்தோடு நாடகக் கோவலனை இணைத்துப் பார்த்துக் குறை கூற முன் வரவில்லை.

அந்த நாளில் இலங்கைக்குச் சென்றிருந்த போது மாபெரும் புலவர்கள் நிறைந்த யாழ்ப் பாணம்தமிழ்ச் சங்கத்தில் சுவாமிகளின் புலமையை ஆராயப் பல கேள்விகள் கேட்கப்பெற்றன. அக் கேள்விகளுக்கெல்லாம் மிக எளிதாக சுவாமிகள் விடையளிக்கவே, அவரது முத்தமிழ்ப் புலமையைப் பாராட்டி சங்கத்தார் 'வலம்புரிச் சங்கு' ஒன்றைப் பரிசாகத் தந்து சுவாமிகளைப் போற்றினர். இத்தகைய ஒரு பெரும் புலவர் மீது சிலப் பதிகாரத்தை அறியாதவர் என்ற குற்றச் சாட்டை வீசுதல் முறையன்று. கோவலன் நாடகம் தோன்றிய வரலாறு இது :

'நளவெண்பா' பாடிய **புகழேந்திப் புலவர்** பெயரால் அம்மானைப் பாடலாக நங்கைக் கதைகள் பல நம் நாட்டில் உலவி வந்தன. இக்கதைகள் நம்முடைய தாய்மார்களைப் பெரிதும் கவர்ந்தன. அல்லி அரசாணி மாலை, அபிமன்யு சுந்தரி மாலை, புலந்திரன் தூது, பவளக் கொடி மாலை, காத்தவராயன் கதை முதலிய பல கதைகள் இந்த வரிசையில் இடம் பெற்றவை. புலமைக் கடல் புகழேந்திப் புலவருக்கும் இந்தக் கதைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்க முடியாது. ஆனால் இந்தப் புத்தகங்களிலெல்லாம் புகழேந்திப் புலவர் அம்மானை என்றே குறிப்பிட்டிருக்கும். தன்னை மறைத்துக் கொள்ள விரும்பிய யாரோ ஒரு புலவர் புகழேந்திப் புலவர் மீது இப்பழியைச் சுமத்தினர் என்றே கொள்ளவேண்டும்.

தாய்மார்களைக் கவர்ந்த சுவை மிகுந்த இக் கதைகள் பெரும்பாலும் நாடகமாக்கி நடிக்கப் பெற்றன. இந்த நங்கைக் கதைகளிலே ஒன்று தான் கோவலன் என்ற பெயரால் நாடக மேடைக்கு வந்த 'கண்ணகி கதை'.

முதலில் கோவலனை நாடக மேடைக்குக் கொண்டு வந்து நடித்தவர்கள் ஆலந்தூர் ஒரிஜினல் நாடகக் கம்பெனியாராவர். அவர்கள் இந் நாடகத்தை இரண்டு பாகமாக இரண்டு இரவுகள் நடத்தியிருக்கிறார்கள்.

அல்லி பரமேசுவர ஐயர் கம்பெனியில் சுவாமிகள் இருந்த போது கோவலன் நாடகம் ஒரே இரவில் நடிக்கும் முறையில் புதிதாக எழுதப் பெற்றது. விலைமாதர் கூட்டுறவால் அல்லற்படும் இளைஞர்களுக்கு நீதி புகட்ட ஒரு புதிய கதையை

எழுதுவதைவிட, நாடு நன்கறிந்தகோவலனை எழுதுவது நல்ல பயனைத் தரும் என்பது சுவாமிகளின் நோக்கமாயிருந்திருக்கவேண்டும். முதலில் கோவலனாக நடித்த சூரிய நாராயண பாகவதர் அவர்கள் சிறந்த பாடகராக இருந்ததால், அவருக்கென்றே பெரும்பாலும் வசனங்கள் தேவையில்லாத முறையில் எளிய நடையில் முழுதும் பாடல்களாகவே எழுதிக் கொடுத்தார் சுவாமிகள். அதன் பிறகு, பி. எஸ். வேலு நாயர் அவர்கள் கோவலனாக நடித்தபோதுதான் சில வசனங்களும் எழுதப் பெற்றன. அல்லி பரமேசுவர ஐயர் குழுவில் என் தந்தையாரும் நடிகராயிருந்தமையால் இச் செய்திகளை அவர் மூலம் நான் அறிய முடிந்தது.

கோவலன் நாடகத்தை முதன் முறை மதுரையில் அரங்கேற்றிய போது நிகழ்ந்த ஒரு சம்பவம் சுவாமிகளின் புலமைக்கு மற்றொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கோவலன் நாடகத்தை எல்லோர்க்கும் தெரிந்திருப்பதால் விரிவாகக் குறிப்பிட வேண்டியதில்லை. கண்ணகி கொடுத்த காற் சிலம்பை விற்று வர மதுரை நகருக்குப் போவதாகக் கூறுகிறான் கோவலன். அப்போது கண்ணகியின் வாய் மொழியாக,

''மாபாவி யோர் கூடி
வாழும் மதுரைக்கு
மன்னா போகாதீர் இன்று''

என்ற பாடல் பாடப் பெறுகின்றது. மதுரை மக்கள் முன்னிலையிலேயே மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்குப் போக வேண்டாம் என்று பாடினால் அவர்கள் மனம் எப்படியிருக்கும்?.....இந்தப் பாடலைத் தொடங்கியதும் சபையோர் கூச்சலிட்டு, எங்கே சங்கரதாஸ்?......கொண்டுவா மேடைக்கு,' என்று ஆரவாரம் செய்தார்கள்.....சுவாமிகள் மேடைக்கு வந்து கம்பீரமாக நின்றார். சபையிலிருந்து கேள்விகள் சரமாரியாகக் கிளம்பின. 'மாபாவியோர் கூடி வாழும் மதுரை' என்று எழுதியதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென மக்கள் குழப்பம் செய்தார்கள். சுவாமிகள் தமது கரங்களை உயர்த்தி சபையோரை அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டு, தமது கருத்தை விளக்கத் தொடங்கினார்.

''மா என்ற சொல் திருமகளாகிய இலக்குமியையும் பா என்ற சொல் கலைமகளாகிய பாரதியையும் வி என்ற சொல் மலை மகளாகிய பார்வதியையும் குறிக்கிறது' என்று கூறி, அதற்கு ஆதாரமாகப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திலிருந்து சில செய்யுட்களைப் பாடி விளக்கம் தந்தார். மா பாவியோர் கூடி வாழும் மதுரை என்றால் திருமகளும், கலைமகளும், மலைமகளும் சேர்ந்து வாழும் மதுரை என்று பொருள் பெறுகிறது. அதாவது சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் மதுரையம் பகுதியில் இந்தச் சிலம்பை வாங்க ஆள் கிடையாதே என்ற கருத்துப் பெற மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்கு மன்னா போகாதீர்' என்று மதுரை நகரைப் பெருமையாக குறிப்பிட்டிருக்கிறேனே தவிர சிறுமைப்படுத்தும் எண்ணம் எனக்கில்லை' என்றார். சபையோர் சுவாமிகளின் புலமையை வியந்து கைதட்டிப் பாராட்டினார்கள். முன்வரிசையில் இருந்த தமிழ்ச் சங்கப் புலவர் ஒருவர் எழுந்து,

'சுவாமிகளே! நீர் எந்தக் கருத்தில் எழுதியிருந்தாலும் சரி; உமது புலமைக்குத் தலை வணங்குகிறேன்' என்றார்.

---

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டுக்கு நல்ல பயன்

—சுத்தானந்த பாரதி

---

# எது நாடகம்?

## தமிழன்பன்

☆ உயிர் பிறந்த அன்றே ; உணர்வு பிறந்த அன்றே
நாடகமும் நலமுறப் பிறந்தது.

☆ பெரிய உலகத்தையும் சிறிய இதயத்தையும்
இணைக்கும் எழில்மிகு பாலமே, நாடகம்.

☆ உலகத்தைச் சிறிதாக்கி, உள்ளத்தைப் பெரிதாக்கும்
உன்னதக் கலையே, நாடகம்.

☆ மெய்ப்பாட்டுணர்வுகளின் மொத்தத் தொகையே
நாடகம் என்ற பேரிலக்கியமாகும்.

☆ மனிதர்களைப் புனிதர்களாக மாற்றும் மாபெரும்
ஆற்றல்தான், நாடகம்.

☆ உணர்ச்சி அணுத்திரளின் எழில் உருவமே
நாடகமாகும்.

☆ உயிர் என்னும் நாடகம் உடல் என்னும்
அரங்கத்தில் நிகழ்கின்றது.

☆ நாடு, அவ்வப்போது திருத்தம் பெற அறிவுரை
கூறும் ஆசானுகும் நாடகம்.

☆ குருடருக்கும் பார்வை வழங்கும் குலவுதமிழ்
மருத்துவர்தான், நாடகம்.

☆ உணர்ச்சி அணுக்களை உரிய வழியில் ஆற்றுப்
படுத்தும் வழிகாட்டியே, நாடகம்.

☆ நற்கலைகளின் நறுந்திலகம் — பொற்புமிகும்
நாடகமே இந்த உலகம்.

☆ காண்கின்ற உள்ளங்களை, கருணை கூர்ந்து
செங்கோல் செலுத்தி ஆளும் காவலனே நாடகமாகும்.

☆ மூன்றுமணி நேரத்திற்குள் உலகவாழ்வு முழுவதையும் காட்டும்
மாயவித்தை புரியும் மந்திரக்காரர்தான், நாடகம்.

☆ ஒன்பது சுவைகளெனும் ஒன்பது மணிகளும் பதிக்கப்பெற்ற,
கலைத்தாயின் ஒப்பற்ற மணிமகுடம்தான், நாடகம்.

☆ நாட்டின் அகத்தே உலவுகின்ற உணர்வுகளையெல்லாம்
தொகுத்து வகுத்துத் தரும் நுண்கலையே, நாடகம்.

☆ நாடகம் என்ற வானில் பளிச்சிடும் மின்னலே, உள்ளத்து உணர்வுகள். அம்மின்னொளியை அடுத்து வரும் இடியோசையே நடிப்பு.

☆ ஏட்டில் எழுதி விளக்குவதுபோல் அங்கங்களில் எழுதி விளக்கும் ஏற்றமிக்க சாதனமே, எழில் ஆர்ந்த நாடகமாகும்.

☆ ஊன்றிக் கவனித்தால் வாழ்க்கையும் நாடகமும் ஒன்றே. வாழ்க்கை என்பது ஒன்றி விடுவது. நாடகம் என்பது ஒன்றுமல் ஒன்றுவது.

☆ இயல், இசை என்ற இரு கிளைகளும் பொருத்தப்பெற்ற ஒட்டுமாஞ்செடியிலிருந்து கிடைக்கும் தீங்கனியே நாடகமாகும்.

☆ நடிகர்கள் படைக்கும் நடிப்பைக் காணிக்கையாக ஏற்றுக் கொண்டு நலம் அருளும் குலதெய்வமே நாடகத்தாய்.

☆ படித்துச் செரிக்க முடியாத கருத்துக்களையும் பார்ப்போர் உள்ளத்தில் நிறுத்தி வைத்து, நிலைபெற்ற இன்பம் வழங்கும் ஒப்பற்ற உயிரோவியக் கூடமாகும், நாடகம்.

☆ நவரத்தினங்கள் இழைக்கப்பட்டு நல்லணிகளெனத் திகழ்வது பசும்பொன் எனும் ஆடகம். நவரசங்கள் இணைக்கப்பட்டு நற்கலையென விளங்குவது கூத்து எனும் நாடகம்.

☆ நாடகம், உள்ளத்திற்கு வலிவையும் உடலுக்குப் பொலிவையும் தருகின்றன. எனவேதான், நாடகக் கலைஞர்கள் எத்துணை வறுமையுற்றிருந்தாலும் அவர்களது புகழே பிறர்க்குத் தென்படுகிறது.

☆ முத்தமிழிலே மூன்றுவது தமிழாக விளங்கும் நாடகம், முதலிரண்டான இயலையும் இசையையும் தன்னகத்தே உள்ளடக்கியது. எனவே முக்கனியின் சுவை விளங்குவது போல், நாடகத்தில் முத்தமிழும் முழங்குகின்றன.

---

கண்ணைச் செவியைக் கருத்தைக் கவர்ந்து நமக்கு
எண்ணிய போதனைகள் ஈவதற்கு—நுண்ணும் இந்த
நாடக சாலையொத்த நற்கலா சாலையொன்று
நீடுலகில் உண்டோ நிகழ்த்து.

— கவிமணி

---

# இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்

**165, வக்கீல் புதுத் தெரு; மதுரை-1.**

தந்தி : "ராம்சென் பாங்க்", தபால் பெட்டி எண் : 96 தொலைபேசி எண் : 2444.

தலைவர் :

**திரு. ஏ. கே. திருவேங்கடப்ப நாயக்கர்**

நிர்வாக சபை அங்கத்தினர்கள் :

1. திரு. ஏ.டி.எம். இராமநாதன்
2. ,, பி. வி. ஏ. வெங்கடசாமி
3. ,, ஆர். வையப்ப நாயக்கர்
4. ,, எம். முத்தையா கோனர்
5. ,, எஸ். ராமசாமி நாயுடு, M.A.B.L., M.L.A.
6. ,, க. தி. சுப்பா ரெட்டியார்
7. ,, டி. தங்கச்சாமி
8. ,, கே. கல்யாணி
9. திரு. ஏ. எல். முத்துச்சாமி நாயுடு
10. ,, ஆர். மாடசாமி
11. ,, ஏ. எம். ராமமூர்த்தி
12. ,, கே. கரியமால் அழகர்சாமி
13. ,, வே. வே. ராமசாமி, M.P.
14. ,, எஸ். கொண்டல்சாமி நாயுடு
15. ,, ஆர். கிருஷ்ணசாமி நாயுடு
16. ,, "டிப்டி ரிஜிஸ்டிரார், சிவகெங்கை சர்க்கார் பிரிதிநிதி"

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... | ரூ. 55.75 லட்சம் |
| சேம நிதியும், இதர ரிசர்வ் நிதிகளும் | ... | ரூ. 35.34 ,, |
| அலுவல் நிதிகள் | ... | ரூ. 367.47 ,, |
| டிபாசிட்டுகள் | ... | ரூ. 144.99 ,, |

சேவிங்க்ஸ் டிபாசிட் வட்டி விகிதம் ... 4%

நிரந்தர இட்டு வைப்பு வட்டி விகிதம் ... 5½% முதல் 7½% வரை

36 மாதங்களும், அதற்கு மேலும் பெற்றுக்கொள்ளப்படும் நிரந்தர இட்டு வைப்புகளை (பிக்சட் டிபாசிட்) அசல் வட்டியுடன் திருப்பித் தர, தமிழ்நாடு அரசாங்கம் உத்திரவாதம் அளித்துள்ளது.

மற்ற விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

**எஸ். சிவராஜன்,** பி.ஏ., எச்.டி.சி.,
காரியதரிசி.

## செங்கற்பட்டு ஜில்லா கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்

எண்: ஜி. 1113.

தலைமை அலுவலகம்:

*21-24* ஜெகாங்கீர் தெரு

சென்னை-*1*.

தொலைபேசி: 23614 தந்தி: "COHOL SALE"

★

கிளை அலுவலகம்:

காஞ்சீபுரம், திருத்தணி, தண்டையார்பேட்டை,
செங்கற்பட்டு, திருவள்ளூர், ஆலந்தூர்,
மதுராந்தகம், பொன்னேரி, ஊத்துக்கோட்டை.

தலைவர்:

திரு. V. K. இராமசுவாமி முதலியார் M. L. C.,

*இச் சங்கம் அரசாங்க ஏஜண்டாக இரசாயன உர வகைகளை மொத்தமாகவும், சில்லரையாகவும், விநியோகிக்கிறது. சர்க்கரை, மளிகை, பருப்பு வகைகளும், சங்கத்தின் கிளை அலுவலகமாகிய காஞ்சீபுரத்திலுள்ள சொந்த ஆலையில் தயார் செய்த அரிசி, கடலை எண்ணை, பிண்ணுக்கு, கலப்பு உர வகைகள், (நெல், கரும்பு, வேர்க்கடலை, வாழை, இவைகளுக்கு உகந்த கலப்பு உர வகைகள்.) விநியோகம் செய்கிறது. சென்னையில் உள்ள கிளைப் பகுதியாகிய தண்டையார் பேட்டையில் உள்ள சொந்த ஆலையில் தயார் செய்த நல்லெண்ணெய், எள்ளு பிண்ணுக்கு முதலியவைகளையும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும் விநியோகம் செய்கிறது.*

**P. A. இக்னீஷியஸ்**

*காரியதரிசி.*

## The Chintadripet Co-operative Bank Limited, No. 1628.

121, Swami Naicken Street

MADRAS-2

ESTD: 1915 PHONE: 86392

| | | |
|---|---|---|
| Authorised Capital | - | Rs. 1. 5. lakhs |
| Working Capital | - | Rs. 10. 00 lakhs |

**All Kinds of Deposits Accepted**

**Rates of Interest:**

| | |
|---|---|
| CURRENT DEPOSITS | I percent |
| SAVINGS DEPOSITS | 4 Percent |

Fixed Deposits for Sums of Rs. 50 and over

| For and over | but less than | Rate% P. a |
|---|---|---|
| 6 Months | 12 Months | $5\frac{1}{2}$% |
| 12 ,, | 2 Years | 6% |
| 2 Years | 3 ,, | $6\frac{1}{4}$% |
| 3 ,, | 4 ,, | $6\frac{3}{4}$% |
| 4 ,, | 5 ,, | 7% |
| 5 ,, | 6 ,, | $7\frac{1}{4}$% |
| 6 ,, | and above | $7\frac{1}{2}$% |

LOANS ARE ISSUED ON SECURITIES OF HOUSES AND JEWELS AT THE RATE OF 9% TO 10% P. A.

Further particulars can be had from the undersigned.

**J. GOVINDARAJULU,**

Special Officer.

## வேளாளர் கூட்டுறவு பாங்கி லிமிடெட்

நெ. 9220.

218, தங்கசாலை தெரு, சென்னை-1

ஸ்தாபதம் : 1923 தொலைபேசி எண் : 31359

தலைவர் :

திரு. T. C. துரை ரங்கம்

உபதலைவர் :

திரு. P. குப்புசாமி முதலியார்

நிர்வாகஸ்தர்கள் :

திரு. K. ஸ்ரீராமலு
,, M. S. இரத்தினவேலு முதலியார்
,, M. பாலகிருஷ்ண முதலியார்
,, K. அண்ணாமலை முதலியார்
,, V. வேணுகோபால் பிள்ளை
,, B. கன்னியப்பன்
,, C. ருக்மாங்கதன்

அதிகாரம் பெற்ற மூலதனம் : ரூ. 2,50,000
நடைமுதல் மூலதனம் : ரூ. 25,00,000

| பிக்சட் டிபாசிட்டுகள் | வட்டி விகிதம் : | |
|---|---|---|
| 6 வருடங்கள்......... | $7\frac{1}{2}\%$ | P.A. |
| 5 ,, ......... | $7\frac{1}{4}\%$ | ,, |
| 4 ,, ......... | $7\%$ | ,, |
| 3 ,, ......... | $6\frac{3}{4}\%$ | ,, |
| 2 ,, ......... | $6\frac{1}{2}\%$ | ,, |
| 1 ,, ......... | $6\frac{1}{4}\%$ | ,, |
| 6 மாதங்கள் ......... | $5\frac{3}{4}\%$ | ,, |
| 3 ,, ......... | $5\frac{1}{2}\%$ | ,, |
| சேமிப்பு டிபாசிட்டு | 4% | ,, |
| ரெகரிங் டிபாசிட்டு | 7·4% | ,, |

(ரூ 1 வீதம் 84 மாதங்கள் செலுத்தினால் 86வது மாதக் கடைசியில் ரூ. 106 திருப்பிக் கொடுக்கப்படும்.)

குறிப்பு :—சென்னை நகர எல்லைக்குள்ளடங்கிய வீடுகளின் பேரிலும், தங்க நகைகளின் பேரிலும் மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. 100க்கு 0-80 பைசே வீதம் கடன் கொடுக்கப்படும்

விவரங்களுக்கு காரியதரிசியை அணுகவும் :

T. C. துரைரங்கம்
தலைவர்

J. இராதாகிருஷ்ணன்
காரியதரிசி

## தமிழ்நாடு அரசாங்க அச்சக, எழுதுபொருள் இலாகாத் தொழிலாளர் கூட்டுறவு வங்கி

(வரையறுக்கப்பட்டது)

"மின்ட்" கட்டிடம் ∴ சென்னை-1

பதிவு எண் : G 8589 தொலைபேசி எண் : 20364

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்.........ரூ. 8,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ........ரூ. 5,74,489
காப்பு நிதி.........ரூ. 1,39,527
டிபாசிட்டுகள்.........ரூ. 9,02,183
நடைமுறை மூலதனம்......ரூ 31,79,849

———

கீழ்க்கண்ட டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. தவணைவைப்பு (Fixed Deposits)

| | | |
|---|---|---|
| 3 மாதங்களுக்கு மேல் | $5\frac{1}{2}$ | சதவிகிதம் |
| 6 மாதங்களும் அதற்கு மேல் | 6 | ,, |
| 12 ,, ,, | $6\frac{1}{2}$ | ,, |
| 24 ,, ,, | 7 | ,, |
| 36 ,, ,, | $7\frac{1}{4}$ | ,, |

2. சேமிப்பு வைப்பு (Savings Deposits) ...4 சதவிகிதம்
3. நடப்புக் கணக்கு (Current Deposits) ...$\frac{1}{2}$ ,,
4. எமது வங்கியில் தொடர்முறை வைப்பு (Recurring Deposits) அதிகலாபகரமானது.

———

விபரங்களுக்கு : வங்கிச் செயலாளருக்கு எழுதவும்.

A. பார்த்தசாரதி
கூட்டுறவு உதவிப் பதிவாளர், செயலாளர்

தொலைபேசி எண் : 2166

**மதுரை ஜில்லா கூட்டுறவு சப்ளை அண்டு**
**மார்க்கட்டிங் சங்கம்**
**A. 1437.**
**மதுரை**

தரத்தில் சிறந்தது எங்கள் "புரு" மார்க் கலப்பு உரம்.
அமோக விளைச்சலுக்கு சிறந்த பயனை அளிப்பது.
வாங்கி உற்பத்தியைப் பெருக்குங்கள்.

ஆர். இராமச்சந்திரன்
டிப்டி ரிஜிஸ்டிரார், அடிசனல் செகரட்டரி.

# ஸ்ரீ விசாலாட்சி பதிப்பகம்

மீனாட்சி நிலையம், திருப்பரங்குன்றம் சாலை
மதுரை - 3

சிறந்த இலக்கிய, நாடக, தொழில், பயண நூல்கள் வெளியிடுவோர்

இப்பொழுது விற்பனையாகி வருகிறது :—

வான் புகழ் வள்ளுவர்
பகுதி 1 முதல் 6 வரை (1 செட்) ரூ. 17-25
(ஆசிரியர் :- திரு. தி. மாணிக்க வாசகம், பி. ஏ.)

—— : விற்பனை உரிமை பெற்றவர்கள் : ——

*மீனாட்சி புத்தக நிலையம்,*
60, மேலக் கோபுர வாசல், மதுரை – 1.

# பழம் பெரும் நாடகாசிரியர்கள்

**சங்கரதாஸ் சுவாமிகள்**

வள்ளி திருமணம்
கோவலன்
மணிமேகலை
சாவித்திரி
பார்வதி கல்யாணம்
பிரபுலிங்க லீலை
அல்லி அர்ஜுனா
பவளக்கொடி
சீமந்தனி
சுலோசனா சதி
சதி அனுசூயா
அபிமன்யு சுந்தரி
பாதுகா பட்டாபிஷேகம்
இலங்கா தகனம்
சிறுத்தொண்டர்
மிருச்சகடி
பிரகலாதா
ரோமியோவும் ஜூலியத்தும் (ஷேக்ஸ்பியர் நாடகம்)
லவகுசா
சிம்பலின் (ஷேக்ஸ்பியர் நாடகம்)

**முத்துச்சாமிக் கவிராயர்**

விபிஷண சரணாகதி
பீஷ்மர் சபதம்
ஞான சௌந்தரி
தயாநிதி
கண்ணாயிரம்
லோபி (மோலியர் நாடகம்)
இராமாயணம்

**ஏகை. சிவசண்முகம் பிள்ளை**

சம்பூர்ண இராமாயணம்
கண்டி ராஜா

**பம்மல் சம்பந்த முதலியார்**

மனோஹரன்
லீலாவதி சுலோசனா
கள்வர் தலைவன்
விக்ரம ஊர்வசி
இரண்டு நண்பர்கள்
சாரங்கதரன்
நற்குல தெய்வம்
சத்ருஜித்
யயாதி
மார்க்கண்டேயர்
விஜயரங்கம்
காதலர் கண்கள்
பேயல்ல பெண்மணியே
மகபதி
மெய்க்காதல்
பொன் விலங்குகள்
சிம்ஹள நாதன்
விரும்பிய விதமே
சிறுத்தொண்டர்
காலவரிஷி
வாணிபுர வணிகன்
ரஜபுத்ர வீரன்
ஹரிச்சந்திரன்
இரத்தினவளி
புஷ்பவல்லி
கீத மஞ்சரி
பிரஹசனங்கள்
ஊர்வசியின் சாபம்
அமலாதித்யன்
சபாபதி
வள்ளி மணம்
புத்த அவதாரம்
வேதாள உலகம்
மனைவியால் மீண்டவன்
தாசிப்பெண்
சுபத்திரார்ஜுனா
கொடையாளி கர்ணன்
சகாதேவன் சூழ்ச்சி
இடைச்சுவர் இருபுறமும்
பிராமணனும் சூத்திரனும்
சகுந்தலை
ஓர் ஒத்திகை
சந்திரஹரி
மாளவிகாக்கினி மித்ரம்

**பெங்களூர் அப்பாவு பிள்ளை**

அரிச்சந்திரன்

**உடையார் பிள்ளை**

சபரிமலை ஐயப்பன்

**ராமசாமி ராஜு**

பிரபலச் சந்திரா

**சதாவதானம்**
**கிருஷ்ணசாமிப் பாவலர்**

கதரின் வெற்றி
தேசியக்கொடி
பதிபக்தி
பம்பாய் மெயில்
கவனர்ஸ் கப்

**எம் கந்தசாமி முதலியார்**
**நாடகமாக்கிய**
**ஜே. ஆர். ரங்கராஜுவின் நாவல்கள்**

இராஜாம்பாள்
இராஜேந்திரா
சந்திரகாந்தா
ஆனந்தகிருஷ்ணன்
மோகனசுந்தரம்
மேனகா
(வடுவூர் துரைசாமி ஐயங்கார் நாவல்)

**கா. ரா. நமசிவாய முதலியார்**

கீசக வதம்

**பல்வேறு நாடகாசிரியர்கள்**
**எழுதியவை**

மகாபாரதம்
தசாவதாரம்
ஸ்ரீகிருஷ்ண லீலா
ஸ்ரீகந்த லீலா
சந்திரகாசன்
புல்புலியான்
அலிபாதுஷா
மஞ்சுகோஷா
ஸ்ரீஆண்டாள்
இராமானுஜர்
டம்பாச்சாரி
தூக்குத்தூக்கி
தாராசசாங்கம்
சதாரம்
அதிரூப அமராவதி
மயில்ராவணன்
சரச சல்லாப உல்லாச மனோரஞ்சனி
சாரங்கதரா
வல்லாள ராஜன்

# தற்கால நாடக ஆசிரியர்கள்

(அகர வரிசையில்)

**அகிலன்**

புயல்
வாழ்வில் இன்பம்
உயிர்ப்பலி

**அறிஞர் அண்ணாதுரை, சி. என்.**

சந்திரோதயம்
ஓர் இரவு
வேலைக்காரி
சந்திரமோகன்
நீதிதேவன் மயக்கம்

**(வைரம்) அருணாசலம் செட்டியார்**

குடும்ப வாழ்க்கை

**ஆறு. அழகப்பன்**

ஒலியா மணி
நல்ல முடிவு
சாமியார்கள் திருமணம்
கலைந்த மேகம்

**கு. அழகிரிசாமி**

கவிச்சக்கரவர்த்தி கம்பர்
வாழ்வில வசந்தம்
வஞ்சமகள்

**கோவை சி. ஏ. அய்யாமுத்து**

இன்பசாகரன்

**அருண்**

ஆடிய அரசு

**பா. ஆதிமூலம்**

மனிதன்

**'ஆண்டி'**

மாங்கல்யம்
மாத்ரு சாபம்
சூர்ப்பநகா
புரட்சி முரசு
இராவண சம்ஹாரம்

**எஸ். கே. இரணியன்**

மணிமண்டபம்

**மெ. இரத்தினம்**

எல்லை காத்த மணிமுடி
தமிழனின் தியாகம்
அவள் பட்ட பாடு!
1942

**பி. எஸ். இராமையா**

பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்
மல்லியம் மங்களம்
தேரோட்டி மகன்
போலீஸ்காரன் மகள்
பூவிலங்கு

**கே. ஜி. இராதாமணாளன்**

முத்துமண்டபம்

**எஸ். எஸ். இராஜேந்திரன்**

உன்னைத்தான் தம்பி

**கோ. இறைமுடிமணி**

மோகினித்தீவு (கல்கி கதை)
தளபதி

**பி. எத்திராஜுலு**

ஔவையார்

**டி. கே. கணபதி**

டாக்டர் அல்லி } கதை டாக்டர் வ. மு.
கள்ளோ காவியமோ

**ப. கண்ணன்**

நந்தி வர்மன்
வீரவாலி
தமிழ் வாழத் தலைகொடுத்தான்
கன்னியின் சபதம்
புரட்சிப்பாடகன்

**அ. கயிலைராஜன்**

ஓவியன்
நூறு ரூபாய் நோட்டு

**கலைஞர் மு. கருணாநிதி**

மந்திரி குமாரி
ஒரே முத்தம்
மணிமகுடம்
தூக்குமேடை
காகிதப் பூ

**கர்ம யோகி**

சர்வாதிகாரி

**டி. டி கல்யாணம்**

தெய்வ கட்டளை

**சக்தி கிருஷ்ணசாமி**

விதி
ஜீவன்
ஜஹாங்கீர்
வீரபாண்டிய கட்டபொம்மன்
பகல் நிலா

**கு. சா. கிருஷ்ணமூர்த்தி**

அந்தமான் கைதி
என் காணிக்கை
கலைவாணன்

**பி ஏ கிருஷ்ணமூர்த்தி**

மூடுபனி
பொம்மை வீடு

**ஜி. கிருஷ்ணமூர்த்தி**

அணைந்த ஜோதி

**கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்**

ஐம்பதும் அறுபதும்
விலாங்கு மனிதன்
நெல்லம்மாள்

**பி. ஏ. கிருஷ்ணன்**

கிராம இராஜ்யம்
நாம் கண்ட புதுமை
முட்டாள்கள் வாழ்க

**குகன்**

புகழ் வழி

**குருசாமி ஐயர்**

விஜயநகர சாம்ராஜ்யம்
செயின்ட் பிலோமினா
ஏழைப் பெண்

**கூத்தபிரான்**

(கல்கியின் கதைகள்)
தேவகியின் கணவன்
அமர தாரா
என் தெய்வம்
வீணை பவானி
நெஞ்சின் அலைகள்
(அகிலனின் கதை)

**கே. எஸ். கோபாலகிருஷ்ணன்**

தம்பி
போஸ்ட்மேன்

**டி. கே. கோவிந்தன்**

எது வாழ்வு? (கதை: ராஜா)

**எஸ். வி. சகஸ்ரநாமம்**

பைத்தியக்காரன்

**ஏ. எஸ். ஏ. சாமி**

பில்ஹணன்
துளி விஷம்

**வெ. சாமிநாத சர்மா**

தேசபக்தி (பாணபுரத்து வீரன்)
ஜீவபாலன்
லவகுசன்
அபிமன்யு

**எம். ஆர். சாமிநாதன்**

ஐம்புலிங்கம்

**சாண்டில்யன்**

ஜீவபூமி

**சிங்காரவேலன்**

தங்கத்தாய் மரகதம்
காணாத கண்மணி
கற்பூரம்
மகிழம் பூ

**சித்தராஜன்**

தேசபக்தர் சிதம்பரனார்
வம்ப மோரியன்

**சின்னராஜு**

போர்வாள்
சர்வாதிகாரி

**நாரதர் டி. சீனிவாச ராவ்**

சரசா
பிரம்மசாரி
தங்கப்பதுமை
அர்த்தநாரி
சரோஜா

**எஸ். டி. சுந்தரம்**

கவியின் கனவு
மனிதனும் மிருகமும்
தாய்மை
கள்வனின் காதலி
(கல்கி கதை)
வீரமாசக்தி

**கே. சுந்தரம்**

வியட்நாம் வீடு

**ஒத்தக்கடை சுந்தர பாண்டியன்**

மாணிக்கவாசகர்
இளவரசி

**புத்தனேரி ரா. சுப்பிரமணியம்**

சிவகாமியின் சபதம்
(கல்கி கதை)
சித்திரப்பாவை (நாட்டிய நாடகம்)
காவேரி தந்த கலைச்செல்வி
(நாட்டிய நாடகம்)

**கோமதி சுவாமிநாதன்**

கலாட்டா கல்யாணம்
புயலும் தென்றலும்
மிஸ்டர் வேம்பு
அன்பிற்கு மருந்து
ஆசைக்கு அளவில்லை

**கோமல் சுவாமிநாதன்**

புதிய பாதை
தில்லை நாயகம்
மின்னல் கோலம்

**சுகி சுப்பிரமணியம்**

வீதிவழியே

**டி. செல்வராஜ்**

யுக சங்கமம்
பாட்டு முடியுமுன்னே !

**சேகர்**

பிஞ்சுமனம்

**ல. சேதுராமன்**

புதுவெள்ளம்

**சொர்ணம்**

விடை கொடு தாயே !

**'சோ' ராமசாமி**

யாரிடமும் சொல்லாதே!
ஏன் கூடாது
சம்பவாமி யுகே! யுகே!
மனம் ஒரு குரங்கு
சரஸ்வதியின் சபதம்

**நா. சோமசுந்தரம்**

இன்ஸ்பெக்டர்
எதிர்பார்த்தது

**குடந்தை சோமு**

அன்பின் எல்லை

**எம். எஸ். சோலைமலை**

நீதிபதி
சந்திப்பு
உரிமைக்குரல்

**தமிழ்வாணன்**

புலித்தேவன்
பைத்தியங்கள் பலவிதம்
ராசிபலன்
வழி காட்டும் கை காட்டி
படிச்சா மட்டும் பத்தாது !

**புதுக்கோட்டை தம்புடு பாகவதர்**

பக்த ராமதாஸ்
துருவன்

**தஞ்சைவாணன்**

களம் கண்ட கவிஞன்

**ஏ. பி. தயானந்த் &**
**என் ராமச்சந்திரன்**

புதிய உறவு

**திருவாரூர் தங்கராசு**

இரத்தக் கண்ணீர்

**தாமரை மணாளன்**

சுயம்வரம்

**மதுரை திருமாறன்**

சாணக்கிய சபதம்
வேங்கை மார்பன்
காடக முத்தரையன்
மாலிக்காபூர்
கில்லர் நரசிம்மன்

**கே. பி. தியாகராஜன்**

அபலை

**தூபம்**

கல்யாணத்திற்குப் பின் காதலர்

**டாக்டர் டி. எஸ். துரைசாமி**

வீர சிவாஜி

**வடுவூர் துரைசாமி ஐயங்கார்**

வசந்த கோகிலம் (மிருச்சகடி)
மாணிக்கவாசகர்

**தேவன்**

மிஸ் ஜானகி
கோமதியின் காதலன்
துப்பறியும் சாம்பு
சுதர்சனம்
கல்யாணி

**நடராஜன்**

என் தங்கை

**எப். ஜி. நடேசய்யர்**

ஞானசவுந்தரி
சுபத்திரா அர்ஜுனா

**நவமணி**

தியாகதீபம்
இதயதாகம்
காவல் கைதி
நஞ்சிலே சுவை
கானல் வழி

**நவகவிமணி**

ஊரும் உறவும்
அன்னையைக் கண்டேன்

**புலவர் நாகசண்முகம்**

புதுமைப் பெண்
எது இன்பம் ?
கனிமொழி
கலிங்கத்து இளவரசி
அங்கயற்கண்ணி

**ஏ. பி. நாகராஜன்**

தனம்
கொள்ளைக்காரன்
நால்வர்
அன்னை பவானி
பகடை

**எம். பி. நாகராஜன்**

வாடாமல்லிகை

**குடியேற்றம் ஈ. நாகராஜ்**

பாம்பாட்டி மகள்
மலர்விழி
மான்விழி மங்கை
நேசக்கரம்
ஊழியன்

**நாடோடி**

வாழ்க்கைச் சக்கரம்

**நாரண-துரைக்கண்ணன்**

உயிரோவியம்
திருவருட்பிரகாச வள்ளலார்
குமரி முதல் காஷ்மீர் வரை
சதுரங்கம்
பந்தபாசம்

**கே. எம். நாராயணசாமி**

திலகம்
நீதியா பாசமா ?

**நித்யானந்தம்**

கண்ணின் மணிகள்

**ப. நீலகண்டன்**

முள்ளில் ரோஜா
நாம் இருவர்

**மதுரை, ப. நெடுமாறன்**

தென்பாண்டி வீரன்

**பட்டு**

நள்ளிரவில் நடந்தது
சமயசஞ்சீவி
இதுவே சொர்க்கம்
பாவம் பலராமன்
பெற்றால்தான் பிள்ளையா ?

**பட்டி வெள்ளையன்**

எல்லாம் ஒரு மயக்கம்

**மதுரை பத்மநாபன்**

வள்ளலார்

**இரா. பழனிச்சாமி**

குலப்பெண்
நல்ல பிள்ளை
வரவேற்பு
கவிச்சக்கரவர்த்தி கம்பர்
காரைக்கால் அம்மையார்

**ஏ. வி. பழனியப்பன்**

பாட்டாளி பெற்ற பைங்கிளி

**எஸ். பி. பாண்டியன்**

கட்டபொம்மன்

**நா. பாண்டுரங்கன்**

சித்தர் மகள்
சுமைதாங்கி

**திருச்சி பாரதன்**

அப்பாவின் ஆசை
பலாப்பழம்

**புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்**

இரணியன்
சேர தாண்டவம்

**பாவலர் பாலசுந்தரம்**

பராசக்தி

**சி. எஸ். பாலசுப்பிரமணியம்**

உபகுப்தன்

**கு. மா. பாலசுப்பிரமணியம்**

காதல் தந்த இன்பம்

**எஸ். கே. பாலசுப்பிரமணியம்**

காரியதரிசி

**ஜி. பாலசுப்பிரமணியம்**

தேன்கூடு

**கே. பாலசந்தர்**

சதுரங்கம்
மேஜர் சந்திரகாந்த்
நீர்க்குமிழி
சர்வர் சுந்தரம்
எதிர்நீச்சல்

**பாலமுருகன்**

வெற்றித்தூண்
நீதியின் நிழல்
சிரித்த முகம்
நீதி பிழைத்தது
மாசற்ற மனம்

**முழக்கம் பாலு**

குல விளக்கு
காதலுக்குக் கண் இல்லை
லைப் இன்ஷியூரன்ஸ்

**எஸ். பிரபாகர்**

லட்சம் காலத்துப் பயிர்

**பிலஹரி**

பாசத்தின் பரிசு
நெஞ்சே நீ வாழ்க !
நெஞ்சுக்கு நீதி
ஆலமரம்

**புதுமைப்பிரியன்**

அழகி

**சு. பெருமாள்**

ஜனதா நகர்

**மாயாவி**

மறுமலர்ச்சி
தெய்வமாகி நின்றாள்
பாசத்திரை

**மா. ரா.**

நல்லதும் கெட்டதும்
எங்கிருந்தோ வந்தான் !

**உன்னையே நீ எண்ணிப்பார்**

யார் பெற்ற பிள்ளை
கிரிமினல் கிருஷ்ண சாமி

**மாஜினி**

வாழத்தான் வேண்டும்

**சிவசக்தி முத்துகிருஷ்ணன்**

தெய்வக்குழந்தைகள்

**டி. கே. முத்துசாமி**

குமாஸ்தாவின் பெண்
ராஜா பர்த்ருஹரி
காளமேகப் புலவர்
(வடுவூர் ஐயங்கார் கதை)
வித்யாசாகரர்

**ஜே. முத்துசாமி**

சொல்லித் தெரிவதில்லை
சனிக்கிழமை இரவு

**துறையூர் கே. மூர்த்தி**

இலங்கேஸ்வரன்
இன்ப நாள்

**ரசவாதி**

வழி நடுவில்

**இ. எஸ். ராமகிருஷ்ணன்**

வைர வளையல்

**டபிள்யூ ராமசாமி**

மைனர் மருக்கொழுந்து
அந்த நிலையில் இருந்தால்!

**என். ராமச்சந்திரன்**

நீ எனக்காக
விட்டில் பூச்சி

**அரு. ராமநாதன்**

இராஜராஜ சோழன்
வானவில்
சக்கரவர்த்தி அசோகன்

**பி.வி.எல். ராமன்**

இம்பெர்பக்ட் மர்டர்

**தஞ்சை ராமையாதாஸ்**

மச்சரேகை

**நாஞ்சில் ராஜப்பா**

பக்த சாருகதாஸர்

**மல்லியம் ராஜகோபால்**

ஜீவனும்சம்

**என்.வி.ராஜாமணி**

கண்கள்
இருளும் ஒளியும்
வானவில்

**கே.என். ராஜமாணிக்கம்**

அன்புவழி

**என். லட்சுமணன்**

நண்பன்

**டி. என். லட்சுமணன்**

வாரிசு; யாரோ?

**பா. லட்சுமணன் செட்டியார்**

வெற்றி யாருக்கு?

**லட்சுமி கிருஷ்ணன்**

உலகம் சிரிக்கிறது

**லெனின்**

மணியோசை

**டாக்டர் மு. வரதராசனார்**

காதல் எங்கே?
இளங்கோ
மனச்சான்று

**எம். ஆர். ஜி. விந்தன்**

தலைவன்
லேடி டைட்பிஸ்ட்
அப்பாவிகள்

**கி. ஆ. பெ. விசுவநாதம்**

தமிழ்ச் செல்வம்

**பூர்ணம் விஸ்வநாதன்**

அண்டர் செக்ரடரி

**தஞ்சை என். விஸ்வநாதன்**

இராஜசேகரன்
வீரசிம்மன்
வீர பத்தினி
அப்பூதி அடிகள்
மூன்று நட்சத்திரங்கள்

**சா. விஸ்வநாதன்**

வாஷிங்டனில் திருமணம்

**விஸ்வநாதன்**

இன்பக்கனவு
தோட்டக்காரன்

**விஸ்வேஸ்வரன்**

தாகசாந்தி

**புதுவயல் வீரப்பச் செட்டியார்**

திருமழிசை ஆழ்வார்

**ரா. வேங்கடாசலம்**

இமயத்தில் நாம்
முதல் முழக்கம்
தமிழன் பெருமை
பெண்
தங்கை

**நெல்லை வேங்கடாசலம்**

ராஜா தேசிங்கு
திப்பு சுல்தான்

**ஆ. கோ. வேங்கடராமானுஜம்**

முதலாளி

**வேதா கலைமணி**

மார்த்தாண்டன்
பாவை
பனித்திரை

**வேலவன்**

கவிதா ராஜ்யம்

**ஏ. கே. வேலன்**

கைதி
சூறாவளி
மேகலை
சிலம்பு
எரிமலை

**என். ஏ. வேலாயுதம்**

முன்னேற்றப் பாதை
தேச சேவை
புரட்சி வீரர் மூவர்

**கே. என். வைத்தியநாதன்**

பணப்பேய்

**பு. ரா. வேங்கடாசலம்**

நீரும் நெருப்பும்

**கே. கே. சம்பத்குமார்**

வைத்தியர் மகள் ரங்கம்
மாந்தருள் மாணிக்கம்
சுந்தரியின் சுயம்வரம்

**தி. ஜானகிராமன்**

நாலு வேலி நிலம்
வடிவேலு வாத்தியார்
டாக்டருக்கு மருந்து

**என். ஜெயராமன்**

ராணி
டாக்டரும் பேயும்
கலைந்த ஓவியம்
பவானி
வாழ்க்கைச் சக்கரம்

**ஹரி**

மௌனவிரதம்

**ஹுசேன்ஜி**

கவிக்குயில்

**கா. மு. ஷெரீப்**

புதுயுகம்
பொற்கொடி
பெண் தெய்வம்
மன்னவன் காதலி

**சி. வி. ஸ்ரீதர்**

இரத்த பாசம்
கலாட்டா கல்யாணம்

**ஸ்ரீ வேணுகோபாலன்**

அமைச்சர் மதுரகவி

# மலர்க் குழுவினர்

தலைவர் :

பேராசிரியர் நாரண—துரைக்கண்ணன்

உறுப்பினர்கள் :

பேராசிரியர் ந. சஞ்சீவி, எம். ஏ.,

கவிஞர் எஸ். டி. சுந்தரம், எம். எல். ஸி.,

கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி,

கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்,

பேராசிரியர் நா. பாண்டுரங்கம் எம். ஏ.,

வித்வான் எம். கே. காமாட்சிநாதன்.

*With the Compliments of*

MADURA MILLS CO., LTD.

Manufacturers of:

YARN • INDUSTRIAL FABRICS • CLOTH

Managing Agents:

A. &. F. HARVEY LTD.

**HARVEYS OF MADURAI**

MMZ-1843

# மனோன்மணீயத்தின் மாண்பு

பேராசிரியர் வ. பெருமாள்
கோலார் தங்கவயல், மைசூர் மாநிலம்.



தமிழ் மொழிக்குப் பல சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் ஒன்று அதன் பாகுபாட்டு அமைப்பு. இயற்றமிழ் அறிவுக் கூறாகவும் இசைத்தமிழ் உணர்ச்சிக் கூறாகவும் நாடகத் தமிழ் உடற்கூறாகவும் அமைந்திருப்பது ஈண்டு சிந்திக்கத் தக்கது. மனிதனின் அறிவு (thinking), உணர்ச்சி (feeling), உடல் (willing) ஆகிய முக்கூறுகளும் முத்தமிழாகக் காட்சியளித்தவண்ணம் இருக்கின்றன. இயற்றமிழ் சிந்திக்கச் செய்கின்றது. இசைத்தமிழ் உணர வைக்கின்றது. நாடகத்தமிழ் செயல்படத் தூண்டுகின்றது. தமிழ் மொழியில் இம்மூவகை இலக்கியங்களும் மிகுதியாக உண்டு. ஆனால் பண்டைக் காலத்தில் தோன்றிய நாடக இலக்கியங்கள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. இது நமக்குப் பெருங்குறையாக விருந்தாலும் பிற்காலத்தில் தோன்றிய நாடகங்கள் அக்குறையைப் போக்கும் வகையில் அமைந்து நமக்கு ஆறுதல் அளிக்கின்றன. அந்த வரிசையில் 19-ஆம் நூற்றாண்டிறுதியில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதி வெளியிட்ட 'மனோன்மணீயம்' என்னும் நாடக நூல் மிகவும் குறிப்பிடத்தக்கது.

### நாடகத்தின் அமைப்பும் உறுப்பினர்களும்

இந்நாடகம் 5 அங்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதல் அங்கத்தில் 5 களங்களும் இரண்டாம் அங்கத்தில் 3 களங்களும் மூன்றாம் அங்கத்தில் 4 களங்களும் நான்காம் அங்கத்தில் 5 களங்களும் ஐந்தாம் அங்கத்தில் 3 களங்களுமாக மொத்தம் 20 களங்கள் அமைந்திருக்கின்றன. பாயிரம் உட்பட இந்நாடகத்தின் அளவு 4502 அடிகள். சீவகன் (சீவக வழுதி), குடிலன், சுந்தர முனிவர், நிட்டாபரர், கருணாகரர், நடராசன், நாராயணன், பலதேவன், சகடன், முருகன், புருடோத்தவர்மன் (புருடோத்தமன்), அருள்வரதன், மனோன்மணி, வாணி முதலியோர் இந்த நாடகத்தின் குறிப்பிடத்தக்க உறுப்பினர்கள்.

### நாடகத்தின் போக்கும் நோக்கும்

இன்பமுடிவைக் கொண்டிருப்பதை இன்பவியல் (comedy) என்றும் துன்ப முடிவைக் கொண்டிருப்பதைத் துன்பவியல் (tragedy) என்றும் அவலச்சுவை மிகுதியாகப் பொதிந்து இன்பத்துடன் முடிவதைத் துன்ப இன்பவியல் (tragi-comedy) என்றும் நாடகங்களை மூவகையாகப் பிரிக்கலாம். மனோன்மணீய நாடகம் மனோன்மணி—புருடோத்தமன், வாணி—நடராசன் ஆகியோர் திருமணத்துடன் முடிவதால் இதனை இன்பவியல் நாடகம் என்று கூறலாம். ஒரு நாடகத்திற்கு இரண்டு நோக்கம் இருத்தல் வேண்டும். நாள் முழுதும் அயராது உழைத்த பிறகு மக்கள் தம் உடல் அயர்ச்சியும் மனத் தளர்ச்சியும் நீங்கும் பொருட்டு ஒரு நல்ல பொழுது போக்கை விரும்புகின்றார்கள். நாடகம் ஒரு சிறந்த பொழுது போக்காக அமைந்து மக்கள் மனத்தை மகிழ்விக்கின்றது. நாடகத்தின் முதல் நோக்கும் முதன்மையான நோக்கும் மக்களை மகிழ்விப்பதே. அத்துடன் அமைந்து விட்டால் மட்டும் போதாது. இரண்டாம் நோக்காக மக்களுக்கு நல்லறிவு புகட்டி நல்லொழுக்கத்தை உண்டாக்க வேண்டும். மனோன்மணீயம் இவ்விரு நோக்கங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. செய்யுள் நடையில் அமைந்த இந்நாடகம் படிப்பதற்கு எழுதப்பெற்றதே தவிர, நடிப்பதற்கு எழுதப் பெறவில்லை என்று அதன் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

### நாடகத்தின் பொருள்

மனோன்மணீயத்தின் கதை அளவால் சிறியதாயிருந்தாலும் அதை விளக்கும் பாங்கு, விரித்துரைக்கும் முறை, நாடக உறுப்பினர்களின் விரிவான உரையாடல் ஆகியவை எல்லாம் சேர்ந்து அதை அளவாலும் தன்மையாலும் பெரிய நாடகமாக்கி விடுகின்றன. மிகச் சிறிய விதையிலிருந்து தோன்றிய ஆலமரம் மிகப் பெரிதாக ஓங்கியும் பரந்தும் வளர்ந்து பறவைகளுக்கு உறைவிடமாகவும் மக்களுக்கு நிழலிடமாகவும் காட்சியளிக்கின்றது. அதைப் போலவே, மனோன்மணியின் சிறு வரலாறு விரிந்தும் வளர்ந்தும் இலக்கண அமைதிகள் நன்கு அமையப்பெற்ற முழு நாடக இலக்கியமாகத் திகழ்கின்றது. ஆட்சி, சூழ்ச்சி, மந்திராலோசனை, தூது, வீரம், போர், நாட்டுவளம், இயற்கை வளம், கனவு, காதல், கற்பு, திருமணம், அறம், சமயம், தத்துவம், நட்பு, அன்பு, பக்தி, துறவு முதலிய பின்னணிக்கிடையே மனோன்மணியின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கப் படுகின்றது. இப்பின்னணி யாவும் மனோன்மணியின் வாழ்க்கையில் இயைந்தும் இணைந்தும் இருக்

கின்றன. இசையரங்கில் ஒருவர் பாடுகின்றார். பக்க வாத்தியக்காரர்கள் பலர் அருகில் இருந்து வெவ்வேறு இசைக்கருவிகளை வெவ்வேறு வகையில் இயக்கி இன்னிசை எழுப்புகின்றனர். அவ்விசைக் கருவிகள் யாவும் அளவாலும் ஒலியாலும் வேறுபட்டாலும் அவை யாவும் பாடகரின் வாய்ப்பாட்டுடன் ஒத்தும் இயைந்தும் இருக்கின்றன. அதைப் போலவே இந்நாடகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகள் மனோன்மணியின் வாழ்க்கையுடன் தொடர்புகொண்டு இணைந்து அமைந்துள்ளன.

## நாடகமே உலகம்

நாம் நிலைக்கண்ணாடி முன் நின்றால் நம் உருவம் முழுவதும் தெரிகின்றது. நம் உருவத்தைப் பிரதிபலிக்கின்றது கண்ணாடி. சுருங்கக் கூறுமிடத்து நிலைக் கண்ணாடி முன் நிற்கும்போது நம் முழு உருவத்தை நாமே காண்கின்றோம். முகத்தையும் உடையையும் ஒழுங்கு படுத்துகின்றோம். நாடகம் ஒரு பெரிய கண்ணாடி போன்றது. அக் கண்ணாடியில் சமுதாயத்தின்—உலகத்தின் சாயல் தெரிகின்றது. உலகத்தின் பிரதிபலிப்பை நாடகத்தில் காணலாம். நாடகத்தில் மக்கள் உலகத்தைக் காண்கின்றார்கள்; அறிகின்றார்கள்; உணர்கின்றார்கள். பல்வேறு மக்களின் தனித்தனி வாழ்க்கையையும் அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் நாடக இலக்கியத்தில் படிக்கும்போதும் அரங்கில் நடிப்பைக் காணும்போதும் நாடகக்கலை மலர்வதைக் காண்கின்றோம். உலகில் வாழும் மக்கள் எண்ணிக்கையால் பலர். தகுதி, ஒழுக்கம், பண்பு ஆகியவற்றால் பலவகைப் பட்டவர்கள். நாடக உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பலராக இருப்பதுபோல தகுதி, ஒழுக்கம், பண்பு ஆகியவற்றிலும் பலவகைப் பட்டவர்களாக இருக்கின்றார்கள். இதனால் தான் அறிஞர்கள் நாடகத்தை உலகத்திற்கு ஒப்பிட்டு ஆராய்ந்து நாடகமே உலகம் என்னும் முடிவுக்கு வந்துள்ளனர். 'நாடகமே உலகம்' என்பதற்கும் 'உலகமே நாடகம்' என்பதற்கும் சொல்லமைப்பில் வேறுபாடு உண்டே தவிர, பொருளில் வேறுபாடு இல்லை. 'உலகமே நாடகம்; எல்லோரும் நடிகர்கள்' என்பது ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் கருத்து.

All the world's a stage
And all the men and women merely players'
Shakespeare,—As You Like it.

நாடகமே உலகம் என்னும் கருத்தைச் சிந்தையிற் கொண்டு மனோன் மணீயத்தை ஆராய்ந்தால் அக் கருத்து மறுக்கமுடியாத உண்மை என்பதைத் தெளிவாக உணரலாம்.

## மனோன்மணீயத்தில் உலகம்

வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் தூய உள்ளமும் கேட்டவற்றை அப்படியே நம்பும் இயல்பும் உடையவன் சீவகன். சீவகனைப் போன்ற மக்கள் பலர் உலகில் உண்டு. தன்னலமே குறிக்கோளாகக் கொண்டு அக்குறிக்கோள் நிறைவேற எல்லா வகையிலும் திட்டமிட்டுச் சூழ்ச்சி செய்கிறான் குடிலன். இவ்வுலகில் குடிலனைப் போன்றவர்களும் இருக்கின்றார்கள். தன்னலம் துறந்து பொதுநலம் ஒன்றையே கருத்திற் கொண்டு ஒல்லும் வகையால் நல்லவை புரியும் இயல்புடையவர் சுந்தர முனிவர். தீமைகள் பல்கியிருக்கும் இவ்வுலகத்தில் சுந்தரமுனிவர் போன்ற நல்லவர்கள் இல்லாமல் இல்லை. பெண்களை எல்லாம் கேவலம்—சிற்றின்பக் கருவிகளாகக் கருதி ஒழுக்கத்தைக் காற்றில் பறக்கவிட்டு ஊதாரித்தனமான வாழ்க்கை நடத்தியவன் பலதேவன். அவனைப் போன்ற காம வெறியர்களையும் உலகத்தில் காண்கின்றோம். கடமை—உணர்ச்சியும் நேர்மையுள்ளமும் கொண்டவன் நாராயணன். உலகத்தில் சிலர் நாராயணனைப் போலவும் இருக்கின்றார்கள். பேராசை கொண்ட சகடன் தன் மகள் வாணியை அவள் விருப்பத்திற்கு மாறாகப் பலதேவனுக்குத் திருமணம் புரியப் பெருமுயற்சி செய்கின்றான். சகடனை ஒத்த பேராசை பிடித்த தந்தையரும் இவ்வுலகத்தில் இருப்பதை நாம் பார்க்கின்றோம். இயற்கை அழகைச்சுவைக்கும் கலையுள்ளம் படைத்தவன் நடராசன். சகடனும் சீவகனும் நடராசனைப் பித்தன் என்று இகழ்கின்றனர். நடராசனைப் போன்ற கலைஞர்களையும், அக்கலைஞர்களைப் பித்தர்கள் என்று தூற்றும் மக்களையும் உலகில் காணலாம். தன்னிகரில்லாத நாடகத் தலைவியாகிய மனோன்மணி பெண்மையே உருவெடுத்தது போல் விளங்குகின்றாள். மனோன்மணியைப் போன்ற மங்கை நல்லார் பலர் இவ்வுலகில் சிறக்க வாழ்வதைக் கண்டு மகிழ்கின்றோம். நேர்மையுள்ளம் கொண்ட வீரனே புருடோத்தமன். புருடோத்தமனைப் போன்ற வீரர்களும் உலகத்தில் உண்டு. நிட்டாபரரும் கருணாகரரும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு நீண்ட நேரம் ஓயாமல் விவாதிக்கின்றார்கள். அவர்களைப் போன்ற தத்துவ ஆராய்ச்சியாளர்களையும் இவ்வுலகம் பெற்றிருக்கின்றது. காதலுக்காகவே உயிர் வாழ்கின்றாள் வாணி. காதலையே உயிராக மதித்து வாழ்கின்ற பெண்களும் இவ்வுலகில் உண்டு. இவ்வாறு மனோன்மணீயத்தின் பல்வேறு நாடக உறுப்பினர்கள் உலகில் உள்ள பல்வேறு மக்களின் பிரதிநிதிகளைப் போல விளங்குவதைக் காணலாம். சுருங்கக் கூறுமிடத்து மனோன் மணீயத்தில் உலகத்தைக் காண்கின்றோம்.

## உறுப்பினர்களின் முரண்பாடு :

களங்கமற்ற நல்லுள்ளம் கொண்ட சீவகனும் கொடுமையே திரண்டு எழுந்ததைப் போல் காட்சியளிக்கும் குடிலனும் பண்பில் எவ்வளவு முரண்படுகின்றார்கள்! சீவகன் நல்லவன், குடிலன் வல்லவன். நல்லவனுக்கும் வல்லவனுக்கும் இடையேதான் எத்துணை முரண்பாடு! குடிலன் பேராசையுடன் அரும்பாடு பட்டுப் பொருள் சேர்த்து வைக்கிறான். அவன் மகன் பலதேவனோ ஊதாரித்தனமாகப் பொருளை அழிக்கின்றான். தந்தைக்தும் மகனுக்கும் உள்ள வேறுபாட்டை ஆசிரியர் நன்றாக விளக்குகின்றார், பலதேவன் காதலின் தூய்மையை உணராத காமவெறியனாக விலங்கு போல் திரிகின்றான். நடராசன் காதல் தத்துவத்தை அறிந்து அதன் தெய்வீகப் பண்பை உணர்ந்து வாழ்கின்றான். மனோன்மணி தன் தந்தைக்கு கீழ்ப்படிந்து புருடோத்தமன் மீது கொண்ட காதலைத் துறக்கத் தயாராகின்றாள். ஆனால் அவள் தோழியாகிய வாணி நடராசன் மீது தான் கொண்டுள்ள தூய காதல் ஒன்றையே மதித்து, பலதேவனை மணக்க அறவே மறுத்து விடுகிறாள். காதலா, கடமையா என்பதில் மனோன்மணி கடமைக்குக் கட்டுப்படுகின்றாள்; வாணி காதலுக்கு உட்படுகின்றாள். சுந்தர முனிவரும் அவர் சீடர்களாகிய நிட்டாபரரும் கருணாகரரும் நல்லவர்களே. ஆனால் குருவுக்கும் சீடர்களுக்கும் தான் எவ்வளவு

வேறுபாடு! சுந்தர முனிவர் சுருக்கமாகப் பேசுபவர்; நீண்ட பேச்சையும் சொற்போரையும் விரும்பாதவர். ஆனால் அவர் சீடர்களோ மணிக்கணக்கில் நீண்ட விவாதங்கள் புரியும் விருப்பம் உடையவர்கள். தம் சீடர்கள் நீண்ட விவாதம் புரிவதைக் கண்ட சுந்தர முனிவர் 'உங்கள் பேச்சறிவோம்; ஓயாப் பேச்சே!' என்று நீண்ட பேச்சில் தமக்குள்ள வெறுப்பைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறார். போர்க்களத்தில் வீரத்தைப் புலப்படுத்தி வெற்றி வாகை சூட விழைகின்றான் புருடோத்தமன், எப்படியாவது—காட்டிக் கொடுத்தாவது அரசைக் கைப்பற்ற எண்ணுகிறான். குடிலன் வீரத்துக்கும் நேர்மைக்கும் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறான் புருடோத்தமன். கோழைத் தனத்திற்கும் துரோகத்திற்கும் நிகரற்றவனாக இருக்கின்றான் குடிலன். நாராயணன் சீவகனைக் காக்க விரும்புகிறான். குடிலன் சீவகனை ஒழித்துவிடத் திட்டமிடுகிறான். இவ்வாறு மனோன்மணீயத்தில் வரும் நாடக உறுப்பினர்கள் தம்முள் மாறுபட்டவர்களாகவும் முரண்பட்டவர்களாகவும் விளங்குவதைக் காணலாம்.

## போராட்டம்

போராட்டம் இருவகைப்படும். ஒன்று புறப் போராட்டம். மற்றொன்று அகப்போராட்டம். இதை மனப்போராட்டம் என்றும் குறிப்பிடலாம். உள்ளத்தின் இரு உணர்ச்சிக் கூறுகள் தம்முள் மாறுபட்டுப் போரிடுவதே மனப்போராட்டம். மனோன்மணி புருடோத்தமனைத் தன் கனவில் காண்கின்றாள். அவள் புருடோத்தமனை அகங் குளிரக் காதலிக்கின்றாள். ஆனால் சீவகன் அவளைப் பலதேவனுக்கு மணம் முடிக்க முடிவு செய்கின்றான். ஒரு புறத்திலே, காதல், மறு புறத்திலே தன் தந்தை சொல்லுக்குக் கீழ்ப்படிய வேண்டியகடமை. மனோன்மணியின் காதல் உள்ளம் புருடோத்தமனை விழைகின்றது. ஆனால், அவள் கடமை உணர்ச்சி பலதேவனுக்கு மாலை சூட்ட வலியுறுத்துகின்றது. இவ்விரண்டிற்கிடையே அவள் மனத்தில் பெரும்போராட்டம் அமைதியாக நடைபெறுகின்றது. புருடோத்தமனுக்கு மணமாலை சூட்டுவதற்கு மாறாகப் பலதேவனுக்கு மாலை சூட்டவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே என்று அவள் உள்ளம் படாத பாடு படுகின்றது.

> 'ஊற்றிருந் தொழுகி உள்வறந்தது கண்
> அமையா நோக்கமும் இமையா நாட்டமும்
> ஏங்கிய முகமும் நீங்கிய இதழும்
> உயிரிலா நிலையும் உணர்விலா நடையும்
> பார்த்திடிற் சூத்திரப் பாவையே'

போல் மனோன்மணி பலதேவனுக்கு மணமாலை சூட்டு முன் நின்ற காட்சி அவள் மனப்போராட்டத்தின் விளைவாக எழுந்த ஆழ்ந்த துயரத்தைத் தெளிவாகக் காட்டுகின்றது. மனோன்மணிக்கு ஏற்பட்ட அதே மனப் போராட்டம் வாணிக்கும் ஏற்பட்டது. மனோன்மணியின் போராட்டம் மனத்துடன் நின்று விட்டது. ஆனால் வாணியின் போராட்டம் சொற்போர் வரை வந்துவிட்டது மனோன்மணி யாருடனும் தன் காதல் குறித்துச் சொற்போர் புரியவில்லை போராடவில்லை. ஆனால் வாணி தன் தாய், தந்தை (சகடன்) அரசன் (சீவகன்) ஆகியோருடன் போராட வேண்டியிருந்தது; போராடினாள். 'நான் மணந்தால் நடராசனையே மணப்பேன். இல்லாவிட்டால் இறுதிவரை கன்னியாகவே காலம் கழிப்பேன். இறப்பதாக இருந்தாலும் பலதேவனை மணக்க மாட்டேன்' என்று வாணி சீவகனிடம் உறுதியாகக் கூறிவிடுகின்றாள். வாணி சீவகனுடன் உணர்ச்சியுடனும் உறுதியுடனும் சொற்போர் புரிந்தாலும் அச்சொற்போர் இறுதியில், 'பகைவர்கட்குச் சிங்கம் போன்றவனே! நான் மறுத்துரைத்தவற்றை எல்லாம் பொறுத்தருள்க' என்று அன்பு கலந்த பணிவுடன் சீவகனை வேண்டுகின்றாள். அவளுக்குக் காதலில் உறுதியுண்டு. அதே சமயத்தில் அவளது பெண்மைக்கு ஏற்ற அடக்கமும் பண்பும் உண்டு. ஒரு புறத்திலே காதலில் உறுதி. மறுபுறத்தில் தன்னடக்கம். பேராசையால் உந்தப்பட்ட சகடன் தன் மகள் வாணியைப் பலதேவனுக்குத் திருமணம் செய்விக்கப் பெருமுயற்சி செய்கின்றான். பேராசை அவன் உள்ளத்தை முன்னோக்கித் தள்ளுகின்றது. வாணியின் மறுப்பு அவன் உள்ளத்தைப் பின்னால் இழுக்கின்றது. இது சகடன் உள்ளத்தில் நடைபெறுகின்ற போராட்டம். புருடோத்தமன் தன் கனவில் மனோன்மணியைக் கண்டான். அவள் யார் என்பதை அறிந்துகொள்ள அவன் உள்ளம் ஒரு புறம் துடியாய்த் துடிக்கின்றது. அவளை இன்னாள் என்று கண்டு பிடிக்க முடியாமல் ஏமாந்தபோது அவன் உள்ளம் யாருடனாவது போர் புரிந்தாவது அந்த காதல் கனவை மறக்க விழைகின்றது. இவ்வாறு அவன் உள்ளத்தில் ஒரு புறம் காதல் உணர்ச்சியும் மறுபுறத்தில் போர்த்தினவும் இருந்து கொண்டு பெரும் போராட்டம் நடத்துகின்றன. போர்க்களத்தில் தோற்ற சீவகன் தன் மானம் கருதித் தற்கொலை புரிந்துகொள்ள முடிவு செய்கின்றான். அப்பொழுது நாராயணன் மனோன்மணியின் ஆதரவின்மையை நினைப்பூட்டத் தன் கடமையை உணர்கிறான். மானம் காக்க உயிர் விடுவதா? கடமையாற்ற உயிர் வாழ்வதா?—மானமா கடமையா? என்னும் போராட்டம் சீவகன் மனத்தில் நிகழ்கின்றது. குடிலன் உள்ளத்தில் எழுகின்ற போராட்டம் ஒன்று. இரண்டு அல்ல; பல. சீவகனையும் நாராயணனையும் அறவே ஒழித்துக் கட்டுவதில் அவன் மிகவும் தீவிரமாகவும் தந்திரமாகவும் போராடுகின்றான். அகத்தால் கொடியவனாகிய குடிலன் புறத்தால் உயர்ந்த உத்தமனைப் போல நடிக்கின்றான். குடிலனைப் பொறுத்தவரையில் போராட்டம் அவன் மனத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. அவன் அகத்துக்கும் புறச் செயலுக்கும் நடைபெறுகின்ற போராட்டம் பெரும் போராட்டமாக இருக்கின்றது. சீவகனைக் காப்பதற்கு நாராயணன் குடிலனை எதிர்த்துப் போராடுகின்றான். நாராயணன் தன் மனத்தில் நடைபெறும் போராட்டத்தைச் செயல் மூலமாகவும் புலப்படுத்துகின்றான். வாழ்க்கையே போராட்டம் என்பதை மனோன்மணீயம் மிகத் தெளிவாக உணர்த்துகின்றது.

குறிப்பு: பின்னால் நடைபெற விருக்கும் நிகழ்ச்சிகளை முன்னால் குறிப்பாக உணர்த்தும் திறமை நாடக ஆசிரியர்க்கு உண்டு. நாடகத்தின் தொடக்கத்தில் சுந்தர முனிவர் சீவகனை வாழ்த்தும்போது முழுக்க முழுக்க மங்கல மொழியில் வாழ்த்துவதற்கு மாறாக, 'துயரம் பிணியாவும் தொலைந்து வாழ்க' என்று அமங்கலக் குறிப்பு தோன்ற வாழ்த்துகின்றார்,

> "வாழ்க! வாழ்க! மன்னவ! வருதுயர்
> சூழ்பிணி யாவுந் தொலைந்து வாழ்க!
> சுகமே போலும், மனோன்மணி?"

*(அங்கம் 1 : களம் 1)*

சீவகன் எதிர்காலத்தில் அடையவிருக்கும் துயரத்தை

முன்கூட்டியே குறிப்பாக உணர்த்தும் திறன் படித்து மகிழத்தக்கது. சீவகனின் அரண்மனை, கோட்டை ஆகியவற்றைக் கண்ட முனிவர் மன்னனை நோக்கி, 'நீ ஆக்கிய எல்லாவற்றையும் கண்டோம். இவை தவிர, வேறு அரண் உளதா?' என்று கேட்கின்றார்.

> "நன்று மன்னவ! உன்றன் றொல்குலங்
> காக்கநீ யாக்கிய இவையெலாங் கண்டுளேம்
> அல்லாது உறுதி யுளதோ? சொல்லுதி!"
> (அங்கம் 1 : களம் 1)

'மன்னனே நீ கட்டியுள்ள இந்த அரண்மனையும் கோட்டையும் உன்னைக் காப்பாற்றமாட்டா'' என்பதை சீவகனுக்குக் குறிப்பாக உணர்த்துகின்றார் சுந்தர முனிவர்,

> "உன்னையும் உன்குலத் துதித்த நம் மனோன்மணி
> தன்னையுஞ் சங்கரன் காக்க"

என்று சுந்தர முனிவர் உரைக்கின்றார். இதன் உட்பொருள் என்ன? சீவகனை அவன் அமைச்சன் குடிலனோ அரண்மனை, கோட்டை போன்ற புற அரண்களோ காப்பாற்ற முடியாது. எல்லாம் வல்ல இறைவன் மட்டுமே காப்பாற்ற இயலும். ஆம்; முனிவர் இன்னுரையாக மொழிந்த குறிப்புரை நாடகத்தின் இறுதியில் மெய்யுரையாகக் காட்சியளிக்கின்றது.

மனோன்மணி தான் வளர்த்த முல்லை மலர்ந்தது என்பதைச் செவிலி வாயிலாக அறிகின்றாள். அவள் மணப்பருவம் எய்தவிருப்பதை முல்லையின் மலர்ச்சி வாயிலாகக் குறிப்பாக உணர்த்துகின்றார் ஆசிரியர், மனோன்மணி தான் கண்ட கனவில் 'நண்பனே! என்னுயிர் நாதனே!' என்று கூறுகிறாள். அவளுக்குண்டாகிய நோய்க்கு மருந்தாகப் பனம் பூமாலையைச் சூட்டுமாறு நிமித்திகர் கூறுகின்றார். (பனம் பூமாலை சேரனுக்கு உரியது) வேப்பமரத்தில் ஒரு பஞ்சவர்ணக் கிளி அமர்ந்து இன்சொல் பேசியதையும், அப்பொழுது வானவன் அங்கு இன்னிசை வழங்கியதையும், கிளி பறந்து சென்று தொலைவிலுள்ள பனைமரத்தில் அமர்ந்ததையும், அமர்ந்த பின் வானவன் இசைத்த பாட்டைப் பெருவிருப்பத்துடன் பாட முயன்றதையும், முயன்றும் பாட்டு வராததால் மௌனமாகி விட்டதையும் மனோன்மணி தன் கனவில் காண்கின்றாள். புருடோத்தமனும் மனோன்மணியைத் தன் கனவில் காண்கின்றான். இவை யாவும் மனோன்மணிக்கும் புருடோத்தமனுக்கும் நாடக இறுதியில் திருமணம் நடக்கவிருப்பதை முன்கூட்டியே தெளிவாக உணர்த்துகின்றன. அத்துடன் கிளியை ஒத்த மனோன்மணி பனம்பூமாலை அணிந்த சேரர் குலத் தோன்றலாகிய புருடோத்தமனுக்கே மணமாலை சூட்டுவாளே தவிர வேறு யார்க்கும் மணமாலை சூட்ட மாட்டாள் என்பதையும் மிகத் தெளிவாக உணர்த்துகிறது. இவ்வாறு சுந்தரம்பிள்ளையவர்கள் பின்னால் நடைபெறும் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே ஆங்காங்குக் குறிப்பாகவும் நயமாகவும் உணர்த்திக் கொண்டே செல்கின்றார்.

## திருப்பு மையங்கள் :

நாடகத்தில் ஆங்காங்கே திருப்பு மையங்கள் இருந்தால் தான் பார்ப்போர்க்கும் காண்போர்க்கும் இன்பம் பயக்கும். மனோன்மணீயத்தின் தொடக்கத்திலேயே திருப்பு மையம் அமைந்து விடுகிறது. சீவகன் தன் தலைநகரை மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு மாற்றியதே அத்திருப்பு மையம். இதற்கு மூலகாரணமாக இருந்தவன் குடிலன். மனோன்மணியின் கனவு இரண்டாவது திருப்பு மையமாக அமைகின்றது. மனோன்மணி காதல் கனவு கண்ட காரணத்தால்தான் சீவகன் பலதேவனைத் திருமண நோக்குடன் புருடோத்தமனிடம் தூது அனுப்புகிறான். புருடோத்தமன் காதல் கனவு மற்றுமொரு திருப்பு மையமாகும். புருடோத்தமன் மனோன்மணியை மணம் புரிய வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அவன் சீவகன் மேல் போர் தொடுக்கின்றான். நான்காவது திருப்பு மையம் போர்க்களத்தில் சீவகன் அடைந்த தோல்வியாகும். தோல்வி அடைந்த சீவகன் தன் மானம் கருதித் தன் வாளால் தற்கொலை புரிந்து கொள்ளும் நிலையிலிருக்கின்றான். அப்பொழுது நாராயணன் அங்கு வந்து சீவகனின் தற்கொலை முயற்சியைத் தடுத்து நிறுத்துகின்றான். நாடகத்தில் இது முக்கியமான திருப்புமையமாகும். நாராயணன் தடுத்திராவிட்டால் சீவகன் தற்கொலை செய்திருப்பது உறுதி. சீவகன் அந்த அளவிற்குத் தன்மானம் உள்ளவன். சீவகன் இறந்திருந்தால் நாடகத்தின் போக்கு எப்படி மாறியிருக்கும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாவிட்டாலும் அடியோடு மாறியிருக்கும் என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்லலாம். நாராயணன் சீவகனைக் காப்பாற்றியது நாடகத்தில் சிறந்த கட்டமாகும். பாண்டிய நாட்டைப் புருடோத்தமனுக்குக் காட்டி கொடுத்து அரசைக் கைப்பற்ற விரும்பிய குடிலன் புருடோத்தமனால் விலங்கிடப்படுகிறான். குடிலன் நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று. இதுவும் நாடகத்தில் ஒரு பெரிய திருப்பு மையமாகும், கடைசித் திருப்பு மையம் நாடகத்தின் இறுதியில் அமைந்துள்ள திருமணக் காட்சி மனோன்மணிக்கும் பலதேவனுக்கும் திருமணம் நடைபெற எல்லா ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. மனோன்மணி பலதேவனுக்கு மணமாலை சூட்டும் கட்டத்தில் நின்றுகொண்டிருக்கிறாள். திடீரென்று புருடோத்தமன் அங்கு தோன்றுகின்றான். மனோன்மணி அவனைக் காணுகின்றாள்; உடனே அவனிடம் விரைந்து செல்லுகின்றாள்; மணமாலை சூட்டுகின்றாள். பலதேவனுக்கு மாறாகப் புருடோத்தமனைத் தன் கணவனாக விரும்பித் தேர்ந்தெடுக்கிறாள் நாடகத்தின் இந்தத் திருப்புமையம் எல்லார்க்கும் பெருவியப்பையும இன்பத்தையும் அளிக்கின்றது. மனோன்மணீயம் திருப்பு மையத்தில் தொடங்குகிறது; திருப்பு மையங்கள் வழியாகச் செல்கின்றது; திருப்பு மையத்தில் முடிகின்றது. ஒவ்வொரு திருப்பு மையமும் நாடகத்தின் போக்கை மாற்றுகின்றது. நீட்டிக்கின்றது; வளர்க்கின்றது; வியப்பூட்டுகின்றது; சுவை பயக்கின்றது. தொடக்கத்திலிருந்து இறுதிவரை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்தும், செல்வாக்கில் உயர்ந்தும், அதிகாரத்தில் ஓங்கியும் சீவகனை ஏன் பாண்டிய நாட்டையே ஆட்டிப் படைக்கும் ஆற்றல் பெற்ற குடிலன் இறுதியில் புருடோத்தமன் முன்பாகத் திடீரென்று வீழ்கின்றான். நிலத்திலிருந்து சிறிது சிறிதாக மேலெழுந்து வானத்தின் உயரத்தில் விரைவாகப் பறந்து கொண்டிருக்கும் விமானம் திடீரென்று ஆழ் கடலில் ஒரே விநாடியில் தொப்பென விழுந்ததைப் போல் குடிலன் மாட்சியின் சிகரத்திலிருந்து இகழ்ச்சியின் பாதாளத்தில் வீழ்ந்து விடுகிறான். குடிலன் மாட்சி படிப்படியாக உயர்ந்து கொண்டே சென்றது. ஆனால், அவன் வீழ்ச்சி—ஒரே விநாடியில்—ஒரே வீழ்ச்சியாக நேர்ந்துவிடுகின்றது.

குடிலன் தன் உயர்ந்த மாட்சியில் இருந்து வீழ்ச்சி யடைகின்ற நிலையிலேயே இந்நாடகத்தின் உச்சக் கட்டம் (Climax) ஆகும்.

**மனோன்மணீயத்தின் சிறப்பியல்புகள் :**

நீதி, உவமை, பழமொழி, இலக்கிய மேற்கோள், பண்டை இலக்கியக் கருத்து, தத்துவம், உள்ளுறை, உணர்ச்சி, கிளைக்கதை, (சிவகாமி சரிதம்) சொல்லாட்சி சொல்நயம், உட்பொருள், உணர்ச்சி ஆழம், இலக்கிய நயம், கற்பனை, பாத்திரப் படைப்பு, குணச்சித்திரம், கருத்து, உரையாடல், உயிரோட்டம், கதை அமைப்பு கதைப்போக்கு, மெய்ப்பாடு. கவிதையழகு, சந்தம் முதலிய யாவும் மனோன்மணீயத்தில் மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன. இத்தகைய பல்வேறு சிறப்புக்கள் வாய்ந்த மனோன்மணீயம் நவில் தொறும் இன்பம் அளித்த வண்ணம் இருக்கின்றது. மனோன்மணீயத் தைப் படைத்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர் களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஒரு நாடகம் சிறப்பாக இருக்கவேண்டுமானல், அந்நாடகத்தில் பங்கு கொள்ளும் நடிகர்களிடையே ஒழுங்கும் நியதியும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும்.

—தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்


தென்னகத்தின் தனிச் சிறப்புப் பெற்ற காஞ்சியில்,
நீடித்த உழைப்பும், சிறந்த வேலைப்பாடுகளுங் கொண்ட
செப்பு பித்தளை பாத்திரங்களுக்கு

**காஞ்சிபுரம் பாத்திர தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடட்**
**(IND, No. 397)**

*செயலாளர் :*
T. M. விஜயபாலன்
*437, காந்திரோடு.*
காஞ்சிபுரம்

*தலைவர் :*
K. S. பார்த்தசாரதி
காஞ்சிபுரம்.

*தந்தி : "மெட்டல் ஒர்க்ஸ்"*

*போன் : 221*

# சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்

எஸ். வி. சகஸ்ரநாமம்



நமது தமிழகத்தின் நாடகச் சரித்திரம் ஒன்று நல்ல முறையில் உருவாகுமேயானால், அந்த சரித்திர ஏட்டில் தமிழ் நாடகப் பேராசான் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளும், தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் அவர்களும் முக்கிய இடம் பெறுவார்கள் என்பது எல்லாரும் அறிந்த விஷயம்.

இன்று தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் பெயரால் அமைக்கப்பட்டிருக்கும் இந்நினைவு மன்றத்தின் நோக்கங்களை உங்களுக்கு சமர்ப்பிப்பது எங்கள் கடமையாகும்.

இந்த மன்றத்தில் முதல் நோக்கம் தமிழகத்தின் நாடகக் கலை வளர நாடகம் எழுதியும், நாடகத்தை அமைத்தும், அதில் சிறப்புற நடித்தும், வந்துள்ள எண்ணற்ற கலைஞர்களை நினைவு கூர்ந்து, அவர்களின் பணியை ரசிகர் முன்னிலையில் தெரிய வைப்பதும் ஒன்றாகும். அந்த அடிப்படையில்தான் ஆண்டு தோறும் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் நினைவு நாளைக் கொண்டாடுகிறோம். எத்தனையோ கலைஞர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தில் மேடையில் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிவிட்டு பின்னர் மறைந்துவிட்டனர். ஆனால் அவர்களின் நினைவு ரசிகப் பெருமக்களுக்கு அதிலும் குறிப்பாக இளம் தலைமுறையினருக்கு இருக்குமா என்பது சந்தேகத்திற்கிடமான விஷயம். ஏனெனில் நம்முடைய நாடக சரித்திரம் என்று ஒன்று இல்லாததுதான் இதற்குக் காரணம். ஆகவே, மறைந்துபோன கலைஞர்களின் பணியை மக்களுக்குத் தெரியவைப்பதின் மூலம் தான் புதிய உற்சாகமுள்ள இளைஞர்களையும் எதிர்காலத்தில் நாடகக் கலையின் பணிக்காக அழைத்து வர முடியும். முந்தைய சரித்திரம், நமது பாரம்பரியம் இவைகள் சரியானபடி இளம் தலைமுறையினருக்கு விளக்கப்படாவிட்டால் அவர்களின் வளர்ச்சி ஒரு கட்டுக் கோப்புக்குள் அடங்காது.

ஆகவே இந்த மன்றம் மறைந்துபோன சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்ற நாடகப் பெரியார்களின் நாடகங்கள் மறைந்து போகாவண்ணம் கட்டிக் காத்து அதைப் புத்தம் புதிய அமைப்பில் மக்களுக்கு வழங்குவதும் தன் கடமை எனக் கொண்டிருக்கிறது. இப்படி பல நாடகங்கள் புத்தக வடிவிலும் மேடையிலும் வெளிக் கொணருவதன் மூலம் நாடகக் கலை வளர்ந்த வரலாறு மக்களுக்கு தெரிய வாய்ப்பு ஏற்படுகிறது. பாரம்பரியமும் கலாச் சாரமும் எதுவென்று தெரியும்போதுதான், ஒரு விஷயத்தில் ஆழ்ந்த பக்தியும் அதற்காக உறுதியாக செயலாற்றும் தன்மையும் ஏற்பட முடியும். அந்த வகைக்கு உதவி செய்யவே இந்த மன்றம் பணியாற்றும். இதைக் குறிப்பிடும்போது நான் சோவியத் ரஷ்யாவில் கண்டு வியந்த ஒரு விஷயத்தையும் உங்களுக்குச் சொல்ல வேண்டுமென ஆசைப்படுகிறேன். மாஸ்கோவின் மையத்திலுள்ள பஹ்ருஷ்யன் தியேட்டர் மியூசியம் என்ற கட்டிடத்தில் ரஷ்ய நாட்டின் நாடக வரலாற்றை காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள் தொன்றுதொட்டு அது வளர்ந்த முறை, நாடகக் கலை வளர உறுதுணையாக நின்ற பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு—மற்றும் நாடகக் கலைக்கு நேர்ந்த சோதனைகள் ஆகியவற்றை நாம் கண்ணாரக் கண்டு தெரிந்து கொள்ள முடிகிறது. சிலைகள்—மாடல்கள்—வரை-படங்கள் மூலம் நாம் அந்தக் கலை வளர்ச்சியை அறிந்துகொள்ள முடிகிறது. அம்மாதிரி முயற்சி இந்தியாவிற்குப் புதிது என்று நினைக்கிறேன். அந்த முறையில் நாடக வரலாற்றின் சரித்திரங்கள் வெளியிடுவது நாடக வரலாற்றுக் காட்சிசாலைகள் அமைப்பது போன்ற பணிகளிலும் மன்றம் ஈடுபடும் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதோடு தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் இடையூறாக இருப்பது போதிய நாடக மேடைகள் இல்லாததுதான் முக்கியமாக உள்ள குறைபாடு. இலக்கியம் வளர எப்படி பத்திரிகைகள் துணை புரிகின்றனவோ, அதேபோல நாடகம் வளர போதிய மேடைகள் இல்லாததும் ஒரு குறையே. சென்னையில் உள்ள நாலைந்து நாடகச் சாலைகள் தவிர பெரிய ஊர்களில் போதிய நாடகச் சாலைகள் இல்லை என்றே சொல்லிவிடலாம். இங்கு குறிப்பிட்ட நாலைந்து நாடக அரங்கங்களும் கச்சேரிக்கும், பொது விழாக்களுக்கும்

சில இடங்களில் கல்யாணங்களுக்கும்கூட இடம் கொடுக்கிறது. ஆனால் நாடகத்தையே நடத்தும் வசதிகள் அமைந்த நாடக மேடைகள் இல்லாதது பெரும் குறையே. தமிழகத்தின் நாடகக் கலைக்காக உழைப்பவர் பல பெரியோர்களின் பெயரில் நாடக அரங்கங்கள் அமைக்க இந்த மன்றம் முயற்சி எடுக்கும்.

மூன்றாவதாக, தொழில் நாடக நடிகர்கள் போதிய வருவாய் இல்லாமல் வருந்துவது நாடகக் கலை பற்றி சிந்திக்கும் அனைவருக்கும் உள்ள பெரிய பிரச்சினையாகும். மற்ற தொழில்களுக்குள்ள பாதுகாப்பு, சம்பளம், இன்சூரன்ஸ்-போன்ற எதுவுமே நாடகக் கலைஞர்களுக்கு இல்லாமல் அவர்கள் வாழ்க்கையோடு போராடவேண்டிய நிலை பரிதாபத்துக்குரியதாகும். பல ஆண்டுகளாக இந்தக் கலையிலேயே ஊறி இதிலேயே வாழ நினைக்கும் அவர்களுக்கு போதிய உற்சாகமும் வருவாயும் கிடைக்கும் வழி முறைகளை ஆராய்வதும் மன்றத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பரவலாக நாடகங்களை நடத்துவதும், நிரந்தரமான வருவாய்க்கு வழி செய்வதும் அந்த முயற்சியின் முக்கிய அம்சங்களாகும்.

தொழில் நாடக நடிகர்கள் வறுமையால் வாடாமலிருக்கும் வழிமுறைகளை மன்றம் தீவிரமாக பரிசீலனை செய்யும் என்று உங்கள்முன் கூறிக் கொள்கிறோம்.

அதோடு வெளிநாட்டினரின் கலைக்கும் நம்முடைய கலைக்கும் போதிய தொடர்பு இல்லாமல் இருக்கிறது. வெளிநாட்டிற்குப் போவானேன்! இந்திய மாநிலங்களான மகாராஷ்டிரம், வங்கம் போன்ற இடங்களில் நாடகம் அடைந்துள்ள வளர்ச்சியை நாம் அறிந்து கொள்வதும் அதேபோன்று நம்முடைய வளர்ச்சியையும் முன்னேற்றப் பாதையில் நமது சோதனைகளை அந்நிய மாநிலத்தவர்கள் அறிவது மிக மிக அவசியம். அந்த முறையில் அவருடைய கலாரஸனைகளை, அனுபவங்களை, உணர்ச்சிகளை நாம் அறிந்து கொள்வதும், கருத்துப் பரிமாறிக் கொள்வதும் மிக மிக அவசியமாகிறது. இதன் மூலம் இந்திய மக்களின் ஐக்கிய மனப்பான்மையும் தேசிய ஒருமைப்பாடும் வளர வழி கோலுகிறது. இந்த ஒருமைப்பாட்டை அரசியலிற்கு அப்பாற்பட்ட கலை மிக எளிதில் சாதித்துவிடும் என்பது எங்கள் எண்ணம்.

சமுதாய பொருளாதார வளர்ச்சியில் நாடகத்திற்கும் பெரும் பங்கு உண்டு. தேச வரலாற்றை விளக்கவோ—பொருளாதார ரீதியில் தேசம் அடைந்து வரும் மாறுதலை மக்களுக்கு அறிவிக்கவோ நாடகம் பெரும்பங்கு செய்ய முடியும். அதோடு ஆங்காங்கே தோன்றும் வெறி உணர்ச்சி, பலாத்காரப் போக்கு, தேச விரோத சக்திகள் இவற்றை ஒழிக்க, இவைகளுக்கு எதிராக மக்கள் விழிப்புடனிருக்க நாடகக் கலை உதவுகிறது.

நாம் எந்த அரசியல் கட்சிகளில் பங்கு கொண்டாலும் நாம் அனைவரும் தேசபக்தி உள்ளவர்களாக இருத்தல் அவசியம்தானே! இந்த தேசம் சுதந்திரமடைய எத்தகைய தியாகங்களைப் புரிந்திருக்கிறது என்பதை இன்றைய இளம் தலைமுறையினருக்கு சுதந்திரம் அடைந்தவுடன் பிறந்த வாலிபர்களுக்கு தெளிவுற விளக்கினால்தான், அவர்கள் உணர்ச்சியில் அந்த தியாகங்கள் ஊறினால்தான், அவர்களிடம் நாம் தேசபக்தியை எதிர்பார்க்க முடியும். அப்படி வரும் போது அத்தகைய கதைகளை வரவேற்க நம் இளைஞர்கள் தயாராக இருக்கிறார்களா என்பது ஒரு கேள்விக்கிடமாகவே இன்று உள்ளது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரை திருணமாக மதித்து போராடுகிற இளைஞன் ஒருவனைப் பற்றி நாடகம் நடத்தினால் இது 'அவுட் ஆப் டேட்' (out of Date) என்று உதட்டைப் பிதுக்குகிற பேர்வழிகளைத்தான் இன்று நாம் பார்க்கிறோம். இந்த மனப்பான்மை அபாயமானது என்பதை உணரவேண்டும். அர்த்தமற்ற காதல் கதைகள், நடக்க முடியாத சாகசக் கதைகள், வெறி உணர்ச்சியைத் தூண்டும் சிற்றின்பக் கதைகள், கொலை உணர்ச்சி, பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சி இவைகளைத் தூண்டும் துப்பாக்கிச் சண்டைக் கதைகள் இவைகள் தான் நம் இளைஞர்களிடையே பரவி வெகுவாக ரசிக்கப்படுகிறது. இத்தகைய திரைப் படங்களை வெய்யிலையும் பாராமல் காத்து நிற்கும் கூட்டம் எதிர்காலத்தின் நல்ல வளர்ச்சிக்கு அறிகுறியல்ல. இந்தக் குறைபாடுகளை போக்கி நாடகங்களுக்கும் சினிமாவிற்கும் நல்ல தேர்ந்த ரசிகர்களை தயார் செய்வது யார் கடமை? என்ற கேள்வி கேட்காமல் இந்த மன்றத்தில் ஈடுபட்டுள்ள கலைஞர்களாகிய எங்களுடைய கடமைதான் என்பதையும் அதற்காகவும் சில திட்டங்களை ஆராய்ந்து வருகிறோம், பெரியவர்களிடமெல்லாம் அணுகி யோசனையும் கேட்டு வருகிறோம். எப்படியாவது ஒரு வழியில் தேச உணர்ச்சியை, பக்தியை, ஒருமைப்பாட்டை, ஆத்மீக வளர்ச்சியை வளர்க்கும் நாடகங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரம் ஆயிரம் தோன்றினால் தான் இந்த தேசம் பெரும் கலாச்சார விபத்திலிருந்து காப்பாற்றப்படும். அதற்கு வழி செய்யும் பணியில் இம்மன்றம் முன் நிற்கும். அதற்கு கலா ரசிகர்களாகிய உங்களுடைய அன்பும் ஆதரவும் ஆசியும் தேவை.

சிறந்த உழைப்பு மிக்க நாடகக் கலைஞர்கள் ஒன்றுகூடி நாடக சாலை அமைத்து இம்மாதிரி நாடகங்களை நடத்தினால் நல்ல பலன் கிட்டும்,

லாலா லஜபதிராயின் வாழ்க்கையிலிருந்து சில பகுதிகளை கலைஞர் எஸ். டி. சுந்தரம் அவர்கள் 'வீரமா சக்தி' என்ற பெயரில் எழுதிக் கொடுத்தார்கள். அதை எங்கள் 'ஸேவாஸ் ஸ்டேஜ்' நாடகமாக நடத்தியபோது இது போன்ற நாடகங்களால் ஏற்படும் நற்பலனைக் கண்ணாரக் கண்டோம். எத்தனையோ இளைஞர்கள் உணர்ச்சி மேலோங்க சுதந்திரம் வாங்க இப்படியெல்லாமா கஷ்டப்பட்டோம்? இவற்றை நாங்கள் அறியவில்லையே என்று பல இளைஞர்கள் கூறியதை நான் கேட்டேன்.

இப்படி பல கருத்துக்களை மனதில் கொண்டுதான் இந்த மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உற்சாகத்தோடும் உண்மையோடும் உழைக்கும் நாடக அபிமானிகள் பலர் உறுப்பினராக இருக்கிறார்கள்,

இவர்கள் இதைச் செயல்படுத்த உங்கள் அனைவரது அன்பும் ஆதரவும் அவசியம்.

கற்பனைத் திறனும்

கருத்துயர் கதையும்

கண்கவர் வனப்பும்

அமைந்த

ஓவியங்களை அளிக்கும்

கலைக்கூடம்

AVM

புரொடக்ஷன்ஸ்

ஏவிஎம் ஸ்டூடியோஸ், வடபழனி, சென்னை 26

# அழகுக் கலை வளர்த்த ஆன்றோர்கள்

"மைவண்ணன்"

உலகிலுள்ள பிற நாட்டு மக்களின் இயல்பு எப்படியோ! ஆனால், தமிழ் மக்களுக்கு விசித்திரமான ஒரு தனி இயல்பு உண்டு. அதுதான் ஒருவரைப் புகழத் தொடங்கிவிட்டால், ஒரேயடியாகத் தூக்கி உச்சிமீது வைத்துப் புகழ்வார்கள். அதேபோல, இகழ்வதென்று ஆரம்பித்தாலும் இகழ்ந்து பேசிக்கொண்டே யிருப்பார்கள். அப்படியே ஒருவரை மறப்பதென்றாலும் அடியோடு மறந்து விடுவார்கள். என்றும் நினைவில் வைத்துப் போற்றக்கூடியவர்களைக் கூடக் கனவிலும் நினைக்கமாட்டார்கள்.



மறைமலை யடிகள்

"காய்தல் உவத்தல் இன்றி ஒருபொருளை
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே"

என்ற பொன்மொழி நம் தமிழகத்தில்தான் பன்னெடுங் காலமாக வழங்கி வருகிறது. இங்குதான் நம் மூதாதையர், 'நமக்கு இன்னார், இனியார் என்று பாராது ஆட்களைச் சரியாக எடை போடுங்கள்' என்று நடுநிலைத் தராசை - ஒரு பால் கோடாத நடுநிலைமை என்ற நற் பண்பை—த் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால், சால்பு மிகவுடைய அப்பெருமக்கள் ஏற்படுத்திச் சென்றுள்ள ஒரு நல்ல மரபை - சம்பிரதாயத்தை - அவர்கள் வழிவந்த இன்றைய தமிழ் மக்கள் ஓரளவாயினும் கடைப்பிடிக்கிறார்களா என்றால், பெரும்பாலும் இல்லையென்றே சொல்லவேண்டும். ஒருவருடைய அறிவு, ஆற்றல் அறிந்து, குணஞ் செயல் அறிந்து, தகுதி, ஒழுக்கம் முதலியவை அறிந்து பாராட்டுவது அல்லது புறக்கணிப்பது என்ற பெருங்குணம் நம் மக்களில் பெரும்பாலாருக்குக் கிடையாது என்றே வருத்தத்துடன் சொல்லவேண்டி யிருக்கிறது. பிறர்பால் காணும் கல்வி, கேள்வி ஞானங்களையும் நற்பண்பு, நல்லொழுக்கங்களையும் குறிக்கோள், செயல்திறன், அவற்றால் ஏற்படும் பயன் முதலியவைகளையும் நடுநிலையாக ஆராய்ந்து பார்த்து ஒருவரைப் போற்றுவதோ தூற்றுவதோ பலரிடம் மருந்துக்குங் காணமுடியாத அபூர்வ குணமாகும்.

இதனால்தான், நம் தமிழகத்தில் எத்தனையோ பேரறிஞர்கள், அறவோர்கள், அருளாளர்கள், கலை இலக்கிய வளர்ச்சிக்காகவும் சமுதாய நலத்துக்காகவும் நாட்டின் உயர்வுக்காகவும் அரும்பாடு பட்டுத் தன்னலமற்ற பணி புரிந்திருந்தும், பெரும்பாலாரைப் பொது மக்களுக்குத் தெரிவதில்லை. அதனால்தான், பொது வாழ்வில் ஒவ்வொரு துறையிலும் தொண்டு புரிந்து மக்கள் நல் வாழ்வுக்கு வழி வகுத்தவர்கள் எத்தனையோ பேர் இருந்தாலும், ஒருவர் இருவரை மட்டுமே, சிலர் - அதுவும் அவர்கள்பால் தொடர்பு கொண்டவர்கள், அன்பு கொண்டவர்கள் சிலர் - அவர்கள் செய்துள்ள தொண்டைக் குறித்து மட்டுமே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

எடுத்துக்காட்டாக, தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு, சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் எத்தனையோ பேரறிஞர்கள், கலைஞர்கள், ஆன்றோர்கள் எத்தனையோ வகைகளில் பணி புரிந்து வந்திருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் தமிழ் மக்களுக்குத் தெரியாது. சம்பந்தப்பட்ட கலைஞர்களும் அறியமாட்டார்கள். தெரிவிக்கக்கூடிய தகுதியுடையவர்களும் அவர்களைத் தெரிவிக்கத் தவறிவிட்டார்கள். இதனால், பல பெரியார்களின் பெயர்கள் மறைக்கப்பட்டுவிட்டது; மறக்கப்பட்டுவிட்டது. இதனாலேயே மறைமலையடிகள், விபுலானந்த சுவாமிகள், மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர், கா. ரா. நமசிவாய முதலியார் போன்ற பெரும் புலவர்கள் நாடகக் கலை ஆக்கத்துக்காக அவரவர்களுடைய நோக்கிலும் போக்கிலும் புரிந்துள்ள அருந்தொண்டுகள், பொதுவாக இன்றைய தமிழ் மக்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. இப்பேரறிஞர்கள் இயற்றமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்திருப்பது போலவே நாடகத் தமிழ் வளர்ச்சிக்காகவும் அரிய பணி ஆற்றியிருக்கிறார்கள்.

சமஸ்கிருத மொழியில் தலைசிறந்த நாடகங்கள் இருக்கின்றன என்று உலகப் பேரறிஞர்கள் ஒருமுகமாக சொல்லி வியந்து பாராட்டும் அளவுக்கு உயர் நிலையை உண்டுபண்ணியிருப்பவர் மகாகவி காளிதாஸன் குறிப்பிடத் தக்கவர். அவருடைய நாடகங்கள் ஒவ்வொன்றும்

பெரிதும் போற்றிப் பாராட்டப்பட்டும், பல மொழிகளில் நடிக்கப்பட்டும் வருகின்றன, காளிதாஸனின் தலை சிறந்த அற்புதப் படைப்பு சாகுந்தலம். அச் சிறந்த நாடகத்தைத் தமிழில் ஆக்கித் தந்திருப்பவர் தமிழ்ப் பெருங்கடல் மறைமலையடிகளாவர். அறுபது ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 1907-ம் ஆண்டிலேயே அவர் இச்சிறந்த சமஸ்கிருத நாடகத்தைத் தமிழாக்கித் தந்து, தமிழிலும் இதுபோன்ற நல்ல நாடகங்கள் உண்டாவதற்கு வழி வகை செய்திருக்கிறார்.



விபுலானந்த சுவாமிகள்

காளிதாஸனுடைய சாகுந்தலம் தமிழிலும் மற்றும் உள்ள இந்திய மொழிகள் பலவற்றிலும், ஆங்கிலம் முதலிய பிற நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும், மறைமலையடிகள் ஆக்கியுள்ள தமிழாக்கந்தான் மற்றெல்லா மொழி பெயர்ப்புகளையும் விடத் தலைசிறந்து விளங்குகின்றன என்று பன்மொழிப் புலவர்கள் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர். சமஸ்கிருத மொழியில் பெரும் பாண்டித்தியம் வாய்ந்து அதற்கு ஒரு பிதாமகனென மதிக்கப்பட்டு வருபவரும் சென்னை மயிலாப்பூர் சமஸ்கிருதக் கல்லூரியின் முதல்வராயிருந்தவருமான மகாமகோபாத்தியாய குப்புசாமி சாஸ்திரிகள் ஆண்டுதோறும் தலைநகரில் கொண்டாடப்பட்டு வரும் காளிதாஸன் தினவிழா வொன்றில், 'பிற மொழிகளில் வந்துள்ள சாகுந்தலம் மொழி பெயர்ப்புகளிலேயே மறைமலையடிகளாரின் தமிழாக்கத்துக்கு இணையாக வேறொன்றைச் சொல்ல முடியாது. அடிகளார் அவ்வளவு அருமையாக மொழி பெயர்த்திருக்கிறார்' என்று மனமாரப் பாராட்டிப் பேசியிருக்கிறார். காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகளும் மறைமலையடிகளாரின் சாகுந்தலம் தமிழாக்கமே சிறந்ததென ஏற்றுக் கொண்டு அவ்வருமையான நூலை வைத்துக்கொண்டு நல்ல ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் மாணவ மாணவிகளுக்கு மறைமலையடிகளாரின் பெயரால் பரிசுகள் வழங்கப்படும் என்று தெரிவித்து, அறக்கட்டளையொன்று ஏற்படுத்திச் சில ஆண்டுகளாகக் கட்டுரை போட்டிகள் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார் என்பது அறிஞர்கள் அறிந்த செய்தியாகும்.

இத்தகைய சிறந்த தமிழாக்க நூலுக்கு அறிமுக வுரை போல, மறைமலையடிகள் 1934-ம் ஆண்டில் திறனாய்வுக் கட்டுரையொன்றை 182 பக்கங்கள் எழுதித் தனியாக வெளியிட்டிருக்கிறார். இந்த அருமையான கட்டுரை காளிதாசனுடைய சாகுந்தல நாடகத்துக்கு மட்டும் திறனாய்வு அல்ல; நாடகக் கலையைப் பற்றியே ஒரு சிறந்த ஆழ்ந்த ஆராய்ச்சியாகும் என்று சொல்ல



உ. வே. சாமிநாத ஐயர்

வேண்டும். நாடக வரலாறு, நாடக அமைப்பு, நாடகக் கதையமைப்பு, நாடகமாந்தர் இயற்கை, கதை நிகழும் இடமும் காலமும் ஆகியவை குறித்து அவர் விரிவாக எழுதியிருக்கிறார். நாடகக் கலை வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் - முக்கியமாக நாடக ஆசிரியர்கள் இவ்வருமையான ஆராய்ச்சியுரையை அவசியம் படித்துணர வேண்டும். ஆழ்ந்து படித்துப் பயன் பெற வேண்டும்.

அடுத்தபடியாக, விபுலானந்த சுவாமிகள் நாடகக் கலைக்கு வழங்கியுள்ள பரிசு பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். சிலப்பதிகாரம் காவியத்திலுள்ள அரங்கேற்றுக் காதையை ஆதாரமாகக் கொண்டு 'மதங்க சூளாமணி' என்ற நாடக இலக்கிய நூலை எழுதித் தமிழ் மக்களுக்குத் தந்திருக்கிறார். அது மட்டுமா! வீணை என்னும் இன்னிசைக் கருவி வருவதற்கு முன்னர் நம் தமிழகத்தில் வழக்கில் இருந்து வந்த யாழ் என்ற சிறந்த இன்னிசைக் கருவியைப் பற்றி ஆராய்ந்து அந்த யாழ் எத்தனை வகையாக எந்தெந்த விதமான உருவில் இருந்தன என்றெல்லாம் தக்க ஆதாரத்துடன் விவரித்து வரைபடத்துடன் எழுதிக் காட்டி விளக்கமும் தந்து பெரிய 'இசை நூல்' ஒன்றையும் அளித்திருக்கிறார்,

இவ்வித அரிய ஆராய்ச்சிகளுக்கெல்லாம் ஆதார சுருதியாக இருந்து உதவியுள்ள ஒரு பெருமகனை முடிவாக இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அவர்தான் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்கள். அவர்

கள் பழைய சங்க இலக்கியச் செல்வங்களை மிகச் சிரமப் பட்டுத் தேடிக் கண்டுபிடித்து அருமையாகப் பதிப்பித்து நூல் வடிவில் தந்திருக்கிருர். அவைகளில் குறிப்பிடத் தக்க ஒன்று சிலப்பதிகாரப் பெருங்காவியம். அக்காவி யத்தில் கவின் கலைகள் (Fine arts) அல்லது அழகுக் கலைகள் குறித்து ஆங்காங்கு காணப்படும் குறிப்புக்கள்-முக்கியமாக அரங்கேற்றுக் காதையில் பொதிந்திருக்கும் கூத்துக் கலை அதாவது நடனக்கலை, நாடகக் கலைகள் பற்றி விவரிக்கப்படும் விவரங்கள், இசைக் குறிப்புக்கள், இன்னிசைக் கருவிகள் பற்றிய தகவல்கள் தாம் பிற்கா லப் பேரறிஞர்கள், இசைக் கலை, நடனக் கலை, நாடகக் கலை ஆகிய அழகுக் கலைகள் குறித்து பல நூல்களை எழுதி வழங்கி வருவதற்கு ஐயரவர்களின் அருந்தொண்டு ஊற்றுக் கண்ணுக இருந்து பெரிதும் உதவி வருகிறது. இவருடைய சிலப்பதிகாரப் பதிப்பும் அரங்கேற்றுக் காதைக்கு அடியார்க்கு நல்லாரின் அரிய உரையுடன் இவர் ஆராய்ந்து தந்துள்ள அருமையான குறிப்புக்களும் இல்லையானல், விபுலானந்த சுவாமிகளின் மதங்க சூளாமணியும் இசை நூலும் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரின் நாடக இயல் நூலும் பிறவும் வெளி வந்திருக்க முடியாது. ஆகவே, சாமிநாத ஐயரவர்களையும் சுவாமி வேதாசலம் அவர்களையும் நாடகக் கலைஞர்கள் நன்கு அறிந்து போற்றி வருவது அவர்களுடைய தலை யாய கடமையாகும்.


## திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு மத்தியபாங்கு /வரையறுக்கப்பட்டது/ எண். 178

கிளைகள் :—கரூர், அரியலூர், துறையூர், மனப்பாரை, லால்குடி, பெரம்பலூர், தில்லை நகர் (திருச்சி) ஜெயங்கொண்டம்.

**திரு. பா. வெங்கடாசலம் பிள்ளை அவர்கள்,**
பி.எ., பி.எல்., தலைவர்

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்...ரூ. 1/-கோடி
செலுத்தப்பட்ட மூலதனம் ...ரூ. 61/-லட்சத்திற்குமேல்
நடைமுறை மூலதனம் ...ரூ. 5/-கோடிக்கு மேல்

நிரந்தர வைப்புகளுக்கு 5% முதல் 7½% வரை தவணை காலத்திற்கேற்றவாறு வட்டியும், சேமிப்புக் கணக்கில் தினசரி நிலுவை பேரில் ரூ. 25,000/- வரை 4% வட்டியும் வழங்கப்படுகிறது.

வாடிக்கைதாரர்களுக்கு கழிவுத்தொகை பெருமலே பணவோலைகளை மாற்றிக் கொடுத்தும், வெளியூர் பாங்கு களுக்கு பணவோலை வழங்கியும் வருகிறது.

மற்ற விபரங்களுக்கு செயலாளருக்கு விண்ணப் பிக்கவும்.

/ஒப்பம்/ **வே. முருகேசன்,**
செயலாளர்.



சுவாமி சங்கரதாஸ் சுவாமிகள் நூற்ருண்டு விழாவிற்கு எமது வாழ்த்துக்கள்

# கூட்டுறவு சிறப்பு அங்காடி

**திருச்சி.**

**"கூட்டுயர்வே நாட்டுயர்வு"**

★ மளிகை சாமான்கள்
★ ஜவுளிகள், ரெடிமேட் ஆடைகள்
★ டாய்லட் சாமான்கள்
★ மருந்து வகைகள்
★ எவர்சில்வர் பாத்திரங்கள்
★ காய்கறி கனி வகைகள்

முதலியன யாவும் ஒரே இடத்தில் கிடைப்பது 'கூட்டுறவு சிறப்பு அங்காடி' ஒன்றே

பொருள்கள் தரம் உயர்ந்தவை. மலிவான விலைகள்

**ஜே. இலக்குமணன்,** பி.ஏ., பொது மேலாளர்.

**எம். வி. சங்கரன்,** எம்.ஏ., பில். தலைவர்.




**தண்டாயுதபாணி பவுண்டரி பிரைவேட் லிமிடெட்,**

**பாப்பநாயக்கன்பாளையம் :: கோயமுத்தூர்-8**

போன்: **22419** P. B. No. 1327 தந்தி: "மோட்டார் பம்பு"

## எங்கள் சங்கரதாஸர்

இயற்றியவர் :

இசைப்பேராசிரியர் T. A. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார்

இராகம் : தேவமனோகரி  தாளம் : ரூபகம்

(பல்லவி)

எவருமில்லை ! எங்கள் சங்கரதாசரைப் போலொரு மேலவர் (எவரு)

(அநுபல்லவி)

தவமுடையார் ! தமிழ் சந்தக்கவித்திறன் முந்தப் படைத்தவர் (எவரு)

(சரணம்)

கூத்துக் கலையினை உலகிடை
காத்துப் பலபல கதைகளை
யாத்துத் தருமொரு முனிவரன்
தூத்துக்குடி தருகுருபரன் (எவரு)

---


# கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்

**ரெ. 1560, காஞ்சிபுரம்.**

அஞ்சல் பெட்டி எண் : 9  தொலைபேசி எண் : 3 3 8.

| | | | | |
|---|---|---|---|---|
| கிளைகள் :— | திருத்தணி | ,, | ,, | 37 |
| | செங்கற்பட்டு | ,, | ,, | 321. |
| | திருவள்ளூர் | ,, | ,, | 69. |
| | பட்டாளம் | .... | .... | — |

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ | 125 இலட்சம் |
| செலுத்தப் பெற்ற மூலதனம் | ரூ | 67, 40, 910/- |
| காப்பு நிதி (Re erve Fund) | ரூ | 15, 37, 467/- |
| இதர நிதிகள் | ரூ | 21, 46, 017/- |
| செயல்பாட்டு நிதி (Working capital) | ரூ | 248, 56, 832/- |
| மாநில அரசினர் பங்கு .... | ரூ | 5, 50, 000/- |

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பாங்காக இருந்து வருகிறது. குறைந்த கமிஷன் விகிதத்தில் எல்லா இடங்களுக்கும் டிராப்டுகள் வழங்கப்படுகின்றன.

கீழ்கண்ட விபரப்படி நிரந்தர முதலீடுகளின் பேரில் [Fixed Deposits] உயர்ந்த வட்டி விகிதம் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 3 மாதங்கள் முதல் 6 மாதங்களுக்கு | | 5 சத விகிதம் |
| 6 மாதங்களுக்கு | ,, | 6 ,, |
| 1 ஆண்டிற்கு | ,, | 6¼ ,, |
| 2 ஆண்டிகளுக்கு | ,, | 6½ ,, |
| 3 ,, | ,, | 6¾ ,, |
| 4 ,, | ,, | 6¾ ,, |
| 5 ,, | ,, | 7¼ ,, |
| 6 ,, | ,, | 7¼ ,, |
| 7 ஆண்டுகளும் அதற்கு மேலும் | | 7½ |

சேமிப்பு டிபாசிட்டுக்களின் பேரில் 4% வட்டி அளிக்கப்படும். வாரத்திற்கு ரூ 1000/- வரை வாங்கலாம்.

மாதாந்திர சேமிப்பு டிபாசிட்டுக்கள் (Recurring Deposit) 1 ஆண்டு முதல் 7 ஆண்டுகள் வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு 6% வட்டி வழங்கப்படுகிறது.

விபரங்களுக்கு பாங்கியின் செயலாளரையோ அல்லது உங்கள் அருகிலுள்ள எங்கள் பாங்கியின் கிளை நிருவாகியையோ அணுகவும்.

மணலி இராமகிருஷ்ண முதலியார், B. A.

# SUBBIAH FOUNDRY

**Coimbatore :: S. INDIA**

Phone : **22935**



இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழில் முன்னிரண்டையும் தன்னகத்தே கொண்டு இயங்கும் நாடகத் தமிழுக்குத் தொண்டு புரிந்த நாடக விற்பன்னர்கள், நாடகாசிரியர்கள், கலைஞர்கள் யாவர்க்கும் சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு விழா கொண்டாடும் வேலையில் அஞ்சலி செய்து இது சமயம் தொண்டு புரிந்து வரும் நாடகக் கலைஞர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துகளையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க தமிழ் நாடகக் கலைஞர்கள்
வளர்க தமிழ் நாடகக்கலை
ஓங்குக தமிழ் நாடகக் கலைப்பெருமை

S. N. குப்புசாமி முதலியார்
உபதலைவர்
ஆர்ட்ஸ் அகாதெமி,
வேலூர்.

# சந்தப்பா பாடித் தந்த சங்கரதாஸர்

திருமயிலைக் கவிராயர்

எடுப்பு

சந்தப்பா பாடித்தந்த சங்கர தாஸனை நாம்
சந்ததந் துதிசெய்வோம் வாரீர்; சோதரரே !

[சந்]

தொடுப்பு

அந்தமில் புகழான்நல்ல அருங்கலை விநோதன்நம்பி
சிந்துடன் வண்ணஞ்செய்யுள் சித்திரப் பாடல்செய்தான்

[சந்]

முடிப்பு

அற்புத மாகப்பல அருமைமிகு நாடகங்கள்
ஆனந்த மாகக்கான அணிசெய்து காட்டினனே !
புற்புத வாழ்க்கையிலே புளகாங் கிதமுண்டாகப்
பாலர்களை ஆடவைத்துப் பலகாட்சி ஜோடித்தானே !

[சந்]

நாடெல்லாம் புகழ்ந்துபாட நவரசப் பாடல்பாடி
நல்லநீதிக் கதைகளையே நாடகமா நடித்திட்டானே !
பாடெனவே பாடல்பல பண்ணுடனே தாளஞ்சேர்த்து
பொல்லாங்கைப் போக்கடிக்கப் போதனைகள் புரிந்திட்டானே !

[சந்]

தண்டபாணி சுவாமிகள்மேல் தமிழ்ப்பதிகம் பாடியேதான்
தயாநிதியின் திருவடிதாம் நமக்குத்தஞ்சம் என்றிட்டானே
தெய்வப்புலவன் குறள்கருத்தைத் தேன்பாடல் களிலேதந்து
சமரச சன்மார்க்கஞான சாத்திரம்ஈ தென்றிட்டானே! (சந்)

—☆—

PHONE : 442565 AT MADRAS

**SEASON GRAND**

**OFFER !**

AT OOTY
THE KING OF
HILL STATIONS
FRITCHLEY QUARTERS !
Opp. FERNHILL
POST OFFICE !
ADJOINING BHAVANI PALACE
WITH OR WITHOUT COTTAGES
OWN YOUR PRECIOUS
POSSESSION IN THE
LAND OF BLUE HILLS !
WITH
FLUSHOUT, MUNICIPAL WATER,
ELECTRICITY
ENJOY THE PLEASANT BREEZE
FROM THE ADJOINING
OOTY LAKE
FINEST COTTAGES UNDER
CONSTRUCTIONS !

CONTACT :

**THE MODERN BUILDERS,**

4, RAJABATHER STREET,
T. NAGAR, MADRAS-17

OR

OUR BRANCH AT
DOOR NO. 61,
FRITCHLEY QUARTERS,
BHAVANI PALACE,
FERNHILL POST OFFICE,
OOTY-4.

Phone : 61382

## The Madras Purasawalkam Hindu Janobakara Saswatha Nidhi or the Permanent General Benefit Fund Limited.

(Estd. 1882)

109/A, Vinaitheertha Mudali Street,
(Vella Street)
Vepery, Madras-7.

ACCEPTS :

**Fixed Deposits** : For 24 months, 12 months, 6 months and 3 months at $7\frac{1}{2}\%$, 7%, 6% and $5\frac{1}{2}\%$ respectively-Extra $\frac{1}{4}\%$ on Rs: 10,000/- and over-Interest payable monthly (on the Ist)-interest remitted to parties or their bankers direct every month.

**Savings Deposits** (S.B.)

Withdrawals by cheques. Interest @ 4%.

**Recurring Deposits** :

Every rupee contributed monthly for 78 months or 45 months fetches Rs. 100/- or Rs. 50/- respectively.

Advances :

**Loans** : On Jewels at $10\frac{1}{2}\%$- House Properties within Madras city limits-Regular Loans at $10\frac{1}{2}\%$ and special loans at 12% fixed deposits at $1\frac{1}{2}\%$ over and above the rate on F. D. Recurring Deposits at $7\frac{1}{2}\%$ to 93/4%.

Dr. M. B. PRABHU, M.D.,
*President.*

N. C. GIRI PAUL,
*Secretary.*

# கண் திறக்கும் கலை

மு. க. தங்கவேலன். எம். ஏ., எம். லிட்.

கண்ணுடையார் எல்லாரும் கண்ணுடையார் ஆவாரோ?
புண்ணுடையார் ஆனதொரு போக்கையிங்கு நோக்கீரே!
ஆடிப் படம்விரியும் ஆங்கேயோர் பாம்பழகை
நாடித் தவழ்ந்து நகைத்துவரும் ஓர்குழந்தை;
ஐயோ எனப்பதறி அன்புக் குழந்தையினைப்
பையத் தடுக்கவந்து பாய்ந்தாள் அருளன்னை,
குத்தீட்டி கொண்டரவைக் குத்தினன் ஓர்மறவன்;
கொத்தும் வெறியோடு குலைநடுங்கும் வீச்சோடு
வெகுளியினால் சீறி விழுமுன்னே நச்சரவம்
மகுடிப் பிடாரன் மகுடியினைக் கொத்தியதே.
மகுடியிசை மாயவில்லை; மணிப்படந்தான் சாய்ந்ததுவே!
விகடம் கலைந்ததுவே! வேடிக்கை மாய்ந்ததுவே!

* * *

அழகையே கண்ணுற்று ஆடரவின் நஞ்சறியாக்
குழவிக் கொருகண் குருடாகும்; தம்குழந்தைப்
பாசத்தில் பாம்பின்முன் பாய்ந்திட்ட அன்னைக்கு
விசம் குருடு; விரைந்திட்ட வேகத்தில்
குறிதவறிக் குத்தினன் குத்தீட்டிக் கைமறவன்
பொறியும் அறைக் குருடு; போக்கில்லாப் பாம்பாட்டி
காசிலே வைத்திட்ட கண்பெயர்ந்து காணதான்
ஆசைக் குருடன்; அசைந்தாடி ஓர்கணத்தில்
ஓசை ஒழுங்கில் உயிர்கூட்டிப் பைவிரிந்து
நல்லதொரு பாம்பெனவே நயமகுடிக் காரனுக்கு
வல்லதொரு தோழனுமாய் வாழ்ந்தும் உயிரீந்தும்
கண்ணே செவியாய்க் கலைச்சித்தர் பாட்டுலகில்
விண்ணடைந்த பாம்பே விழிப்பார்வை முற்றியதாம்.

* * *

இந்தப் புதுநோக்கை இதயத்தே நாட்டுங்கள்
சிந்தைத் தெளிவோடு சிறிதுலகை நோக்குங்கள்.

பச்சைக் குழந்தையர்போல் பகுத்தறியாப் பேதையராய்
நச்சரவை முத்தமிடும் நடைக்குருடர் எத்தனைபேர்?
பாசத்தால் பற்றால் பரிதவித்து வாழ்க்கையின்றி
ஆசைக் களத்தே அலைகுருடர் எத்தனைபேர்?
வைத்த குறிப்பிழையால் வாழ்விழந்து தாழ்வுழந்து
பைத்தியமாய்ச் சுற்றும் பழங்குருடர் எத்தனையோ?
கூடும் புகழொளியில் குருடானோர் எத்தனையோ?
காடுர் கருக்கலிலே கரும்பூனை ஆய்ந்தலையும்
கருத்துக் குருடரிவர் கண்ணிரண்டும் புண்ணுடையார்.
மருத்துவராய் வந்தாரே மாண்புயர்ந்த சங்கரதாஸ்
மண்ணிலே விண்காட்டி மனத்தில் ஒளிகூட்டி
கண்ணைத் திறக்கும் கலைவிரித்தார் நாடகத்தில்
நாடகத்தின் நல்லுயிரை நயமுறக் காணுதற்கு
நாடுஅகத்தை என்று நவின்றிட்டார் ஞானியரே.
காலம் கடந்தும் இடம்கடந்தும் காணவல்ல
மூலமே கண்ணென்று முடிவுரைப்பார் மெய்யறிஞர்.
பண்ணைத் திறந்து பரதத் தியல்திறந்து
கண்ணைத் திறக்கும் கலையிங்கு நாடகமே.


தமிழ் நாடகத் தலைமையாசிரியர்

**தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள்**

திருநாமம் வாழ்க

**எங்கள் நல்வாழ்த்துக்கள்**

★

**ஹோட்டல் குரு**

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

With best compliments from :

## PREMIER FERTILISERS LIMITED

*Manufactures of :*

***Nataraja Superphosphate & NPK Mixtures***

Distributors of T.G.L. Animal Feeds in Madras State (excluding Madras City) and in the Mysore State (excluding Bellary & Raichur districts)

| *Registered Office :* | *Factory :* | *Sales Office :* |
|---|---|---|
| 151, Mount Road, Madras-2 | CUDDALORE. O.T. | Krishna Bhavanam Cuddalore.N.T. |



கூட்டுறவே ! நாட்டுயர்வு ! !

பல்லவர் பெருமைக்கு, காஞ்சி கோயில்களும் மாமல்லபுரத்துச் சிற்பங்களும் எடுத்துக்காட்டாக விளங்குவது போன்று

**கண்கவர் காஞ்சிபுரம் பட்டுச் சேலேகள், பாவாடை, ரவிக்கை ரகங்கள் தயார் செய்வதில் தலேசிறந்து விளங்குவது, எங்கள்**

## *ஸ்ரீ வரதராஜஸ்வாமி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனே சங்கம் லிட்.*

**No. G. 2105**

**நெ. 81 & 82 காந்தி ரோட், காஞ்சிபுரம்.**

***தேவைகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள் ! ! !***

*இங்ஙனம் ; தங்கள் அன்புள்ள,*

| | | |
|---|---|---|
| திரு. K. பலராம நாயுடு | திரு. S. வேளியப்பன் C.S.R. | திரு. K. N. ராமுடு |
| *உப-தலேவர்* | *செயலாளர்* | *தலேவர்* |

*இதர நிர்வாகஸ்தர்கள்*

திரு. P. N. ஜெயராமன், திரு. V. கிஷ்டப்ப நாயகர், திரு. B. N. எதிராஜன்,
திரு. S. B. சீனுவாசன், திரு. V. வீரராகவலு.

# தவத்தால் வந்த தனிப்பெரும் புலவர்

கவிஞர் இளங்கம்பன்

பல்லவி

சங்கத் தமிழ்வளர்த்த சங்கீத மேதை
சங்கரதாஸ் சுவாமிகள்—அந்நாளில் —சங்கத்

அ . பல்லவி

கங்கை வெள்ளம் போல் கருத்து நலங் கொழிக்கக்
கணக்கிலாப் பாக்களை களிப்புடன் பாடி —சங்கத்

சரணம்

நாடகத் துறையில் நலம்பல சேர்த்தார்
நாலும் அறிந்தகலைக் கடலாய் ஆர்த்தார்
பாடல்களில் இறைமை அழகையே பார்த்தார்
பார்புகழும் புதுவை நகரில் மறைந்தார் —சங்கத்

தவத்தால் வந்தனிப் பெரும் கலைஞர்
தன்னேர் இல்லாத தகுதிமிகு புலவர்
அவர்போல் நூல்கள் செய்தவ ரில்லை
அவர் புகழுக்கும் உண்டோ? அவனியில் எல்லை —சங்கத்


Grams : "FACSIMILE"

Phone : 85220
88372

*With compliments from:*

Photo Litho Press Private Ltd.,

746, TRIPLICANE HIGH ROAD,

MADRAS - 5.




ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்
விபூதியின் மகிமையை உலகில்
எடுத்துக்காட்டியவர் திருஞானசம்பந்தர்

அருள்மொழியரசு
திருமுருக கிருபாநந்தவாரியார்,
முருகன் அடிமை ஔவை K. B. சுந்தராம்பாள்,
நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
இவர்களின் நற்சான்று பெற்றது

பழனி பரிமள விலாஸ்

**S. சித்தனாதன்**

ஐவ்வாது வாசனை விபூதி, ஸ்பெஷல்
பஞ்சாமிர்தம் சிறந்தது

---

போன் : 112 தந்தி : ''லக்ஷ்மி விலாஸ்''




காஞ்சிபுரம்

பட்டு ஜரிகை சேலைகள் வாங்க நம்பிக்கையான

புதிய ஜவுளிக்கடை

# ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் & சன்

*184, காந்தி ரோட்*

காஞ்சிபுரம்

ஆண்டவன் கிரீடத்திலே
ஜொலிப்பதும் ரத்தினம்





அரசர் முடியிலே
பிரகாசிப்பதும் ரத்தினம்

அணங்குகள் ஆரத்திலே
மின்னுவதும் ரத்தினம்



அன்பர்கள் கரத்திலே



மிளிர்வதும் ரத்தினம்

# T·A·S
# ரத்தினம்

## பட்டணம் பொடி

தபால் பெட்டி 1151, மதராஸ்-21.

S·R· ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே!

Food become more appetising when prepared with

RISING SUN BRAND

***MAIDA, SOOJI & ATTA***

★

*Manufacturers of:*

# Century Flour Mills Ltd.

**330, Thambu Chetty Street,**

**MADRAS-1.**

| Phone : | Grams : | Phone : |
|---|---|---|
| Office<br>21043 (3 lines) | " MATHOORAN " | Mills<br>61701<br>62579 |

# The Thyagaraya Nagar Co-operative Bank Limited

Estd : 1933 No. × - 75. Phone : 441353

| President : | Vice - President : | Treasurer : |
|---|---|---|
| Sri M. V. KUTTALAM | Sri C. N. MOHAN RAJ | Sri G. RAJAGOPAL |

*Other Directors :*

Sri R. Janardhanam Naidu, B.A.L T., D.E. (OXON), D.L.S. (LOND), F.L.A.
Dr. M. Dharma Rajan, M.A. M.Sc., Phd., F.L.S.
Sri M. Ramachandran
Sri T. G. Poduval, B.E., M.I.E.
Sri N. Narasimhan
Sri D. M. Divianathan

ACCEPTS : Recurring Deposits of Rs. 5/- or Multiple there of for periods of 12 to 72 months allowing Interest upto 7.50%. Rs. 5/- paid monthly will fetch at the end of the 13th, 25th, 37th, 49th, 61st and 73rd months Rs. 62/-; 128/-; 198-50.; 273/-; 355/-; and 442/- Respectively.

FIXED DEPOSITS AT : 1 Year 6½%; 2 Years 6¾%
3 Year 7%; 4 Years 7¼%
5 Years and above............7½%

LOANS GRANTED : On Immovable Properties within the Madras City Limits up to Rs. 5,000/-

For further particulars please contact the bank.

No. 1, Doraiswami Road,
T. Nagar—Madras-17.

**M. KADIRAVELU**
*Secretary.*

Hours of Business : Week Days : 8-00 to 10-30 a.m.
4-00 to 6-00 p.m.

Holidays : Sundays & Bank Holidays.

நாகர்கோவில் நகருக்கு
விஜயம் செய்யும் அன்பர்கள்
தங்குவதற்கு உகந்த இடம்

!

# பயோனியர் குமாரசுவாமி ஞாபகார்த்த மாளிகை

★ குறைந்த கட்டணம் !

★ நிறைந்த வசதி !!

★ காற்றோட்டமுள்ள விசாலமான அறைகள் !!!

★ வாகனங்கள் நிறுத்த இடம் !!!!

அனைத்தும் அமைந்த அழகிய இல்லம்

தொலைபேசி எண் : 175 | தந்தி விலாசம் : "TOURIST"

Estd: 1920 Phone: 32657

# The Madras Corporation Officials' Co-op. Bank Ltd., No. 5125

Ripon Buildings,

Madras-3.

*Ex-Officio President:*

Sri J. A. AMBASANKAR, I.A.S.,
(Commissioner, Corporation of Madras)

*Vice-President:*

Sri K. KRISHNAN NAIR, B.A.,
(Chief Accounts Officer - Corporation of Madras)

Share Capital & Reserves — Rs. 8,38,491
Working Fund Exceeds — Rs. 48,51,521

*Deposits are accepted at the following rates:*

| | | |
|---|---|---|
| Fixed Deposits | 6 Months | 5½% |
| ,, | 1 Year | 6% |
| ,, | 2 Years | 6½% |
| ,, | 3 Years | 6¾% |
| ,, | 4 Years | 7 % |
| ,, | 5 Years | 7¼% |
| Above | 5 Years | 7½% |

Fixed Deposits of Rs. 10,000 & above will carry interest at ½% extra for a period of one year.

Savings Deposits..........4%

V. BABY
*Hony-Treasurer.*

K. BETHANASAMI,
*Co-op. Sub-Registrar - Secretary.*

Phone: 32599

# The George Town Co-operative Bank Limited

NO. 8512

**29, Krishnappa Naicken Agraharam Street,**

**Madras - 1.**

(The Government of Madras have awarded A shield to this Bank in Recognition of its being the best Co-operative Urban Bank in the The Madras State)

*President:*

Dr. P. NATESAN, M. B. B. S.,

Authorised Capital — Rs. 25 lakhs
Working Capital Exceeds — Rs. 2 crores

**Present Rates of interest on Fixed Deposits are as follows:**

| | | | |
|---|---|---|---|
| 3 Months | 5¼% | 2 Years | 6½% |
| 6 ,, | 5¾% | 3 ,, | 6¾% |
| 1 Year | 6¼% | 4 ,, | 7 |
| | | 5 ,, | 7¼% |

⅛% Extra allowed on a single deposit of Rs. 25,000 and above.

¼% Extra allowed on a single deposit of Rs 25,000 for 5 years and above.

We pay monthly interest on deposits for Rs. 2,000/- and above. We accept standing instructions for transferring interest on deposits for Rs. 5,000 and above. You may avail of the maximum benefits offered by us.

SAVINGS DEPOSITS:— 4% P. A
CURRENT DEPOSITS:— ½% P. A

**Recurring Deposits are acceptable For 84 Months at 7.4%**

In recurring deposits every Rs. 100/- paid for 84 months fetches Rs. 10,600/- at the begining of the 86th month. We also give a bonus of 2 to 3% from and out of profits. A unit of a subscription is Re. 1/- per month and minimum is 5 units (i. e. Rs. 5/- p. m.)

T. ARUNACHALAM, B.A., B.Com. (HONS) & D.C.
*Secretary.*

# ஏகை சிவஷண்முகனாரின் இசைத் தமிழ்த் திறன்

கு. சா. கிருஷ்ணமூர்த்தி

இறைவனின் திருவருட் பெரும் சிறப்பை எடுத்துரைக்க வந்த பேரருட் செல்வர் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே !" என்று கூறினர்.

இதைப் போன்றே தொண்டர் தம் பெருமை கூற வந்த வேறொரு பேரருளாளர் 'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து' என்று கூறினர்.

இவ்விரண்டு செய்யுட் தொடர்பும் இறைச் சிறப்பையும், இறையருளை வேண்டி நிற்கும் தொண்டர் தம் சிறப்பையும் கூறும் முகத்தான் இயற்றப் பெற்றதே! ஆயினும், ஒரு சிறந்த நாடகாசிரியனுக்கும் ஒரு சிறந்த நடிகனுக்கும் கூடப் பொருந்துவனவா யிருத்தல் கண்கூடாம்.

ஒரு சிறந்த நாடகாசிரியன் சர்வகலா வல்லவனாய் இல்லாது போயினும், சமுதாயத்தின் சகல துறைகளிலும் தேர்ந்த அனுபவ ஞானம் பெற்றவனாய் இருத்தல் வேண்டும், அத்தகைய அனுபவ முதிர்ச்சியற்ற ஆசிரியனால் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளைச் சித்திரிக்கவும், பல்வேறு குணச் சித்திரப் பாத்திரங்களைப் படைக்கவும், படைத்தவற்றைப் பயிற்றுவித்தலும் இயலாது.

அப்படியே ஒரு சிறந்த நடிகன் நாட்பட நாட்படத் தான் புனைந்திருப்பது 'வேடம்' என்ற போலித் தன்மையையே மறந்து அனுபவ முதிர்ச்சியால் தானே அப்பாத்திரமாக மாறி அசலையும் மிஞ்சிவிடும் அற்புத ஆற்றலைப் பெற்று விடுகிறான்.

இத்தகைய கலை வல்லுநர்கள் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலும் பலர் நமது செந்தமிழ் நாட்டில் இருந்தனர் என்ற உண்மை இன்று நம்மிடையே உள்ள பலருக்குத் தெரியாமலிருப்பது மிகவும் வருந்தற் பாலதாம்.

தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்று பொருள். அந்த இனிமை மிக்க தமிழ் பண்ணாகப் பரிணமித்து அத்துடன் இசை நயமும் சேர்ந்து விட்டால் அந்த இன்பத்துக்கு நிகர் வேறு எதைக் கூற இயலும்?

இசையோ டிணைந்த வாழ்வு தமிழினத்துக்கே வாய்த்த தனிச் சிறப்பல்லவா! செந்தமிழ்த் தாய் இன்னமுதத்தோடு இசையமுதத்தையும் சேர்த்துப் புகட்டியன்றோ தன் செல்வக் குழந்தைகளை வளர்க்கின்றாள். ஆம் ; தாலாட்டுப் பாடல் தொடங்கி, 'கைவீசம்மா ! அசைந்தாடம்மா !' போன்ற தேகப் பயிற்சிப் பாடல்களும், நிலாப் பாடல் போன்ற இயற்கை அறிவைப் புகட்டும் பாடல்களும், தமிழ்க் குழந்தைகள் பெற்ற வரப்பிரசாதமாகும்.

அதன் பின், துள்ளித் திரியும் பிள்ளைப் பருவத்தில் தும்பிப் பாடல், தட்டுக்கிளிப் பாடல் போன்ற விளையாட்டுப் பாடல்கள், அதன் பின் வாலிபப் பருவம் தொடங்கி, வசந்தப் பாடல். சரித்திரப் பாடல், உழவுப்பாடல், ஏற்றப் பாடல், ஓடப் பாடல், வழிநடைப் பாடல், போர்க்களப் பாடல், பக்திப் பாடல். இப்படி வாழ்க்கையெல்லாம் இசைமயமாய் அமைத்துக் கொண்ட தமிழனுக்கு வாழ்க்கையின் இறுதிக்கட்டத்திலும் ஒரு பாடல் உண்டு! ஆம்: அதன் பெயர்தான் ஒப்பாரிப் பாடல் !

இந்தக் கலையில் கிராமியப் பகுதிகளில் உள்ள படிப்பறிவற்ற தாய்மார்கள் இன்றைக்கும் எதுகை இடராமல், மோனை முறியாமல், தளை தட்டாமல், சீர் சிதையாமல் பொருட்செறிவும் கவிதை நயமும் விளங்கப் பாடும் திறன் இன்றைய கவிஞர் உலகிற்கே ஒரு சவால் என்று சொன்னால், அது மிகையாகாது !

இறைவனை ஏழிசையாய்க் கண்டு, இசைப்பயனாய்க் கொண்ட தமிழனின் அரங்க மேடையும் இசை மயமாகவே இருந்ததில் வியப்பில்லையல்லவா?

எனவே தான், பண்டைய நாடகங்கள் அனைத்தும் இசைப் பாடல் மிகுந்தனவாயும், உரையாடல் குறைந்தனவாயும் இருந்தன போலும்.

உதாரணமாக, திரிகூட ராசப்பக் கவிராயரின் குற்றாலக் குறவஞ்சி, அருணாசலக் கவியின் இராம நாடகம், அப்பாவு பிள்ளை அவர்களின் அரிச்சந்திர விலாசம், கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரம் ஆகியவற்றைக் கூறலாம். இந்த முறையைப் பின்பற்றி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல நாடகாசிரியர்கள் கணக்கற்ற நாடகங்களை இயற்றி அரங்கேற்றினர். அவர்களில் இருவர் குன்றிலிட்ட தீபம் போல் பிரகாசித்தார்கள். ஒருவர் தமிழ் நாடகக்கலைக்கே புத்துயிரளித்த தூ. தா. சங்கரதாஸ் சுவாமி அவர்கள். மற்றவர், சம்பூர்ண இராமாயணம், கண்டிராஜன் போன்ற அற்புதமான நாடகங்களை இயற்றிய ஏகை சிவசண்முகம் பிள்ளை அவர்கள்.

ஏகை என்பது சென்னையிலிருந்து திருப்போரூர் செல்லும் வழியில் இருபத்தைந்து கல்தொலைவில் உள்ள ஏகாட்டூர் என்னும் சிற்றூராகும்.

ஆசிரியரின் மரபில் இவருக்கு முன்னும் பின்னும் பல பேரறிஞர்கள் தோன்றியிருக்கின்றனர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகத் திகழும் ஏனாதிநாத நாயனார் முதல் இன்று நம்மிடையே வாழும் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாக்ஷி சுந்தரனார் வரை இடையீறற்றுத் தொடர்ந்து வரும் புலவர் பெருங்குடியில் ஒருவராகத் தோன்றிய சிவஷண்முகம் பிள்ளை அவர்களின் மரபுப் பெருமை அவரது கண்டிராஜன் நாடகத்தில் வரும் ஒவ்வொரு பாடலிலும் பளிச்சென விளங்குகிறது. கவிஞனே நாடகாசிரியனாக இருந்தாலன்றி, பாத்திரத்தின் குணாதிசயங்கள் முழுவதையும் படம் பிடித்துக்காட்ட முடியாதென்பதை ஒவ்வொரு பாடலிலும் நன்கு காணமுடிகின்றது. அது மட்டு

மல்ல, இந்த நாடகத்திலுள்ள பாடல்களில் பெரும்பகுதி மிகவும் கடினமானதும், எளிதில் வேறெவரும் கையாள முடியாததுமான திருப்புகழ், காவடிச்சிந்து முதலிய வண்ணச் சந்தங்களில் அமைந்திருப்பது போற்றுதற் குரியதாகும். அருணகிரிநாதரோடும், அண்ணுமலைரெட்டி யாரோடும் ஒப்பிட்டுப் பார்த்து மகிழத்தக்க அற்புதமான வண்ணச் சந்தங்களில் அமைந்துள்ள கருத்தாழமும், கவிதை நயமும், வல்லோசைச் சிறப்பும் மிக்க இந்நாட கப் பாடல்களையும், ஏறத்தாழ இதேகாலத்தில் எண்ணற்ற நாடகங்களை இயற்றித் தமிழ் நாடகக் கலைக்கே புத்துயி ரளித்த தமிழ் நாடகத் தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் அமைந்துள்ள அழகுத் தமிழ்ப் பாடல்களையும் ஆய்ந்து பார்க்கும் அறிஞர் பெரு மக்கள், அரங்க மேடையின் மறுபதிப்பென்று சொல்லும் இன்றைய திரைப்படத் துறையின் தரங்கெட்ட கோமா ளிக் கூத்தடிப்புப் பாடல்களைக் கண்டு தலை கவிழ்வாரென் பது திண்ணம்.

கண்டிராஜன் நாடகம் கவிதைச் சிறப்பு மட்டுமன் றிக் காட்சிச் சிறப்பிலும் உயர்ந்ததோர் வரலாற்றுக் காவியமுமாகும். இந்நாடகத்தின் நாயகனை 'வருக ராஜேந்திர வள்ளலே' என்றும், நாயக்கர் என்றும் ஆசிரியர் குறிப்பிடுவதிலிருந்து, முன்னொரு காலத்தில் தமிழகத்தை ஊடுருவிய விஜயநகர சாம்ராஜ்யத்தின் ஆதிக்கம் ஈழத்தையும் எட்டியிருக்கக் கூடுமென்று அனுமானிக்கத் தோன்றுகிறது.

இலங்கையின் ஒரு பகுதியாகிய கண்டிச் சீமையை ஆண்ட கீர்த்திசிங்கன் இரக்கமற்ற கொடுங்கோலனுகை வும், நவீன இராவணனுகவும் திகழ்ந்தானென்பதைச் சித்தரிப்பதுதான் கதையின் கருப்பொருள். குடிமக்களுக் குக் கொடுமை செய்வதில் இனிமை காணும் குணம் படைத்த இவன் காமுகனுகவும் திகழ்கிருன். ஒரு சமயம் தனது முதன்மந்திரியின் மைத்துனியின் மேல் காமுற்று, அவளைக் கூட்டி வைக்கத் தவறிய குற்றத்திற்காக முதன்மந்திரியின் குழந்தைகளின் தலையைக் கொய்து உரலிலிட்டு அக்குழந்தைகளைப் பெற்ற அன்னையின் கையில் உலக்கையைக் கொடுத்து இடிக்கச் செய்து துன்புறுத்தி முடிவில் அந்த உத்தமியின் முதுகில் கல் லைக் கட்டி வாவியில் தள்ளச் செய்கிருன்.

வெளியூர் சென்றிருந்த அமைச்சன் இக்கொடுமை யைக் கேட்டு மனம் வருந்தி இலங்கையின் கொழும்புப் பகுதியை அடிமை கொண்டு ஆட்சி புரிந்துவந்த ஆங்கி லேயக் கும்பினிப் படைகளின் துணைகொண்டு கண்டி மன்னனைப் பழி தீர்த்துக் கொள்ளுகிருன். இதனுல் கண் டிப்பகுதியின் அரசுரிமையையும் கவர்ந்து கொள்ளுகிறது ஆங்கில ஆட்சி!

இந்நாடகத்தைக் காணும் ரசிகப் பெருமக்கள் அவ லச் சுவையின் உச்சக் கட்டத்திற்கே சென்று கண்ணீர் பெருகிக் கதறி அழுவதை நானே பல முறை நேரில் கண்டு நெகிழ்ந்திருக்கிறேன்.

அற்புதமான இந்நாடகத்தைக் கடந்த முப்பத் தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்து மக்கள் காண்பதற்கு வாய்ப்பில்லாது போனது குறித்து வருந்தா மலிருக்க முடியவில்லை.

இந்நாடகம் நூல் வடிவில் வந்தபோது, தமிழகத் தின் ஒளிவிளக்கங்களாகத் திகழ்ந்த புலவர் பெருமக்கள் அத்தனை பேரும் ஆசிரியரின் கவிதைத் திறத்தை வியந்து, சாற்றுக் கவிகள் பல தந்து போற்றிப் புகழ்ந்து பெருமைப் படுத்தியிருப்பது ஒன்றே நாடகச் சிறப்புக் கும், ஆசிரியர் திறத்துக்கும் தக்க சான்ருகும்,

கவிதை நயமிக்க இத்தகைய நாடக நூல்கள் மீண்டும் புதிய பதிப்புக்களாக வெளி வரவும், தமிழ் நாடகக் கலையரங்கங்களில் புத்தொளி வீசிப் புகழ் பெற வும், கலையார்வம் மிக்க பெரியோர்களும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் போன்ற அரசினர் ஆதரவுபெற்ற நிறுவனங்களும் ஆவன செய்ய வேண்டுமென்பதே எனது ஆசை! சுவாமிகளின் நூற்ருண்டு விழாவின்போது அவரே மதித்துப் பெருமைப் படுத்திய மற்ருெரு பேரறிஞரை நினைவு கூர வாய்ப்பளித்த மலர்க்குழுவின ருக்கு எனது இதயம் கனிந்த நன்றி.

வளர்க நாடகக் கலை! வாழ்க ஏகையாரின் புகழ்!

☆


உல்லாச பயணமா? நினைவூட்டுகிருேம்!!

உல்லாச பயணம் அல்லது யாத்திரை ஸ்பெஷல்.

குமரி முதல் இமயம் வரை சென்று வர
எமது டீலக்ஸ் பஸ்ஸு'களும்,
டூரிஸ்ட் கார்களும் கிடைக்கும்.

—: விபரங்களுக்கு :—

**சிவா டூரிஸ்ட் சர்வீஸ்**

(அரசாங்க அங்கீகாரம் பெற்றது)

டீலக்ஸ் பஸ் & டூரிஸ்ட் கார்

உரிமையாளர்கள் :

546, பூந்தமல்லி ஹை ரோடு, பெரியமெட்
சென்னை-3

போன்: 31869



சிறுவர் சிறுமியர்
ஆடவர், பெண்டிர்
அனைவரும்
விரும்பிப் படிப்பவை

# எங்கள் வெளியீடுகள்

நாடகத் தந்தை
தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளுக்கு
எங்கள் அஞ்சலி

**பழனியப்பா பிரதர்ஸ்**
சென்னை-14 திருச்சி-2 சேலம்-1



# பேரறிஞர்களின்



நாடகம் ஆண்கள், பெண்கள்; இளையோர், முதியோர், படித்தவர், படிக்காதவர் யாவருக்கும் நல்லறிவையூட்டு கின்றன என்பதில் ஐயமில்லை. கவியரசி சரோஜினி தேவியார், 'நாடகசாலை பாமர மக்களின் பல்கலைக்கழகம்' என்று கூறியிருக்கிறார். நாடகக் கலையால் மக்களும் மக்களுடைய ஆராய்ச்சியறிவினால் நாடகக் கலையும் திருந்தி வரும் என்பது உறுதி.

—கவிமணி.



"பலவிதமான மனோதத்துவ நிலைகளை வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நிகழக்கூடிய மனப்போராட்டத்தின் வெற்றி தோல்விகளை சீரிய நடிப்பின் மூலம் சித்தரித்துக் காட்டுவது ; கலைச் சிறப்புக்கள் நிறைந்த கருத்தோவிய மாகக் காட்சிகளை அமைப்பது ; பார்ப்பவர்கள் புலன் களெல்லாம் ஒடுங்கித் தம்மை மறந்த நிலையில் ரசிக்கு மாறு கதையை எழுதுவது : இம்மூன்று சிறப்புக்களும் ஒரு நல்ல நாடகத்திற்கு வேண்டும்.

—திரு. வி. க.



சித்திரம், சாகித்தியம், சங்கீதம், அபிநய பாவம், மனோதத்துவ நாடித் துடிப்புகள்—இவைகளை ஒன்று சேர்த்துப் பொருத்திப் பார்த்தால், அது நாடகக் கலையாக அமையும். இயற்கையின் படைப்பு வேலைக்குப் போட்டி யாக அமைந்திருப்பது மனிதனுடைய கலை வேலை. இயற்கையின் படைப்பில், உயிர் இருக்கிறது. கலையில் உயிர் கிடையாது. அதற்குப் பதிலாக (ஈடாக என்று சொல்லலாம்) வேறொன்று இருக்கிறது. கலையிலே, ஒருவகை தன்மயக்கம் இருக்கிறது. அந்தத் தன் மயக்கம் தான் கலையின் ஆகர்ஷண சக்தியாகும். உண்மையைப் போலத் தோன்றும், தொனிக்கும் தன்மை கலையில் இருக்கிறது.

—வ. ரா.

# பொன்மொழிகள்



வெள்ளம் போல் கவிப்பெருக்கும் கலைப் பெருக்கும் மேவுமாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்வர்.

—பாரதி



நடிப்பு என்பதற்கு "மாற்றம்" என்பதே பொருளாகும். மாற்றுருக் கொள்ளுதல், மாற்றுடை அணிதல், மாறுபட மொழிதல், மாறுபட நடத்தல் இவை யாவும் நடிப்பு என்பதன் பாற்படும். ஆனால் உண்மையான நடிப்பிற்கு இவை நான்கு மட்டும் போதாது. மாற்று மனமும் படைத்து நடிக்கும் நடிப்பே உண்மையான நடிப்பாகும்.

இயலிலும் இசையிலும் நாடகம் அடங்காவிடினும் நாடகத்தில் இயலும் இசையும் அடங்கும். பண்டைக் கால நாடகம் இசைச் சொல் கலந்த ஆடலையே அடிப் படையாகக் கொண்டது. இக்கால மேடை நாடகம் நடிப்பையே அடிப்படையாகக் கொண்டது.

— கி. ஆ. பெ. விசுவநாதம்



மக்களின் சக்தியைத் திரட்டி அறிவு விசாலத்தைப் பெருக்க, நாடகங்களைப் போன்ற சீரிய சாதனம் வேறெதுவும் கிடையாது

—கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி

# தமிழக நாடகக் கலையின் ஆணிவேர்

எஸ். வி. ஸஹஸ்ரநாமம்

சரித்திர பூர்வமாக ஆராய்ந்தால், தமிழகத்தில் நாடகக் கலை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே செழித்து வளர்ந்திருந்தது எனத் தெரிய வருகிறது. ஆனால், அன்று எழுந்த நாடகங்கள் இசைக் கூத்தாக வும் காவியமாகவும் ஆக்கப்பட்டிருந்தது.

மேடையென்பதை நினைவில் கொண்டு நூதன முறையில் எழுதப்பட்ட நாடகங்கள் ஒரு நூற்றுண்டுக் குள்ளே தான் எழுந்தது எனக் கூறலாம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை நாடகக்கலை என்று ஆராயும் போது என் மனத்தில் எண்ணத்தில் வருபவர் தவத்திரு சங்கரதாஸ் தாம், தமிழக நாடகக் கலையின் ஆணிவேர் சுவாமிகள் என்பது எனது உறுதியான எண்ணம்.

சுவாமிகள் நாடகக் கலையின் மூலம் தமிழ் மொழிக் கும் தமிழ் இசைக்கும் தமிழ் நாட்டுக்கும் தமிழ் இனத் துக்கும் ஆரவார மில்லாமல் அழகாகத் தொண்டு செய்துள்ளார்கள். அவரது தொண்டு நாடகக் கலைக்கு ஒரு நீண்ட பரம்பரையை இன்றும் வைத்துள்ளது. எத்தனையோ நாடக நடிகர்கள், நாடக ஆசிரியர்கள் அவர் வழியில் தோன்றியவர்கள் இருந்தார்கள்; இன்றும் சிலர் இருக்கின்றார்கள்.

என்னைப் பொறுத்த அளவில் சுவாமிகளிடம் நேரிடையான தொடர்பில்லை யென்றாலும், அவரது முக்கிய மாணவர்களாக—இன்றும் தமிழக நாடகக் கலை யின் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றவர் களான டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகக் குழுவில் சேர்ந்து அவரது நாடகங்களின் வாயிலாகத் தொடர்பு கொண்டேன். அன்று அவரது நாடகங்களைப் பார்த்துப் படித்து நடித்துத் தெரிந்து கொண்டதைக் காட்டிலும், இன்று தான் வர வர, அவரது ஆற்றல், அறிவு, அன்பு முழுவதையும் என்னால் உணர முடிகிறது.

அவரது நாடகங்களில் நடித்த நடிகர்களுக்கு தமிழ் இலக்கிய அறிவு மிக எளிதாகக் கிடைத்து விடும். அவரது ஒவ்வொரு நாடகங்களிலும் திருக்குறளை நிகழ்ச்சிக் கேற்றபடி மேற்கோள் காட்டி அமைத் துள்ளதை எடுத்துத் தொகுத்தோமானால் அதனைத் "திருக்குறள் விளக்கம்" என்ற ஒரு தனி நூலாகவே வெளியிடக் கூடியதாக விருக்கும். அந்தந்தப் பாத் திரங்களுக் கேற்றபடி பாடல்கள் அமைப்பதிலும் அவரது திறமை மிகவும் போற்றத் தக்கது. உதாரண மாக 'சத்தியவான் - சாவித்திரி' என்ற நாடகத்தில் எமன் தர்பாருக்கு வரும் நேரத்தில் பாடக் கூடிய ஒரு பாடலைப் பாருங்கள்; அந்தத் தமிழ்ச் சொற்களை வாயால் சொல்லும்போதே தாளத்துடனும் இசையுட னும் இணைந்து வரும், அந்தப் பாத்திரத்தின் பாவனை யும் அந்த ஓசையிலேயே இருக்கும்.

விண்டலமு மண்டலமு மெண்டிசை அடங்கலும்
விளங்கு நீதிமார்க்க மடுப்பேன்—நல்ல
வேத விதிப்படி தானே நடப்போரை
மேலுலகம் விடுப்பேன்—நெறி
விட்ட துஷ்டர்களைக் கட்டி வந்து நர
கத்தினிலே விடுப்பேன்—உயிர்
வேதனை மிகவுங் கொடுப்பேன்—துண்டாய்
வெட்டி—வெட்டியுடல் கொடுப்பேன்—இன்னும்
மேலும் மேலும் பாவிகளைக் காணக் கோபமாகி—வெவ்வே
ருக்கினைகள் செய்யத் தொடுப்பேன் — உயர் (விண்ட)

இந்தச் சந்தப் பாக்களைப் போல் எத்தனையோ பாடல் கள் உள்ளன. எளிய மக்களுக்கும் புரிகின்ற அளவில் தமிழின் யாப்பிலக்கண வரம்புக் குட்பட்டு அவர் பாடல்கள் இயற்றும் முறைக்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்த ஒரு பாடலைக் குறிப்பிட்டேன்.

நாடக வசனங்களில் நீதிகள் முதுமொழிகளை யெல்லாம் சொற் சாதுரியத்துடனும், நீண்ட அனுபவத் துடனும் சுவாமிகள் அமைத்துள்ளார்கள். இந்த நாளில் மூன்று நான்கு மேதைகள் சேர்ந்து ஒரு நாடகத்தை உருவாக்கும் செயலகளை சுவாமிகள் ஒருவரே செய்து வந்திருக்கிறார்கள். (1) பாடல்கள், (2) வசனங்கள், (3) பாடலுக்கு இசை அமைத்தல், (4) கடைசியாக நாடகத்தைத் தயாரிப்பது. இதிலுள்ள கஷ்ட நஷ்டங் கள் எவ்வளவு என்பதை இன்று நாடகங்கள் நடத்தி வரும் அமெச்சூர் குழுக்களும் தொழில் நாடகக் குழுக் களும் நன்றாக உணரமுடியும். இதிலெல்லாம் இன்னும் முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டியது நாடகத்தை எழுதி முடிக்கும் கால வரம்பு. ஒரே இரவில் சூரிய உதயத்திற்குள் "அபிமன்யு சுந்தரி" என்ற நாடகத்தை எழுதி முடித்துள்ளார் சுவாமிகள். இன்று இதைப் படிப்பவர்கள் கட்டுக்கதை என்று கூட எண்ணலாம். ஆனால், இதுதான் உண்மை. இதை நேரில் கண்டு, அந்த நாடகத்தில் பங்கு கொண்டு நடித்த நடிகர் இன்றுமிருக்கிறார்கள். அவர்தான் நமது சகோதரர் டி.கே. ஷண்முகம் அவர்கள். இன்று அப்படிப்பட்ட ஒரு பெரும் ஆற்றல் பெற்றிருந்த மகான் சங்கரதாஸ்

சுவாமிகளுக்கு நூற்றுண்டு விழாக் கொண்டாடுவது நாடகக் கலைத் துறையிலுள்ளவர்க ளெல்லாம் பெருமை கொள்ளக்கூடிய அரிய வாய்ப்பு ஆகும்.

அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களின் நிலைக் கேற்றபடி நாடக அமைப்புகள், கதையின் கருத்துகள், திரைகள், உடைகளில் மாற்றங்க ளிருக்கலாம். ஆனால், தன் நாட்டையும் தன் மொழியையும் மறந்து சுவாமிகள் நாடகம் எழுதவில்லை. நாடகக் கலையில் ஒரு சிறந்த லட்சியத்தோடு வாழ்ந்து வந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள் என்பதற்கு அவரது நாடகங்களே சாட்சியாக வுள்ளன.

அவரால் எழுதப்பட்ட நாடகங்களை யார் வேண்டு மானாலும் எங்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டு மானாலும் நடத்திக் கொள்ளலாம். அவரது அனுமதி தேவையில்லை. அதற்கு ஊதியமோ பரிசோ எதையும் எதிர்பார்த்திருந்தவரல்ல அவர் என்பதிலிருந்து சுவாமி களின் பரந்த உள்ளமும் நமக்கு நன்ருகத் தெரிகிறது. இன்றும் அவரது நாடகங்களைக் கொண்டு மதுரையைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலெல்லாம் பல நாடகக் கலைஞர்களின் குடும்பங்கள் பிழைத்து வருகின்றன.

தமிழ் நாடகக் கலையின் சரித்திரம் ஒழுங்கான முறையில் அமைந்தால் முத்தமிழையும் கற்றுணர்ந்த எத்தனை மேதைகள் இந்தக் கலைக்குத் தொண்டாற்றி யுள்ளார்கள் என்ற பெருமையை நாமும் நமது வருங் கால சந்ததியார்களும் உணர்வதற்கு உறுதுணையாக இருக்கும். அந்த வரிசையிலே இன்று வளர்ந்து வரும் தொழில் நாடகக் கலைக்கும் கலைஞர்களுக்கும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் தாம் ஆணிவேர் என்பது தெள்ளத் தெளிய தெரிய வரும்.

☆

# கலைமகளின் தலைமகன்

இயற்றியவர்
**வித்துவான் வேலவன் அவர்கள்**

இராக மாலிகை : தாளம் : ஆதி, திஸ்ர கதி.

(பல்லவி)

கலைமகளின் தலைமகனய் வந்தவர் — தமிழ்க்
கடலினுக்கோர் அடலரசாய் வாழ்ந்தவர்

(அநுபல்லவி)

திலகமெனப் புலவர்குலம் போற்றுமாம் — கவிச்
சிங்கமெங்கள் சங்கரதாஸ் வாழியே

(சரணம்)

பழமையான காப்பியங்கள் பருகுகின்ற கதையினுல்
பாமரரும் பயனடையும் படிபுரிந்த மதியினுர்
தழையும் நாடகக் கலையைத் தாங்குமன்பு நிதியினுர்
தன் கையினுல் தொட்டதெல்லாம் தங்கமாக்கும் விதியினுர்
(கலைமகளின்)

# MINERVA GUIDES

There is a Minerva Answer to every question

Minerva Guides Secure Success

## MADRAS UNIVERSITY

### Pre-University 1968

| | Rs. | p. |
|---|---|---|
| English Poetry (Guide) | 1 | 00 |
| Living English (Guide) | 2 | 50 |
| Mr. Pickwick (Guide) | 1 | 00 |
| Workers for Humanity (Guide) | 1 | 00 |
| Julius Caesar (Text) | 1 | 50 |
| do (Guide) | 2 | 50 |
| Vanity Fair (Guide) | | |

### B.A./B.Sc. 1968 Examination

| | Rs. | p. |
|---|---|---|
| Twelfth Night (Text) | 1 | 50 |
| do (Guide) | 3 | 00 |
| do (Text & Guide) | 4 | 00 |
| Antony and Cleopatra (Text) | 2 | 00 |
| do (Guide) | 3 | 00 |
| do (Text & Guide) | 4 | 50 |
| Modern Poetry (Guide) | 5 | 00 |
| Life and Letters of Lord Macaulay (Guide) | 4 | 00 |
| A Time to Think (Guide) | 4 | 00 |
| Oliver Twist (Guide) | 2 | 00 |
| Short Modern Plays (Guide) | 1 | 25 |

### B.A./B.Sc. 1969 Examination

| | Rs. | p. |
|---|---|---|
| As You Like It (Text) | 2 | 00 |
| do (Guide) | 3 | 00 |
| do (Text and Guide) | 5 | 00 |
| Antony aud Cleopatra (Text) | 2 | 00 |
| do (Guide) | 3 | 00 |
| do (Text and Guide) | 4 | 50 |
| Modern Poetry (Guide) | 5 | 00 |
| Life and Letters of Lord Macaulay (Guide) | 4 | 00 |
| Representative English Essays (Guide) | 4 | 00 |
| The Apple Cart (Guide) | 2 | 00 |
| My India (Guide) | 2 | 00 |

**THE**
**MINERVA PUBLISHING HOUSE**
**24, Halls Road, Egmore, Madras-8**
**Phone : 86650.**



# இளங்கோவடிகள் காட்டும் காப்பியப் பண்பு

பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், M. A.

கவியால் இயற்றப்படுவது காவியம் எனப் பெயர் படும். ஒரு கவிஞன் தன் காவியத்தின் வாயிலாக உலகத்தார்க்குச் சில சிறந்த பண்புகளை எடுத்துக் காட்டுகின்றான். இவ்வாறு கவி காவியத்தின் மூலம் தன் கருத்தை அமைத்துக் கூறும் பண்பிற்குப் பாவிகம் என்று பெயர்,

"பாவிக மென்பது காப்பியப் பண்பே" (1)

என்பது தண்டியலங்காரம். இச்சூத்திரத்திற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர் "பாவிக மென்று சொல்லப்படுவது கவிஞனுடைய கருத்தினாலே காப்பியங்களில் அமைந்து தோன்றும் குணமேயாம். இராமாயணத்தில் இராமர் முதலியோர் சரிதத்தினாலே சத்தியம், தருமம், கற்பு, வீரம் முதலிய விடயங்கள் கவி கருதியவாறு அமைந்து தோன்றுதலை உதாரணமாகக் கொள்க" எனக் கூறியிருப்பது ஈண்டு நோக்கத் தக்கது. நீதி தவறிய அரசனை அறக்கடவுள் கூற்றாய் வந்து கொல்லும் என்பதும், கற்புடை மகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் போற்றுவர் என்பதும், முன் செய்த நல்வினை தீவினை என்ற இரு வினைகளும் செய்தோரை நாடி வந்து உருகிக்கொண்டு நின்று நுகர்விக்கும் என்பதுமாகிய மூன்று உண்மைகளை ஆசிரியர் இளங்கோவடிகள் தம் நூலின் வாயிலாக விளக்கியுள்ளார்கள் இதனை,

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" (2)

என்ற வரிகளால் உணர்க. இம்மூன்றினுள் இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள கற்புடை மகளிரை மக்களும் தேவரும் முனிவரும் போற்றுவர் என்ற உண்மையினை இளங்கோவடிகள் எங்ஙனம் சிலப்பதிகாரத்தின் வாயிலாக விளக்கியுள்ளார் என்பதை ஈண்டு ஆராய்வோம்.

பெண்மணிகளின் பண்பினை விளக்கவந்த தொல்காப்பியனார்,

"அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" (3)

எனக் கூறியுள்ளனர். இதற்கு விளக்கவுரை கூறப்போந்த உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், "முந்துறுத்த என்றதனால் கண்டறியாதன கண்டுழி மனங் கொள்ளாத பயிர்ப்பும், செயத்தகுவது அறியாத பேதைமையும், நிறுப்பதற்கு நெஞ்சுண்டாம் நிறையும் (கற்பும்) கொள்க" என்றார், இதனால் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, பேதைமை, நிறை எனக் கூறப்படும் கற்பு என்பன பெண்களுக்குரிய பண்புகளாம். இப்பண்புகள் அனைத்தும் கண்ணகியினிடத்தில் விளங்கியதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார்,

சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி என்ற வணிகர் மரபில் தோன்றிய மாநாய்க்கன் என்பவனுக்குக் கண்ணகி மகளாகப் பிறந்தாள். கண்ணகி பன்னிரண்டாண்டு எய்திய போது அவளது அழகினையும் கற்பினையும் மாதர் யாவரும் போற்றுவாராயினர். அழகுள்ள மங்கையைத் திருமகளுக்கும் கற்புடைய காரிகையை அருந்ததிக்கும் ஒப்பிடுதல் உலக மரபாகும். ஆனால், கண்ணகியின் அழகினையும் கற்பினையும் விளக்க வந்த இளங்கோவடிகள் திருமகளின் வடிவம் கண்ணகியின் வடிவத்தை ஒத்திருந்தது என்றும், அருந்ததியின் கற்பு கண்ணகியின் கற்பினை ஒத்திருந்தது என்றும் கூறியுள்ள நயம் படித்து இன்புறுதற்குரியதாகும். இதனை,

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகி என்பாள்" (4)

என்ற வரிகளால் அறிக. கண்ணகியின் பெற்றோர் பன்னிரண்டாண்டு பருவத்தினளாய கண்ணகியை, செல்வச் சீமானான மாசாத்துவான் என்ற வணிகனுடைய மைந்தனும், பதினாறு ஆண்டு நிரம்பியவனும் அழகு, வீரம், கொடை முதலிய பண்புகளிற் சிறந்து விளங்கிய கோவலன் என்பானுக்குப் பல் பெருஞ் சிறப்புடன் மணம் புரிவித்தனர். கண்ணகியின் குணநலங்களையும் அழகினையும் கண்ட கோவலன்,

1. தண்டியலங்காரம் - சூ 89
2. சிலப்பதிகாரம் பதிகம் - 55-60
3. தொல் - களவியல் - 8
4. மங்கல வாழ்த்துப் பாடல் :-26-29

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே" என்றும்,
"……… மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ" (5)

எனக் கண்ணகியைப் பலவாருகப் பாராட்டுவானுயினன். கோவலனும் கண்ணகியும் வறியோர்க்கு ஈதல், விருந்தினரைக் காத்தல், துறந்தோரைப் போற்றல் முதலிய அன்பும் அருளும் சேர்ந்த உயரிய இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர். ஊழ்வினைப்பயனுல் கோவலன் கண்ணகியைத் துறந்து, மாதவி என்ற நாடகக் கணிகையினிடம் நட்புக்கொண்டு தன் பொருளை எல்லாம் அவளுக்குக் கொடுத்து மகிழ்வானுயினன். தன் கணவன் தன்னைப் பிரிந்தமையால் கண்ணகி மங்கல அணியன்றிப் பிற அணிகலன் அணியாமலும், வேறு ஒப்பனை இன்றியும், தனது நெற்றி திலகம் இழக்கவும், கண் அஞ்சனம் மறக்கவும், கூந்தல், நெய்யணி துறக்கவும், கையற்ற நிலையில் கலங்குவாளாயினள். தனது துயரினைத் தன் மாமன் மாமியர் அறியின் சாலவும் வருந்துவர் எனக் கருதி கண்ணகி தன் வருத்தத்தைச் சிறிதும் வெளிப்படுத்தாமல் கணவனிடத்து வெறுப்பும் கொள்ளாது 'அவன் திரும்பிவரும் நன்னுள் எந்நாளோ" என ஏங்கி இல்லற நெறியில் சிறிதும் பிறழாது ஒழுகி வந்தாள், இதனுல் தன் துன்பத்தினைப் பொறுத்துக்கொள்ளும் வன்மை கண்ணகியினிடம் விளங்கியது என்பது பெறப்படுகின்றது, மேலும், இது கண்ணகியின் கற்பின் நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். கண்ணகியின் கற்பினை விளக்க மற்ருேர் சான்று கூறுவேன்.

கணவன் பிரிவால் தனக்கு உண்டான வருத்தத்தை கண்ணகி தனது தோழி தேவந்தியிடமும் கூறவில்லை. ஆனுல், தேவந்தி கண்ணகியின் வருத்தத்தினைக் குறிப்பால் அறிந்துகொண்டு சாத்தன் கோயிலுக்குச் சென்று, "இவள் கணவனைப் பெறுவாளாக" என அறுகு முதலியன தூவி வணங்கிப் பின்னர் கண்ணகியிடம் சென்று, "நீ உன் கணவனைப் பெறுவாயாக" என வாழ்த்தினுள். அதனைக் கேட்ட கண்ணகி தான் கண்ட தீக்கனுவினைத் தேவந்தியினிடம் கூற, அவள் "பிரிந்த கணவனை அடையக் கருதும் மகளிர் நெய்தலங் கானலினுள்ள சோம குண்டம், சூரிய குண்டம் என்ற இரண்டு தீர்த்தங்களிலும் படிந்து மன்மதன் கோயிலைத் தொழுவதால் கணவனைப் பிரியாத வாழ்வு பெற்றுப் பின் தேவர் உலகத்தும் பிறந்த நாயகனை நீங்காத நல்வாழ்வு பெறுவர். எனவே நாம் போய் அத்தீர்த்தங்களில் நீராடி காமதேவனை வணங்கி வருவோம்" என்றனள். அதனைச் செவிமடுத்த கண்ணகி "அங்ஙனம் பொய்கையில் மூழ்கித் தெய்வம் தொழுதல் கற்புடை மகளிரின் நெறி அன்று" என்ற கருத்தில் "அது பீடன்று" எனப் பதில் அளித்தாள்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (6)

என்பது பொய்யாமொழியன்ருே! தன் கணவனைத்தவிர பிற தெய்வங்களை வணங்குவதற்கு மறுத்தலானது கண்ணகியின் கற்பின் திண்மையை எடுத்துக்காட்டும் சான்ருக விளங்குகின்றது.

காவிரிப் பூம்பட்டினத்தில் நடந்தேறிய இந்திர விழாவின் முடிவில் கோவலன் மாதவியுடன் கடற்கரையடைந்து, அவள் பாடிய கானல்வரி பாடல்களைக் கேட்டு ஊழ்வினைப் பயனுல் அவைகளைத் தவருகக் கருதி அப்போதே மாதவியை விட்டு நீங்கிக் கண்ணகியினிடத்தே வந்து சேர்ந்தான். கோவலன் கண்ணகியின் வாடிய மேனியைக் கண்டு வருந்தி அவளை நோக்கி, "யான் பொய் ஒழுக்கமுடைய பரத்தையோடு சேர்ந்து என் முன்னேர் தேடித் தந்த பொருளை எல்லாம் இழந்து வறுமையுற்றேன். இச்செயல் எனக்கு மிக்க நாணத்தைத் தருகின்றது" என்ருன். அவன் அவ்வாறு கூறலும் கண்ணகி, தன் கணவன் மாதவிக்குப் பொருள் கொடுக்க முடியாமல் அவ்வாறு கூறுகின்ருன் என நினைத்து நகைமுகம் காட்டி, 'என்னிடம் இரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றை பெற்றுக் கொள்ளுங்கள்' எனக் கூறி அவற்றை அவனிடம் அளித்தனள். தன் கணவனது செயலுக்கு அவன்மீது சிறிதும் கோபம் கொள்ளாது அவனை மகிழ்வித்தலே தனது கடன் எனக் கண்ணகி நினைத்தாள் என்பது இதனுல் பெறப்படுகின்றது.

"எப்பணியா லின்புறுவர் காதலராக் காதலரை
அப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி-யொப்ப
மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன்" (7)

என்ற பெருந்தேவனுர் பாரதம் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

கோவலன் மதுரைக்குச் சென்று அச்சிலம்பையே முதலாகக் கொண்டு பொருள் ஈட்டக் கருதி கண்ணகியையும் தன்னேடு வருமாறு அழைத்தனன். குற்றமற்ற அக்குலமகளாகிய கண்ணகியும் அதற்குச் இசைந்தனள். பின்னர்க் கோவலனும் கண்ணகியும் பொழுது புலர்வதன்முன் நகர வாயிலைக் கடந்து ஒரு காத தூரம் சென்று கவுந்தியடிகள் இருக்கும் தவப் பள்ளியை அடைந்தனர். நெடுந்தூரம் நடந்தறியாத மெல்லியலாகிய கண்ணகியின் மலரடிகள் வருந்த அவள் தன் கணவனை நோக்கி, "மதுரை மூதூர் எதுவோ" என்றனள். கண்ணகியின் பேதமையைக் கண்டு கோவலன் சிரித்து, "நீ வினவிய மதுரை அணித்தே உளது. நமது அகன்ற நாட்டிற்கு அப்பால் ஆறைங்காதத்து உள்ளது" என்ருன். கண்ணகி மலைவு அடையாதிருத்தற் பொருட்டு முப்பது காதம் என்ற பொருளை மறைத்து ஆறு ஐந்து காதம் என்னும் பொருள் தோன்றக் கோவலன் "ஆறைங் காதம்" என்ருன். இதனுல் கண்ணகியிடமிருந்த பேதைமை என்ற பண்பு புலப்படுகின்றது.

கோவலன் கண்ணகியாகிய இருவரும் கவுந்தியடிகளுடன் தென்திசை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர். இடையில் அவர்கள் ஐயை கோயிலில் இளைப்பாறி இருக்கும்போது தெய்வ வழிபாட்டிற்காக அங்கு வந்திருந்த வேடுவர்களில் சாலினி என்பவள் தெய்வ ஆவேசம் கொண்டு கண்ணகியைச் சுட்டிக் காட்டி, "இவள் கொங்கு நாட்டினையும் குடநாட்டினையும் ஆளும்

5. மணிமேகலை பகுதி காதை :-73-79
6. திருக்குறள் - வாழ்க்கைத் துணை நலம் :-
7. பெருந்தேவனுர் பாரதம்

செல்வி: தென் தமிழ் நாட்டினை ஆளும் பாவை; உலகோர் செய்த தவக்கொழுந்து போல்வாள்; இவ்வுலகிற்கு ஒப்பற்ற முழு மாணிக்கம் போன்று உயர்ந்த அழகிய பெண்மணி'' என்று கண்ணகிக்கு இனி நடக்க இருப்பதை எல்லாம் எடுத்துக் கூறினள். இதனைக் கேட்ட கண்ணகி, “இம்மூதறிவுடையாள் மயக்கத்தால் இவ்வாறு கூறினள்'' எனக் கூறி, சிறிது புன்முறுவலுடன் தன் கணவன் பக்கத்தில் வந்து நின்றனள். தமது பெருமையினைப் பிறர் கூறும் போது பெரியோர் நாணம் அடைதல் இயல்பே. அவ்வாறே கண்ணகியும் சாலினியின் ஆவேச வார்த்தைகளைக் கேட்டு நாணம் கொண்டனள் என்பது விளங்குகின்றது. இதனை,

“இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப்
பேதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டிஎன்று
அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப'' (8)

எனக் கவி கூறுதல் காண்க. இதனால் கண்ணகியிடமிருந்த நாணம் என்ற பண்பு புலனாகின்றது.

கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மதுரையின் மதிலுக்கு வெளியிலுள்ள புறஞ்சேரியை வந்து சேர, அவ்விடத்தில் கோவலனும் கண்ணகியும் தங்குதல் முறையன்று என்பதை உணர்ந்த கவுந்தியடிகள் மாதரி என்ற ஆயர் முதுமகளிடம் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்து கண்ணகியின் கற்பின் மாண்பினை மாதரிக்கு எடுத்துக் கூற விரும்பி, “மாதரி! என்னோடு வந்த இக்கண்ணகியின் சிறிய அடிகளை இதற்கு முன் நிலமகள் கண்டறியாள், சூரியனது வெம்மையினால் துன்பமுற்ற தன் கணவன் பொருட்டுத் தான் துயரமடைந்து, வாட்டமுற்று தனது வழிநடைத் துன்பத்தினையும் இவள் உணர்ந்தாளில்லை. இத்தகைய கற்புக் கடமையை மேற்கொண்ட கண்ணகியாகிய இத்தெய்வம் அல்லது வேறு பொலிவினையுடைய தெய்வம் யான் கண்டிலேன்'' எனக் கூறியது ஒவ்வொருவரும் படித்து இன்புறுதற்குரியதாகும். கண்ணகியின் இக்கற்பு மேம்பாட்டினை இளங்கோவடிகள் கீழ்க்காணும் வரிகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்.

“என்னோடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்'' (9)

மாதரி கண்ணகியையும் கோவலனையும் ஒரு புதிய மனையில் இருக்கும்படி செய்து, தன் மகள் ஐயை என்பாளைக் கண்ணகிக்குத் துணையாக வைத்து, சமைத்தற்குரிய பல பொருள்களையும் அளிக்க, கண்ணகி அவற்றை நன்கு சமைத்து கணவனை முறைப்படி உண்பிக்க, கோவலன் இனிதாக உண்டபின் கண்ணகியை அருகே அழைத்து, “நீ வெம்மையுடைய காட்டில் நடந்ததற்கு எனது பெற்றோர் என்ன துன்பம் உற்றார்களோ?' என்று கூறி, தான் முன்பு நெறி தவறி நடந்தமைக்கு மிகவும் இரங்கி,

“குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னோடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!
சீறடிச் சிலம்பி னொன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிக'' (10)

எனத் தேற்றி, அவன் அரிதின் நீங்கி அவளது ஒரு கால் சிலம்பினை விற்று வருதற்குச் சென்றான்.

குற்றமற்ற தன் கணவன் பாண்டிய மன்னனது கட்டளையால் கொலை செய்யப்பட்டான் என்பதைக் கேள்வியுற்ற கண்ணகி திடுக்கிட்டுப் பொங்கி எழுந்தாள். பின்னர்க் கண்ணகி பாண்டியன் முன் சென்று வழக்குரைத்துத் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைத் தனது சிலம்பால் நிரூபித்துக் காட்டித் தனது கற்பின் மாட்சியால் மதுரையைத் தீவாய்ப்படுத்தி, மதுரையின் அதிதேவதையின்பால் தனது பழம் பிறப்பினை உணர்ந்து, மதுரையை நீங்கி, சேர நாடு சென்று திருச்செங்குன்றின் மீதுள்ள ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நிற்க, அங்குத் தெய்வ வடிவோடு வந்த கோவலனைக் கண்டு களித்து விமானம் ஏறி விண்ணுலகு அடைந்தாள். கண்ணகி தன் கணவனுடன் விண்ணுலகு அடைந்த செய்தியினைக் குன்றக் குறவர் வாயிலாக அறிந்த சேர நாட்டு மன்னனை செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டுவித்து வணங்க, கண்ணகி செங்குட்டுவனுக்குக் காட்சி கொடுத்து வாழ்த்தினள்.

இதுகாறும் கூறியவற்றால் கண்ணகி பெண்களுக்குரிய அரிய பண்புகள் பெற்றிருந்தாள் என்பதும், அவள் தனது அறக் கற்பினாலும் மறக்கற்பினாலும் தெய்வ வடிவம் பெற்றாள் என்பதும், கற்புடைப் பெண்டிரை விண்ணுளோரும் மண்ணுளோரும் போற்றுவர் என்பதும் சுருக்கமாகக் கூறப்பட்டன. இதன் விரிவினைச் சிலப்பதிகாரத்தில் படித்து இன்புறுக.

☆

8. சிலப்பதிகாரம்—வேட்டுவ வரி: 47-53.
9. ——,,—— அடைக்கலக் கதை:—137-144.
10. சிலப்பதிகாரம்: கொலைக்களக் காதை:—84-93.



முருகா,.குகா,.ஷண்முகா....
என்ன நாரதரே பாட்டை நிறுத்திவிட்டீரே?
பிரபோ! ஷண்முகா என்றதும் N.V. ஷண்முகம் கம்பெனியாரின் N.V.S. பட்டணம் பொடி ஞாபகத்திற்த வந்தது அப்படியே மெய்மறந்துவிட்டேன்!
மெய் மறந்து, மெய் சிலிர்க்கச் செய்வது
N.V. ஷண்முகம் கம்பெனியாரின்
N.V.S. பட்டணம் பொடி
N.V. ஷண்முகம் கம்பெனியார் மதராஸ் 21

# வாழ்கின்றார் சங்கரதாஸ்!

☆ கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் ☆

தங்களது வாழ்வெல்லாம் தமிழுக் கீந்த
சங்கத்துச் சான்றோரின் மரபில் வாழ்ந்த
சங்கரதாஸ் சுவாமிகளை மறக்க லாமா ?
தமிழாலே புகழ்வடிவை வரைவிப்போமா?
செங்கரும்புச் சாறனைய பாடல் இன்பம்
செவிமடுத்து மகிழ்வோமா? மக்கள் நெஞ்சில்
பொங்கி வரும் தமிழ் உணர்வை மாலை யாகப்
புனைவித்து மனமாரப் போற்று வோமா?

செந்தமிழர் வீரத்தால் கப்பலோட்டிச்
சிதம்பரனார் தன்மானம் காத்த மண்ணில்
வந்துதித்தார் சங்கரதாஸ் நாடகத்தின்
மறுமலர்ச்சித் தந்தையெனப் புகழ்வளர்த்தார்;
சந்தவகைப் பாக்களுடன் இனிமை கொஞ்சும்
தரம்வாய்ந்த உரைநடையும்பொழிந்தமேதை
செந்தளிர்போல் இளங்கலைஞர் குழுவைச்சேர்த்துத்
திறல் வாய்ந்த நாடகச்சீர் பரப்பி னாரே!

எழுதாத உரையாடல் மனம்போல் பேசி,
ஏனென்று கேட்போரே இல்லை என்று
பழுதான நிகழ்ச்சிகளும் கதையும் கொண்டு
பார்ப்பவரின் மனம் சுழிக்கக் கூத்துப்போட்டுப்
பொழுதெல்லாம் வீணாக்கும் புரையை நீக்கிப்
புனிதமுறக் கலைமேடைக் கட்டுப் பாடு
வழுவாத ஒழுங்குமுறை வகுத்த வீரர்
மறக்குலத்துச் சங்கரரை மறப்பார் யாரே?

பேரறிஞர் சங்கரதாஸ் எழுது கோலைப்
பிடித்தவுடன் ஊறிவரும் கருத்து வேகம்;
ஓரிரவில் 'அபிமன்யு நாட கத்தை
உருவாக்கி னாரென்றால் கலைஞர்க்குள்ளே
யாரிவர்க்கு நிகராவார்? யாழ்ப்பா ணத்தின்
அறிவுலகே வலம்புரிச்சங் களித்த தன்றோ?
பேரிருக்கும் நூறாண்டு மட்டுமல்ல!
பேருலகம் உள்ளவரை நிலைக்கும் அம்மா!

துடிப்பிருக்கும் சங்கரதாஸ் எழுத்தில் எல்லாம்;
சுவை சொட்டும் சந்தநயம் தோய்ந்துநிற்கும்
படிப்பினைகள் ஏராளம் இசைமு ழக்கும்;
பழம்பாடற் குறள்நெறியும் சொக்க வைக்கும்
அடிப்படைநற் செல்வமென 'நாடகங்கள்
அளித்தபெருங் கலைஞானி ஆற்றல் எண்ணி
'நடிப்புலக இமயமலை' அடிகள் என்றே
நாவாரக் கலைவாணர் புகழ்ந்தா ரன்றோ ?

அழுத்தமுறச் செந்தமிழே சிறந்த தென்ற
ஆராய்ச்சிப் பாட்டெழுதி முழங்க வைத்தார்;
எழுத்துலகக் கதிரவனின் ஒளியை ஏந்தி
எத்தனையோ கலைச்சுடர்கள்இலங்கக்கண்டோம்
பழுத்தசுவைத் தமிழ் 'அவ்வை' சண்முகம்போல்
பண்பினிய மாணவரைப் பார்க்கும் போழ்தில்
வழுத்துகின்றோம் குருநாதர் மாண்பு தன்னை!
வாழ்கின்றார்சங்கரதாஸ்! வணங்குவோமே!


## வாடகைக்கு — பர்னீச்சர்களும் — பாத்திரங்களும்

உயர்ந்த ரக மடிப்பு நாற்காலிகள், மடிப்பு மேஜைகள், ஜமக்காளங்கள், திருமணத்திற் ஏற்ற சோபாக்கள், இரும்பு மடிப்பு கட்டில்கள், மின்சார விசிறிகள், (பெடஸ்டல் & டேபிள்) மற்றும் டின்னருக்கு தேவையான புதிய எவர் சில்வர் பாத்திரங்கள், டம்ளர்கள், பிளேட்டுகள், பரிமாறும் பாத்திரங்கள்; இரும்பு சாமரன்கள், திருமணத்திற்கு சமைப்பதற்கு ஏற்ற பித்தளை பாத்திரங்கள், இன்னும் டீபார்ட்டி டின்னர் போன்றவற்றிற்கு தேவையான கப், சாசர், கரண்டி (கிராக்கரி & கட்லரி) முதலியனவும், தோட்டத்திலும், மைதானத்திலும் பந்தல் போட புதிய 'ஷாமியானா' [SHAMIANA] வும், குறைந்த வாடகையில் கிடைக்குமிடம் :-

மெஸர்ஸ் : **ஷண்முகம் அண்டு சன்ஸ்,**
நெ. 31, மவுண்ட் ரோட்,
சென்னை - 2.

தொலைபேசி எண் : 86707

விஜயம் செய்யுங்கள் :

நாடகப் பேராசிரியர்
பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின்

## வாழ்த்து

தமிழ் நாடகத்தை முன்னேறச் செய்த பெரியார்களுள் ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள் தலை சிறந்த ஒருவரென்பது தமிழ்நாடக அபிமானிகள் அனைவரும் அறிந்த விஷயமே. அப்படிப்பட்ட பெரியாருடைய நினைவு நாளை நாமெல்லோரும் கொண்டாட வேண்டியது நம்முடைய முக்கிய கடமையாகும். எனக்கு இவ்விஷயத்தில் வருத்தமெல்லாம் அவர் இறந்தபின் பல வருடங்களாக இதை நடத்தாததே நம்முடைய குற்றமாகுமென்பதாம். இப்பொழுதாவது நாம் விழித்துக்கொண்டு நடத்துகிறோமென்று பேருவகை கொள்கிறேன்.

ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகளை நான் நன்றாய் அறிவேன். மதுரை ஜெகநாதையர் கம்பெனியில் அவர் நாடகாசிரியராய் இருந்தபோது நேரில் பலமுறை சம்பாஷித்துச் சந்தோஷித்திருக்கிறேன். அவர் எனது நாடகங்கள் சிலவற்றிற்கும் பாடல்களை அழகாகவும், பொருத்தமாகவும் எழுதியிருக்கிறாரென்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பெரியார் தற்காலம் தமிழ் நாடகமானது சற்றுத் தலைதூக்கி வளரும் காலத்தில் நம்முடன் இல்லாமற் போனாரே என்பது தான் பெருங்குறை.

இப்பொழுது சுவாமிகள் உயிருடன் இருந்திருந்தால் அவரும் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார். நம்மையும் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியிருப்பார். அவர் செய்த சேவையை மறவாது ஆண்டுதோறும் கொண்டாடி வரவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

(ஒப்பம்) ப. சம்பந்தம்


Gram : "ANAND" PHONE : 651

*Please Visit :*

HOTEL ANAND

39, Ambalathadaiyer Madam Street,
**PONDICHERRY-1**

**For Comfortable & Airy Rooms and Car Parking Site,
Ideally Situated in Business Centre**

☆

விஜயம் செய்யுங்கள் :

**ஹோட்டல் ஆனந்த்**

**39, அம்பலத் தாடையர் மடத்து வீதி,
புதுச்சேரி-1.**

**நல்ல வசதிகளுடன் கூடிய அறைகள் உள்ளன.
கார் தங்க வசதியும் உண்டு.**

**நியூ பத்மா ஹோட்டல்**

**மெயின் கார்டு கேட்,
திருச்சி – 2.**

☆

சிறந்த சாப்பாட்டிற்கு,
குளிர்ந்த பானங்கள்
சிற்றுண்டிகளுக்குரியது.

☆

**திருச்சியில் சகல சவுகரியங்களுடன்
தங்குவதற்கு ஏற்ற இடம்.**

# நாடகத்தில் புரட்சி

**'தமிழன்'**

தமிழ் என்றவுடனே துள்ளியெழுபவர், தமிழினம் என்றதும் தலைநிமிர்ந்து நிற்பவர், தமிழ் நாடு என்ருல் தோள் தட்டி முன் வருபவர் யாரென்ருல், அது ம. பொ. சி. என்று எல்லோருஞ் சொல்வர். தலைசிறந்த எழுத்தாளரும் பெரு நாவலருமான அவர் 'தமிழன்' என்ற மாறு பெயரிலும் முக்கிய பொருள்கள் பற்றி, அவ்வப்போது 'செங்கோல்' என்ற வார இதழில் எழுதி வருகிருர். சிந்தனையைத் தூண்டும் புரட்சிகரமான கருத்துக்கொண்ட இக்கட்டுரையையும் அவர் அப்புனை பெயரிலேயே எழுதியிருக்கிருர்.

நாடகக் கலையைப் பிரசாரக் கருவியாகவும் பயன்படுத்துவதுண்டு. 'கலை கலைக்காகவே' என்ற கொள்கை சித்தாந்த ரீதியாக மறுக்கமுடியாததாக இருக்கலாம். ஆனல், கலை கலைக்காக மட்டுமன்றி, கருத்துப் புரட்சிக்காகவும் பயன்பட வேண்டும் வெறும் பொழுது போக்குக்காக மட்டும் பயன்படுத்தினல் நாடகக் கலையும் வளராது. அதனல் நாடும் முன்னேற்றமடையாது. இந்த உண்மையை உணர்ந்த முன்னேர் நாடகக் கலையை சமூக சீர்திருத்தக் கொள்கையைப் பரப்பவும் பயன்படுத்தியுள்ளனர். அவர்களில் இன்றைக்கு ஒரு நூற்ருண்டுக்கு முன்பு வாழ்ந்த இயலிசைப் புலவர் கோபால கிருஷ்ண பாரதியார் ஒருவராவார். அவர் சிவகதா காலட்சேபம் செய்வதில் வல்லவர். இசைப்பாடல்கள் இயற்றுவதிலும் தனித் திறமை பெற்றிருந்தார், அவர் இயற்றிய இசைப் பாடல்களிலே 'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமா குமா' என்னும் பாடல் புகழ் பெற்றதாகும். பாரதியார், சரித்திரக் கீர்த்தனை நூல்கள் சிலவற்றை இயற்றியுள்ளார். அவை நாடக அரங்குக்குப் பயன்படும் வகையில் அமைந்தவையாகும்.

நந்தனர் சரித்திரக் கீர்த்தனை, இயற்பகை நாயனர் சரித்திரம், திருநீலகண்ட நாயனர் சரித்திரம், காரைக் கால் அம்மையார் சரித்திரம் ஆகியவை அவர் இயற்றிய சரித்திர கீர்த்தனை நூல்களாகும். தொண்ணூற்றைந்தாண்டுகள் இந் நிலவுலகில் வாழ்ந்த பாரதியார் நந்தனர் சரித்திரக் கீர்த்தனை என்னும் நூலின் வாயிலாக, நாடக வுலகில் அழியாப் புகழ் பெற்று விளங்குகின்ருர்.

நந்தன் கதைக்கு மூல நூல் சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர் புராணமாகும், ஆனல் பெருமளவில் திருத்தொண்டர் புராணத்தில் வரும் நந்தனர் கதையிலிருந்து வேறுபட்டு நந்தனர் சரித்திரக் கீர்த்தனை நூலை இயற்றியுள்ளார் பாரதியார், இது, நாடக வுலகில் பாரதியார் புகுத்திய கருத்துப் புரட்சியாகும். 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெரிய புராணத்தில் வேதிய மிராசுதார் பாத்திரமில்லை. பாரதியார் இயற்றிய நந்தனர் சரித்திரக் கீர்த்தனையில் வேதிய மிராசுதாரர் உண்டு. சேக்கிழாரின் நந்தன் ஏர் பிடித்து உழுது பிழைக்கும் உழவனல்லன். சிவ பெருமான் திருக்கோயில்கள் தோறும் பேரிகை முதலான முகக் கருவிகளுக்குப் போர்வைத் தோலும் விசி வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்புகளும், பூசனைக்குக் கோரோசனையும் கொடுத்து அவற்றில் வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்.

பாரதியாரின் நந்தனர் உழுது பிழைக்கும் உழவர். அந்தண மிராசுதாரரின் அடிமைக்கூலி, அதனல் தில்லையம்பலவாணரை தரிசிக்க வேண்டுமென்ற நந்தன் விருப்பத்துக்குத் தடையாக நிற்கிருர் மிராசுதார். ஆண்டையாகிய அவருக்கும் அடிமையாகிய நந்தனருக்கும் இடையே நடைபெறும் வாதம் மிராசுதாரர், உழவர் போராட்டம் என்று சொல்லலாம்.

நந்தனர் சரித்திரக் கீர்த்தனையில் மிராசுதார், உழவர் போராட்டம் இதயம் போன்று அமைந்திருக்கிறது. மிராசுதார் பாத்திரம் இல்லையேல் நந்தன் நாடகமே இல்லை.

சேக்கிழார் தந்த நந்தன் கதையில் பாரதியார் செய்த இந்த புரட்சிகரமான மாறுதல் அவர் காலத்திலிருந்த தமிழ்ப் பண்டிதர்களுக்குப் பிடிக்கவில்லை. அந்நாளில் பெரும்பாலான தமிழ்ப்புலவர்கள் மிராசுதாரர்களின் உதவியை நம்பியே வாழ்ந்து வந்தார்கள். நந்தனர் சரித்திரக் கீர்த்தனைக்கு அவர்கள் காட்டிய எதிர்ப்புக்கு அதுவும் ஒரு காரணமாகலாம். 'நந்தன் சரித்திரத்தைக் கேளாதே' என்று அவர்கள் மக்கள் மத்தியிலே பிரசாரம் செய்து வந்தனர். ஆனல், அவர்கள் எதிர்ப்பு வெற்றி பெறவில்லை, நந்தனர் சரித்திரக் கீர்த்தனை நாடகம், நாடக வுலகில் தனி மதிப்பைப் பெற்று விளங்கியது. டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்களின் பேராசிரியராகிய மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை நந்தனர் சரித்திர கீர்த்தனை நூலுக்கு மதிப்புரை வழங்கினர்,

சேக்கிழார் தந்த 'திருநாளைப் போவார்' (நந்தன்) கதையில் அந்தண மிராசுதார் பாத்திரத்தைப் புகுத்தி, புராணக் கதையை மிராசுதார் உழவர் போராட்டக் கதையாக மாற்றினரே, அதற்குக் காரணம் உண்டு. கோபால கிருஷ்ண பாரதியார் தஞ்சை மாவட்டத்தில் பிறந்து வாழ்ந்தவர். அவர் காலத்திலும் நிலப் பிரபுக்களின் கோட்டையாக விளங்கி அவர்களின் கொடுமையும் மிகுந்திருந்தது. தஞ்சை மாவட்டத்திலே நிலப்பிரபுக்களிலே அந்தணர்களும் அதிகமாக இருந்தனர். அவர்கள் தங்களிடம் கூலிக்கு உழைத்த, தாழ்த்தப்பட்ட ஜாதியினரான உழவர்கள் மீது பொருளாதார ரீதியிலும், சமய வழிப்பட்ட வைதீக முறையிலும் ஆதிக்கம் செலுத்தி அவர்களை அடிமைப்படுத்தினர்.

இந்தக் கொடுமை கண்டு பரரதியார் உள்ளம் குமுறினார். 'சமய வைதீகம்' என்பது மிராசுதாரர்களின் ஆதிக்கக் கருவியாகவே அவரது அறிவுக்குப் பட்டது. 'சேரி' என்பது உழவர்களை அடைத்து வைக்கும் சிறைச்சாலையாகவே அவர் கண்ணுக்குக் காட்சியளித்தது. அதனால் தம் காலத்தில் அந்தண நிலப்பிரபுக்களிடம் தாழ்த்தப்பட்ட ஜாதி உழவர்கள் படும் கொடுமைகளை வர்ணிக்கவும் அந்தக் கொடுமையை எதிர்க்கும் உணர்ச்சியை உழவர்களுக்கு ஏற்படுத்தவும் பெரிய புராணத்திலுள்ள 'திருநாளைப் போவார்' என்னும் நந்தனார் கதையைப் பயன்படுத்திக் கொண்டார். சேக்கிழார் பெருமான் வாழ்ந்த நூற்றுண்டில் நிலப்பிரபுத்துவம் கொடுமை மிக்கதாக விருக்கவில்லை போலும். அதனால் பெரிய புராணத்தில் வரும் நந்தன் கதையிலே அந்தண மிராசுதாரர் பாத்திரமாக்கப்படவில்லை. பாரதியாரின் நந்தனார் உரிமையுணர்வுடைய உழவராதலால், தன் மீது அந்தண மிராசுதாரர் பெற்றிருந்த ஆதிக்கத்திற்கு அடங்க மறுத்துவிட்டார்,

ஆதனூர்ச் சேரியில் 'பறையர்' குடியில் பிறந்த நந்தனார் தில்லைப்பகுதிக்குச் சென்று அம்பலவாணரைத் தரிசித்து, பிறவிப் பிணி யொழிக்க விரும்பினார். ஆயினும், தன்னை அடிமை கொண்ட ஆண்டையிடம் அனுமதி பெருமல் அவர் தில்லை செல்ல முடியாதல்லவா! அதனால் மிராசுதாரரை அணுகி,

'ஆதி பரா பரமென்னும் திருச்சிற்றம்
பலத்தைக் கண் டானந்திக்க
வேத மொழி விளங்கி வரும் திருவாயால்
விடை கொடுத்து விடுவீர்'

என்று விண்ணப்பித்துக் கொண்டார். நந்தனின் இந்தப் புதிய போக்கு எசமானருக்கு வியப்பைத் தந்தது,

'பறையா, நீ சிதம்பரம் என்று சொல்லப்
படுமோடா போகப்படுமோடா - அடா (பறை)
அறியாத் தனமினிச் சொன்னலினிமேல்
அடிப்பேன் கூலியைப் பிடிப்பேன் பாவிப் (பறை)

என்றும்,

'ஆடு தின்னும் புலையா உனக்கு
ஆனித் தரிசனமோ
நாடு சிரிக்கும் வார்த்தைகளன்றோ
நாடாதே போடா'

என்றும் அதட்டினார். நந்தன் அஞ்சவில்லை. விடாமல் வந்து வந்து அந்தணரைத் தொந்தரவு செய்து அனுமதி வேண்டினன். எனவே, நந்தன் பால் அன்புடையவர் போல,

'அந்தரங்கமுள்ள சொந்தப் பறையனாய்
அண்டியிருப்பது போய் சண்டை பிடிக்க வந்தாய்'

என்று சொந்தம் பாராட்டி அறிவுரை கூறினார். அந்தணருக்கு ஆத்திரம் ஏற்படக் காரணம் நந்தன் தில்லை தரிசனத்தை விரும்பியதன்று, பண்ணையை மறந்து, பண்ணை எசமானனின் அடிமை என்பதை மறந்து, பகவானை நினைத்தானே அதுதான். இருந்தும், ஏர் பிடித்து உழும் பறையனுக்கு உரிமையுணர்ச்சி ஏற்பட்டு விட்டது. அத்துடன் ஆன்ம ஞானமும் பிறந்து விட்டது. அதனால் ஆத்திரம் கொண்டாராகி,

'புத்தி சொல்லிக் கேளாத மூடர் உன்றன்
புரட்டெல்லாம் நானறிவேன் போடா போடா
பத்தியென்றும் சித்தியென்றும் பறையர்க் கேது
பாப்பாரத் தெய்வ மது பாலிக்காது
குத்தமுண்டுன் ஜாதியிலே வழக்க மில்லாக்
கொள்கையது சேரியிலே கூடாதப்பா'

என்று கூறி மிரட்டினார். நந்தன் மிரளவில்லை.

'சாரு நரை திரை தீரு மருந்தது
சாதியைப் பாராது'

என்று கூறி ஆகமம் உணர்ந்த அந்தணருக்கு அறிவு புகட்டினார். அதற்குமேல் அந்தண மிராசுதாரருக்கு ஆத்திரம் பிறந்து பலவாருகத் திட்டி அடித்தார். ஆம்; முழங்கால் சேற்றில் இறங்கி உழைத்து உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு அந்த நாளில் நிலப் பிரபுத்துவம் தந்த 'மரியாதை' அடியும் உதையுமாகும். அடி தாளாத நந்தன்,

'அடித்தது போது மையே
அடிமை வேலை செய்யும் என்னுடன் வாதோ ?'

என்று கூறி அழுதான். அப்போதும் தில்லையம்பதி செல்ல அந்தணர் அனுமதி தரவில்லை. நந்தனும் பொறுமையிழந்தார்.

'பாவி யெனக்கோ இந்தப்
பார்ப்பான் மனமிரங்கான்'

என்றும்,

'பத்து வருட காலமாகப்
பார்ப்பானைக் கேட்டேன்
சித்தமிரங்கிப் போய்வா என்ருெரு நல்ல
சேதி சொல்லக் காணேன்'

என்றும் கூறி அந்தணரைப் பழித்தார். அந்தணரை மட்டுமா? நிலப்பிரபுத்துவத்தின் கொடுமையில் வாடும் மக்கள் பால் அருள் காட்டாத ஆண்டவனையும் பழித்தார்,

'தில்லையம்பல வாணத் தெய்வம் புலையர்க்குக்
கல்லாய் சமைய லாச்சுதே'

என்ருர். ஆம்; ஆண்டவன் வாய் திறந்து பேச இயலாத கல்லாகச் சமைந்தது மிராசுதாரர்களுக்கு அஞ்சித்தாஞம். என்ன அருமையான கற்பனை !

'அடி முடி யொன்று மில்லா அம்பலத்தரசே உன்பால்
கொடியன் நான் வந்தாலென்ன குறையுமோ அதனல் நீதி
நடனம் செய் பார்ப்பான்கையில் நடுங்கவோ விடுத்தாய்'

என்பதாக, கதியற்ற தீண்டாத மக்களைக் காப்பாற்றக் கருணையற்ற தெய்வத்தைக் கனன்று பேசினார்.

இப்படி அந்தண மிராசுதாருக்கும் அடிமைக் கூலியான நந்தனுருக்கும் நடைபெறும் வாதத்தைப் பற்றிய கோபால கிருஷ்ண பாரதியாரின் கீர்த்தனைகள் புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டவையாகும்.

பாரதியார் பிறப்பால் அந்தணர். ஓரளவு தமிழிலும் பெருமளவு சமஸ்கிருதத்திலும் புலமை பெற்றவர். சிவபக்தர். பக்திப் பாடல்கள் பாடிய பாவலர். சிவகதை நடத்தும் புராணீகர். இவ்வளவு வைதீக இலட்சணங்க ளிருந்தும், அவர் தீண்டாமை ஒழிப்பில் ஆர்வம் கொண்டு, நிலப்பிரபுத்வத்தின் கொடுமையை எதிர்க்கும் புரட்சியை துவக்கிவைக்க வேண்டுமென்ற எழுச்சி பெற்று நந்தனார் சரித்திர கீர்த்தனையை இயற்றினார். இது, நாடகத் துறையில் பாரதியார் நிகழ்த்திய கருத்துப் புரட்சி யெனலாம். சுமார் ஒரு நூற்றுண்டுக்கு முன்பு இப்படி ஒரு புரட்சி செய்ய எல்லையற்ற துணிவு வேண்டும். அத்தகைய துணிவைப் பெற்றிருந்த கோபால கிருஷ்ண பாரதியாரின் புகழ் வாழ்க !

**now running successfully....**

*....at Madras*

**GAIETY**
**SRI KRISHNA**
**SAYANI**
**NOORJEHAN**
**& all over South**



*Modern Theatres'*

# "Ethirigal Jaggiradhai"

Story-Dialogue :

A. L. Narayanan

Songs :

Kavingnar Kannadasan

Music :

Vedha

★ Direction : R. SUNDARAM, B.E.

தந்தி : "சுகர் மில்ஸ்" போன் : 21

# சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

## மோகனூர் (சேலம் மாவட்டம்)

விவகார எல்லை : சேலம் மாவட்டத்தின் எல்லா தாலுக்காக்களும், திருச்சி மாவட்டம், முசிரி தாலுக்காவின் ஒரு பகுதியும் இந்த ஆலையின் விவகார எல்லையாகும்.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் : ரூ. 50,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் 30—6—67 தேதி வரை } ரூ. 74,33,600

## அங்கத்தினர்களும் செலுத்தப்பட்ட மூலதனமும் 30—6—67 தேதி வரை

| | | |
|---|---|---|
| 1. விவசாயிகள் | 5278 | ரூ. 31,33,600 |
| 2. கூட்டுறவு ஸ்தாபனங்கள் | | |
| (அ) சேலம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி | } 2 | ரூ. 13,00,000 |
| (ஆ) சேலம் மாவட்ட கூட்டுறவு விற்பனை விநியோகச் சங்கம் | | |
| (இ) தமிழக அரசு | 1 | ரூ. 30,00,000 |

மத்திய அரசாங்கம், இந்த ஆலையின் அரைவைத் திறனை 1,000 டன்னிலிருந்து 1750 டன்கள் வரை அதிகரிக்க அனுமதி வழங்கியுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சி. சுப்பிரமணியம்
தலைவர்.

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

## மதுரை – 1.

தொலைபேசி எண்: 4023, 4024, 2134. தபால் பெட்டி எண்: 14.

தந்தி: "சென்கோ பாங்க்".

திரு. வ. அழகப்பன், B.A., B.L.,

தலைவர்.

கிளைகள்:

திண்டுக்கல், தேனி, பழனி, கம்பம், திருமங்கலம், கொடைக்கானல், நிலக்கோட்டை, மேலூர், உசிலம்பட்டி, ஒட்டன்சத்திரம், தல்லாகுளம், வத்தலக்குண்டு, பெரியகுளம், சோழவந்தான்.

விசேஷ கால வைப்புகள்:

(SEASON DEPOSITS) $1\frac{1}{2}$ சதவிகித முதல் 3 சதவிகித வட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

தவணை வைப்புகள்:

(FIXED DEPOSITS) 3 மாதம் முதல் 84 மாதங்களுக்கு மேலும் $5\frac{1}{2}$ சதவிகித முதல் $7\frac{1}{2}$ சதவிகித வட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்பு கணக்கு வைப்புகள்:

(S.B.) காசோலை மூலம் (cheque) நடத்திக் கொள்ளலாம். 12 வயதுக்கு மேற்பட்ட மைனர்கள் அவர்கள் பெயரில் கணக்குகள் வைத்து அவர்களே வரவு செலவு செய்யலாம். வட்டி 4 சதவிகிதம். வாரமொன்றுக்கு ரூ. 5000 வரை பணம் திரும்பப் பெறலாம்.

$6\frac{1}{2}$ சதவிகித வட்டிக்கு ரிக்கரிங் டிபாசிட்டுகளும் 7 சதவிகித கூட்டு வட்டிக்கு பிராவிடெண்ட் நிதி வைப்புகளும் மாதாந்திர தவணையில் பெற்றுக் கொள்ளப்படும்.

விபரத்திற்கு விண்ணப்பிக்கவும்.

S. N. ராஜமாணிக்கம், B.A., B.Com. (Hons.),
C. A. I. I. B.,
காரியதரிசி.

## சிம்ஸன் குரூப் ஊழியர்கள் கூட்டுறவு சங்கம்

—: ஜவுளி வியாபாரம் :—

201, மவுண்ட் ரோடு, "மெயில்" கட்டிடம்.

எங்களிடம் எல்லா விதமான B & C மில், மற்றும் மில் துணிகளும், டெர்லின், டெர்ரி காட்டன், டெர்ரி சில்க்குகளும் கவர்ச்சி மிக்க வாயில், டெர்லான், டெக்ரான் சேலைகளும், சோளிகளும், மதுரை, உறையூர், சின்னளப்பட்டி கைத்தறி சேலைகளும் ஏராளமான சரக்குகள் இருக்கின்றன.

ஓர் முறை விஜயம் செய்யுங்கள்!

(பொது ஜனங்களுக்கு விற்பனை உண்டு)

கைத்தறி துணிகளுக்கு 5% விசேஷ தள்ளுபடி உண்டு.

## மதுரை கூட்டுறவு சிறப்பு அங்காடி

(மதுரை ஜில்லா கூட்டுறவு சப்ளை அண்டு மார்க்கட்டிங் சங்கத்தின் ஓர் அங்கம்)

தரமான கலப்படமற்ற பொருட்களை

நியாயமான விலையில் ஒரே இடத்தில்

வழங்கும் ஒரு கூட்டுறவு நிறுவனம்

எஸ். வைத்தியலிங்கம்
டிப்டி ரிஜிஸ்டிரார்
பொது நிர்வாகி

# சங்கரர் இசைத்தமிழ்



நா. பாண்டுரங்கன். எம்.ஏ.,

முத்தமிழில் இயல் என்பது கரும்பு; இசைஎன்பது அந்தக் கரும்பு அளிக்கும் கற்கண்டு. இயல் என்பது மணமலர்; இசை என்பது அம் மணமலர் அளிக்கும் தீஞ்சுவைக்கனி! இயல் என்பது நெஞ்சை அள்ளும் காவியம்; இசை என்பது உயிரைத் தொடும் ஒலி ஓவியம்!

ஒலியே இசையின் தாய்; ஒலியின் அளவில் உண்டாக்கும் ஒற்றுமையே இசையின் தந்தை. காணும் இடமெல்லாம் அழகைக் காணும் கவிஞர்களின் கண்கள்! கேட்கும் இடமெல்லாம் ஒலியில் இசையைக் கேட்கும் இசைக்கலைஞனின் காதுகள்! ஒலி நிறைந்த உலகில் எங்கும் இசையின் திருவிளையாட்டைக் கண்டு உள்ளம் உருகி நிற்கும் புலமை மனம் கல்வியால் வரும்; கலைப் பயிற்சியால் வரும்! அருள் வழியும் மனம் அகிலமெங்கும் வழியும் ஒலியிலெல்லாம் இசையே பொழிவதைக் கேட்டு உருகும்.

அலைகடலின் பெருமூச்சில்; கூந்தல் மேகக் கூட்டங்களின் இடிச்சிரிப்பில்; முகில் மலையை முத்தமிடும் போது எழும் மழைச் சத்தத்தில்; அருவி கொட்டும் முழவில்; ஆறு நடக்கும் போது எழும் சலங்கை ஒலியில்; காலைப்பறவைகளின் தொழுகையில்; குயிலின் குழலில்; ஆந்தையின் ஒப்பாரியில்; அம்மா என்று பசுங்கன்று அழைக்கும் மழலையில்; வண்ண மலரைச் சுற்றி வண்டு மீட்டும் யாழில் கவிச்செவி இசை கேட்க இதய வெண்ணெய் நெய்யாய் உருகி நீராய் ஓடும்!

வண்டு துளைத்த மூங்கில் புல்லாங்குழல் இசையை வழங்குகிறது. அருவி மத்தளம் அடிக்கிறது. கலைமான் கூட்டம் இடும் ஒலி பெருவங்கியம் இசைக்கிறது. வண்டு யாழ் மீட்டுகிறது. குயிலென்னும் பாடகன் பாடுகிறான். அழகென்னும் மயில் மகள் ஆடுகிறாள், மந்தியென்னும் கூட்டம் பார்த்து மகிழ்கிறது. இவ்வாறு சங்கப்புலவர் இயற்கையில் ஆடல் பாடல் இசை நாடகம் கண்டு களிக்கிறார்.

ஆலைகளின் இயந்திர இயக்கத்தில்; சாலைகளில் மாலை மாலையாகப் போகும் ஊர்திகளும் மக்களும் இடும் ஓசையில்: சந்தை இரைச்சலில்; விழாக் கூட்டத்தின் ஆரவாரத்தில்; எங்கே எந்த ஒலி எழுந்தாலும் அந்த ஒலியின் வயிற்றில் இசைக்குழந்தை இருப்பதை அறிந்து கலைமனம் களிப்படையும். இந்நாள் மின்னியலிசைக்கு (Electronic Music) இவையே உணவளிக்கும் அமுத சுரபிகளாக இருக்கின்றன அல்லவா?

மொழி என்பது எண்ணத்தின் ஓவியம். அந்த எண்ண ஓவியத்தின் அமைதிப்பாட்டே இலக்கியம். மொழி ஓவியத்தின் அமைதிப்பாட்டும் ஒலி ஓவியத்தின் இசைப்பாட்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பண் கனிந்த பாடலிசை யாகும் போது நெஞ்சம் உருகும்; நினைவும் உருகும்; உயிரின் உயர் இன்பத்தை நம் உயிர் உணரும்.

மொழி ஓவியத்திலும் ஒலி ஓவியத்திலும் புலமை பெற்று அருள் ஊற்றைத் திறக்கும் பண் கனிந்த பாடல் பாடி இசைத்தமிழ் வளர்த்த பெரியார் பலர். அப்பெரியார் வரிசையில் தவத்திரு சங்காதாஸ் சுவாமிகள் இடம் பெறுகின்றார்.

தமிழ் நாடகத் தலைமையாசிரியர் சங்கரதாசர் ஆற்றிய தொண்டினை அறிவதற்கு நுண்ணறிவு வேண்டும், அரிசியை உணவுக்கு அளித்தவரின் தொண்டு— அந்த முதல் மனிதன் பெயர் என்ன? மனிதனுக்குப் பெயரே இல்லாக் காலத்தில்—மொழியே முளைக்காத காலத்தில் அந்த மனிதன் நெல்லைக் கண்டான்; அரிசியைக் கண்டான். இன்றும் அரிசியால் உலகம் வாழ்கிறது. அரிசியைக் கண்டுபிடித்த அவனை உலகம் நினைத்துப் பார்ப்பதில்லை. திரைப்படம் கண்டு களிக்கும் எண்ணிக்கையில் உலகில் மூன்றாவது இடம் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது. அதில் தமிழகமே சிறப்பிடம் பெற்றிருக்கிறது. கலைமனத்தின் ஆட்சியே இதற்குக் காரணம். தமிழகத்தின் இக்கலைமனத்தை நாடகக்கலையே வளர்த்து வாழ்வித்திருக்கிறது. அந்நாடகக் கலையை வளர்த்த

பெரியார்களில் தவத்திரு சங்கரதாசரே தலைமையாசிரியர். ஆனால், சங்கரதாசரை உலகம் அறிய வேண்டிய அளவு அறியவில்லை; போற்ற வேண்டிய அளவு போற்றவில்லை. இன்றையத் தமிழ்த் திரைப்படக் கலையின் சிறப்புக்கு, தமிழ் நாடகக் கலையே தாய். அந்நாடகக் கலையின் தந்தையாம் சங்கரதாசர் ஆற்றிய தொண்டு கனியில் மறைந்த மலர் போன்றது. வெண்ணெயில் மறைந்த பால் போன்றது. கற்கண்டில் மறைந்த கருப்பு போன்றது. கனியைச் சுவைப்பார் மலரை நினையாதது இயற்கைதான்! வரலாற்று மனம் — கவிமனம் — கலை மனம் — நன்றிமனம் — தமிழ்மனம் சங்கரதாசரைப் போற்றும். கனியைச் சுவைக்கும் போது மலரை நினைக்கும்.

கரும்பைத் தொட்டதும் நாக்கு அடையும் இனிப்பு உணர்விற்கும், கற்கண்டைத் தொட்டதும் நாக்கு அடையும் இனிப்பு உணர்விற்கும் பெரிய இடைவெளி இருக்கிறதல்லவா? வாயில் கற்கண்டு நாக்கில் பட்டதும் சுவைக்கத் தொடங்கும் முதல் ஏடுப்பிலேயே நாம் இனிப்பை உணர்வதுபோல், செவியில் இசைப்பாட்டு விழுந்ததும் நம் நெஞ்சையும் நினைவையும் இனிமை உணர்வு தழுவவேண்டும். சங்கரதாசரின் பண் கனிந்த இசைத்தமிழ் இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகும்.

"பண் என்னும் பாடற் கியைபின்றேல் கண் என்னும்
கண்ணோட்ட மில்லாத கண்"

இது வள்ளுவர் இசைமொழி. பண்ணுக்குப் புகழ் சூட்டும் பாடல்களும் பாட்டுக்குப் புகழ் சூட்டும் பண்களும் சங்கரதாசரின் இசைத்தமிழில் நிறைந்துள்ளன.

தோடிப் பண்ணில் ரூபக தாளத்தில் அமைந்த இந்தக் கண்ணிகளைப் பாருங்கள்; பாடுங்கள்; இசைத்தமிழின் இனிப்பை உணரலாம். சங்கரதாசரின் பாடல் இது.

"அவாவே பிறப்பினும் வித்தென்று வள்ளுவர்
ஆராய்ந்து சொல்லின ரன்றோ!
அந்தஞான போதம் சிந்தை செய்யாமல்
அகற்றி விடுதலும் நன்றோ!
பற்றற்றான் பற்றினைப் பற்றென்று சொன்னதும்
பாவனை யுண்மையின் மார்க்கம்
பலிக்கும் வழியை விளக்கியதன்றோ
பகர்ந்த தெல்லா மவர் தீர்க்கம்
சற்றுஞ் சந்தேகமில்லை குறளாகிய
சாத்ர மொன்றுமே போதும
சர்வகலாசார ஞானந்தருமது
தன்னைப் படிப்பா யெப்போதும்."

குறளெனும் பாலை, இசையெனும் தேனில் கலந்து, பண், தாளம் என்னும் பாகும் பருப்பும் கலந்து நாடகத் தலைமையாசிரியர் நாட்டுக்குத் தருகிறார். இவ்வாறே பல பாடல்களும் உள்ளன. அறுபது எழுபது ஆண்டுகட்கு முன்பே நாடக அரங்கில் குறளைப் பரப்பிய பெரியார் சங்கரதாசர்!

தமிழே சிறந்ததென உனது நாமம் விளங்கச்
சாற்றும் அந்தப்பொருளை யாரறிவார்-அம்மா?

என்று அவர் பாடிய பாடல் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் படித்தாலும் படித்தேன்; பாட்டினாலும் படித்தேன்!

இந்நாள் தமிழ் நாடகத் தந்தை கலை ஔவை தி. க. சண்முகம் அவர்கள் சங்கரதாசரின் இசைத் தமிழ் ஆற்றலைப் பற்றிக் குறிப்பிடுவது அறியத் தக்கது.

"தீர்த்த யாத்திரை முடிந்ததும் சில ஆண்டுகள் புதுக்கோட்டை மகாவித்துவான் கஞ்சிரா மான்பூண்டியா பிள்ளை அவர்களுடன் சுவாமிகள் இருக்க நேரிட்டது.

புலவர்களால் மிகக் கடினம் என்று கருதப்பட்ட வண்ணம், சந்தம் இவற்றைப் பாடுவதில் சுவாமிகள் மிகவும் வல்லவராயிருந்தார். அவரது 'சந்தக் குழிப்புக்' களிலே காணப்படும் தாள விந்நியாசங்களையும் சொற் சிலம்பங்களையும் பார்த்துப் பரவசமடைந்த மகாவித்துவான் மான்பூண்டியா பிள்ளை அவர்கள் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளைத் தமது 'தத்து புத்திரராக' ஏற்றுக்கொண்டார்.

சுவாமிகளைச் சந்தங்கள் பாடச் சொல்லிவிட்டுப் பிள்ளையவர்கள் 'கஞ்சிரா' வாசித்துத் தானே களிப்படைவாராம்."

சங்கரதாசரின் வரலாற்று நூலில் கலை ஔவை சண்முகம் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

எத்தனையோ அண்டம் எண்ணமுடியாது
யாவுமா தாரமில்லாமல் வான மீது
வைத்த மகிமை யொன்றே போதுமல்லாது
மாநிலத்தில் வேறு வேணுமோ நீ ஓது

என்று சங்கரதாசர் பாடியுள்ள பாட்டில், அவர் அறிவு மனமும் அருள் மனமும் இசை மனத்தில் ஒன்றி இன்ப மனமாக இருக்கின்றன. இவ்வாறு அவர் இசைப் பலா பலவாகும்!

சங்கரதாசரின் ஆண்டுவிழா ஒவ்வொன்றிலும் அவர் இசைத்தமிழ், புகழ்பெற்ற இசைவாணர் பாட இசைத் தட்டுக்களில் முறையாக வெளிவரல் வேண்டும். மொழிச்சின்னமாக ஏடுகளில் அவர் பாடல்கள் இருக்கின்றன. ஒலிச்சின்னமாக இசைத்தட்டுகளில் அவர் இசைத்தமிழ் இருக்கவேண்டும். ஒரே பாடல் பல பண்களில் சில இசைவாணர்கள் பாட வெளிவரல் வேண்டும்! இதை, அரசு செய்வது சங்கரதாசர் தம் தொண்டுக்கு நன்றி முரசு கொட்டுவதாகும்! — இசைவாணர் செய்வது புகழ் முரசு கொட்டுவதாகும்! மக்கள் செய்வது மகிழ்ச்சி முரசு கொட்டுவதாகும்!

முற்றிய தேங்காய் மண்ணில் மறைந்து மண்ணுள் தானே, ஓங்கி வளர்ந்து தலை உயர்த்தி நிற்கும் தென்னை இளநீர்க் குலையைத் தள்ளும்? தமிழ்த்தென்னை நாடகக்கலை குலை தள்ளி யிருக்கிறது; அது தெரிகிறது. சங்கரதாசரின் தொண்டு இத்தென்னையின் தாயாக-முற்றிய தேங்காயாகக் காலமண்ணில் மறைந்து விட்டது. அது நாட்டுக்கு வெளிப்படையாகத் தெரியவில்லை! இதை உணர நுண்ணறிவு வேண்டும்! நாடு நுண்ணறிவில் தழைத்துப் பண்ணுக்குப் புகழ் சேர்த்த சங்கரதாசரின் தொண்டினை உணர்ந்து அவர் புகழ் பாடுமாக!

உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த மங்கள தீபாவளி நல் வாழ்த்துக்கள் !



போன் : 86206

தந்தி : "Akilam"

பாரதத்தின் பிரபல பிரம்பு நாற்காலிகள் :—ஒவ்வொரு வீடு, காரியாலயம், தங்கு விடுதிகள், சினிமா ஸ்டுடியோக்கள், மற்றும் கலை அரங்குகளுக்கு இன்றியமையாதது

படங்களுடன் கூடிய இலவச கேட்லாக் வேண்டுவோர் விலாசம் தெளிவாக எழுதவும் :

## ஸ்ரீ ஜெயபாரதம் & கோ., (Regd.)

182, ராயப்பேட்டை ஹைரோடு :: சென்னை - 14



☆ தரத்தில் சிறந்தது !

☆ நம்பிக்கைக்குப் பாத்திரமானது !!

## சுடர்

## தீக்குச்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.

(Ind. No: 587)

☆ "சுடர்" நம்பிக்கையின் சின்னம்.

☆ "சுடர்" தீப்பெட்டிகளையே கேட்டு வாங்கவும்.

K. S. பார்த்தசாரதி
தலைவர்
காஞ்சிபுரம்

தந்தி : "சுடர்" போன் : 203



பித்தளை, தாமிரம், வெண்கலம்
எவர் சில்வர் பாத்திரங்கள் வாங்க
சிறந்த இடம்

## திருநெல்வேலி பாத்திரக்கடை

சி. வ. கந்தசுவாமி பிள்ளை சன்,

142, பெரிய கடை வீதி, :: திருச்சிராப்பள்ளி - 8

☆

ஒவ்வொருவருடைய ஆசையைப் பூர்த்தி செய்ய
எவர்சில்வர், பித்தளை பாத்திர சேமிப்புத்
திட்டம் ஆரம்பித்திருக்கிறோம்.
சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து
பயன் பெறுமாறு கேட்டுக்
கொள்கிறோம்.

# தென்னாட்டில் நாடகக் கலை

கோவைக் கிழார்

'சங்கத் தமிழ் மூன்று' என்பது தமிழ் மூதாட்டியின் வாக்கு. இயல், இசை, நாடகம் என்பது அம் மூன்றின் பெயர்களாகும். தமிழ் மொழி சிறந்திருந்த நாளில் இம்மூன்றும் சம உரிமையோடு சமமான சிறப்புப் பெற்றிருக்க வேண்டும். அந்தக் கருத்தை ஒட்டித்தான் இளங்கோவடிகள் தாம் அருளிச் செய்த சிலப்பதிகாரத்தில் இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் சம சிறப்போடு பாடி வந்தார் போலும். ஆனால் இந்த சம சிறப்பு பின்வந்த நூல்கள் எவற்றிலும் காணப்படுவதில்லை. காப்பிய காலத்திற்குப் பின்வந்த புலவர்கள், இயலையே சிறப்பாகக் கொண்டார்கள். பிறகு, சைவ, வைணவ மேம்பாட்டுக் காலத்தில், இயலோடு இசையையும் சிறப்பாகப் பாராட்டினார்கள்.

## நாடகத் தமிழின் அழிவு

அப்போதுதான் தேவாராதிகளும், ஆழ்வார்கள் பாசுரங்களும் தோன்றின. பிறகு தஞ்சை சோழர் காலங்களில் இயலே சிறந்து ஓங்கியது. அவர்களுக்குப் பின் தமிழ் நாடு தன்னுரிமை இழந்த, பிறகு எவ்வகைத் தமிழுக்கும் பாராட்டுதல் இல்லாமல் போய்விட்டது. பின்னர் சைவ மதத்தார்களும் தென்னாட்டுக் குறுநில மன்னர்களும் தோன்றின போது, சமயநூல்களும் சில்லரைப்பிரபந்தங்களும் தோன்றின. தெற்கு வட்டாரங்களில் பாளையக்காரர்களை அண்டி வயிறு வளர்த்துவந்த புலவர்கள புகழ்ச்சிப் பிரபந்தங்களோடு ஒரு வகை எளிய நாடகப் பிரபந்தங்களை இயற்றினார்கள். அவைகளில் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம், யட்ச கானம், தெருக்கூத்து விலாசம் முதலியவைகள் தோன்றின. இவையெல்லாம் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவைகள் என்றும் கூறலாம். காப்பிய காலத்துக்குப் பிறகு 15-ம் நூற்றாண்டுகள் வரை உறங்கிக்கொண்டிருந்த நாடகத் தமிழ் மீண்டும் தோன்றினால் தாழ்ந்த நிலைமையில் தான் இருக்குமல்லவா? இவ்வாறு வளர்ச்சியில் தடைபட்டுக் குறிக்கோள் ஒன்று மில்லாமல், நாடகத் தமிழ் சீர்கெட்டதற்குக் காரணம என்ன என்று ஆராய்வோம்.

## துன்பத்தில் தான் உணர்ச்சி எழும்

உலக மொழிகளிலேயே உயர்ந்த நாடகங்கள் தோன்றியிருப்பவை கிரேக்க மொழி, வடமொழி, ஜெர்மனியமொழி, ஆங்கில மொழி என்பன. இவைகள் சிறப்பு அடைந்திருந்ததற்கு அருமையான காரணங்கள் பல உண்டு. பண்டைக்கால மொழிகளிலே நாட்டு அன்பை வளர்த்தவர்கள் புலவர்களே யாவார்கள். கிரேக்க மொழியிலே, 2300 ஆண்டுகளுக்கு முன்னமே நாடகங்கள் தோன்றியிருந்தன. அப்போது மக்களை உற்சாகப்படுத்தி வீரர்களாகச் செய்தது நாடகமே. கிரேக்கர்களுடைய சுதந்திர வாஞ்சையை வெளிநாட்டார்கள் படையெடுத்து அழிக்கத் தொடங்கின போது, அம்மொழியில் வல்ல புலவர்கள் நாடகங்கள் எழுதி மேடையில் நடத்திக் காட்டி மக்களை உற்சாகப் படுத்தினார்கள். ஜெர்சஸ் (Xerxas) என்ற பாரசீக மன்னன் கிரேக்க தேசத்து ஆதன்ஸ் நகரின் மீது படையெடுத்த காலத்தில் புலவர்கள் மூட்டிய உற்சாகத்தினால் தான் மிகப்பெரிய அரசனை, அச் சிறிய நாட்டார்கள் வென்றார்கள். அதற்குக் காரணம் சபோக்கிலிஸ் (Sobhocles) யூரிபைடின் (Euripides) போன்ற நாடகாசிரியர்கள் எழுதிய நாடகங்களின் தூண்டுதலேயாகும். எந்த நாட்டிற்கும் உணர்ச்சி ததும்பிய கருத்துக்கள், துன்பம் வந்த காலங்களில் தான் தோன்றும்.

இனி ஆங்கில மொழிச் சரித்திரத்திலும் இந்தப் போக்கையே காண்கிறோம். ஆங்கில மொழியில் சிறந்த புலவர் ஷேக்ஸ்பியர் என்பவர். அவருக்குப் புகழ் வந்தது அவரியற்றிய நாடகங்களாலேயே. அவர் வாழ்ந்த காலந்தான் அம்மொழிக்குப் பொற்காலம் என்பர். அப்போது ஆங்கில நாடு மிகச் சிறிய நாடாக இருந்தது. அதைவிடப் பன்மடங்கு பெரிதாக இருந்தது ஸ்பெயின் நாடு. அந்த நாடு ஆங்கிலேயரை நசுக்க வேண்டுமென்று அத்தீவின் மீது படையெடுத்தது. ஆங்கில மக்கள் மிகப் பீதியடைந்திருந்தார்கள். அப்போது தோன்றிய புலவர்கள் தங்களுடைய கருத்தோவியங்களால் மக்களுக்கு உற்சாக மூட்டினர். அந்தக் காரணத்தினால் ஆங்கிலேயர்கள் வென்

ளூர்கள். உலகிலேயே மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தையும் உண்டாக்கினுர்கள். பீதி அடைந்திருந்த காலத்தில் உற்சாகத்தை ஊட்டிப்பேரரசாக விளைவித்தவர்கள் ஷேக்ஸ்பியர் போன்ற நாடகாசிரியர்களே.

இனி ஐரோப்பாவில் நாடகக் கலையில் சிறந்த பிரான்சு, ஜெர்மானியம் போன்ற மொழிகளில் சிறந்த புலவர்கள் நாடகாசிரியர்களே. ஜெர்மானியத்தில் பாஸ்டு (Faust) என்ற நாடகத்தை எழுதிய கத்தே என்ற புலவன் மிகச் சிறந்தவன். அப்படிப்பட்ட சிறந்த ஆசிரியர்களின் நாடகங்களைக் கண்டுதான் ஜெர்மானியர்கள் ஒன்றுபட்டு ஒப்பற்ற புகழ் பெற்ருர்கள்.

### சமஸ்கிருத நாடக வளர்ச்சி

இனி நமது பாரத நாட்டிலும் நாடகக் கவிகளாற் சிறப்படைந்த மொழி வடமொழி என்னும் சமஸ்கிருதமாகும். 15 நூற்ருண்டுகளுக்கு முன்னமேயே வடமொழியில் மேற்கு நாட்டு மொழிகளைப் போல நாடகங்கள் தோன்றின. வடமொழியில் சிறந்த கவிஞன் காளிதாசன் என்ற நாடகாசிரியனே. அவன் எழுதிய சாகுந்தலம், விக்கிரமோர்வசீயம், மாளவிகாக்கினி மித்ரம் என்ற நாடகங்கள் உலக பிரசித்தி பெற்று விட்டன. அவைகள் ஏற்பட்ட காலம் எப்படிப் பட்டதென்று கூறுவோம். வடநாட்டில் குப்தர்களுடைய பேரரசு தலைசிறந்திருந்தது. அப்போது வடமேற்கு மூலையிலிருந்து மிலேச்சர்களான ஹூனர்கள் பரத கண்டத்தின் மீது படையெடுத்து வந்தார்கள். குப்த வம்சத்துப் பேரரசர்கள் அம்மிலேச்சர்களோடு போர்புரிந்து துரத்திவிட்டார்கள். அந்த நெருக்கடியான காலத்தில் வடமொழியைச் சிறப்பித்தவன்தான் காளிதாசன்.

மேலே கூறிய வரலாறுகளினுல் மக்களையும் அவர்களது மொழிகளையும் உயர்த்திவைக்கும் பண்பாடு கொண்டது நாடகம் என்று அறிய வேண்டும். அதைப்போலவே தென்னுட்டு அரசியலும் ஏற்பட்டிருந்தால் தமிழிலும் பல நாடகங்கள் தோன்றியிருக்கலாம். நாட்டினுடைய வரலாறும் வேறு வகையாகத் திரும்பி யிருக்கலாம்.

### சமயத்தால் நாடகத் தமிழ் வளரவில்லை

தமிழ் மொழியில் சங்கத்தார் காலந்தான் பொற்காலம் என்று கூறவேண்டும். அதனைத் தொடர்ந்து வந்த காப்பியக் காலமும் ஒளி பொருந்திய காலமாகும். அக்காலத்தில்தான் சிலப்பதிகாரம் தோன்றிற்று. அதில் நாடகப் பகுதியிருந்தது. அது முதிர்ச்சி அடைந்திருந்தால் தென்னுடும் சீரிய நாடாகவே ஆகியிருக்கும். ஆனுல் நாட்டு அரசியல் போக்கு மாறிவிட்டது. காப்பிய காலத்தை ஒட்டினுற்போல சமணர் ஆதிக்கம் தென்னுட்டில தோன்றியது. மன்னர்களும், மக்களும் சமணத்தில் ஈடுபட்டார்கள். சமணர்கள் சமயம் துறவு முதலியவைகளிலேயே மூழ்கியிருந்தார்கள் அவர்களுக்கு நாடகம் என்ருல் மிகக் கசப்பாக இருக்குமல்லவா? அவர்களை அடக்கி மேம்பாட்டிற்கு வந்த சைவ வைணவ அடியார்களும் இயல், இசை என்ற இரண்டைப் போற்றினர்களே ஒழிய நாடகத்தைத் தொடவேயில்லை. சோழர் சாம்ராஜ்யத்திலும் இயல்மட்டும் போற்றப்பட்டது. அதுவரை தென்னுட்டில் படையெடுப்புகளும் இல்லை. மக்களை வீரரசத்துக்குள் புகுத்தி வைக்கும் புலவர்கள் எப்படித் தோன்றுவார்கள்? சோழ சாம்ராஜ்யத்திற்குப் பிறகு அலாவுதீன் படையெடுப்பினுல் தமிழர்களின் தன்னுரிமை போய் அடிமைத்தனம் மேம்பட்டு விட்டது. அப்போது உற்சாகம் எப்படி ஏற்படும்? நாடகக் கலை அடியோடு போய்விட்டது. நாட்டுப் புறத்துத் தெருக்கூத்தும், பாவையாட்டமும் தவிர நாடக வளர்ச்சி நாட்டில் ஏற்படவில்லை. இது தான் முத்தமிழில் மூன்ருவது தமிழ் மறைந்ததற்குக் காரணம் எனலாம்.

### புதிய சகாப்தம்

இப்படியிருக்க, ஆங்கிலேயர்கள் வந்த பிறகு ஆங்கில மொழியைக் கற்ற சில அறிஞர்கள் அதிலுள்ள நாடகங்களைப் படித்துவிட்டுத் தமிழிலும் அவ்வாருன நாடகங்களை இயற்றுவதற்கு அடிகோலினர்கள். அப்படிப்பட்ட நாடகங்கள் தான் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம், சூரிய நாராயண சாஸ்திரியாரின் ரூபாவதி, கலாவதி, சலசலோசன செட்டியாரின் சாசாங்கி முதலியன. அப்போது கருத்துக்கள் மிளிர்ந்தனவும் எண்ணிக்கையில் உயர்ந்தனவுமான நாடகங்கள் திருப்பம்மல் சம்பந்த முதலியார் அவர்களுடையவையே. அவர்களாலேயே தமிழில் நாடகங்கள் உண்டு என்ற ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

☆



ஜீலா-கோலா
வேட்கை தணிக்க
தாகம் இனிக்க
வின்ஸெண்ட்டின் நவீன பானம்
Zoola-Cola
VC-102-a
ஜில்லிட்டு அருந்துங்கள்

# தமிழ் நாடக மறுமலர்ச்சி: சில சிந்தனைகள்

பி. ஸ்ரீ. ஆச்சார்யா

தீ, தீ, தீ, திடீர் திடீரென்று அங்கும் இங்குமாகக் குடிசைகள் தீ அரக்கனுக்கு இரையாகின்றன. ஓடுகிறார்கள், சாடுகிறார்கள் வயிற்றிலும் நெருப்பைக் கட்டிக் கொண்டு. உதவிக்கு ஓடுகின்றார்கள் ஈர நெஞ்சுள்ளவர்கள்; பிறரையும் உதவிக்கு அழைக்கிறார்கள். உரையாடுகிறார்கள்; வதந்திகளைப் பரப்புகிறார்கள், அதற்குள்ளே செய்திகள் பறக்கின்றன. தீயணைக்கும் யந்திரங்கள் கணகண வென்று விரைகின்றன. போலீஸ் வீரர்களும் மடமடவென்று வருகிறார்கள். மிதி வண்டிகள், மோட்டார் ரதங்கள், வேடிக்கை பார்க்கும் காலாட்படைத் திரள்—எல்லாம் வந்து குவிகின்றன. ஒரே ஆர்ப்பாட்டம், தீயுடன் போராட்டம். அழுகைகளுக்கும் அலறல்களுக்கும் இடையே, தீ அவிந்து போகிறது. அங்கமும் களமுமாய்த் தொடுக்கப் படாத ஒரு சோக நாடகம். இப்படி எத்தனையோ நாடகங்கள் துன்பியலும் இன்பியலுமாக, நாடு நகரங்களிலே.

அக உலகிலேயே நடைபெறும் நாடகங்களும் உண்டு. உடலுக்குள்ளேயே ஒரு நாடகம் காண்கிறார் விஞ்ஞானி. காலில் சிறுகாயம் தான்; இது உடலுக்கு ஒரு முக்கிய நிகழ்ச்சி, நகரத்திலே ஒரு மூலையில் பற்றிய தீ அந்த நகரம் முழுவதற்கும் பெரியதொரு பரபரப்பான நிகழ்ச்சியாவது போலே. காயம் பட்டதும், உடம்பின் சில அமைப்புகள் தாமாகவே உதவிப்பணியைத் தொடங்குகின்றன. உடம்பின் சக்தி·அமைப்பில்...ஒரு தீவிர மாறுதல் ஏற்படுகிறது. காயமுற்ற பகுதியின் சீரமைப்பிற்காகச் சத்துப் பொருள்களும் ஜீவ அணுக்களும் இரத்தத்துடன் விரைந்து வருகின்றன. இதற்காகச் செய்திகள் மூளைக்கும், மூளையிலிருந்து உடம்பின் வேறு பகுதிகளுக்கும் தந்தி போல் செல்லுகின்றன. காயமுற்ற பகுதியிலிருந்து மிகவும் விலகியிருக்கும் உறுப்பில் கூடக் காயத்தைக் குணப்படுத்துவதற்கான பொருள்கள் தயாராகி விரைகின்றன. ஒரு சிறு காயம் உடம்பு முழுவதையும் பாதிக்கிறதை 'உயிரியல்' ஆராய்ச்சியாளர் ஒரு நாடகம் பார்ப்பது போல் பார்த்திருக்கிறார்கள்.

உலகமே ஒரு நாடகசாலை என்கிறார் **ஷேக்ஸ்பியர்.** இந்த உண்மையை நம் முன்னோரும் உணர்ந்திருந்தார்கள் எனலாம். தொல்காப்பியனாரின் **மெய்ப்பாட்டியல்,** பண்டைத் தமிழரின் நடிப்புத் திறனுக்கும் நாடகப்பழக்கத்திற்கும் சான்று தருகிறது. இதனால், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே நாடகத் தமிழ் விளைந்து வளர்ந்திருக்கக்கூடும் என்று ஊகிப்பவரும் உண்டு. இயற்கையோடு இசைந்து வாழ்க்கை நடத்திய தமிழர்கள் நாடகக் கலையை வளர்க்க முயன்றார்கள் எனக் கருதுவதில் தவறில்லை. ஆனால், முத்தமிழில் ஒன்றாகக் கூறப்படும் நாடகம் அல்லது கூத்து நாடகமன்று; நாட்டியம் தான். நாடகத் தமிழின் இலக்கிய இலக்கணங்கள் மறைந்து விட்டதால், அக்காலத்து நாடக வளர்ச்சி குறித்துத் திட்டமாக ஒன்றும் சொல்வதற்கில்லை.

சிலப்பதிகாரத்தை முத்தமிழ்க் காப்பியம் என்றும், நாடகக் காப்பியம் என்றும் கூறுகிறோம். கம்பராமாயணத்தில் பல கட்டங்கள் அபூர்வ நாடகத் திறனுடன் அமைக்கப் பெற்றிருப்பதையும் காண்கிறோம். பிற்காலத்தில் தெருக்கூத்துகளாகத் தோன்றி வளர்ந்த குறவஞ்சி நாடகம், பள்ளு நாடகம் போன்ற நாடோடி நாடகங்களும் தமிழர்கள் நாடகப் பிரியர் என்பதை மெய்ப்பிக்கின்றன. எனினும், வடமொழியில் நாடக இலக்கியங்கள் காணப்படுவது போல், தமிழில் ஏன் காணப்படவில்லை? ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த மகேந்திரவர்ம பல்லவன் இயற்றிய 'குடியன் கூத்து' (மத்த விலாஸப் பிரகசனம்) என்ற நகைச் சுவை நாடகமும் வடமொழியில் தான் எழுதப் பெற்றிருக்கிறது. ஏன்? காரணங்களை இங்கே ஆராய விரும்பவில்லை.

வடமொழியில் நாடகங்களை மொழி பெயர்க்கும் முயற்சியும் நம் முன்னோரால் மேற்கொள்ளப்படவில்லை. காளிதாசனின் புகழ் பெற்ற சாகுந்தல நாடகத்திற்கே அண்மையில் தான் தமிழாக்கங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் மறைமலையடிகளின் மொழி பெயர்ப்பே சாலச் சிறந்தது என்பது என் கருத்து. பண்டிதமணி கதிரேசச் செட்டியார் வடமொழியிலுள்ள மிருச்சகடிகம் என்ற பெரிய நாடகம் ஒன்றை 'மண்ணியல் சிறு தேர்' என்ற பெயருடன் நன்றாக மொழிபெயர்த்துத் தற்காலத் தமிழுக்கு ஓர் அணியாக அளித்திருக்கிறார்,

சில நூற்றாண்டுகளாகத் தமிழ்ச் சங்கீத நாடகங்கள் பெரும்பாலும் புராண இதிகாசங்களை ஒட்டித் தோன்றித் திகழ்ந்தன. இரவெல்லாம் ஆடக் கூடிய அரிச்சந்திர விலாஸம், பிரகலாத நாடகம், கீசகன் வதை முதலியன. சிறு ஓரங்க நாடகங்கள் தோன்றி வளர்வதற்கு இடம் கொடுக்கவில்லை. இந்த நீண்ட நாடகங்களில் அங்கம் என்ற பிரிவே கிடையாது. களம் மாறுவதைக் கட்டியக்காரன் கூற்றிலிருந்து தான் தெரிந்து கொள்ளவேண்டும். குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகங்களோ ஓரளவு ஓரங்க நாடகங்கள் போல் நடத்தப் பட்டன.

உண்மையில் அரை நூற்றாண்டுக்கு உட்பட்டது தான் தமிழில் ஓரங்க நாடக வளர்ச்சி. அதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் வடமொழி நாடகத்தை ஒட்டி அங்கங்களாகப் பிரித்து எழுதிய தமிழ் நாடகங்களும் தோன்றின. சுமார் மூன்று மணி நேரம் நடைபெறக் கூடியவை இவை. நாளடைவில் ஓரங்க நாடகங்களுக்கே தேவை ஏற்பட்டது. பள்ளிகளின் ஆண்டு விழாக்களிலும் ரேடியோவிலும் நடிப்பதற்காக இவை எழுதப்பட்டன. பெரும்பாலும் இவை சமூக சித்திரங்கள், தமிழக மறுமலர்ச்சிக்கும் இன்றைய தமிழின் புது மலர்ச்சிக்கும் இவற்றைச் சான்றாகக் காட்டுகிறார்கள். இவை இன்று பெருகி வருகின்றன. பொதுவாக, சினிமா முதலிய கண்கவர் காட்சிகளால் நாடகக் கலையின் வளர்ச்சி ஓரளவு தடைப் பட்டிருக்கிறது எனலாம்.

இன்றைய நாடக மறுமலர்ச்சிக்கு ஆங்கிலத்தின் கூட்டுறவும்—சிறப்பாக ஷேக்ஸ்பியர், பெர்னார்ட்ஷா போன்ற நாடக ஆசிரியர்களின் 'முன் மாதிரி'யும்—இன்றியமையாதன. ஷேக்ஸ்பியர்—பாணியில் இயற்றப் பெற்றிருக்கும் மனோன்மணீயம் நடிப்பதற்காக எழுதப் படாமல் படிப்பதற்காக எழுதப் பெற்றிருக்கும் நாடக இலக்கியமாகும். நடிப்பதற்கென்றே சில ஷேக்ஸ்பியர் நாடகங்களையும் நாடகப் பகுதிகளையும் தமிழாக்கம் செய்தவர்களுமுண்டு: 'தழுவல்'களாக அமைத்துக் கொண்டவர்களும் உண்டு. ஆனால் இவை பெரும்பாலும் தமிழறிஞர் போற்றும் தரம் உடையன அல்ல. 'ஆறடி நிலம்' என்ற டால்ஸ்டாயின் கதையைத் தழுவித் தமிழர் பண்பிற்கும் சுவைக்கும் இசைந்தவாறு பின்னணி அமைத்து நாடகம் ஒன்று நடிப்பதற்கென்றே அண்மையில் எழுதப் பெற்றிருக்கிறது. இத்தகைய முயற்சிகள் இலக்கியத் தரம் குன்றாது அமைவதானால் வரவேற்கத் தக்கவைதாம்.

நாடகத்தில் புதிய வழிகள் காணப்படவேண்டும்; நாடகச் சீரமைப்பு முறைகளையும் நாடகத்துக்குரிய பொருளையும் நன்கு சோதித்துப் பார்த்துப் புதுப் புது நாடகங்கள் இயற்றப்பட வேண்டும். நாடக மேடையில் செலவாகும் நேரமும் நம் சிந்தனையையும் நம்பிக்கையையும் கற்பனையையும் தூண்டுவதாக அமைய வேண்டும். இப்படி 3 மணி நேரம் கழித்த நினைவே ஒரு நல்லின்ப உணர்ச்சியைத் தரவேண்டும்.

'சிந்திப்பார்க்கே களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவு பல காட்டல் கவிதையின் தொழில்' என்று பாரதியார் கூறுகிறாரே, இது நாடகத்திற்கும் பொருந்துவது தான். இந்த ஆனந்தப் பொற்கனவுகள் நம் மக்களுடைய இன்ப வாழ்விற்கும் அறிவு வளர்ச்சிக்கும் எதிர்கால மேம்பாட்டிற்கும் ஒருங்கே துணை புரிவன ஆகும்.

☆


**எமது விசேஷ தயாரிப்புகள்**

காஞ்சிபுரம் பட்டு சரிகை

**சேலைகள்**

**பாவாடைகள்**

**ரவிக்கை தினுசுகள்**

**காஞ்சிபுரம் பட்டு கைத்தறி நெசவாளர்**
**கூட்டுறவு மார்கடிங் சொசைடி லிமிடெட் G. 1626**

320, காந்தி ரோடு, :: காஞ்சிபுரம்.

V. சிங்கார முதலியார்
தலைவர்.

# நாடகம் - ஜீவன் ததும்பும் ஓர் இணைப்பு!

"லோவண்ண"

இந்த உலகத்தை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவும், ஒவ்வொருவருக்குமுள்ள ஒற்றுமை—வேற்றுமைகளையும், வாழ்வு முறையின் மிக ஸளிதமான அம்சங்களையும், பல்வேறுபட்ட சிந்தனை ஓட்டங்களையும், பல வகையான கருத்து மலர்ச்சிகளையும் நன்கு புரிந்து கொள்ளவும் நாடகமே ஏற்றதொரு சாதனமாக விளங்குகிறது. முக்கியமாக, வாழும் மக்களுக்கிடையே ஜீவன் ததும்பும் ஓர் இணைப்பாகவும் திகழ்கிறது நாடகம். மக்களுக்காகவே, மக்களின் மேன்மைக்காகவே கலை என்பதை நாடகம் நிரூபிக்கின்றது.

பல கலைகளின் ஐக்கியத்தால் வடிவம் பெறும் நாடகம், கலைஞர்களையும் பொது மக்களையும் ஒன்று சேர்க்கின்றது. அந்த வகையில் அதை ஜனநாயகக் கலை என்று சொல்லுவது தவருகாது. உண்மையில் நாடகம் ஒரு படைப்புக் கலை; வெளிப்படுத்துவதே அதன் உயிர். கலை வடிவம் கெடாமல் உண்மையை வெளிப்படுத்தும் போது நாடகத்தில் பண்பும் அழகும் உயர்வடைகின்றன. ஒளி இருளை நீக்குவது போல நாடகம் மக்களுக்கு மத்தியில் ஒளி ஏற்றி வழிகாட்டுகிறது.

## சகாயக் கலை

சுகம் துக்கம், வாதனை வேதனை, மகிழ்ச்சி இகழ்ச்சி, அறிவாற்றல், அச்சம், பயம் முதலிய வைகளை வெளிப்படுத்த, காரண காரிய ஆதாரமுடன் உதவும் ஓர் அரிய கலா சாதனம் நாடகம். சாதாரணமாக, மனிதன் தன் நிறைவு பெருமலிருப்பதால் மற்றவர்களின் உதவியை நாடி தன் ஆத்ம விலாசத்தை அறிய வேண்டியிருக்கிறது. உயிர்த் தொடர்பு போல நாடகம் இதற்கு உதவுகிறது.

நாடகத்தை கூட்டுறவான ஒரு கலை என்று அறிஞர்கள் குறிப்பிடுகிருர்கள். இயலும் இசையும் அதில் உறவாடப் பார்க்கிருேம். மேலும் நாடகாசிரியர், நடிகர், நாடகத் தயாரிப்பாளர்கள், உத்தியாளர்கள் ஆகிய எல்லோரும் கூட்டுறவான முறையில் அக் கலை முழுமை பெற்று ஒளி விட உதவுகிருர்கள் என்பது தெளிவு.

நாடகத்தில் தெளிவும், எளிமையும் அங்கமாக இருக்க வேண்டும். அதில் பின்னி வரும் உணர்ச்சிப் பெருக்கிலும். கருத்திலும் ஓர் ஒற்றுமையும் விளங்க வேண்டும். எல்லாவற்றுக்கு மேலாக, நாடகம் வெற்றிகரமாக அமைய, ஒன்றுக்கொன்று மாறுபட்ட மோதல் மிக முக்கியம். கருத்து மோதல், தனி நபர் (பாத்திரம்) மோதல், தனி நபர் தன் மனத்துடன் மோதல், தான் வாழும் உலகத்துடன் மோதல், பல வகையான உணர்ச்சி மோதல்—இத்தியாதி மோதல்கள் இல்லாவிட்டால் நாடகம் ஜீவனற்றதாய் விடும். நடிப்பு இல்லாமல் நாடகமில்லை. நடிப்பு, நாடகத்தை ஓட்ட வேண்டுமே தவிர தடையாக நிற்கலாகாது. இத்தகைய நாடகக் கலை மக்களுக்குப் பல வகையில் உதவக் கூடியது. அரியதொரு பொழுது போக்காக அமைவதுடன் அறிவு வளரவும், சீர்திருத்தவும் உதவும் சகாயக் கலையாகவும் திகழ்கிறது நாடகம்.

## நடனமே நாடகம்!

நமது ஆன்ருேர் கலைகளை ஆத்ம சாதனங்களாகவே வளர்த்தனர். கடவுளுடனும், சமயத்துடனும் கலைகளைச் சேர்த்து, அவற்றின் தூய்மையும், தெய்வீகமும் கெடாமலிருக்க வழி வகுத்தார்கள். அத்தகைய தெய்வீகக் கலைகளில் ஒன்றுதான் நடனம். ஜனங்கள் சௌக்கியமாக இல்லறத்தை நடத்திக் கொண்டே மோட்சத்தை அடையலாம் என்பதையே நமது இசை, நடனம் முதலிய மதுர கலைகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆதியில் நடனம் வேறு, நாடகம் வேறு என்று பிரித்துப் பேசப்படவில்லை. நடனம் அல்லது நாட்டியம் என்ருலே, நாடகம் என்றுதான் பொருள் கூறப்பட்டு வந்திருக்கிறது. மனேபாவம் (அபிநயம்), ஆடல், பாடல் ஆகிய மூன்றும் நாடகத்தின் அங்கங்களாயின.

இன்று காலம், நாடகம் வேறு, நாட்டியம் வேறு என்று பிரித்துக் காட்டத் தொடங்கி விட்டது. நாடகம் ஒரு தனித்துவத்தையும் வடிவத்தையும் பெற்று வளரத் தொடங்கியிருக்கிறது. அவசியத்தின் காரணமாக இன்று நடனம் கலந்த நாடகத்தை நாட்டிய நாடகம் என்றும், இசை மாத்திரம் இடம் பெறும் நாடகத்தை இசை நாடகம் என்றும் பாகுபடுத்திக் கூறி வருகிருேம்.

## சினிமா நாடகங்கள்!

தமிழ் வளர்கிறது, வளரும் தமிழிலே சிறுகதை, நெடுங்கதை முதலிய இலக்கியப் படைப்

புகள் வளர்கின்றன; ஐயமில்லே. ஆனல், வளரும் தமிழிலே நாடகங்கள் வளர்ந்திருக்கின்றனவா? மேல் நாட்டின் ஷேக்ஸ்பியர், இப்ஸன், ஷா, இன்னும் வேறு பல சிறந்த நாடகாசிரியர்களின் படைப்புகளுக்குச் சமமாக எடுத்துக் காட்டக் கூடிய நாடகங்களை நாம் படைத்திருக்கிருேமா? மறுமொழி நீங்கள் அறிந்ததே.

முத்தமிழில் ஒன்று நாடகத் தமிழ் என்று பெருமை அடைந்தோம்; அடைகின்ருேம். மிக வும் தொன்மை காலத்திலிருந்தே பல வகையான கூத்துக்களை உண்டாக்கி யிருக்கிருேம். கூத்து நூல், இந்திர காளியம், முறுவல், சயந்தம், செயிற்றியம், பஞ்ச பாரதீயம், பரதம், பரத சேனுதிபதியம், குண நூல், மதிவாணம், சுத்தா னந்த பிரகாசம் முதலிய பல கூத்து இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன என்பதையும், அவற்றில் பல அழிந்துவிட்டன வென்பதை யும் அறிகிருேம். வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல் கூத்து, பொதுவியல் கூத்து, வரிச்சாந்திக் கூத்து, சாந்திக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, தேசிக் கூத்து, மார்க்கக் கூத்து, கிராமங்களில் நடிக்கப்படும் பல வகையான தெருக்கூத்து முதலியவை இருந்திருக்கின்றன என்பதையும் ஆராய்ச்சியின் மூலம் அறிகி ருேம். இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டி நாம் இன்னும் பெருமைப்பட்டுக் கொண்டிருப் பதில் பயனில்லே. காலத்துக்கேற்ப, பண்பும் பயனும் பெற்று அழகு தரும் நாடக இலக்கியங்கள் இன்னும் தமிழில் வளரவில்லே என்ற உண்மையை முதலில் உணர வேண்டும்.

நல்ல நாடக இலக்கியங்கள் ஏன் நம் மொழியில் வளரவில்லே? அதன் காரணமென்ன? நம்முடைய மொழி வளர்ச்சியையும், இலக்கியங் களையும் வரலாற்று ரீதியாக ஆராய்ச்சி செய்கிறவர் கள் இக்காரணத்தைக் கண்டுபிடித்துச் சொன் ஞல் பெரிதும் உதவியாக இருக்கும். ஒரு வேளை, நம்முடைய இலக்கியங்கள் எல்லாம் செய்யுள் நடையிலேயே வடிவாக்கப்பட்டு வந்ததினல் காலத்துக்கு அழகு செய்யும் முறையில் சமூக நோக்கத்தை உள்ளடக்கமாகக் கொண்டு பழகு தமிழ் நடையில் நாடக இலக்கியம் உருவாகா மல் போயிருக்கலா மென்றும் ஊகிக்க வேண்டி யிருக்கிறது. பேசுவது போலவே தமிழில் எழுதும் வழக்கம் முன்பு பின்பற்றப்படவில்லே என்பதை யும் நாம் மறக்கலாகாது. பேச்சு நடை (அதுவும் பாத்திரத்திற்கு உகந்த முறையில்) நாடகத்துக்கு அவசியம். அதைப் பயன்படுத்த முடியாத நிலேமையில் வசன நடையில் நாடகங்கள் பிறக் காமலே போய்விட்டன என்று கருதவும் இடமிருக் கிறது. அதெல்லாம் கடந்த காலம். அதைப் பற்றி ஆராயலாம்; ஆனல் கவலேப்பட வேண்டிய தில்லே. அதற்குப் பதிலாக நல்ல பழகு தமிழ் நடையில் புதிய நாடக இலக்கியங்களை நாம் படைப்பதில் கவனம் செலுத்தினல் பயனுண்டு.

வசன நடையில் சில நல்ல நாடக நூல்களும் வெளிவரவில்லே. ஆனல் அவை போதா, படிப்பதற் குரிய நாடக நூல்களும் நடிப்பதற்குரிய நாடக நூல்களும், படிக்கவும் நடிக்கவும் உதவும் நாடக நூல்களும் தமிழிலே நிறைய வெளி வர வேண்டும், அப்பொழுது தான் நாடக இலக்கியத் துறையில் காணப்படும் சூன்யம் மறையும்.

துரதிர்ஷ்டவசமாக இப்பொழுது வெளிவரும் சில நாடக நூல்கள் நாடகங்களாக இல்லாமல் சினிமா நாடகங்களாக விளங்குகின்றன! அரங்கம் அல்லது மேடையை மறந்து திரையை முன்னே நிறுத்திக்கொண்டு எழுதப்படும் சினிமா நாடகங்களி ஞல் நாடகக் கலேயோ, இலக்கியமோ வளராது. நாடகம் அதன் பண்பும் உத்தியும் பரிமளிக்க வளர வேண்டும். சினிமா, அதன் உத்தியும் பண்பும் சிறக்க வளர வேண்டும். இரண்டையும் போட்டுக் குழப்புவது உசிதமல்ல. இத்தகைய 'மாயா—நாடக'ங்களினல் நாடக இலக்கியம் வளருமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இந்தக் காலத்தில் நாடக இலக்கியம் வளர வேண்டுமானல் நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறபடி நாடக நூல்கள் பழகு தமிழில் எழுதப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாடகங்கள் உயிர்க் கும். யதார்த்த சூழ் நிலேயையும் பெறும். காலத்துக்கு அழகு செய்வதுடன் அறிவு வழங்குவ தாகவும் அமையும். இதைப் பொருட்படுத்தாமல் புத்தகத்தில் படிப்பது போல பேசுவதோ அல்லது அடுக்குச் சொற்களை வசனிப்பதோ முற்றிலும் இயற்கைக்கு மாருனதாகி விடும். வரலாற்று நாடகத்திலும், புராண, இதிகாச நாடகங்களிலும் இம்மாதிரி வசனம் இடம் பெறுவதை ஏற்கலாம். ஆனல், சமூக நாடகத்தில் இதைப் பொறுக்கவே முடியாது! சத்தம் போடும் எதுகை போனேத் தமிழை, சமூக நாடகத்தில் கேட்டுக்கொண்டிருக்க ரொம்ப பொறுமை வேண்டும்!

## வளர்ந்த கதை

தொன்மையில் நாடகத் தமிழ் கூத்துக்கள் மூலம் வளர்ந்து வந்தது. 17-ம் நூற்ருண்டில் பள்ளு, குறவஞ்சி முதலிய இசை நாடகங்கள் மூலம் தமிழ் வளர்ந்தது. 18-ம் நூற்ருண்டில் அருணுசலக் கவிராயர் ராம நாடகத்தை இயற்றினர். பின்பு புராண, இதிகாசக் கதைகள் பாடல் நிறைந்த நாடகங்களாக உருப்பெற்றன. நந்தனர் நாடகம் மிகவும் பிரபலமாயிற்று. 19-ம் நூற்ருண் டிலே மேல் நாட்டு நாடக பாணி தமிழகத்திற்கு வந்தது. மேல்நாட்டு நாடக இயலில் தமிழிலும் நாடகங்கள் தோன்றின. சுந்தரம் பிள்ளேயின் மனேன்மணியம் குறிப்பிடத் தக்கது. இத்துறை யில் அறிஞர் சூரிய நாராயண சாஸ்திரியும் முத லாவதாகப் பணி செய்திருக்கிருர் என்பதை மறப்பதற்கில்லே.

இதற்கிடையில், பார்ஸி கம்பெனிகள் தமிழகத் துக்கு வந்து புது நாடகங்களைக் காட்சி ஜோடனே

யுடன் நடித்துக் காட்டின. அந்த உத்தியைப் பின்பற்றி, தமிழ் நாடக மேடையும் வளரத்தொடங்கியது, ஆனல், அக்காலத்தில் பாட்டே நாடகத்தில் முக்கியமாக இருந்தது. கல்கி—கிருஷ்ண மூர்த்தி, பாட்டுக்கள் நிறைந்த நாடகத்தைப் 'பாடகம்' என்றே நகைச்சுவையுடன் குறிப்பிட்டு ஒரு சமயம் எழுதியது என் நினைவுக்கு வருகின்றது.

கொஞ்ச காலத்துக்கு முன் வரை தமிழ் நாடக மேடையில் சங்கீத நாடகங்கள்தான் பிரதானமாக விளங்கின. 'ஸ்பெஷல்' நாடகங்களில் நடிகர் மேடையில் பிரவேசிக்கும்போதே நாடகத்திற்கோ, பாத்திரத்திற்கோ சம்பந்தமில்லாத ஒரு பாட்டைப் பாடிக்கொண்டே வருவார். ஆர்மோனிய சக்ரவர்த்தியின் முன் நின்று கரவேக, சுரவேக ஆற்றலைக்காட்டி விட்டுத்தான் பேசத் தொடங்குவார்! இந்த நிலை சிறிது காலம், நீடித்தது. பிறகு பேச்சுக்கு முக்கியத்துவம் அளித்து நாடகங்களை நடிக்கவும் தொடங்கினர். ஆனல், பாட்டுக்களை அடியோடு புறக்கணிக்கவில்லை. பெரிய நடிகர்கள் ஸ்பெஷல் நாடகங்கள் மூலம் நாடகக் கலையின் பண்பைப் புறக்கணித்து நடித்த காலத்தில் 'பாய்ஸ் கம்பெனி'கள் தோன்றி நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்தன; ஓர் ஒழுங்கை ஏற்படுத்தின. நாடகத் தத்துவத்தை உணர்ந்து பாட்டு, பேச்சு, நடிப்பு முதலிய அம்சங்களை ஒழுங்குபடுத்தி மக்களுக்குப் பயன்படும் முறையில் நாடகக் கலையையும், மேடையையும் பாதுகாத்தவர் சங்கரதாஸ் சுவாமிகள் என்பதில் ஐயமில்லை. அவர் பெரும் நாடகப் புலவர். பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்த பல சிறுவர்களை நன்கு பயிற்றுவித்த பெருமை அவருக்குரியதே. இன்று டி. கே. எஸ். சகோதரர்கள் பேரும் புகழும் பெற்ற ஆற்றல் மிக்க நடிப்புக் கலைஞர்களாக விளங்குகிருர்கள் என்ருல், அன்று அவர்கள் சுவாமிகளிடம் பெற்ற பயிற்சியே காரணமாகும்.

போதிய அளவு முன்னேற்றம் இல்லாவிட்டாலும் நாடகக் கலையைக் காலத்துக்கு உகந்த முறையில் வளர அறிஞர்கள் பலர் பணி புரிந்திருக்கிருர்கள். கிருஷ்ணசாமி பாவலர், ப. சம்பந்த முதலியார், கந்தசாமி முதலியார் முதலியோர் தமிழ் நாடக மேடையில், புதிய நாடகங்களை இயற்றித் தந்து நடிக்கவும் வைத்திருக்கிருர்கள். அவர்களுடைய கலைப்பணியை நாம் மறப்பதற்கில்லை. இன்றும் தமிழகத்திலும், ஈழத்திலும் புதிய நாடகங்கள் மேடை ஏறி வருகின்றன. இம்முயற்சி வரவேற்கத் தக்கதே.

## ஈழத்தில்

ஈழத்தில் தமிழ் நாடகம் தமிழகத்தின் செல்வாக்கை ஆதியிலிருந்தே பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. சிங்கள மக்களின் பழங் கூத்துக்களும் தமிழ் நாடகத்தின் செல்வாக்கினல் ஆட்கொள்ளப்பட்டவை என்பதை ஆராய்ச்சியின் மூலம் நன்கு அறியலாம். கிராமங்களில் சிங்கள மக்களுக்கிடையில் சமயத்தையும் சடங்குகளையும் தொடர்பாகக் கொண்டே பல வகையான கூத்துக்கள் வளர்ந்திருக்கின்றன. தமிழகத்தைப் போலவே ஈழத்திலும் தமிழ் சிங்கள மக்களிடையே பாட்டுக்கள் நிறைந்த நாடகங்களே அதிகமாக நடிக்கப்பட்டு வந்தன. ராஜா, ராணிக் கதை, புராண, இதிகாசக் கதைகள் நாடகத்திற்கு உதவின. தமிழகத்தில் பார்ஸி கம்பெனிகள் வந்த மாதிரி ஈழத்திலும் அவை சென்று நாடகத்தில் புது மாறுதலுக்கு வழி காட்டியிருக்கின்றன. மேல் நாட்டு கலாசார உறவால் ஈழத்து நாடகமும் புது உருவம் பெறத் தொடங்கின. சமூக நாடகங்கள் தலை தூக்கின. சினிமா தலை தூக்கும் வரையில் சிங்கள நாடகங்கள் அடிக்கடி நடிக்கப்பட்டு வந்தன. நவீன காலத்துக்கு உகந்த கருத்துக்களுடன் ஹாஸ்யமும் இடம் பெறத்தக்க முறையில் நாடகங்களை நடித்துக் காட்டிய பெருமை பிரபல நகைச்சுவை நடிகர் எடிஜெயமன்னவுக் குரியதாகும். சமீப காலம் வரை அவர் தோன்றும் நாடகங்கள் சிங்கள மக்களுக்கு மத்தியில் மிகவும் பிரபலமாக விளங்கின. சிங்களப் படங்கள் அதிகமாக வெளி வரத் தொடங்கியதும் அந்நாடகங்களுக்கு இருந்த 'மவுசு' குறைந்துவிட்டது.

இப்பொழுதெல்லாம் நல்ல—புது மாதிரியான தமிழ், சிங்கள நாடகங்களை பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் நடித்துக் காட்டி வருகிருர்கள். இது வரவேற்கத் தக்கதே. சிங்கள அறிஞர்களில் சிலர் நாடகத் துறையில் புதிய சோதனைகளையும் மேற்கொண்டு, அக்கலையை வளர்க்க முன் வந்திருக்கிருர்கள். தமிழர்களிடையேயும் அங்குமிங்குமாக நாடகச் சபைகளை அமைத்துக் கொண்டு சில கலா உற்சாகிகள் புது நாடகங்களை மேடை ஏற்ருமல் இல்லை. சிங்களவர் இப்பொழுதெல்லாம் நாடகங்களுக்குக் காட்டும் ஆதரவு பெருகி வருகின்றது. ஆனல், தமிழர்களோ நாடகக் கலை வளர போதிய ஆதரவு காட்டுகிருர்கள் என்று சொல்லுவதற்கில்லை. தமிழ் நாடகக் கலையை வளர்த்த நல்லறிஞர்கள் பலர் ஈழ நாட்டில் இருந்தனர்; இப்பொழுதும் இருக்கின்றனர். படித்த இளைஞர்களில் பலர் நாடகக் கலையை வளர்க்கத் துடிப்புடன் காணப்படுகின்றனர். ஆனல், அவர்களுக்கெல்லாம் ஆதரவு கிடைத்தால்தான் தமிழ் நாடக மேடை ஈழத்தில் நன்கு வளர முடியும். இப்பொழுது மேடை ஏறி வரும் நாடகங்கள் எல்லாம் மிகவும் சிறந்தவை என்று சொல்லுவதற்கில்லை. ஆனல் அந்நாடகத் தயாரிப்பாளர்களின் உற்சாகத்தைப் பாழாக்காமல் புதிய நல்ல நாடகங்களை இயற்றி அரங்கேற்ற உதவ முன்வர வேண்டும்.

## எது தேவை ?

மேல்நாட்டில் நாடகக் கலை மெத்த வளர்ந்துள்ளது. புதிய புதிய முறையில் நாடக இலக்கியம் செழிப்பு அடைந்து வருகிறது. நாமோ அத்துறையில் அவர்களுடன் போட்டி போட முடியாத நிலையிலிருந்து வருகிருேம். நல்ல நாடகாசிரியர்களை நமது தமிழ்த்தாய் எதிர்பார்த்து நிற்கிருள். அவளுடைய

குறையை நீக்க தமிழ்ப் பேரறிஞர்களும், கலைஞர்களும் முயலவேண்டும்.

எவருமே தொன்மைப்புகழ் பேசி நாடகத்தமிழ் எங்கள் முத்தமிழில் ஒன்று என்று பெருமையுடன் கூறிக் காலத்தைப் போக்குவதில் பயனில்லை. இன்றைய வாழ்வைக் காட்டும் நாடகங்கள் நமக்குத் தேவை. சமூகத்தின் குறைபாடுகளைக் காட்டி நல்ல மேலான வாழ்வுக்கு வழி காட்டும் பண்பான நாடகங்கள் தமிழில் இயற்றப்பட வேண்டும். ஹாஸ்யத்தின் பெயரில் ஆபாசம் நுழையாமல் நாடகக் கலையைக் காப்பாற்ற வேண்டும்.

இப்பொழுதெல்லாம் நாடகக் கதைக்கு உகந்த முறையில் அரங்க நிர்மாண முறையிலும் காட்சி அமைப்பிலும் மிகவும் நுணுக்கமாக கவனம் செலுத்தி, தத்ரூபமாக இருக்கப் பாடுபடுகிறார்கள். இதில் ஓர் ஆபத்திருக்கிறதென்பதை பிரபல பிரிட்டிஷ் நடிகை சிபின் தோர்ன்டைக் என்பவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். 'யதார்த்தம் என்ற பெயரில் மேடையை மிகவும் தத்ரூபமாக அமைப்பதின் மூலம் சபையோர்களை நடிகர்களிடமிருந்து பிரித்து வேறு பக்கம் திருப்பிவிட உதவி விடுகிறார்கள். பார்ப்பவர்களின் மனோதர்மத்தைத் தூண்டி விடவும் வழியில்லாமல் செய்துவிடுகிறார்கள்' என்று அவர் கூறியிருப்பதை அலட்சியம் செய்வதற்கில்லை. மேலும் அவர் நாடகத்தில் 'மைக்' (ஒலிபெருக்கிக் கருவி) வைப்பதையும் எதிர்த்திருக்கிறார். 'இதனால் நடிகர்களின் உண்மைக் குரலைக் கேட்க முடிவதில்லை. மேலும் நடிகர்களுக்கும் பார்ப்பவர்களுக்கு மிடையே நேராக உள்ள உயிர்த்துடிப்பு நிறைந்த ஸ்பரிசத்தை 'மைக்' அறுத்து விடுகிறது' தென்கிறார் அந்த நடிகை. நல்ல நாடகானுபவமுள்ள அந்த நடிகை சொல்லியுள்ள கருத்தை நவீன சாதனங்களைப் பயன்படுத்தி நாடகத்தை, சினிமா நாடகமாக மாற்றுகிறவர்களும் தயாரிப்பாளர்களும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். ஒலிபெருக்கியைத் தவிர்க்க முடியாவிட்டால், கூடுமான வரையில் அது பார்ப்பவர் கண்ணில் படாமல் அமைப்பது அவசியமாகும்.

உண்மையான முன்னேற்றத்திற்கும், பண்பாட்டின் ஏற்றத்திற்கும் நாடகக் கலையின் வளர்ச்சியும் அவசியம். தொடக்கத்திலேயே கூறியுள்ளபடி அகில உலகத்தையும் அறிந்துகொள்ள ஜீவன் ததும்பும் ஓர் இணையற்ற இணைப்பாகவும் நாடகக் கலை விளங்குகிறதென்பதை மறக்க வேண்டாம். அக்கலையின் மூலம் உலக மக்களுடன் தொடர்பு கொண்டு, அன்பின் வழியாக அமைதி எங்கும் நிலவப் பாடுபடலாம். ஆகவே, பல வகையில் பயன் படும் இம்மேடைக் கலையை வளர்ப்போமாக.

'கலையென்று ஆரம்பித்து வெறும் வியாபாரத்தில் முடிந்து, அதில் மோசமும் துர் நடத்தையும் புகுந்துவிடுவது இந்த யுகத்தின் நிகழ்ச்சி முறை, அதற்கு இடங்கொடுக்கக் கூடாது.'

—ராஜாஜி


காஞ்சியில் திருவள்ளுவர்

கைவண்ணம் கலை வண்ணத்துடன் மிளிரும்
காஞ்சி பட்டாடைகளுக்கு தலைசிறந்த இடம்

**காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் லிட். நெ. G. 2054**

போன்: 222 தந்தி: திருகோ சில்க்

(தேரடி எதிரில்)

தமிழகத்தின் தலைமகன் மாண்புமிகு அறிஞர் அண்ணா
அவர்களால் திறந்து வைக்கப் பெற்ற எங்கள் விற்பனை நிலையத்திற்கு
ஒருமுறை வருகை தாருங்கள்.

தேவைக்கேற்ற பட்டு சேலை, பாவாடை, சோளி ரகங்கள்
தேவையுறும் நாளில் நெசவாளர் சேவா நிலைய
ஒப்புதலுடன் அளிப்பது எங்கள் சிறப்பு.

Grams : AMBIS CAFE
MADRAS-1

Phone : 21004
(5 Lines)

# AMBI'S CAFE

6, 7, 8 & 9, BROADWAY
MADRAS - 1

*Caterers, Restaurant,*
*Boarding & Lodging House,*
*Pickles Manufacturers.*

Our Best Wishes

for the successful
celebration of the
birth centenary
of late
SANKARADOSS SWAMIGAL

The Government Telegraph
Employees, Co-operative Bank Ltd.,
**22, Errabalu Chetty Street,**
**MADRAS - 1**

# தாய்ச்செல்வம்

## திருச்சி.வி.இராஜாராம்



*[சேரமான் தகடுரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை என்பவன் தகடூர் போரில் அதியமானை வென்று அவன் நாட்டைக் கைப் பற்றிய ஒரு குறுநில மன்னன். தமிழ்ப் பற்று மிக்கவன். அவன் காலத்து நிகழ்ந்த இலக்கியம் தழுவிய கற்பனை நாடகம் ]*

இடம் : சேரனின் கொலு மண்டபம்.

நேரம் : காலை.

உறுப்பினர்: சேரன், பொன் முடியார், அரிசில் கிழார், தாமரைக்கண்ணி, மற்றும் வாயிற் காவலன்.

*(சேரமான் கொலு வீற்றிருக்க வாயிற் காப் போன் விரைந்தோடி வருகிறான்.)*

வா. கா : வாழிய வேந்தே! வணக்கம். தங்களைக் காண...

சே : தயக்கம் என் ? புலவர் பெருமக்கள்தானே ? அழைத்து வரலாமே ?

வா. கா : மன்னிக்கவும். மன்னர் மன்னா! தங்களைக் காண விரும்பி வந்திருப்பது ஒரு பெண். முதுமையடைந்தவர்.

அரி : புலமையுடைவரோ ?

வா. கா : அவ்வாறு தோற்றமளிக்கவில்லை. தலைவிரி கோலமாகக் காட்சியளிக்கிறார்.

சே : (தனக்குள்) அறிந்துகொண்டேன். என்ன குறை கண்டோளோ? தெரியவில்லை. (காவலனிடம்) சரி! சென்று அழைத்து வா, அவரை.

*[காவலன் சென்று ஓர் அம்மையாரை அழைத்து வருகிறான்.]*

அரி : யாரம்மா நீங்கள் ? உங்கள் பெயர் ?

தா. க : தாமரைக்கண்ணி.

அரி : என்ன வேண்டும் ?

தா க : நீதி வேண்டும்.

அரி : தங்களுக்கு ஏற்பட்ட குறை ?

தா. க : தங்கள் அரண்மனைப் பாசறையில் வேலை பார்க்கும் கொல்லன் கிள்ளிவளவனின் உடன் பிறந்தவள் நான். நேற்றைய முன் தினம் ...

சே : (குறுக்கிட்டு) அன்னையே! தங்களின் குறையை நான் நன்கறிவேன். தங்கள் மகனுக்கு இந்த நீதிமன்றத்தில், உண்மைக்கு மாறாகச் சிறைத்தண்டனை கொடுக்கப் பெற்றது என்பது தங்கள் கூற்று. அப்படித்தானே ?

தா. க . தவறாகப் புரிந்துகொண்டீர்கள். மன்னவா !

அரி : தவது இல்லை, தாயே! குற்றம் செய்தவனைத் தண்டிப்பது, நீதியை நிலை நிறுத்துவதாகும். தங்கள் மகன் செய்த குற்றம் மன்னிக்க முடியாதது. அவன் தகடூரை யாளும் அதியமானுக்குத் இரகசியமாக உளவு கூறினான். இப்பெருங் குற்றத்திற்கு அவனை இப்போது தண்டிக்காமல் விட்டு விடுவோமேயானால், பின் நாட்டில் குற்றங்கள் மலிந்துவிடும். எனவே இந்த அவையில் தீர விசாரித்தும், தங்கள் கணவன், மற்றும் தங்கள் உடன்பிறந்தான் கொல்லன் ஆகியோரின் அரச நற்பணியினைப் பெரிதும் பாராட்டியும், தங்கள் மகனுக்குக் குறைந்த காலச் சிறைத் தண்டனையே கொடுக்கப்பெற்றிருக்கிறது. ஆயினும், தங்கள் குடும்பத்தின் நற்பெயரை ஒரு நொடியில் அவன் சீர்குலைத்து விட்டானே! என்றெண்ணும்பொழுதுதான் எங்களால் வருந்தாமல் இருக்க முடியவில்லை. என்ன செய்வது? அன்னையாகிய தாங்கள் அவனை இளமையிலேயே கண்காணிக்கத் தவறி விட்டீர்கள்.

தா. க : அமைச்சரே! போதும். மறுமுறை அவ்வாறு சொல்லாதீர். அவனைக் கண்காணிக்கத் தவறிய குற்றம், என்னைச் சார்ந்ததல்ல. பெற்ற மகனை நோய் நொடியின்றிக் காப்பாற்றி, வேளை தவறாமல் உணவு கொடுத்துப் போற்றி வளர்ப்பதுதான் ஒரு தாயின் தலையாய கடமை.

சே : நல்லது. அப்படியானால் அவனை, அவன் தந்தை நல்ல வழியில் நடத்தத் தவறிவிட்டார் என்றுதான் கூறவேண்டும்.

தா. க : அதனையும் என்னால் ஒப்ப முடியாது.

சே : (வியப்புற்று) காரணம் ?

தா. க : தான் பெற்ற மைந்தனை கல்வி, கேள்வி களால் சிறந்தவனுகச் செய்வதே அவருடைய கடமை. எனவே அவர், அவரது கடமையைச் சரிவரச் செய்துவிட்டார் என்பதே என் கருத்து.

சே : அம்மையே! தாங்களும் தங்கள் கணவனும் தங்கள் மகன் செய்த இப்பெருங் குற்றத்திற் குப் பொறுப்பாளி அல்ல என்ருல், அதற்கு யார் என்ன செய்ய முடியும் ? (புன்னகை தவழ) தங்களின் உடன்பிறந்தான் கொல்லன் நேர்மையிற் சிறந்தவன். அவனுவது தங்களது மகனை தன்வயப்படுத்தித் தன் தொழிலில் ஈடு பாடு உடையவனுகச் செய்திருந்தால், தங்கள் மகன் இக்குற்றத்தினைச் செய்திருக்கமாட்டான். எனவே, அவனைக் கவனியாது விட்ட குற்றத் தில் கொல்லனுக்கும் பங்குண்டு எனக் குறை கூறலாம்.

தா. க : (இடைமறித்து) இல்லை, மன்ன! இல்லை. ஒருபொழுதும் அவன் இதற்குக் காரணமாக மாட்டான். என் மகனுக்குத் தேவையான வேல் முதலிய போர்க்கருவிகளை மட்டும்தான் அவன் வடித்துக் கொடுக்க முடியும். அவன் எப்படி இவன் இழைத்த பிழைக்குப் பொறுப்பாளி யாவான் ? சற்று சிந்தியுங்கள்.

சே : (மேலும் வியந்து) தங்கள் மகன் குற்றம் புரிந்தான் என்று தாங்களே ஓரளவு ஒப்புக் கொள்ளுகிறீர்கள். ஆனல், அவனைத் தண்டித் தது 'குற்றம்' என்று கூறுகிறீர்கள். குற்ற வாளியை எவ்வாறு தண்டிக்காது விட முடியும் ?

தா. க : மன்னிக்கவும்; வேந்தர் பெருமானே! நான் இப்போது தங்களிடம் விளக்கம் பெற வந்ததன் நோக்கம், "என் மகனை ஏன் தண்டித் தீர்கள்?" என்று கேட்பதற்காக அல்ல. "அக் குற்றம் செய்யும் வாய்ப்பினை ஏன் அவனுக்குக் கொடுத்தீர்கள்" என்று கேட்டுப் போகவே வந்தேன். (அழுகிருள்.)

சே : (திடுக்கிட்டு) என்ன ?

தா. க : ஆம், மன்ன ! என் மகன் நல்ல நெறியிலி ருந்து தவறிக் குற்றம் புரிந்தமைக்கு தாங்கள் தான் பொறுப்பாளி. ஏன் ? குற்றவாளியும் தாங்கள்தாம்.

அரி : தாயே! தாங்கள் வரப்பு மீறிப் பேசியதாக, தங்கள்மீது குற்றம் சாட்டுகிறேன். யாரங்கே ? (கையொலி.)

சே : அமைச்சரே! அவர்களைப் பேச விடுங்கள்.

தா. க : பேசுவதற்காக நான் இங்கு வரவில்லை, மன்ன ! என் கணவர் பன்னெடுங் காலம் தங்கள் அரசவையில் நற்பணி புரிந்தவர். அவர் கடைசி கால விருப்பப்படியும், இந்நாட்டின் நலங் கருதி யும் என் செல்வனைத் தங்களிடம் ஒப்புவித் தேன். போர் முறைகளைத் திறம்படப் பயின்று வெற்றி பெறுவான். எனக்கு மங்காத புகழைத் தேடித் தருவான் என்று எண்ணினேன். ஏமாற் றப்பட்டேன். அவனுக்கு நம் நாட்டின் மேல் பற்றுதல் ஏற்படவில்லை. அதனைக் கற்றுக் கொடுக்கத் தாங்கள்தாம் தவறி விட்டீர்கள். தாங்கள், தங்களுடைய கடமையைச் சரி வர செய்திருந்தால் அவன் தவறிழைத்திருக்க மாட்டான். இனி நான் என்ன செய்வேன் ? என் மகன் ஒரு குற்றவாளி. நான் அதை மறுக்க வில்லை. ஆனல் ஒருவன் ஒரு வீடு கட்டினல், அதற்கு வாயிற்கதவும், ஆலயம் கட்டினல் அதற்கு ஒரு சுற்றுச் சுவரும், அரண்மனை கட்டி னல் அகழியுடன் கூடிய மதிற்சுவரும் அமைப் பது, அவற்றின் பாதுகாப்பிற்காகவே. எனவே, ஒரு அரசன் தன்னையும் தன் நாட்டையும் பாது காத்துக் கொள்ள விரும்பினல் தான்மட்டும் நல்ல நெறியுடன் வாழ்ந்தால் சிறப்படைய முடியாது. தன் குடிமக்களையும் அத்துடன்கூட வாயிற்கத வாகவும், சுற்றுச் சுவராகவும், மதிற்சுவராகவும் ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். அவர்களுக்கு நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஏற்படும் வண் ணம், நல்ல நெறிகளை அவ்வப்போது எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களையும் அரண்களாக் கிக் கொள்ளுதல் வேண்டும். மன்ன! என் மக னுக்கு இப்பொன்னுட்டின்மீது பற்றுதல் ஏற்பட் டிருக்குமாயின், அந்நாட்டு உளவாளியைப் பிடித்து இந்நேரம் தங்கள்முன் நிறுத்தியிருப் பான். அது இல்லாமையால் ஏமாற்றப் பட்டான். தாங்கள்தான் தங்கள் கடமையைச் சரி வர செய்யத் தவறிப்போய் விட்டீர்கள். இப்போது சொல்லுங்கள். என் மகன் குற்ற வாளியா ? அப்படி என்ருல் அதற்குக் காரணம் யார் ?

சே : (புன்னகையுடன்) அமைச்சரே! விடை கூறுங்கள்.

தா. க ; விடை கூறவேண்டியது தாங்கள்தான்... வேந்தே! என் மகனுக்கு நல்ல நெறிகளை அவ் வப்போது எடுத்துரைக்கத் தவறியது யார் குற்றம்? அவனை ஈன்ற நான் செய்த குற் றமா ? ஆழமான அகழியையும் தாண்டி, மாபெரும் மதிற்சுவர்களையும் கடந்து, அயல் நாட்டு உளவாளிகளை அரண்மனைக்குள் நுழைய விட்டது யார் குற்றம் ? அவன் தந்தை செய்த குற்றமா ? தாங்கள் கூறுவதுபோல் கொல்லன் போய் பிறர்க்கு அறிவுரை கூறிக் கொண்டு இருப்பானேயானல், கொல்லன் வேலை யைச் செய்வது யார் ? என் மகன் இழைத்த பிழைக்கு அவன பொறுப்பாளி ?

சே : (மகிழ்ச்சியுடன் எழுந்து) அன்னையே! நான் தான் குற்றவாளி. ஆம்; சிறிதும் ஐயமில்லை.

நான்தான் அதற்குக் காரணம். தங்கள் மகன் மீது தாங்கள் கொண்ட அளவற்ற அன்பு என்னைக் குற்றவாளியாக்கி விட்டது. ஒரு அரசன் தன் நாட்டைப் பாதுகாத்துக்கொள்ள அவன் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றை அழகாகக் கூறினீர்கள். மகிழ்ச்சி. ஆனால், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடமையைக் கூறினீர்களே! தங்கள் மகனுக்குரிய கடமை எதுவோ ? அறியலாமா ?

தா. க : ஒளி பொருந்திய வேலைக் கொண்டு, தன் திறமையை வெளிப்படுத்தும் வகையில், யானைக் கூட்டத்திற்கு இடையே சென்று தன் வேலினைப் பாய்ச்சி, வெற்றியுடன் திரும்புவது தான் என் மகனின் நீங்காத கடமையாகும். அதுவே ஒரு தாய்க்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

சே : உவகை பெற்றேன். தங்கள் மகனை விடுவித்து, இனி என் அருகிலேயே வைத்துக் கொள்வேன். தங்களது கூற்று எதிர்காலத் தமிழகத்தின் நலத்திற்கு வழி வகுக்கும் முறையில் இருந்தது கண்டு மகிழ்ச்சி யடைகிறேன்.

த. க : நன்றி, மன்னவா! வருகிறேன். வணக்கம்.

சே : பொன்முடியாரே! இவ்வம்மையாரின் சிறப்பு இயல்புகளைக் குறித்து நம் தமிழகத்திற்கு ஒரு பாடல் தாங்கள் இயற்றித் தருதல் வேண்டும்.

பொன் : அவ்வாறே ஆகட்டும். மன்னா! வாழ்க நின் கொற்றம்! வளர்க நின் கொடை! இதோ பாடல்:

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே,
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே,
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே,
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே,
ஒளிறுவாள் இறுஞ்சம முறுக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

திணை : வாகை. துறை : மூதின் முல்லை.

பாடல் : புறநானூறு.

இயற்றியவர் : பொன்முடியார்.


Grams : 'AMRUTHAM' Post Box No. 1382 Phone : 26006

The Arya Vaidya Pharmacy (Coimbatore) Limited

REGD. OFFICE : 366, TRICHY ROAD, COIMBATORE-18

**The Ideal House for all Genuine Ayurvedic Medicines & Treatments**

*Our Madras Branch* : 140-A, GAUDIA MATT ROAD, ROYAPETTAH, MADRAS-14 (25752)

OTHER BRANCHES & PHONES

NEW DELHI (585687); TRICHUR (378); CALICUT-1 (2984) CANNANORE (92); PONNANI (41); ERNAKULAM (494); PALGHAT (195) ALATHUR; KANJIKODE, STATE BANK ROAD, COIMBATORE-18 (Opposite to Railway Junction) and INDIRA BUILDINGS, SUB JAIL ROAD, CALICUT-2 (4891)

*Factory* :
KANJIKODE, PALGHAT DIST.

*Nursing Home* :
RAMANATHAPURAM, COIMBATORE-18
(Phone : 22194)

Qualified and Experienced Physicans Available at all Branches. Letters from patients Personally attended to by the Chief Physician and prescriptions and Medicines Sent.

*For Further Details, Please Contact* : ARYA VAIDYAN **P. V. RAMA VARIER**
*Chief Physician & Managing Director.*

புத்தம் புதிய மருந்துகளுக்கு
புகழ் பெற்ற ஒரே ஸ்தாபனம்

# ஆனந்தா எம்போரியம்

கலவை மருந்துகளும் கிடைக்கும்
*(பொசியம்—மிக்சர்)*

**80–82, நேரு வீதி — புதுச்சேரி-1**

**தொலை பேசி : 124** **தந்தி : "எம்போரியம்"**

## The English Cycle & Motor Importing Co., Private Ltd.

(Established 1916)

Post Box No. 177

4/9, Broadway, Madras - 1

Grams : CYCLES"

Phone : 22575 (2 Lines)

For CYCLES

- ★ TRI CYCLES,
- ★ TOY CARS,
- ★ PERAMBULATORS,
- ★ CARRIER TRI CYCLES VANS,
- ★ SIMPSONS LIGHT—ENGINEERING GOODS,
- ★ ALL CYCLE—ACCESSORIES

*Branches :*

**Kumbakonam, Viruddhachalam, Neyveli, Ernakulam.**

---

போன் : 441659

அழகும், பொலிவும் அமைந்த
அசல் காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்
பட்டுப் பாவாடைகள்

கிடைக்குமிடம் :-

## கல்யாண் ஸ்டோர்ஸ்

(மாம்பலம் ஸ்டேஷன் எதிரில்)

31, ரங்கநாதம் தெரு, தி. நகர்

சென்னை - 17

கிளை :

## கல்யாண் கிளாத் ஸ்டோர்ஸ்

5, ரங்கநாதம் தெரு, தி. நகர்

சென்னை-17

---

சுவையான தமிழ் நூல்கள் வெளியிடுவோர்

விற்பனையாளர்கள் :

V

## வானதி பதிப்பகம்

82/11 பாண்டி பஜார்

தி. நகர் : : சென்னை-17

தொலை பேசி எண் : 442810

---

யாவரும் புகழும் ஹாஃப்டோன், லைன்
மூவர்ண பிளாக்குகள் செய்வதில்
இணையற்றவர்கள்

## நியூடன் & கம்பெனி

80, வாலாஜா ரோடு

மவுண்ட்ரோடு : : சென்னை - 2

தொலைபேசி : 86729

★

காலந் தவறாப் பணியே எமது குறிக்கோள்.

# சங்கரதாச சாமிகள் இலக்கியப்புலமை



வித்துவான்-காமாட்சிநாதன்

## வெண்பா

மூன்றி லிருதமிழை மூடிவைத்த காலமதில்
தோன்றி வெளிக்கொணர்ந்த தூயவராம்—ஆன்றபுல
மைத்திறத்தி ஞன்மிகுத்து மாதவத்தி லேசெழித்த
சத்திமிகு சங்கரதா சர்.

## தோற்றுவாய்

முத்தமிழ் முத்தமிழென்று முத்தருஞ் சித்தரும் போற்றி வளர்த்த முதுபெருந் தமிழ் இடைக்காலத்தில் இயற்றமிழ் மட்டுமே பெருகி, இசைத் தமிழும் நாடகத் தமிழும் அருகி நலிந்து வந்தது. அவ்வாறு ஒன்று மலிந்து ஏனைய இரண்டும் நலிந்தமைக்குக் காரணம்: அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களில் அருகரும் புத்தரும் மிகுந்து, இசை நாடகங்களாற் சிற்றின்ப உணர்ச்சி மிக்குத் தவம் சீர்குலைந்து விடுகின்றதெனக் கருதி அவற்றைப் புறக்கணித்து விட்டமையே யாம்.

புலவர்களாற் கைவிடப்பட்ட இசைத்தமிழ் கணிகைமாதர் வணிகத்தளவிலும், நாடகத்தமிழ் பாமரருடைய தெருக்கூத் தளவிலுமாய்ப் போய் நின்று விட்டன. அதன் பின்னர், திருஞானசம்பந்தர் போன்ற சமய ஆசிரியர்களால், இறைவன் திருவருளின்பத்தை பெறுவதற்கு இசைத்தமிழ் சாலவும் ஏதுவுடையதென்று தக்க சான்றுகளுடன் நிறுவப் பெற்று இசைத்தமிழ் சிறிது தலை நிமிர்ந்து வளர்ச்சியடைந்தது. நாடகத்தமிழோ! பேணுவா ரின்மையாற் பெரிதும் நலவுற்றது. இறுதியில் தமிழறிஞர் சிலருடைய நன் முயற்சியால் சற்று தலைதூக்கி வளரத் தொடங்கியது. அங்ஙனம் மிக முயன்று நாடகத் தமிழை மறுமலர்ச்சி யடையச் செய்த பேரறிஞர்களுள் தவத்திரு சங்கரதாச சாமிகள் குறிப்பிடத்தக்கவராவார்.

## தொண்டு

திரு சங்கரதாச அடிகளார் தம்முடைய வாழ்நாள் முழுதும் பிறர்க்கென முயலும் பெற்றியுடையராய் வாழ்ந்திருக்கிருர். சற்றேறக் குறைய நாற்பது நாடகங்களை ஆக்கி யளித்துள்ளார். பாட்டும் உரையுமாக அமைந்த அவர்தம் நாடகங்கள் கண்டவர்க்கும் கேட்டவர்க்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயனும் பயக்க வல்ல நடையுடைத்தா யிலங்குகின்றன. நாடக வாயிலாக மக்களுக்கு நல்லறிவை நாளும் வளர்த்த இம்முனிவர் இறைவன் மீது தனிப் பாடல்கள் பலவற்றையும் மனமுருகிப் பாடியுள்ளார். அவை கற்பவருடைய கல் நெஞ்சத்தையும் கரைவிக்கும் ஆற்றல் பெற்றுள்ளன. நாடகங்களை எழுதியதோ டல்லாமல் அவற்றை மாணவர்க்குக் கற்பித்து மக்களிடையே நடத்திக் காட்டிப் பயனடைவித்த பண்பாளருமாவாரிவர்.

## நூற் பெருமை

இப் பெருமானுர் எழுதிய நாடக நூல்கள், கல்வியில் வல்லார்க்கும், மாட்டார்க்கும், எல்லார்க்கும் இன்பஞ் செய்வனவா யுள்ளன. பாடல்கள் யாவும் சொற் செறிவு, பொருட் செறிவுடன் நல்ல சந்த வின்பம் பெற்றுத் திகழ்கின்றன. வடமொழி, தென்மொழி எனும் இருமொழி நடையும் பெற்றுத் திடமுடன் நடைதரும் பாடல்கள் பலவுள.

அருளுடைமை, தெய்வக் கொள்கை, கலை பயில் தெளிவு, கட்டுரை வன்மை, உலகியலறிவு இனைய தன்மைகள் நிரம்பப் பெற்ற இவர்தம் பாடல்கள் பெரும்பாலும் சௌட நெறியார் மரபைத் தழுவியுள்ளன என்ருல் அது சாலவும் பொருந்தும்.

பிரகலாதன் நாடகத்தில் இரணியன் வாக்காக வைத்துப் பாடும் பாடல்.

(சந்தம்)

இரணியன் :- சற்றும் நெஞ்சி லச்சமின்றி யுற்றடைந்து, கிட்டிவந்து, தர்க்கமிங்கியற்றி நின்ற கெட்ட வம்பனிவனை நீர், பற்றியங்க முற்றறைந் திரத்தம் வந்திடப் பிளந்து பக்க மெங்கும்

விட்டெறிந்து அட்டியின்றி வருகுவீர்; என வருவதையும் பிறவற்றையும் காணலாம்.

## தமிழ்ப் பற்று

அமிழ்தினுமினிய தமிழின் சுவையை அள்ளிப் பருகிய இத்துறவி தமிழ் மொழியைப் பெரிதும் போற்றுகின்ருர்.

"தமிழே சிறந்ததென உனது—நாமம் விளங்கச்
சாற்றும் அந்தப் பொருளை யாரறிவார்...அம்மா
(தமிழே)
அமிழ்தினிற் சிறந்தது ஆரியத்துயர்ந்தது
அகத்தியனுர் சிவனிடத்தினி லுணர்ந்தது...

எனும் பாடலினுலும்

"......... தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள். இனிமை என்பது என்ன? இன்பம்! அது அன்பு காரணமாக மனதில் நிகழ்வது! இந்த அன்பே தமிழ் வடிவ மென்பது மிக்க நுட்பமாக ஆராய்ந்து பார்ப்போருக்குத் தென்படக் கூடிய ஆழமான அருத்தம் பொருந்தியது. ..............." என்று தொடங்கும் சுலோசன சதி நாடக வசனத்தாலும், தமிழ் மொழியின் மீது அடிகளார் வைத்துள்ள மதிப்பு விளங்கும்.

பல மொழியும் ஆய்ந்துணர்ந்த பண்டிதரெல்லாம் பண்ணிறைந்த தமிழ் மொழியே இனிதாமென்று போற்றுவது யாவருமறிந்த செய்தி. அருட் பிரகாச வள்ளலாராகிய சோதி இராமலிங்க அடிகளார், சுந்தர மூர்த்தி சுவாமிகளுடைய வணக்கப் பாடலில், "இலக்குமா நீரழைத்த தனில் இடங்கருற வழைத்ததன் வாய்த், தலைக்குதலை மதலையுயிர் தழைப்ப வழைத்தருளிய நின், கலைக்கும் வடகலையின் முதற் கலைக்கு முறுகணக் குறு பொன், மலைக்கும் அனு நிலைக்கு முருவன் றெண்டப் பெருந்தகையே" என்று கூறுவதும், தமிழ் எனுஞ் சொல்லுக்கு விரிவாக உரை கூறியிருப்பதும் இங்கே உணரத்தக்கது. ஆகவே, ஆன்ம நிலையாகிய ஆண்டவன் நிலையை உணர்ந்த ஆன்ருேர்கள் முத்தி நிலையைச் சித்தி செய்யத்தக்க வாயிலாக இருப்பது முது பெருந் தமிழே என்று கூறி வருவதைச் சங்கரதாச சுவாமிகள் அருள் மொழிகளாலும் அறிகின்ருேம்.

## இலக்கியத் தேர்ச்சி

பன்னூலுந் தேர்ந்த நன்னூலாசிரியராக விளங்குகின்ருர், பனுவலாசிரியரான சங்கரதாசர். இவருடைய பாடலிலும் உரையாடலிலும் புராண இதிகாச அற நூல்களெல்லாம் விளையாடுகின்றமை காணலாம். தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ், திருக்குறள், நாலடியார், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி முதலிய நூற் கருத்துக்களையும், சொற்களையும் இவருடைய பாடல்களிலும், உரையாடல்களிலும் பரக்கக் காணலாம்.

எ . டு :-

"தோடுடையனென்று முன்னம் பாட வலியோர்
[பிள்ளைக்கு
சுந்தரி முலைப்பா லீந்தாய்"

என திருஞான சம்பந்தரைப் பற்றியும் :-

"வாதவூராளியின் வாசக ஆசையில்
வாஞ்சை கொண்டது வுந்தான் பொய்யோ"

என மணிவாசகரைப் பற்றியும்,

"வேடன் மிசைந்த எச்சில் விரும்பியுண்டவனே
விளையாட்டுக்காக வேடன் வேடம்
கொண்டவனே"

எனப் பெரிய புராணத்தில் கண்ணப்பரையும், பாரதத்தில் அருச்சுனன் தவ நிலையையும்,

"அருணகிரி புகழில் அனுதினம் பழகுற்றேன்
ஆனலும் ஞானமின்றி ஐயையோ
மதியுற்றேன்"

என அருணகிரிநாதர் திருப்புகழையும்,

"ஊமைக்கருள் சுரந்த உன் மகிமையைக்
கேட்டு"

எனவும்,

"ஊமையன் பிள்ளைத்தமிழ் உன்மீது பாடி
மேன்மை
உயர்த்திப் புகழ்ந்தது பசாரமே"

எனவும்,

"வாரியுதித்திடலாம முதைப் பொரு
மாறு பிள்ளைத் தமிழோதியடுத்திடு"

எனவுங் கூறிக் குமரகுருபரர் பிள்ளைத்தமிழையும்,

"இங்கிதச் செந்தமிழை விழைந்தேன் — நாளும்
இலக்கணங் கற்று நெஞ்சு குழைந்தேன் —
காணும்
சங்க நூல்களிலெல்லாம் நுழைந்தேன் —
அதால்
சந்தேகத் தருவெனத் தழைந்தேன்"

எனச் சங்க இலக்கியங்களுடன் பல்வேறு நூல்களையும் நினைவுறுத்தி எடுத்து மொழிந்துள்ளமை இவருடைய பரந்து பட்ட இலக்கியப் புலமைக்குச் சிறந்த சான்ருகும். மேலும்,

"அவாவே பிறப்பீனும் வித்தென்று வள்ளுவர்
ஆராய்ந்து சொல்லினரன்ருே!
அந்த ஞான போதஞ் சிந்தை செய்யாமல்
அகற்றி வருதலும் நன்ருே !
பற்றற்ருன் பற்றினைப் பற்றென்று சொன்னதும்
பாவனை யுண்மையின் மார்க்கம்
பலிக்கும் வழியை விளக்கிய தன்ருே
பகர்ந்த தெல்லா மவர் தீர்க்கம்

சற்றும் சந்தேகமில்லை குறளாகிய
சாத்திர மொன்றுமே போதும்
சர்வகலா சார ஞானந்தருமது
தன்னைப் படிப்பா யெப்போதும்''

என முழங்கியுள்ளமை தெய்வப் புலமைத் திருவள்ளுவரருளிச் செய்த திருக்குறள் மீது இவர் கொண்டிருந்த பக்தியை எடுத்தியம்புகின்றது. பொதுவாக, பாடலிலும் உரையாடல்களிலும் திருக்குறட் பாக்களை மிகுதியாக எடுத்தாண்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

## இலக்கணப் பயிற்சி

இலக்கியக் கடலில் நீந்தித் திளைத்த அடிகளார் இலக்கணத்திலும் நன்கு பயிற்சி பெற்றிருக்கிறார். மக்களுக்குப் பயன் படும் பாடல்களையும் உரையாடலையும் எழுதுவோர் தத்தம் மனம் போனவாறு எழுதித் தமிழ் மொழியைச் சீர் குலைத்து விடலாகாதென்ற உறுதியான எண்ணம் படைத்த சான்றோரானமையால் இலக்கணத்தை ஊன்றிப் படித்து, இலக்கண நயத்தைப் பாடலிலும் அமைத்துக் காட்டி யுள்ளார்.

''தமிழே சிறந்த தென ......'' என்று தொடங்கும் பாடலில் ''அடிசீர் மோனை எதுகை தொடை சேர் தளையின் வகை, ஆகும் பாவினம் சந்தமா விரிந்தது. வண்ணத் தமிழே ...... திணைபால் காட்டும் விகுதி சிறப்புப் பொதுப் பகுதி சேர்ந்த விதங்களெல்லாம் தென் மொழிக்கே தகுதி. இணையெனும் வட மொழி இரு மொழியுன் பேர்வழி, இசைக்கும் எழுது வதெல்லாம் வலஞ்சுழி — அதால் — அகரத்தோடகரஞ் சேர் வடமொழித் தீர்க்க சந்தி, ஆகு மென்றுரைப்பார்கள். அறியார்கள் புத்தி நந்தி, மகர வொற்றழி விதி மார்க்க மென்பதைப் புந்தி, வைத்தவர் மரு வென்றாரே முந்தி ...... அதால், ...... இயற் படப் புணரியல் என்னுடன் வாதாடுவார் இசை மராடி என்பதற் கென் புகல்வார்'' என அழகுற அமைத்துள்ளார். நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலும் அகரம் நின்று இரண்டுங் கெட்டு ஆகார மாகிய நெடில் பெற்று (பத + அம்புயம் = பதாம் புயம்) எனப் புணர்வதை வடமொழித் தீர்க்க சந்தி என்று சொல்கிறார்களே! (பராரை மரா அத்து எனவும்) மர + அடி = மராடி என்றும் தமிழிலே வருகிறதே அதற்கு என்ன பதிற் சொல்வார்கள்?

''மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே''
''அகர ஆகாரம் வரூஉங் காலை
ஈற்று மிசை அகரம் நீடலும் உரித்தே''

எனத் தொல்காப்பியத்தில் விதியிருக்கிறதை அறியாரோ! என்றுங் கேட்கிறார் சங்கரதாச சுவாமிகள்.

## பொது

மதுரை மீனாட்சியை வணங்கும் பாட லொன்றில், ''அம்மா! அந்த முருகன் தனது அண்ணனுக்குரிய ஐந்து கை களுக்கு மேல் ஏழு கை களைக் கொண்டு, பன்னிரு கையனாயிருக்கிறான். தனது அப்பாவுக்குரிய பத்துக் கைகளுக்கு மேல் தான் இரு கை படைத்துள்ளான். இப்படி அண்ணனுக்கும் அப்பனுக்கும் மிஞ்சியவனா யுள்ளவன் அம்மாவாகிய உனக்கு என்ன சொன்னபடி கேட்கப் போகிறான்? ஒன்றுங் கேளான். ஆகையால் மனமுவந்து என்னை மகனாக ஏற்றுக் கொண்டால் நான் உனக்கு வேண்டிய பணி விடைகளேல்லாம் செய்வேன்'' என்பதை,

''அண்ணனுக்கு மேலெழுகையுந் தன்
தகப்பனுக்கு மேலிருகையும் எண்ணவே
யுடையானுனக்கு இனியமைந்தனு
மாவனோ?'' என்று பாடி வேண்டியுள்ளார்.

நூல்களைக் கொண்டு இவருடைய அருமை பெருமைகளை அறிவதோடு, செவிவழிச் செய்தியாகவும் பலவற்றை அறிகிறோம். அவற்றுள் ஒன்று:- ''நாடகத்தில் முதலாக வரும் கோமாளியைக்கொண்டும் பல கருத்துக்களை ஆசிரியர் சங்கரதாசர் கற்பிப்பதுண்டு.'' என நடிகரும் தமிழறிஞருமான என். எஸ். நாராயண பிள்ளை அவர்கள் கீழ் வரும் பாடலையும் சொல்லி மகிழ்வித்தார்கள்.

''விகடனை ஒரு கோமாளி என்று
விளம்பு வார்கள் தெரியாத வர்கள்
வித்துவான்கள் கர்வம் மட்டந் தட்ட வந்த
வீரனுமென்பார் தெரிந்தவர்கள்''

''பாரினில் வெற்றியும் தோல்வியும் உண்டு
பதட்டங் கொள்ளாதவன் வித்வானும்............
சத்துருத் தன்மை பிழைக்காது,
சமாதானத்துக்குக் குறை நேராது,
சகோதர பாவம் கொண்டொத்துழையார்க்கு
சஞ்சலம் எந்நாளும் தீராது''

இவை போன்ற எத்தனையோ நற்கருத்துக்களை நாடக உறுப்பினர் வாயிலாக நாட்டு மக்களுக்கு வாரி வழங்கிய இந் நாவலர் பழனி யாண்டவன் மீது பாடிய பாடல் ''தண்டபாணிப் பதிகம்'' என்ற பெயரில் வழங்கப் படுகிறது. இப்பதிகத்திலுள்ள பத்துப் பாடலும் மிகவும் நயமுள்ளனவா யுள்ளன. எல்லோரும் பன்முறையும் கேட்டு மகிழும்,

''ஞானப் பழத்தைப் பிழிந்து'' என்று தொடங்கும் பாடல் தண்டபாணிப் பதிகத்தின் நான்காவது பாடலாகும்.

நாடகத் தமிழ் நலிவடையாத படி நாற்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியளித்தவர். அவற்றை மக்களிடையே பரப்பித் தமிழுக்கும் மக்களுக்கும் சிறந்த தொண்டாற்றியவர். தனி முறையிலும் பல பாக்களைப் பாடி இறைவன் திருவடிகளிலணிந்தவர். தமிழ் மொழியின் மீது தணியாக் காதலுடையவர். திருக்குறளிலும் திருப்புகழிலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர். சந்த வின்பங்களுடன் பாடலியற்றும் ஆற்றல் கை வரப் பெற்றவர். இலக்கணப் புலமை சான்றவர். இத்தகைய அருளாளரை வணங்கி வாழ்த்தி அவர்தம் நூல்களை மக்களிடையே பரப்பி, நாமும் பயின்று பயன் பெறுவோமாக.

வெட்டுக்காயம், சொரி சிரங்கு
வேனல் கட்டி, தீப்பட்ட புண்
கரப்பான், முகப்பரு, சேத்துப்புண்
முதலிய வியாதிகளைப் போக்குவதில்
கை கண்ட களிம்பு




# சைபால்
# எல்லிஸ் பாம்

●

குழந்தைகளுக்கு ஏற்படும்
சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி
புஷ்டி அளிப்பது

## ரமணீஸ்
# பேபி கிரைப்

*தயாரிப்பவர்கள் :*

**தி சௌத் இந்தியன் மனுபாக்சரிங் கம்பெனி**

மதுரை - 1.



# கல்லூரியில் படித்தேன்

திருச்சி. பாரதன்.

திருச்சி 'அசோக் பவன்' உணவு விடுதி மாடியில் ஓர் அகன்ற அறை. திரு. அவ்வை தி. க. சண்முகம் அண்ணா அவர்கள் அருகில் நான் அமர்ந்து இருக்கிறேன். எனக்குப் பக்கத்தில் திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. இரா. நீலமேகம் அவர்களும், சண்முகம் அண்ணா அவர்களுக்குப் பக்கத்தில் நகைச்சுவை நடிகர் திரு. டி. என். சிவதாணு அவர்களும் உட்கார்ந்து இருக்கிறார்கள்.

"ஏற்கனவே மேடை நாடகங்கள் எழுதி இருக்கிறீர்களா?"—சண்முகம் அண்ணா கேள்வி.

"இல்லை. வானொலியில் ஒரு சில நாடகங்கள் எழுதி ஒலி பரப்பாகி இருக்கின்றன."

"மேடை நாடக அனுபவமே இல்லை என்று சொல்லுங்கள்!"

"அப்படி இல்லை! பல மேடை நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதி இருக்கிறேன். அந்த வகையில் ஓரளவு தொடர்பு உண்டு."

"அந்த நாடகப் பாடல்கள் ஏதேனும் கொண்டு வந்து இருக்கிறீர்களா?"

பையில் தயாராக வைத்து இருந்த எனது நாடகப் பாடல்கள் தொகுப்பை எடுத்து நீட்டினேன்

பாடல்களை ஊன்றிப் படித்தார். ஒன்றிரண்டு பாடல்களுக்கு இலேசான குரலில் இசை அமைத்துப் பார்த்தார். சில வரிகளைப் பற்றி விவாதித்தார்.

பின்னர்—

"சரி! இனி 'அப்பாவின் ஆசை'க்கு வருவோம். கதை எனக்கு மிகவும் பிடித்து இருக்கிறது. நான் நினைப்பது போல் அமைந்துவிட்டால், பிரமாதமான வெற்றி கிடைப்பது உறுதி" என்ற முன்னுரையோடு கதை குறித்துப் பேசத் தொடங்கினார்.

கதையின் ஒவ்வொரு 'பாத்திரம்' பற்றியும் சம்பவங்கள் பற்றியும் விவாதித்தோம். சில பாத்திரங்கள் பற்றி 'வேண்டும்' என்றே குற்றம் கற்பித்துக் கூறினார்.

எனக்குப் பதில் கூறத் துடிப்பு! ஆனால், நாணம் கலந்த பயம். நாடகக் கலையின் புலமை தெளிந்த கலைஞரிடம் புதியவன் எவ்வாறு மறுப்பு உரைப்பது என்று ஒரு தவிப்பு. எனவே, சொல்வதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டு வந்தேன் !

எனது நிலையைப் புரிந்து கொண்டு சிரித்தார். "பாரதன்! 'அப்பாவின் ஆசை' நீங்கள் பெற்ற குழந்தை. உங்கள் குழந்தையை வேண்டு மென்றே நான் குற்றம் சாட்டுகிறேன். நீங்கள் அதைக் கேட்டு 'ரோஷ'ப்பட வேண்டும்! உங்கள் கருத்தை ஆணித்தரமாக என்னோடு வாதாட வேண்டும். நீங்கள் சொல்லும் பதிலும், நான் மீண்டும் எழுப்பும் கேள்வியும் ஒன்றோடு ஒன்று மோத வேண்டும். அப்படி மோதுவதால் தோன்றும் புதிய கருத்து இருக்கிறதே! அது மிகச் சிறப்பாக இருக்கும். அதனால், தயங்காமல் என்னோடு கதையைப்பற்றி விவாதியுங்கள்" என்றார்.

எனது கூச்சம் மறைந்தது. எனக்குத் துணிச்சல் பிறந்தது. பின்னர் மனம் விட்டு, கதையைப் பற்றியும், நாடகத்திற்கு ஏற்றவாறு எப்படி அதை மாற்றலாம் என்பது குறித்தும் பேசினோம்.

"ஒரு சில நாட்களில் நாடகக் காட்சிக் குறிப்பு அனுப்பி வையுங்கள். ஒரு மாத விடுமுறையில் சென்னைக்கு வந்து, எங்களோடு நீங்கள் தங்கி, உரையாடல் எழுதிக் கொடுக்க வேண்டும்!" என்று கூறினார்.

மன மகிழ்வோடு, ஒப்புதல் கூறிவிட்டு, நீலமேகம் அவர்களுடன் புறப்பட்டேன்.

"பாரதன்! உங்கள் கதை அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. நீங்கள் நாடகக் கலை உலகில் நல்ல புகழ் பெறப்போவது உறுதி" என்று பெருமிதத்தோடு கூறினார், நீலமேகம்.

## புத்தக 'விண்ணப்பம்'

பன்னிரண்டு வயதில் இருந்தே, குழந்தை இலக்கிய உலகில் தொடர்பு கொண்டு எழுதி வருபவன், நான். 'குழந்தைக் கவிஞர்' திரு. அழ. வள்ளியப்பா அவர்களை மானசீகக்குருவாகக்கொண்டு பாடல்கள் எழுதினேன். குழந்தைகளுக்குத் துப்பறியும் கதைகள் எழுதுவதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த நான் குழந்தைக் கவிஞரின் தொடர்பால், குழந்தைகளுக்கு நீதி போதிக்கும் கதைகள் எழுதுவதில் முனைந்தேன். "எத்தகைய கதைகள் குழந்தைகளுக்குப் பயன்படும்? அவசரமாகத் தேவை?" என்று குழந்தைக் கவிஞரை 'கவுரவ' ஆசிரியராகக் கொண்ட "பூஞ்சோலை" பத்திரிகை நடத்திய

கட்டுரைப் போட்டியில், துப்பாக்கி கதைகளையும், பேய் பிசாசுச் கதைகளையும் எதிர்த்து—நீதிக் கதைகளுக்காக வாதாடி, முதற் பரிசு பெற்றேன்.

அந்த நிலையில் எழுதப்பட்ட கதைகளில் ஒன்று தான் "அப்பாவின் ஆசை."

எழுதி முடித்து, பல மாதங்கள் வரை "அப்பாவின் ஆசை" அலமாரியிலேயே கிடந்தது. ஒன்றிரண்டு பத்திரிகை அலுவலகங்களை முற்றுகையிட்டு விட்டுத், திரும்பி வந்தது. இந்த நிலையில் எனக்கே பிடிக்காத சில கதைகளை ஒரு நாள் கிழித்து எறிந்தேன்.

'திடீர்' என்று ஒரு நாள் திருச்சி வானொலி நிலையத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. திரு. 'துறைவன்' எஸ். கந்தசாமி அவர்கள் போனில் அழைத்தார்; சென்றேன்.

"வானொலியில் குழந்தைகள் பகுதியில் 30 நிமிடங்கள் ஒலி பரப்புவதற்கு ஏற்ற முறையில் ஒரு கதை வேண்டும். அதுவும் மூன்று நாட்களில் வேண்டும். உங்களால் கொடுக்க முடியுமா?" என்று கேட்டார்.

நான் எழுதிய "ஜட்ஜ் மகன்", "அப்பாவின் ஆசை" என்ற இரு கதைகள் எனது நினைவுக்கு வந்தன. "சரி" என்று சொல்லி விட்டுத் திரும்பினேன்.

'அந்த இரண்டு கதைகளையும் கிழித்து எறிந்து இருப்போமா?' என்று மனம் 'திக்—திக்' என்று அடித்துக்கொண்டது. வீட்டில் தேடிப் பார்த்தேன். இரண்டில் ஒரு கதை கூடக் கிடைக்கவில்லை.

என்னிரு தங்கைகளுக்கும் ஒரு பந்தயம் வைத்தேன். யார் அந்தக் கதைகளைக் கண்டு பிடித்துக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு ரூபாய் பணம் கொடுப்பதாகக் கூறினேன். தங்கைகள் விழுந்தடித்துக்கொண்டு தேடினார்கள். நான் சும்மா இருப்பேனா? நானும் தேடினேன்.

நல்ல வேளை! என் கைக்கே "அப்பாவின் ஆசை" கிடைத்தது. 'கதை, ஒரு ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தவில்லை' என்று மகிழ்ந்தேன். "ஜட்ஜ் மகனை"த்தான் கண்டுபிடிக்க முடியவில்லை!

வானொலிக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்து குறிப்பிட்ட நாளில் அனுப்பினேன். அடுத்த நாளில் கதை ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக, வானொலி நிலையத்தில் இருந்து தகவல் வந்தது.

மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் "அப்பாவின் ஆசை" வானொலியின் தொடராக, கதை வடிவில் ஒலி பரப்பானது.

வானொலியில் அந்தக் கதைக்குக் கிடைத்த பாராட்டைக் கேட்டு ரசித்தார், புதுக்கோட்டை தமிழ் நிலைய அதிபர் திரு. வெ. சுப. நடேசன் அவர்கள்.

'அப்பாவின் ஆசை'யைப் புத்தகமாக்க விரும்புவதாகவும், மேற்கொண்டு சற்று விரிவாக எழுதி அனுப்பும்படியும் என் நெருங்கிய நண்பர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் மூலம் சொல்லிஅனுப்பினார். கரும்பு தின்னக் கூலியா?

மிக உற்சாகத்துடன் கதையை விரிவாக்கி எழுதிக் கொடுத்தேன். திரு அகிலன் அவர்களின் அணிந்துரை—வாழ்த்துடன், "அப்பாவின் ஆசை" அழகான புத்தக உருவைப் பெற்றது.

திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கம், அதன் தலைவர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களின் பெருமுயற்சியுடன், சங்கக் குழந்தை இலக்கியப் பிரிவின் தலைவன் என்ற உரிமையில் புத்தக வெளியீட்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்தியது. பேராசிரியர் திரு. அய்யன் பெருமாள் கோனார் அவர்களின் தலைமையில் திருச்சி உதவி நீதிபதி (சப்ஜட்ஜ்) திரு.சி. கணபதியப்பன் அவர்கள் புத்தகத்தை வெளியிட்டு வைத்தார். குழந்தைகளுக்கான திரைப்படம் உருவாக்க ஏற்ற கதை என்று தீர்ப்பு கூறுவதாக அவர் பாராட்டினார்! அறிஞர் பெருமக்கள் பலர் வாழ்த்துக் கூறினார்கள்.

அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதியைத்தான் சண்முகம் அண்ணாவுக்கு அனுப்பி வைத்தேன். கதையைப் பாராட்டி விட்டு, திருச்சிக்கு விரைவில் வருவதாகவும், சந்திக்கும்படியும் எழுதி இருந்தார்.

அவ்வாறு நடந்த சந்திப்புதான், முதலில் குறிப்பிடப்பட்டது.

## வசனத் தேர்வு

அலுவலகத்தில் ஒரு மாதம் விடுமுறை பெற இயலவில்லை. பதி மூன்று நாட்கள் பெற்றுக்கொண்டு சென்னை சென்றேன். முதலில், "அந்தமான் கைதி" நாடக ஆசிரியரும், எனது இலக்கியச் சகோதரருமான திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களை அழைத்துக் கொண்டு, 'அவ்வையகம்' சென்றேன்.

"வாங்க..." என்று தமக்கே உரிய சிறப்பான பாணியில் சண்முகம் அண்ணா வரவேற்றார். "வசனம் எழுதத் தயாராக வந்து விட்டீர்களா?" என்று கேட்டார். "ஆம்" என்றேன்!

"நீங்கள் ஓட்டலில் தங்க ஏற்பாடு செய்து இருக்கிறோம். வசனம், ஓட்டலிலேயே எழுதுகிறீர்களா? இங்கு எனது இல்லத்தின் மாடியில் எழுதுகிறீர்களா?" என்று கேட்டார்.

"எங்கு வேண்டுமானாலும் எழுதுகிறேன்" என்றேன், நான்.

"இதோ பாருங்கள்! மாடிக்குப் பக்கத்தில் அடர்த்தியான மரங்கள்...'குளு—குளு' காட்சி! இயற்கையான காற்று...அருமையான தென்றல்! இங்கேயே எழுதுங்களேன்! நானும் அருகில் இருந்து கவனித்துக் கொள்ளலாம் அல்லவா?" என்றார், ஒருவிதமான குறும்புச் சிரிப்போடு!

'சென்னையில் நமக்குத் தெரிந்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் எனக்கு வசனம் எழுதுவதில் உதவி செய்வார்கள் என்று சந்தேகப்பட்டு சோதிக்கிறார்களோ' என்று எண்ணிக் கொண்டு, சம்மதித்தேன்.

தினம், காட்சிக் குறிப்புகளைப் பற்றி சிறிது விவாதிப்போம். பின்னர், மேசை அருகே அமர்ந்து உரையாடல் எழுதுவேன். எதிரே நாற்காலியில் அமர்ந்து, எனது எழுதுகோல் ஓட்டத்தையே கவனித்துக் கொண்டிருப்பார், சண்முகம் அண்ணா.

கிட்டத்தட்ட, தேர்வு எழுதுவது போன்ற உணர்வும், நிலையுமே இருந்தது.

தொடக்கத்தில் சில வரிகளைத் திருத்தினர். பின்னர் சில சொற்கள் திருத்தப்பட்டன. அதன் பின் எழுதுவதெல்லாம் "ஓகே"!

நாடகம், பாதி அளவைக் கடந்து விட்டது. "இனி நீங்கள் ஓட்டலிலேயே எழுதலாம். நான் அங்கு தினம் வருகிறேன்" என்றார். "இல்லை! இங்கேயே எழுதுகிறேன்" என்று கூறினேன்.

"ஏன்?" வியப்போடு கேள்வி பிறந்தது.

"மாடிக்குப் பக்கத்தில் அடர்த்தியான மரங்கள்.. 'குளு—குளு' காட்சி! இயற்கையான காற்று... அருமையான தென்றல்!" என்று சண்முகம் அண்ணா முன்பு கூறியதையே நான் திருப்பிக் கூறினேன்.

'கல-கல' என்று சிரித்தார். அந்தக் கம்பீரச் சிரிப்பு, இப்பொழுதும் அடிக்கடி என் நினைவில் தோன்றும்; எனது கவலைகளைக் கூட மறக்கச் செய்யும்!

"எங்கு வேண்டுமானாலும் நீங்கள் எழுதலாம், எனக்குச் சம்மதம்" என்றார்.

முதற் சந்திப்பில் கலைஞனின் உள்ளத்தை ஊடுருவும் தன்மையை அவரிடம் கண்டேன். இந்தப் பழக்கத்தில் திறமையை 'எடை' போடும் ஆற்றலைக் கண்டேன்.

"எங்களிடம் எல்லா நாட்க ஆசிரியர்களும் ஒரு மாதம் தங்கி இருந்துதான் உரையாடல் முடித்துக் கொடுப்பார்கள். பதிமூன்று நாட்களில் நீங்கள் எப்படி முடிக்கப் போகிறீர்கள்?" என்று ஐயம் தெரிவித்தார்.

ஆனால், அதே பதிமூன்று நாட்களில் நான் முடித்துக் கொடுத்த போது மனமுவந்து பாராட்டி ஊக்கமூட்டினார்; ஆசி கூறினார்.

## அறிவுரை

சகோதரர்களுடன் நான் தங்கி இருந்தபோது பெற்ற அனுபவங்கள் இனிமையானவை.

நான் தங்கி இருந்த நாட்களில் சென்னையில் நடந்த நாடகங்களுக்கு உடன் அழைத்துச் செல்வார்கள். சண்முகம் அண்ணா-பகவதி அண்ணா இருவரும் அங்கு வரும் பெருமக்களுடன் என்னைப் பூரிப்போடு அறிமுகம் செய்து வைப்பார்கள்.

அவ்வப்போது, நாடகங்கள் அமைப்பு குறித்து, விரிவான கருத்துக்கள் கூறுவார்கள்.

"பாரதன்! பொதுவாகக் கலைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள். அதனால்தான் சமுதாயத்திற்கு அவர்களால் பயன் கிடைக்கிறது. ஆனால், சில தீய பழக்க-வழக்கங்களில் ஈடுபட்டு, அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிறார்கள். அத்தகையவர்களை மீட்பதோ-திருத்துவதோ சிரமம்.

'ஆனால், ஒன்று மட்டும் சொல்வேன். எந்தக் கலைஞனும் தன்னுடைய குடும்பத்தை-மனைவி-மக்களை நடுத்தெருவில் நிறுத்தக் கூடிய அளவுக்குக் கீழான நிலைக்குப் போய்விடக்கூடாது. அந்தப் பழியைக் கலையின்மீது சுமத்தக் கூடாது. மற்றப்படி, அவர்கள் எப்படியோ வாழ்ந்து விட்டுப் போகட்டும். இதுதான் கலைஞர்களைப் பற்றிய என் கருத்து" என்றார் சண்முகம் அண்ணா.

அந்தச் சொற்கள் "பசு மரத்தாணி போல்" என் மனதில் பதிந்தன.

திரைப்படம் ஒன்றுக்கு நான் பாடல் எழுதும் முயற்சி நடந்தது. அதை அறிந்த சண்முகம் கூறினார் :—

"முதலில் அறிமுகம் செய்யும் நபர், புகழ் பெற்றவராக—'ராசி' உள்ளவராகப் பார்த்துக் கொள்வது அவசியம். அவருடைய வெற்றிப்படத்தில் சாதாரணமான ஒரு பாட்டு நீங்கள் எழுதினாலும், உங்கள் பெயர் ஓங்கி வளரும்; வாய்ப்புகள் பெருகும்.

"ஆனால் திறமை இல்லாத படாதிபதியின் படத்துக்கு முத்தான—சிறந்த பத்துப் பாடல்கள் எழுதினாலும் படம் தோல்வி அடைந்தால், அந்தக் கவிஞனை பின்னர் யாருமே திரும்பிப் பார்க்க மாட்டார்கள். அதுதான் திரை உலகம்!" என்றார்.

மற்ற இளங்கலைஞர்களின் மனதிலும் இடம் பெறவேண்டிய பொன்மொழிகள் அல்லவா, இவை?

இவை போன்ற அனுபவங்கள் பல.

## கல்லூரிப் படிப்பு

நாடகம் உருவாகி முடிந்து, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் மானிய உதவிப் போட்டியில் மூவாயிரம் ரூபாய் பரிசு பெற்றது. சங்கத்தின் ஆதரவில் சென்னை என். கே. டி. கலா மண்டபத்தில் அரங்கேற்ற விழா நடந்தது.

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கே. எஸ். வெங்கடராமன் அவர்கள் வரவேற்க, திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் பாராட்டி வாழ்த்த, தமிழகத்தின் சிறந்த கலைஞர்கள் எல்லாம் நாடகத்தைக் கண்டு களித்தார்கள்.

அப்போது எனது நிலை—

மாலையில் பெய்த கடும் மழையில் உடல் முழுவதும் நனைந்து இருந்தேன். மழை நீரால் நிலம் குளிர்ந்ததுபோல். மகிழ்ச்சியால் நெஞ்சம் குளிர்ந்து இருந்தேன்.

நடிகமணி திரு. டி. வி. நாராயணசாமி அவர்கள் என்னை நோக்கி வந்தார். நண்பர் ஒருவர் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"தம்பி! டி. கே. எஸ். நாடக சபா, ஆரம்ப பள்ளிக்கூட அளவில் இருந்தபோது, நாங்கள் அங்கு பங்கு கொண்டோம்-பயிற்சி பெற்ருேம். கல்லூரி அளவில் அது இப்போது ஓங்கி வளர்ந்து உள்ளது. இன்று நீங்கள் வந்து இருக்கிறீர்கள். உங்கள் எதிர்காலம் மிகவும் பிரகாசமாக இருக்கும்" என்று எனது கைகளைத் தமது கைகளுக்குள் அடக்கிக் கொண்டு கூறினர். அப்போது அவருடைய கண்களில் புத்தொளி கண்டேன்.

நான் உடல் சிலிர்த்தேன்; உள்ளம் நெகிழ்ந்தேன்.

அப்பாவின் ஆசை—

தமிழக அறிஞர்களாலும் கலைஞர்களாலும், அமைச்சர்களாலும், பத்திரிகைகளாலும் பாராட்டப் பட்டதையும், வாழ்த்து தேடித் தந்ததையும் எண்ணும் போது, நடிகமணியின் உரைகள் நினைவுக்கு வருகின்றன.

ரசிகர்கள் மத்தியில் அமர்ந்து நான் நாடகம் பார்த்தபோது, பெண்கள் கண்களில் நீர் துளித்ததையும், குழந்தைகளுக்காக நடத்தப்பட்ட விசேடக் காட்சிகளில் அவர்கள் வாயைப் பிளந்தபடி ரசித்து ஆரவாரம் செய்ததையும் எண்ணும்போது, அந்தக் கல்லூரியின் 'மகிமை' உணர்கிறேன்.

"தமிழ்நாட்டில் குழந்தைகளைக் கொண்டு குழந்தைகளுக்கென்று ஒரு நாடகத்தை முதன் முதலில் தயாரித்துள்ளவர்கள்" என்று ஆனந்த விகடன் (7-11-65) போன்ற பத்திரிகைகளும் "இந்தியாவிலேயே முதலாக தயாரிக்கப்பட்ட குழந்தைகள் நாடகம்" என்று அறிஞர் பெருமக்களும் கூறியதை எண்ணும்போது, நான் செய்த 'தவப்பேற்றினை' நினைந்து பூரிக்கிறேன்.

எனது அடுத்த நாடகம் 'பலாப் பழமு'ம் டி. கே. எஸ். நாடக சபா முத்திரையுடன் தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கப் பரிசு பெற்றதை எண்ணும் போது, எதிர்காலத்தில் நம்பிக்கை ஒளி வீசக் காண்கிறேன்.

நான் பயிற்சி பெற்ற கல்லூரியின் நிறுவனர் தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள்—பயிற்சி அளித்தவர்கள் நாடகக் கலை மன்னர்கள் என்பதை எண்ணும் போது, இறைவனுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.




SILVER JUBILEE
25TH year
1942 — 1967

★

இருக்கும் எழிலை எடுத்துக் காட்டுவது
கிருஷ்கோ அலங்கார அணிகள்,
இல்லாத அழகை உண்டாக்குவது
கிருஷ்கோ மேக்கப் சாதனங்கள்
அலங்கார அணிகளுக்கும்,
மேக்கப் சாதனங்களுக்கும்,
பிரபல ஸ்டூடியோக்கள்
நாட்டிய நாடகக் குழுவினர்
தேர்ந்தெடுப்பது.

★

# கிருஷ்கோ ஷாப்பிங்

331-333, ராசப்ப செட்டித் தெரு,
சென்னை - 3

போன் : 33960

★

கிளை : கிருஷ்கோ பிரான்ஞ்
11, உஸ்மான் ரோடு, தியாகராயநகர்,
சென்னை-17

போன் : 441199 Residence : 441133

மதுரை மாவட்டத்தில்
மூன்று தலைமுறையாக
நடைபெற்று வருகிறது

## ஒரிஜினல்
## நாகப்பட்டணம்
## நெய் மிட்டாய்க் கடை

20, மேலச்சித்திரை வீதி,
மதுரை-1.



வைரவிழா :
1901 — 1961

போன் : 4074
தந்தி : "அம்பீ ஸ்வீட்ஸ்"

புதிய கிளை :
23—11—65 தேதி முதல்
75, அம்மன் சன்னதி,
மதுரை

கிளை : வியாபார நேரம்—
காலை 11 மணி முதல் இரவு 10 மணிவரை

| விலைப்பட்டியல் | 1-க்கு | கிலோ |
|---|---|---|
| பால்கோவா | 0 25 | 10 00 |
| அல்வா | 0 30 | 6 00 |
| ஜிலேபி | 0 15 | 7 00 |
| மைசூர்பாகு | 0 15 | 7 00 |
| லட்டு | 0 15 | 7 00 |
| பூந்தி | 0 25 | 5 00 |
| நெய் காராபூந்தி | 0 25 | 8 00 |
| பாதம் அல்வா | 0 30 | 12 00 |
| முந்திரிபருப்பு நுக்கல் | 0 25 | 8 00 |
| சர்க்கரைச் சேவு | 0 15 | 5 00 |
| மிக்சர் | 0 10 | 5 00 |

உரிமையாளர் :
வி. வெங்கட்ராமய்யர் சன்
வி. அனந்த நாராயணன்

கிளை : ஞாயிறு விடுமுறை

# வடஆற்காடு மாவட்ட கூட்டுறவு
# சர்க்கரை ஆலை, லிமிடெட்.,
## வட புதுப்பட்டு

வழி : ஜோலார் பேட்டை R. M. S.

ஆலையின் விவகார எல்லை :

வடஆற்காடு மாவட்டத்தில் வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர் தாலுக்காக்கள்.

1. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் : ரூ. 1 கோடி.
2. செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் : ரூ. 55 லட்சம்.
3. கரும்பு கிரயத்திலிருந்து பங்குக்காக பிடித்தம் செய்யப்பட்ட தொகை : ரூ. 31·99 லட்சம்.
4. பங்கு அனுமத்து தொகை : ரூ. 24·92 லட்சம்.

கரும்பு அரைக்கும் திறன் நாளொன்றுக்கு :

தற்போது உள்ளபடி : 800 / 1000 டன்

ஆலை விஸ்தரிப்பு திட்டம் முடிந்த பின்பு : 1250 டன்.

### டிவிடெண்டு

1964-65 ஆம் ஆண்டிலிருந்து உயர்ந்தபட்ச டிவிடெண்டு 6% அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் முதலாக டிவிடெ ண்டு வழங்கப்பட்ட பெருமை இந்த ஆலையைச் சாரும்.

H. H. ஹாகீர்
ஜெனரல் மேனேஜர்.

S. A. ராஜமன்னர்
தலைவர்.

# வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

தி. செ. முருகதாச ஐயா.

**தோற்றம்:** செந்தமிழ் நாட்டின் முகம் போல்வது தென்னுடாகிய பாண்டி நாடு. அதன் திலகம் ஒப்பது திருநெல்வேலி. அதன்கண் விளங்கும் பல்வகை மரபினருள்,சைவ வேளாண் குலத்தின ரானவர், செந்திநயகம் பிள்ளை. அவர், அத்தலத்தின் கடவுளான நெல்லையப்பரது பாகங் கொண்ட காந்திமதியம்மைமீது பேரன்புடையவர்; இல்வாழ்வை மேற்கொண்டவர். மகப்பேறின்மை கருதி ஒன்றன் பின் ஒன்ருக மூன்று மண மெய்தியும், மகவின்றி வருந்தினர். அம்மையின் திருவாக்கின் மூலம் நான்காம் மனைவியின்பால் (1839ல்) தோன்றியவர் சுவாமிகள். தெய்வீகம் காரணமாக, சங்கரலிங்க மென்ற பெயரிடப்பெற்று வளர்ந்தனர். விநாயகர் மந்திரம், இலக்குமி மந்திரம் உபதேசிக்கப் பெற்றுப் பின் முருகப்பெருமானது ஆறெழுத்து மந்திரமும் உபதேசிக்கப் பெற்று, முறையே வேல் வழிபாடு முதலியன செய்து வந்தனர்.

**பாடலியற்றல்:** இதன் பயனுக எட்டாவது வயது முடிந்த பின், சுரண்டையென்ற ஊரில், பூமி காத்தாள் என்ற அம்மன் கோயிலில் நடந்த வழி பாட்டின் சமயம் இவருக்கு முதற்பாடல் உதய மாயிற்று. கண்ட யாவரும் இவரைப் பாராட்டினர். அது முதல் பனை ஓலை ஏட்டில் எழுத்தாணியினுல் பாட்டெழுதிக் கொண்டிருப்பர். திருஞானசம்பந்தர் மூன்று வயதில் தேவாரப் பாடல்கள் பாடினர். மெய்கண்ட தேவர் இரண்டு வயதில் சிவஞானபோதம் இயற்றினர். இவர் எட்டரை வயதிற் பாடினர். ஞானிகட்கு வயது உடலின் அளவைப் பொறுத்ததல்ல, முன்னைய தவம் காரணமாகும்.

**சமரச ஞானம்:** சூரியன், சிவன், சத்தி, கணபதி, திருமால், முருகன் என்ற ஆறு கடவுளரையும், பொதுவான பரம்பொருளையும் குறிப்பிட்டுப் பாடிய பாடல்கள் பல்லாயிரமாகும். தெய்வம் ஒன்றேயாம். அன்பர்கள் மன விருப்புக்கேற்பப் பலவித வடிவு கொண்டு முன்னின்றருளும், "பொன் ஒன்றே பல திறப்பட்ட பணிவகையானுற் போலவும், மண் ஒன்று பலவிதப் பாண்டமாவது போலவும்," என்ற கருத்துக்கொண்டு பலபடப் பாடிய பாடல்கள் பல ஆயிரமாகும். பசுவின் நிறம் பல ஆயினும் பாலின் நிறம் ஒன்றே யெனத் தெளிவது போலாகும். "ஒன்றதே பேரூர், வழி அதற்கு ஆறுள" என்ற திருமந்திரமும் இதை வலியுறுத்துவதாம்.

**வைராக்கியம்:** முருகப் பெருமான் சுவாமிகள் மனவெளியிற் காட்சி வழங்கினர். திருவருள் பெற்று உலகிற் சீவகொலை, மாமிச உணவு என்ற இரண்டையும் அறவே நீக்குதல் வேண்டும், அதற்கான அருட்பேற்றைப் பெற முருகனைக் கண்முன் காண வேண்டும். அப்பேறு பெற்றுலன்றி மீண்டும் வருவதில்லை. மலையிலேறி உருண்டு அவன்முன் உயிர் விடுவேன் என்ற தீரத்துடன், பாண்டி நாட்டுச் செங்கோட்டைப் பக்கமுள்ள முருகன் தலமான திருமலை மீதேறி காட்சி தர முருகனை வேண்டினர். முன் வராமை கண்டு பூமி நோக்கி உருண்டனர். உடலில் ஊறு ஒன்றும் நேரவில்லை. ஆனுல், இடது தோளில் மட்டும் ஒரு காயமேற்பட்டது. வள்ளி நாயகியார் மனவெளியில் தோன்றித் திருநீறிட்டு ஆற்றினள். பின், வள்ளியூரில் முருகன் திருமுன் வைத்துக் கல்லாடை பூண்டனர். இல்லற வாழ்வை வெறுத்தனர். இவர் பாடிய பாடல்கள் யாவும் தான் பாடியதாக முருகன் கூறினர். இவர் ஒரு கருவியாயும், அதை இயக்குபவன் தானும் என்ற கருத்து. இக்கருத்தினை, சுவாமிகள் தம் பாடலிற் பல இடத்து கூறுகின்றனர். திருஞானசம்பந்தர், "எனதுரை தனதுரையாக" என்று இலம்பையங்கோட்டூர் தேவாரப் பாடலிற் கூறுவது போலாகும். இவர் எழுத்தாணியை முருகன் சர்வசாதாரணியென்று கூறினர். எவ்விதப் பாக்களையும் எளிதில் எழுதுவதுபற்றி முருகன் சுவாமிகள் எழுத்தாணிக்குப் பெயர் கூறினர். எழுத்தாணிக்கும் முருகனுக்கும் சுதந்தரமே யன்றி, சுவாமிகள் அவற்றை எழுதுமளவில் இயங்கினர் என்பது அருளின் சிறப்பு.

**பாடலின் வகை:** அழுக்காறு காரணமாகப் புலவர், மாந்திரீகர் இவரை எதிர்த்து வாதிட்டனர். திருவருளால் எவற்றையும் எளிதில் வென்றனர். திருச்செந்தூர் முருகன் திருவாணைப்படி பதினுறு வகைப் பிரபந்தங்களும், திருவரங்கத்துப் பெருமானை ஆயிரம் பாடலினும், தில்லை நடராசப் பெருமானை ஆயிரம் பாடலினும், பழனித் தண்டபாணிக் கடவுளை ஆயிரம் பாடலினும், பொதுவான பரம் பொருளை ஆயிரம் பாடலினும் பாடித் துதித்தனர். ஏழாயிரப் பிரபந்தம் என்பது இதுபோன்றதொகைப் பனுவல். மேற்கூறிய ஆறு சமயமும், அதீதமான பரமுமாகிய ஏழையும் குறித்து வரிசைப்பட அடுக்கடுக்காகப் பாடப்பட்டதே ஏழாயிரப் பிரபந்தமாகும்.

இலக்கண நூல்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்தையும் கற்றுப் புலமை பெற்றவர்கள். பெற்ற அப்புலமையைப் பயன் படுத்துவதன் இலக்கணத்தைக் கூறுவதே ஆருவ தான புலமையிலக்கணம். இதன் விவரம் அறியாத வர் ஏதேதோ பேசுவர். வண்ணம் என்பது சந்தங் களாலான பெரும்பாட்டு. பட்டினத்தார் பாடிய உடற் கூற்று வண்ணம் இத்தகையது. அத்தகைய வண் ணப் பாடல் பல பாடினர். ஆகவே, வண்ணச் சரபம் என்றனர் உலகர். அதன் இலக்கணமும் சுவாமிகள் தான் பாடியுள்ளனர். வேறு இதுவரை யாரும் பாடியதேயில்லை. இதுபோல, ஒலியலந்தாதி என்ப தொன்று பாடினர். அது அறுபத்து நான்கு கலை யுள்ள சந்தப் பாடல் 30 உள்ளதாய், அந்தாதித் தொடராய்ப் பாடுவது. அதுவும் இதுவரை யாரும் பாடியதில்லை.

நிரோட்டம் என்பது உதடுகள் ஒட்டுதல் குவித லின்றிப் பாடப் படுவது. மேற்படி பெயரில் அக்குற்ற மிருப்பதால், இவர், இதழ் அகல் அந்தாதி எனப் பெயரிட்டு, தில்லை, நெல்லை, அரங்கம், சென்னை முதலிய தலக்குறிப்புடனும், பொதுவாயும் பாடியுள் ளார். எவ்விதப் பாடலாயினும் அதற்கென வருந்திச் சிந்திப்பதில்லை. முருகன் திருவருளைச் சிந்தித்து ஏடும் எழுத்தாணியும் எடுத்தெழுதுவர். இவர் எண்ணியதைவிட, அரிய கருத்தும் நயமுமாகப் பாடல்க ளமையும். இதையும் சுவாமிகள் பல இடங் களிற் கூறியிருக்கின்றனர். இரண்டொன்று இங்குக் குறிப்பிட்டுள்ளது கொண்டு காண்க.

"வந்தபடி பாடுகின்ற—என்றனது பாடலின்கண்
வன்பிழையே தேனும் ஒன்றில்-உனதேயாம்"

என்றும்,

"என்மனதில் ஒன்றெண்ண என்கை மற்றொரு வண்ணம்
எழுதிடும் இயற்கை கண்டும்"

என்றும்,

"என் பாடலேயென யான்பாடும் பாடல்கள் யாவையும்சேய்
தன்பாடலே யெனச் சாற்றுகின்றான்"

என்றும் வருபவற்றால் அறியலாம்.

தமிழின் உயர்வு கூறல்: தமிழ் மொழியே உயர்வென்று ஒரு நூறு பாடல்கள் கூறினர். ஒரு சமயம், வாதம் செய்த இருவரிடம் வெற்றி பெற்றுப் பாடியதாகும். "தமிழ் மொழிக்கு உயர் மொழி-தரணியில் உளதெனில், வெகுளியற்றிருப்போன் வெறும் புலவோனே" என்பர் வேறு ஒரு நூலில். இவரது தியான செப வழிபாட்டுக்கு இடையூறாகப் புதுப்புதுப் பாட்டுகள் வந்து கொண்டிருக்கும். "உபா சனைக்கு இடையூறாகப் பாடல் வருகிறது. சுவாமி கள் இதனால் மனம் வருந்தினர். தமிழ்க் கவிகள் உதிக்கும் வம்பு சகிக்கிலேனே" என்று பதிகமே பாடி விட்டார். புலவர் பலர் பாட வாக்கு வர வில்லையென்று துன்புறுவர். இவர் நிலையிப்படி.

வடலூரடிகள் சந்திப்பு: சுவாமிகள் காலத் தில் திருநெல்வேலியிலும், பிற இடங்களிலும், பல புலவர்கள், தவசிகள், வள்ளல்கள் இருந் தனர். இவருடன் தொடர்பு கொண்டிருந்தனர்; இவரது பாடலுக்கு இணங்கி உதவி செய் தனர். இவராற் சிறப்பித்துப் பாடப் பெற்றவர்கள் பலர். இவரைப் புகழ்ந்து பாடியவர்களும் பலராவர். அவருள் வடலூர் இராமலிங்க அடிகள், இவரது கருத் துக்கு ஒத்த மனப்பண்புள்ளவர். அவருடன் மூன்றி தடவை கண்டு பேசி, கவிகளின் நாமங்களை இரு வரும் பாடிக் கலந்து நட்புறவு கொண்டிருந்தனர். அக்கால் அவர் திருவுரு மறைந்த செய்தி கேட்டு வருந்தினர். மனவெளியில் சிவபிரான் தோன்றி அவர் எழுந்து வரும்படி பாடுக என்றனர். இரு பதி கம் பாடினர். ஒன்று அநுபவப் பதிகம். மற்றொன்று, விஞப்பதிகம். அவரது உள்ள நிலையை ஒவ்வொரு பாடலிலும் பாடி யிரங்கினர். அவர் பாட்டுக்களை இர விலும் எழுதுவர். வண்டுகள் விளக்கொளிக்காக வந்து எண்ணெய், நெருப்புச் சுடரில் விழும் இறக் கும். அதுசமயம் இதன் இறப்பை என்முன் விளைத் தனையே இறைவா! என்று அழுவாராம். "மிளகை நேர் ஒரு சிறிய வண்டெழுந்து விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி—இளகும் நெஞ்சகம் பெறும் வட லூரான்" "இரக்கமே வடிவாம் வடலூரான்" என்றெல் லாம் கூறி—இன்னும் ஏன் எழுந்திடப் புரிந்திலையே" என்று விஞவினர்.

"வாழை நறுங்கனியினைப் பாகினிற் குழைத் தாங்கு இனித்த செஞ்சொல் வனைந்து போற்றும்—ஏழையன்பன்" என்று ஒரு சமயம் இவர் பாடலின் நயத்தைப் பாராட்டினர். தனக்கென எப்பயனையும் கருதாமல் உலக நன்மையே வேண்டியது பற்றி ஏழையன்பன் என்று கூறியதறிக. இப்படிப் பல பாடல்களில் வடலூரடிகளைக் கூறி அநுதாபப்படுவார் சுவாமிகள்.

சங்கரதாஸ் அடிகள் தொடர்பு: அம்முறையிற் றொடர்பு கொண்ட பல பேரன்பர் களில் ஒருவராக—தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நட்புறவு கொண்டனர். இவர் முருகதாசர். அவர் சங்கரதாசர். அவரது நாடகத் தமிழின் இனிமை கண்டு ஒரு வெண்பாவிற் புகழ்ந்து கூறியுள்ளனர் சுவாமிகள். தண்டபாணி சுவாமிகள், முத்தமிழும் பாடுதல் வேண்டும் என்ற கருத்துக் கொண்டு முசு குந்த நாடகம் என்ற பெயரில், முருகனது வரலாற் றுடன் இணைந்த—முசுகுந்தன் வரலாற்றினை நாடக பாணியில் இயற்றினர். அதையும் முருகப் பெருமான் பாடும்படி சொன்ன மொழி கொண்டு பாடினர். இவ்விவரம் அதன் முகப்பிற் கூறுகின்றார்.

'கந்தன் வந்து முசு குந்தன் கதையை ஒரு நாடகமாய்ச்
செந்தமிழாற் பாடென்று செப்பியதாற் சொல்கின்றேன்
சந்தம் இசை தாளம் நயம் தவறாமற் காத்தருளும்
தந்தம் ஒன்று காட்டும் எழில் தந்தி முகன் தாளிணையே'

என்றும்,

காரணப்பட்டூரில் வளர் கந்தசாமித் தொழும்பன்கழ
லென்றேற்பச்,
சீரணவுங் குமாரபுரிச் சண்முகமா முனியும் அன்பிற்
செப்பென்றேதத்,
தாரணவுந் தடம்புயத்து முசுகுந்தன் சரித்திரத்தைச்
சலதி சூழும்
பாரணங்கின் முகம்போலும் புலவர் வியந்திட விரித்துப்
பகர்கின்றேனே.

என்றும் பாடியறிவிக்கின்ருர் சுவாமிகள்.

திருவருட் பேறு :

இப்படிப் பல அருளாடலும், தமிழ்ப் பாடலும் இயற்றிய வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் இறுதியில் விழுப்புரத்தையடுத்த திருவா மாத்தூர்ச் சிவதலத்தில் எல்லே தாண்டா நியதியுடன் பத்தாண்டுகள் தங்கித் தவமியற்றினர். தமது ஐம்பத் தொன்பதாவது வயதில் (1898 ல்) திருவருட் பேறு பெற்றனர். அவ்விடத்தில் தண்டபாணி ஆலயமும், பல மண்டபமும், வேறு உற்சவ மூர்த்தங்களும் நிறு வப் பெற்றிருக்கின்றன. நாள் வழிபாடு, சிறப்பு வழி பாடுகளும் நடைபெறுகின்றன. சுவாமிகள் பாடி எழுதப் பெற்ற ஏட்டுச்சுவடிகளும் அம்மடத்திற் பரி பாலிக்கப்பட்டுள்ளன. சுவாமிகளின் சந்ததியார் பூசை வழிபாடு முதலியன புரிந்து வருகின்றனர். சுவாமிகள் திருவுரு மறைந்து, அறுபத்தேழு ஆண் டுகள் நிறைவாயின. ஆனிமாதம் திருவோணத்தில் ஐக்கியமுற்றனர்.

முடிவுரை :

சுவாமிகள் வரலாறு மிகுதியுமுண்டு. தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் மலர் வெளியீட்டில் சங்கர தாஸ் சுவாமிகள் மீது அன்பும் பாராட்டும் கொண்டு தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ள பாடலே விளக்கு முறையில் சிறிது வரலாறு குறிக்கப் பெற்றது. சங்கரதாஸ் சுவாமிகளது குரு பூசை, மலர் வெளியீடு முதலியவற்றைப் பெரிதும் அன்புடன் செய்து வரு கின்ற உயர்திரு டி. கே. சண்முகம், துணைவர், பகவதி முதலிய பேரன்பர்கள் சமயத்துக்கும் தமிழுக்கும் செய்து வரும் தொண்டு நாமங்களே உரு வாக்கி நடத்தி வரும் சிறப்பு, தமிழ் நாடே யன்றிப் பிற நாட்டவரும் பாராட்டுவது உலகிற் பலரும் அறிந்த ஒன்று தமிழ்ப் புலமையும் தவ ஒழுக்கமும், தெய்வ அருளும் பெற்ற வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகளேயும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளேயும் இணைத்துப் போற்றும் பண்பு டி. கே. எஸ். சகோதரர்கட்குத் தனிச்சிறப்பான பெருமை தருவதாகும். டி. கே. எஸ். அவர்களும் பகவதி அவர்களும் தண்டபாணி சுவாமிகள் விழா சென்னேயில் நடக்கின்ற சமயங்களில் சிறந்த பணி யாற்றிச் சிறப்பித்து வருகின்றனர். இவர்கட்கு எல்லா நலமும் இனிதெய்தும்படி திருவருளே வேண்டு கிறேன்.

தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகளேப் பற்றி தண்டபாணி சுவாமிகள் பாடிய ஒரு கவி மட்டும் மேற்படி தனிப்பாடல்களில் குறிக்கப்பட்டிருந்தன. அதைக் கீழே காட்டியிருக்கிறேன்.

தனிப்பாடல் வெண்பா

என்னன்புக் கேற்றேன் இசைநாட கப்புலமை
தன்னிலுயர் சங்கரதா சுப்புலவன்-வன்னமலி
கண்பாவு தோகைமயிற் கந்தனரு ளிற்சிறந்தோன்
வண்பா வலர்கண் மணி.

இவர்போற் பலர் இருந்திருக்கின்றனர். அவர் கள், ஞானசித்த சாமி, சண்முக சாமி, சோழவந் தான் கந்தசாமி ஆகியோராவர்.

தூய வாழ்வைத் துலக்கி யுலகில்
தோற்ற வைத்து நடித்திடல் நாடகம்

சுத்தானந்த பாரதி

★ ★ ★

நாட்டினுக்கு அணிகலம் நாடகக் கலேயே!
பாட்டும் இயலும் எழில்காட்டும் நவநிலேயே!

நடிகர் எஸ். வி. கிருஷ்ணன்

ஈ.ஐ.டி.-பாரி உர விநியோகஸ்தரே விவசாயியாகவும் இருக்கிறார் அநேக இடங்களில். எனவே ஈ.ஐ.டி.-பாரி உரங்கள், பூச்சி நாசினிகளின் பெரும் பயன்களை அவர் நன்கறிந்திருக்கிறார். ஈ.ஐ.டி. நிறுவனத்தின் நிபுணத்துவம் மிக்க ஆலோசகப் பணிப் பிரிவின் துணையுடன் கூடிய அந்த உர, பூச்சி நாசினி விற்பனை வெறும் வர்த்தகப் பேரத்துடன் நிற்பதல்ல என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

அவருடைய கடை வழக்கமான விற்பனை நிலையம் மட்டுமல்ல; விவசாயச் சிநேகிதர்களின் சந்திப்புக் கேந்திரமுமாகும் அது. பயிர்ச் செலவுப் பிரச்னைகள் அனைத்தையும் பொறுத்து அவரிடமிருந்தும், அந்த வட்டார ஈ.ஐ.டி.-பாரி உர விற்பனையாளரிடமிருந்தும் ஆலோசனை பெறவே அங்கு அவர்கள் வருகிறார்கள்.

அதிக உணவு கிடைக்கச் செய்யும் பொருட்டு விளைச்சலைப் பெருக்க விவசாயிகளுக்கு உதவுவதே நாட்டுக்குத் தாங்கள் செய்யக்கூடிய தலை சிறந்த சேவை என்று ஈ.ஐ.டி.-பாரி நிறுவனத்தினரும், அவர்களுடைய உர பூச்சி நாசினி விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோரும் உறுதியாகக் கருதுகின்றனர் - உணவு உற்பத்தியை உயர்த்துவதே இன்று நம் நாட்டின் முன்னுள்ள முதல் பெரும் பிரச்னை அல்லவா?

**ஈ.ஐ.டி.-பாரி லிமிடெட்**
டேர் ஹவுஸ் சென்னை-1

Parry's
FIRST IN THE FIELD

## இவர்தான்
## ஈ.ஐ.டி.-பாரி
## உர விநியோகஸ்தர்



FDS-EID-[illegible] MA

*With the best compliments*

*from*

# THE MADRAS PENCIL FACTORY

*Manufacturers of the famous:*

MERCURY PENCIL

and

## V. PERUMAL CHETTY

**DRAWING PENCILS**

MADRAS-1.

## MADRAS DOCK-WORKERS CO-OP. STORES LTD.

(X-377)

**231/1, T. H. Road, MADRAS-21**

PHONE: 51344

6 Departments—Grocery—Coffee—Oil—Textiles—Drugs—General

**QUALITY IS OUR MOTTO!**

**SALES TO PUBLIC ALSO.**

*Visit this Co-op. & See what can be done.*

**NARAYANA VELU,** C.S.R.
*Secretary.*

**A. S. K. IYENGAR**
*President.*

## MADRAS DOCK-WORKERS CO-OP. BANK LTD.

(X-414)

BHAGAT HOUSE

**1/73, BROADWAY, MADRAS-1**

Phone: 21220

A SELF RELIANT WORKERS BANK

**SHARE CAPITAL**

Authorised Rs. 5 Lakhs, Paid-up Rs. 2.36 Lakhs.
Loans Issued Rs. 5.73 Lakhs, Thrift Deposits Rs. 4.86 Lakhs.

INVEST IN FIXED DEPOSITS HERE.

"Co-operation is a way of Life"!

—Jawaharlal Nehru.

**A. S. K. IYENGAR**
*President.*

**A. G. BALASUBRAMANIAM,** B.A.; C.S.R.
*Secretary.*

# VASU STUDIOS

55, ARCOT ROAD
MADRAS-26

**Picture Sunder Production :**

1. Vasu Films :- **"NAI ROSHNI"**
(Hindi Eastman Colour)

Casts : 'Padma Shri' Asok Kumar,
'Padma Shri', Bhanumathi,
Malasinha, Rajkumar, Biswajeet
and others.

2. Vasu Films :- **"POOVUM POTTUM"**
(Tamil)

Casts : Ranga Rao,
'Padma Shri' Bhanumathi,
Nagesh, Bharathi,
A. V. M. Rajan and others.

3. Vasu Studios :- **"PUNYAVATHI"**
(Telugu)

Casts : N. T. Rama Rao, Ranga Rao,
'Padma Shri' Bhanumathi,
Sobhan Babu,
Krishna Kumari and others.

4. Madras Movies : **"MANASWINI"**
(Malayalam)

Casts :- Sathian, Thikkurisi,
P. J. Anthony,
Adoor Bhasi, Sarada and others.

5. Rani Films :- **"PAREEKSHA"**
(Malayalam)

Casts : Thikkurisi, Prem Nazeer,
P. J. Antony, Adoor Bhasi,
Sarada and others.

**LAB. DEPARTMENT**

*Under takes to Print*

**35 M.M. & 16 M.M. COPIES.**



SRI

# RAMA LODGE

20, NELLUKKARA STREET
BIG KANCHEEPURAM

**காஞ்சியின் அழைப்பு..**



1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட
கயிலாசநாதர் ஆலயம்

புண்ணிய நகரம் காஞ்சி...
புராதன ஆலயங்கள்...
விண்ணுயர் கோபுரங்கள்...
பல நூறு ஆண்டுகள்
பழைமையான அற்புதச்
சிற்பங்கள்... பாரம்பரியக்
கைத்திறனுக்குப் பெயர்
போன இணையற்ற
காஞ்சிபுரம்-புடவைகள்...

காஞ்சி, யாத்திரீகர்கள்,
கலை அன்பர்கள், உல்லாசப்
பிரயாணிகள் அனைவரையும்
ஒருங்கே கவருவதில்
வியப்பில்லை!

நீங்கள் உவந்து தங்க:

**ஸ்ரீ ராமா லாட்ஜ்**

காஞ்சியில் நவீன வசதிகள் கொண்ட
ஒரே ஹோட்டல்

பஸ் நிலையம் அருகில் போன் 95

**காஞ்சிபுரம்**



★ ஏர் கண்டிஷண்ட் அறைகள்

★ ஏர் கண்டிஷண்ட் ரெஸ்டாரண்ட் பகுதி

★ மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம்
வேடந்தாங்கல்
மற்றும்
நகரக் கோயில்கள் பார்க்க

**எமது**

**டூரிஸ்ட் டாக்ஸி**

நிறுவனம் : 1942

தந்தி : "சென்ட்ரல்ஸ்"

தொலைபேசி : 50

கூட்டுறவே நாட்டுயர்வு !

# தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்.

(செ. இ. 1487)

## கடலூர்-1

| | | |
|---|---|---|
| அங்கத்தினர் எண்ணிக்கை.................. | | 1432 |
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்............... | ரூ. | 4,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம்.................. | ரூ. | 2,71,800 |
| ரிசர்வ் நிதி.......................................... | ரூ. | 4,52,842 |
| 1966-67-ம் ஆண்டின் விற்பனை......... | ரூ. | 2,31,80,400 |

மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான இரசாயன உரங்கள் சங்கத்தின் வாயிலாக வினியோகிக்கப்படுகின்றன. மற்றும் தரமான நெல், அரிசி, பருப்பு வகைகள், கோதுமை, கோதுமைப் பண்டங்கள், சர்க்கரை, காப்பிக் கொட்டை மற்றும் பலசரக்கு சாமான்கள் மொத்த விற்பனை செய்யப்படுகின்றன. குழந்தை உணவுகளும், அலங்கார சாமான்களும், சைக்கிள் டயர், டியூப்புகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

"கூட்டுறவு மார்க்" கலப்பு உரங்கள் நெல், கரும்பு, வேர்க்கடலை, போன்ற பயிர்களுக்கு ஏற்றவாறு சங்கத்தில் தயாரிக்கப் படுகின்றன. எங்கள் கலப்பு உரங்கள் விவசாயிகளுக்கு நல்ல மாசூலை அளிக்கின்றன.

கடலூர் முதுநகர் பக்தவச்சலம் மார்க்கட்டில் உள்ள சங்கத்தின் ஜவுளி விற்பனை நிலையத்தில் தற்கால நாகரிகத்திற்கேற்ற நவீன ரகங்களில் பலதரப்பட்ட மில்களின் வேஷ்டி, புடவைகளும், சர்ட்டிங், கோட்டிங், மற்றும் நைலான், சாட்-டின், டெரி காட்டன், டெர்லின், சில்க் வகையறுக்களும், திருப்பூர் 'ஸ்டைலக்ஸ்' பனியன்களும் நேர்த்தியான கைத்தறி துணிகளும் நயமான விலையில் கிடைக்கும்.

சேவையே எங்கள் குறிக்கோள் !

மு. சுப்பையா, பி. காம் (ஹானர்ஸ்)
கூட்டுறவுத் துணைப்பதிவாளர்
காரியதரிசி.

டி. பீ. முத்துக்குமாரசுவாமி நாயுடு
தலைவர்.

தந்தி : செண்டெக்ஸ்.

அலுவலகம் : 32
குடியிருப்பு : 38

## சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்.,

ரெ. K. 885. சென்னிமலை.

# Chentex

HANDLOOM FABRICS

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள்,
நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள்

தரத்திற்கும், நவீன ரகத்திற்கும்
அழகான கெட்டிச் சாயத்திற்கும்
குறைந்த விலைக்கும் சிறந்தவை

சென்னை மாநில கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை
எம்போரியங்களிலும் கிடைக்கும்.

M. P. நாச்சிமுத்து, B.A., B.L.
தலைவர்

---

## சிறியோர் முதல் பெரியோர் வரை அணியக்கூடிய
## ரெடிமேட் ஆடைகளுக்கு சிறந்த இடம்

# Leoris Palace

**Pro: S. S. பாலகிருஷ்ணன்.**

**97, 98, அழகர் கோவில் ரோடு,**

**மதுரை-2.**

கிளை :— 137, 138, 139, தெற்காவணி மூலவீதி, மதுரை-1.

" இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் " — " குறள் "

" எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி
வறுமையால் சோம்பியிருப்பவரைக் கண்டால், அவனுடைய
அறியாமையை எண்ணி நிலமகள் தன்னுள் சிரிப்பாள். "

விவசாய உற்பத்தியைப் பெருக்கி நாடும், தானும் பயன் பெற விரும்பும்-
விவசாயிகளுக் கோர் அரிய வாய்ப்பு !.

☆ நிலங்களைச் செப்பனிட,
☆☆ டிராக்டர் போன்ற விவசாயக் கருவிகள் வாங்க,
☆☆☆ கிணறு வெட்ட, நீர் இறைப்பதற்குப் பம்பு செட்டுகள் அமைக்க,

இவை போன்ற நில அபிவிருத்தி சம்பந்தமான செலவினங்களுக்கு
உதவும் வகையில் தாலுக்காக்கள் தோறும் இயங்கி வரும்
கூட்டுறவு நில அடமான வங்கிகள் குறைந்த வட்டி விகிதத்தில்
நீண்ட காலத் தவணையில் கடன்கள் வழங்கி வருகின்றன.

மேலும் விவரங்களுக்கு உங்கள்
தாலுக்காவிலுள்ள நில அடமான
வங்கியை அணுகித் தெரிந்து
கொள்ளலாம்.

சென்னை கூட்டுறவு
மத்திய நில அடமான வங்கி,
லஸ், மயிலாப்பூர் — சென்னை-4.






கௌரீ ஜுவல்லரீ மார்ட்
72/75, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
உரிமையாளர் :
K. ராமலிங்கம் செட்டியார்

அம்மே நாராயணா !

★ அம்மே நாராயணா ★ தேவி நிவாஸ்
★ தேவி நாராயணா ★ லக்ஷ்மி நாராயணா
★ தசரதராம் ★ சீதாராம்
★ கணேஷ் ராம் ★ சேஷாராம்

இந்தப் பெயர்களெல்லாம் எமது லாட்ஜிங்
அறைகளின் ஒவ்வொன்றின் பெயரைக்
குறிப்பனவாகும்.

இட்லிக்கும், சட்னிக்கும் புகழ் பெற்ற
ஸ்ரீ ராம பவான் லாட்ஜிங்
(மிதமான கட்டணங்களில் ஒருவர்-இருவர்க்கான
வசதியான ரூம்கள்)
4, தம்புசெட்டித் தெரு, சென்னை-1.
தந்தி : " CHOCHING "
(தொலைபேசி : 25257 & 23655 லாட்ஜிங் ரூம்களுக்கு தொடர்பு)
உரிமையாளர்கள் :
R.S.N. அய்யர் & R.S.G. அய்யர்.

Dhideer (INSTANT) உணவுப் பொருள் தயாரிப்பாளர்கள்

' மால்டைன் '
இதை வென்னீரில் கலந்தும் பருகலாம்.

## கலை உலகுக்கு

## எங்கள் நல்வாழ்த்துக்கள்!

☆

**கிரௌன்–ஸன் அண்டு எம்.ஏ.ஈ.,என்.**

**பிராண்ட்**

★

எங்களிடம் குழந்தைகள் பள்ளிக்குக் கொண்டு
போவதற்குரிய டிபன் செட்டுகள், புத்தகப்
பெட்டிகள், மற்றும் பவுடர் பாக்ஸ், சோப்பு
டப்பா, சாப்பாட்டுத் தட்டுகள், டம்ளர்கள்
எல்லாம் விரும்பிய முறையில்
கிடைக்கும்.

—

எங்கள் பாத்திரங்களை
எல்லோரும் அன்புடன் வரவேற்கின்றனர்.

—

பண்டிகைகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும்
எடுப்பானது. ஒவ்வொரு குடும்பத்தின் தேவைகள்
அனைத்திற்கும் அவசியமானது.

★

## எம். ஏ. எதிராஜுலு நாயுடு

தொலைபேசி: 32106

7-4, ஈவினிங் பஜார், சென்னை-3



107 வருடங்களாக உலகப் புகழ் பெற்ற

## "மயில் மார்க்"

P. V. சாம்பார் பொடி,

P. V. ரசப்பொடி,

P. V. கறிப்பொடி—

(மசாலா பொடி),

P. V. ஊறுகாய்கள்,

P. V. சாஸ்—

வகையருக்கள்

தயாரிப்பவர்கள்:

## P. VENKATACHALAM

**CONTIMENTS**

No. 1, BRODWAY MADRAS-1

ESTD: 1860

கன்யாகுமரி மாவட்டத்தில்

மருத்துவத் துறையில் மக்களின் தேவைக்குரிய

எல்லாவற்றையும் விற்பனை செய்யும் ஸ்தாபனமாக

உயர்ந்து வருகிறது

# 'குமார் மெடிக்கல் சென்டர்'

நாகர்கோவில்

போன் எண் 225

உங்கட்குத் தேவையான

☆ மருத்துவ சாமான்கள்

☆ மருந்து வகைகள்

☆ டின் உணவு மாவுகள்

கிடைக்கும் நாணயமான நிலையம்



உரிமையாளர் :

டாக்டர் கே. பத்மனுபன்,

பி. எஸ். சி., எம். பி. பி. எஸ்.

பிராண வாயுவு சிகிச்சைக்குரிய அவசியமானவைகள் இதுவரை வெகு தூரமான சென்னை யினின்றும்—வேறு இடங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்டு சமயா சமயத்திற்குக் கிடைக்காமல் அவதிப்பட்டு வந்ததை நாம் அறிவோம். இனி இவ் அவசரத் தேவைக்குரிய பிராண வாயுவுடன் கூடிய சிலிண்டர்கள் (Oxygen Cylinders) உடனுக்குடன் கிடைக்கிறது.



# ஆலமர நாடகங்கள்

எஸ்.டி. சுந்தரம்.எம்.எல்.சி.

**சங்கீதக் கோவலன்—சாகாத நாடகம்! :**

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற காப்பியக் கோயிலின் தெய்வமான கண்ணகி தேவியைப் பற்றியோ, கற்பின் மகிமையைப் பற்றியோ, அதை இவ்வளவு சிரமப்பட்டு எழுதி வைத்த கவியரசர் இளங்கோவடிகளைப் பற்றியோ, அந்தக் கால நாடக ரசிகர்களுக்கோ அன்றி நாடகக் கலைஞருக்கோ கவலையில்லை!

அவர்களுக்குக் கண்ணகியைப் பற்றி கொஞ்சங் கூட அக்கறையில்லை; மாதவியைப் பற்றியும் தெரியாது. சோழனைப் பற்றியோ அல்லது பாண்டியனைப் பற்றியோ, கௌந்தி யடிகளைப் பற்றியோ, காவிரிப் பூம்பட்டினத்தைப் பற்றியோ, அரங்கேற்று காதையைப் பற்றியோ, அக்கால ரசிகன் கவலை கொள்ளவில்லை. அவர்களுக்கு அறிமுகமானதெல்லாம்...சங்கீதக் கோவலன் என்றதொரு பரிதாபமான பாத்திரந்தான். பாவம்! அந்தச்சங்கீதக் கோவலன் இராத்திரி முழுவதும் ஆர்மோனியக்காரருடனும், தபலாக்காரருடனும், சுரச்சண்டை, ஜதிச் சண்டை, சந்தச் சண்டை, தனிச் சண்டை, கடைசியாக சொந்தச் சண்டை ஆகிய இத்தனை சண்டைகளையும் போட்டுக் களைத்துப் போகும்வரை காம்போதி ராகத்தைப் பாடிய பின், இனிமேல் முடியாது என்ற நிலை வந்தவுடன் 'ஆ ... ஈசா ... சர்வேசா ... மதுரேசா ... தேவி ... என் ஆவி ... நான் பாவி ... உனைக் கூவி ... பாண்டியனைப் பழிவாங்கு ...'' என்று ஏதோ 'சுயம்' ஒன்றைச் சொல்லிவிட்டு, ஒருவழியாக மண்டையைப் போடுவான். ஆயிரம் இடி இடித்து ஓய்ந்த மாதிரி கொட்டகையில் ஒரு நிமிஷம் அமைதி நிலவும்.

சங்கீதக் கோவலன் செத்துப் போன அடுத்த நிமிஷமே அதுவரை மயங்கிக் கிடந்த ரசிகர்களின் உற்சாகம் புது மாப்பிள்ளை போல் புரட்சிப் புயல் போல் - எழுந்து பேயாட்டம் போடும்! அந்தக் காட்சி ஒரு கலவரமான சமூக நாடகத்தைப் போல அலங்கோலமாக இருக்கும்!

ஒருவர் எழுந்து 'ஒன்ஸ்மோர்' என்று ஓநாய் மாதிரி கூச்சலிடுவார். அதைத் தொடர்ந்து ஒரே நரியிசைக் கோரஸ்தான் கொட்டகை முழுவதும் கேட்கும்.

''திரையை இழு ... கோவலன்! ஒன்ஸ்மோர் ... பின்பாட்டு பலே ஜோர்! ஆர்மோனியம்! விடாதே! ... இனியொரு முறை சுருதி விடாமல் நல்லாப் பாடு ...நீ என்ன சாதாரண கோவலனா...சங்கீதக் கோவலனுச்சே...பாடித்தான் ஆகணும்...ஒன்ஸ்மோர்! ஒன்ஸ்மோர் - மறுபடியும் பாடு'' என்றெல்லாம் ரசிகத் தனத்தின் ராட்சஸ பலத்தோடு கூச்சலிடும் கூட்டம்! இதில் பல வகை உண்டு. ரசிகர்களே விரும்பிக் கேட்பது ஒரு வகை. நடிகரே தமது புகழை அதிகமாக விளம்பரம் செய்து கொள்வதற்காகச் சில தரகர்களுக்குப் பணத்தைக் கொடுத்து இவ்வாறு கொட்டகையில் 'ஒன்ஸ்மோர்' இயக்கத்தை நடத்தச் சொல்லுவதும், ஒருவகையான விளம்பரக் கலை! அல்லது தங்களுக்கு இருக்கும் கலை ஞானத்தை மக்கள் நன்ருக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே கலாட்டா செய்யும் அந்த ஊர் மைனர்களின் பொழுதுபோக்கு உற்சாகத்திலும் இவ்வாறு நேரலாம்.

எப்படியானாலும் என்ன? செத்துப் போன சங்கீத கோவலன் மறுபடியும் எழுந்து நின்றே ஆகவேண்டும். கோவலனுக்கு உயிர் வந்துவிடும். ஆனால் நாடகப் பண்பு பயங்கரமாக மரணமடையும். அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத கோவலன் சரளி வரிசையோடு 'ஜாம் ஜாம்' என்று மேலும் ஒரு மணி நேரம் மூச்சுவிடாமல் முகாரி பாடி, அசைய முடியாமல் அடாணா பாடி, சகிக்க முடியாமல் சகானா பாடி காதறும்படியாகக் கல்யாணியைப் பாடிய பிறகு இஷ்டமிருந்தால் சாகலாம். இல்லை—அப்படியே சாகாத கோவலனை இட்டிலிக் கடைக்குப் போய்ச் சாப்பிட்டாலும் சாப்பிடலாம். இப்படியும் ஒரு நாடகம்!

**ஏமாந்த எமதருமன் !**

மற்ரெரு வகை! சத்தியவான் சாவித்திரி நாடகம்! ரொப்ப சத்தியமாக நடந்து கொண்டிருக்கும்! எமன் வரும் கட்டம். கொட்டகையே ஒரு எமலோகம் போலக் காட்சியளிக்கும்! எமனை வரும் உயர்திரு ஓரடி கோடையிடியிடம் நிறைய எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருப்பர் ரசிக மகாஜனங்கள்.

எமனுக்கு நேரம் நெருங்கிவிட்டது. அவன் தோன்ற வேண்டிய காட்சி! மிகவும் எதிர்பார்க்கப் படும் சீன்! அமளி துமளிப்படுகிறது கொட்டகை! உள்ளும் புறமும் ஒரே கூட்டம்! இவ்வளவு மக்களும் அன்று எமனைப் பார்க்கவே வந்திருக்கிருர்கள்! காரணம், 'எங்கள் ஸ்பெஷல் எமனையும், தத்ரூபமான எருமையையும் பார்க்கத் தவருதீர்கள்....கோடையிடி ஆறடி எமனை வந்து குலை நடுங்கப் பாடுவார். கர்ப்ப ஸ்திரீகள் வரவேண்டாம்'' என்று எக்கச்சக்கமாக

விளம்பரம்செய்திருப்பார் நாடகக் காண்ட்ராக்ட்காரர். அந்தப் பாழாய்ப் போன எமன் என்ன செய்வானோ, எதைப் பாடுவானோ அல்லது அவனது எருமை என்ன செய்யுமோ? யாருக்கும் தெரியாது. ஆனால் விளம்பர எமனான அந்த காண்ட்ராக்டரின் பப்ளிசிடியில் தங்கள் உயிரை கொடுத்து டிக்கட் வாங்கி வந்திருப்பார்கள் ரசிக மகாஜனங்கள்!

குறித்த நேரம் கடந்து அரை மணி நேரமாகியும் எமன் வரவில்லை! எமன் வராவிட்டாலும் எருமையாவது வந்திருக்கலாம்! அதுவும் வந்து தொலையவில்லை. திரைக்குள்ளே மேடையில் என்ன நடக்கிறது என்பது யாருக்கும் புரியவில்லை. ஒரே கூச்சல் குழப்பம்!

உள்ளே ஒரே தர்க்கம். எமன் காலில் மண்டியிட்டுக் கெஞ்சிய வண்ணம் மன்றாடிக் கொண்டிருந்தார். யார்? சாவித்திரி சத்தியவான் உயிருக்காக மன்றாடவில்லை. நாடகக் காண்ட்ராக்டர் எமனை மேடைக்குப் போகும்படி கெஞ்சிக் கொண்டிருந்தார்!

"ஓரடி! என் உயிரை வேண்டுமானாலும் தர்றேன்...

தயவு செய்து மேடைக்குப் போங்க!......"

என்று கெஞ்சிக் கூத்தாடுகிறார் காண்ட்ராக்டர்.

"உன் உயிர் எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டியதெல்லாம் நீர் எனக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய பத்து நாடகத்தின் பழைய கடன்...எண்ணி வைத்தால் எமனாக ஆக்ட் பண்ணுவேன்...இல்லையேல் இதோ பாரும் என் வலது கையில் தேங்காய் எண்ணெய் ... என் வேஷத்தை நொடியில் கலைத்துவிடுவேன்...அப்புறம் கொட்டகையில் கூடியிருக்கும் அத்தனை பேரும் உமக்கு எமனாகி விடுவார்கள்" என்று தனது டிமாண்டைக் கடைசி முறையாகச் சொல்லி பாசக் கயிற்றை சாட்டை மாதிரி ஒரு சொடுக்குச் சொடுக்கினார்!

இப்படியாகத்தானே ஸ்ரீமான் ஆறடி எமதர்ம மகாராஜா ... ஒரு கடங்கார எமனாக மாறி உள்ளே தன் உரிமைகளுக்காக வர்க்கப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் ஸ்ட்ரைக் அல்லது கேரோவைப் பற்றி அறியாத ரசிக மக்கள் மேலும் மேலும் கூச்சல் போட்டவண்ணமிருந்தனர். சிலர் துணிந்து எமனை இழுத்து வர உள்ளே போக முயன்றனர்!

கடைசி வரையில் காண்ட்ராக்டர் மசியவில்லை! காசைக் கொடுத்தால் அவர் காண்ட்ராக்டர் இல்லை; வாங்காவிட்டால் இவர் எமன் இல்லை என்ற இழுபறிச் சண்டையை ஒருவாறு சத்தியவான் சமாதானம் செய்து, ஒருவழியாக எமனை மேடைக்கு அனுப்பி வைத்தார்.

எமன் என்றால் எமன்தான் என்று சொல்லுமளவுக்கு, தான் ஒரு சந்தச் சரப, சண்டமாருத ஓரடி சீரடி ஆரடி எமன் என்பதைப் போரடிக்காமல் பாடிக் கொண்டிருக்கும்போது திடீரென்று எமனுக்கு ஒரு யோசனை தோன்றுகிறது!

எமன் உயிர்களை விசாரணை செய்யும் கட்டத்தில் ஒருவனை, நாடகக் காண்ட்ராக்டரின் உயிராக வைத்துக்கொண்டு, காண்ட்ராக்டர்களின் மேலிருந்த அவரது நெடுநாளைய வஞ்சத்தைச் சரியாகப் பேசிப் பழி தீர்த்துக் கொண்டு அதைப் பற்றிய அவரது சொந்த சாகித்யமான பல பாடல்களைப் பாடுகிறார்!

பொழுது விடிகிறது. எமன் இளிச்சவாயனாகி கடைசியில் காண்ட்ராக்டரிடம் ஏமாந்து போகிறார்! காண்ட்ராக்டர் வசூலான பணத்துடன் மறைந்து விடுகிறார். பாவம்!கடைசியில் அந்த ஊர் நாட்டாண்மைக்காரரிடம் கடன் வாங்கிக் கொண்டு கண்ணீருடன் எமன் டிக்கட் வாங்குகிறார் ...

## ராமாயணமும் ரசிகாயணமும் !

இராமாயண நாடகம் நடக்கிறது! இராவணன் சீதையைத் திருடிக் கொண்டுபோகும் கட்டம். ஜடாயு வதம் முடிகிறது. சீதையை ஆகாயமார்க்கமாக எடுத்துப் போகிறான் சண்டாள ராவணன்!

ஜானகியைப் பிரிந்த இராமன் ஓங்கிக் குரலெடுத்து ஒப்பாரி வைத்து முகாரியில் தேம்பித் தேம்பி அழுகிறான். விம்மி விம்மிச் செருமி, விக்கல் நெஞ்சடைக்க, வேதனை விழியடைக்க, பச்சைக் குழந்தை போல் அழுது கொண்டிருக்கிறான். லட்சுமணனுக்கும் அன்று துயரத்தால் குரல் கம்மி விட்டதால் ராமனுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் அவன் ஒரு பக்கம் தேம்பிக் கொண்டு நின்றான்.

பார்க்கிறார் ஒரு பரம ரசிகர்! பாவம்! இராம பக்தர்! இராமன் கதறுவதைக் கண்டதும் தம்மையறியாகல் உடல் நடுங்கிப் பதறி விடுகிறார். அவரால் சகிக்க முடியவில்லை. எவ்வளவோ பொறுத்துப் பரர்த்தும் முடியவில்லை. 'சேச்சே!... இந்தப் பரிதாபம் கூடாது எப்படியும் இந்த முகாரி ராமனுடைய துக்கத்துக்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும்' என எண்ணினார். அடுத்த நிமிஷம் ஆஞ்சநேயரைவிட வேகமாக பாய்ந்து மேடையில் நின்றார். இராமனை அழவேண்டாமென்று ஆறுதல் சொன்னார்; பயனில்லை. முன்னைவிட ஓங்கி ஓவென அழுகிறார் அந்த இராமர். காரணம்! அதுதான் ஆறுதல் சொல்ல ஆள் வந்து விட்டதே! இனி அழுகைக்கென்ன பஞ்சம்? பார்க்கிறார் ரசிகர்! உள்ளே அலங்கார அறையில் ராவணனோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்த சீதையைப் பார்த்துவிட்டு அம்பைப் போல் பாய்கிறார். உள்ளே ஜானகியிடம் பேசிக் கொண்டிருந்த இராவணனை ஓரேயடியாக அடித்து மண்டையை உடைத்துவிட்டு, சீதையைக் கையும் களவுமாகப் பிடித்துவந்து இராமன் கையில் கொடுத்து "ஏ இராமா ... இந்தா உன் சீதை ... இனி அழுவாதே ... அயோக்ய ராவணன் இனி வர மாட்டான் ... அடி பலம், பாவம்! இளந்தம்பதிகள்! தைரியமாப் பிழைச்சுப் போங்க " என்று சொல்லி, முடியாத ராமாயணத்துக்கு ஒரு முடிவு கட்டி விடுகிறார் இந்த ராட்சஸ ரசிகர். அன்று ராமாயணம் கெட்டது! இராவணன் ஆஸ்பத்திரிக்குப் போனான். எல்லோரும் சேர்ந்து கோர்ட்டுக்குப் போனார்கள்.

இன்னும் அப்பீல் நடக்கிறது. ரஸிகாயணத்தின் தலைவிதியை ரஸிக உலகம் ஆர்வத்தோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

பயந்தோடிய பிரகலாதன்!

இரணியன் நாடகம் நடக்கிறது. பிரகலாதன் பாடம் படிக்கும் கட்டம். பத்து வயது பாலகன் ஆசிரியர் சொல்லிக்கொடுத்த எல்லாப் பாடங்களையும் நன்ருகப் பாடி ஜனங்களின் ஏகோபித்த அபிமானத்தைப் பெறுகிருன். ஏதோ ஒரு பாட்டைத் தவறுதலாகப் பாடிவிடுகிருன். 'குழந்தை தானே பாவம்' என்று கூட்டம் சும்மா இருந்திருக்கலாம். கை கொட்டி ஆரவாரம் செய்தது.

'நமோ நாராயணுய நம' என்பதற்குப் பதிலாக 'நமோ இரணியாய நம' என்று பாடியது தவறு என்று தெரிந்தவுடனே பிரகலாத வேடம் தாங்கிய பையனுக்கு உடம்பெல்லாம் நடுங்கி வேர்த்துக் கொட்டியது! மேடையின் இரு புறங்களிலும் ஒரு தடவை பார்க்கிருன்! ஒரு பக்கம் எரியும் பார்வையுடன் இரணியன் கனைத்து நிற்கிருன்! மறுபக்கம் பாடம் சொல்லிக் கொடுத்தஆசிரியர் பிரம்பும் கையுமாக நரசிங்காவதாரமாகி பல்லை 'நறநற' வென்று கடித்தவண்ணம் பையனைச் சபித்துக் கொண்டிருக்கிருர்!

காட்சி முடிந்து விட்டது! பையன் மேடைக்குள்ளே வரப் பயந்து நடு நடுங்கித் திண்டாடுகிருன்! ஒரு பக்கம் போனுல் ஏன் இரணியாய நம என்று சொன்னுய் என்று வாத்தியார் உதைப்பார்! மறுபக்கம் போனுல், ஏன் நராயணுய நம என்று சொன்னுய் என்று இரணியன் நொறுக்கிவிடுவான். ஒருகணம் திகைத்து நிற்கிருன்! மேலேயிருந்து சவுக்கு மரத்தோடு திரைப்படுதா அவன் தலையில் விழுவது போல் பாய்ந்து வருகிறது ...

பிரகலாதனை உண்மையிலேயே அந்தக் கலிகாலக் கடவுள் கைவிட்டு விட்டதாக எண்ணி, 'ஆபத்பாந்தவா ... அனுத ரட்சகா' என்று கூப்பிய கையுடன் உண்மையான ரட்சகர்களாகிய ரசிக மகா ஜனங்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தை நாடி ஓடுகிருன்.

'பாவம்! பையனது நடிக்கத்தைப் பார்த்த ஒரு ரசிகர் அவனைத் தன்னிடத்தில் உட்கார வைத்து ஆறுதல் கூறுகிருர்!

பல நாள் 'நாராயணு! நாராயணு' என்று கதறிய பின் பால நடிகனுக்குப்பயம் தெளிகிறது. இப்படியும் ஒரு நாடக நிகழ்ச்சி.

* * *

இவ்வாறெல்லாம் ஒரு வரைமுறையின்றி கலை வளர்ச்சிக்கு இன்றியமையாத, பண்பாடு, பயபக்தி, பொறுப்புணர்ச்சி, கடமை, கண்ணியம், கௌரவம், கட்டுப்பாடு முதலிய கருத்தோட்டத்தின் நுட்பங்கள் இல்லாமல், தான் தோன்றித் தனமாக வெறும் பொழுது போக்கும் கருவியாக மட்டும் நடந்து வந்த நாடகக் கலைக்கு ஒரு நல்ல உருவம் தந்து, பற்பல நற்கதைகளுக்கு நாடக நூல் வடிவம் தந்து, அக்கால நாடக மேடையில், நாணயத்தைக் காத்த பெருமை நமது தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளுக்கே உரியது. நாடகக் கலைஞர்களுக்கெல்லாம் நல்ல நிழல் தரும் அறிவாலயமாகவும் கலை ஆலமரமாகவும் அவர் விளங்கினுர்.

அதேபோல் நாடக மேடையைக் கட்டுப்பாடாகவும், கலைக் கோயிலாகவும் ஆக்கி, அடுத்த தலைமுறைகூட எண்ணி எண்ணிப் பார்க்கும்படியான பிரம்மாண்டமான காட்சியமைப்புக்களுடன், பிறவி மேதைகளான இசைக் கலைஞர்களைக் கொண்டு, நாடக மேடையைப் புனித மண்டபமாக ஆக்கிய பெருமை திரு. கன்னையா அவர்களுக்கு உரியது.

அந்த வழியைப் பின்பற்றி பிற்காலத்தில் கடந்த நாற்பதாண்டுகளாக நாடகக் கலை வளர்கிறது, வாழ்கிறது, வழிகாட்டுகிறது. வருங்காலத்தின் புதிய தலைவாசலில் இன்று நிற்கிறது. இந்த வளர்ச்சிக்கு வழிகாட்டி வரும் உண்மைக் கலைஞர்களை வணங்கி வாழ்த்திப் பல்லாண்டு கூறுகிருேம்.

* * *

நிகழ் காலத்தில் நடக்கும் நாடகங்களை நாம் அன்ருடம் காணுவதால் அவைகளைப்பற்றி அதிகம் விமரிசிக்க வேண்டியதில்லை. கடந்த பத்தாண்டுகளாக மிகச் சிறந்த நாடகங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றன.

அருமையான ஹாஸ்ய நாடகங்கள் பிரச்னைகள் அதிகமில்லாத எளிய நாடகங்கள், பிரசாரங்கள் இல்லாத பொதுவான கதைகள், குழப்பங்கள் இல்லாத குடும்பக் காட்சிகளைக் கொண்ட பல நாடகங்களை காணுகிருேம். சமூக நாடகத்தின் தவிர்க்க முடியாத சரக்குகளான ரிவால்வர், கோர்ட், பிராந்தி பாட்டில், சிகரெட், தூக்குமேடை, விதவையின் கண்ணீர், வில்லன் பிரசங்கம், கிழவன் கல்யாணம், துப்பறியும் போலீஸ், கருணையற்ற டாக்டர், கருப்புடை வக்கீல், முகமூடிக் கள்ளன், சீர்திருத்தவாதி, சமுதாயத் திருடன், பயங்கரச் சிரிப்பு இவைகளின் பயங்கரமான ஆதிக்கங்கள் இல்லாமலே நடக்கும் சமூக நாடகங்கள் ரசிகர்களுக்கு எவ்வளவோ மன ஆறுதலைத் தருகின்றன. புதிய நம்பிக்கையையும் தருகின்றன. அத்துடன் காலத்தின் புது மலர்ச்சி காரணமாக மிகச் சிறந்த பல சரித்திர நாடகங்களைத் தமிழகம் பெற்றுள்ளது.

* * *

நாடகம் தாய் போன்றது! சினிமா — நாடகத் தாய் பெற்ற குழந்தை போன்றது! தாயும் குழந்தையும் சேர்ந்து வாழ்ந்தாலும் தாய் குழந்தையாக முடியாது—குழந்தை தாயாகிவிட முடியாது என்ற நுட்பத்தையும் நாம் அறிய வேண்டும்.

இந்த நுட்பத்தை அறிந்து கொண்டால் நாடகம், சினிமா ஆகிய இரண்டும் போட்டி போடும் கலைகளாக அல்லாமல், ஒன்றையொன்று கொன்று தின்னும் கலையாக அல்லாமல், ஒன்றுக்சொன்று ஒத்தாசையாகச் சேர்ந்து வாழ வேண்டிய கலைகளாக வளர்ந்து நாகரிகத்தைக் காக்கும் சக்திகளாக விளங்கும் என்பது நிச்சயம்.

சென்ற காலத்தில் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், சதாவதானம் பாவலர் போன்றவர்களது நாடகங்கள் இல்லாமலிருந்திருந்தால் இன்று நாம் காணும் மிகச் சிறந்த நடிகமணிகளை நாம் கண்டிருக்க முடியாது.

அதுமட்டுமல்ல. அந்த நாடகங்கள் சாமான்யமான நாடகங்கள் அல்ல. அவற்றினுடைய தமிழ் நடையும், பாணியும் அக்காலத்திய முத்திரையைப் பெற்றிருக்கலாம். ஆனால் அதில் வரும் பாத்திரங்கள் மிக மிக அழுத்தமானவை. ஆயிரக் கணக்கான பறவைகளுக்கு அரண்மனை போல் விளங்கும் ஆலமரம் போன்ற பற்பல விதமான அற்புதப் பாத்திரங்களை அறிமுகப்படுத்திய அருமையான நாடகங்கள் அவை.

நாடகம், புராண — இதிகாச — சரித்திரப் பின்னணியில் பிறந்திருக்கலாம். ஆனால் பாத்திரப் படைப்புகள் ஒவ்வொன்றும் கட்டுக்கோப்புக் குலையாமல், குணசித்ர விளக்கமாய், குன்ருத உறுதி படைத்தவையாக விளங்குகின்றன!

அக்காலத்திய நாடகம் ஒரு ஆலமரம் என்ருல், அதில் வரும் பாத்திரங்கள் உறுதியான விழுதுகளைப் போல் வேரூன்றி மரத்தையும் காத்துத் தன்னையும் காத்து, மேற்கொண்டும் கலை வளர்ச்சிக்கு உதவி செய்து நிற்கின்றன. புராண, இதிகாச, சரித்திர நாடகங்களில் வரும் அத்தனையும் சிரஞ்சீவியான பாத்திரங்களாக என்றும் வாழும் தரமுடையவைகளாக இருக்கின்றன.

இராவணன், கர்ணன், இராமன், கண்ணன், பரதன், லட்சுமணன், அர்ஜுனன், அபிமன்யு, இந்திரஜித்தன், பீஷ்மன், துரோணன், சகுனி, கூனி, சிசுபாலன், இந்திரன், பானுமதி, சுலோசன, மண்டோதரி, ராதை, அனசூயா, நர்மதை, மேனகை சகுந்தலை, இரணியன், துருவன், இமவான், இத்யாதி பாத்திரங்களைப் போல் ஆழமும் அழுத்தமும் பின்னலும் பரவலும் நிறைந்த கற்பனைப் பாத்திரங்களை நாம் பிற்காலக் கதைகளில் அதிகமாகச் சித்தரிக்க முடியாது. மேற்கண்ட பாத்திரங்கள் யாவுமே நடிப்புக் கலைக்குரிய இலக்கண வரம்புகள் போல் அமைந்திருக்கின்றன.

மேற்கண்ட எல்லா சிரஞ்சீவிப் பாத்திரங்களையும் சமயம் வரும்போதெல்லாம் சந்திக்கும் 'நாரதர்' என்ற பாத்திரத்தைப் போன்ற உலக மகா நகைச் சுவைப் பாத்திரத்தை நம்மால் படைக்க முடியுமா? படைக்க வேண்டிய தேவையும் இனி இல்லை. ஆனல் மேற்கண்ட பாத்திரங்களை இழக்க வேண்டிய அவசியமுமில்லை. மேற்கண்ட மிகப் பெரிய பாத்திரங்களை சகல கலைக் குண, சித்திரங்களை ஏற்று நடித்த பயிற்சியின் பலன் என்ன என்பதையும், அதனுல் எவ்வளவு அழுத்தமான கலையறிவைப் பெற முடியும், என்பதையும் இன்று தமிழகத்தில் சிறந்து விளங்கும் கலைமணிகளின் சாதனையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து சரித்திர பாத்திரங்களைப் பார்க்கலாம். சேரமான், இமயவரம்பன் செங்குட்டுவன், சோழ — பல்லவ — பாண்டிய மன்னர்கள், அசோகன் — ராஜராஜன் — சாணக்கியன் — மனுநீதிச் சோழன், சந்திரகுப்தன் — குலோத்துங்கன், சாளுக்கியன் — பாரி, குமணன் — அதியமான், அவ்வையார், கபிலர், நக்கீரன், பாணன் முதலிய பாத்திரங்களும், அடுத்து காப்பியங்களில் வரும் கண்ணகி, மாதவி, கோவலன், மேகலை, பாண்டிமாதேவி, செழியன், குண்டலகேசி, ஆட்டன் - அத்தி மற்றும் பிற்கால நூல்களில் வரும் பெருமைமிக்க பாத்திரங்கள். இவை யாவுமே நமது தமிழ் நாடகத்துக்கு வலிமை சேர்த்த பாத்திரங்களாக அமைகின்றன.

இன்று நாம் நாடகத் துறையில் ஏதேனும் வளர்ச்சி பெற்றிருக்கிருேம் என்ருல், அந்த வளர்ச்சி என்ற கட்டிடத்துக்குரிய அடித்தளமாக இத்தகைய நாடகப் பாத்திரங்கள் பெரிதும் உதவியாயிருக்கின்றன என்பது உண்மை.

இத்தகைய பாத்திரப் படைப்புகளைப் பாதுகாத்து காலத்துக்கேற்ற புதுமெருகுடன் நடத்த வேண்டிய கடமையும் நமக்குண்டு என்பது காலப் போக்கில் தெரியும்.

நமது சரித்திரங்களையும், நாகரிகத்தின் சின்னங்களையும் கோயில்களையும், கல்வெட்டுக்களையும் எப்படிக் காப்பாற்றி நமது வரலாற்றை அறிந்து கொள்ளுகிருேமோ, அதே போல் நாடகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த பழைய நாடகங்களையும் பாதுகாக்கத்தான் வேண்டும். பெற்றெடுத்த தாய் தந்தையரின் படங்களை வேண்டாமென்று யாராவது சொல்ல முடியுமா?

வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நமக்கு இந்தப் பழைய கந்தல்களெல்லாம் எதற்கென்று அலட்சியப்படுத்துவதற்கில்லை. இந்த நாடகங்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகியும் அசையாது நிற்கும் ஆலமரம் போன்ற அழியா வரம் பெற்றவையாயிருக்கின்றன! இந்த ஆலமர நாடகங்களைக் காப்பாற்றினல் அதன் நிழலிலே ஆயிரமாயிரம் கலைப் பறவைகள் கூடு கட்டி மகிழ்ந்து குலவி வாழலாம்.

* * *

நெல் விளையும் நஞ்சை வயல்கள் நிறைந்த கிராமங்களில், ஆங்காங்கு ஆலமரங்கள் வளர்ந்தோங்கி காட்சியளிக்கும். 'இந்தப் பஞ்ச காலத்தில் அந்த இடத்தை ஏன் வீணுகப் போட வேண்டும்? அந்த ஆலமரத்தையும் அழித்துவிட்டால் அந்த ஒரு ஏகர் நிலத்திலும் நெல் போடலாமே' என்று பல ஆலமரங்களை ஒரு புத்திசாலி வெட்டி வீழ்த்துகிருர் என்று வைத்துக் கொள்வோம்!

அடுத்த ஆண்டு அந்தக் கிராமத்து வயலில் பயங்கரமான வெட்டுக்கிளிகளின் தொல்லை பெருத்து விடும். முன்பெல்லாம் அரண்மனை போல் வளர்ந்திருந்த ஆலமரத்தில் வாழ்ந்த ஆயிரமாயிரம் கிளிகளும் மைனாக்களும் பறவைகளும் பயிர்களைப் பாழாக்க வரும் பூச்சிகளையும் வெட்டுக்கிளிகளையும் பெருக விடாமல் போராடி அழித்துப் பயிரைக் காப்பாற்றின.

இந்த ஆண்டு ஆலமரத்தை இழந்த துயரத்தில் பறவையினங்கள் எங்கோ பறந்து ஓடிவிட்டன. ஆகையால் பயிர்களுக்குப் படுசேதம் நேர்ந்துவிட்டது. அத்தோடு வயலில் வேலை செய்தபின் வெயிலுக்கு ஒதுங்க நிழலின்றி விவசாயிகள் தவித்தனர்.

* * *

ஆலமரத்தை வெட்டுவது மிகவும் சுலபம். ஆனால் மற்றொரு ஆலமரத்தை வைத்துப் பயிராக்கிப் பார்க்க பல நூற்றாண்டுகள் தேவைப்படுமே!

அதைப்போல இன்று நம்முடைய அன்றாடத் தேவைக்கான எளிய சிரிப்பு நாடகங்கள் எல்லாம் அன்றாடத் தேவைக்கு அவசியமான அரிசியைப் போன்றவை.

பழைய நாடகங்கள் அரிசி தரும் பயிர்களைக் காக்கும் பறவைகளை வளர்க்கும், ஆலமரங்களைப் போன்றவை.

உண்மையறிந்த ஒரு நாகரிகமான கிராமவாசி ஆலமரங்களைப் பூச்சி புதர்கள் அணுகாமலும், புற்று மண்டி அழிக்காமலும் பாசத்துடன் காப்பாற்றுவான். காரணம் அதனுடைய அவசியமும், மகிமையும் அவனுக்கு நம்மைவிட நன்றாகத் தெரியும். அந்த ஆலமரத்தில் அவன் இன்றைய வெயிலுக்கேற்ற நிழலை மட்டும் பெறவில்லை. அங்கே கடந்த காலச் சரித்திரத்தின் சாயலையும் காணுகிறான்! அவனுடைய தந்தையரை தந்தையரின் முந்தையரை, மூத்தவரை, பாட்டியின் பாட்டியர் பாம்பரையைப் பண்பாட்டின் நிழலைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறான்.

அந்த ஆலமரங்களில், பயிர்களைக் காக்கும் பறவைகள் மட்டும் வாழவில்லை. வருங்காலப் பேரன் பேத்திகளும், குமரர்களும், குமரிகளும் நீண்ட ஊஞ்சல் கட்டி உந்திப் பறந்து உயர்ந்து விளையாடி, உள்ளங் களிக்கும் ஒப்பிலாக் காட்சியையும் கண்டு ஆனந்திக்கிறான் அந்த விவசாயி.

அத்தகைய ஆலமரம் போன்ற அற்புத நாடகப் படைப்புகளில் பரவிக் கிடக்கும் பாத்திரங்களைப் புது மெருகிட்டுப் பார்த்து மகிழும் கலைக் கண்ணோட்டம் நமக்கு வழி காட்டுமாக!

அத்தகைய கலை ஆலமரத்துக்கு அன்று விதை நட்ட தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளையும், அவர் காட்டிய வழியில் சென்று நாடகக் கலையை நலிவிலிருந்து மீட்டுத் தந்த தமிழகத்தின் கலைமணிகளான பம்மல் சம்மந்த முதலியார், கலைஞர் கன்னையா, ஆசிரியர் கந்தசாமி முதலியார், சதாவதானம் பாவலர் ஆகிய பெரியவர்களை நன்றியுடன் போற்றுவோமாக. சரித்திரத்தின் உண்மைகள் மறைக்கப்படாமலிருந்தால் அந்த உண்மைகள் வருங்காலத்தில் உரமாக விளங்கி நாட்டுக்கு வழி காட்டுவது உண்மை.

இந்தச்சமயத்தில் மற்றொரு உண்மையை நாம் மறக்கக் கூடாது. ஆங்கில மகா கவியும், உலக நாடகப் பேராசானுமான ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் உலகில் உள்ள சகலவிதமான பாத்திரப் படைப்புகளும் நடமாடுகின்றன. ஆகையால் ஷேக்ஸ்பியரைப் படித்தவர்களுக்கு வாழ்வின் உண்மைகள் முழுதும் தெரியும் என்பார்கள்.

ஆம். காலத்தை மீறி நிற்கும் அமர ஓவியங்களைக் கொண்ட அந்த மகாகவியின் நாடகப் படைப்புகள் படைக்கப்பட்டு முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகின்றன. அதற்குப் பிறகு ஆங்கிலத்தில் ஆயிரமாயிரம் நாடகங்கள் வளர்ந்து புகழ் பெற்றுச் சிறந்துள்ளன. இருந்தாலும், ஷேக்ஸ்பியரின் நாடங்களில் உள்ள நற்கருத்து முத்துக்களும், மனோதத்துவ மணிகளும் மனித சமுதாயத்துக்கு என்றும் தேவையான அடிப்படை உண்மைகளைத் தந்து என்றும் கலை ஒளி வீசிக்கொண்டே இருக்கும். அழியா வரம் பெற்ற அமர ஓவியங்களாகித் திகழ்கின்றன! அதேபோல்தான் நமது சரித்திர புராண நாடகங்களும் அவைகளில் காணப்படுகிற மிக நல்ல பாத்திரங்களும் காலங் கடந்து நிற்கும் கலைச் சிறப்பு பெற்றவையாக விளங்குகின்றன!!

கங்கையும் காவிரியும் பழைய நதிகள்தான் ஆனால் அதில் ஆண்டுதோறும் பெருகிவரும் புதுப் புனல் வெள்ளம் எப்படி நமது தாகத்தைத் தணித்து, பசியை நீக்கி, பயிரை வளர்த்து நம்மை வாழ வைக்கிறதோ அதே போல்தான் அக்காலக் கதைகளும், பாத்திரங்களும், தமது பழமையில் எக்காலத்துக்கும் வேண்டிய அடிப்படைக் கருத்துக்களைத் தம்மகத்தே கொண்டுள்ளன. அவற்றைப் பழைமையானவை என்றுதள்ளி விடுவதற்கில்லை. பித்தளையும் இரும்பும் காலத்தினால் பழுதுபடும். தங்கப் பாத்திரம் எத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும் களிம்பேறாது; துருப் பிடிக்காது. அதே போல்தான் ஆலமரம் போன்ற சிரஞ்சீவி நாடகங்களும் நிரந்தரத் தன்மை பெற்று விடுகின்றன.

* * *

நல்லவர் சேவையினால் நாடகக் கலை மக்கள் கலையாக இன்று மலர்ந்திருக்கிறது. இந்த மக்கள் கலைக்குரிய மதிப்பை நமது சர்வகலாசாலைகள் உடனே தந்து உதவ முன்வர வேண்டும் முற்காலத்தில் எவ்வளவு பெரிய அரிய கலைப்படைப்பாயினும் அதைச் சங்கப் புலவர்களும் சங்கப் பலகையும் ஏற்றுக் கொண்ட பிறகுதான் மன்னர்களால் மதிக்கப்படும் இன்று நடப்பது மக்கள் ஆட்சி. சுதந்தர நாடு. நாட்டு மக்கள் மதிக்கும் இக்கலையை இக்காலச் சங்கமாகிய பல்கலைக் கழகம் அலட்சியப் படுத்தாமல் அங்கீகரிக்க வேண்டும். இதற்குரியதொரு சங்கப் பலகையையும் ஆக்கித் தந்து நாடகக் கலையை உரியதொரு அரியாசனத்தில், அறிவாசனத்தில் அமர்த்த வேண்டுவது பெரியோர் கடமை; எமது வேண்டுகோள்!

வாழ்க நாடகக் கலை ! வாழ்க நல்லுலகம் !

## டி. யு. சி. எஸ். லிமிடெட்

(நிறுவனம் : 1904)

109, பெரிய தெரு சென்னை 5

இது ஆசியாவிலேயே மிகப் பெரியதும் தலைசிறந்ததுமான உபயோகிப்போர் கூட்டுறவு சங்கம்.

இதில் 75,000 அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இதற்கு சென்னை நகரிலும், அதைச் சுற்றிலும் 69 கிளைகள் இருக்கின்றன. இச்சங்கம் விலைவாசி உயர்வதை தடுக்க முக்கிய ஸ்தாபனமாக இருக்கிறது.

"காமதேனு" கூட்டுறவு சிறப்பு அங்காடி (டி. யு. சி. எஸ். கிளை) நகருக்கு ஒரு அணியாக விளங்குகிறது. இது குடும்பங்களுக்குத் தேவையான சாமான்கள் நல்ல சரக்குகளாகவும் நியாயமான விலையிலும் கிடைக்க உதவுகிறது.

எங்களுடைய கிளைகளுக்கோ, காமதேனு கூட்டுறவு சிறப்பு அங்காடிக்கோ விஜயம் செய்து திருப்தியுடன் தங்கள் தேவைகளை வாங்கிக் கொள்ள எல்லோரையும் கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்.

## திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு

மத்திய வங்கி (வரையறுக்கப்பட்டது.)

வண்ணார்பேட்டை — திருநெல்வேலி-3.

துவக்கம், 1918.

கிளைகள் :

கோவில்பட்டி, தென்காசி, வள்ளியூர்,
தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்.

தொலைபேசி எண் :

தலைமை அலுவலகம் — 445
கோவில்பட்டி கிளை — 65
தென்காசி கிளை — 242

தலைவர் :

திரு. எம். டி. கே. இராமலிங்க முதலியார்

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ... ரூ. 80,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் .... ரூ. 50,99,350
காப்பு நிதி ... ரூ. 14,47,937
அலுவல் நிதி—சுமார் ரூ. 3 கோடிக்கு மேல்

மாவட்டத்திலுள்ள எல்லா கூட்டுறவு நிறுவனங்களுக்கும் திருநெல்வேலி நகர் மன்றத்திற்கும் பாங்கராய் விளங்குவதோடு தமிழ்நாடு முழுமைக்கும் குறைந்த செலவில் டிராப்டுகள் வழங்கப்படும். எல்லாவிதமான டிபாசிட்டுகளும் கீழ்க்கண்ட வட்டி விகிதத்தில் பாங்கின் தலைமையலுவலகத்திலும் கிளைகளிலும் ஏற்றுக் கொள்ளப்படும். கூட்டுறவு பாங்குகளில் டிபாசிட்டு செய்யப்படும் பணமானது, நாட்டின் நலனுக்கு குறிப்பாக விவசாய காரியங்களுக்குப் பயன்படுவதால், மாநில அரசினர் நமது பாங்கு 3 வருடங்களுக்கும், அதற்கு மேலும் வாங்கக்கூடிய டிபாசிட்டுகளின் அசல் வட்டி முழுமைக்கும் உத்திரவாதம் அளித்துள்ளார்கள்.

| | |
|---|---|
| தவணை டிபாசிட்டுகள் | 5% முதல் $7\frac{1}{2}$% வரை |
| ரெக்கரிங் டிபாசிட் | $6\frac{1}{2}$% |
| சேமிப்பு டிபாசிட்டுகள் | 4% |
| கரண்டு டிபாசிட் | $\frac{1}{2}$% |

மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து விண்ணப்பிக்கவும்

எம். லக்ஷிமி நாருயணசாமி
துணைப்பதிவாளர்
தலைமை நிர்வாக அதிகாரி.

டி. வெங்காசலம் எம்.ஏ.,
காரியதரிசி



# இறவாப்புகழ் பெற்றவர்!

சரவண பவானந்தர்

இராகம் : கானடா.　　　　தாளம் : ஆதி.

எடுப்பு

என்ன கைமாறு செய்வாய்? - மனமே!
எங்கும் புகழ் தங்கிய நம்
சங்கரதாஸ் சுவாமிகட்கு : (எ)

தொடுப்பு

மன்னர் மன்னவர் அவர் தன்னை அடுத்தவர்க்கு
வள்ளல் எனத் தமிழை அள்ளிக் கொடுத்தவர்க்கு
(எ)

முடிப்பு

ஒன்றல்ல இரண்டல்ல நாடக நூலே!
ஒன்ப தியற்றியவர்! யார் அவர் போலே?
இன்றல்ல நேற்றல்ல என்றும் மண் மேலே!
இறவாப் புகழைப் பெற்றார்; புதுவையி னாலே!
(எ)

அடிகள் எழுதிய மெய்ப் பாடலைப் பாடு!
அவர் போல் புலவர்களை அன்புடன் தேடு!
மிடியறும் படி செய்க! மிகு நன்றி யோடு!
வெற்றி கிடைக்கும் சொன்னேன் நற்றவர்க்கீடு
(எ)




# இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு சப்ளை & மார்க்கட்டிங் சொசைடி லிட்.,

## கியூ. 816.

## 39-40, தளவாய் அக்கிரகாரம், மதுரை-1.

தலைவர் : திரு. வி. வி. இராமசாமி M. P.,

தலைமை ஆபீஸ் : 39-40, தளவாய் அக்கிரகாரம், மதுரை-1

தந்தி : RAMCO STORE

தொலைபேசி எண்கள் :

| | | | |
|---|---|---|---|
| தலைமை யலுவலகம் | 2675 | காரியதரிசியின் இல்லம் | 2889 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் கிளை | 19 | காரைக்குடி கிளை | 185 |
| சிவகங்கை கிளை | 63 | பரமக்குடி கிளை | 71 |

கிளைகள் :

ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சிவகங்கை, பரமக்குடி, காரைக்குடி, இராமநாதபுரம், அருப்புக்கோட்டை, தேவகோட்டை, திருப்பத்தூர், திருவாடானை, தொண்டி, மண்டபம், பாம்பன், தங்கச்சிமடம், இராமேஸ்வரம், கீழச்சிவல்பட்டி மற்றும்

53 நியாயவிலைக் கடைகள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு ஸ்டோர்களுக்கும், பிரதம நாணய சங்கங்களுக்கும் தங்களது அங்கத்தினர்களின் தேவைப் பொருள்களை விநியோகம் செய்யும் ஒரே ஸ்தாபனம்.

விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தவென ஏற்பட்ட மத்திய அரசாங்கத்தின் வாங்குவோர் கூட்டுறவு திட்டத்தை அமுலாக்கும் ஸ்தாபனம்.

உணவுப் பொருள்கள், சர்க்கரை, காப்பி விதை, பல சரக்கு, சிமெண்டு, இரும்புப் பொருள்கள், குழந்தைகள் பால் உணவு மற்றும் எல்லாவிதமான தேவைப் பொருள்களும் மொத்த விநியோகஸ்தர்கள்.

இரசாயன உர விநியோகத்திற்கு அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஸ்டாக்கிஸ்ட்

## "ராம்கோ"

கலப்பு உரத் தயாரிப்பாளர்கள்

ஆர். எஸ். எட்வர்டு,
காரியதரிசி.

# நாடகக் கோமாளி

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்

விகடனை யொரு கோமாளியென்று
விளம்புவார்கள் தெரியாதவர்கள்,
வித்துவான்கள் கர்வம் மட்டந்தட்ட வந்த
வீரனுமென்பார் தெரிந்தவர்கள்;

சகடம் ஓடந்தனிலேறும் ஓடம்
தானுமோர்நாள் சகட மேறும்,
சாஸ்திரவாதத்தில் எந்தநாளும் வெற்றி
தானடைந்தாருண்டோ நீர்கூறும்.

பத்துப்பேர் குஸ்தியில் முன்னமே பீட்டடி
பட்டவனே பின்பயில் வானும்;
பாரிலே வெற்றியும் தோல்வியுமுண்டு,
பதஷ்டம் கொள்ளாதவன் வித்வானும்;

ஆடை பட்டுக் கோட்டுப் பீதாம்பரம்கடி
காரச் சங்கிலி இன்னும் செவியில்;
அற்புதமான கடுக்கனிட்டாலும் நல்
ஆக்டர்களாவாரே இப்புவியில் ?

பாடைக் கம்புபோலே நீண்டும் செக்குபோல்
பருத்திருந்தாலு மாமோ விற்பனம் ?
பாவலர்களாயினும் வாக்குச் சமர்த்தாகப்
பாஷிப்பதே கெட்டிக்காரத்தனம்.

குறிப்பு :—நாடக அரங்கில் கோமாளியாக வரும் நடிகர்களை மக்கள் சிலர் இழிவாக மதித்து எள்ளி நகையாடுகிருர்கள் அல்லவா! அவர்களுக்கு அறிவுறுத்துவதற்காக இப்பாடல் சுவாமிகளால் பாடப்பட்டது.

☆☆☆☆☆☆☆☆:☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆:☆☆☆☆☆☆

# திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனை சங்கம் லிமிடெட்,

## 0·961, தூத்துக்குடி — 1.

(நிறுவனம் 1940)

தலைவர். திரு. ஏ. பி. ஸி. வீரபாகு, பி. ஏ.

தலைமை அலுவலகம் : 134, பெரியகாட்டான் ரோடு, தூத்துக்குடி - 1.
தந்தி விலாசம். "CENTSTORES"
தொலைபேசி : தலைமை அலுவலகம் - 56, 56ஏ, 56பி,
நெல் அறவை ஆலை : எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி - 400.

**கிளைகள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கோவில்பட்டி | — — | 107. | சங்கரன் கோவில் | — | 73. |
| தென்காசி | — — | 246. | ஸ்ரீ வைகுண்டம் | — | 38. |
| நான்குநேரி | — — | 28. | திருச்செந்தூர் | — | 46. |
| அம்பாசமுத்திரம் | — — | 268. | செங்கோட்டை | — | 91. |

திருநெல்வேலி — 94.

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட பங்குத் தொகை | — — — | ரூ. 5, 12, 450/- |
| பாதுகாப்பு நிதி | — — — | ரூ. 5, 75, 011/- |
| இதர சேமிப்புகள் | — — — | ரூ 13, 15, 012/- |

இம்மாவட்டத்திலேயே பிரதம பண்டகசாலைகளின் தேவைகளை நிறைவேற்றும் ஒரே மொத்த விற்பனை கூட்டுறவு சங்கம்.

மத்திய அரசினர் விலைக்கட்டுப்பாடு திட்டத்தை அமுல் நடத்தும் மொத்த கூட்டுறவு விற்பனை சங்கம்.

உணவுப் பொருட்கள், ஜீனி, காப்பிக் கொட்டை, மளிகை சரக்குகள், துணி முதலியவற்றில் மொத்த விற்பனையாளர்.

இரசாயன உரங்களுக்கு தமிழக அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட இருப்பு வைப்பவர்கள்

இம்மாவட்டத்தில் ரசாயன உர விற்பனையில் ஏகபோக மொத்த சில்லரை விற்பனையாளர்கள்.

"ஸ்டேன்ஸ்'' கலப்பு உரம், "பாரி'' சூப்பர் பாஸ்பேட், "பாக்ட்'' அம்மோனியம் பாஸ்பேட் முதலியவற்றின் விற்பனையாளர்கள்.

நல்ல தரமான சரியான பக்கங்களுடன் நியாயமான விலையில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு வேண்டிய நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பாளர்கள்.

திருச்செந்தூர் குடிசைத்தொழில் கூட்டுறவு தீப்பெட்டித் தொழிற்சாலையின் "செந்தில் வேல்'' "வேல்'' தீப்பெட்டிகளின் விற்பனையாளர்கள்.

அ. க. ஞானியார்
கூட்டுறவு உதவிப் பதிவாளர்,
செயலாளர்.

☆☆☆☆☆:☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆:☆☆☆☆

# குருபக்தி

தேசியகவி இராஜா ஷண்முகதாஸ்

விருத்தம்

அன்புக் கடல்பெருகி யருளுருவ மானகுரு! அமரக்குரு!
இன்பநா டகக்கலைக் கெழில்தந்த ஞானகுரு! இயலிசைக்குரு!
பொன்புவியில் நடிகரை வாழ்வித்த புனிதக்குரு! போதக்குரு!
என்பணிக் குயராசி தந்தசங் கரகுரு! இன்னிசைக்குரு!

ஆசிரிய விருத்தம்

குட்டுண்டு நான்தொண்டு செய்தடிமைப் பூண்டகுரு!
குகனருளைப் பெற்றக்குரு!
கூட்டிலடைப் பட்டபுழு வைத்தன்போ லாக்குங்குரு!
குளவி குணமுற்றக்குரு!
தட்டுண்டு கரையேறி முட்டையிட் டகலுங்குரு!
தசைகெட்டு மாயாக்குரு!
தன்முட்டை களைநினைத்த கணமேயுரு வாக்குங்குரு!
சத்தாமை போன்றக்குரு!
கட்டுண்ட குஞ்சுகளைச் சிறகுளணைத் தாளுங்குரு!
காருண்யக் கோழிக்குரு!
கையெழுது கோலெடுத் ததுந்தங்கு தடையின்றி
கவிமாரி பொழியுங்குரு;
தொட்டுநீ ரிட்டுஉயர் வாக்குமுக் குணக்குரு!
தூயசந் யாசக்குரு!
சுத்தபிர மச்சரிய தத்துவ மிகுத்தகுரு!
துணை சங்கரதா சக்குரு!

## சங்கரதாச சாமியின் கீர்த்தனம்

புலவர் பி. வி. அப்துல்கபூர் சாஹிப்

பல்லவி

சங்கரதாச சாமியின் கீர்த்தனம் தமிழர்க்கு
விருந்தாமே—அதில்
தங்கிய பொருட்சுவை அறிந்தால் வினையகற்றத்
தக்கதோர் மருந்தாமே (சங்)

அனுபல்லவி

மங்கள நாடக இரவி மறைந்தபின்னே மதியென
வந்து பிறந்தார்—தனது
வாழ்நாள் முழுவதுமே நாடகக் கலைக்கென
மதித்தே சுகத்தை மறந்தார்—மனதில்
பொங்கிய கவிகளைப் பற்பல நாடகமாய் புனைந்தே
இல் வாழ்வைத் துறந்தார்—இவரே
புதுமையாய் நாடகச் சபையொன்று கூட்டியே
பூவுலகத்திற் சிறந்தார்—இவரின்
புத்திரர் போலவே பற்பல மாணவர் கற்றுயர் வாகிட
நற்குரு வாகவே
போதித்து வழிகாட்டினுர் பக்திநெறியைச் சாதித்து
ஞானமூட்டினுர் சித்தியைப் பெற்ற (சங்)

சரணம்

திங்களைச் சேர்ந்திலகும் தாரா கணமெனச்
சீடரும் ஒளிவீசினுர்—சிறந்த நம்
செந்தமிழ் நாடகத்தின் சிறப்பினை மேடைகளிற்
தேன்மழை போலப் பேசினுர்—குருவுடைய
இங்கிதப் பாடல்களை ஏற்காதிருந்தவர்கள் ஏங்கி
மனது கூசினுர்—அருட்கவியின்
இனிப்பை யறிந்தவர்கள் நாத்தீகத் தன்மைவிட்டு
இலங்குவெண்ணீறு பூசினுர்—சங்கரதாசர்
ஏற்படுத்திய சீர் கவித்திரள் கோத்தமுத்தெனச்
சேர்த்த முத்தமிழ்
மாற்றுயர்ந்தது போற்றியுஞ்சிவ தோத்திரஞ்
செய நாற்பயன்பெற
இன்பமளித்திடும் அன்புவிளைத்திடும் மன் பயனுற்றிடும்
துன்ப மகற்றிடும்
ஏதமழிப்பது போதமுரைப்பது
நீதியருட்பிர சாதமளிப்பது—சங்கரதாச
எழுத்தசை சீர்தளை எதுகைமோனை புணர்ச்சி
இயல்புவிகாரந் தீட்டினுர்—சந்தி
இலக்கணவுறுப்புக்கள் ஐந்தையும் கீர்த்தனையில்
எழுதி நடித்துக் காட்டினுர்—உலகில்
வழுத்தா வடமொழியும் பற்பல நூல் வழக்கும்
மணித் தமிழ் தன்னிற் சூட்டினுர்—அதனுல்
மாணவருலகமும் நந்தமிழ் நாடகமும் வளர
வுற்சாக மூட்டினுர்—சாமி
வாயுரை தேவுரை யாகவே பாரினில்
வாகைகள் சூடின நாடக மாகின
வாட்டமேன் தமிழ் நாட்டிலோர் கவி
சூட்டு கீர்த்தனை கேட்டறிந்தபின்
வாகுமிகுந்தமிழ்ச் சங்கர நம்பி சகோதரரச்சிட
மேகமா வந்தநம்—சங்கரதாச சாமியின்


அழகிய அச்சு வேலைகளுக்கு
புகழ் பெற்ற ஸ்தாபனம்

**சுகுமாரி பிரிண்டர்ஸ்**

212-213, மேலமாசி வீதி
மதுரை-1

☆

அட்டைப் பெட்டிகளும்
சிறந்த முறையில்
தயார் செய்து
கொடுக்கப்
படும்.

☆

பத்திரிகை மற்றும் இதர
விளம்பரங்களுக்கு எழுதுக :

**தாஜ் பப்ளிசிட்டீஸ்**

த. பெ. எண் : 172
மதுரை-1



பூரண உரிமையாளர் :
**W. C. சுந்தரேசன்**

# சுவாமிகள் நாடகத்தில் நான்

நாடக நடிகர் S. S. சாப்ஜான்

'சுவாமிகள் நாடகத்தில் நான்' என்ற தலைப்பில் அடுத்து வரும் சுவாமிகளின் நூருவது ஆண்டு நினைவு விழா மலருக்கு எனது கட்டுரை ஒன்று வேண்டுமெனக் கோரிய என்பால் அன்பு கொண்ட பண்பாளர் உயர்திரு. T. N. சிவதாணு ஐயா அவர்கள் விருப்பத்திற்கிணங்க இக் கட்டுரையை எழுதத் துவங்கினேன்.

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்றபடி நாட்டுக்கொரு நாடகத் தந்தையாம் நமது உயர் தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் செந்தமிழ்க்குக் கந்தனும் என் தந்தையின் திருநாமத்தையன்றி வேறு எந்த நாமத்தையும் என் சிந்தையிலும் கருதேன் என்ற வீர உணர்ச்சி மிக்கவர் நம் சுவாமிகள். தன்னலமும் தகைமையற்ற செயலும் செல்வச் செருக்கும் படைத்தவரைத் துச்சமாகக் கருதும் தூய்மையுள்ளம் பெற்றவர் அவர். கல்வியறிவும் கலையுணர்வும் கருணையுள்ளமும் படைத்தவரிடம் சரளமாகப் பழகும் சற்குணமும் பண்பும் மிக்கவர்.

நேர்மை, ஒழுக்கம், மெய்யுணர்வு ஆகியவைகளுக்கு முதலிடம் தரத்தக்கவர். ஆயினும் மகா முன்கோப முடையவர்.

நாடகக் கலையொன்றே நாட்டின் கருவூலம் எனத் தன் ஆயுள் முழுதும் அதற்கென அரும் பணியாற்றி மறைந்த மாசிலா கலைவிளக்கு. 'இல்லறமல்லது நல்லறமில்லை' என்ற சொல்லறம் தன்னை மாற்றி, பிரம்மச்சரியமே பேரின்பம் என. அதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். கருத்தாழமும் கற்பனைச் செறிவும் மிக்க பாடல்களையும் உரையாடல்களையும் கொண்ட பல புராண நாடகங்களை செந்தமிழ் நாட்டின் செல்வங்களாய் வழங்கிய தமிழ்க்காவலர்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் தன்னில் நாடகத் தமிழை நாடு உள்ளளவும், கடல் நீருள்ளளவும் மாருதிருக்க வழங்கிய மாமருந்து.

'பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும் நாட்டுக்கு நல்ல பயன்' என்னும் மூதுரைக்கு எடுத்துக் காட்டாய் முன்னின்று பணியாற்றியவர்.

ஒருக்கால் முருகா வென்ருல் உள்ளம் குளிருகின்ற ஓங்கார நாதத்தில் திருக்காலமும் திளைத்துக் கிடந்து நாடக உலகிற்கு நற்பணியாற்றிய தவத்திரு சுவாமிகளின் சொந்த தத்துவ மீன லோசனி வித்துவ பால நாடக சபாவில் ஒரு சமயம் எனது நல்லதோர் இளமைப் பருவத்தில் இருந்து சில நாளே பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றேன். அவர் பாடல்கள் பல பயின்றேன். அதுவே வாழ்க்கையில் நான் பெற்ற பேறு ஆகும்.

நாடகத் துறையில் நல்லதோர் நடிகன் நான் எனப் பல்லோரும் பாராட்டக் காரணமான கருத்துக்களும் கற்பனைகளும் உரையாடலும் நடிப்பும் எனக்கு அவர் தந்த செல்வங்களேயாகும் என்ருல் அது மிகையாகாது.—அறிவுப் பெட்டகத்தை எனக்களித்த அம்மாமேதை மறைந்தாலும், அவர் தந்த கலைச் செல்வம் அவரை மறவாதிருக்கும் மாமருந்தாய் என்னுள் என்றும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனக்கு மட்டுமல்ல! இந்நாட்டில் வேங்கடம் முதல் குமரிவரை பரந்துள்ள தமிழகத்தில் சுவாமிகளின் பாடலின்றி நடைபெறத்தக்க புராண நாடகங்களே கிடையாது. அவர் தம் பாடல்கள் பத்திரப்பதிவு செய்தது போன்றதாகும். குறிப்பாகச் சொன்னுல், இன்று தஞ்சையிலிருந்து வரும் ஆண் வேட நடிகரும் மதுரையிலிருந்து வரும் பெண் வேட நடிகையும் ஒருவருக்கொருவர் சந்திக்காதவர்களாய் இருப்பினும், அரங்கத்தில் நாடகம் துவங்கி விட்டால் சந்திக்கும் தர்க்கங்கள், உரையாடல்கள், பாடல்கள் அனைத்தும் இருவருக்கும் சுவாமிகளின் பாடமாகவே இருக்கும். இதுவொன்றே சுவாமிகள் செய்த அரிய சாதனைக்குச் சான்று.

இதைத்தான் சுவாமிகள் அழியாத கருவூலமாக்கினுர். அதைத்தான் நான் தேடிவந்த செல்வமாய், நாடிவந்த ரசிகர்களின் உள்ளத்தைக் கவரப் பயன்படுத்திக் கொண்டேன்.

சுவாமிகளின் நாடகப் பாடல்களை நான் பயிற்சி கொள்ளாதிருந்திருந்தால் இத்தகைய அரிய வாய்ப்பினை இழந்திருப்பேன். இன்று நல்லதோர் நடிகன் என்ற பெயரும் புகழும் கிடைத்திராது. வயதான நல்ல கலைஞனென்ற முறையில் சென்னை சங்கீத நாடக சங்கத்தின் உதவித் தொகையும் பெற்றிருக்க இயலாது.

எனவே, சுவாமிகளை நான் என்றென்றும் வணங்கக் கடமை பெற்றவன். சுவாமிகள் நாடகத்தில் நான் என்ற முறையில், வாழ்க! சுவாமிகளின் அரும்பணி. வாழ்க! அவர் தம் பாடல்கள் வாழ்க! அவர் தம் மாணவர்கள்! வாழ்க! என்றும் நாடகக் கலை என வாழ்த்துகிறேன்.

# சென்னை மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்

**13/14, மூக்கர் நல்லமுத்து செட்டித் தெரு, சென்னை - 1**

தொலை பேசி எண் : 21784

கிளைகள் :

127, திருவற்றியூர் நெடுஞ்சாலை
வண்ணாரப் பேட்டை
சென்னை-21.

78, மாதாவரம் நெடுஞ்சாலை
பெரம்பூர்
சென்னை-11.

உங்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்திற்கு
இன்றே எங்கள் பாங்குயில் கணக்கு வையுங்கள்
உங்களுடைய சிறு சேமிப்பு நாட்டின் பெரு மூலதனம்.

கரண்ட் டிபாசிட்களுக்கு ½% வட்டி உண்டு
சேமிப்புக் கணக்கு (Savings Accounts) 4%

12 வயதுக்கு மேற்பட்ட மைனர் அவர்கள் பெயரில் கணக்கு வைத்து வரவு செய்யலாம்.

சேமிப்பு கணக்குகளுக்கு செக் வசதி உண்டு. Fixed Deposit : மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட டிபாசிட்டுகளுக்கு தமிழக அரசு உத்திரவாதமளிக்கிறது. வட்டி 5% முதல் 7½% வரை கொடுக்கப்படும்.

ரெகரிங் டிபாசிட்டுகள் [ Recurring Deposits ]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரூ. 10/- —— 12 மாதங்களில் | ரூ. 124/- | ரூ. 10/- 48 மாதங்களில் | ரூ. 546/- |
| ரூ. 10/- —— 24 ,, | ரூ. 256/- | ரூ. 10/- 60 மாதங்களில் | ரூ. 710/- |
| ரூ. 10/- —— 36 ,, | ரூ. 397/- | ரூ. 10/- 72 ,, | ரூ. 884/- |
| | | ரூ. 10/- 84 மாதங்களில் | ரூ. 1070/- |

**Dr. P. நடேசன்,** M. B. B.S.,
தலைவர்.

**N. N. சிவபெருமாள்**
காரியதரிசி.



போன் நிர் 168 ஸ்தாபிதம் 1940

# 0·947 கோரல் மில்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட்

## தூத்துக்குடி 1.

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. 5,00,000-00 |
| செலுத்தப்பட்ட ,, | ரூ. 1,77,902-00 |
| க்ஷேம நிதி | ரூ. 2,18,188-00 |
| இதர ரிசர்வ் நிதி | ரூ. 4,35,675-00 |
| அலுவல் நிதி | ரூ. 3,62,075-00 |
| கொள் முதல் 66-67 | ரூ. 25,94,444-00 |
| விற்பனை 66-67 | ரூ. 27,07,862-00 |

நாங்கள் எங்கள் அங்கத்தினர்களுக்கு வேண்டிய பண்டங்களை நல்ல தரத்திலும், நியாயமான விலையிலும் வழங்கி அவர்களது தேவைகளை பூர்த்தி செய்கிறோம். தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைகளில் இது ஒரு சிறந்த, முதன்மையான ஸ்தாபனம்.

திரு. M. வெங்கிட கிருஷ்ணன், B.A., தலைவர்
திரு. G. சுடலை யாண்டி, உப தலைவர்
திரு. S. ஸ்ரீனிவாசன் B.Sc., டைரக்டர்
திரு. A. குமாரசுவாமி, டைரக்டர்
திரு. M. A. கபூர், B.A., காரியதரிசி
திரு. D. பாலகிருஷ்ணன், டைரக்டர்
திரு. S. பொன்னுசாமி, டைரக்டர்
திரு. V. குருசாமி, டைரக்டர்.

# கோமாளி

சுவாமி சங்கரதாஸர்

மூட்டையுங் கொசுவுமொரு வீட்டிலே மீட்டிங்கு போட்டால்
முன்னே நிற்க யாரால் முடியும்?—மாதம்
முப்பது நாளுந் தூக்கந்தான் வந்துசேரும்—நன்றாய்
மூடிப் படுத்தாலுந் தேகத்திலே வந்து
மொய்த்திடு மெப்படியும்—கொன்றால்
மூட்டையிலே ஒன்று மடியும்—அதன்
முன்னே காணரத்தம் வடியும்—அதில்
மூவாயிரம் நாலாயிரம் மூட்டைகள் உற்பத்தியாகி
மொத்தமாக வந்து படியும்—சொன்னேன் (மூட்)

முள்ளுப் பீப்பாய் வைத்துருட்டினாலும் தாங்கிக்
கொள்ளலாகும் வருத்தம்—தேகம்
முற்று மூசிகொண்டு குத்தினாலும் தூக்கம்
மூளாது கெட்டிச் சித்தம்—கொசு
மோகன ராகம் போலே சத்தம்—போட்டு
முன்னே நின்று செய்திடும் யுத்தம்—இந்த
மூன்று லோகத்தோரும் தேவருங்கூடி எதிர்த்திடினும்
முன்னமடைவார்கள் அனர்த்தம் சொன்னேன் (மூட்)

குறிப்பு :—1920-ம் ஆண்டில் திருநெல்வேலியில் சுவாமிகள் தம் நாடகக் குழுவுடன் முகாமிட்டிருக்கையில் அவர் தங்கியிருந்த இல்லத்தில் மூட்டை, கொசுக்கள் நிறைந்து கடித்து மிகுந்த தொல்லை தந்து இரவெல்லாம் தூங்க விடாமல் செய்த அவல நிலையை, அவர் பொழுது புலர்ந்து எழுந்ததும் மேற்குறித்த இசைப் பாடலாக எழுதிக் கோமாளி வேடம் போட்டு நடிக்குஞ் சிறுவனைக் கொண்டு அன்றிரவே அரங்கில் பாட வைத்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

சங்கரதாஸ் சுவாமிகள் நூற்ருண்டு விழாவிற்கு

**எங்கள் வாழ்த்துக்கள்**

☆

# லட்சுமி லயன்ஸ் லிமிடெட்

கப்பல் உரிமையாளர்கள்

மட்டாஞ்சேரி
கொச்சின்-2

ப சு ம லே
மதுரை-4.

☆

விரைவாகவும், நம்பிக்கையுடனும் ஏற்றப்பட்ட சரக்குகளே
கொண்டு சேர்ப்பவர்கள்

# எனது நாடக அனுபவங்கள்

கவியோகி சுத்தானந்த பாரதியார்



அழகுத் தெய்வத்தை வாழ்த்தி வணங்குவோம்
அழகுச் சோலையில் அன்புறக் கூடுவோம்
அழகின் இன்பத்தை ஆருயிர்க் கூட்டுவோம்
அழகை வாழ்வெனும் வீணையில் மீட்டுவோம்.

## 1. நாடகக் கலை

அழகின் விளக்கமே கலை; கலை என்பது உள்ளிருந்து மலர்வது; அது சிந்தனைச் சிற்பம்; உள்ளுணர்வின் கனவுக் காட்சி. இந்தக் கனவுக் காட்சியையே கவிஞன் காவியமாக்குகிறான்; பீலி பிடித்தவன் ஓவியமாக்குகிறான்; சிற்பி சிலை வடிக்கிறான்; நடிகன் மேடை மேல் நவரச பாவனை காட்டி நடிக்கிறான்.

கலைகளில் என்னை மிகவும் கவர்ந்தது நாடகமே. எனது நூல்களிற் பெரும்பான்மை நாடகமே. இளமையில் நாடகம் பார்க்காத நாள் இல்லை.

## 2. எங்கும் நாடகம்

எங்கள் ஊர் சிவகங்கை நாடகத்திற்குப் பேர் போனது. என் வீட்டுக்கு எதிரே சிவன் கோவில். இங்கே காளிதாசன், பவபூதி முதலியோர் எழுதிய நாடகங்கள் நடந்தன. அருகேயுள்ள திரௌபதியம்மன் கோயிலில் பாரதம் முழுதும் நாடகமாக நடந்தது; அரிச்சந்திர நாடகம், இராமாயண நாடகம் எல்லாம் தக்க புலவர் நடித்துக் காட்டினர். அரண்மனைப் புறங்களில் பெரிய நாடகக் கொட்டகையுண்டு. அங்கே புதுப்புது நாடகங்கள் நடந்தன. நான் பயின்ற கலாசாலையில் மாதா மாதம் ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் அரிய நாடகங்கள் நடந்தன; இந்த நாடகங்களில் நான் அரசியாக நடித்து வந்தேன். எனக்கு மிகவும் பிரியமானவை ஷேக்ஸ்பியர், ஷெரிடன், மோலியர், காளிதாஸன் நாடகங்களே. சம்பந்த முதலியார் நாடகங்களையும் நாங்கள் நடித்ததுண்டு.

## 3. சிவசாமி

அந்தக் காலம் சிவசாமி என்ற அரிய நாடகப் புலவர் இருந்தார். அவர் அரிச்சந்திர நாடகம் நடத்தினால் ஊரெல்லாம் கூடிப் பார்க்கும். அவர் சந்திரமதியாக வந்து மயான காண்டத்தில் லோகிதாசனை மடியில் வைத்துப் புலம்பிய போது, எல்லோரும் கண்ணீர் வடித்தனர். நான் முதலில் பங்கு கொண்டது சிவசாமி நாடக மன்றத்திலேதான். சிவசாமி ஒழுக்கமும் விழுப்பமும் உடையவர்; சாஸ்திரம் அறிந்தவர், அற்புதமான நடிகர்; நடனத்தில் இணையற்றவர். அவருடன் அரசராக நடித்தவர் சாம்பசிவம். இவர் வீர கம்பீரமாயிருந்தார். சிறு வயதில் இவர்கள் நாடகத்திற்கு நான் பாட்டெழுதி வந்தேன். அரிச்சந்திர நாடகத்தில் லோகிதாசனாக நடித்தேன்.

## 4. பாஞ்சாலி சபதம்

பரமேசையர், கலியாணராமையர் ஆகிய இருவரும் அந்தக் காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்தனர். அவர்கள் எங்கள் ஊரில் ஓராண்டு நாடகம் போட்டனர். கலியாணராமையர் எனக்குச் சிநேகமானார்; சில காட்சிகளுக்குப் பாட்டெழுதச் சொன்னார். நடிகர் யாராவது வராதபோது என்னை அவர் மேடையேற்றுவார். ஒரு தரம் சுப்பிரமணிய பாரதியாருடன் நான் பாஞ்சாலி சபதம் பார்த்தேன். பாரதியார் அந்த நாடகத்தை மிக வியந்து திரைக்குள் ஓடிச் சென்று கலியாணராமையரைத் தட்டிக் கொடுத்து 'சபாஷ் பாண்டியா! இந்தப் பாஞ்சாலி சபதம் அமரத்தன்மை பெறும்'' என்று குதூகலித்தார். பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதியார் அமரத்தன்மையளித்துக் காவியம் பொழிந்தார். பாரதியார், ''நாடகத் தமிழை வளர், பாண்டியா! எப்போதோ கடல் கொண்ட கபாடபுரத்தில் நாடகம் இருந்ததென்று பழைய நூல்கள் நாலைந்து பெயர்களைச் சொல்லிக் கொண்டிருப்பதிற் பயனில்லை. நாடகம் தற்காலத்திற்கேற்றபடி விறுவிறுப்பாக அமைய வேண்டும்; எழுது நாடகம்'' என்று என்னை ஊக்கினார். நானும் அன்று முதல் நாடக நூல்களை ஏராளமாகப் படித்து 100 நாடகங்களை எழுதித் தமிழன்னைக்கு அர்ப்பணித்திருக்கிறேன்.

## 5. ஷேக்ஸ்பியர் நாடகங்கள்

நான் இளமையில் ஆங்கிலச் சூழலில் வளர்ந்து ஆங்கிலமே அதிகமாகப் படித்ததால் ஷேக்ஸ்பியரிடம் எனக்கு அளவு கடந்த ஆர்வமும் அன்பும் ஏற்பட்டது. என் அண்ணன்மார் சிறந்த ஆங்கிலப் புலவர்கள். அவர்கள் ஷேக்ஸ்பியர் Route-ledge (ரௌட் லெட்ஜ) பதிப்பை வைத்துப் படித்தனர், நடித்தனர். அந்த நடிப்பில் என்னையும் சேர்த்துக் கொண்டதுண்டு. ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட், ஒதெல்லோ, கிங் லியர், மாக்பெத், ரோமியோ ஜூலியட், வெனிஸ் வர்த்தகன், கிளியபாத்ரா முதலிய நாடகங்கள் இணையற்றவை. இன்றுகூட நான் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படிக்கிறேன். அந்த மாதிரித் தமிழில் நாடகங்கள் வரவேண்டும் என்று நான் முயன்றேன். என் காலத்திற்குப் பிறகு தான் நான் இலக்கியத் தோட்டத்தில் நாட்டிய மரங்கள் பழுத்து உலகிற்குப் பயனுகலாம். என் கடமையை அடக்கமாகச் செய்து முடித்து விட்டேன்.

ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடி என்னைக் கவர்ந்தது காளிதாஸனின் சகுந்தலமும், விக்ரம ஊர்வசியும். இரண்டையும் சமஸ்கிருதத்திலேயே நான் படித்து நடித்தேன்.

## 6. பிரெஞ்சு நாடகங்கள்

அடுத்தபடியாக, பிரெஞ்சில் மோலியர், ரஸீன், கொர்நெல் ஆகிய மூவர் நாடகங்களும் என்னை ஈர்த்தன. இவர்களைப்பற்றித் தமிழில் நூல்கள் எழுதியுள்ளேன். ரஸீனின் அதாலி, அந்த்ரோமாக் கொர்நெலின் ஸீத் (Cid) ஓராசியன், மோலியரின் மிசாந்திரோப், லவார் (கருமி), டான் ஜுவான், பறக்கும் டாக்டர் முதலிய பல நாடகங்கள் நகைச்சுவை பொதிந்தன. நகைச்சுவைக்கு மோலியரும், வீரச் சுவைக்கு கொர்நெலும், கலைச்சுவைக்கு ரஸீனும், வாழ்வின் நவரசங்களுக்கு ஷேக்ஸ்பியரும் எனக்குச் சிறந்த வழிகாட்டிகளாயிருந்தனர். விக்தர் ஹ்யூகோவின் ஹெர்நானியும் கிராம்வெல்லும், கெத்தேயின் ஃபௌஸ்டும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இந்த நாடகங்களைக் கற்றதன் பயனுக எனக்கு நல்ல கலை நாடகங்கள் எழுத எழுச்சி பிறந்தது. எனது நாடகங்களை நானே நடித்து நடித்து எழுதுவதுண்டு; பாடல்களை நானே பாடி அபிநயம் பிடித்து ஆடுவதும் உண்டு. எனது நாடகங்கள் சில மேடையேறிப் புகழ் பெற்றன.

## 7. அந்தக் காலப் புலவர்

அந்தக் காலம் எனது நாடகங்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டவர்கள் சிவகங்கை அரண்மனை டில்லி பாச்சாத் தேவர், சின்ன அரண்மனை சிங்கத் துரை, புலவர் இராமலிங்கம் பிள்ளை, தெய்வசிகாமணிப் புலவர், பெரியசாமித் தேவர் முதலிய தமிழறிஞர். நாடகப் புலவருள் பொன்னம்பலம் ஆசாரி, ராஜாராவ், சுந்தரராவ், கோவிந்தசாமி மதுரை C. ராமசாமி ஐயர் முதலியோர். C. ராமசாமி ஐயர் ஷேக்ஸ்பியர் நாடகங்களைத் தாமே நடித்துக் காட்டினர். (Mono actor)

## 8. சில நாடகங்கள்

செய்யுள் நாடகம், இசை நாடகம் (ஆபரா), சரித்திர நாடகம், சமுதாய நாடகம், புது யுக சமயோக நாடகம் என்று வகை வகையாகப் பிரித்து நான் நாடக இலக்கியங்களை மன எழுச்சியால் எழுதியுள்ளேன். எனது நாடகங்களில் மேடையேறியவற்றை இங்கே தருகிறேன்.

1. காலத்தேர் 2. வசந்த சுந்தரி 3. ஜயமணி 4. இராணி மங்கம்மாள் 5. புதுமையும் பழமையும் 6. இவளும் அவளும் 7. சுபத்ரா கலியாணம் 8. சிவாஸ்திரம் 9. நக்கீரர் நாவீறு 10. பத்மாவதி 11. தேவகுமாரி 12. ராணு பிரதாப சிங்கன் 13. சிவாஜி -ராமதாஸ் 14. சிரிப்பில் விளைந்த நெருப்பு 15. பூதானப் புரட்சி 16. சத்தியாக்கிரகம் 17. சகுந்தலம் 18. ஜீவமுரளி 19. விஞ்ஞானக் கூத்து 20. அப்பரின் அற்புதம் 21. மாணிக்க ஜோதி 22. ஜோதி ராமலிங்கம் 23. ஜய ஜவான் 24. முல்லை மணம் 25. மீரா விஜயம் 26. வளையாபதி 27. குண்டலகேசி 28. ஜயவீரன் 29. புத்தர் கருணை 30. சீர்திருத்தம் 31. கண்ணகி 32. காமதிலகன் 33. மாயமான் 34. இராமதுதன் 35. ஏழை முருகன் 36. வானரசு முதலியன. இந்த நாடகங்கள் பெரும்பாலும் நூல் வடிவில் உலாவுகின்றன.

## 9 இன்று நடிகர்

நான் ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகளைச் சிவகங்கையில் ஒரு முறை பார்த்ததுண்டு. அப்போது அவர் பொன்னம்பலம் ஆசாரியார் நடத்திய சதாரம் நாடகத்திற்கு வசனமும் பாட்டும் கோத்துப் பயிற்றினர். சுவாமிகள் படிப்பும், நடிப்பும், நவரசப் பொலிவும், கலையார்வமும் கொண்டவர். அவருக்குத் திருவிழாக் காண்பது நாடகக் கலை விருந்தாகும். தமிழகத்தில் இன்று ஔவை ஷண்முகம், பகவதி, சிவாஜி கணேசர், எம். ஜி. ராமச்சந்திரர் போன்ற அரிய நடிகமணிகள் உள்ளனர். நாடக சங்கமும் உள்ளது. நமக்கு வேண்டியது கூட்டுறவு.

## 10 கலைஞர் கூட்டுறவு

நான் ஐரோப்பிய அமெரிக்க ஜப்பானிய நாடுகளில் ஏராளமான ஆபராக்களையும் நாடகங்களையும் திரைப்படங்களையும் பார்த்துப் பூரித்துள்ளேன். புடோவ்ஸ்கி, ஹாலிவுட், பாரிஸ் தியேட்டர் போன்ற அரும்பெரும் நாடகசாலைகளையும் படநிலையங்களையும் பார்த்துள்ளேன். அங்கெல்லாம் கலைஞருள் நல்ல கூட்டுறவுள்ளது. மாஸ்கோ போல்ஷாய் தியேட்டரில் நடக்கும் ஆபராக்களும் நாடகங்களும், பாரிஸ் தியேட்டரில் நடக்கும் இசை நாடகங்களும் கண் கொள்ளாக் காட்சிகளாகும். இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர் பிறந்த ஸ்டாட்போர்டு ஆன் அவனில் திருவிழாக் கண்டேன். ஹாம்லெட், ஒதெல்லோ நாடகங்களைப் பெரும் புலவர் நடிக்கக் கண்டேன்.

## 11. நாடகக் கழகம்

அந்த மாதிரி நமது தமிழகத்தில் தக்க நடிகர் கூடி நாடகக் கழகம் ஏற்படுத்த வேண்டும்.

தக்க பயிற்சியும், படிப்பும், நடிப்பும், துடிப்பும் கொண்ட நடிகரைக் கூட்டிக் கலே வளர்க்க வேண்டும். இக்கழகம் நாடக இலக்கியங்களேயும் நாடகாசிரியர் களேயும் போற்ற வேண்டும். உதாரணமாக எனது நாடகங்களே இந்த நாடகக் கழகம் வெளியிட்டு அரங்கேற்றலாம். கலே மதிப்புள்ள நாடகங்களே இந்தக் கழகம் தேர்ந்து நடித்து, நாடகாசிரியருக்கு உரிய சன்மானங்களேத் தந்து போற்ற வேண்டும்.

தேர்ந்த நாடகங்களேக் கழகமே நடித்து, ஆசிரி யருக்கு மரியாதை செய்ய வேண்டும்.

## 12. கலே வளர்ச்சி

இவ்வாறு ஜப்பானில் நடக்கிறது. 1952-ம் ஆண்டு தோகியோவில் "இரோஷீமா" என்ற நாடகம் உணர்ச்சிப் படலமாக நடந்தது. மாஸ் கோவில் அக்டோபர் புரட்சி நாடகம் என் உள்ளத்தை அள்ளியது. புதுப்புது நாடகங்கள் காலத்திற்கேற்ப வந்து புகழ்பெற்றுப் பரவினல் தமிழும் தமிழர் பண்பாடும் ஒளிபெறும்.

(1) நாடக ஆசிரியர் தனது நிலேயில் அமைதி யாயிருந்து கலேயை ஆக்க வேண்டும்.

(2) அதை நாடகக் கழகம் ஏற்றுப் போற்றி வெளியிட்டு நடத்த வேண்டும்.

(3) நாடகம் மேடையேறும்போது நாடகாசிரி யனுக்குத் தக்க சன்மானம் வழங்க வேண்டும். ரஷ்யாவில் கவிகளும் நாடகப் புலவரும் செழித்து வாழ்கின்றனர். அங்கே வறுமையில்லே, வரட்சி யில்லே, பொருமையில்லே. நமது நாடு உலகப் புகழ் பெற வேண்டும். அதற்கு நாடகப் புலவர் நமது தமிழ்ப் பண்பாடுகளே மேடையேற்ற வேண்டும்.

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டுக்கு நல்ல பயன்
கலேயினல் உல கொற்றுமை காணுவோம்
கலேயிறை் கருத்தை விரி வாக்குவோம்
கலே மகளின் கவின்பெறுங் கோவிலில்
கைகள் கோத்துக் களிப்புடன் ஆடுவோம்.


## சுத்தானந்த பாரதியாரின்

## அரிய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | மாணிக்கஜோதி | 2 00 |
| 2. | அப்பரின் அற்புதம் | 1 25 |
| 3. | ஜோதி ராமலிங்கம் | 2 00 |
| 4. | கவியரங்கம் | 1 50 |
| 5. | முன்னேற்ற முழக்கம் | 1 50 |
| 6. | சிங்கநாதம் | 1 00 |
| 7. | உலகைப்பாட்டு | 1 50 |
| 8. | குழந்தையின்பம் | 0 50 |
| 9. | சாது ஜவானி | 1 00 |
| 10. | வீராங்கனே | 2 50 |
| 11. | உடலும் உயிரும் | 2 50 |
| 12. | ஏழை படும் பாடு | 6 00 |

சுத்தானந்த நூலகம்
யோக சமாஜம்
அடையாறு, சென்னே-20

# THE EGMORE BENEFIT SOCIETY 3rd BRANCH LIMITED

(ESTD. 1886)

**No. 9, Flowers Road — Vepery — Madras-7**

**Accepts Fixed Deposits :**

At the enhanced rates of Interest as under :

Fixed Deposits For 3 Months....5½%
,, 6 Months.... 6%
,, 1 Year........ 7%
,, 2 Year........ 7½

(½% Extra for Rs. 10,000/- and over)

Interest payable monthly on the 1st of every month.

**Savings Deposits :............ 4 Percent**

**Also accepts recurring deposits :**

Monthly instalments of Re. 1/- or multiple there of will fetch- **Rs.** 50/- for 45 monts and **Rs. 100** for 78 months or multiple thereof.

*Advances*

Loans :.......on jewels at 10½%

**On house properties within Madras City**

Regular Loans at 10½%
Special Loans at 12%

*on deposits :*

Fixed deposits : at 1½% over and above the rate on fixed deposits.

Recurring deposits : at 9%

**J. H. Tarapore,** B.E., M.I.E.
*President*

**N. C. Giri Paul,**
**CH. Sathyanarayana,** J.P.
*Trustees*

**P. G. Venugopal**
*Secretary & Treasurer.*

# பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

மதுரை

**சேமிப்புக் கணக்கு 4½%**

தினசரி இருப்பின் பேரில் ஆண்டு ஒன்றுக்கு வட்டி 4½% கணக்கிலிருந்து வாரம் ஒரு முறை திரும்பப் பெறும் அதிக பட்சத் தொகை ரூ. 5000/-

**தவணை டிபாசிட் 8%**

டிபாசிட் செய்யப்படும் காலத்திற்கேற்ப வட்டி 5½% முதல் 8% வரை அளிக்கப்படுகிறது.

**ரெகரிங் டிபாசிட் 8½%**

டிபாசிட்டுகள் 12, 30, 45, 60, 80 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அதிக பட்சம் 8½% வட்டி வரை கிடைக்கிறது.

தென்னகத்தே 60 கிளைகள் உள்ளன

**திரு கருமுத்து தியாகராஜன்**
தலைவர்

**T. K. ராமசுப்பிரமணியம்**
காரியதரிசி.



# நாடகக் குருநாதன்

எஸ். வி. எஸ்.

நல்ல நாடகங்கள் எழுதி விடலாம். ஆனல் அதை வெற்றியுடையதாகச் செய்யும் ஆற்றல் நடிகர்களிடம் தான் உள்ளது.

நாடகக் கதையைத் தேர்ந்தெடுத்து, அதை மேடைக் கேற்றபடி உருவாக்கி, அதில் வரும் பாத்திரங்களுக் கேற்ற நடிக நடிகையரைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பாத்திரத்தின் தன்மையை நடிக நடிகையர்களுக்கு அறிவுறுத்தி, அதற்கேற்ற பாவனைகள் அசைவுகளை யெல்லாம் பயிற்சி அளிப்பது இத்தனையும் ஒருவரே செயல் படுத்தி வந்தார். இவ்வளவும் ஒருவரே செய்யக் கூடுமா? என்று இன்று ஒவ்வொருவரும் பிரமிப்படையத்தான் வேண்டியிருக்கின்றது. அதுமட்டுமல்ல; மேடையில் இந்தக் கதைக் கேற்ற வண்ணம் காட்சிகள் அமைப்பதற்கு, யோசனை சொல்வதோடு இந்தப் புதிய நாடகத்தின் அரங்கேற்றத்திற்குத் தேவையான விளம்பரங்களைச் செய்து வந்ததும் ஒருவரேதான் என்பதையும் உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவர்தான் திரு. எம். கந்தசாமி முதலியார் அவர்கள். தமிழகத்தின் சிறந்த நடிகரான திரு எம். கே. ராதா அவர்களின் தந்தையார். இந்தப் பெரியார்தாம் சமூக நாவல்களை மேடைக் கேற்றபடி உருவங் கொடுத்து மேடையில் சமூக நாடகங்கள் தோன்றப் பெரிதும் பாடுபட்டவர்.

ஒவ்வொரு நாடகத்தைத் தயாரிக்கும் போதும் அவர்கள் எடுத்துக்கொண்ட சிரமங்கள் எவ்வளவு என்பதை இன்று எண்ணிப் பார்த்தாலும் எனக்குப் பெரும் பிரமிப்பையே உண்டாக்குகின்றது. அடிமரம் போல் ஒரு நடிகன் தரையில் விழவேண்டிய கட்டம் வரும். முதலியார் அவர்கள் அப்படியே விழுந்து காட்டுவார்கள்.

மனோஹரா என்ற நாடகக் கதை உங்களுக்கெல்லாம் தெரிந்ததுதான். அதிலே வருகின்ற காட்சிகளில் முக்கியமானதொரு காட்சி மக்களை உருக வைக்கும் காட்சி சங்கிலி அறுக்கும் காட்சி. மனோகரனைச் சங்கிலியால் பிணைத்து நான்கு வீரர்கள் இழுத்து வருவார்கள்; தந்தை சிம்மாசனத்தில் ஆசை மனையாட்டியின் வலையிலே சிக்கி மகனையும், மனைவியையும் இழித்துப்பேசுவார். தந்தையின் அளவுக்கு மீறிய—அதுவும் தன் தாயைப்பற்றிய இழிச்சொல்லைக் கேட்க முடியாது வீறு கொண்டு சங்கிலியை அறுத்துக் கொண்டு நான்கு வீரர்களை நான்கு திசையிலும் விழும்படியான வேகத்தில் வாளெடுத்துக் கொண்டு சிம்மாசனப் படியின் மீது காலை வைத்துக் கொண்டு தந்தையிடம் 'கடைசியாகத் தாயைப் பற்றிப் பேசிய பழிச் சொல்லை தவறிச் சொல்லிவிட்டேனன்று மன்னிப்புக் கேட்காவிட்டால் உம்மையும், இதோ இவ்வளவு இழிந்த சொல் உமது வாயில் வருவதற்குக் காரணமாயிருந்தவளையும் ஒரே வீச்சில் இரண்டுதலைகளும் தரையில் புரண்டு விழச் செய்வேன்' என்று வாளையும் வீசுகின்ற நேரம், அந்த வீரக்கையை தாய்க்கரம் வந்து பற்றித் தடுக்கிறது. 'மனோகரா!' என்ற தாயின் குரலைக் கேட்ட மனோகரன் தனது செயலிலிருந்து மாற வேண்டிய கட்டம். அப்போது தாய்க்கும் மகனுக்கும் நடக்கும் சம்பாஷணைகள் மாலையிட்ட மணவாளனுக்கும், தன் மணிவயிறு ஈன்றெடுத்த வீரமகன் மனோகரனுக்கும் நடுவே போராட வேண்டிய இடம் இது தாயின் நிலை. தாய்ச்சொல்லைத் தட்டாத மைந்தன் தன் தாயைக் காட்டிலும் வேறு தெய்வத்தை அறியாத பிறவி வீரம் படைத்தவன் மனோகரன் தன் தாயைப் பற்றித் தன்னெதிரில் தன் செவியில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றியது போன்ற பெரும்பழிச் சொல்லைச் சொல்லிவிட்டவன் தன் தந்தையே யானாலும் சரி, அதற்கு மன்னிப்பு, அல்லது பழி தீர்ப்பது என்ற நிலையில் துடிதுடித்துக் கொண்டிருக்கும் வீரனின் சம்பாஷணை இந்தக் காட்சி மேடையின் மீது நடந்து கொண்டு இருக்கும். மேடையில் இரண்டு நடிகர்கள் ஒருவர் தாயாக இன்னொருவர் மகனாக நடித்துக் கொண்டு இருப்பார்கள். ஆனல், உட்புறத்தில் பக்கத்தட்டியின் மறைவில் பார்த்தால் முதலியார் அவர்கள், ஒரு கணம் தாயாகவும், மறுகணம் தனயனாகவும் மேடையிலுள்ள நடிகர்களின் கண்ணுக்குத் தெரியும்படியாக நடித்துக் கொண்டேயிருப்பார். கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிப்பார்.

இந்த நிலைகளெல்லாம் முதல் நாள் ஆரம்பிக்கும் அந்த நாடகத்தில் மட்டுந்தான என்ருல் இல்லை. நடந்த ஒரே நாடகந்தானே என்ற அலட்சிய மனப்பான்மை அவரிடம் இருந்ததே கிடையாது. எத்தனை நூறு முறை நடந்திருந்த நாடகமாயிருந்தாலும் அன்றன்றைக்கும் புதியதாக நடிக்கப்படும் நாடகம் போல் பயபக்தியுடன் பணியாற்றிய ஆசிரியர் அவர் ஒருவரைத்தான் என் வாழ்நாளில் நான் பார்த்திருக்கிறேன்.

திரு கந்தசாமி முதலியார் அவர்கள் முன் காலத்தில் சொல்லும் F.A. வரை ஆங்கிலம் படித்தவர்கள். நாடகத் தந்தை பம்மல் சம்மந்த முதலியார் அவர்களின் முயற்சியால் உருவான சுகுண விலாஸ சபையின் முக்கிய நடிகராகவும் பணியாற்றி தொழில் நாடகக் குழுக்கு நாடக ஆசிரியராக தனது வாழ்நாள் முழுவதும் சேவை புரிந்த பண்புமிக்க ஆசிரியர்.

தமிழ் மேடையில் வக்கீல்களின் வாதங்கள் ஜட்ஜுகளின் தீர்ப்புகள் ஆங்கிலத்திலேயே எழுதியும் அந்த ஆங்கில உச்சரிப்பை சரியான முறையில் உச்சரிக்கும் படியும் நடிகர்களைத் தயார் செய்தவர்கள் பல நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் நாடக மேடையில் இப்படிப்பட்ட காட்சி சிறிதும் வழக்கத்துக்கு மாறுபடாமல் இயற்கையாகத் தயாரித்துள்ளதைப் பாராட்டியுள்ளார்கள்.

அவரிடம்தான் நான் நாடக நடிப்புப் பயிற்சியும் பெற்றேன் என்பதையும், அவரது தளராத உழைப்பும் மனமுனைப்பும் இன்றும் எனக்கு நாடகக் கலையில் பணியாற்றுவதற்குப் பெருந்துணையாக உள்ளது என்பதையும் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். என் குருநாதருக்கு எனது அஞ்சலியையும் செலுத்திக் கொள்கிறேன்.

நாடக சபைகள் பாமர மக்களின் பல்கலைக்கழகம்

கவியரசி சரோஜினிதேவி


## Science, Research & Indigenous Medicine

Scientific methods of preparing standard drugs of highest quality have been evolved and the spirit of research has widened the scope of utilising the age old systems of medicine like Ayurveda, Siddha and Unani to good purpose.

For the last 22 years thousands of medical Practitioners and public institutions have become members and they are being served.




**The Indian Medical Practitioners, Co-operative Pharmacy & Stores Ltd.**
**Adyar, Madras-20**
**27, Kasi Visweswara Temple Street Bangalore - 1 (City) (Mysore State)**

maa.OPI-M-296

# VEPPOLODAI SALT CORPORATION

*(Managing Partners : K. S. P. S. Natarajan & Co.,)*

**Post Box No. 25,**

**TUTICORIN - I.**

Largest Salt Manufacturers, Crushers and Exporters in the South.

For Supply of Salt to Chemical factories, We have reached purity upto 99. 65% NaCl.

Several Chemical factories both in South and North India are already supplied.

We undertake construction of salt pans and other Contract Works.

Telegram : "NATARAJA"

Office : 89 & 419
Residence : 235 & 449
V. Factory : 389


Store
25 boxes
flat in the
space
of 1
STATE Awarded
Chamundi
ART PRINTERS
folding
box
Makers
• FLAT FOLDING
FOR STORAGE.
• EASY ASSEMBLING.
• RIGID AND
DECORATIVE.
GRAMS: "FRETSIGN" PHONE: 31737
3/8, HUNTERS ROAD,
VEPERY, MADRAS-7.

வாழ்க தமிழ் நாடகக் கலை ! வளர்க தமிழ் நாடகப் பெருமை !

தமிழ் நாடகக் கலை வரலாற்றில் மறைந்த மாமேதைகள்

அனைவருக்கும் அஞ்சலி செய்து இது சமயம்

சேவை செய்யும் கலைஞர்கள் அனைவருக்கும்

நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும்

வழங்குகிறோம்.

திரு. P. M. பெல்லியப்பா, I.A.S.

(மாவட்ட ஆட்சித் தலைவர்)

தலைவர்.

மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

ஆர்ட்ஸ் அகாதெமி, வேலூர்



**murphy radio**

***Authorised Dealers for Trichy District***

ASSOCIATED RADIO AGENCIES

28, N. S. B. ROAD, TRICHY-2

Phone : 2993



With the best compliments of :

PHONE : 441707

CINE CRAFTS

MADRAS-24

# ராம நாடகம்

கு. அழகிரிசாமி

நடிப்பதற்காக எழுதுவதைத்தான் நாடகம் என்று சொல்வது வழக்கம். ஆனால் படிப்பதற்காக மட்டும் என்றும் பலர் நாடகங்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த இருவகை நாடகங்களுடன், பாடுவதற்கென்றே எழுதப்பட்ட நாடகங்களும் உண்டு. அவற்றில் ஒன்றே சீர்காழி—அருணாசலக் கவிராயர் இயற்றிய ராம நாடகம். அவர் தமது நூலின் அவையடக்கத்தில், " ......இதைப் பாகவதர் படிக்கும் கீர்த்தனையாய்ச் சொன்னேன் " என்றும், நூலின் முடிவில் வாழ்த்துப் பாடும்போது, " அருணாசலக் கவி சொல்லிய கீர்த்தனை படிப்போரும் கேட்போரும் வாழி ! வாழி !!" என்றும், நூலின் கடைசிப் பாடலில், " ராமன் நாடகம் இசையால் சொல்லும் கான பாகவதர் உள்ளம் களித்திட இதனைக் கேட்போர் " என்றும் கூறியிருப்பதால், இது பாடுவதற்கும், பாடக் கேட்பதற்கும் இயற்றப்பட்ட ஒரு நூலே என்பது உறுதியாகிறது. ஆனாலும் நூலுக்கு " ராமாயணக் கீர்த்தனைகள் " என்று பெயரிடாமல், " ராம நாடகம் " என்று அவர் பெயர் சூட்டியிருக்கிறார். அதனால் இதை வெறும் கீர்த்தனைத் தொகுதியாகக் கருதிவிடக் கூடாது என்றும் ஒரு நாடக நூலாகவே கருதவேண்டும் என்றும் ஆகிறது. மேலும் நூலின் முதல் பாடலில்,

" கம்பரா மாயணப்பாற்
கடலை உண்டு
நம்ப வரும்ராம
நாடகமாம் மாமழையை
அம்புவியில் காழி
அருண சலமேகம்
கும்பும் உயிர்ப்பயிர்க்குப்
பெய்துவினை கொய்ததுவே "

என்று அவர் கூறுகிறார். அடுத்த பாட்டில் " ராம நாடகத்தைச் சொல்லுவேன் நான் " என்றும், அதற்கு அடுத்த பாட்டில் " ராம நாடகத்துக்கு அனுக்கிரகிப்பாயே " என்றும் சொல்கிறார். வேறு பல இடங்களிலும் இது ஒரு நாடகமே என்பதை உறுதிப்படுத்துகிறார்.

' பாடுவதற்காக இயற்றப்பட்டதை நாடகம் என்று சொல்வது எப்படி ? ராம நாடகத்தில் வசனங்கள் இல்லையே ! பாத்திரங்களைப் பேச வைப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், ஆசிரியரும் விரிவாகப் பேசுகிறாரே ! அங்கம், காட்சி என்ற பிரிவினைகளும் செய்யப்படவில்லையே ! இது எப்படி நாடகம் ஆகும் ?" என்று பலரும் கேட்கலாம். நடிப்பதற்காக எழுதப்படும் நாடகங்களை மனத்தில் வைத்துக் கொண்டு கேட்கும் கேள்விகள் இவை. பாடுவதற்காக எழுதப்படும் நாடகங்களில் வசனங்கள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த நாடகங்களில் கதைத் தொடர்பைக் காட்ட ஆசிரியர் கூற்று இடம் பெறுவதில் தவறு எதுவும் கிடையாது. அத்துடன் காட்சிப் பிரிவினைகள் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் தோன்றிய ராம நாடகத்தில் காட்சிப் பிரிவினை செய்யப்படாததைப் போல், இன்று நம் காலத்தில் வாழ்ந்த ஜெர்மன் நாடக ஆசிரியர் பெர்ட்டோல்டு பிரெஷ்ட் என்பவரும் காட்சிப் பிரிவினைகள் செய்யாமலே ஒரு பெரிய நாடகத்தை எழுதியிருக்கிறார். அதை ஒரு நவீன உத்தி என்று கருதும்படியும் செய்திருக்கிறார். ஆனால், நமக்கு அது பழைய உத்தியே. ராம நாடகத்திற்கு முன்பு தோன்றிய பள்ளு, குறவஞ்சி நாடகங்களிலும், ராம நாடகம் இயற்றப்பட்ட காலத்தில் தோன்றிய நொண்டி நாடகங்களிலும் காட்சிப் பிரிவினைகள் கிடையாது. வசனங்களும் கிடையாது. அந்த நாடகங்களைப் பாடியும் அனுபவித்திருக்கிறார்கள்; நடித்தும் அனுபவித்திருக்கிறார்கள். அதேபோல் ராம நாடகத்திலும் சிற்சில கட்டங்களை — சீதா கல்யாணம், பாதுகா பட்டாபிஷேகம் போன்ற கட்டங்களை —அந்தக் காலத்தில் பலர் நடித்திருக்கவும் கூடும். அப்படி யாருமே நடித்திராவிட்டாலும், நடிக்க முடியாவிட்டாலும், ராம நாடகம் ஒரு நாடக நூலே என்பதை மறுக்க முடியாது. ஏனென்றால், ராம கதையை ஆரம்பத்திலிருந்து கடைசிவரை நாடக ரூபத்தில் ஆசிரியர் பாடியிருக்கிறார். அதை இன்று பாகவதர்கள் பாடும்போது, நாம் கதை கேட்பதுபோல் இல்லை. ஒரு நாடகத்தையே கேட்டு அனுபவிக்கிறோம்.

### நாடகக் கதை

ராம நாடகத்தின் கதை, கம்பராமாயணத்தைத் தழுவிய கதையே. விதிவிலக்காக இரண்டொரு இடங்

களில் வால்மீகியின் கூற்றுக்களையும் ஆசிரியர் கையாண்டிருக்கிருர். ஓர் உதாரணம் : சூர்ப்பனகை யோடு ராமன் உரையாடும்போது, "உன்னை நான் மனைவியாக ஏற்க மாட்டேன். எனக்குச் சீதை என்ற இந்த ஒரு மனைவி போதும். இங்கே என் தம்பி இலக்குவன் மனைவியின்றித் தனியே இருக்கிருன். அதனுல் நீ அவனிடம் போ" என்று சொல்வது, வால் மீகி ராமாயணத்தில் காணப்படுவதாகும். கம்பர் இவ் வாறு கூறவில்லை. அருணசலக் கவிராயர், வால்மீகி கூறியிருப்பதைப் போல் தம் நாடகத்தில் பாடியிருக் கிருர். பொதுவாகக் கம்பராமாயணக் கதையைத் தழு வியே தம்முடைய நாடகக் கதையை நடத்திக் கொண்டு போகும் கவிராயர், நாடகம் விறுவிறுப்பாக வும், சுவாரஸ்யம் குன்ருமலும் இருப்பதற்காக முக்கிய மில்லாதவை என்று தாம் கருதும் கட்டங்களை ஒதுக்கி யிருக்கிருர்; காவியத்தில் விஸ்தாரமாகச் சொல்லப் படும் சம்பவங்களையும் ஒரு வரி, அரைவரியில் குறிப் பிட்டுவிட்டு அடுத்த கட்டத்திற்குப் போய்விடுகிருர். 500 பக்கங்கள் கொண்ட இந்தப் பெரிய நூலைப் படிக் கும் போது மேன்மேலும் சுவாரஸ்யம் மிகுந்து கொண்டு போகிறதே ஒழிய, சலிப்புத் தட்டுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. சுவாரஸ்யம் என்பது இந்த நாடக நூலின் இணையற்ற தனிச் சிறப்பாகும். பிற்காலத்தில் இவர் நூலை முன்மாதிரியாக வைத்து இயற்றப்பட்ட "மகா பாரத நாடகம்," "நந்தன் சரித்திரம்," "திருவிளையாடல் கீர்த்தனம்" போன்ற நூல்கள் அனைத்துமே சுவாரஸ்யம், விறுவிறுப்பு, வேகம் என்ற அம்சங்களிலும், இன்னும் பல முக்கிய அம்சங்களிலும், இவர் நூலின் பக்கத்தில் கூட வரமுடியாதவாறு எவ்வளவோ தூரம் பின் தங்கி நிற் கின்றன. ராம நாடகத்தின் இந்த ஒப்பற்ற சிறப்புக்கு அவர் கதையைக் கையாண்ட முறை ஒன்று மட்டும் காரணமல்ல. வேறு பல காரணங்களும் இருக்கின்றன. அவருடைய சுவைமிக்க தமிழ் நடை, துடிப்பான சொல்லாட்சி, அபாரமான வர்ணனைத்திறன், அற்புத மான நகைச்சுவை போன்றவையும் சேர்ந்து நாடகத் தின் பெருமையை விண்ணுக்கு உயர்த்தி விட்டன.

### தமிழ் நடை

ராம நாடகப் பாட்டுக்களில்கையாளப்பட்டிருக்கும் தமிழ் நடை, புலவர்கள் கையாளும் தமிழ் நடையல்ல; பொதுமக்களின் பேச்சு நடையே ஆகும். சில உதா ரணங்களைப் பார்ப்போம்:

"உலகம் எல்லாத்தையும்
நீ ஆள வேணும்; பின்
ஒருவர் ஆண்டு, குறை
வாங்குமோ?
மலைதாங்கும் பாரத்தை
மலையே தாங்கவேணும்;
மண்ணாங் கட்டிஎன்ன
தாங்குமோ?"

இது ராமனைத் தேடிக் காட்டுக்கு வந்து, அண் ணனை அயோத்திக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்ளும் பரதனின் கூற்று.

கூனியைப் பார்த்துக் கைகேயி பின்வரு மாறு கூறுகிருள்:

"பரதன் பட்டம்கட்டாவிட்டால்
நட்டியோ?
அவன் சர்க்கரைக்
கட்டியோ?
என்பிள்ளை ராமன்
எட்டியோ?
நான்தான் என்ன
மட்டியோ?
வெட்டிப் போடுவேன் உன்னை."

இதைக் கேட்டுக் கூனி சொல்கிருள் :

"ராமன்முடி சூடும்என்ற
பேய்மதி உனக்குவந்த(து)
ஏதம்மா?—என்ன—வாதம்மா?
சீமாட்டிஉன் பிள்ளைபரதன்
காமாட்டி ஆனனேஎன்ன
செய்கையே?—அம்மா—கைகையே?"

இந்தக் கிராமியமான சம்பாஷணைகள் பாமரர் பேசிக்கொள்ளும் முறையிலேயே அமைந்திருப் பதைக் காணலாம். இது போக, "துளிர்த்து" என் பதைத் "துளுத்து,' என்றும், "இரவில்" என்பதை "ராவில்" என்றும், "பூக்கள்" என்பதைப் "பூவு கள்" என்றும், "வைத்து" என்பதை "வெச்சு" என்றும் பேச்சு வழக்கை ஒட்டியே இவர் பாட்டில் கையாளுவார். இப்படிக் கையாண்ட இடங்கள் நூற் றுக் கணக்கில் உள்ளன. இன்னும், "ஏன் காணும் நீர் வரவில்லை?" என்று நாம் சகஜமாகக் கேட்பது போல் சுக்ரீவனைப் பார்த்து இலக்குவன் ஓரிடத்தில் கேட்கி ருன். சீதையும் இராமனைப் பார்த்து, "ஆம் காணும்" என்று ஓரிடத்தில் கூறுகிருள். இப்படி நாட்டு மக்கள் நாவில் வழங்கும் தமிழை, அந்த அழகோடும், அந் தச் சுவையோடும், அந்த மணத்தோடும் கையாண்டு ஒரு பெரிய நாடகம் முழுவதையும் இயற்றியிருக் கிருர். இதைப் பாமரத் தமிழ், கொச்சைத் தமிழ் என்று பழிக்கும் நோக்கத்துடன் யாரேனும் சொன் ஞல், அவர்களுக்குத் தமிழின் சுவையே தெரியாது என்றுதான் கருத வேண்டும். பேச்சு நடைதான் எந்த மொழிக்கும் அசல் நடை; மூல நடை. எழுத்து நடை என்பது சௌகரியத்திற்காக உண்டு பண்ணிக்கொள்ளப்பட்ட நடையே. நாடகமாகப் பாடு வதற்குரிய பாடல்கள் பேச்சு நடையில் அமைந்திருந் தால், நாடகக் காட்சிகளைத் தத்ரூபமாக ரசிகர்களின் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்த முடியும் என்பதைத் தெரிந்தே இந்த மேதாவி இப்படிப்பட்ட நடையைக் கையாண்டிருக்கிருர். இந்தக் காரியத் தைப் பள்ளு ஆசிரியர்களும் குறவஞ்சி ஆசிரியர் களும் இவருக்கு முன்பே செய்திருக்கிருர்கள் என்ரு லும், அவர்கள் கையாண்ட பேச்சுத் தமிழில் ஏட்டுத் தமிழ் வாசம் இருக்கும்; அந்தப் பாமரத் தமிழில் புலமைத் தமிழின் வாடை வீசும். ஆனல் அருணசலக் கவிராயர் கையாண்ட தமிழோ முழுக்க முழுக்கப் பேச்சுத் தமிழாக அல்லது பேச்சுத் தமிழின் மணம்

வீசுவதாக இருக்கிறது. அவருடைய சாதனை இணையற்ற சாதனை. இதில் அவர் அடைந்த வெற்றியில் பாதியோ கால்வாசியோகூட வேறு எந்தப் புலவரும் அடைந்ததில்லை என்று துணிந்து கூறலாம்.

அருணாசலக் கவிராயர் தம்முடைய பாடல்களில் நூற்றுக் கணக்கான பழமொழிகளையும் பயன்படுத்தியிருக்கிறார். அதிலும், அவர் பயன்படுத்தியுள்ள முறை வியக்கத் தக்கதாக இருக்கிறது. ஒரு பழமொழியைப் போட்டால் அநேகமாக அங்கே அபாரமான நகைச்சுவை இருக்கும். பல இடங்களில் உரக்கச் சிரிக்கும்படியும் செய்துவிடுவார். கைகேயியைப் பழிக்கும் தசரதன்,

"கீரைக்குப் புல்லுருவி
கீழே முளைத்தாற்போலே
கெடுகாலி எங்கே வந்தாள்?"

என்று கேட்பதும்,

குகனிடத்தில் பேசும் ராமன், "ஆனை ஏறியும் திட்டி வாசலில் நுழைவானேன்?" என்று கேட்பதும்,

மாய மானைப் பார்த்த இலக்குவன்,

"கூத்துப் பார்க்கப்போன
இடத்தில் பேய்பிடித்தாற்போல்
குலையுதென் மனம் தானே"

என்று சொல்வதும்,

"ஆனை கெட்டவன்
குடத்தில் தேடினாற்போல்"

என்று சடாயு சொல்வதும்,

"பதறிஅழும் நோயாளி
முகத்தின் முன்னே
பரிகாரி தலைமாட்டில்
அழுகின் றாற்போல்"

என்று ராவணனின் பாட்டன் மாலியவான் சொல்வதும்,

"எலி வேட்டைக்குத் தவில் அடியா?" என்று மகோதரன் கேட்பதும், இன்னும் இவை போன்று பழமொழிகளோடு கூடிய நூற்றுக்கணக்கான பகுதிகளும் மிகுந்த நகைச்சுவை கொண்டவை. அந்தந்தப் பகுதியை முழுமையாகப் படிக்கும்போதுதான் அதில் உள்ள நகைச்சுவையை நன்கு அனுபவிக்க முடியும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

கவிராயர் மற்றொரு காரியமும் செய்திருக்கிறார். ராமனின் பாதுகையைப் பரதன் கேட்டான் என்பதை நாம் அறிவோம். "பாதுகை" என்ற சொல்லை மட்டுமே இந்தக் கட்டத்தில் பயன்படுத்துவது வழக்கம். ஆனால் கவிராயரோ, "அண்ணன் மிதியடி கொண்டான்" என்று கூறியிருக்கிறார். சீதையைக் குகனுக்கு அறிமுகப்படுத்தும் போது ராமன், 'இவள் உன் கொழுந்தி' என்று சொல்லாமல் "உன் மதனி கண்டாய்" என்று கூறுவதாகப் பாடியிருக்கிறார். சூர்ப்பனகை ராமனைப்பார்த்து, "நீ என் கணவன் ஆனால்" என்பதற்குப் பதிலாக "நீ என் வீட்டுக்காரன் ஆனால்" என்கிறாள். இப்படிப் பற்பல சொற்களையும் பேச்சுத் தமிழில் இருந்தே எடுத்து வழங்கியிருக்கிறார். முறைப்படி பாடம் கேட்டு, தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் பதினெட்டு வயதிற்குள்ளாகவே பெரும் புலமை எய்திய கவிராயர், இப்படியெல்லாம் பொது ஜனத் தமிழைக் கையாண்டிருப்பதால், அது வேண்டுமென்றே செய்த காரியம் என்பது தெளிவு.

சம்பவங்களை விவரிக்கும் கட்டங்களில் — முக்கியமாகச் சண்டைக் காட்சிகளில் — இந்தத் தமிழ், நமக்கு ஒவ்வொரு காட்சியையும் கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறது. பண்டிதத் தமிழைக் கையாண்டிருந்தால் நாம் ஒருவேளை வேறு சுவையை அனுபவித்திருக்கக்கூடும். ஆனால் இந்த அலாதியான சுவையை அந்தப் பண்டிதத் தமிழில் அனுபவித்திருக்கவே முடியாது என்பது நிச்சயம்.

### நாடகப் பாத்திரங்கள்

ராமன், சீதை, அனுமான், ராவணன் போன்ற பாத்திரங்கள் இவ்வாறு இன்றைய பாமர மக்களின் பாஷையில் பேசிக்கொண்டால், நாடகப் பாத்திரங்களின் குணச் சித்திரங்கள் பாழாகிவிடாதா, ராமனைப் போன்ற ஒரு தன்னேரில்லாத் தலைவன், எழுத்து வாசனையற்ற இன்றைய பாமரனைப் போல் பேசினால் அது அந்த உன்னதமான பாத்திரத்திற்குப் பொருந்துமா என்றெல்லாம் கேட்கத் தோன்றும். சாதாரணமாக, பாத்திரங்கள் தங்கள் தகுதியினின்றும் இறங்கி வந்து அடிமட்டத்தில் இருப்பவர்களைப் போல் பேசினால் பாத்திரப் படைப்பு பாழாகிவிடும் என்பது உண்மையே. ஆனால், அருணாசலக் கவிராயர் பாமர பாஷையைப் பேச வைத்தே ராமனைத் தன்னேரில்லாத் தலைவனாகப் படைத்திருக்கிறார்! ராவணன் என்ற பாத்திரமும் அதன் நிலையினின்றும் இறங்கிவிடவில்லை. கவிராயருக்கு இருந்த இணையற்ற திறமை இந்தச் செயற்கரிய காரியத்தை எப்படியோ சாதித்துவிட்டது. ராமன் பழைய காவிய ராமனாகவும் ராவணன் கம்பர் படைத்த ராவணனாகவும் இருக்கும் அதே சமயத்தில் நமக்குப் பக்கத்து வீட்டிலோ, அடுத்த ஊரிலோ இன்றும் நாளையும் வசிப்பவர்களைப் போல், நாம் அடிக்கடி பார்த்தவர்களைப் போல், அவர்கள் காட்சியளிக்கும் படியாகவும் அவர் செய்திருக்கிறார். இதனால் நாடகப் பாத்திரங்கள் நம்மிடையே வாழும் மனிதர்களாகவேஇருக்கிறார்கள். எங்கோ ஆகாயத்திலிருந்து குதித்தவர்களைப் போல், கற்பனை லோகத்தை மட்டுமே சேர்ந்த செயற்கைப் பாத்திரங்களைப் போல் அவர்கள் காணப்படவில்லை.

ஆகவே, கவிராயர் பொதுமக்களின் பேச்சுத் தமிழைப் பயன்படுத்தி நாடகத்தை இயற்றியதனால், கம்பராமாயணம் என்ற ஈடு இணையற்ற ஒரு பேரிலக்கியம் இருந்தாலும், மது நாடக நூலுக்கும் ஒரு தேவை இருக்கிறது என்று காட்டிவிட்டார். நாடகம் என்றால் உண்மைச் சம்பவம் போலவும், நாம் ஒன்றிவிடக்கூடிய தத்ரூபமான பாத்திரங்களோடும் அமைய

வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்து மகத்தான வெற்றி பெற்றுவிட்டார். அவரைப் பின்பற்றிப் பிற்காலத்தில் பல புலவர்கள் நாடகம் இயற்ற முயன்றிருப்பதைப் பார்க்கும் போது, அவர் காட்டிய வழி எவ்வளவு சிறந்த வழி என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

### வாழ்க்கை

அருணாசலக் கவிராயர் மறைந்து 188 ஆண்டுகள் ஆகின்றன. அவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் தில்லையாடி என்ற ஊரில் கி. பி. 1712 - ல் பிறந்தார்; அவருடைய தந்தை நல்லதம்பிப் பிள்ளை என்பவர் சைன மதத்தினராக இருந்து பிறகு சைவ சமயத்திற்கு வந்தவர். கவிராயர் தருமபுரம் மடத்தில் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்து, 30 - வது வயதில் கருப்பூர் என்னும் ஊரில் ஒரு பெண் மணியை மணந்து காசுக் கடை வைத்து வியாபாரம் செய்துகொண்டு வாழ்ந்து வந்தார். 12 ஆண்டுகளுக்குப் பிறகு சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த ஒரு மடத்தின் கட்டளைத் தம்பிரானாக இருந்த சிதம்பரம் பிள்ளை என்பவரின் ஆதரவினால் குடும்பத்தோடு சீர்காழிக்கு வந்து இருபத்தைந்து ஆண்டுகள் அங்கே வாழ்ந்தார். 60-வது வயதில் ராம நாடகத்தை இயற்றி முடித்து ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றினார். சென்னைக்கு வந்து மணலி-முத்துக்கிருஷ்ண முதலியார் என்ற பிரபுவின் முன்னிலையில் ராம நாடகத்தைப் பாடிப் பரிசில் பெற்றார். அந்தக் காலத்தில் வாழ்ந்த தேப்பெருமாள் செட்டியார், தஞ்சை மன்னர் துளசி மகாராஜா, புதுச்சேரி ஆனந்தரங்கப் பிள்ளை உடையார் பாளையம் ஜமீன்தார், சிற்றேறி அருணகிரி முதலியார், மண்ணடி வேங்கட சுப்பராய பிள்ளை, அக்கம்மாள் பேட்டை வேங்கடாசல செட்டியார் என்ற பிரமுகர்களின் பாராட்டும் ஆதரவும் பெற்று வாழ்ந்து கி. பி. 1779-க்குச் சரியான விகாரி ஆண்டு ஆனி மாதம் தமது 67-வது வயதில் காலமானார். சிற்றேறி அருணகிரி முதலியார்தான் முதல் முதலில் ராம நாடகத்தை அச்சேற்றியவர் என்பது குறிப்பிடத் தக்கது. தம்மை ஆதரித்த வள்ளல்களைப் புகழ்ந்தும் கவிராயர் சில பாடல்கள் பாடியிருக்கிறார்.

இங்கே வேறொரு முக்கியமான விஷயத்தையும் கூற வேண்டியது அவசியம். அருணாசலக் கவிராயர் வாழ்ந்த காலம் தமிழ் நாட்டில் மூலைக்கு மூலை சண்டைகளும், முற்றுகைகளும் நடந்துகொண்டிருந்த காலம். பிரெஞ்சு, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிகளின் படைகளும், நவாப் படைகளும், பாளையப் பட்டுக்களின் படைகளும் அல்லும் பகலும் போராடிக் கொண்டு, மக்களின் வாழ்வில் அமைதியைக் குலைத்துக்கொண்டிருந்த காலத்தில், அருணாசலக் கவிராயர் ஓரிடத்தில் ஒதுங்கி இருந்து இவ்வளவு பெரிய நூலை இவ்வளவு சிறந்த முறையில் இயற்றி முடித்தார். இது ஒரு வகையில் ஆச்சரியப்படத்தக்கதாகவும், ஒரு வகையில் சூழ்நிலையை லட்சியம் பண்ணாத அவருடைய கவித்துவ ஆவேசத்தை எடுத்துக் காட்டுவதாகவும், வேறொரு வகையில் எந்த நிலையிலும் விடா முயற்சியுடன் ஒரு நல்ல காரியத்தைச் செய்து தீர வேண்டும் என்ற அவருடைய லட்சிய உறுதியை நமக்குப் புலப்படுத்துவதாகவும் இருக்கிறது. நெப்போலியன் ஐரோப்பாக் கண்டம் முழுவதையுமே கலக்கிக் கதி கலங்கச் செய்துகொண்டிருந்த சமயத்தில், ஜெர்மனியில் அமைதியாக ஒரு வீட்டில் வசித்துக்கொண்டு ஜெர்மன் மொழிக்கு அகராதியும், இலக்கணமும் தயாரித்துக்கொண்டும் ஜெர்மானிய நாடோடிக் கதைகளைத் தேடிச் சேகரித்துக்கொண்டும் தாய் மொழிக்கு இணையற்ற சேவை புரிந்தவர்களும், இன்று வரையிலும் அறிஞர்களால் பாராட்டப் பெறுகிறவர்களுமான கிரிம் சகோதரர்களைத் தான் நம் கவிராயருக்கு உவமானமாகச் சொல்லலாம். ஆனால் கிரிம் சகோதரர்கள் சொந்தமாக இலக்கியம் எதுவும் படைக்கவில்லை. நம் அருணாசலக் கவிராயரோ அரியதொரு நாடக இலக்கியத்தையே படைத்துக் கொடுத்திருக்கிறார்.

கூத்து அல்லது நாடகம் என்பது நுண்கலைகளுள் ஒன்றாகும். வெளிநாடுகளுடன் பன்னெடுங் காலமாக வாணிகம் செய்துவந்த தமிழர்—இயல், இசைக்கலைகளில் வல்லவராயிருந்த தமிழர்—நாடகக் கலையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று கொள்ளுதல் தவறாகாது. இயல், இசை என்னும் இரண்டு பிரிவுகள் கேட்போருக்கு இன்பம் தருவன. நாடகம் கேள்வியின்பத்தோடு, காட்சியின்பமும் பயப்பதாகும். எனவே, நாடகமே மிக்க பயனுள்ளதாக அறிவுடையோர் கருதுவர். நாடகத்தில் இயல், இசை ஆகிய இரண்டும் கலந்துள்ளன. நாடகத்திலேயே முத்தமிழையும் ஒருங்கே காணலாம்.

—டாக்டர் ரா. இராசமாணிக்கம்.



*With the best compliments of*

# Dr. A. MATHURAM SONS

## GURU MEDICAL HALL

**TIRUCHIRAPPALLI-I.**

MANUFACTURERS OF THE FAMOUS
GURU THYLAM, GURU TOOTH POWDER
AND THE CHILDRENS' SPECIFICS



# PROTECTION ASSURED WITH WS LIGHTNING ARRESTERS

We manufacture Secondary Distribution and Station class Lightning Arresters of ratings up to 132 kV with technical collaboration from Westinghouse U.S.A. Our Lightning Arresters are already standing guard over valuable electrical equipment in many parts of the country.



We also manufacture a complete range of High Voltage Insulators and special apparatus porcelain including Porcelains for Bushings up to 132 kV.

EDS WS 812

**W.S. INSULATORS OF INDIA LTD.**
"Dhun Building", Mount Road, Madras-2.
Factory: Porur, Madras.

## மாண்புடைய நாடகத்தை மறப்பதுண்டோ ?

### (சௌந்தரா கைலாசம்)

பாலென்பார் தேனென்பார் பழச்சா றென்று
பாவையவள் பேசுவதைப் பண்ணி சைப்பார்
வேலென்பார் கயலென்பார் விழியை நூறு
விதமாகக் கவிதையிலே விரித்து நிற்பார்
கால்என்றும் கையென் றும் அழகு சொட்டக்
கதைகதையாய்ச் சொன்னாலும் அவளே வந்து
கோலமுழு துங்காட்டி எதிரே நின் று
குலவுவதைப் போலாமோ கூறு வீரே ! 1

பெண்ணொருத்தி வடிவத்தை அழகெ ழுந்து
பெருகிவர இயல்எழுதும் ஏட்டில்; பொங்கும்
பண்ணெழுப்பிக் காட்டுமிசை பாட்டில்; அந்தப்
பாவையினை அப்படியே கொண்டு வந்து
கண்ணெதிரே நாடகந்தான் நிறுத்து மென்ற
காரணத்தால் மூன்றினிலே அதுதான் உச்சம். 2

மண்ணுக்கும் விண்ணுக்கும் பால மிட்டு
மக்களினம் உய்வடைய உதவும் கூத்து !
பறக்கின்ற காலத்தைப் பற்றி, எண்ணிப்
பார்க்கின்ற இயல்புடைய மனித னுக்கு,
இறப்பென்றும் பிறப்பென்றும் பேசு கின்ற
இரண்டினுக்கும் இடையினிலே உள்ள வாழ்க்கை
சிறக்கின்ற விதம்பற்றிச் சொல்லிச் சொல்லிச்
சிந்தனையைத் தூண்டிவிடும்—காலப் போக்கில்
மறக்கின்ற பழம்பெருமை நினைக்க வைக்கும்
மாண்புடைய நாடகத்தை மறப்ப துண்டோ ? 3

நாடகமாம் நல்லதொரு கலையை யெந்த
நாளுமிக விரும்பிவர வேற்கும் வண்ணம்
பாடுமிகப் பட்டவர்க்கு, பலர்ந டிக்கப்
பயிற்றுவித்த சங்கரதாஸ் சாமிக் கிந்த
நாடுமிகக் கடன்பட்ட தாலே நெஞ்சில்
நன்றிமணம் பொங்கிவரப் பாடு கின்றோம்.
பீடுமிகப் பெற்றஅ நாள் கலையின் வேந்தர்
பெயர்வாழ்க; அவர்வளர்த்த கலையும் வாழ்க ! 4

அன்பேந்தி விளையாடு கின்ற தில்லை
அம்பலத்து நடராஜன் என்னும் தெய்வ
நினைவேந்தி வருகிறது நெஞ்சம் இந்த
நிகரற்ற கலைவந்து நிற்கும் போது !
கனவேந்தி வாழ்கின்ற உலகில், கூத்துக்
கலையேந்தி மதியேந்தி பொங்கு கங்கைப்
புனலேந்தி வருவானின் அருளால் உண்மைப்
பொருளேந்தி வாழவழி பூக்கு மாக ! 5

## திருவாசகத்தில் நாடகம்

"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்"

"ஆடகச் சீர் மணிக்குன்றுன ஆண்டவனே! உன்னை வேத விதிப்படி வழிபட்டுச் சதா தியானஞ் செய்து தவம் புரிந்து உன் திருவடியில் இரண்டறக் கலந்து ஆன்ம விடுதலை பெற ஞானிகள் அணி அணியாக வருகின்றனர். அவர்களுக்கு நடுவே நானும் கலந்து உன் மெய்யடியான் போல் வேடம் பூண்டு நடித்து வீடுபேற்றைப் பெறுவதற்கு மிகவும் வேகமாக வருகிறேன்."

இப்படி மணிவாசகப் பெருந்தகை தாம் இயற்றிய திருவாசகத்தில் 'திருச்சதகம்' என்ற பதிகத்தில் பதினோராவது பாடலில் தான் ஒரு போலி பக்தனைக நடிப்பதாகக் குறிப்பிட வந்தவர், நாடகம் என்ற சொல்லையும் நடிப்பு என்ற சொல்லையும் பயன்படுத்தி யிருக்கிறுர். இத்திருச்சதகப் பதிகத்திலேயே, 'கழுதொடு காட்டிடை நாடகம் ஆடி' என்று ஏழாவது பாடலிலும், 'நகவே தகும் எம்பிரான் என்னை நீ செய்த நாடகமே' என்று பத்தாவது பாடலிலும் நாடகம் என்ற இச்சொல்லை ஆட்டம் என்ற பொருளில் உபயோகித்திருக்கிறுர்.

## திருக்குறளில் நாடக அரங்கு

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று."

"நாடக அரங்கில் நடிக்கப்படுகின்ற நாடகத்தைப் பார்ப்பதற்கு மக்கள் ஒருவர் இருவர் மூவராக வருவது போல், பொருட்செல்வம் ஒருவனுக்குச் சேருகையில் கொஞ்சங் கொஞ்சமாக வரும்; அச்செல்வம் அவனை விட்டு நீங்கிச் செல்லும்போது, நாடகம் முடிந்ததும் இதுவரை ஒருங்கிருந்து பார்த்துக் கொண்டிருந்த மக்கள் குபீரென எழுந்து ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு விரைவாகக் கலைந்து செல்வதுபோல, ஒரேயடியாகப் போய் விடும்."

இவ்விதம் தமிழ் மறை தந்த திருவள்ளுவர் பெருமான் திருக்குறளில் 'துறவற இயலில்' 'நிலையாமை' என்னும் அதிகாரத்தில் இரண்டாஞ் செய்யுளில் செல்வம் நிலையாமையை விளக்க வந்த இடத்து, நாடக அரங்கின் அமைப்பையும் நாடகம் பார்த்துப் போகும் மக்களின் மனப்போக்கையும் அழகுபட எடுத்து இயம்பியிருக்கிறுர். இதிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் நாடக அரங்கமும் கூத்தாட்டமும் இருந்திருக்கிறது என்ற உண்மை புலனுகிறது. — துரை

# பேரறிஞர்கள்



சமஸ்கிருத நாடகம் காதல் துறையில் பெரும்பாலும் பிரிவாற்றுமையையே அதிகமாகக் காட்டும். ஏனெனில், பிரிவில் காதல் தூயதாகி, இரு உள்ளங்களும் ஆத்ம சக்தியால் கட்டுண்டுவிடும். சமஸ்கிருத நாடகத்தைப் பார்ப்பதன் மூலம் ஏற்படும் சுவையின்பம் உலக இன்பத்தினின்றும் தனிப்பட்ட பேரின்பத்தின் தோற்றமாய் அமைந்திருக்கிறது. நாடகத்தை வேதாந்திகள் உலக மாயைக்கு உவமையாகவும் நாடகம் நடத்தும் சூத்திரதாரனை உலகை ஆட்டி வைக்கும் கடவுளுக்கு உவமையாகவும் கூறுவதிலிருந்து நாடகம் பண்பாட்டில் எவ்வளவு தூரம் ஊன்றியிருந்ததென்று தெரியும்.

—டாக்டர் வே. ராகவன்



நடிப்புத்திறமையிலும் நாடக அமைப்பிலும் சம்பாஷணைகள் எழுதுவதிலும் தமிழர்கள் இந்தியாவில் தலைசிறந்து விளங்குகிறார்கள் என்பதை, 'தமிழ்ச் செல்வம்' நாடகம் நிரூபிக்கிறது.

—தொ. மு. பாஸ்கர தொண்டமான்



இது நடிப்பல்ல; நாட்டின் நடப்பு. சென்னை நகரம் தமிழருடையதே என்பதை வலியுறுத்துங் கருத்துக்களை இந்நாடகத்தில் எடுத்துச்சொல்வது பாராட்டத்தக்கது. சென்னையைத் துண்டு போடவோ தனி மாகாணமாக்கவோ தமிழர்கள் ஒருபோதும் விடப்போவதில்லை என்பதை கலைத்திறமையோடு 'உயிரோவியம்' நாடகம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நாடகக் கலையை இவ்வாறு பயன்தரும் வழியில்தான் கையாள வேண்டும்.

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

# பொன்மொழிகள்



உலக இலக்கிய வரலாறுகளிலெல்லாம் தேடித் தேடிப் பார்த்தாலும் 'அவ்வையாரை'ப் போல் புலமைத் திறமையுடைய ஒரு பெண் இருந்ததாக எடுத்துக்காட்ட முடியாது. இது தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு. இத்தகைய தமிழ் மூதாட்டியைப் பெற்ற தமிழ் நாட்டில் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்று இன்னுங் கேட்கிறுர்கள். இந்த அவ்வையார் நாடகம் அவர்களுக்குப் புத்தி கற்பிக்கும்.

—ரசிகமணி டி. கே. சி.



நாடகத்தின் மூலம் நன்மையான காரியங்களேயுஞ் செய்யலாம் என்ற நம்பிக்கை அவ்வையார் நாடகத்தைப் பார்த்த பின்னர்தான் எனக்கு ஏற்பட்டது.

—பாரத ரத்னம் இராஜாஜி



நாடகக் கலே எப்பொழுதும் பயனுடையதாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் எந்தக் கலேயையும் மக்களுக்குப் பயன்படும் வகையிலேயே கையாண்டு வந்துள்ளனர்.

—தமிழ்க்கடல் ராய. சொ.

தமிழ் நாடக மேதை

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின்

நூற்றாண்டு விழாவுக்கு

## எங்கள் உளமார்ந்த நல்வாழ்த்துக்கள்


# சாரதா ஸ்டுடியோஸ்

ஆர்க்காடு ரோடு

சென்னை-26



# தமிழ் காட்டும் தமிழர்

ந. சஞ்சீவி, எம்.ஏ., எம். லிட்., டிப். மானிடவியல்

'அவ்வையக' வெளியீடாகிய 'சங்கரதாஸ் சுவாமிகள் இன்கவித் திரட்டு' தமிழ்நாடகத் தலைமையாசிரியராகிய சங்கரதாஸ்சுவாமிகளின் ஆளுமையை (Personality) அறிந்து கொள்ள சிறந்ததொரு பலகணி ஆகும். அந்நூலுக்கு அடிகளாரே வரைந்துள்ள முகவுரை அவர்தம் சிறந்த உரைநடைத் திறத்தைச் சிறப்பாக உணர்த்துகிறது. பாடல்களோ அவர்தம் இசைப் புலமையையும் இயற்றமிழ்ப் புலமையையும் எடுத்துக் காட்டுவதோடு அவரைப் பற்றியும் அறிவிக்கின்றன. இச்சிறு கட்டுரையில் அவரைப் பற்றி அவை அறிவிக்கும் அரிய உண்மைகளைப் பற்றி மட்டும் சற்றே கூர்ந்து ஆராய்வோம்.

'இன்கவித் திரட்'டின் முன்னுரை எடுத்த எடுப்பிலேயே அடிகளாரைப் பற்றி உணர்த்தும் ஓர் அரிய உண்மை அவர் தாய்மொழிப் பற்று—தனித்தமிழ்ப் பற்று—உள்ளத்துக்குள் உடையவரே ஆயினும் தாய்மொழி வெறி—தனித்தமிழ் வெறி—அற்றவர் என்பதே ஆகும். இல்லையேல், முகவுரையின் முதல் வரியே 'கீர்த்தனை என்பது வடமொழிச் சொல்லாயினும், தமிழில் பாட்டு என்னுஞ் சொல்லோடு வேற்றுமையின்றிப் பயின்று தொன்றுதொட்டு வழங்கி வருகிறது.' என்று அமையுமா?

சங்கரதாச அடிகளார் ஆராய்ச்சி நோக்கும் உடையவர் என்பதற்கு அவர்தம் முகவுரையின் நடுவுரையாக விளங்கும் பின்வரும் பகுதி நல்ல சான்று :

> 'தற்காலம் இசைத் தமிழில் இலக்கண நூல் காணக் கிடைக்காதாயினும் அங்கங்குச் சிதறிப் பல நூல்களிலும் உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்ட சிற்சில சூத்திரங்களையும் வாக்கியங்களையும் ஆதாரமாகக் கொண்டு இசைத் தமிழின் பாகுபாடு இத்தன்மையன எனச் சங்க காலப் புலவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனரென்று முன்னூல் உரையாசிரியர்கள் ஒருவகையாக நியமித்துச் செல்கின்றனர். அந்நியமங் கொண்டு யூகிப்பாருக்கு இசைத் தமிழுருவம் தென்படாதிராது.'

சங்கரதாசர் தமிழ் இலக்கணங்களிடத்தும் சந்தத் தமிழிடத்தும் கொண்டிருந்த ஈடுபாட்டைக் குறிக்கும் அழகிய 'சரணம்' ஒன்று உள்ளது. அது வருமாறு:

இங்கிதச் செந்தமிழை விழைந்தேன்-நாளும்
இலக்கணங் கற்றுநெஞ்சு குழைந்தேன்-காணும்
சங்கநூல் களிலெல்லாம் நுழைந்தேன்-அதால்
சந்தேகத் தருவெனத் தழைத்தேன்

அடிகளார்க்கு அறிவு வளர வளர ஐயங்களும் வளர்ந்தனவாம்! ஆம். அறிவுத் துறையில் ஐயங்கள் மிகுதியாகப் பெறுவாரே ஐயர் போலும்!

அடிகளார் தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர். முத்தமிழ்ப் பற்று முற்றிய அவர் நாடகத் தமிழை எவ்வாறு போற்றுகிறார் தெரியுமோ?

'தேவரும் மகிழ்கின்ற செந்தமிழ் நாடகம்'

எத்தனையோ குறள் மொழிகளை ஆங்காங்கே எடுத்தாளும் சங்கரதாசர் அப் பொய்யாமொழியின் பெருமையில் கொண்டிருந்த ஈடுபாடும் நம்பிக்கையும் தனிச்சிறப்பு வாய்ந்தன. இவ்வுண்மையை விளக்கும் கண்ணி இதோ:

'சற்றுஞ் சந்தேகமில்லை குறளாகிய
சாத்திர மொன்றுமே போதும்
சர்வகலா சார ஞானந் தருமது
தன்னைப் படிப்பா யெப்போதும்'

இன்பத் தமிழிடம் இத்தகைய ஈடுபாடு கொண்ட அடிகளார் பாடல்கள் அவரைப்பற்றி உணர்த்தும் உண்மைகளை இனி ஒரு சிறிது ஆராய்வோம்:

இருபத்தொன்பது பாடல்களைக் கொண்டுள்ள 'இன்கவித் திரட்'டில் நடு நாயகமாக விளங்குவது 'தமிழே சிறந்தது' என்ற தனிச் சிறப்பு வாய்ந்த பாடல். இப்பாடலால் அடிகளாரின் தமிழ் இலக்கண அறிவும் இலக்கிய அறிவும் தெள்ளிதின் புலனாகும்.

திணைபால் காட்டும்விகுதி
சிறப்புப் பொதுப்பகுதி
சேர்ந்த விதங்களெல்லாம்
தென்மொழிக்கே தகுதி

என்று பாடும் புலவரைக் கால்டுவெல் ஐயர் கண்டால் கட்டித் தழுவிக் கொள்ளாரோ?

அடிகளாரின் தாய்மொழிப் பற்றுக்கு இணை அவர்தம் பெற்ற தாயிடம் கொண்ட அன்பே. இவ்வுண்மையைத் 'தமிழே சிறந்தது' என்ற பாட்டை அடுத்து அமைந்திருக்கும் 'பெற்றவள் கைவிட்டுப் போனாள்!' என்ற உள்ளத்தை உருக்கும் பாடல் உணர்த்தும். இப்பாடல் அடிகளாரின் ஆளுமையை விளக்குவதில் தலைசிறந்து விளங்குகிறது.

பெற்றவள் கைவிட்டுப் போனாள்
மற்றவள் நீயே மீனாட்சி
பேணி வளர்த்திட்டாலும் என்ன - என்னை

என்ற பல்லவியைப் பாடும் போது நன்றி கெட்ட நாயாக இருக்கும் ஒருவனுக்கும் தெய்வத்தின் முகத்தில் தன் தாயின் முகத்தையும் தன் தாயின் முகத்தில் தெய்வத்தின் முகத்தையும் காணும் நல்லுணர்வு காணும். அடுத்து அனுபல்லவியாக அமைந்துள்ள,

சற்றுமவட் குதவாத தறுதலைப் பையலானேன்
சமஸ்காரம் செய்வதற்கும் கொடுத்துவைக்காது
போனேன்-(பெ)

என்ற வரிகளைப் படிக்கும் போது அடிகளார் நம் இரக்கத்திற்கெல்லாம் உரியவராகி நம் கண்ணீரைக் காணிக்கையாகப் பெறுகிறார். சரணத்தில் அடிகளார்,

என்னைக் கருத்தரித்திட்ட போது வருத்தமுற்ற
விதத்தைக் கணக்கிடலாமோ யாராலும்?

என்று கேட்கும் போது நமக்கு வயிறு 'பகீர்' என்கிறது. வாய் இருக்கும் இடம் தெரியவில்லை.

-தினம்

காலைமாலை மத்தியான வேளையும் பாலூட்டி
யென்னைக்
காப்பாற்றி நின்றாளே

என்னும் சொற்கள் கொழுத்திருக்கும் நம் உடலுக்கு யார்? - எது? - காரணம் என்று எண்ணிப் பார்த்து ஒரு கணம் திக்குமுக்காடச் செய்துவிடுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக எத்தனையோ பாடல்களையும் நாடகங்களையும் எழுதிய சங்கரதாஸ் அடிகளார் தாயன்பைப் பாடத் தமக்குப் புலமை இல்லையே என்று புலம்புகிறார்.

-தினம்

காலைமாலை மத்தியான வேளையும் பாலூட்டி யென்னைக்
காப்பாற்றி நின்றாளே அன்பாலும்
பொருத்தமாக அதனைப் புகல எனக்கு வித்தை
போதுமோ தெரிகுவாய்இப் போதுநீ

சொற்களின் இயலாமையை உணர்த்தும் சொற்கள் இவை!

தமிழன்பும் தாயன்பும் போட்டி போடும் சங்கரதாஸ் அடிகளார் உள்ளத்தின் உயர்ந்த பண்புகளுள் இன்னும் சிலவற்றைக் காண்போம்:

கடவுளன்பு. இவ்வன்பிலே மூழ்கிய காரணத்தாலேயே 'சுவாமிகள்' என்ற அரும்புகழுக்கு உரியவரானார் சங்கரதாசர். அவர்தம் இறையன்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டு பின்வரும் அவருடைய சொற்கள்:

தினமுன் னடிபணி எனை நீவிட லாமா?
இது ஞாய மாமா?

இப்படி இறைவனிடம் ஈடுபாடு இருந்தால் மட்டும் போதுமா? தன் குற்றம் உணரும் தகைமை வேண்டாவோ? வேண்டும்; நிரம்ப வேண்டும். 'குற்றமுணர்வான் குணவான் ஆவான்'. தன் குற்றம் உணரான் தறுதலையான். இவ்வுண்மை நம்முன்னோர் நாளும் உணர்ந்த - உணர்த்திய - உண்மை.

ஏதிலார் குற்றம் போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?

என்பது வள்ளுவர் வினா. வள்ளுவர் கருத்து வையத்து அறிஞர்க்கு எல்லாம் உடன்பாடு என்பதைப் பின்வரும் பொன்மொழிகளும் காட்டும்:

"தீச்செயல்களின் தீமையை உணரும்
உணர்வே நற்செயல்களின்
ஆரம்பம்"

இது ரோம் நாட்டு ஞானி அகஸ்டினின் தெளிவுரை.

"எந்த மனிதனும் தன் குற்றத்தைத் தானுணர்ந்து உரையாதது ஏன்? அவன் இன்னும் அக்குற்றத்தில் சிக்கியுள்ளமையே காரணம். விழித்தவனே தான் கண்ட கனவை விளம்ப வல்லவன்."

இது ஏசுநாதருக்கும் முன் வாழ்ந்த ரோம் நாட்டு ஞானி செனிக்காவின் செம்மொழி.

"ஒரு மனிதன் தன் குற்றங்களை ஒப்புக்கொள்வதில் ஒரு போதும் நாணப்படக் கூடாது. தன் குற்றத்தைத் தான் ஒப்புக் கொண்டு உரைப்பது நேற்றைவிட இன்று தான் அறிவு பெற்றிருப்பதாக உரைப்பதே ஆகும்."

இது ஆங்கிலக் கவிஞர் போப்பின் அழகிய கருத்து.

"தம்முடைய தவறான செயல்களை உணர்ந்து வருந்துவதற்கு உரிய ஆண்மையைக் காட்டிலும் நகைக்கத் தக்கதும் முட்டாள்தனமானதும் ஆன

செயல்களை எண்ணி வருந்துவதற்கே மிக்க ஆண்மை தேவை.''

இது பிரஞ்சு நாட்டு அரசியல் அறிஞர் ரூசோ வின் ஆணித்தரமான பேச்சு.

இவ்வாறு உலக முழுவதுப் பல நாடுகளிலும் பல காலங்களிலும் தோன்றிய அறிஞர்கள் கண்ட ஒரு தெளிவு - தன் குற்றத்தைத் தான் உணர்வதே - அழுது தொழுவதே. இப் பொது நெறியை - பெரு நெறியை நம் சங்கரதாச அடிகளாரும் போற்றினர்; போற்றிப் பின்பற்றினர். தன் குற்றம் காணும் தமிழ் நெறி - திருக்குறள் நெறி - அழுதடி அடையும் அருள் நெறி - திருவாசக நெறி - சங்கரதாச அடிகளாரிடம் இல்லையென்றால் வேறு யாரிடம் இருக்க முடியும்?

சங்கரதாச அடிகளார் தம் குற்றங்களைத் தாம் உணர்ந்ததன் தனிப்பயன் - கனிப் பயன் - என்ன தெரியுமா? 'தாயே மீனாட்சி' என்று தொடங்கும் பாடல். அது அவர்தம் குற்றமுணர் பண்பையும் அப் பண்பால் அவர் பெற்ற பெரும் பயனையும் ஒருசேர எடுத்துக் காட்டுகிறது.

இந்த இசைத்தமிழ் காட்டும் சான்றோரே சங்கரதாசர். அவர் திருவடிகள் வாழ்க! வெல்க!


**THE MADRAS GOVERNMENT SERVENTS' CO-OPERATIVE BANK LTD., No. (980)**

(Estd : 1912)

**111, Big Street, Triplicane, Madras - 5.**

*Working hours* :- 9 a. m. to 12-30. p. m. and 3. p. m to 6-30 p. m.

| | |
|---|---|
| Authorised Share Capital | Rs. 3,00,000 |
| Paid up Share Capital | Rs. 2,71,395 |
| Deposits | Rs. 10,61,967 |
| Working Capital | Rs. 16,61,967 |

Rates of Interest on Fixed Deposits :

| | |
|---|---|
| 6 Months | 5½% |
| 12 Months | 6% |
| 24 Months | 6½% |
| 30 Months | 7% |
| 36 Months | 7½% |

½% extra interest on deposits of Rs. 3,000 and alove, subject to a maximum of 7½% is allowed.

K. GOVINDASWAMY.
(*Special Officer*)

TELEGRAMS : "NAGAR YARN" TELEPHONE : 164

# Nagammal Mills Limited

NAGERCOIL

Full Air-Conditioned

TOTAL SPINDLEAGE :

12,609 RING SPINDLES,
776 DOUBLING SPINDLES.



Founder :

**Late Sri S. KUMARASWAMY**

PIONEER, NAGERCOIL.

MANAGING DIRECTORS :

**Smt. N. BAGAVATHY AMMAL,**
**Sri. V. BABU**

PRODUCERS OF HIGH QUALITY YARN COUNTS OF YARN PRODUCED :-
20s, 26s, 40s, 2/20s & 2/40s.



# சுவாமிகளும் கவிராயரும்

— அவ்வை. தி.க.ஷண்முகம் —

ஆலந்தூர் ஒரிஜினல் நாடகக் கம்பெனி நாகப்பட்டினத்தில் நடந்துகொண்டிருந்தது. கம்பெனியின் ஆசிரியர் சித்திரக்கவி சுப்புராய முதலியார், வேலூர் தி. நாராயணசாமி பிள்ளை, கம்பெனியின் ஆசிரியராகிய முத்தமிழாகரம் ஏகை சிவசண்முகம் பிள்ளை, உடுமலைச் சந்தச் சரபக்கவி முத்துச்சாமி கவிராயர், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் ஆகிய அக்கால நாடகாசிரியர்கள் அனைவரும் ஒன்று கூடி இருந்தனர். அப்போது கம்பெனியின் மானேஜரும் மிகச் சிறந்த பெண் வேட நடிகரு மாகிய மனமோகன அரங்கசாமி நாயுடு அவர்கள், நாடக முடிவில் பாடுவதற்கு ஒரு பாடல் வேண்டு மென்று பொதுவாகக் கேட்டார். உடனே முத்துச்சாமி கவிராயர் அவர்கள் சுவாமிகளை நோக்கி 'தாங்களே பாடவேண்டும்' என்றார். ஹார்மோனியம் விஸ்வநாதலவ்ஜி பண்டிட் அவர்கள் சந்தம் அமைத்துக் கொடுக்க அதே சமயம் சுவாமிகள்,

'மாது பாக மானவா
வானவா வந்தனம்'

என்று உடனே பாடலைப் புனைந்து கொடுத்து அங்கிருந்த எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றார்.

இவ்வாறு அக்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றிருந்த எல்லா நாடகாசிரியர்களாலும் தலைசிறந் தவர் என்று போற்றப் பெற்ற பெரும்புலவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்.

## முத்துச்சாமி சேர் சங்கரதாஸர்

ஒரு புலவரை மற்றொரு புலவர் பாராட்டுவது அபூர்வமாக இருந்த அக்காலத்தில் சுவாமிகளுக்கும் உடுமலைச் சரபம் முத்துச்சாமிக் கவிராயர் அவர் களுக்கும் இருந்த அன்புத் தொடர்பைப்பற்றி பல பெரியோர்கள் வியந்து கூறக் கேட்டிருக்கிறேன். இரு பெரும் புலவர்கள், அதுவும் ஒரே துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் ஒற்றுமையோடு பழகிய பான்மையைக் கண்டு எல்லோரும் அதிசயப்பட்டிருக் கிறார்கள். கவிராயர், சுவாமிகள் இருவரும் புலவரேறு தண்டபாணி சுவாமிகளிடம் ஒன்றாகப் பாடம் கேட்டவர்கள்.

சுவாமிகள் காலஞ்சென்ற பின், நாங்கள் நடிகர் களாக இருந்த தத்துவ மீனலோசனி வித்துவ பால சபையில் கவிராயர் அவர்கள் சில மாதங்கள் ஆசிரியப் பொறுப்பை ஏற்று 'மதுரைவீரன்', 'மன்மத தகனம்' ஆகிய நாடகங்களைப் பயிற்று வித்தார். எங்கள் எல்லோரையும் கூட்டிவைத்துக் கொண்டு கவிராயர் அவர்கள் சுவாமிகளுக்கும் தமக்குமுள்ள தொடர்பைப்பற்றி அடிக்கடி பேசுவ துண்டு.

கவிராயர் அவர்கள் பெரும்பாலும் பாட்டின் கடைசி வரியில் தமது பெயரைக் குறிப்பிடாமலிருப் பதே இல்லை. அக்காலத்திலிருந்த புலவர்களில் பலரும் இவ்வாறு 'முத்திரையடி' பொறித்துத்தான் பாடலை முடிப்பது வழக்கம். சுவாமிகள் ஒருவர் மட்டும் இதில் மாறுபட்ட கருத்து உடையவர். தமது பாடல் ஒன்றில்கூட, அவர் பெயர் முத்திரை வைத்ததே இல்லை. பிற்காலத்தில் பெயர் விளங்கு வதற்காவது ஆசிரியரின் பெயரைக் குறிப்பிட வேண்டியது அவசியமெனக் கவிராயர் அவர்கள் சுவாமிகளிடம் அடிக்கடி வற்புறுத்துவாராம்.

சுவாமிகள் இதற்கு அடியோடு மறுத்துவிடவே, கவிராயர் அவர்கள் தாம் எழுதிய இராமாயண நாடகப் பாடல்கள் சிலவற்றில் 'முத்துச்சாமி சேர் என்று சங்கரதாசர் இருவர் பெயரையுமே முத்திரை யடியாக வைத்துவிட்டார். அந்தக் கட்டத்திற்கு சுவாமிகள் வேறு பாடல்கள் எழுதாததால் 'இலங்கா தகனம்' நாடகத்தில் ஹனுமான் பாடும் சில பாடல்கள் இவ்வாறு இருவர் பெயரையும் தாங்கி நிற்கின்றன.

## இருவரும் பாடிய பரதன் பாட்டு

கவிராயர் அவர்கள் ஒருநாள் இராமாயணப் பாடலை புனைந்து கொண்டிருந்தார். கேகய நாடு சென்றிருந்த பரதன் தீய கனாக் கண்டு தம்பி சத்ருக்கனிடம் தான் கண்ட கனவைச் சொல்லு கிறான். பரதனுக்கு பாடல் எழுதத் தொடங்கினார் கவிராயர் அவர்கள்.

நான் கண்டேன் பல
தீங் கண்டும் கனவு
ஓங்கி எங்கெங்கும்
உலகம் இருள.......

பாடல் தடைப்பட்டது.



# சுவாமிகளும் கவிராயரும்

– அவ்வை. தி.க. ஷண்முகம் –

ஆலந்தூர் ஒரிஜினல் நாடகக் கம்பெனி நாகப்பட்டினத்தில் நடந்துகொண்டிருந்தது. கம்பெனியின் ஆசிரியர் சித்திரக்கவி சுப்புராய முதலியார், வேலூர் தி. நாராயணசாமி பிள்ளை, கம்பெனியின் ஆசிரியராகிய முத்தமிழாகரம் ஏகை சிவசண்முகம் பிள்ளை, உடுமலைச் சந்தச் சரபக்கவி முத்துச்சாமி கவிராயர், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் ஆகிய அக்கால நாடகாசிரியர்கள் அனைவரும் ஒன்று கூடி இருந்தனர். அப்போது கம்பெனியின் மானேஜரும் மிகச் சிறந்த பெண் வேட நடிகருமாகிய மனமோகன அரங்கசாமி நாயுடு அவர்கள், நாடக முடிவில் பாடுவதற்கு ஒரு பாடல் வேண்டுமென்று பொதுவாகக் கேட்டார். உடனே முத்துச்சாமி கவிராயர் அவர்கள் சுவாமிகளை நோக்கி 'தாங்களே பாடவேண்டும்' என்றார். ஹார்மோனியம் விஸ்வநாதலவ்ஜி பண்டிட் அவர்கள் சந்தம் அமைத்துக் கொடுக்க அதே சமயம் சுவாமிகள்,

'மாது பாக மானவா
வானவா வந்தனம்'

என்று உடனே பாடலைப் புனைந்து கொடுத்து அங்கிருந்த எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றார்.

இவ்வாறு அக்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றிருந்த எல்லா நாடகாசிரியர்களாலும் தலைசிறந்தவர் என்று போற்றப் பெற்ற பெரும்புலவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்.

## முத்துச்சாமி சேர் சங்கரதாஸர்

ஒரு புலவரை மற்றொரு புலவர் பாராட்டுவது அபூர்வமாக இருந்த அக்காலத்தில் சுவாமிகளுக்கும் உடுமலைச் சரபம் முத்துச்சாமிக் கவிராயர் அவர்களுக்கும் இருந்த அன்புத் தொடர்பைப்பற்றி பல பெரியோர்கள் வியந்து கூறக் கேட்டிருக்கிறேன். இரு பெரும் புலவர்கள், அதுவும் ஒரே துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் ஒற்றுமையோடு பழகிய பான்மையைக் கண்டு எல்லோரும் அதிசயப்பட்டிருக்கிறார்கள். கவிராயர், சுவாமிகள் இருவரும் புலவரேறு தண்டபாணி சுவாமிகளிடம் ஒன்றாகப் பாடம் கேட்டவர்கள்.

சுவாமிகள் காலஞ்சென்ற பின், நாங்கள் நடிகர்களாக இருந்த தத்துவ மீனலோசனி வித்துவ பால சபையில் கவிராயர் அவர்கள் சில மாதங்கள் ஆசிரியப் பொறுப்பை ஏற்று 'மதுரைவீரன்', 'மன்மத தகனம்' ஆகிய நாடகங்களைப் பயிற்றுவித்தார். எங்கள் எல்லோரையும் கூட்டிவைத்துக்கொண்டு கவிராயர் அவர்கள் சுவாமிகளுக்கும் தமக்குமுள்ள தொடர்பைப்பற்றி அடிக்கடி பேசுவதுண்டு.

கவிராயர் அவர்கள் பெரும்பாலும் பாட்டின் கடைசி வரியில் தமது பெயரைக் குறிப்பிடாமலிருப்பதே இல்லை. அக்காலத்திலிருந்த புலவர்களில் பலரும் இவ்வாறு 'முத்திரையடி' பொறித்துத்தான் பாடலை முடிப்பது வழக்கம். சுவாமிகள் ஒருவர் மட்டும் இதில் மாறுபட்ட கருத்து உடையவர். தமது பாடல் ஒன்றில்கூட, அவர் பெயர் முத்திரை வைத்ததே இல்லை. பிற்காலத்தில் பெயர் விளங்குவதற்காவது ஆசிரியரின் பெயரைக் குறிப்பிட வேண்டியது அவசியமெனக் கவிராயர் அவர்கள் சுவாமிகளிடம் அடிக்கடி வற்புறுத்துவாராம்.

சுவாமிகள் இதற்கு அடியோடு மறுத்துவிடவே, கவிராயர் அவர்கள் தாம் எழுதிய இராமாயண நாடகப் பாடல்கள் சிலவற்றில் 'முத்துச்சாமி சேர் என்று சங்கரதாசர் இருவர் பெயரையுமே முத்திரையடியாக வைத்துவிட்டார். அந்தக் கட்டத்திற்கு சுவாமிகள் வேறு பாடல்கள் எழுதாததால் 'இலங்கா தகனம்' நாடகத்தில் ஹனுமான் பாடும் சில பாடல்கள் இவ்வாறு இருவர் பெயரையும் தாங்கி நிற்கின்றன.

## இருவரும் பாடிய பரதன் பாட்டு

கவிராயர் அவர்கள் ஒருநாள் இராமாயணப் பாடலை புனைந்து கொண்டிருந்தார். கேகய நாடு சென்றிருந்த பரதன் தீய கனக் கண்டு தம்பி சத்ருக்கனிடம் தான் கண்ட கனவைச் சொல்லுகிறான். பரதனுக்கு பாடல் எழுதத் தொடங்கினர் கவிராயர் அவர்கள்.

நான் கண்டேன் பல
தீங் கண்டும் கனவு
ஓங்கி எங்கெங்கும்
உலகம் இருள.......

பாடல் தடைப்பட்டது.

அடுத்த வரி பொருத்தமாக வராததால் வெளியே சென்று உலாவிக் கொண்டிருந்தார் கவிராயர். அப்போது எதிர்பாராத விதமாக அங்கே வந்த சுவாமிகள் பாடலைப் பார்த்துவிட்டு அதன் கீழே,

'ஒலி இடியுடன்
மலைகள் உருள'

என்றெழுதிப் பாடலின் அடுத்த வரியைப் பூர்த்தி செய்துவிட்டு உள்ளே போய்விட்டார். கவிராயர் அவர்கள் தொடர்ந்து எழுதுவதற்காக விரைந்து வந்தவர் தமது பாடல் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதைக் கண்டதும் அவ்வாறு எழுதும் ஆற்றல் உடையவர் சுவாமிகள்தான் என்று ஊகித்துக்கொண்டு 'எங்கே சங்கரதாஸ்! வந்து எவ்வளவு நாழி ஆயிற்று' என்று கேட்டாராம்.

## புலமை விளையாட்டு

ஒரு முறை கவிராயர் அவர்கள் சுவாமிகளை நோக்கி, 'சங்கரதாஸ் சுவாமிகளே! உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும்போல் இருக்கின்றன' என்றாராம். உடனே சுவாமிகள் சிரித்துக்கொண்டே, 'கவிராயர் பாடல்கள் கல்லும் கரடும் போல் இருக்கின்றனவே!' என்றாராம். புலவர்களின் விளையாட்டுப் பேச்சுக்களிலே கூட இனிமை சொட்டுவதைக் காண்கிறோம். முள்ளும் முரடும், கல்லும் கரடும் என்பனவற்றை மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் முரட்டுத்தனமான பாடலென்றும் கடினமான பாடலென்றுந்தான் பொருள் தோன்றும். ஆனல், உட்பொருள் அதுவன்று. முள்ளும் முரடும் போல் என்றால் பலாச்சுளையைப் போல் இனிப்புடையது என்றும், கல்லும் கரடும் போல் என்றால் கற்கண்டைப் போன்றது என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

## உள்ளத் தொடர்பு

கவிராயர் அவர்களிடம் பாடம் கேட்கும் மாணக்கர்கள் சுவாமிகளையும், சுவாமிகளிடம் பாடம் கேட்கும் மாணக்கர்கள் கவிராயர் அவர்களையும் தங்கள் குருநாதராக எண்ணிப் போற்றுவது வழக்கம். கவிராயர் அவர்களின் மாணக்கராகிய உடுமலை நாராயணக் கவி அவர்கள் சுவாமிகளிடமும் வெண்பா, கலித்துறை முதலியவற்றைப் பாடம் கேட்டதாக என்னிடம் கூறியிருக்கிறார்.

1922 நவம்பர் 13 - ம்நாள் சுவாமிகள் புதுவையில் மறைவெய்திய செய்தியைக் கேட்டு, கவிராயர் அவர்களும் அவரது மாணக்கர்களான திருவாளர்கள் சந்தானகிருஷ்ண நாயுடு, சங்கரலிங்கக் கவிராயர் முதலியோரும், 'இரங்கற் பாக்கள்' எழுதியனுப்பியிருந்தனர்.

சுவாமிகளின் பெருமையை விளக்கும் அப்பெரியோர்களின் உருக்கமான பாடல்கள் ஒன்றுகூட இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

கவிராயர் அவர்கள் பாடிய பத்துப் பாடல்களில் இரண்டு பாடல்களை மட்டும் எனது நண்பர் கவி ஆறுமுகனார் அவர்கள் சொல்லிக் கேட்டிருக்கின்றேன்.

கோவலனுதி பல நாடகங்களைக்
கோத்து வைத்துப்
பூவில நேகம் வழியினுமே புகழ்
பொங்க நின்று
சாவினும் சாவாதிருக்கின்ற
சங்கரதாச — நண்பா
நீவிலங்கத்திற் சரீரம் சுமை
யென்று நீங்கினையே.

*

கான்சார் கரியவும் நேத்திரம் சேர்
எழிற் காரிகைகள்
வீண் சாகசங்கள் மெலிவின்றி
நூல் வழியிற் புகுந்து
வான் சாகரப் புவியெங்கும்
புகழ்சொல்ல வந்து பின்னே
தான் சாகத்தக்க மருந்துண்ட
சங்கர தாசை யனே.

இந்த வரிகளில் கவிராயர் அவர்கட்கும் சுவாமிகளுக்கும் இருந்த உள்ளத்தொடர்பு வெளிப்படுகிறதல்லவா ?

★

# தமிழ் நாடக சபைகளை நடத்திப் புகழ் பெற்ற நாடகப் புரவலர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மனமோகன நாடகக் கம்பெனி | — | நவாப். கோவிந்தசாமிராவ் |
| 2. | சமரச சன்மார்க்க நாடக சபா | — | சங்கரதாஸ் சுவாமிகள் |
| 3. | நவரச அலங்கார நாடக சபா | — | எம். எஸ். ராமுடு அய்யர் |
| 4. | மதுராம்பிகா சங்கீத நாடகசபா | — | சின்னச்சாமா அய்யர் |
| 5. | ஆதிஇந்து விநோத சபா | — | தி. நாராயணசாமி பிள்ளை |
| 6. | விக்டோரியா நாடகக் கம்பெனி | — | லட்சுமிபதி நாயுடு |
| 7. | ஸ்டார் ட்ராமாடிக் கம்பெனி | — | நாகரத்தின நாய்க்கர் |
| 8. | பெங்களூர் இந்துவிநோத நாடகசபா | — | சுப்பராய ஆச்சாரி முதலியோர் |
| 9. | கொட்டைகட்டி இராகவலு முதலியார் நாடகக் கம்பெனி | — | இராகவலு முதலியார் |
| 10. | ஆலந்தூர் டிராமாடிக் கம்பெனி | — | சித்திரக்கவி சுப்பராய நாயுடு |
| 11. | ஸ்ரீ கிருஷ்ணகான சபா | — | சாமி நாயுடு |
| 12. | கோல்டன் கம்பெனி | — | பி. கோவிந்தசாமி நாயுடு |
| 13. | சுதேச நாடகக் கம்பெனி | — | ஜி. எஸ். முனுசாமி நாயுடு |
| 14. | ஆலந்தூர் ஒரிஜினல் டிராமாடிக் கப்பெனி | — | ஜி. வெங்கடாசல முதலியார் |
| 15. | இந்து ஜூபிலி தியேட்ரிக்கல்ஸ் | — | கோபன் நாயுடு |
| 16. | வைகுண்ட ஐயங்கார் நாடகக் கம்பெனி | — | வைகுண்ட ஐயங்கார் |
| 17. | எம்பயர் தியேட்டரிக்கல்ஸ் | — | சி. எஸ். சாமண்ணு ஐயர் |
| 18. | தோட்டி வெ. மாரிமுத்து நாடகக் கம்பெனி | — | மாரிமுத்து |
| 19. | ஆரியகான சபா | — | கெ. எஸ். செல்லப்பா அய்யர் சகோதரர்கள் |
| 20. | ஸ்ரீ சண்முகானந்த சபா | — | பி. எஸ். வேலுநாயர் |
| 21. | காளுடுகாத்தான் வைத்தியநாதய்யர் கம்பெனி | — | வைத்தியநாதய்யர் |
| 22. | ஜகன்மோகன நாடகக் கம்பெனி | — | சுந்தரராவ் |
| 23. | சென்னை இந்துவிநோத நாடக சபா | — | சி. கன்னையா |
| 24. | ஆலந்தூர் அரங்கவிலாஸ் நாடகக்கம்பெனி | — | மனமோகன அரங்கசாமி நாயுடு |
| 25. | கிருஷ்ணகான சபா | — | அல்லி பரமேஸ்வர அய்யர் |
| 26. | காஞ்சிபுரம் ஸ்ரீ. விஜயகந்தர்வ கானசபா | — | வி. பி. ஜானகி அம்மாள் |
| 27. | சாரதாவிலாஸ் நாடகக் கம்பெனி | — | டி. எஸ். சங்கரநாராயண அய்யர் |
| 28. | ஸ்ரீ. தந்திமுகானந்த சபா | — | ஓவியர். வி. எஸ். பொன்னுச்சாமி பிள்ளை |
| 29. | ஸ்ரீ. கணபதிகான சபா | — | பி. இரத்தினம்பாள் |
| 30. | பரசுராம பிள்ளை நாடகக் கம்பெனி | — | கெ. பி. பரசுராம பிள்ளை |
| 31. | குமாரலட்சுமி கானசபா | — | ஆடன் பிரஸ், முனுசாமி முதலியார் |
| 32. | ஸ்ரீ. கிருஷ்ண மனோரஞ்சித நாடக சபா | — | ஆஞ்சநேய கோவிந்தசாமி நாயுடு |
| 33. | சமரச கானசபா | — | வேதவல்லித்தாயார் |
| 34. | இராமானுகூல சபா | — | டி. எம். மொஹைதீன் |
| 35. | குமாரலட்சுமி விலாசசபா | — | தாமோதரம் பிள்ளை |

| | | | |
|---|---|---|---|
| 36. | இந்துவிநோத சபா | — | சீனிவாசம் பிள்ளை |
| 37. | தாப்பா வெங்கடாசலம் செட்டி நாடகக் கம்பெனி | — | தப்பா. வெங்காசலஞ் செட்டியார் |
| 38. | பாலமனோஹர சபா | — | தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் |
| 39. | விஜயகந்தர்வ நாடகசபா | — | விஜயலட்சுமி, கண்ணுமணி |
| 40. | சௌந்திரகான சபா | — | வீரராகவ முதலியார் சகோதரர்கள் |
| 41. | ஸ்ரீ மீனும்பிகை நாடகசபா | — | பி. இராஜாத்தம்பாள் |
| 42. | தேசீகானந்த பாய்ஸ் கம்பெனி | — | கெ. டி. மாரிமுத்துப்பிள்ளை |
| 43. | மதுரை பாலமீன ரஞ்சனி சங்கீத சபா | — | ஜெகந்நாத அய்யர் |
| 44. | மதுரை. ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி | — | சச்சிதானந்தம் பிள்ளை |
| 45. | மதுரை. ஸ்ரீ பாலசண்முகானந்த சபா | — | டி. கெ. எஸ். சகோதரர்கள் |
| 46. | மதுரை பாலவினோத சங்கீத சபா | — | பக்கிரி ராஜா |
| 47. | மதுரை தேவிபாலவினோத சங்கீத சபா | — | நவாப். டி. எஸ். இராஜமாணிக்கம் பிள்ளை |
| 48. | ஸ்ரீ பாலவிநோத நாடகசபா | — | எஸ். எஸ். சங்கரலிங்க நாடார். |
| 49. | பாலகந்தர்வ கானசபா | — | சீனிவாச நாடார் |
| 50. | ஸ்ரீ சக்திநாடக சபா | — | டி. கெ. கிருஷ்ணசாமி |
| 51. | ஸ்ரீ மங்களபால கானசபா | — | யதார்த்தம் டி. பி. பொன்னுச்சாமிபிள்ளை |
| 52. | ஸ்ரீ ராமபால கானசபா | — | வைரம் ஒ. ஏ. ஏ. ஆர். அருணசலம் செட்டியார் |
| 53. | முத்துகிருஷ்ணன் பாய்ஸ் கம்பெனி | — | எம். எஸ். முத்துகிருஷ்ணன் |
| 54. | ஸ்ரீ மீனலோசனி பாலசற்குண நாடக சபா | — | பழனியா பிள்ளை |
| 55. | தத்துவ மீனலோசனி வித்வபால சபா | — | சின்னையா பிள்ளை முதலியோர் |
| 56. | என். எஸ். கே. நாடகசபா | — | என். எஸ். கிருஷ்ணன் |
| 57. | கிருஷ்ணன் நாடகசபா | — | கே. ஆர். இராமசாமி |
| 58. | திருச்சி பாலபாரத சபா | — | ராஜபாகு பிள்ளை |
| 59. | மோகனகான சபா | — | ஏ. ஆர். பார்த்தசாரதிநாயுடு |
| 60. | புளியமாநகர் கிருஷ்ண ரெட்டியார்பாய்ஸ் கம்பெனி | — | கிருஷ்ண ரெட்டியார் |
| 61. | புளியமாநகர் சுப்பா ரெட்டியார் கம்பெனி | — | சுப்பா ரெட்டியார் |
| 62. | சிதம்பர கானசபா | — | எம். எம். சிதம்பரநாதன் |
| 63. | தேவி நாடகசபா | — | கெ. என். ரத்தினம் |
| 64. | ஸ்ரீ பாலமோகன ரஞ்சித சங்கீத சபா | — | நாகலிங்கம் செட்டியார் |
| 65. | சங்கரதாஸ் சுவாமி நாடக சபா | — | டி. எம் இராஜநாயகம் |
| 66. | தஞ்சை கனகசபேச கானசபா | — | ? |
| 67. | பாலாமணி அம்மாள் நாடகக் கம்பெனி | — | பாலாமணி அம்மாள் |
| 68. | ஐயப்பா நாடகக் கம்பெனி | — | ராமசாமி நாயுடு |
| 69. | வேலூர் மாணிக்கம் பிள்ளை நாடகக் கம்பெனி | — | மாணிக்கம் பிள்ளை |

With the best compliments from




M/s **SPIDER**
KNITTING COMPANY
TIRUPUR - 4

Tel :
"SPIDER"

Phone :
160

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. எழுதிய
சிறந்த ஆராய்ச்சி நூல்

## அவ்வை — யார்?

அவ்வையாரைப் பற்றி இதுவரை வெளி வராத பல புதிய செய்திகளுடன் எழுதப்பட்ட சிறப்பு மிக்க ஆராய்ச்சி நூல்.

மலிவுப் பதிப்பு நூல்கள்

| | ரூ.பை. |
|---|---|
| வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு—ம.பொ.சி. (ஜனாதிபதி பரிசு பெற்ற நூல்) | 3·00 |
| ஸ்ரீ கந்தபுராணம் வசனம் — எஸ். கே. சாமி | 2·00 |
| ஆதி சங்கரர் விஜயம் — ,, | 1-25 |

இன்ப நிலையம்
மயிலாப்பூர், சென்னை-4

With the best compliments from :

**RAVAI & SONS**
Quality Printers

*148, Big St., Triplicane,*
*Madras-5*

PHONE : 85269

# சங்கரதாஸ் சுவாமிகள் வரலாறு

அவ்வை தி. க. ஷண்முகம்

நாடகத் தமிழை வளர்த்த தந்தை அவர்; நாடகாசிரியர்கள் பலருக்குப் பேராசிரியர் அவர். சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கிடையே அவரது பாடல்களையோ வசனங்களையோ பயன்படுத்தாத நடிக நடிகையர் தமிழ் நாடக உலகில் இல்லையென்றே சொல்லி விடலாம். நாடக உலகம் அப்பெரியாரைத் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றியது. எளிமையும் இனிமையும் ததும்பும் பாடல்களாலும் தேன் சொட்டும் தீந்தமிழ் உரைநடைகளாலும் அப்பெருமகனர் இயற்றியருளிய நாடகங்களே தமிழ் நாடகக் கலைவளர்ச்சிக்கு அடிப்படைச் செல்வம் என்று கூறினுல் அது மிகையாகாது.

இவருடைய முழுப்பெயரையும் சொல்ல வேண்டியதில்லை. சுவாமிகள் என்றுலே போதும். தமிழ் நாடக உலகில் அது சங்கரதாச சுவாமிகள் ஒருவரைத்தான் குறிக்கும்.

இவர் காலத்திலிருந்த மிகப் பெரிய புலவர்களும் நாடகாசிரியர்களுமான உடுமலைச் சரபம் முத்துச் சாமிக் கவிராயர், குடந்தை வீராசாமி வாத்தியார் முதலியோரெல்லாம் சுவாமிகளின் புலமைக்குத் தலைவணங்கினர்; பாராட்டினர்.

ஆங்கில மொழி மோகத்தால் தாய்மொழியிற் பேசுவதுகூட மதிப்புக் குறைவென்று கருதப்பட்ட காலத்தில் நாடக மேடையின் மூலம் தமிழை வளர்த்த பெரியார் தவத்திரு சங்கரதாச சுவாமிகள். இசையரங்குகளிலே தெலுங்கு மொழி ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் நாடக மேடையில் தீந்தமிழ்ப் பாடல்களைப் பொழிந்து தமிழுலகை மகிழ்வித்தவர் சங்கரதாச சுவாமிகள்.

1867-ஆம் ஆண்டில் ஆவணித் திங்கள் 22-ஆம் நாள் தமிழ் மாநிலம் இவரைத் தாங்கும் பேறு பெற்றது. தமிழ் வரலாற்றிலே அழியாத இடம் பெற்ற கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனர், மகாகவி பாரதியார், வீரபாண்டியக் கட்டபொம்மன் முதலிய வீரர்களையும், புலவர்களையும் தந்த திருநெல்வேலி மாவட்டம்தான் நாடகப் புலவராகிய சங்கரதாச சுவாமிகளையும் நமக்குத் தந்தது. தென்பாண்டி நாட்டின் துறைமுக நகரங்களில் ஒன்முன தூத்துக்குடியிலே, வெள்ளையரை விரட்டியடுத்த ‘வெள்ளையத் தேவன்’ பரம்பரையிலே, போரில் புறமுதுகு காட்டாத வீர மறக்குடியிலே தாமோதரக் கணக்கப்பிள்ளை என்பாரின் செல்வத் திருமகனுகப் பிறந்தார் சங்கரதாச சுவாமிகள்.

தந்தையார் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய தமிழ்ப்புலவர். நகர மக்கள் அவரை ‘இராமாயணப் புலவர்’ என்ற சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர்.

> “தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்”

என்னும் தமிழ் மறையை நன்கறிந்த தாமோதரத் தேவர் தமது புதல்வனுக்குத் தாமே தமிழ்க் கல்வி புகட்டினர்.

அக்காலத்தில் ‘புலவரேறு’ என்று அறிஞர்களால் போற்றப்பட்ட பழனி தண்டபாணி சுவாமிகளிடம் இவர் பாடம் கேட்டுத் தமது தமிழறிவை வளர்த்துக் கொண்டார்.

தண்டபாணி சுவாமிகளிடம் தமிழ்ப் பாடம் கேட்டபோது இவரும் உடுமலைச் சரபம் முத்துச் சாமிக் கவிராயரும் உடன் மாணவரா யிருந்தனர். கவிராயர் அவர்கட்கும் இவருக்குமுள்ள அன்புத் தொடர்பு மிக நெருங்கியதாகும்.

தூத்துக்குடி உப்புப் பண்டகசாலையிலே சுவாமிகள் சிலகாலம் கணக்கராக வேலை செய்தார். தமது பதினைவது வயதிலேயே வெண்பா, கலித்துறை, இசைப்பாடல்கள் முதலியவற்றை எழுதத் தொடங்கினர். கவிதைப் புலமைக்கும் கணக்கு வேலைக்கும் போட்டி ஏற்படவே சில ஆண்டுகளுக்குப்பின் இவர் தமது இருபத்து நான்காவது வயதில் நாடகத் துறையில் நுழைந்தார்.

முதல் முதலாக இவருடைய புலமையை அறிந்து பயன்படுத்திக்கொண்ட நாடக சபையில் இவர் துவக்கத்தில் நடிகராகவும் பின்னர் ஆசிரிய

ராகவும் சில ஆண்டுகள் பணியாற்றினர். இரணியன், இராவணன், எமதருமன், 'நள தமயந்தி'யில் சனீசுவரன் முதலிய வேடங்கள் இவருடைய நடிப்புத் திறமையை எடுத்துக்காட்டிய சிறந்த பாத்திரங்கள் என்று கருதப்பட்டன.

திருவாளர் சாமி நாயுடு அவர்களின் நாடக சபையில் சிலகாலம் சுவாமிகள் ஆசிரியராக இருந் தார். அப்போது சூத்திரதாரராகவும் நடித்து வந்தார். சுவாமிகள் சூத்திரதாரராக வந்து நாடக நுணுக்கங்களைப் பற்றியும், நடைபெற விருக்கும் நாடகத்தின் நீதிகளைப் பற்றியும் நிகழ்த்தும் விரிவுரையைக் கேட்க மக்கள் ஆவலோடு கூடுவார் கள்.

வள்ளி வைத்தியநாதய்யர், அல்லி பரமேசுவர ஐயர் ஆகியோர் நடத்தி வந்த நாடக சபைகளில் இவர் சில ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். பி. எஸ். வேலு நாயர் அவர்களின் சண்முகாநந்த சபையிலும் நெடுங்காலம் இவர் பணி புரிந்தார். திரு. வேலு நாயர் அவர்களின் குழுவிலிருந்தபோது தான் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் 'மனோகரன்' நாடகத்திற்கு இவர் பாடல்கள் இயற்றினர்.

சமரச சன்மார்க்க நாடக சபை என்ற பெயரால் சுவாமிகள் தாமே ஒரு நாடக சபையையும் சில ஆண்டுகள் நடத்தினர். இந்த நாடகக் குழுவிலே தான் தமிழ் நாடக மேடையின் மங்காத ஒளி விளக்காகத் திகழ்ந்த எஸ். ஜி. கிட்டப்பாவும் அவரது சகோதரர்களும் பயிற்சி பெற்றனர். இசைப் புலவராக இன்று நம்மிடையே வாழும் மதுரை திரு. மாரியப்ப சுவாமிகளும் இந்த நாடகக் குழுவில் தோன்றியவரே.

சுவாமிகள் ஆசிரியராக இருந்த முதல் சிறுவர் நாடகக் குழு திரு. செகந்நாத ஐயர் அவர்களின் பால மீன ரஞ்சனி சங்கீத சபையேயாகும். திருவாளர்கள் பி. டி. சம்பந்தம், எம். எஸ். முத்துக் கிருஷ்ணன், டி. பி. பொன்னுசாமி பிள்ளை, டி. வி. மணி, டி. பாலசுப்பிரமணியம், கே. சாரங்க பாணி, எஸ். வி. வெங்கட்ராமன், நவாப் டி. எஸ். இராஜமாணிக்கம், எம். ஆர். இராதா முதலிய புகழ்மணிறந்த நடிகர்கள் இந்தச் சபையில் இருந்தவர் களே என்பது குறிப்பிடத்தக்கது.

சிலகாலம் அந்தச் சபையில் இருந்த பிறகு திரு. செகந்நாதய்யர் அவர்களுடன் ஏற்பட்ட மனத்தாங்கலின் விளைவாகச் சுவாமிகள் மதுரைக்கு வந்து சில நண்பர்களின் கூட்டுறவோடு 1918-ஆம் ஆண்டில் தத்துவ மீன லோசனி வித்துவ பாலசபா என்ற நாடகக் குழுவைத் தோற்றுவித்து அதன் ஆசிரியராக அமர்ந்தார். இந்தக் குழுவில்தான் 'டி. கே. எஸ். சகோதரர்கள்' என்று குறிக்கப்படும் நாங்கள் சேர்க்கப்பட்டோம்.

இவ்வாறு ஆசிரியர்களுக்கெல்லாம் பேராசிரிய ராகவும், தமிழ் நாடக உலகின் தந்தையாகவும் பல ஆண்டுகளைக் கழித்த சுவாமிகள், இறுதிவரை திருமணமாகாதவராகவே இருந்து 1922-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ந்தேதி திங்கட்கிழமை புதுச்சேரி நகரில் தமது பூதவுடலை நீத்தார்.

தமிழ் நாடகத் தாய் பெறற்கரிய தமது புதல்வனை இழந்தாள். நடிகர்கள் தங்கள் பேரா சிரியரை இழந்தனர். கலையுலகம் ஓர் ஒப்பற்ற கலைஞரை இழந்து கண்ணீர் வடித்தது.

ஐம்பதாண்டுகளுக்கு முன்பெல்லாம் தமிழ் நாடக மேடையில் வசனங்கள் கிடையா. முழுதும் பாடல்களே பாடப்பட்டு வந்தன. அக்காலத்தில் நாடகங்களை இயற்றிய ஆசிரியர்கள் எல்லா நாடகங் களையும் இசை நாடகமாகவேதான் எழுதினர்கள். திருவாளர் அருணாசலக் கவிராயர் அவர்களின் 'இராம நாடகம்' இதற்குச் சான்று கூறும்.

சில ஆண்டுகளுக்குப் பின் இந்த நிலை மாறி நடிக நடிகையர் தமது திறமைக்கும் புலமைக்கும் ஏற்றபடி நாடகக் கதைக்குப் புறம்பாகப் போகாமல் கற்பனையாகவே பேசிக்கொள்ளும் முறை வழக் கத்தில் வந்தது. இவ்வாறு நடைபெறும் உரை யாடல்கள் சில சமயங்களில் வரம்பு மீறிப் போய் விடுவதுண்டு.

இந்தச் சமயத்தில்தான் நமது சுவாமிகள் தமிழ் நாடக உலகில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ வழி கோலினர்; அந்தக் காலத்திலே நடைபெற்று வந்த புராண, இதிகாச, கற்பனை நாடகங்களுக்கெல்லாம் பாடல்களும் உரையாடல்களும் எழுதி வரம்புக் குட்படுத்தியதோடு, புதிய நாடகங்கள் பலவற்றை இயற்றி உதவினர்.

ஒருநாள் மாலை சுவாமிகள் புத்தகக் கடைக்குச் சென்று அபிமன்யு சுந்தரி அம்மானைப் பாடல் பிரதி யொன்று வாங்கி வந்தார். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஓர் 'அரிக்கன்' விளக்கை அருகில் வைத்துக் கொண்டு எழுதத் தொடங்கினர். மறுநாள் பொழுது விடிந்து நாங்கள் எழுந்தபோது சுவாமிகள் நிம்மதி யாக உறங்கிக் கொண்டிருந்தார். அவரது படுக்கை யருகே அபிமன்யு நாடகம் மங்களப் பாட்டுடன் முடித்து வைக்கப்பட்டிருந்தது. இது வெறும் கட்டுக்கதையன்று; உயர்வு நவிற்சியுமன்று; கண் கண்ட உண்மை.

நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள்!.........அதற் கேற்ற உரையாடல்கள்! துவக்கத்திலிருந்து முடிவு வரை அடித்தல் திருத்தல் கிடையாது! ஒரு புத்தகத்தைப் பார்த்து நகல் எடுக்கும் வேலையைக் கூட இவ்வளவு விரைவாகச் செய்யமுடியாது. கற்பனையாக நான்கு மணிநேரம் நடைபெறக்கூடிய ஒரு நாடகத்தையே எழுதி முடித்து விட்டார் சுவாமிகள். அவருடைய புலமைத் திறனை என்னென்று கூறுவது!

ஒரே இரவில் இவ்வளவு விரைவாக எழுதி முடித்த 'அபிமன்யு' நாடகத்தில் உள்ள பாடல்

9776.

களிலும் உரையாடல்களிலும் நிறைந்துள்ள கருத்துக்கள் எண்ணி எண்ணி இன்புறுதற்குரியன. சுவை மிகுந்த ஒன்றைக் குறிப்பிடுகிறேன் :

''துந்துபிகளெல்லாம் தும் தும் தும் என்றும், சங்கங்களெல்லாம் பம் பம் பம் என்றும், தாள வகைச் சல்லரி மல்லரி கரடிகைகளோ தீம் தீம் தீம் என்றும், முரசு, பேரிகை, மிருதங்கங்களோ தோம் தோம் தோம் என்றும் தொனிக்கின்றன. ஆகவே, இவ்வகை வாத்திய ஒலிகள் எல்லாம் ஒன்றுகூடித் தும்பம் தீம் தோம், தும்பம் தீர்ந்தோம், துன்பம் தீர்ந்தோம், துன்பம் தீர்ந்தோம் என்னும் பொருளைக் கொடுக்கலாயின. ஆகா! நான் செய்த பாக்கியமே பாக்கியம்.''

இந்த உரைநடையை அபிமன்னனை மணந்து கொள்ள இருந்த சுந்தரி பேசி முடித்ததும், அந்த நாளில் சபையோர் நீண்டநேரம் கைதட்டித் தங்கள் பாராட்டைத் தெரிவிப்பார்கள்.

கோவலன் நாடகத்தை முதன் முறை மதுரையில் அரங்கேற்றியபோது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி சுவாமிகளின் புலமைக்கு மற்றோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. 'கோவலன்' நாடகக் கதை எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் விளக்கமாகக் குறிப்பிட வேண்டியதில்லை. கண்ணகி கொடுத்த காற்சிலம்பை விற்றுவர மதுரை நகருக்குப் போவதாகக் கூறுகிறான் கோவலன். அப்போது கண்ணகியின் வாய் மொழியாக,

''மாபாவியோர் கூடிவாழும் மதுரைக்கு
மன்னா போகாதீர் இன்று''

என்ற பாடல் பாடப்படுகின்றது. மதுரை நகரில், அவர்கள் முன்னிலையிலேயே மாபாவியோர் கூடி வாழும மதுரைக்குப் போக வேண்டாம் என்று பாடினால் அவர்கள் மனம் எப்படி யிருக்கும்? இந்தப் பாடலைப் பாடத் தொடங்கியதும் சபையோர் கூச்சலிட்டு, ''எங்கே சங்கரதாசர்? கொண்டு வா மேடைக்கு'' என்று ஆரவாரம் செய்தார்கள்.

சுவாமிகள் மேடைக்கு வந்து பெருமிதத்துடன் நின்றார். சபையிலிருந்து கேள்விகள் சரமாரியாகக் கிளம்பின. ''மாபாவியோர் கூடி வாழும் மதுரை'' என்று குறிப்பிட்டு எழுதியதற்காக மன்னிப்பு கேட்க வேண்டுமென மக்கள் குழப்பம் செய்தனர். சுவாமிகள் தமது கரங்களை உயர்த்தி அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டு தமது கருத்தை விளக்கத் தொடங்கினார்.

''மா என்ற சொல் திருமகளாகிய இலக்குமியையும், பா என்ற சொல் கலைமகளாகிய பாரதியையும், வி என்ற சொல் மலைமகளாகிய பார்வதியையும் குறிக்கிறது'' என்று கூறி, அதற்கு ஆதாரமாகப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திலிருந்து சில செய்யுட்களைப் பாடி விளக்கம் தந்தார். ''மாபாவியோர் கூடி வாழும் மதுரை என்றால் திருமகளும் கலைமகளும் மலைமகளும் சேர்ந்து வாழும் மதுரை என்று பொருள் படுகிறது.

அதாவது, சகல செல்வங்களும் நிறைந்து விளங்கு மதுரையில் செல்வம் கொழிக்கும் அத் திருநகரி இந்தச் சிலம்பை வாங்க ஆள் கிடைக்காதே என்ற கருத்துப்பட ''மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்கு மன்னா போகாதீர்'' என்று மதுரை நகரைப் பெருமை யாகக் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர, சிறுமை படுத்தும் எண்ணம் எனக்கில்லை'' என்றார். சபை யோர் சுவாமிகளின் புலமையை வியந்து கைதட்டி பாராட்டினார்கள்.

ஒருமுறை உடுமலைச் சரபம் முத்துச்சாமி கவிராயர் அவர்கள் சுவாமிகளை நோக்கி, ''சங்கரதா சுவாமிகளே! உம்முடைய பாடல்கள் முள்ளு முரடும் போல் இருக்கின்றன'' என்றாராம். உடனே சுவாமிகள் சிரித்துக்கொண்டே, ''கவிராயர் பாட கள் கல்லும் கரடும்போல் இருக்கின்றனவே! என்றாராம். புலவர்களின் விளையாட்டுப் பேச்சுகளிலே கூட இனிமை சொட்டுவதைக் காண்கிறோம். முள்ளும் முரடும், கல்லும் கரடும் என்பவற்றை மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் முரட்டுத்த மான பாடலென்றும், கடினமான பாடலென்றும் தா பொருள் தோன்றும். ஆனால், உட்பொருள் அ வன்று. முள்ளும் முரடும் போல் என்றால், பலா சுளையைப்போல் இனிக்கிறது என்றும், கல்லும் கரடும் போல் என்றால், கற்கண்டைப் போன்றது என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

அக்காலத்தில் தமிழறிஞர்களையும் புல களையும் ஆதரித்து வந்த வள்ளல் இராமநாதபுர சேதுபதி மன்னர் சுவாமிகளைக் காண விரும்பினர். மன்னருடைய செயலாளர் ஒருவர் சுவாமிகளை அணுகி, ''நமது சேதுபதி மன்னரைப் பாடாத புலவர்கள் ஒருவருமில்லையே! சுவாமிகள் மட்டும் ஏன் இன்னும் மன்னர்மீது பாடவில்லை? நேரில் வந்து ஒரு பாடல் பாடினால் உங்களுக்கும் பெரும் பொருள் தருவாரே மன்னர்!'' என்றார்.

சுவாமிகள் தொடக்க முதலே மனிதர்களைப் புகழ்ந்து பாடுவதில்லை யென்று நோன்பு கொண் டவர். ஆதலால் மன்னர் மீது புகழ்மாலை பாட மறு விட்டார். மீண்டும் மீண்டும் பலர் வந்து இதுப வற்புறுத்தியபோது சினங்கொண்டு, ''மன்ன மறவன்; நானும் மறவன்; என்னைவிட மன் எந்த வகையிலும் உயர்ந்தவனல்லன். எதற் நான் அவனைப் புகழவேண்டும்? மன்னனைப் பாடினால்தான் எனது புலமை மன்னனுக் புரியுமோ?'' என்று கூறிவிட்டார். சுவா இறுதி வரையில் மனிதர்களைப் பாடவேயி யென்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமிகள் மறைந்தார். அவரது பாடல்க என்றும் மறையா; அழியா. சுவாமிகளின் திருப் பெயர் தமிழ் உலகம் உள்ளளவும் மங்காது நின்று ஒளி வீசுமாக!

☆

*With the best compliments*

*from*

தமிழகக் கலைஞர்களுக்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்

Messrs :

# THE ROYAL ARTS

LESSEES OF THEATRE "**ROYAL**"
COIMBATORE-1.

---

ராயல் ஹிந்து ரெஸ்டாரெண்ட்

Grams : GEARCO,
COIMBATORE

Phones: 2397, 5627

# G. RAMASWAMI & CO. GANGA TEXTILES

2/387, AVANASHI ROAD

POST BOX NO. 279 :: COIMBATORE-1

*Manufacturers of* **SPECIAL QUALITY YARNS**

| | | |
|---|---|---|
| LICENSED CAPACITY | : | 25000 SPINDLES |
| INSTALLED CAPACITY | : | 15840 SPINDLES |
| ROTO CONER | : | 240 SPINDLES |

**100s, 80s and 60s**

***EGYPTIAN, EAST AFRICAN***

AND

***INDIAN CONE YARNS***

சாம்ரீயா டாக்கீ டிஸ்டிரீபியூட்டர்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்டின்
நல்வாழ்த்துக்கள்

# திருவருட்செல்வர்

திரைக்கதை-வசனம்-டைரக்ஷன் :
கலைஞர் ஏ. பி. நாகராஜன்

திருச்சி, தஞ்சை மாவட்டங்களில்
வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

AT CUDDALORE N.T.

*Stay At*



# HOTEL BRINDAVAN

(BOARDING & LODGING)

Phone : 147

A LODGE WITH MODERN AMENITIES
CENTRALLY SITUATED
FULLY FURNISHED AIRY ROOMS AND
AIR CONDITIONED ROOMS
ATTACHED BATH AND FLUSH-OUT
AIR CONDITIONED DINING HALL

HIGH CLASS BREAK FAST
DELICIOUS LUNCH
NUTRICIOUS DINNER

*SOLE PROP :*
**V. THANGARAJ**

Phone : 47

# NEW CINEMA

CUDDALORE-1

WITH
COMFORTABLE SEATS

卐

Equipped with
Four Star E-7
Double Projector
Western Electric
Sound System

WITH
Cinema Scope and Wide
Screen Attached

*SOLE PROP :*
**T. MUTHAIYAN**

திரை உலகக்

கலை அன்பர்களுக்கும் ரசிகர்களுக்கும்

எமது வாழ்த்துக்கள்



திருவிளையாடல், கற்பகம், பச்சை விளக்கு, காதலிக்க நேரமில்லை, மதுரை வீரன், நவராத்திரி, நல்லவன் வாழ்வான், தங்கப் பதுமை, அன்னை இல்லம், புதிய பறவை, நாணல், கலங்கரை விளக்கம்.

கோவை, நீலகிரி ஜில்லாக்களுக்கு

சந்திர பிரபா பிக்சர்ஸ்

264, பெரிய கடை வீதி

கோயமுத்தூர்–1

POST BOX NO. 169

GRAMS: "FILMS" PHONE: 24091

*With best compliments*

*from*

# HOTEL **Swagath**

**183/1, ROYAPETTAH HIGH ROAD**

**MADRAS-14**

*Remember* : "SWAGATH" A Household name in comfort.

Grams :
SUBA SWAGAT

Phone :
82027
*(8 Lines)*

## ஸ்ரீ சீத்தாராம விலாஸ் போர்டிங் & லாட்ஜிங்

ரங்கே கவுடர் வீதி ★ கோயமுத்தூர்.

போன் : 23721, 25150

**மணீஸ் கார்ப்பரேஷன்**

காபி மெர்ச்சென்ட்

**கோயமுத்தூர்**

புரோப்ரைட்டர் :
**A. K.** பரமேஸ்வரன்

TEL: "NATHELLA"

TELEPHONE { SHOW ROOM: 38515 32002 RESIDENCE: 61725 }

POST BOX
1625

NATHELLA

# Sampathu Chetty Son & Co. (P) Ltd.

177, N. S. C. BOSE ROAD,

MADRAS-1.

WHOLESALE & RETAIL SILVER-WARE MANUFACTURERS

SPECIALISTS IN CINEMA - SHIELDS, TROPHIES

GOPURAMS AND WATER - DRUMS, ETC.

Grams : HOTEL MEENA Phone : 30

# MEENAKSHI BHAVAN

(BOARDING & LODGING)

**KANYAKUMARI**

*To*

*See Sun Rice And Sun Set*
*At Cape Comorin*
*The Lands End of India*

Stay at AIR CONDITIONED

## MEENAKSHI BHAVAN

**Boarding & Lodging**

**Sannathi Street**

**KANYAKUMARI**

The only luxury Hotel of Vegetarian Cuisine. Well furnished Rooms with attached Bath facilities far Excursion parties and Students Groups.

போன் { கடை : 259
இல்லம் : 365 }

## பட்டு நூல் & மில் ஜவுளிகள்

வாங்க நம்பிக்கையான இடம்

# கற்பகம் & கோ.

177, காந்தி ரோடு,

காஞ்சிபுரம்.

## சங்க இலக்கியம்

[முழுதும் விலை ரூ. 12-00]

★

பத்துப்பாட்டுகளாகிய திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பனவும்; எட்டுத்தொகை எனப் படும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அக நானூறு, புறநானூறு என்பனவும் அடங்கிய பெரிய தொகை நூலே சங்க இலக்கியம் ஆகும்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தலைமையில் அறிஞர் கழகம் ஒன்று, பல ஆண்டுகள் ஆய்ந்து சங்க நூற்பாக்கள் அனைத்தையும் ஆசிரியர் அடைவில் அமைத்து சைவ சித்தாந்த சமாஜத் தாரால் பதிப்பிக்கப்பெற்ற அரிய நூலின் இரண்டாம் பதிப்பு.

1600 பக்கங்கள், இரண்டு பாகங்கள், உயர்ந்த பைண்டு.

★

## பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1





பட்டு & நூல்
ஜவுளி ஆடைகளுக்கு

## கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்

(கொத்தவால் சாவடி சமீபம்)

★

53, கிடங்குத் தெரு, சென்னை-1

போன் : 34614

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்
நூற்றாண்டு விழாவுக்கு எங்கள்
நல்வாழ்த்துக்கள்

☆

## ஸ்ரீ சீதாராம் போர்டிங் & லாட்ஜிங்

கோவை நகர ரயில் நிலையத்திற்கருகில் தங்குவதற்கு
சகல வசதிகளோடும் அமைந்துள்ள
முதல்தரமான மாளிகை.

☆

ஸ்டேட் பேங்க் ரோடு, கோயமுத்தூர்

Grams : COMFORTS

Phone : 2522



மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

பழுப்புக கறுப்புப் புழுகல் அழுகல்
பழுதில்லா வெற்றிலை பார்த்தெடுத்துப்
பக்க நரம்பைக் கிழித்து மிக்க விலக்கைக் கழித்து
பக்குவமாய்ப் பதம் செய்து வைத்து

முத்துச் சுண்ணம் தடவிச் சற்று ருசியாய்
மோகன சிங்காரமாய் மடித்து
மூலை வளைவு சதுரம் போலுமுள பலவிதம்
முறை முறையாய் என்றன் கைப்பிடித்து

பாக்கோடேலம் லவங்கம் ஜாதிக்காய் ஜாதி
பத்ரி கலந்து பொடித் தெடுத்து
பரிமளமும் சேர்த்து தருமணமும் பார்த்து
பண்பாய்த் தந்தேனுன் மேலன்பு வைத்து

—இது சங்கரதாஸ் சுவாமிகளின் பாடல்

நறுமணம் கமழும்
இத்தகைய பாக்குத்தூள் ஏது?

# அசோகா




Printed at the Asian Printers, Chepauk, Madras - 5.